


# என் கதை

நாமக்கல் கவிஞர்

## நாமக்கல் கவிஞர்

### இயற்றிய வேறு நூல்கள்

*

தமிழன் இதயம்

மலைக்கள்ளன்

பிரார்த்தனை

இசைத்தமிழ்

கவிஞன் குரல்

அவளும் அவனும்

சங்கொலி

அரவணை சுந்தரம்

என் கதை: நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் தொகுப்பு.

தமிழ்ப் பண்ணை
தியாகராயநகர், சென்னை.
(1944)

முதற் பதிப்பு 1944

விலை ரூபா ஆறரை

உரிமை தமிழ்ப் பண்ணையாளருக்கு

ஹிந்தி பிரசார பிரஸ், சென்னை.

# கவிஞரும் கதையும்

## நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்கள்

கலைஞர்

"என் கதை" கலை வாழ்வு நிரம்பியதாக இருக்கிறது.

அவர் கவிஞர்

"என் கதை" கவிஞனின் வாழ்க்கையைக் காட்டுகிறது.

அவர் தேச பக்தர்

"என் கதை"யில் தேச பக்தியின் உயர்வு தெரிகிறது.

அவர் தமிழன்பர்

"என் கதை"யில் தமிழ் மணம் வீசுகிறது.

அவர் கட்டுரை ஆசிரியர்

"என் கதை"யில் தமிழ் நடை அழகு பெற விளங்குகிறது.

அவர் கதை ஆசிரியர்

"என் கதை" ஒரு அற்புதமான நாவல்போல் எழுதப்பட்டிருக்கிறது.

அவர் தேசத்தொண்டிலே தியாகம் செய்தவர்

"என் கதை" ஒரு தியாக சரித்திரம்.

அவர் சிறைவாசம் புரிந்தவர்

"என் கதை"யில் சிறைவாழ்வு விவரிக்கப்பட்டிருக்கிறது.

அவர் ஒழுக்கத்தில் உயர்ந்தவர்

"என் கதை" ஒழுக்கத்தின் சிறப்பைக் காட்டுகிறது.

அவர் அன்பு நிறைந்தவர்

"என் கதை"யில் அன்பின் அமைப்புத் தெரிகிறது.

அவர் ஆடம்பரத்தை வெறுப்பவர்

"என் கதை" எளிய வாழ்வின் பெருமையைப் போதிக்கிறது.

அவர் திருக்குறளுக்குப் புதிய உரை கண்டவர்

"என் கதை"யில் புது உரைக்கு என்ன அவசியம் என்பது விளங்குகிறது.

## பதிப்புரை

தமிழ் நாட்டில் சுயசரிதம் ஒன்றிரண்டுதான் இதுவரை வெளிவந்திருக்கிறது. "என் கதை" நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதிய சுயசரிதம். "இது என் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் தொகுப்புத்தான்" என்று கவிஞர் அவர்கள் கூறுகிறார்கள். எனினும் தமிழ் உலகத்தில் ஒரு கவிஞர் எழுதியமுதல் சுய சரிதம் இதுவே. இதில் சேர்க்கப்பட்டிருக்கும் சித்திரங்கள் கவிஞர் அவர்கள் பல ஆண்டுகளுக்குமுன் வரைந்தது. இன்னும் பல ஓவியங்கள் பின்னர் தனிப் புத்தகமாக வெளியிடப்படும்.

"என் கதை" ஒரு கலைப் பொக்கிஷமாக வைத்துக் காப்பாற்றப்படவேண்டிய நூல்.

தமிழ்ப் பண்ணையாளர்கள்.

# "என் கதை" எழுதியதின் நோக்கம்

[நாமக்கல் கவிஞர்]

என்னுடைய சுயசரித்திரத்தை நான் எழுத வேண்டும் என்று சில நண்பர்கள் பல நாட்களாக என்னை வற்புறுத்திக்கொண்டே வந்தார்கள். நான் 'சுய சரிதம்' என்று எதையும் எழுத நாணப்பட்டேன். ஏனென்றால் 'சுய சரிதம்' என்று எழுதுவதற்கு மற்ற மக்களுக்கு வழிகாட்டிகளாக வாழ்ந்து செயற்கரிய காரியங்களைச் செய்த மகான்களுக்குத்தான் தகும் என்பது என்னுடைய மனப் பழக்கம். உலகத்தின் எந்தப் பகுதியிலும் 'சுய சரிதம்' எழுதினவர்களில் அநேகமாக எல்லாரும் அப்படிப்பட்ட அசாதாரண மனிதர்கள்தான்.

நான் ஆங்கிலத்தில் அநேக சுயசரிதங்களைப் படித்திருக்கிறேன். அவைகள் அனைத்தும் ஒவ்வொரு வழியில் பிறருக்கு வழிகாட்டிகளாக உதவத்தக்கவைகளே.

மகாத்மா காந்தியடிகளின் சுய சரிதமும் ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களுடைய சுயசரிதமும் மக்களுக்குப் பல நீதிகளை போதிக்கக்கூடிய செயல்கள் நிறைந்தவை. அவரவர் துறையில் அவர்கள் செய்த அரும்பெரும் முயற்சிகள் அடங்கினவை. அப்படிப் பட்ட அரிய முயற்சிகளில் எல்லாரும் ஈடுபடுவது முடியாது என்றாலும் நித்திய வாழ்க்கைக்கான ஒழுக்க வழக்க உயர்வுகளையாவது உபதேசிக்கத் தக்கவை. ஆதலால், 'சுய சரிதம்' என்று எதையும் எழுதி அதைப் பிறர் படிக்கச் செய்யக்கூடிய உரிமை

அப்படிப்பட்ட பெரியவர்களுக்குத்தான் உண்டு என்ற எண்ணத்தால் நான் 'சுய சரிதம்' என்று எழுதத் தயங்கினேன். ஆனால் நண்பர்கள் என்னை விட்ட பாடில்லை.

உலகத்தில் நாம் பார்க்கின்ற எண்ணிறந்த ஜீவ கோடிகளின் மூலமாகத்தான் இறைவன் விளங்கு கின்றான். 'இறைவன்', 'கடவுள்' 'தெய்வம்' 'ஆண்டவன்' என்ற பதங்களில் நமக்குச் சலிப்புத் தோன்றிவிட்டாலும் 'இயற்கை' என்ற பதத்தைக் கொண்டு அளந்தாலும் அந்த இயற்கையின் தோற்றங் கள் அந்த எண்ணிறந்த ஜீவகோடிகளின் இயக்கங் களின் மூலமாகத்தான் நமக்குப் புலனாகின்றன உயிரில்லாத ஜடங்களும்கூட அந்த இயற்கையின் பகுதிகள்தான். அசைவில்லாத அந்த ஜடங்களை விட்டு விட்டாலும் உயிருள்ள மற்ற ஜீவர்களிடத்தில்தான் இந்த இயற்கை இயங்கிவருகின்றது. விஷயத்தை சுருக்கிச் சொல்லுவதற்காக, உயிருள்ள மற்றப் பிராணிகளை யெல்லாம் ஒதுக்கிவிட்டு மனித வர்க் கத்தைமட்டும் கவனித்தாலும் உலகத்திலுள்ள கோடிக் கணக்கான மனிதர்களின் வாழ்க்கையில் இந்த இயற் கை கூத்தாடுகின்றது. ஆனால் அந்தக் கூத்தாட்டம் எல்லா மனிதர்களிடத்திலும் ஒரேமாதிரியாக இருப்ப தில்லை. வாழ்க்கையின் தேவைகளும் இன்ப துன்பங் களும் எல்லா மனிதருக்கும் ஏறத்தாழ ஒரேமாதிரி இருந்தாலும் வாழ்க்கையில் நேரிடும் நிகழ்ச்சிகளும் அவற்றை சாத்தியமாக்கும் சமய சந்தர்ப்பங்களும் ஒவ்வொரு மனிதனுக்கும் வெவ்வேறாகவே இருக்கின் கின்றன. ஒன்றுக்கு ஒன்று எந்தவிதத்திலும் ஒற் றுமையில்லாத தனித்தனி தினுசுகளாகவே இருக்கின் றன. எப்படி அங்கமச்ச அடையாளங்களில் ஒரு மனிதனைப்போல் இன்னொருவன் உலகத்தில் இல்லை யோ அப்படியே ஒரேமாதிரி தொழிலில் ஈடுபட்டிருக்

கும் ஒரு கூட்டத்திலும்கூட ஒருவனுடைய வாழ்க்கையில் நேரக்கூடிய நிகழ்ச்சிகளோ சந்தர்ப்பங்களோ இன்னொருவனுடைய வாழ்க்கையில் இருப்பதில்லை. ஆதலின் உலகத்தில் எத்தனை கோடி மனிதர்கள் இருக்கிறார்களோ எத்தனை கோடி சரித்திரங்கள் இருக்கின்றன. வாழ்க்கைக்குப் பிறருக்கு வழிகாட்டக் கூடிய முயற்சிகள் எல்லா சரித்திரத்திலும் இருக்க முடியாது என்றாலும் படிப்பதற்கும் கேட்பதற்கும் ருசிகரமாகிய சம்பவங்கள் பல சரித்திரங்களில் இருக்கவே இருக்கும். அந்த சம்பவங்களில் அநேகம் இது வரைக்கும் எழுதப்பட்ட சரித்திரங்கள் எதிலுமே இல்லாத அபூர்வ நிகழ்ச்சிகளாக அமைதலும் கூடும். ஆகையினால் எல்லா மனிதர்களும் அவரவர் வாழ்க்கையில் நிகழ்ந்த சிற்சில குறிப்பிடத்தகுந்த சந்தர்ப்பங்களையாவது எழுதிவைக்க முடியுமானால் பொழுது போக்காகப் படிப்பதற்கேனும் எத்தனையோ இனிய கதைகள் கிடைக்கும்.

காடும் மலையும் கடலும் நதியுங்கூடத் தன் சரித்திரக் குறிப்புகளை எழுதிவைக்க முடியுமானால் அவைகளிலும் இன்ப உணர்ச்சிகளுக்கு விருந்துகள் இருக்கலாம்.

ஆகையினால் என்னுடைய வாழ்க்கையைப்பற்றிய சிற்சில நினைவுகளை எழுதிவைத்தால் பொழுதுபோக்காகப் படிப்பதற்குமட்டுமாவது பயன்படலாம் என்ற ஆசையினால் இந்த 'என் கதை'யை எழுதலானேன். இது வாழ்க்கையின் வரலாறுகள் வரிசைக்கிரமமாக எழுதப்பட்ட சரித்திரம் அல்ல. நினைவில் இருந்த நிகழ்ச்சிகளைப் படிப்பவர்களுக்குப் பாரமாகத் தோன்றாமலிருக்கவேண்டும் என்ற ஒரு எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு எழுதப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் தொகுதி.

என்னுடைய வாழ்க்கையில் நடந்து என் நினைவில் இருக்கிற எல்லா நிகழ்ச்சிகளையும் இதில் எழுதவில்லை. அதனால் வரிசைக்கிரமம் முன்னும் பின்னுமாகவும் இருக்கும். ஆனால் ஒவ்வொரு பகுதியும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத தனித்தனி கதை போல் எழுதப்பட்டிருப்பதால் வரிசைக்கிரமத்தைப் பற்றிய விசாரம் வேண்டியதில்லை.

படிப்பவர்களுக்கு இது எத்தனை இன்பமளிக்குமோ எனக்குத் தெரியாது. ஆனால் பார்ப்பவர்களுக்குக் கண்ணைக் கவரக்கூடிய ஒரு புத்தகமாக இதை வெளியிட்ட 'தமிழ்ப் பண்ணை'க்காரர்களுக்கு என்னுடைய வந்தனமும் வாழ்த்துகளும் உரித்தாகும்.

வே. இராமலிங்கன்.

# என் கதை

'ஏட்' வெங்கட்ராம பிள்ளை, மோகனூர் போலீஸ் கச்சேரியில் உட்கார்ந்து, 'டைரி' எழுதிக்கொண்டிருந்தார். அவருக்கு மிகவும் நம்பிக்கையுள்ள 'கான்ஸ்டேபிள்' ஷேக் உசேன் சாயபு புன் சிரிப்போடு கொஞ்சம் அவசரமாக ஸ்டேஷனுக்குள் வந்தார். வெங்கட்ராம பிள்ளை டைரி எழுதுவதை நிறுத்திவிட்டு, "என்ன தொண்ணூத்தாறு! (தொண்ணூற்ருறு ஷேக் உசேன் சாயபுவின் நம்பர்) ஆயிடுச்சா?" என்ருர்.

"ஆச்சு, மாராஜ்" என்று சந்தோஷத்தோடு சாயபு பதில் சொன்ஞர்.

"என்ன? காயா பழமா?" என்ருர் ஏட்.

சாயபு காயென்றும் சொல்லாமல் பழம் என்றும் சொல்லாமல், சிரித்தார்.

"நீ சிரிக்கிறதைப் பார்த்தால் பொட்டைக் குட்டிதான் போலிருக்குது" என்ருர் ஏட்.

"ஆமாம், எஜமான். 'பேட்டி'தான்."

"தூ தூ! கொண்டுபோய்க் குட்டுக் காட்டில் போடச்சொல்லு" என்று, ஏட் வெங்கட்ராம

பிள்ளை, தம் கையில் வைத்திருந்த பேனாவை மேஜையின்மேல் ஓங்கி அடித்தார்.

ஏட் வெங்கட்ராமபிள்ளையின் முதல் மூன்று குழந்தைகளும் பெண்கள். நான்காவது ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பிறந்து கொஞ்ச நேரத்துக்கெல்லாம் இறந்துவிட்டது. ஐந்தாவது குழந்தையும், ஆறாவது குழந்தையும் பெண்கள். இது ஏழாவது பிரசவம். இது ஆண் குழந்தையாக இருக்கவேணுமென்றும் அந்த ஆண் குழந்தை நல்ல ஆயுளோடு இருக்கவேணுமென்றும் வெங்கட்ராம பிள்ளை வெகு ஆசையாக இருந்தார். ஷேக் உசேன் வந்து அது பெண் குழந்தை என்றவுடன், பேனாவைக் கீழே அடித்தார்.

வெங்கட்ராமபிள்ளையின் மனைவி அம்மணியம்மாளுக்கும் ஆண் குழந்தை இல்லையே என்ற ஏக்கம் அதிகம். முன்னாலேயே ஆண் குழந்தைக்காக அநேகம் தெய்வங்களை வேண்டிக்கொண்டேதான் வந்திருந்தார்களென்றாலும், இந்தக் குழந்தையும் பெண்ணாகப் பிறந்தபின், முன்னிலும் அதிகமாய் ஆண் குழந்தைக்காகத் தவம் செய்ய ஆரம்பித்தார் அம்மணியம்மாள். மோகனூர் என்பது சேலம் ஜில்லாவின் தென் கோடியில், காவேரியாற்றின் வட கரையில் உள்ள ஒரு கிராமம். ஆற்றங்கரையில் சிவன் கோயில். ஊருக்கு ஓரத்தில், வாய்க்கால் கரையில் காளியம்மன் கோவில். கிராமத்துக்குச் சற்று தூரத்

தில் நாவலடி கறுப்பண்ணசாமியின் கோயில். இந்த மூன்று கோவில்களுக்கும் மாறி மாறி போலீஸ் ஏட்டு வீட்டு அம்மாளுடைய அபிஷேகங்களும் ஆராதனைகளும் அடிக்கடி நடக்கும். அத்துடன் தேர் திருவிழாக் காலங்களில் ஏட்டு வீட்டு அம்மாளுடைய தண்ணீர்ப்பந்தல், அன்னதானம் முதலானவைகளும் தவறாமல் நடைபெறும். இந்தத் தண்ணீர்ப் பந்தல்களைக் கூலியாட்களைக்கொண்டு நடத்துவதில் புண்ணியமில்லை யென்று, அம்மணியம்மாள் சுமார் ஒரு மைல் தூரம் நடந்து, தாமே காவேரியிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து கொட்டுவார். அவருடைய பெண் குழந்தைகளும் கூடமாட வேண்டிய வேலைகளைச் செய்வார்கள். ஏட்டு வெங்கட்ராமப் பிள்ளை இந்தப் பூசனைகளுக்கு வேண்டிய ஒத்தாசைகளைச் செய்து உள்ளம் பூரிப்பார். ஊருக்குள் ஏட்டு சம்சாரம் 'நல்ல புண்ணியவதி' என்று பேர். இப்படியாக இரண்டு ஆண்டுகள் சென்றன. அம்மணியம்மாள் மீண்டும் கர்ப்பவதியானார். கரு வளர வளர, அது ஆணாகவும் ஆயுசுடையதாகவும் இருக்கவேணுமே என்ற ஏக்கமும் தம்பதிகளிடம் வளர்ந்து வந்தது.

ஒன்பதாவது மாதம், ஒரு நாள் வெங்கட்ராம பிள்ளை பரிசல் துறைக்கு உத்தியோக அலுவலாகப் போயிருந்தார். உச்சி வேளை, நல்ல வெய்யில். வந்த காரியமாகச் சிலரோடு பேசிக்கொண்டு நின்றுகொண்டிருந்தார். எதிர்த் துறையிலிருந்து ஒரு பரிசல் வந்தது. அதிலிருந்து அநேகம் பிரயா

ணிகள் இறங்கினார்கள். அவர்களுடன் சுமார் 75 வயதுள்ள ஒரு பிராம்மணக் கிழவரும் அவருடைய மனைவியும் இறங்கினார்கள். பரிசலை விட்டிறங்கிய பிராம்மணக் கிழவர், நேரே வெங்கட்ராம பிள்ளையிடம் வந்தார். வெங்கட்ராம பிள்ளை, கம்பீரமான தோற்றமுடையவர். ஐந்தடி ஒன்பது அங்குல உயரம். அதற்குத் தகுந்த பருமன். உருண்டையான முகம். விசாலமான நெற்றி. அதில் அகலமான சந்தனப் பொட்டு. அடர்ந்து நீண்டு அழகாக முறுக்கிவிட்ட மீசை. மீசைக்குப் பின்னால் பளிச்சென்று துலங்கும் பல் வரிசை. கூர்ந்த பார்வை. குணமுள்ள தோற்றம். மூலைக் கச்சம் வைத்துக் கட்டிய வேஷ்டியின் ஒரு முனையைக் கையில் பிடித்துக்கொண்டு நிற்கும் அவருடைய உருவம் யாருடைய கவனத்தையும் கவரும்.

பிராம்மணப் பெரியவர், வெங்கட்ராம பிள்ளையைப் பார்த்து, “இந்த ஊரில் அக்ரகாரம் எங்கேயிருக்கிறது? கொஞ்சம் காட்டுவேளா?” என்றார்.

“அக்ரகாரமா? பக்கந்தான். அதோ அந்த மேடு ஏறினால் அக்ரகாரம்தான், ஏன்? யார் வீட்டுக்குப் போகவேணும்?” என்று ஏட்டு கேட்டார்.

“யார் வீட்டுக்கும் இல்லை. நாங்கள் ராமேசுவரத்திலிருந்து வருகிறோம். நேற்றுக் காலை ஸ்ரீரங்கத்தில் கோவில் பிரசாதம் சாப்பிட்டதுதான்

ஆகாரம். இவள் என் சம்சாரம். ரொம்ப முடியாதவள். ஆகாரமில்லாமல் ரொம்ப அசந்து போய் விட்டாள், வயசானவள். யாத்திரையிலிருந்து வருகிறோம். ஆசாரமாக அக்ரகாரத்தில் எங்கேயாவது கொஞ்சம் ஆகாரம் பண்ணினால் தேவலை. உங்களுக்குப் புண்ணியம். முன் பின் இந்த ஊருக்கு வந்ததில்லை...'' என்றார் கிழவர். புது மனிதர் யாரானாலும் அவர்களைச் சந்தேகத்தோடு பார்த்துச் சோதிக்கும் வழக்கமுள்ள வெங்கட்ராம பிள்ளையின் போலீஸ் கண்கள் கூட அந்தக் கிழவரின்மேல் சந்தேகங்கொள்ளாமல் பச்சாத்தாபம் கொண்டனர். "ஆஹா! வாங்கோ, பக்கத்தில் நாராயண ஐயர் வீடு இருக்கிறது. எனக்கு ரொம்ப வேண்டியவர். நல்ல சுத்தபத்தமான ஆசாரமுள்ள வீடு. அங்கே சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்கிறேன்; வாங்கோ போகலாம்'' என்றார் ஏட்டு.

"கொஞ்சம் பொறுங்கள், ஸ்நானம் செய்து விடுகிறோம்'' என்ற அவர்களை ஸ்நானம் செய்ய விட்டு, வெங்கட்ராம பிள்ளை, அருகிலிருக்கும் நாராயண ஐயர் வீட்டுக்குப் போய் விஷயத்தைச் சொன்னார். மிக்க லோபியானவர்களும்கூட அப்படிப்பட்ட விருந்தினர்களுக்கு இல்லை யென்று சொல்ல மனம் வருமா? அதுவும் ஊரில் முக்கிய உத்தியோகஸ்தரான போலிசு ஏட்டே வந்து சொல்லுகிறபோது, என்ன தடை? "ரொம்பச் சந்தோஷம். சரியான நேரத்தில் வந்து சொன்னீர்கள். நானும் இன்னும் சாப்பிடவில்லை, அவர்

களைக் கூட்டி வாருங்கள், நான் இலை போட்டுத் தயாராக வைக்கிறேன்'' என்று நாராயண ஐயர் சொன்னார்.

வெங்கட்ராம பிள்ளை மறுபடியும் ஆற்றங் கரைக்கு வந்து பெரியவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். கிழவர், நீராடி ஜபத்தை முடித்துக்கொண்டு, மனைவியுடன் வெங்கட்ராம பிள்ளையைப் பின் தொடர்ந்தார்.

நடந்துகொண்டே, "சாப்பாடு முடிந்ததும், நாங்கள் நாமக்கல்லுக்குப் போக ஒரு வண்டி ஏற் பாடு செய்து கொடுங்கள். வாடகை என்னவா னாலும் பாதகமில்லை. இன்று சாயங்காலத்துக் குள் நாமக்கல் போய்விட்டால், நாமகிரி அம்ம னின் தரிசனம் செய்துகொண்டு நாளைக் காலையில் சேலம் போகவேணும். அங்கிருந்து பெங்களூர் போகவேணும். என் பிள்ளையும், பெண்களும், அங்கே தம்பி வீட்டில் இருக்கிறார்கள்'' என்று பெரியவர் சொன்னார்.

நாராயண ஐயரின் வீட்டுக்கு மூவரும் வந் தார்கள். பெரியவர்கள் உள்ளே சாப்பிடப் போ னார்கள். ஏட்டு வெளியில் காத்துக்கொண்டிருந் தார். சாப்பாடு முடிந்து, வீட்டுக்காரரும் விருந் தாளிப் பெரியவரும் வெளியில் வந்தார்கள். நல்ல பசி நேரத்தில் உணவிட்டு உபசரித்த நாராயண ஐயரைப் பெரியவர் வாழ்த்திவிட்டு, வெங்கட் ராமப் பிள்ளையைப் பார்த்து, "எல்லாம் உங்க

ளுடைய உபகாரம்தான்'' என்று நன்றி கூறினர். பிறகு தங்களுடைய யாத்திரையின் சிரமங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லிவிட்டு, ஏட்டு வீட்டின் யோக க்ஷேமங்களை விசாரித்துக்கொண்டு வரும்போது, "உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?'' என்று கேட்டார் பெரியவர்.

"அதை ஏன் கேக்கிறீங்க, போங்க! நான் பெரிய சம்சாரி, ஆறு குழந்தைகள், எல்லாம் பொட்டைக் குட்டிகள்தான். ஒரு பையன் பிறந்தான், பிறந்து கொஞ்ச நேரத்துக்கெல்லாம் செத்துப் போனுன். இப்போ மறுபடியும் கர்ப்பம், ஒன்பது மாசம். அதுவும் பொட்டையாகப் பிறந்து தொலைக்கிறதோ என்ன சனியனோ தெரியலே'' என்று, வெங்கட்ராம பிள்ளை மிகச் சலிப்போடு சொல்லிக்கொண்டார்.

இதைக் கேட்ட பெரியவர், "அப்படியா!'' என்று கொஞ்ச நேரம் என்னவோ யோசனை செய்வதுபோல இருந்துவிட்டு, வீட்டுக்குள் திரும்பினர். அவருடைய மனைவி அப்போதுதான் சாப்பிட்டு விட்டு வெளியில் வந்துகொண்டிருந்தார். அந்த அம்மாளைக் கூப்பிட்டு, தம்முடைய மடி சஞ்சியை எடுத்துக்கொண்டு வரச்சொன்னர். அதை அவிழ்த்து, அதிலிருந்த பொட்டலங்களிலிருந்து கொஞ்சம் விபூதியையும் குங்குமத்தையும் சருகாய்ப்போன சில புஷ்பங்களையும் எடுத்து வெவ்வேறு சிறு பொட்டணங்களாக மடித்துக்கொண்டு, கண்ணை மூடி, ஏதோ மந்திரம்போல்

தமக்குள் உச்சரித்துவிட்டு, "இந்தாருங்கோ பிள்ளைவாள்! இது ராமேசுவரப் பிரசாதம். நான் சொல்லுவது ராமநாதனுடைய வாக்கு. தெய்வ வாக்கு. அடுத்த பிரசவம் நிச்சயமாக ஆண் குழந்தை. தீர்க்காயுசுள்ளவனாகவும் புத்திமானாகவும் கீர்த்திமானாகவும் இருப்பான். அந்தக் குழந்தைக்கு ராமலிங்கம் அல்லது ராமநாதன் என்று பெயர் வைத்து, நீங்கள் சந்தோஷமாகவும் சௌக்கியமாகவும் இருக்கவேணும்" என்று வாழ்த்தி பிரசாதத்தையும் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்ட ஏட்டு எவ்வளவு மகிழ்ச்சியடைந்திருப்பாரென்பதை, நாமே நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தபின், பெரியவர் நாமக்கல்லுக்குப் புறப்பட வேணுமென்று துரிதப்பட்டார்.

பெரியவர்களைக் கூட்டிக்கொண்டு, வெங்கட்ராம பிள்ளை, போலீஸ் கச்சேரிக்கு வந்தார். மோகனூரிலிருந்து நாமக்கல்லுக்குப் போகிற பாட்டையின் ஆரம்பத்தில்தான் போலிஸ் ஸ்டேஷன். அந்த ஸ்டேஷனுக்குப் பின்னால் சுமார் பத்துக் கூரை வீடுகள். அது போலிஸ் லயன். கொஞ்சம் பெரிதாக இருந்த வீடு ஏட்டு வீடு. பெரியவர்களைக் கச்சேரியில் இருக்கச்சொல்லி, நாமக்கல்லுக்கு வண்டி கொண்டுவர ஒரு ஜவானுக்கு உத்தர விட்டு விட்டு, வெங்கட்ராமபிள்ளை தம்முடைய வீட்டுக்குள் நுழைந்தார். என்றுமில்லாத குதூகலத்துடன் மனைவியை அழைத்தார். பிரசாதத்தை அவரது கையிலே கொடுத்து அணிந்து

கொள்ளச் செய்தார். பெரியவர் சொன்னதையெல்லாம் சொல்லி மகிழ்ந்தார். அம்மணியம்மாளுக்கு அதைவிட மகிழ்ச்சி. சந்தோஷமாகப் பேசிக்கொண்டே சாப்பிட்டார். இதை எல்லாம் பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த பெண் குழந்தைகளுக்குள் பெரிய கொண்டாட்டம்.

சாப்பாடானதும், வெங்கட்ராம பிள்ளை அந்தப் பிராமணக் கிழவர்களை வீட்டுக்கு அழைத்து வருவதாகச் சொல்லிவிட்டு கச்சேரிக்குப் போனார். பெரியவர்கள் வந்தால் உட்கார்வதற்கென்று வீட்டின் ஒரு பக்கத்தை அம்மணியம்மாள் தாமே பெருக்கி சுத்தப்படுத்தி இரண்டு மணைப் பலகைகளை அங்கே போட்டு, ஒரு தாம்பாளம் நிறையத் தேங்காய் பழம், வெற்றிலை பாக்கு முதலியவற்றைத் தயார் செய்து வைத்துவிட்டு, முகங் கழுவி, நெற்றி நிறைய ராமேசுவர விபூதியைப் பூசி, அதன் மத்தியில் அந்த அம்மாள் வழக்கமாக வைத்துக்கொள்ளும் அகலமான குங்குமப் பொட்டை இட்டுக்கொண்டு, பெரியவர்களுடைய வரவை வெகு பய பக்தியுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்.

பெரியவர்களும் வெங்கட்ராம பிள்ளையும் வந்தார்கள். வெளியூருக்குப்போயிருந்த ஜவான் ஷேக் உசேன் சாயபுவும் எதிர்பாராத வண்ணம் வந்து சேர்ந்தார். பெரியவர் ஆசனத்தில் அமர்ந்தார் .அவருடைய மனைவி அவருடன் உட்கார மறுத்துப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்

தார். அம்மணியம்மாள் முழந்தாளிட்டு நமஸ்கரித்தார். .பெரியவர் தம்முடைய இடுப்பிலிருந்த விபூதி சம்புடத்திலிருந்து கொஞ்சம் திருநீற்றைக் கையிலெடுத்துக்கொண்டு, "தீர்க்க சுமங்கலியாக இருக்கவேணும். அந்த ராமநாதனுடைய கிருபை உனக்குப் பரிபூர்ணமாக உண்டு. கவலைப்பட வேண்டம். உன் கலி தீர்ந்தது. சுகப் பிரசவமாக உன் 'எட்டாவது குழந்தை கட்டி அரசாளும்', ஆண் குழந்தையாகப் பிறக்கப் போகிறான்" என்று கொஞ்சம் விபூதியைத் தலையில்தெளித்து, மீதியைக் கையில் கொடுத்தார்.வாங்கிக்கொண்டு அம்மணியம்மாள் உள்ளே போய்த் தாம்பூலத் தட்டத்தை எடுத்துவந்து,அதில் இரண்டு ரூபாய் தட்சிணையும் வைத்து, பெரியவர் கையில் கொடுத்தார். அதை அவர் பரம சந்தோஷத்தோடு வாங்கித் தம் மனைவியிடம் கொடுத்தார். அந்த அம்மாள் அதை வாங்கிக்கொண்டு, "ஐயர் சொன்னமாதிரி பிள்ளை பிறப்பான். குழந்தையும் குட்டியுமா நீ ரொம்ப நன்னாயிருப்பேடியம்மா. நோக்கு ஒரு குறைச்சலும் இருக்காது" என்று ஆசீர்வதித்தார்.

பெரியவர்கள் விடை பெற்றுக் கொண்டார்கள். நாமக்கல்லுக்குப் போக ஒற்றை மாட்டு வண்டியும் வந்து விட்டது – அந்தக் காலத்தில் குதிரை வண்டிகள் அபூர்வம். பெரியவர்களை வண்டியில் ஏற்றி, நாமக்கல் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டிய அவசரத் தபால்களைக் கொண்டுபோகவென்று ஒரு போலிஸ்

ஜவானையும் வண்டியின் முன்னுல் உட்காரச் செய் தார். நாமக்கல்லில் பெரியவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க அங்கேயுள்ள ஏட்டுக்குச் சொல்லும்படி அந்த ஜவானிடம் சொன்ஞர். வண்டி. வாடகை தாமே தந்து விடுவதாகவும், பெரியவர்களிடம் வாங்கவேண்டாமென்றும் வற்புறுத்தி, ஏட்டு வெங்கட்ராம பிள்ளை அவர்களை வழியனுப்பிவைத்தார்.

வண்டி மறைந்தபின், தாம் ஆற்றங்கரையில் பெரியவரைச் சந்தித்தது முதல் நடந்தவற்றையெல்லாம் தமக்கு வெகு நம்பிக்கையான அந்த ஜவான் ஷேக் உசேன் சாயபுவிடம் சொல்லிச் சொல்லி வெங்கட்ராம பிள்ளை மகிழ்ந்தார். இதே ஷேக் உசேன் சாயபுதான் இந்தக் கதையின் ஆரம்பத்தில், இதற்கு முந்தின பிரசவம் ஆனபோது கச்சேரிக்கு வந்து, பிறந்தது பெண் குழந்தைதான் என்ற சேதியைச் சொன்னவர். எல்லாவற்றையும் கேட்ட ஷேக் உசேன் சாயபு தம் வீட்டிலேயே ஆண் குழந்தை பிறக்கப்போகிற மாதிரி சந்தோஷம் அடைந்தார். அவருக்கும் அந்தச் சமயத்தில் நாலு பெண் குழந்தைகள் தான்.

ஐயர் சொன்ன ஆசீர்வாதம் உண்மையில் தெய்வ வாக்கோ அல்லது அவர் தங்களுடைய பசி நேரத்தில் உணவு கிடைத்ததினுல் அடைந்த மனக் குளிர்ச்சியால் வெளியிட்ட வெறும் விருப்பம் தானே, யாரும் சொல்ல முடியாது. ஆனுல், வெங்கட்ராம பிள்ளையும் அவருடைய மனைவி

அம்மணியம்மாளும், அதைத் தெய்வ வாக்காகவே போற்றி ஆவலோடு காத்திருந்தார்கள். கிழவர் வந்து போனதற்கு அடுத்த மாதம், அதாவது சர்வதாரி வருஷம் ஐப்பசி மாதம் ஐந்தாம் தேதி (1888 ஞு அக்டோபர் மாதம் 19-ம் தேதி) வெள்ளிக் கிழமை சுக்ல பட்சம் பௌர்ணமி ராத்திரி 12-22½ மணிக்கு, பெரியவருடைய வாக்கு பலித்ததென்று எல்லாரும் களிக்க; ஏட்டு வீட்டில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

பிராம்மணக் கிழவர் சொல்லிப் போனபடி தம் மகனுக்கு **ராமலிங்கம்** என்று வெங்கட்ராம பிள்ளை பெயரிட்டார். ஆனால், ஐயர் வருவதற்கு வெகு நாளைக்கு முன்னாலேயே அம்மணியம்மாள், 'ஆண் குழந்தையாக இருந்தால் உன் பெயரையே வைப்பேன்', என்று நாவலடிக் கருப்பண்ண சுவாமிக்கு வேண்டிக்கொண்டிருந்தார். ஆகையினால், அம்மணியம்மாள் தம் மகனுக்குக் **கருப்பண்ணன்** என்று பெயரிட்டார்.

அந்தக் கருப்பண்ணன்தான் நான். என்னை என் தாயார் எப்போதும் 'கருப்பண்ணு' என்றுதான் அழைப்பார்கள்; தகப்பனார் ராமலிங்கம் என்றுதான் கூப்பிடுவார்.

மேலே சொன்ன என் பிறப்பின் வரலாறு என் தாய் தந்தையரும் தமக்கைமாரும் அடிக்கடி சொன்னது.

# அன்னையும் பிதாவும்

**அன்னை :-** என்னுடைய அன்னையின் பெயர் அம்மணி அம்மாள். பெண்களுக்குள் மிகவும் அபூர்வம் என்று சொல்லத்தக்க பல சிறப்புகள் உடையவர். ஆழ்ந்த தெய்வ பக்தி உள்ளவர். முருகக் கடவுளை இஷ்ட தெய்வமாக பூசிப்பவர். புலால் உண்பதை மறுத்தவர். தருமம் தலை காக்கும் என்ற நம்பிக்கை நிறைந்தவர். எவருக்கும் இல்லை யென மாட்டார். வெகு தைரிய சாலி. எந்தக் காரியத்திலும் ஆற்றலுடையவர். வீட்டுக்கு எத்தனை பேர் திடீரென்று வந்துவிட்டாலும் வெகு விரைவாக சமைத்து விருந்திடுவார். நல்ல திடகாத்திரமும் தேக பலமும் அமைந்தவர். அவருடைய தாயார் சந்தைகளில் உழுந்து துவரை முதலியவற்றில் வியாபாரம் செய்வதுண்டு. அரை மூட்டை உழுந்தை தலையில் சுமந்து கொண்டு இடுப்பிலும் ஒரு கூடை நிறைய பாரம் வைத்துக்கொண்டு மூன்று மைல் தூரத்திலுள்ள சந்தைக்கு அநாயாசமாக சிறு பிராயத்திலேயே நடப்பார்களாம். எழுதப் படிக்கத் தெரியாது. ஆனாலும் பாரதம், ராமாயணம், ஹரிச்சந்திர புராணம், தொண்டர் புராணம், பவளக்கொடி, அல்லி-அர்ஜுனன், நல்ல தங்காள், கோவலன், முதலான எல்லாக் கதைகளும் மனப்பாடம். அவர் பிறந்தது சேலத்தில். அவருடைய பெற்றோர்கள் கையினால் காகிதம் செய்து ஜீவனம் செய்தவர்கள். அவர்களுடைய வீட்டை 'காகிதக்காரர் வீடு' என்றுதான் இன்றைக்கும் எங்க

ளுடைய பந்துக்களுக்குள் சொல்வதுண்டு. அந்த அம்மாளுடைய அரிய தைரியத்தைப்பற்றிய பல நிகழ்ச்சிகள் உண்டு. அவற்றுள் மிகவும் ருசிகர மான ஒரு நிகழ்ச்சியை அவரே சொல்லுவது போல் எழுதியிருக்கிறேன். இந்தக் கதையி லுள்ள விஷயங்கள் அனைத்தும் என் தாயாரே பல தடவைகளில் சொல்லி என் தந்தையும் உட னிருந்து ஆமோதித்தது. ஆனால் படிப்பதற்கு ருசிக்கும்படியான முறையில் எழுதியிருக்கிற ஜோடிப்பு மட்டும் என்னுடையது. அந்தக் கதை யை இலுப்ப மரப் பிசாசு என்ற மகுடமிட்டு கீழே தந்திருக்கிறேன். இங்கே என் தந்தையைப் பற்றி சொல்லிவிடவேண்டியது அவசியம்.

**பிதா :–** என் தகப்பனார் வெங்கட்ராம பிள்ளை மிகவும் மதிக்கத் தகுந்த உருவமுடையவர். போ லிஸ் உடையில் மிகவும் கம்பீரமாக விளங்குவார். பார்த்தஉடனேயே குற்றமுள்ளவர்கள் குழைந்து போவார்கள். மற்றவர்கள் மரியாதை செய்வார் கள். என் தாயாரிடத்தில் இருந்ததைப்போன்ற விசேஷ குணங்களோ செயல்களோ தந்தையி னிடத்தில் இயல்பாக இல்லை. என்றாலும் அவரு டைய உத்தியோக முறையில் சொந்த முயற்சி இல்லாமலேயே நேர்ந்த பல சம்பவங்கள் மிகவும் ரசிக்கத் தக்கவை. ஆனால் அவற்றை எல்லாம் இங்கே சொல்ல இடமில்லை. என் தாயாரைப் போன்ற ஆழ்ந்த தெய்வ பக்தியுடையவர் அல்ல வென்றாலும் என் தந்தை மிகவும் தெய்வ நம் பிக்கை உள்ளவர். அவர் வட ஆற்காடு ஜில்லா

திருக்கோவிலூர் தாலுக்கா பரனூர் என்ற கிராமத்தில் பிறந்தவர். மிக எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒரு சிறு குடிசை வீடும் அரைச் செய் வயலும் கொஞ்சம் புஞ்சைக் காடும்தான் ஆஸ்தி. சுமார் பதினைந்து ஜீவன்கள் அடங்கிய குடும்பம். கஷ்ட ஜீவனம்தான். சிறு வயதில் பல நாள் பட்டினி கிடந்தவர். பதினைந்து வயதில் வெறும் வயிற்றுக் கூழுக்காக வண்டி யோட்டிக் கொண்டிருந்தவர். அந்தக் காலத்துப் படிப்பில் மூன்ருவது வகுப்பு வரையிலும்தான் படித்தவர். இங்கிலீஷ் வாசனையே இல்லாதவர். தமிழும்கூட உத்தியோகத்துக்கு வந்தபிறகுதான் நன்ருக எழுதப்படிக்கத் தெரிந்துகொண்டார். அவரைப் போல வேகமாக எழுதுகிறவர்களை நான் கண்டதில்லை. கணக் கெடுத்துச் சொல்லவேணுமாஞல் நிமிஷத்துக்கு நூறு வார்த்தைகளுக்கு குறையாமல் ஒரே மாதிரி எழுதுவார். படிப்பதற்கு எப்படி இருந்தாலும் பார்ப்பதற்கு வெகு அழகாக இருக்கும்.

இருபது வயது வரையிலும் கிராமத்தில் கஷ்ட ஜீவனம் செய்துகொண்டு இருந்து விட்டு அதன் பிறகு அங்கே கொடிய பஞ்சம் உண்டாகி விட்டதால் பிழைப்புக்காக சேலத்துக்கு வந்தார். சேலத்தில் அவருக்கு பல உறவினர்கள் உண்டு. அவர்களுடைய உதவியால் அகஸ்மாத்தாகவோ அதிர்ஷ்ட வசமாகவோ போலீஸ் ஜவாஞக சேர்ந்தார்.

அவர்களில் வீரப்பப்பிள்ளை என்பவருடைய

மனைவி மிகவும் நெருங்கிய உறவு. வீரப்ப பிள்ளை சூரமங்கலம் 'ரைல்வே ஸ்டேஷனில்' 'கூட்ஸ் ஷெட்டில்' ஒரு 'போர்ட்டர்.' அவருடைய வீட்டில் எல்லா பண்டங்களும் நிறைந்திருக்கும். பஞ்சம் என்பது அங்கே தலைகாட்ட முடியாது. நல்ல பருப்பாக பத்து மூட்டை பார்க்கலாம்; நல்ல அரிசியாக பதினைந்து மூட்டை இருக்கும். அதேமாதிரி மற்ற எல்லா தானியங்களும் தவசங்களும். சம்பளம் ஆறு ரூபாய்தான். பின் எப்படி இவ்வளவு பண்டங்கள்! கேட்பானேன்? அந்த காலத்து ரயில்வே உத்யோகம் போர்ட்டர் வேலையானாலும் அவ்வளவு ஆதாயமுள்ளது. 'கூட்ஸ் ஷெட்டு'க்குள் வந்து போகும் எந்த மூட்டையோ, பார்சலோ வந்தபடியே போகாது. என்ன சரக்காயிருந்தாலும், யாருக்குப் போவதாயிருந்தாலும் மூட்டைக்கு இரண்டு படியாவது குறைந்துதான் போகும். ஆயிரம் மூட்டைக்கு இரண்டாயிரம் படி ஆச்சல்லவா? அதில் 'ஸ்டேஷன் மாஸ்டர்' முதற் கொண்டு போர்ட்டர் வரையில் எல்லாருக்கும் வீதாசாரம் உண்டு. எடுக்கிற சமயத்தில் யார் யார் அந்த 'கூட்ஸ் ஷெட்டில்' 'ட்யூட்டி' யில் இருப்பார்களோ அவர்களுக்குக் கொஞ்சம் பிரத்தியேகமான வீதாசாரம், இது உலகமறிந்த ப்கிரங்கக் கொள்ளை. அதைப் பற்றி ரைல்வே அதிகாரிகளுக்கு எவ்வளவு பிராதுகள் செய்து கொண்டாலும் கேள்விமுறை இல்லாத காலம். அதனால் வீரப்பபிள்ளை வீடு பஞ்சத்திற்கு

பயந்து ஓடிவந்த வெங்கட்ராம பிள்ளைக்கு விமோசனமாக இருந்தது.

அங்கே சிலகாலம் தங்கியிருந்தார். கூட்ஸ் ஷெட்டில் பங்குவந்த பண்டங்களைக் கொண்டு வந்து வீடு சேர்ப்பதும், வீரப்ப பிள்ளையின் ஒரே குழந்தையான சுப்பராயனைத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பதும் தான் வெங்கட்ராம பிள்ளையுடைய வேலைகள். வீரப்ப பிள்ளையின் மனைவி அங்கம்மாள் அந்தக் காலத்தில் நாகரீகமான பெண்களில் ஒருவர். எல்லா உறவினர் வீடுகளுக்கும், எல்லா உறவு முறைகளுக்கும் போய் வருவது அங்கம்மாள் தான். வீரப்ப பிள்ளை இருக்கிற இடமே தெரியாது. ஸ்டேஷன் மாஸ்டர், போலீஸ் இன்ஸ்பெக்டர், தாசில்தார் முதலிய உத்யோகஸ்தர்கள் வீடுகளுக்குப் போய் வருகிற அந்தஸ்தும் வழக்கமும் அங்கம்மாளுக்கு உண்டு.

அந்த உத்யோகஸ்தர்கள் வீடுகளில் நடக்கும் விசேஷங்களுக்கு வெகுமதிகளுடன் போய் வருவார். அதனால் அந்த உத்யோகஸ்தர்களிடம் சிபார்சு செய்து வெங்கட்ராமனுக்கு ஒரு உத்யோகம் செய்துவைக்க வேண்டுமென்று முயற்சி செய்தார். ரைல்வே போர்ட்டர் வேலைக்கு விண்ணப்பம் போட்டு உத்தரவு கிடைக்காத சமயத்தில் போலீசுக்கு ஆள் சேர்ப்பதாக அறிந்து அங்கம்மாள் வெங்கட்ராமனைக் கூட்டிக் கொண்டு,அப்போதுதான் கூட்ஸ்ஷெட்டிலிருந்து

கிடைத்த காலிப்ளவர், முட்டைக்கோஸ், பச்சை பட்டாணி முதலியவற்றை வெகுமதிகளாக எடுத்துக்கொண்டு சேலத்திலிருந்த சுந்தரராஜுலு என்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டுக்குப் போனார்.

சுந்தரராஜுலு நாயுடுவின் வீட்டுப் பெண்கள் அங்கம்மாளுக்கு மிகவும் பழக்கமானவர்கள். இவர்கள் போன சமயத்தில் இன்ஸ்பெக்டர் வீட்டிலில்லை. அங்கம்மாள் வீட்டுக்குள் போய், தான் கொண்டுவந்த வெகுமதிகளைக் கொடுத்து பெண்டுகளோடு பேசிக் கொண்டிருந்தார். வெங்கட்ராம பிள்ளை வீதியில் காத்திருந்தார். சுந்தரராஜுலு நாயுடுவுக்கு ஏழெட்டுக் குழந்தைகள். அவற்றில் கடைசிக் குழந்தையான மூன்று வயதுப் பையனும் அவனுக்கு மூத்த இரண்டு குழந்தைகளும் வீட்டுத் திண்ணையிலும் வீதியிலும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு குதிரை வண்டி வெகு வேகமாக வந்தது. குதிரை வண்டியிலிருந்து யாரோ பயந்து கூச்சலிடுகிற சத்தம் திண்ணையில் தூங்கிவிழுந்து உட்கார்ந்திருந்த வெங்கட்ராம பிள்ளையின் காதில் விழுந்தது. எழுந்து ஓடிப்போய் பார்த்தார். வந்த வண்டியின் முன்னால், குதிரையின் காலுக்கருகில், விளையாடிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டருடைய ஆண் குழந்தை விழுந்து கிடந்தது. வண்டிக்காரன் குதிரையை இழுத்துப் பிடித்துத் தடுமாறிக் கொண்டிருந்தான். வெங்கட்ராம பிள்ளை வேகமாகப் பாய்ந்து குழந்தையைத் தூக்

கிக்கொண்டார். கொஞ்சம் தாமதித்திருந்தால் குதிரை குழந்தையை மிதித்திருக்கும். குழந் தையைத் தூக்கின அதே க்ஷணத்தில் வண்டியி லிருந்தவர் குதித்து ஓடிவந்து குழந்தையை வெகு ஆவலோடு வாங்கி அதற்கு ஏதாவது அடிபட் டிருக்கிறதா வென்று சோதித்தார். குழந்தை கீழே விழுந்ததில் முழங்காலில் மட்டும் கொஞ்சம் சிராய்ந்திருந்தது. வேறு அடியில்லை. வண்டியி லிருந்து வந்தவர் இன்ஸ்பெக்டர் சுந்தரராஜுலு நாயுடுதான். வண்டியும் குதிரையும் அவருடை யதுதான். குதிரை புதிசு, மிகவும் முரடு.

குழந்தையை அபாயத்திலிருந்து காப்பாற் றிய வெங்கட்ராம பிள்ளையை இன்ஸ்பெக்டர் பாராட்டி, "நீ யாரப்பா" என்றார்.

"நான் அக்கா அங்கம்மா அம்மாளுடன் வந்தேன்." என்று வெங்கட்ராம பிள்ளை பதில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே குழந்தை விழுந்துவிட்ட சேதியைக் கேட்ட பெண்கள் வெளியில் வந்தார்கள். அவர்களுடன் அங் கம்மாளும் வந்தார். அந்த அம்மாளை இன்ஸ் பெக்டருக்குத் தெரியும். குழந்தைக்கு அபாயம் நேரவில்லையென்ற சந்தோஷத்தோடு, சமயத்தில் தூக்கிக்கொண்ட வெங்கட்ராமனை மெச்சிப் பேசிக்கொண்டே இன்ஸ்பெக்டர் உள்ளே போனார். மற்ற பேச்சுகள் எல்லாம் முடிந்தபின் அங்கம்மாள் வெங்கட்ராம பிள்ளையை போலீஸ் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேணுமென்று

தான் வந்த் காரியத்தைப் பற்றி பிரஸ்தாபித்தார். இன்ஸ்பெக்டர் வீட்டுப்பெண்டுகளும் சிபார்சு செய்தார்கள்.

“ஓ நீங்கள் யாரும் சிபார்சு செய்ய வேண்டியதில்லே. அவன் குழந்தையைத் தூக்கின சிபார்சே போதும். போலீசுக்கு சரியான ஆள் தான். அளவுகளும் சரியாகத்தான் இருக்கும். ஆனல் போலீசுக்கு புது ஆள்களை சேர்க்கிற வேலே நேற்றே முடிந்து விட்டதே! சேர்க்க வேண்டிய எண்ணிக்கைக்கு மேலேயே சிபார்சு செய்து சூப்பரன்ட் துரைக்கு அந்த லிஸ்டை முடித்து இப்பத்தான் தபாலுக்குக் கொடுத்துவிட்டு வந்தேன். அடடா! ஒருநாள் முன்னல் வந்திருக்கக் கூடாதா?!...” என்று பேச்சை முடிக்காமல் தன்னுடைய ‘ஆர்டர்லி’ ஜவானைக் கூப்பிட்டார். “டேய்! உடனே ஓடி, நான் சூப்பரன்ட் துரைக்கு அனுப்பச் சொல்லி வந்த தபால் இன்னும் தபாலுக்குப் போகாமல் இருந்தால் அதை எடுத்துக் கொண்டு ‘ரைட்டரை’ உடனே இங்கே வரச் சொல்லு, ஓடு” என்ருர். ஜவானும் ஓடிச் சென்று பத்து நிமிஷத்தில் திரும்பி வந்தான்.

“நான் போறதுக்குக் கொஞ்சம் முன்னல் தான் தபாலில் போட்டாச் சுங்களாம்” என்ருன். இன்ஸ்பெக்டர் சிறிது நேரம் யோசனை செய்தார். உடனே மேல் வேஷ்டியை எடுத்துக்கொண்டு, “இருங்கள் வந்துவிட்டேன்” என்று அங்கம்மாளிடம் சொல்லிவிட்டு வெளியே போனர்.

நேரே தபால் ஆபீஸுக்கு சென்ருர். போஸ்ட் மாஸ்டர் வரவேற்ருர். சூப்பரன்ட் துரைக்குத் தான் அனுப்பிய தபாலில் ஒரு வெகு முக்யமான தகவல் எழுதத் தவறிப்போய் விட்ட தாகவும், கொஞ்ச நேரத்துக்கு முன்ஞல்தான் தபால் பெட்டியில் போடப்பட்ட அந்தத் தபாலை எடுத்துத் தனக்குத் தரவேணும் என்றும் கேட்டார். போஸ்ட் மாஸ்டர் எடுத்துக் கொடுத்தார். வாங்கிக் கொண்டு சுந்தரராஜுலு நாயுடு நேரே வீட்டுக்கு வந்தார். தபாலைத் தன் பெட்டிக்குள் வைத்துவிட்டு வெங்கட்ராம பிள்ளையைக் கூப்பிட்டு அவருடைய உயரம், மார்பின் அகலம், மற்ற அங்கமச்ச அடையாளங்களையெல்லாம் குறித்துக் கொண்டார். " சரி, போங்கள் கட்டாயம் வெங்கட்ராமனுக்கு உத்தரவு வரும் " என்று விடை கொடுத்தனுப்பினுர்.

இப்படிப்பட்ட சம்பவத்தை அதிர்ஷ்டம் என்றும் நல்லகாலம் என்றும் சொல்லிக் கொள்வதைவிட்டு வேறென்ன வென்று சொல்வது? அகஸ்மாத்தாக வெங்கட்ராம பிள்ளை சுந்தர ராஜுலு நாயுடுவின் குழந்தையைக் குதிரை மிதிப்பதிலிருந்து தூக்கிவிட நேரிட்ட ஒரே ஒரு நிகழ்ச்சி அல்லவா தபால் பெட்டியில் போட்டு விட்ட கடிதத்தையும் எடுத்து மாற்றி எழுதச் செய்தது?

எதிர் பார்த்தபடி உத்தரவு வந்தது. வெங்கட்ராம பிள்ளை 'போலீஸ்' 'கான்ஸ்டபிள்'

ஆனார். பிறகு 'ஏட்' ஆனார். இன்ஸ்பெக்டராகவும் வேலை பார்த்தார். இந்த விவரங்கள் எனக்கு எப்படித் தெரியவந்தது என்பதையும் சொல்லி விடுகிறேன் : எனக்கு சுமார் பனிரண்டு வயது இருக்கும்போது தன்னுடைய ஒரே மகனை சுப்பராய பிள்ளையையும் கூட்டிக் கொண்டு அங்கம்மாள் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவர் வந்தது என் தமக்கை பழனியம்மாளை தன் மகன் சுப்பராய பிள்ளைக்குப் பெண் கேட்க. என் தகப்பனாருக்கு பெண்ணைக் கொடுக்க சம்மதந் தான். ஏனென்றால் அவர் முன்னாலேயே பெண் தருவதாக வாக்களித்திருந்தாராம். ஆனால் என் தாயார் மாப்பிள்ளைக்கு படிப்பு போதாதென்று தயங்கினார். அப்போது என் தாயாருக்கும் அங்கம்மாளுக்கும் கொஞ்சம் வாக்குவாதம் நடந்தது. அந்த வேகத்தில் அங்கம்மாள், தான் சுந்தர ராஜுலு நாயுடு வீட்டிற்கு கூட்டிப்போய் என் தகப்பனாருக்கு உத்யோகம் சம்பாதித்துக் கொடுத்ததை சுட்டிக்காட்டி, "நான் அந்த காலத்தில் அப்படியெல்லாம் தம்பியை (வெங்கட்ராம பிள்ளையை) வீட்டில் வைத்துக் காப்பாத்தி வேலை வாங்கித் தந்ததினால்தானே நீ இன்னைக்கு ஏட்டு பெண்டாட்டியாகி என்னை எடுத்தெறிந்து பேச வந்துவிட்டாய்" என்று முடித்தார். கடைசியில் என் தகப்பனார், தான் செய்திருந்த வாக்குறுதியை என் தாயாரிடம் சொல்லி, நன்றி மறக்கக் கூடாதென்றும் சொன்னார். என் தாயாரும் சம்மதித்தார். பிறகு அங்கம்மாள்

ஊருக்குப் போகு முன் ஒரு நாள் விருந்து நடந்தது. விருந்துண்டபின் எல்லோரும் சந்தோஷமாக பேசிக் கொண்டிருக்கையில் அங்கம்மாள் என் தகப்பனுரை போலீசில் சேர்க்கப் போனபோது இன்ஸ்பெக்டர் சுந்தரராஜுலு நாயுடு வீட்டில் நடந்ததையெல்லாம் எங்களுக்குக் கதை போல மிகவும் வேடிக்கை யாகச் சொன்னுர். என் தகப்பனுரும் கேட்டுக் கொண்டிருந்தார்.

# இலுப்பமரப் பிசாசு

என் தாயாரே நேரில் சொல்லுவதுபோல எழுதியிருக்கிறேன்.

ஆயிலிப்பட்டி என்ற ஊரில் என் கணவர் 'ஏட்டா'க இருந்தார். ஆயிலிப்பட்டி என்பது அப்போது ஒரு காட்டுப்புறம். ஊர் ஓரத்தில் 'போலிஸ் ஸ்டேஷன்.' அதன் பக்கத்தில் 'போலிஸ் லேன்' வீடுகள். ஐந்து ஜவான்களுக்கும் ஒரு ஏட்டுக்கும் ஆக ஆறு கூரை வீடுகள். அந்த வீடுகளுக்குப் பின் புறத்தில் ஒரு சிறு இலுப்பத் தோப்பு. அதற்கடுத்தாற்போல் ஒரு குட்டை. அந்த இலுப்பத் தோப்பில் ஒரு மரம்; மிகவும் பெரிய மரம். அந்த மரத்தில் ஒரு பேய் வசித்து வருவதாக நம்பிக்கை. இருட்டினபின் அந்த மரத்துப் பக்கம் போக யாரும் அஞ்சுவார்கள். நான் ஊருக்குப் புதிசு. இராக்காலங்களிலும்கூட அந்த இலுப்ப மரத்தைத் தாண்டி குட்டைக்குப் போய்வருவேன். அதை மற்ற பெண்கள் பார்த்து, இலுப்ப மரத்தில் ஒரு பொல்லாத பேய் இருப்பதாகச் சொல்லி என்னை எச்சரித்தார்கள். நானும் பேய் பிசாசுகள் உண்டு என்ற நம்பிக்கை உடையவள்தான். ஆனாலும் பேய் பிசாசுகளுக்குப் பயப்படக்கூடாது, பயந்தவர்களைத்தான் பேய் பிசாசுகள் மிரட்டும் என்ற நம்பிக்கையும் உள்ளவள். அத்துடன் நான் பெரியவளாவதற்கு

என் கதை : நாமக்கல்
கவிஞர் ஓவியம்



என் கதை :
நாமக்கல் கவிஞர்
ஓவியம்




ரப்பரை உபயோகப்படுத்தாமல் பென்சிலால் நேரில் பார்த்து வரைய்ப்பட்டது. பல காட்சி சாலைகளில் வைக்கப்பட்டது.

முன்னால் வருஷா வருஷம் என் பெற்றோர்களுடன் பழனிக்குப் போய்ப் பழகினவள். பழனியாண்டவரிடத்தில் எனக்கு பக்தி. பழனி ஆண்டவனுடைய பக்தர்கள் எமனுக்கும் கூட பயப்பட வேண்டியதில்லை என்று அடிக்கடி என் தந்தை சொல்லுவதைக் கேட்டவள். அதனால் பேய் பிசாசுகளைப்பற்றி யார் என்ன பயங்கரமாகச் சொன்னாலும் நான் பயப்படுவதில்லை. இலுப்ப மரப் பேயைப் பற்றி மற்றப் பெண்கள் மிகவும் பயந்து என்னிடம் சொல்லும்போதெல்லாம் "நான் பழனியாண்டவனைக் கும்பிடுகிறவள். என்னிடம் பேய் பிசாசு அண்டாது. வந்தாலும் நான் பயப்படமாட்டேன். நீங்களும் பேய் பிசாசுகளுக்கு பயப்படக்கூடாது. தைரியமாய் இருப்பவர்களைக் கண்டால் பேய்பிசாசு ஓடிப்போகும்" என்று அவர்களுக்கு அடிக்கடி தைரியம் சொல்லுவேன். கொஞ்சம் கொஞ்சமாக இலுப்பமரப் பிசாசினிடத்தில் இதுவரையிலும் ஊரில் இருந்து வந்த பயம் குறைந்துவந்தது. அந்த மரத்துக்கு ஆடு வெட்டி, பொங்கல் வைத்து, உடுக்கடித்து பூசை போட்டு, சாமி கேட்டு, வழக்கமாக ஊரார் நடத்திவந்த மரியாதைகள் எல்லாம் இரண்டு வருஷமாக என்னால் நின்றுபோய்விட்டது. சில வயசானவர்கள், பூசைகளை நிறுத்திவிட்டபடியால் கறுப்புக்குக் கோபம் வந்து ஊருக்குக் கெடுதி வரும் என்று எச்சரித்தார்கள். அதை யாரும் கவனிக்கவில்லை.

இப்படியிருக்கையில் ஒருநாள் இருட்டின

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் எங்கள் வீட்டுக் கொல்லைப்புறத்தில் "ஐயோ! அம்மா! செத்தேனே!" என்ற கூக்குரல் கேட்டு நான் ஓடினேன். எதிரில் தலைவிரி கோலமாய் பக்கத்து வீட்டு அலமேலு ஓடிவந்தாள். என்னைக் கண்டதும் "அம்மா! பிசாசு!" என்று என்னை இறுகக் கட்டிப் பிடித்துக்கொண்டு மூர்ச்சையாகிவிட்டாள்.

அலமேலு சிறுபெண். கேசவன் என்ற போலீஸ் ஜவானின் மனைவி. சமீபத்தில்தான் புருஷன் வீட்டுக்கு வந்தவள். ஓழிந்த நேரமெல்லாம் என்னோடுதான் பொழுது போக்குவாள். பிசாசுகளுக்கு பயப்படக்கூடாது என்று நான் ஊராருக்கு தைரியம் சொல்லும்போதெல்லாம் அருகிலிருந்து ஆமோதிப்பாள். எந்த விவாதத்திலும் என் கட்சியில்தான் இருப்பாள். அதற்காகவும் பொதுவாக அவளுடைய நல்ல குணத்திற்காகவும் எனக்கு அவளிடத்தில் அபரிமிதமான அன்பு. மூர்ச்சையான அலமேலுவை அப்படியே தூக்கிக்கொண்டு வந்து கட்டிலிற் படுக்க வைத்து, முகத்தில் தண்ணீரடித்து, விசிறியினுல் காற்று வீசி, மயக்கம் தெளிய எனக்குத் தெரிந்த மாற்றுகளை யெல்லாம் செய்தேன். அக்கம் பக்கத்து ஜனங்களும் கூடிவிட்டார்கள். வெகு நேரம் கழித்து அலுமேலு கண்ணைத் திறந்தாள். கொஞ்சம் கொழு மோரைக் குடிக்கச் செய்தேன். மோரைக் குடித்த பின் களைப்பு நீங்கி அலமேலு பேச ஆரம்பித்தாள். "அம்மா! இத்தனை நாளும் அந்த இலுப்பமரப் பேய் என் கண்

ணுக்குப் படவே யில்லையம்மா. இன்னைக்குத் தான் பார்த்தேன். குட்டைக்குப் போய்விட்டு வந்தேன். இலுப்ப மரத்துக்கிட்ட வந்ததும் தொப்பென்று எனக்கு எதிரில் கன்னங் கரே லென்று அந்தப் பேய் மரத்திலிருந்து குதித்து என்னைத் துரத்திக்கிட்டே வந்ததம்மா" என்று பயத்தால் உடல் நடுங்கிக் கொண்டே சொன்னாள். நான் பழனி விபூதியை அலமேலுவின் உச்சியிலும் நெற்றியிலும் தடவி தைரியம் சொன்னேன். கொஞ்ச நேரத்தில் அலமேலு தூங்கி விட்டவள் போலத் தெரிந்தது. ஆனால் விடிய விடியப் புரண்டு கொண்டும் உளறிக் கொண்டும் தான் இருந்தாள். மறு நாள் அலமேலுவுக்குக் கடுமையான ஜுரம் வந்துவிட்டது. பத்து நாள் படுக்கையிலேயே கிடந்தாள். ஊர் முழுவதும் அலமேலுவைப் பேய் மிரட்டிவிட்ட பேச்சுத் தான். ஊரிலுள்ள கிழங்களெல்லாம், தங்கள் பேச்சைக்கேட்காததின் பலன்தான் அது என்று, பேய்க்கு பயப்படக்கூடாது என்று நான் செய்து வந்த உபதேசத்தை ஏளனம் பேச ஆரம்பித்து விட்டார்கள். என் பேச்சைக் கேட்டுக் கொண்டு இலுப்பமரப் பிசாசை அவமதித்து அதற்குப் பூசை போடுவதை நிறுத்தினது குற்றம்தான் என்று ஜனங்களும் நினைக்கத் தொடங்கி விட்டார்கள்.

ஊரிலுள்ள பெரியவர்கள் சிலபேர் கூடி இலுப்ப மரத்துக்கு உடனே பூசை போட வேணு மென்று தீர்மானித்தார்கள். சாமியாடி

முத்தப்ப பண்டாரத்திடம் போனார்கள். முத்தப்பன் அந்த ஊரிலும் பக்கத்து கிராமங்களிலும் பெயர் போன பூசாரி. பேயோட்டுவது, சாமி சொல்வது, பீடைகளுக்குப் பரிகாரம் செய்து கழிப்புக் கழிப்பது, முதலான வேலைகளில் பரம்பரையான பழக்க முள்ளவன். வைத்தியமும் செய்வான். அலமேலுவுக்கு அவன்தான் மந்திரம் செய்து, யந்திரம்கட்டி, மருந்தும் கொடுத்தான். வருஷத்தில் குறைந்த பட்சம் நாலு தடவையாவது அவனைக் கொண்டு ஊரார் கிராம தேவதைகளுக்கும் காற்று கறுப்புகளுக்கும் பொங்கலிட்டுப் பூசை நடத்துவார்கள். அந்த வட்டாரத்திலுள்ள எல்லா கிராமத்தாரும் வீட்டுக்கு இவ்வளவு என்று அரிசி, பருப்பு, ஆடு, கோழி முதலான பல பொருள்களையும் முத்தப்பனுக்குக் காணிக்கையாகக் கொடுப்பார்கள். அதனால் அவனுக்கு நல்ல வருமானம். அந்தக் கிராமத்தில் அவனுடைய வீடுதான் 'பூசாரி வீடு' என்ற மச்சு வீடு. எல்லா ஜனங்களிடத்திலும் பிரியமாகப் பழகுவான். அவனால் யார் யாருக்கு என்ன ஆகவேணுமோ அதை வெகு பரிவுடன் செய்வான். எல்லாருக்கும் அவனிடத்தில் அன்பும் மரியாதையும் உண்டு. நான் அந்த ஊருக்கு வந்த நாளாக என்னுடைய பேச்சைக் கேட்டு ஊரில் பூசைகள் குறைந்து போனதால் முத்தப்பனுக்குத்தான் நஷ்டம்.

அலமேலுவை பேய் மிரட்டிவிட்ட பிறகு ஊரில் முத்தப்பனுடைய தயவுக்கு கிராக்கி உண்

டாகிவிட்டது. கும்பல் கும்பலாக ஜனங்கள் முத்தப்பன் வீட்டுக்கு வந்து கிராம தேவதைகளுக்கும் இலுப்ப மரத்துக்கும் வழக்கம்போல் பூசை போட வேண்டியதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.....பொதுஜன அபிப்பிராயம் இலுப்ப மரத்துக்கும் பூசை போட வேண்டுமென்பதில் பலமாகத் திரும்பி விட்டதினால் என்னுடைய கட்சிக்குக் கொஞ்சம்கூட செல்வாக்கில்லாமற் போய் விட்டது. இதுவரையிலும் "பேய் பிசாசுகளுக்குப் பூசை என்ன?" என்று என்னுடன் சேர்ந்து சொல்லிக் கொண்டிருந்தவர்களெல்லாம் பூசைக்கு வேண்டிய வரிகளைத் தாங்களே வலியக் கொண்டு போய் முத்தப்பனிடம் செலுத்த ஆரம்பித்தார்கள். அதனால் என் கட்சி தலை நீட்ட முடியவில்லை. பூசாரி முத்தப்பனே வீடு வீடாகப் போய் தானிய தவசம், ஆடு, கோழி, வரிப்பணம் முதலியவற்றை வசூலித்தான். என் வீட்டிற்கும் வந்தான். எனக்கு அலமேலுவை பயப்படுத்திய இலுப்ப மரப் பிசாசின் மேல் வெகு கோபம். அந்தப் பேயை ஊரைவிட்டு துரத்துவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யாமல் அதற்குப் பூசை போடவேணுமென்ற முயற்சி எனக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் ஊருக்கு விரோதமாக நடந்து கொள்ளக் கூடாதென்று நானும் மற்ற வீட்டார் தந்த மாதிரி காணிக்கையும் அரிசி பருப்பையும் தந்தேன். ஆனால் முத்தப்பனுக்கு அது திருப்தியில்லை. இரண்டு வருஷமாக என்னால்

அவனுடைய வரும்படிகள் குறைந்து விட்டபடியால் என்னிடத்தில் அபராதம் வசூல் செய்ய நினைத்தது போலவே "என்னம்மா எல்லா வீட்டிலும் தருவதைப் போலவே ஏட்டு வீட்டிலும் தந்தால் போதுமா? இலுப்ப மரத்துக் கறுப்புக்கு உங்கள் மேல்தான் ரொம்ப கோபமிருக்கும். நீங்கள் ரெண்டு ஆட்டுக் குட்டியாவது அதிகமாகத் தரவேணும். இலுப்ப மரத்துக் கறுப்பு பொல்லாதது. உங்களுடைய நல்லதுக்குத் தான் சொல்லுகிறேன்" என்றான். எனக்குக் கோபம் வந்து விட்டது. "பூசாரி! நான் பேய் பிசாசுகளுக்கெல்லாம் பயப்படுகிறவள் அல்ல. இலுப்ப மரப் பிசாசு என்னை ஒன்றும் செய்துவிட முடியாது. எனக்குப் பழனியாண்டி பக்கத்திலேயே இருக்கிறான். நான் அலமேலு அல்ல. அலமேலுவை மிரட்டின இலுப்ப மரப் பேய் என்னிடம் வந்தால் அதை என் ஆணிகட்டின செருப்பாலேயே அடித்து ஊரை விட்டு ஓட்டி விடுவேன். நான் கிராம தேவதைகளுடைய பூசைக்குத் தான் என்னுடைய காணிக்கையைத் தந்தேன். பிசாசு பூசைக்கு ஒன்றும் தரமாட்டேன்," என்று கண்டித்துச் சொல்லி விட்டேன். இதைக் கேட்டுக் கொண்டிருந்த என் கணவர் "போனால் போகிறது, பேய் பிசாசுகளுடன் என்னத்துக்குத் தகராறு? இரண்டு ஆட்டுக் குட்டிதானே, கொடுத்து விடலாமே" என்றார். நான் கண்டிப்பாகக் கொடுக்கக் கூடாது என்று தடுத்து விட்டேன். இந்த விஷயங்களி

லெல்லாம் என் கணவர் எனக்கு விரோதமாக ஒன்றும் செய்ய மாட்டார். ஒன்றும் சொல்ல முடியாமல் பூசாரி முத்தப்பன் வந்ததை வாங்கிக் கொண்டு போய் விட்டான்.

பூசைகளெல்லாம் நன்ருக நடைபெற்றன. காளியம்மன், மாரியம்மன், சப்தகன்னிமார் முதலான பூசைகளுக் கெல்லாம் நானும் போயிருந்தேன். ஆனல் இலுப்ப மரத்துப் பூசைக்கு மட்டும் போகவில்லை. அதற்காக என்னை ஊரிற் சிலபேர் குற்றமாகக்கூடச் சொன்னர்கள். பூசை முடிவதற்குள் அலமேலுவுக்கு உடம்பு குணப்பட்டு விட்டது. அவளுடைய புருஷன் கேசவன், எப்படியாவது, இலுப்ப மரப் பிசாசின் கோபம் தணிந்தால் போதும்என்று முத்தப்பன் கேட்டதை யெல்லாம் தந்துவிட்டான். கேசவனுடைய கட்டாயத்துக்காக அலமேலுவும் பிசாசு பூசைக்குப் போய் வந்தாள்.

பூசைக்குப் பிறகு ஊரில் எல்லாருக்கும் ஒரு வித திருப்தி. என்னுடன் சேர்ந்துகொண்டு 'காத்து கறுப்பை' மதிக்காமல் பேசுகிற பேச்சுகளும் நின்று விட்டதைப் பற்றி கிழங்களுக் கெல்லாம் சந்தோஷம். இருட்டின பிறகு இலுப்ப மரத்துப் பக்கம் ஆண்பிள்ளைகள் கூடப் போவது நின்றுவிட்டது. ஆனல் என்னுடைய பிடிவாதம் மட்டும் மாறவில்லை. அடிக்கடி இருட்டின பின்னும் இலுப்பமரத்தைக் கடந்து குட்டைக்குப் போய் வருகிற வழக்கத்தை நான்

விடவில்லை. நான் ஒரு தண்டாயுதபாணி விக்ரகத்தையும், ஒரு வேலாயுதத்தையும், ஒரு மயில் வாகனத்தையும் வைத்துக் கொண்டுதான் வீட்டில் பூசை பண்ணுகிற வழக்கம், அந்தப் பூசையில் 'தண்டாயுதம்' என்று இரும்புத் தடியையும் வைத்திருப்பேன். அந்தத் தடி ஒரு கைப் பிரம்பு உயரம் இருக்கும். அடியில் ஒரு கனத்த பூண் போட்டிருக்கும். உச்சியில் சலங்கை கட்டியிருக்கும். அந்த இரும்புத் தடியை கையிற் பிடித்துக் கொண்டு, காலில் ஆணிகட்டின கனமான செருப்பைப் போட்டுக் கொண்டுதான் இருட்டுக்குப் பின் இலுப்ப மரப் பக்கம் போவேன். கையில் இரும்பும் காலில் செருப்பும் இருந்தால் பேய் பிசாசுகள் அண்டாது என்பது என் திடமான நம்பிக்கை.

இப்படி இருந்து வருகையில், அந்த ஊரிலுள்ள வீராயி என்ற ஒரு பெண் பக்கத்து ஊருக்கு ஒரு உறவின் முறையாகப் போய் விட்டுத் திரும்பி வருகையில் இருட்டி விட்டது. யாரோ அவளை வழிமறித்து, அவளுடைய காதில் இருந்த தங்க ஓலையை வெடுக்கென்று அறுத்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். அந்தக் கேசுக்காக சில சந்தேகப்பட்ட இடங்களைச் சோதனை போடவும் துப்பு விசாரிக்கவுமாக, என்னுடைய கணவர் கேசவனையும் கூட்டிக் கொண்டு சுமார் ஒருவாரம் வரையில் ஊரில் இல்லாத ஒரு நாள் இரவு, பத்துமணி சுமாருக்குக் குட்டைக்குப் போனேன். திரும்பி வரும்போது இலுப்ப மரத்

துக்கருகில் வந்தவுடன் மரத்திலிருந்து யாரோ குதித்தது போல திப்பென்று சத்தங் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். கருத்த தடித்த உருவம் ஒன்று கண்ணிற் பட்டது. இலுப்ப மரப் பிசாசு தான் என்று தெரிந்து கொண்டேன். கொஞ்சம் கூடப் பயப்படாமல், இருந்த இடத்தை விட்டும் நகராமல், நான் பிசாசையே உற்றுப் பார்த்துக் கொண்டு, எனக்குள்ளேயே "முருகா! கந்தா! பழனியாண்டி!" என்று உச்சரித்துக் கொண்டு நின்றேன். அந்தப் பேய், புலி, கரடி உறுமு வதைப் போல பயங்கரமான ஓசை காட்டிற்று. நான் அதற்கு அஞ்சவில்லை. அஞ்சாமல் உற்றுப் பார்த்தால் பேய்கள் ஓடிவிடும்என்றும், கொஞ்சம் பயந்து உற்றுப் பார்ப்பதை விட்டு,பார்வையைத் திருப்பினால் உடனே பேய்கள் அடித்துவிடும் என்றும் பல பேர்கள் சொன்னதைக் கேட் டிருந்த நினைப்பினால்,பார்வையை வேறிடத்துக்கு மாற்றாமல் பிசாசையே பார்த்துக் கொண்டு நின் றேன். அந்தப் பேய் உறுமிக்கொண்டே தவளை மாதிரி தத்தித் தத்திக் குதித்து என் அருகில் வந் தது. முன்நிலாக் காலமென்றாலும் இலுப்பத் தோப்பின் இருட்டில் ஒரு கறுப்பான உருப்படி யைத் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை. பேய் கிட்டி வர, வர, நான் பார்வையை மட்டும் மாற் றாமல், கொஞ்சங் கொஞ்சமாக எங்கள் வீட்டுக் கொல்லைப் பக்கமாகப் பின்னாலேயே நகர்ந்தேன். அதுவும் வந்தது. நான் மறுபடியும் நின்று கொண்டு, "இலுப்ப மரத்துப் பிசாசே! அல்

மேலுவை மிரட்டினதைப் போல் என்னையும் மிரட்ட முடியாது. பேசாமல் ஓடிப்போ. இல்லாவிட்டால் இதோ முருகனுடைய தண்டாயுதம் இருக்கிறது" என்றேன். உடனே அந்தப் பேய் அதிகமாக உறுமிக்கொண்டு என்மேல் தாவிக்குதித்தது. நான் சற்று விலகிக் கொண்டு, கண் மூடிக் கண் திறப்பதற்குள் என் கையிலிருந்த இரும்புத் தடியை இரண்டு கைகளாலும் ஓங்கி அந்தப் பேயின் தலையில் பலமாக அடித்து விட்டேன். 'ஐயோ' என்று அலறிக்கொண்டு வெகு ஆத்திரத்துடன் அந்தப் பிசாசு என்மேற் பாய்ந்து என்னை அழுத்திக் கொண்டது. நான் கைத்தடியை மட்டும் விடாமல் இன்னொரு கையால் பிசாசை இறுக்கிப் பிடித்துக் கொண்டு "பிசாசு! பிசாசு! ஓடியாங்க" என்று உரக்கக் கத்தினேன். என் சத்தத்தைக் கேட்டு கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு **காதர் சாயபு** ஓடி வந்தான். காதர் சாயபு ஒரு போலீஸ் **ஜவான்**. பத்து நாளைக்கு முன்னால்தான் அந்த ஊருக்கு மாற்றப்பட்டு வந்தவன். அவனுக்கு இலுப்ப மரத்துப் பிசாசின் கதை ஒன்றும் தெரியாது. யாரோ திருடன்தான் வந்து விட்டானுக்கு மென்று ஓடிவந்தான். கதவைத் திறந்து கொண்டு யாரோ ஓடி வருகின்ற ஓசையைக் கேட்டதும் பிசாசு என்னை விட்டு விட்டு எழுந்திருக்க முயன்றது. ஆனால் நான் அதை விடவில்லை. காதர் சாயபு பக்கத்தில் வந்து நின்றான். இரண்டு உருவங்கள் கட்டிப் புரண்டு கொண்

டிருந்ததைத் தவிர யார், எது என்று தெரியாமல் "யார் கூப்பிட்டது? என்ன? என்ன?" என்று கத்திக் கொண்டே நின்றான். நான் அந்தப் பேயை ஓடவிடாமல் அமுக்கிக்கொண்டு, என் குரலைக்காட்டி அந்தப் பிசாசைப் பிடித்துக் கொள்ளச் சொல்லி காதர்சாயபுவிடம் சொன்னேன். என்னுடைய தலைமயிர் அவிழ்ந்து முகத்தை மூடிக்கொண்டிருந்தது. ஆடை அலங்கோலப்பட்டிருந்தது. என்னுடைய ஆடையைச் சரிப்படுத்திக்கொள்ள எண்ணி "சாயபு இது இலுப்பமரத்துப் பிசாசு. கொஞ்சம் பிடித்துக் கொள். மயிரை முடிந்துகொண்டு என் காலிலிருக்கிற ஆணி கட்டின செருப்பால் அடித்தால் தான் இனிமேல் இந்தப் பிசாசு யாரையும் மிரட்டாது" என்று நான் பிடித்திருந்த பிடியோடு பிசாசைக் காதர் சாயபுவிடம் ஒப்படைத்தேன். அவனும் பிசாசைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். நான் என் கூந்தலை முடிந்து கொண்டு, உடையைச் சரிப்படுத்திக்கொண்டு என் காலிலிருக்கிற ஆணி கட்டின செருப்பைக் கையில் எடுக்கப்போனேன். காதர்சாயபு, எனக்கு ஏதாவது அடிபட்டு விட்டதோ என்றும் என்னுடைய தைரியத்தை மெச்சியும் என்னைப் பார்த்துக்கொண்டே நின்றான். வெடுக்கென்று காதர்சாயபு பிடியைப் பிடுங்கிக்கொண்டு பிசாசு இலுப்பமரத்துப் பக்கம் ஓடிவிட்டது. காதர்சாயபு துரத்தினான். இலுப்பமரத்துக்கருகில் ஒரு அடர்ந்த வேலி. அந்த வேலிக்குள்

பிசாசு மறைந்துவிட்டது. காதர்சாயபு காற்ருய்ப் பறந்து அங்குமிங்கும் தேடிஞன். பிசாசு கிடைக்கவில்லை. அதற்குள் எங்கேபோய் விட முடியும் என்று நாலாபக்கமும் பார்த்தான். கொஞ்ச தூரத்தில் குட்டை. குட்டையின் நீரோரத்தில் உருவம் அசைந்தது, நிலா வெளிச் சத்தில் அவன் கண்ணிற்பட்டது. ஒரே தாண்டில் அங்கே ஓடிஞன். இவன் ஓடி வருவதைப் பார்த்து அந்த உருவமும் ஓட ஆரம்பித்தது. சிக்கிக் கொண்டது என்ற உத்ஸாகத்தில் காதர்சாயபு வெகு வேகமாய்த் துரத்திஞன். அந்த உருவமும் வேகமாக ஓடிற்று. குட்டைக்கு அப்பால் ஒரு நல்ல பாதை. அந்தப் பாதையில் சுமார் இரண்டு மைல் தூரம் காதர்சாயபு அந்த உருவத்தைத் துரத்திஞன். இரண்டு மைலுக்கு அப்பால் அந்தப் பாதையில் வெகு குறுகலான இடம். இரு புறத்திலும் அடர்ந்த முள்வேலிகள். அந்த இடத்துக்குப் போனதும் எதிரில் ஏழெட்டு மாடுகளை ஓட்டிக் கொண்டு சில குடியானவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களைத் தாண்டியோடப் பாதையில் இடமில்லை. அதனல், முன்ஞல் ஓடி வந்த உருவம் நிற்கவேண்டிய கட்டாயம் நேர்ந்து விட்டது. துரத்திக்கொண்டு வந்த காதர்சாயபு எதிரில் ஆட்கள் வருவதைக் கண்டு "பிடிச்சிக்கோ, உடாதே அந்தத் திருட்டுப் பயலை. ஏட்டு வீட்டு அம்மாளை அடிச்சுட்டு ஓடியாருன்" என்று கத்திக் கொண்டே ஓடி வந்து சேர்ந்தான். வேறு வழி யில்லாமல் ஓடி வந்த அந்த உருவம்

காதர் சாயபு கையில் சிக்கிக்கொண்டது. சிக்கின உருவம் ஐம்பது வயதுள்ள ஒரு குறவன். காதர் அவன் கன்னத்தில் பளீர் பளீரென்று நாலு அறை கொடுத்து, சிண்டைப் பிடித்துக்கொண்டு "நட கச்சேரிக்கு' என்று இழுத்தான். "சாமீ! என்னை அடிக்காதிங்க; நான் உள்ளதை யெல்லாம் சொல்லி விடுறேனுங்க" என்று கெஞ்சினுன். "சொல்றதை யெல்லாம் கச்சேரிக்கு வந்து சொல்லுடா சுவ்வர்." என்றுகாதர் இழுத்துக் கொண்டு போனுன்.

இதற்குள், என்னை இலுப்பமரப் பிசாசு அழுத்திக் கொண்டதும், காதர் சாயபு பிசாசைத் துரத்திக் கொண்டு போயிருப்பதும் ஜனங்களுக்குத் தெரிந்து விட்டது. எங்கள் வீட்டுக்கு முன்னுலும் போலீஸ் கச்சேரிக்கு முன்னுலும் ஊரே கூடி விட்டது. அதே சமயத்தில் வீராயி அம்மாளின் காதை அறுத்துவிட்ட 'கேஸ்' விஷயமாக வெளியூருக்குப் போயிருந்த என் கணவரும் கேசவனும் திரும்பிவந்து சேர்ந்தார்கள். என் கணவருக்கு என்னைப் பேய் மிரட்டிவிட்டதே என்ற கவலை. கேசவனுக்குத் தன் மனைவியை மிரட்டி, காய்ச்சலில் கஷ்டப்படச் செய்துவிட்ட இலுப்ப மரப் பிசாசை நான் மிரட்டி விட்டேனே என்ற சந்தோஷம். பலபேர் பலவிதமாகப் பேசிக் கொண்டு கூட்டமாக நானும் பேயும் மல்லுக்கட்டிப் புரண்ட இடத்தைப் பார்வையிட்டார்கள். அந்த இடத்தில் பெண்கள் தலையில் வைத்துப் பின்னிக் கொள்ளுகிற ஜவரிமாதிரி ஒரு பெரிய

மயிர்க் கொத்து கிடந்தது. அது நீண்டு அடர்ந்த ரோமமும் சடைகளும் உள்ளதாக இருந்தது. அது பேயின் தலைமயிர் என்று பல பேர் பயப் பட்டார்கள். கேசவன் தைரியமாக அதைக் கச் சேரிக்கு எடுத்துக் கொண்டு போனான். பிறகு ஜனக் கூட்டம் பேயைத் துரத்தப் போன காதர் சாயபு என்னவானான் என்று பார்க்க அவன் ஓடின பக்கத்தில் தேடிக் கொண்டு போனார்கள்.

குறவனைப் பிடித்த காதர் சாயபு, எதிரில் வந்த குடியானவர்களுடன் சேர்ந்து பேசிக் கொண்டு, தான் இரண்டு மைல் துரத்தி வந்த அலுப்பைத் தீர்த்துக் கொள்ள வழியில் கொஞ் சம் உட்கார்ந்துவிட்டு மறுபடியும் குறவனை இழுத்துக்கொண்டு வந்து கொண்டிருந்தான். உட்கார்ந்து பேசின போதும் கூட காதர் சாயபு கை மட்டும் குறவனுடைய சிண்டை விடவில்லை. ஏட்டு பெண்ஜாதியை மிரட்டினவனைப் பிடித்து விட்ட வெற்றி முழக்கத்தோடு வந்து கொண் டிருந்த காதர் சாயபுவை ஜனங்கள் கண்டார்கள். பிசாசுகூடப் பிடிபட்டு விட்டதே என்ற ஆச் சரியத்தோடு ஆரவாரம் செய்தார்கள். எல் லோருமாக எங்கள் வீட்டுக்கு முன்னால் வந்து நின்றார்கள். ஊரிலுள்ள விளக்குகளெல்லாம் அங்கே வந்து விட்டன. ஒரே வெளிச்சம். அந்த வெளிச்சத்தில் பிடிபட்ட ஆசாமியைப் பார்த்தார்கள். அவன் அங்கே கூடியிருந்த பல பேருக்கு நன்றாகத் தெரிந்த **குள்ளான்** என்ற குறவன் தான்; பிசாசல்ல. நான் போய்ப் பார்த்

தேன். நான் எதிர் பார்த்த உருவம் இல்லே. "என்ன சாயபு! யாரோ வழியில் போறவனேப் பிடித்துக்கொண்டு வந்திருக்கிருயே! நான் பிடித்துக் கொடுத்த ஆள் எங்கே? என்று கேட்டேன். "அவன் தானம்மா இவன். நான் பின்னுலேயே ஓடி ரெண்டு மைல் துரத்திப் பிடிச்சேனம்மா. ஓடறபோதே வேசத்தை யெல்லாம் கலேச்சிட்டானம்மா, கொறப்பயல். இப்போ ஒங்கள்கு வேறே ஆள் மாதிரி தெரியிருனம்மா. நான் எவ்வளவு ஓட்டம் ஓடிப் பிடிச்சேனம்மா." என்று சொல்லிக் கொண்டே அவன் முதுகில் இரண்டு அடி கொடுத்தான். "இல்லே இல்லே. இது நான் பிடித்துக் கொடுத்த ஆளும் அல்ல இலுப்ப மரத்துப் பிசாசும் அல்ல." என்று சொல்லி விட்டு நான் வீட்டுக்குள் போய் விட்டேன். காதர் சாயபு ஜனங்களிடத்திலும் என் கணவரிடத்திலும் அதே ஆள்தான் அவன் என்று சாதித்தான். நான் பிடித்துக்கொடுத்த உருவம் தடித்த வாலிபமான உடலாக இருந்தது. காதர் சாயபு பிடித்து வந்த ஆசாமி எலும்பும் தோலுமாக இளேத்துக் கிழட்டுத் தேகமாக இருந்தது. இலுப்ப மரப் பிசாசு ஓடி விட்டது என்று எண்ணிக் கொண்டேன்.

குறவனே இழுத்துக் கொண்டு கச்சேரிக்குப் போனுர்கள். காதர் சாயபுக்குத் தான் இவ்வளவு பாடுபட்டு ஓடிப் பிடித்து வந்த ஆசாமியை நான் ஒப்புக்கொள்ள வில்லேயே என்ற வருத்தம்.

அவனுக்கு அதே ஆள்தான் என்னை மிரட்டினவன் என்ற நம்பிக்கை போகவில்லை.

"டே! சுவ்வர்! உள்ளதைச் சொல்றியா ஒதை வேணுமா? நீதானே இலுப்பமரத்துக்குப் பின்னாலே ஓடினவன்?" என்று குறவனுடைய சிண்டை பலமாகக் குலுக்கினான்.

"ஐயோ சாமி! அதெல்லாம் மோட்டையன் செய்த வேலைங்க. நான், இருக்கிற இடத்தைக் காட்டிடுறேனுங்க. என்னை ஒண்ணும் பண்ணாதிங்கசாமி" என்று கும்பிட்டுக் கெஞ்சினான். உடனே என் கணவர் "சரி இருக்கிற இடத்தைக் காட்டுவா" என்று அவனுடைய சிண்டை விடுவித்து இடத்தைக் காட்டச் சொன்னார். "வாங்க சாமி காட்றேன்" என்று குள்ளான் முன்னால் நடக்க ஏட்டும் காதர் சாயபும், கேசவனும் இன்னும் சிலரும் பின்னால் போனார்கள். ஜனக் கும்பலை நிறுத்திவிட்டு இலுப்பத் தோப்புக்குப் போனார்கள். பெரிய இலுப்ப மரத்துக்குப் போனதும், அங்கிருந்து குள்ளான் அடையாளம் பார்த்துக் கொண்டு நடக்கிறது போல வழி பார்த்து குட்டைக்குள் இறங்கினான். குட்டையில் இலுப்ப மரத்துக்கு நேராகக் குறி பார்த்து தண்ணீருக்கு ஓரத்திலிருந்த ஒரு ஈச்சம் புதரண்டை நின்றான். மறுபடியும் இலுப்ப மரத்துக்கு நேர் பார்த்து ஈச்சம் புதருக்குப் பக்கத்திலிருந்த ஒரு பெரிய கல்லைப் புரட்டித் தள்ளினான். அந்தக்கல் இருந்த இடத்துக்கு நேராக மண்ணைக்

கிண்டினான். மண்ணிலிருந்து ஒரு சிறு துணி முடிப்பை எடுத்தான். அதை ஏட்டு கையில் கொடுத்தான். ஏட்டு அந்த முடிச்சை அவிழ்த்துப் பார்த்தார். அதில் சில நாட்களுக்கு முன்னால் வீராயி அம்மாள் காதிலிருந்து அறுத்துக் கொண்டு போன பொன்னோலை இருந்தது. அதைக் கண்டு பிடிக்க வேணும் என்று பத்து நாளாய்ப் பல இடங்களுக்கு அலைந்து திரிந்து கொண்டிருந்த ஏட்டுக்கும் கேசவனுக்கும் பரமானந்தம் உண்டாகி விட்டது.

வீராயியின் காதை அறுத்தவன் மொட்டையன் என்றும், அந்த நகையைத் தன்னிடம் கொடுத்து மறைத்து வைக்கச் சொன்னதாயும் தான் இலுப்ப மரத்துக்கு நேராகக் குறி வைத்துக் கொண்டு அந்த இடத்தில் புதைத்து வைத்ததாகவும், அதை எடுத்துப் போகவந்து, இடத்தின் அடையாளம் தேடிக் கொண்டிருக்கிறபோது சாயபு ஓடிவந்ததைப் பார்த்துப் பயந்து ஓடினதாகவும், வேறொன்றும் தான் செய்யவில்லையென்றும் குள்ளான் சொன்னான். அவன் சொன்னது உண்மை யென்று காதர் சாயபுக்குக் கூட அப்போது தான் தெரிந்தது. மறுபடியும் எல்லோரும் போலீஸ் கச்சேரிக்கு வந்தார்கள். ஜனங்கள் உண்மையை அறிந்தார்கள். 'பேய் பிடிபடுமோ! அது போய் விட்டது, குறவன் அகஸ்மாத்தாகச் சிக்கிக் கொண்டான்" என்று ஜனங்கள் பலவாறு பேசிக் கொண்டு போய் விட்டார்கள்.

சிலர் இலுப்ப மரத்துப் பிசாசை நான் அடித்து விட்டதால் எனக்கு ஏதாவது அபாயம் உண்டானாலும் உண்டாகு மென்று பயந்து என்னிடம் சொன்னார்கள்.

எனக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. 'அந்தப் பேய் என்ன ஆச்சுது? அது பேய்தானு! அல்லது நகையைப் பிடுங்க வந்த வேறொருவனாக இருக்குமோ! பேயாக இருந்தால் நான் அடித்த அடிக்கு அப்படி அலறித் துடித்திருக்குமா! பேயானால் நம்மோடு கட்டிப் புரண்டு நேருக்கு நேராகச் சண்டை போடுமா? பேய் மனிதருடைய கைக்குச் சிக்காது என்று சொல்லுவார்களே! என்று விடிய விடிய, படுக்கையிற் படுத்த படியே எண்ணி யெண்ணிப் புரண்டு கொண்டிருந்தேன். ......பொழுது விடிந்தது. என்னுடைய புடவையில் ரத்தக் கறைகள் இருப்பதைக் கண்டேன். அது நான் தடியால் அடித்த அடியினால் உண்டான காயத்திலிருந்து தான் வந்த ரத்தமாயிருக்க வேணும் என்று அறிந்தேன். சரி, என்னை அமுக்கினது பேயல்ல! யாரோ திருடன் தான். ரத்தக் கறையை என் வீட்டுக்காரரிடம் காட்டினேன். அவரும் அது திருடனாகத்தான் இருக்க வேணும் என்று தீர்மானித்தார்.

ஒரு வாரம் போய் விட்டது. இலுப்பமரப் பிசாசின் மர்மம் தெரியவில்லை. ஒரு நாள் நானும் அக்கம் பக்கத்துப் பெண்களும் இரண்டு மைல் தூரத்தில் நடக்கிற வாரச் சந்தைக்கு வழக்கம்

போல் போயிருந்தோம். நான் ஒரு காய் கறிக் கடையில்நின்று விலைகேட்டுக் கொண்டிருந்தேன். அடுத்தகடை ஒரு புகையிலைக் கடை. அதில் ஒரு ஆசாமி ஒரு புகையிலைக் கட்டைக் கையில் எடுத்து விலை பேசிக் கொண்டிருந்தான். தலையில் முக்காடு போட்டிருந்தான். நான் பார்த்த சமயத்தில் முக்காடு நழுவியிருந்தது. அவன் தலையில் புண்ணுக்குக் கட்டுகிற கட்டைப் போல ஒரு பலமான கட்டு கட்டப்பட்டிருந்தது. அந்தக் கட்டை மறைக்கத்தான் முக்காடு என்று தெரிந்தது. தலையில் அந்தக் கட்டைக் கண்டவுடன் மின்சாரம் பாய்ந்தது போல எனக்கு என்னமோ நினைவு வந்தது. அவனுடைய உருவத்தைக் கூர்ந்து கவனித்தேன். இலுப்ப மரத்தண்டை என்னோடு மல்லுக் கட்டின உருவத்தின் அடையாளங்கள் அவனிடத்தில் இருப்பது போலத் தோன்றியது. உயரம்,கனம்,பெருத்த தலை,கடைந்தெடுத்தது போலக் கை கால்கள் எல்லாம் என் மனதில் பதிவாயிருந்தபடியே இருந்தன. கண் கொட்டாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் அகஸ்மாத்தாக என் பக்கம் திரும்பி என்னைப் பார்த்தான். என்னைப் பார்த்தவுடன் திடுக்கிட்டவனைப் போல, இது வரையிலும் நழுவியிருந்த முக்காட்டை இழுத்து விட்டு முகத்தையும் பாதி மூடிக் கொண்டான். என்னுடைய சமுசயம் பலப் பட்டு விட்டது. என் சந்தேகத்தைக் காட்டிக் கொள்ளாமல் அவனைக் கவனிக்காதவனைப் போல் நான் அந்தக் கடையை

விட்டு மறைந்து விட்டேன். சிறிது நேரத்துக்குப் பின், நான் இருக்கிறேனு என்று பார்ப்பது போல மெதுவாகத் திரும்பி,முன் நான் நின்ற இடத்தைக் கடைக்கண்ணுல் பார்த்தான். நான் இல்லாததைக் கண்டு நாலா பக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்து என்னைத் தேடினுன். நான் அவன் கண்ணுக்குப் படவில்லை. நான் போய் விட்டேன் என்று முக்காட்டையும் நீக்கிக் கொண்டு நிம்மதியாகப் புகையிலை வியாபாரத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்தான். இவற்றை யெல்லாம் மறைவிலிருந்து பார்த்த நான், ஆசாமி அவனே அவன் தான் என்று நிச்சயம் பண்ணிக் கொண்டு என்னுடன் இருந்த அலமேலுவை அனுப்பி அன்றைக்கு அங்கு வந்திருக்கும் 'பீட்கான்ஸ் டேபிள்' யாராயிருந்தாலும் கூட்டிவரும்படி அனுப்பினேன். அலமேலு போனுள். சீக்கிரம் வரவில்லை. புகையிலை வியாபாரத்தை முடித்துக் கொண்டு அந்த ஆசாமி போக ஆரம்பித்தான். நான் அவனை விட்டு விடக் கூடாதென்று தூரத்தில் பின் தொடர்ந்தேன். அவன் சந்தையை விட்டு வெளியில் போகிற சமயத்தில் எதிரில் அலமேலுவும் ஜவானும் வந்தார்கள். நான் அவசர அவசரமாக விஷயத்தை ஜவானிடம் சொன்னேன். ஜவான் அந்த ஆசாமியைப் பின் தொடர்ந்தான். நான் என்னுடைய சந்தை வியாபாரங்களை அரை குறையாக முடித்துக் கொண்டு வெகு வேகமாக வீட்டுக்கு வந்தேன். கச்சேரியிலிருந்த என் கணவரை அழைத்து சந்தையிற்

கண்டதைச் சொன்னேன். உடனே அவரும் கேசவனும் சந்தைக்குப் போனார்கள்.

மறு நாள் காலையில் நான் சந்தையில் பார்த்த ஆசாமியைப் போலீசுக் கச்சேரிக்குக் கொண்டு வந்தார்கள். அவன் பக்கத்து ஊரில் ஒரு பண்ணையில் வேலை செய்து கொண்டிருக்கிற கட்டையன் என்ற குடியானவன். தலையிலிருந்த கட்டு என்ன வென்று கேட்டதற்கு தலையில் ஒரு கொப்புளம் என்றான். அவன் வழக்கமாகக் குடுமியும் மீசையும் உள்ளவனும். அப்போது மீசை சிரைக்கப்பட்டு தலையும் மொட்டையடிக்கப் பட்டிருந்தது. தலை மொட்டைக்குக் காரணம் தலைப்புண் என்றான். மீசையை எடுத்திருந்ததற்கு சரியான காரணம் சொல்ல முடியாமல் என்னென்னமோ உளறினான்.

காலை எட்டு மணியிலிருந்து பகல் ஒரு மணி வரைக்கும் அவனை என்னென்னமோ விதமாக மிரட்டியும் அவன் தனக்கும் இலுப்ப மரத் தண்டை ஏட்டம்மாவை மிரட்டினவனுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்று சாதித்து விட்டான். இதெல்லாம் கச்சேரியில் நடந்து கொண்டிருப்பதை அறிந்த நான் அந்த ஆசாமியைத் தனியாக என்னிடம் அழைத்து வரும் படி என் கணவருக்குச் சொல்லியனுப்பினேன். அவன் எங்கள் வீட்டுக்குள் நுழைந்தவுடன் "வாங்கையா இலுப்பமரத்து முனியப்பரே! உங்கள் சடையைப் போட்டுவிட்டுப் போயிட்டிங்

களே!" என்றேன். அவன் உடனே தன்னையறியாமல் சிரித்துவிட்டான். அதைக் கண்டதும் என் கணவருக்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. அவனை உட்காரச் சொல்லி தானும் பக்கத்தில் உட்கார்ந்து அழுத்தமான குரலில் "ஏய்! உள்ளதைச் சொல்லிவிட்டால் உன்னை விட்டுவிடுகிறேன். சத்தியம். இல்லாவிட்டால் பத்து வருஷம் ஜெயிலில் இருக்க வேண்டியது தான். உடனே விலங்குபோட்டு தாலூகாக் கச்சேரிக்கு அனுப்பப்போகிறேன். என்ன சொல்லுகிறாய்?" என்று அதட்டினார். அவன் மளமளவென்று சொல்ல ஆரம்பித்தான். "என்னை ஒண்ணும் பண்ணிடாதிங்க. நான் உள்ளதைச் சொல்லி விடுகிறேன். நான் பூசாரி முத்தப்பன் சொன்னபடி நடக்கிறவனுங்க. நானும் களத்தூர் ரங்கனும் பூசாரியுட சம்பள ஆளுகள். எங்க ரெண்டுபேத்துக்கும் வருசத்துக்கு வேண்டிய தானிய தவசமும், பண்டிகை நாள்களில் பணமும் துணியும் பூசாரி தருவாருங்க. நாங்கள் அவர் சொல்ற இடத்துக்குப் போய் இப்படிப் பேய் பிசாசுமாதிரி மெரட்டிப்புட்டு வருவோம். அவர் சொல்ற இடத்திலிருந்து, சொல்ற அம்மாளை ஆம்பிள்ளை இல்லாத சமயம் பார்த்து மெரட்டிடவேணும். அந்த அம்மா பயந்து ஓடிப் போவாள். நாங்கள் அலுங்காமே வீட்டுக்குப் போயிடுவோம். மறுநாள் பயிந்துபோன அம்மா வீட்டிலே முத்தப்பனைக் கூப்பிட்டு, பொங்கல் பூசையெல்லாம் செய்வாங்க. பூசாரிக்கு நல்ல

வரும்படி சிக்கும். எங்களுக்கும் பங்கு உண்டுங்க. இதுவரையிலும் ஒரு அம்மாளாவது எங்களைத் திரும்பிக்கூடப் பார்த்ததில்லை. எங்கள் சத்தத்தைக் கேட்டவுடன் உளறியடிச்சுக்கிட்டு ஓடிடுவாங்க. நாங்கள் அம்புட்டோடு போயிடுவோம். நம்ம அம்மா தானுங்க கொஞ்சங்கூடப் பயப்படாமே எதிர்த்து நின்னுங்க. அடேயப்பா! எப்படி அடிச்சுட்டாங்க பாருங்கையா" என்று தலையைக்காட்டி என்னைப் பார்த்தான். உடனே அவனை மன்னித்துவிட்டதாகச் சொல்லி வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டார். அன்றைக்கு சாயங்காலமே அந்த ரங்கனைக் கூட்டிவந்து மிரட்டினதில் அவனும் வெகு நேரம் கழித்து கட்டையன் சொன்னதையெல்லாம் ஒப்புக் கொண்டான். அலமேலுவை மிரட்டினதும் முத்தப்பனுடைய ஏவல்தான் என்று தெரிய வந்தது.

பிறகு இரண்டு நாளைக்குள் பூசாரி முத்தப்பனைக் கைது செய்வதற்கு வேண்டிய கேசை உருவாக்கிக்கொண்டு அவனுக்கு விலங்கு போட முயற்சிகள் எல்லாம் தயாராகிவிட்டன. முத்தப்பனுக்கும் சமாசாரம் எட்டிவிட்டது. நாலாம் நாள் காலையில் பூசாரி முத்தப்பனுடைய பெண்ஜாதி நல்லம்மாள் தன்னுடைய ஆறு குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு என் வீட்டுக்கு வந்தாள். அவளுடைய கடைசிக் குழந்தை பிரசவமாகி இருபது நாள்தான் இருக்கும். பிரசவமான இளைப்புடன் வெளுத்த மேனியாக நோய் வாய்ப்

பட்டவளைப்போல் மிகவும் பரிதபிக்க வேண்டிய நிலையில் இருந்தாள் நல்லம்மாள். நான் அவளை அதற்குமுன் பார்த்ததில்லை. முத்தப்பன் ஊரில் பெரிய பணக்காரன் ஆனதால் நல்லம்மாள் வீட்டை-விட்டு வெளியில் போனதில்லை. வாடி வதங்கிய கோலமாக குழந்தைகளுடன் வந்த அவளை, அவள் யாரென்பதை அறியாமலேயே நான் வரவேற்றேன். அவள் வந்த காரியத்தை நான் விசாரிப்பதற்கு முன்னால், அவள் கையி லிருந்த இருபது நாளையச்சிசுவை என் காலண்டை படுக்கப்போட்டு, தானும் என்காலைப் பிடித்துக் கொண்டு கதறினாள். வெகு நேரம் எனக்குக் காரணம் விளங்கவில்லை. "அம்மா இந்தக் குஞ்சு குழந்தைகளுக்குக் கொஞ்சம் பாலு வாருங்கம்மா. உங்களுக்குக்கோடிப் புண்ணியம்" என்று தன்னை இன்னாளென்று தெரியப்படுத்தி, எப்படியாவது ஏட்டு ஐயாவிடம் சிபார்சு பண்ணி, தன் புருஷனை ஜெயிலுக்கு அனுப்பாமலிருக்கக் கேட்டுக் கொண்டாள். அப்போது என் வீட்டுக்காரர் வீட்டிலில்லை. நான் நல்லம்மாளுக்கு ஆறுதல் பேசி அனுப்பிவிட்டு கணவர் வருகைக்குக் காத் திருந்தேன்.

வந்தார். குளித்துவிட்டுச் சாப்பிட்டார். தாம் பூலம் போட்டுக்கொண்டு எங்கள் இரண்டு வயசுக் குழந்தையை எடுத்துக் கொஞ்சிக்கொண் டிருந்தார். அந்த சமயம் பார்த்து நான் நல்லம் மாளுக்காக சிபார்சு பண்ணினேன். அவருக்கு என்றுமில்லாத கோபம் வந்துவிட்டது. முத்தப்

பனை ஜெயிலுக்கு அனுப்பாமல் விடமுடியா தென்றும், அந்தக் கச்சேரி விஷயங்களில் நான் தலையிடக் கூடாதென்றும் கண்டித்தார். நான் சளைக்கவில்லை. திருப்பித் திருப்பி சிபார்சு பேசி நல்லம்மாளுக்காக எப்படியாவது மன்னிக்க வேணும் என்று பிடிவாதம் செய்தேன். உட்கார்ந் திருந்த என் கணவர் உடனே எழுந்து, உடுப்பு களை மாட்டிக்கொண்டு "சரி, பிசாசை மிரட்டி யாய்விட்டது, என்னை மிரட்ட வந்துவிட்டா யாக்கும்," என்று சொல்லிவிட்டு, சாப்பிட்ட உடன் கொஞ்சம் படுக்கிற வழக்கத்தையும் விட்டு கச்சேரிக்குப் போய்விட்டார்.

நாலுநாள் வீட்டில் என்னோடு சரியாகப் பேசுவது கூட இல்லை. என்னுடைய பேச்சு மட்டும் ஓயவில்லை. சிபார்சு சொல்லிக் கொண்டே யிருந்தேன். அவர் பதிலே சொல்லுவதில்லை.

ஐந்தாவது நாள் அவர் சாப்பிட்டுக்கொண் டிருக்கும்போது "நான் பிசாசை மிரட்டினதால் தானே பத்துநாளாக ஓடி ஓடித்தேடின பொன் னோலை தானுகச் சிக்கிச்சி?" என்றேன். நாலு நாளாக என்னோடு முகங்கொடுத்துப் பேசா திருந்த என் கணவர் உடனே சிரித்துவிட்டார். "உன் ரகளைக்காக அவனை விட்டுத் தொலைக் கிறேன் போ. சும்மா தொண தொண என்று அதையே சொல்லிக் கொண்டிருக்காதே" என்றார்.

மறுநாள் ஊரிலுள்ள சில பெரிய மனிதர் களையும் முத்தப்பனையும் கச்சேரிக்கு அழைத்து

வந்தார்கள். முத்தப்பன் சொல்லாததெல்லாம் சொல்லிக் கெஞ்சிக் கொண்டான். அவனுக்கு அபராதம் போட்டு ஊர்ப் பொதுவுக்கு அதைக் கொடுத்து விடச்சொல்லி இனிமேல் அப்படி யாரையும் மிரட்டுவதில்லை யென்று சத்தியம் செய்து மன்னித்து விட்டார்கள். எனக்குப் பரம சந்தோஷம்.

## பால பருவம்

நான் பிறந்த இரண்டு வருஷங்களுக்குப்பின் என் தந்தை நாமக்கல்லுக்கு மாற்றப்பட்டார். எனக்கு வினைத்தெரிந்தது நாமக்கல்லில்தான். முதலில் என் நினைவிற்கு வருவது என் தாயார் உருவமும், எனக்கு அவர் இளமையில் பழக்கி விட்ட வழக்கங்களும்தான். என்னுடைய பிற்கால வாழ்க்கையில் எனக்கு உதவிய ஒழுக்கங்கள் அனைத்தும் என் அன்னை ஊட்டிய அமுதம் என்று அடிக்கடி நான் நினைப்பதுண்டு. விடியு முன் எழுந்திருத்தல், அதிகாலையில் நீராடல், தெய்வத்தை நினைத்தல், நல்ல பேச்சுகளைப் பேசுவது, கெட்ட வார்த்தைகளை நீக்குவது முதலியவற்றில் என் சிறுபிராயத்திலேயே என் தாயார் செய்த உபதேசங்கள் இன்னும் என் காதில் ஒலிக்கின்றன. கோயில் குளங்களுக்குக் கூட்டிப் போய் சுவாமி சன்னிதியில் என்னை நிறுத்தி "சாமி, என்னைக் காப்பாத்து; எனக்கு நல்ல புத்தி கொடு" என்ற இரண்டு வாக்கியத்தையும் நான் சொல்லாமல் விடமாட்டார். விசேஷ நாட்களில் கோவிலுக்குப் போகும்போது என் கை நிறையத் தம்படிக் காசுகளைக் கொடுத்து ஏழைகளுக்கு ஆளுக்கு ஒரு காசு கொடுக்கச் சொல்லுவார். அதில் ஒரு காசையாவது நான் 'மிச்சம் பண்ணிக்கொள்ளக் கூடாது, 'அது பாவம்' என்று என்னைப் பழக்குவார். அன்னைக்கு பதில்

பின்னையொருவர் கிடைப்பரா? எத்தனையோ நண்பர்கள் கிடைக்கலாம்; எத்தனையோ கலியாணங்களைச் செய்து கொள்ளலாம்; எத்தனையோ பேருடன் உறவாடலாம். ஆனால் அன்னை ஒருத்திதான். அவள் அன்பும் அலாதிதான். அந்த அரும்பெரும் பொருளையும் எவ்வளவோ பேர் அவமதிக்கிறார்கள்!

எங்கள் வீட்டில் இரண்டு பசுமாடுகள் எப்போதும் கறவையாக இருந்து கொண்டிருக்கும். பாலும், தயிரும், வெண்ணையும் வேண்டிய மட்டிலும் உண்டு. தினந்தோறும் என் தாயார் கொஞ்சம் பாலைப் பிரைபோடாமல் அதை 'பிள்ளைப் பால்' என்று சொல்லிக் குழந்தைக்கென்று கேட்டவர்களுக்கெல்லாம் கொடுப்பார்கள். ஒவ்வொரு திங்கட்கிழமையும் சில பரதேசிகளுக்கு அன்னமிடுவார்கள். அந்தப் பரதேசிகள் சாப்பிடுவதற்கு இலைகளை, என்னைக் கொண்டுபோய் போடச் சொல்லிக் கையலம்பத் தண்ணீர் மொண்டு கொடுக்கச் சொல்லி என்னைச் சேவை செய்யப் பழக்குவார்கள். எனக்கு விவரத் தெரிந்த வாழ்க்கையின் நினைவுகள், இப்படி என் அன்னையோடு நான் செய்த நல்ல காரியங்களில்தான் ஆரம்பிக்கின்றன.

என் சொந்தத்தாயாரோடு, நாமக்கல்லில் ஒரு வளர்ப்புத்தாயாரும் நேர்ந்தார். அவரை 'வளர்ப்புத்தாயார்' என்பதைக் காட்டிலும் 'ஆசைத் தாயார்' அல்லது 'செல்லத்தாயார்' என்று

சொல்வது பொருந்தும். அவர் யாரென்றால் **ரஸாக் ஹூசேன் சாயபு** என்ற நாமக்கல் போலீஸ் 'சர்க்கிள் இன்ஸ்பெக்டருடைய மனைவி பதுலா பீகம் அம்மாள்**தான். அந்த அம்மாள் ஆர்க்காட்டு நவாப் வம்சத்தைச் சேர்ந்தவரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். வெகு கண்டிப்பான கோஷா. வெள்ளைக்காரப் பெண்ணைப்போல் இருப்பார். அவருக்குக் குழந்தை இல்லை. இரண்டு மூன்று பெண்களை வளர்த்துக் கலியாணம் செய்து கொடுத்து விட்டார். குழந்தை ஆசைக்காகவே வீட்டில் கிளி, மயில், புறு, முயல் முதலியவற்றை வளர்த்துக்கொண்டு பொழுது போக்குவார். வாரத்தில் குறைந்தது நாலுநாளாவது என் தாயார் அவரைப் பார்த்து வரப்போவார். நானும் போவேன். என் தமக்கைமார்களும் வருவது உண்டு. நான் சிறு பிராயத்திலேயே நன்றாகவும், விவஸ்தையோடும் பேசுவேனும். என் பேச்சைக் கண்டு பிரியப்பட்ட அந்த இன்ஸ்பெக்டர் மனைவி, நாங்கள் அவர் வீட்டுக்குப் போன உடனே என்னைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டே பேசிக்கொண்டிருப்பார். அவர் வீட்டில் பலவித பழவகைகளும், பிஸ்கோத்து, பப்பர் மின்ட் முதலான தின்பண்டங்களும் எப்போதும் இருக்கும். என்னுடன் வந்த எல்லாருக்கும் கொடுத்து, எனக்கு அதிகமாகக் கொடுப்பார். எனக்குப் பசி நேரம் ஆகிவிட்டால் ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் சர்க்கரை போட்ட பாலும் சோறும் கொண்டுவந்து என்னைத் தன் மடியில் வைத்துக்

கொண்டே ஊட்டுவார். அந்தக் காட்சி இன்றைக்கும் என் மனக்கண்ணின் முன்வந்து மகிழ்ச்சியுண்டாக்குகிறது. அந்தக் காலத்தில் நாங்கள் மகம்மதியர் வீட்டில் சாப்பிடுவதென்பது மிகவும் இழிவான காரியமாகக் கருதப்பட்டது. என்ன செய்யலாம்! இன்ஸ்பெக்டர் மனைவி! கோபம் வந்துவிட்டால் தன் கணவரிடம் சொல்லி ஏட்டு, ஏட்டு பெண்ஜாதி எல்லாரையும் நடுங்கச் செய்து விடக்கூடிய சுபாவமுள்ளவர். ஆசையோடு குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு பாலுஞ் சோறும் ஊட்டுவதை எப்படி வேண்டாமென்பது? என் தாயார் அந்த விஷயங்களில் ரொம்ப ஆசாரம் பார்க்கிறவர்தான். இருந்தாலும் நான் சாயபு வீட்டில் சாப்பிடுவதை, தர்மசங்கடத்தோடு சகித்துக் கொள்வார்.

எங்கள் வீட்டுக்கு வந்தவுடன் நாங்கள் எல்லாரும் உடைகளை மாற்றிக்கொண்டு சுத்தி செய்து கொள்வோம். என் தமக்கைமார், "ஐயோ! துலுக்கர் வீட்டில் சோறு தின்றவன். நீ என்னைத் தொடாதே" என்று என்னைப் பரிகாசம் பேசுவார்கள். நான் அழுவேன்; தாயார், என் தமக்கைமாரைக் கண்டிப்பார். இன்ஸ்பெக்டர் மனைவிக்கு, என் தாயார் மிகவும் ஆசாரக்காரர் என்பதும் தன்னிடம் வந்து போனதும் உடைகளை மாற்றிக் கொள்வதும் தெரியும். அதைப் பற்றி அவர்கள் குற்றம் சொன்னதில்லை. எங்கள் மதச் சம்பிரதாயப்படி நடந்து கொள்

வது சரிதான் என்றே சம்மதிப்பார். அவருடைய மதாசாரப்படி சிற்சில விஷயங்களை அவரும் மிகவும் கண்டிப்பாகக் கவனிப்பார். நாங்கள் சமைத்த எதையும் அவர்கள் வாங்கிக் கொள்வார்கள். என்றாலும் கோவிலில் வைத்துப் பூசைசெய்த பழத்தைக்கூடத் தொடமாட்டார்கள. நாங்களும் கொடுக்கமாட்டோம். பண்டிகை காலங்களில் பலவிதமான பட்சணங்களை என் தாயார் இன்ஸ்பெக்டர் வீட்டிற்கு அனுப்புவார். அவை எந்த விக்ரஹத்துக்கும் வைத்துப் படைக்கப்பட்டவை அல்லவென்பதைக் கேட்டுக்கொண்டு தான் வாங்கிக்கொள்வார். அன்றியும் மாமிச உணவுகளை நாங்கள் சமைத்ததை அவர்கள் அங்கீகரிக்க மாட்டார்கள். ஏனென்றால் 'பிஸ்மில்லா' மந்திரம் சொல்லாமல் அறுக்கப்பட்ட ஆடு, கோழி முதலியவற்றின் ஊனை மகம்மதியர்கள் உட்கொள்ளமாட்டார்கள்.

மகம்மதியர்களைத் தீண்டுவது பள்ளர், பறையர், சக்கிலியர்கள் முதலிய 'தாழ்ந்த ஜாதி' யாரைத் தீண்டுவதைக் காட்டிலும் பெரிய குற்றமாக ஹிந்துக்களுக்குள் கருதப்பட்ட காலம் அது. இருந்தாலும் ஹிந்து, மகம்மதியன், என்ற மனஸ்தாபமான எண்ணமே அந்த நாளில் இரு திறத்தாரிடமும் இருந்ததில்லை. இப்போது ஹிந்துக்களும் மகம்மதியர்களும் எவ்வளவோ நெருங்கிப் பழகுகின்றோம். மகம்மதியர்களைத் தீண்டப் படாதவர்களென்பதை முற்றிலும் மறந்து விட்டோம். முன்னெல்லாம் காப்பி ஓட்

டல்களில் மகம்மதியர்களுக் கென்று தனியாக டம்ளர்களும் சொம்புகளும் வைக்கப் பட்டிருக் கும். அந்த வழக்கம் இப்போது அறவே மறைந்து விட்டது. இருந்தும் மதவித்யாச மனஸ்தாபம் மட்டும் எப்படியோ புகுந்து புரை ஓடிக் கொண் டிருக்கிறது......ஹிந்துக்களும் மகம்மதியர்களும் மிகவும் வேற்றுமை உள்ளவர்கள் என்பதை, இருதிறத்தாரும் ஒத்துக் கொண்டு, விலகி வாழ்ந்த அந்தக் காலத்தில் என்னை ஆசைப் புத்திரனாக வளர்த்த என் ஆசைத் தாயார் மகம்மதியமாது, இன்ஸ்பெக்டர் மனைவி பதுலாபீகம் அம்மாளை நினைத்தால் என் நெஞ்சம் குளிர்கின்றது. 'அல்லா ஹூ அக்பர்' என வாழ்த்துகிறது. நாலு நாள் சேர்ந்தாற் போல் என் தாயார், பதுலாபீகம் அம் மாளைப் பார்க்கப் போகா விட்டால் அவர்கள் ஜவானை அனுப்புவார்கள். என் தாயார் போக முடியாதிருந்தால் என்னை மட்டுமாவது ஜவானு டன் அனுப்பியாக வேணும்; இப்படிப் பழகிப் பிறகு எனக்கு ஆறு வயது ஆரம்பிக்கிற போது நானாகவே இன்ஸ்பெக்டர் வீட்டுக்குப் போகத் தொடங்கி விட்டேன். என் தாய் தந்தையர்கள் என்னைத் தனியே போகக் கூடாது என்று கண்டித்தும் கூட என் மனம் கேட்க வில்லை. என் தாயார் சொன்ன எதையும் நான் அவமதிப் பதில்லை. இருந்தும் இந்த ஒரு விஷயத்தில் என் அன்னையின் பேச்சுக் கூட ஏறவில்லை. இன்ஸ் பெக்டர் வீட்டு அம்மாவின் மேல் பிரியமோ அல்லது அவர் கொடுத்த தின் பண்டங்களின்

மேலுள்ள ஆசையோ அடிக்கடி அங்கே போய் விடத் தூண்டியது. அவர்களுக்கு நான் எப்போது போனாலும் எவ்வளவு நேரம் இருந்தாலும் சந்தோஷம் தான். இன்ஸ்பெக்டர் வீடு அரை மைலிலிருக்கும். அவ்வளவு தூரம் நானாகவே ஓடிவிடப் பழகி விட்டதைக் கண்டு பயந்து என் தாயார் தினந்தினம் அவராகவே துணை கூட்டி என்னை அனுப்ப ஆரம்பித் தார். முன் எப்போதாவது வெறும் பாலும் சோறும் மட்டும் இன்ஸ்பெக்டர் வீட்டில் தின்ற நான், இப்போது மூன்று வேளையும் கூட அவர்களுடன் கறியும் சோறும் உண்ணக் கற்றுக் கொண்டேன். கறி என்றால் ஆடு, கோழி, மீன் முதலியவற்றின் இறைச்சி தான். தென்னாட்டு மகம்மதியர்கள் மாட்டிறைச்சியை உண்டதாக நான் அறிந்த தில்லை. இல்லை யென்றே சொல்லலாம்.

நான் இன்ஸ்பெக்டர் வீட்டில் சாப்பிட்டு விட்டு எங்கள் வீட்டுக்குப் போனவுடன், என்னுடைய தமக்கைமார், "என்ன தின்னே? என்ன தின்னே?" என்று என் வாயையும், கையையும் மோந்து மோந்து பார்ப்பார்கள். யார் சமைத்தாலும் புலால் உணவை உண்டவன் வாயும், கையும் வெகு நேரம் வீச்சமடிக்கும். அதுவும் மகம்மதியர் வீட்டுப்பக்குவம் பட்டை, லவங்கம், பூண்டு முதலான வாசனைப் பொருள்களுடன் சட்டென்று தெரிந்து விடும். எல்லோரும் கேலி செய்வார்கள். நான் அழுவேன். அன்னை சமாதானப் படுத்துவார்.

இப்படியாக இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு நான் செல்லப் பிள்ளையாகி விட்டேன். சில நாட்களில் அங்கேயே தூங்கி விடுவேன். சிறு பருவத்திலும் நான் படுக்கையில் மல ஜலம் கழித்ததில்லை. ஆதலால் பதுலாபீகம் அம்மாள் என்னை அடிக்கடி தன் படுக்கையிலேயே தூங்க வைப்பார். விடிந்ததும் முகம் கழுவி, இன்னும் முடி எடுக்காமலிருந்த என் தலை மயிரை வாரி, இரண்டு மூன்று சடை பின்னித் தின் பண்டங்களைக் கொடுத்துத் தன்மடியில் வைத்துக் கொண்டிருப்பார். என் தமக்கைகளில் ஒருத்தி வந்து என்னைத் தூக்கிக் கொண்டு போவார். தாயாரிடம், "அம்மா, தம்பி அந்த இன்ஸ்பெக்டர் அம்மா மடியிலே, வெள்ளைப் பூவிலே வண்டு உட்கார்ந்த மாதிரி கரு கருண்ணு உக்கார்ந்து பிஸ்கோத்து தின்னுகிட்டு, நான் கூப்பிடக் கூப்பிட வரமாட்டேங்கறாம்மா" என்று சொல்லுவாள். பதுலாபீகம் அம்மாள் பெரும்பாலும் துய்ய வெள்ளை உடைகள் தான் தரித்திருப்பார்.

நான் அவர் வீட்டில் அதிக நேரம் தங்கும் போது அவர் ஐந்து வேளையும் நமாஸ் படித்துத் தொழுவதை வெகு அதிசயத் தோடு பார்த்துக் கொண்டு, "நம்ம வீட்டில் ஏன் இப்படிச் செய்வதில்லை?" என்று எண்ணுவேன். என்னையறியாமல் ஒரு நாள் நானும் அந்த அம்மாளைப் போல் மண்டியிட்டுப் பின்னால் என் கைகளைக் கட்டிக் கொண்டு தலையைத் தரையில் மோதிக் கொண்டிருந்தேன். இதைக் கவனித்த அந்த

அம்மாள் தன் தொழுகையை முடித்துக் கொண்டு வந்து என்னை மெச்சி முத்தமிட்டு, எனக்குத் தொழுகை செய்யும் மாதிரியைக் கற்றுக் கொடுத்தார். எங்கள் வீட்டிலும் வந்து நான் அதே மாதிரி அடிக்கடி செய்ய ஆரம்பித்தேன். சிறு பிள்ளை செய்வதில் சிரிப்பும், (மதம் கெட்டுப் போகுமோ என்ற) சலிப்புமாக என் தாயார் தமக்கைமார், தகப்பனுர் எல்லாரும் பல விதமாகப் பேசினது இன்னும் என் நினைவிற்கு வருகிறது. இந்த இன்ஸ்பெக்டர் வீடு மட்டுமல்லாமல் எங்கள் வீதியில் பக்கத்து வீட்டிலும் கொஞ்ச தூரத்துக் கப்பால் எதிரிலும் இருந்த பாட்சாமியான் சாயபு என்ற 'கண்ட்ராக்டர்' குடும்பமும், லத்தீப் சாயபு என்ற வக்கீல் குடும்பமும் எங்களுக்கு மிகவும் பழக்கமானவர்கள். அவர்கள் வீடுகளுக்கும் என் தாயார் அடிக்கடி போய் வருவதுண்டு.

இப்படியாக என்னுடைய பிள்ளைப் பருவம் மகம்மதிய மடியில் வளர்ந்தது. இன்ஸ்பெக்டர் அம்மாள் என்னைத்தன் மகனைப் போலவே பாவித்து எனக்குப் பல்வித நன்மைகளைச் செய்தார்கள். இன்ஸ்பெக்டரும் என்னிடம் வெகு அன்பாயிருப்பார். பிற்காலத்தில் என் தந்தையை கோயம்புத்தூருக்கு மாற்றி விட்டார்கள். நான் கோயம்புத்தூரிலிருந்து, நாமக்கல்லிலேயே வசித்து வந்த ஒரு தமக்கையைப் பார்க்க வரும் போதெல்லாம் இன்ஸ்பெக்டர் வீட்டிற்குப் போய் வருவேன். அவர்கள் 18 வயதுக்கு மேற்

பட்ட ஆண் பிள்ளையைப் பார்க்க மாட்டார்கள். இருந்தும் எனக்கு இருபது வயது ஆன பிறகும் கூட எந்த ஊரிலிருந்தாலும் அங்கேபோய் நான் வந்திருக்கிறேன் என்றால் உடனே உள்ளே வரச் சொல்லி கையைப் பிடித்துப் பேசி மகிழ்ந்து, உணவிட்டு உபசரித்து அனுப்புவார்கள். சாதி, மதம், சம்பிரதாயம், சடங்குகளெல்லாம் அன்பிற்கு முன்னால் நிற்காது என்பதை நான் அப்போதே உணர்ந்தேன். அந்த உணர்ச்சியின் பயன் தானோ என்னமோ, சாதி மதவித்யாசங்களுக்காக ஒருவரைத்தீண்டப் படாதென்றும், அவர் தொட்டதைத் தின்னப்படாதென்றும் நினைக்கிற மனப்பான்மை சிறுவயதிலேயே என்னிடத்தில் இடங்கொள்ள வில்லை. சைவம், வைணவம் என்ற வேறு பாடுகளும் என்னிடம் வேர் கொள்ளவில்லை.

என் தகப்பனார் திருவண்ணாமலையில் அவருடைய குடும்பத்தின் குருக்களிடத்தில் சிவ தீட்சை பெற்றவர். விஷ்ணு ஆலயங்களையும் வணங்குவார். ஆனாலும் சைவப் பற்றுடையவர். எங்களுடைய பந்துக்களில் சிவனும், விஷ்ணுவும் கலந்துதான் இருப்பார்கள். என் தாயார் வீடு வைஷ்ணவம். என்னுடைய அம்மான்கள் பட்டை பட்டையாக நாமம் போடுகிறவர்கள். என்னுடைய தாயாருக்கு சிவராத்திரியும், ஏகாதசியும் இரண்டும் ஒன்றுதான். எல்லா விரத நாட்களையும் அனுஷ்டிப்பார். புரட்டாசி மாதம் சனிக் கிழமைகள் என் தாயாருக்குப் புனிதமான நாட்

கள். அந்த மாதத்தின் ஐந்து சனிக்கிழமைகளி லும் வெகு பக்தி சுத்தியாக விரதங் காத்து, பூசனை புரிந்து ஏழைகளுக்கு அன்னம் படைப்பார். அந்தச் சனிக்கிழமைகளில் மட்டும் என் தாயார் வழக்கமான விபூதி குங்குமத்திற்குப் பதிலாக வெள்ளை நாமத்தில் சிறு பாதம் மட்டும் வைத்து பெண்களுக்கு வழக்கமான அளவில் சிவப்பு இட்டுக் கொள்வார்கள். என் தகப்பனார் அதற் குத்தடை சொல்லா விட்டாலும் அந்த வைஷ் ணவ வேடத்தில் அவ்வளவு விருப்ப மில்லாதவர் என்பதை, "இன்னைக்கு உங்கள் அம்மா வீட்டு வேஷமாக்கும்", என்று சொல்வதில் காட்டி விடுவார். ஒரு சனிக்கிழமை என் தாயார் போட்டுக் கொண்ட மாதிரி நாமம், நானே போட்டுக் கொண்டேன். அதைப் பார்த்து என் தாயார், ஆண்பிள்ளைகள் அப்படி இட்டுக் கொள்ளக் கூடா தென்று அதை அழித்து விட்டு, இரண்டு பெரிய வெள்ளையும், பாதமும், சிவப்பும் இழுத்து விட்டார்கள். நான் கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்துக் கொண்டேன். தினந் தினம் என் தாயாராவது தந்தையாவது எனக்குப் பூசி விடுகிற விபூதியைக் காட்டிலும் இந்த நாமம் அழகாக இருந்ததாக எனக்குத் தோன்றி யது. அடுத்த சனிக்கிழமை நானே நாமம் இட்டுக் கொண்டேன். அது அழகாக அமைந்ததாக என் தாயார் சந்தோஷப்பட்டு என் இடுப்பில் ஒரு பட்டுத் துண்டைக் கட்டிவிட்டு கையில் நாமம் போட்ட ஒரு சொம்பைக் கொடுத்து "நாலு வீடு

உபாதானம் வாங்கிவா" என்று அனுப்பினார்கள். பணக்கார வீட்டுப் பிள்ளைகளும் புரட்டாசி மாதத்தில் உபாதானம் பிச்சைக்குப் போவதைப் பார்த்திருந்த நான் உடனே தெருவில் ஓடி மற்ற பிள்ளைகளுடன், நாலுவீட்டுக்கு நாற்பது வீடாக நுழைந்தேன். 'ஏட்டு' வீட்டுப் பையன் என்று எங்கள் தெருவிலுள்ள எல்லாரும் நிறைய அரிசி போட்டார்கள். சொம்பு நிறைந்ததும் வீட்டுக்கு வந்தேன். கச்சேரிக்குப் போயிருந்த என் தகப்பனார் திரும்பி வந்து திண்ணையில் உட்கார்ந்து வேறு சிலருடன் ஏதோபேசிக் கொண்டிருந்தார். என் தகப்பனாரைக் கண்டதும் குழந்தைப் பருவத்தின் குறும்புத் தனத்தால், வாசலில் நின்று "அம்மா உபாதானம் போடுங்கோ" என்று என்னுடைய குரலை மாற்றிக்கூவினேன். நெற்றியிலும் மார்பிலும் பட்டை பட்டையாக நாமம் போட்டுக் கொண்டிருந்த என்னைப் பார்த்தும் என் தகப்பனார் யாரோ உபாதானம் வாங்கவந்த பையனென்று சரியாகக் கவனிக்கவில்லை. நான் அடுத்தடுத்து அதே குரலில் கூவினேன். என் தந்தை தான் பேசிக் கொண்டிருந்ததற்கு என்னுடைய கூப்பாடு இடஞ்சலாக இருந்ததால் என்னைக் கவனிக்காமலேயே "உள்ளே எல்லாம் வேலையாக இருக்கிறாப் போலிருக்கிறது. அப்புறம் வாடா பையா" என்று என்னைப் பார்த்தும் பாராமல் சொன்னார். அதே சமயத்தில் என் உபாதான வேண்டுகோள் காதிற்பட்ட என் தாயார் திண்ணையில் யாராரோ

பேசிக் கொண்டிருந்ததால், தான் வெளியில் வராமல் என் தமக்கை யொருத்தியைக் கூப்பிட்டு உபாதானம் போடச் சொன்னர். ஒரு உழக்கில் உபாதானத் தோடு ஓடி வந்த என் தமக்கை என்னைப் பார்த்து விட்டு, அரிசியைப் போடா மல் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டு நின்ருள். அவள் நின்ற இடம், என் தந்தைக்கும் அவருடன் எதிர் திண்ணையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த வருக்கும் மத்தியில். பெண் குறுக்கே நின்று சிரிப்பதில் என் தந்தையாரின் பேச்சுத் தடைப்பட்டது. சிரித்தவளை கவனித் தார். சிரிப்பின் காரணத்தையும் கண்டார். திண் ணையிலிருந்து தாவிக் குதித்து, "அட! நீயா இன்னேரம் உபாதானம் கேட்டாய்?" என்று என்னை வாரியணைத்துக் கொண்டு உள்ளே யிருந்த என் தாயாரிடம் போய், "ஏண்டி உங்களப்பன் வீடுதான் நாமதாரிகள். இவனுக்கு என்னத்துக்கு இந்த வேஷம் போட்டு பிச்சைக்கு அனுப்பி விட்டாய்?" என்ருர்.

"நான் போடலே. அவனே போட்டுக் கொண்டான். என்னமோ ஆசையாகக் குழந்தை போட்டுக் கொண்டான். அவன் முகத்துக்கு அது லட்சணமாகத்தான் இருக்கிறது," என்ருர் என் தாயார்.

"சே! சே! அது தப்பு. ஒரு குலத்திலே பிறந்து இன்னொன்றின் பேர் சொல்லப் பழகு வானேன்? விபூதி பூசிக்கொண்டே பெருமாளைக் கும்பிடட்டுமே", என்று என் முகத்தைக் கழுவி

துடைத்துவிட்டு "இது எப்படி இருக்குது பார்", என்று கண்ணுடியை எடுத்து என் கையிற் கொடுத்துவிட்டு திண்ணையிலிருந்தவர்களுடன் பேசப் போய் விட்டார். நான் ஒன்றும் பேசாமல் தேம்பித் தேம்பி அழுதேன். தாயார் கூப்பிட்டும் போகவில்லை. ஒரே இடத்தில் உட்கார்ந்து அழுது கொண்டே யிருந்தேன். சிறிது நேரத்தில் திண்ணையிலிருந்தவர்களை அனுப்பிவிட்டுத் தந்தை திரும்பிவந்தார். நான் அழுது கொண்டிருப்பதைப் பார்த்தார். கொஞ்சிக் குலவி என்னென்னவோ சொல்லிப் பார்த்தார், பலிக்கவில்லை. "சரி" நீ நாமமே போட்டுக் கோடாப்பா" என்று அவரே நாமப் பெட்டியையும் தண்ணீரையும் கொண்டுவந்து என் பக்கத்தில் வைத்துவிட்டு, சாப்பாட்டுக்கு என்னுடைய தாயாரின் பூசை முடிகிறவரையிலும் காத்திருக்க வேண்டியிருந்ததனுல் அவருடைய அறையிலுள்ள மஞ்சத்தில்படுத்துக்கொள்ளப் போய்விட்டார். அவர் போன கொஞ்சம் நேரத்துக்கெல்லாம் எனனுடைய அழுகை ஓய்ந்து நான் நாமம் இட்டுக் கொண்டு பூசை செய்து கொண்டிருந்த என் தாயாருக்கு அருகிற்போய் உட்கார்ந்து கொண்டேன். சாப்பிட வந்தபோது என் தந்தை என்னுடைய நாமத்தைப் பார்த்து "பேஷ் நீயே இட்டுக்கொண்ட நாமமா இது? நல்லாயிருக்குதே" என்ருர். நான் சிரித்தேன்.

புரட்டாசி மாதம் போனபிறகும்கூட நான் அடிக்கடி நாமம் இட்டுக்கொள்ள ஆசைப்படு

வேன். அப்படி நாமம் சாற்றிக் கொள்வதில் நேரத்தை அதிகம் செலவிட்டு, வெள்ளை நாமம் இரண்டும் சரிஜோடியாகக் கொஞ்சம் கூட ஏற்றத் தாழ்வில்லாமல் மூலை முடுக்குகள் கச்சித மாக அமைகிற வரைக்கும் திருப்தி யடையமாட் டேன். எத்தனை தரமானாலும் அழித்து விட்டு சரிசெய்வதில் அசரமாட்டேன்.

இப்படி நான் அந்தச் சிறு வயசில் நாமம் இட்டுக் கொள்வதை சித்திரம் வரைவதைப் போலச் சிரத்தையுடன் எழுதினதால் ஏற்பட்ட பழக்கந்தான் பிற்காலத்தில் என்னைச் சித்திர வித்வானாக்க உதவிற்றோ அல்லது இயற்கை யாகவே ஏற்கனவே என்னுள்ளிருந்த சித்திர உணர்ச்சிதான் இப்படி நாமத்தை சித்திரம் போலவே இட்டுக் கொள்ளத் தூண்டியதோ என்பது இன்னும் எனக்குப் புரியாத ஒரு விஷயம்...... சித்திரம் சங்கீதம் முதலிய கலை களில் திறமை அடைவதெல்லாம் முற்பிறப்பின் தொடர்பினால் வருவது என்று சொல்லுகிறார்கள். முன் ஜன்மம் பின் ஜன்மம் என்பதெல்லாம் வெறும் அனுமானத்தையும் நம்பிக்கையையும் சேர்ந்த விஷயங்கள். எல்லாரும் நம்பமாட்டார் கள். நம்பச்சொல்லிக் கட்டாயப் படுத்துவதும் நியாயமல்ல. ஆனால் ஒருவர் ஒரு கலையில் சிறப் புள்ளவராக விளங்குவதற்கு அதற்கான ஒரு துடிப்பும் தூண்டுதலும் இயற்கையாகவே அவ ரிடத்தில் இருந்தால்தான் முடியும் என்பது மட் டும்—அனுமானத்தால் அல்ல—அனுபவத்தால்

அறிகிறோம். வித்தை சிறப்பதற்கு முயற்சியும் பயிற்சியும் அவசியம்தான் என்றாலும் வெறும் முயற்சியும் பயிற்சியும் மட்டும் வித்தையைத் தருவதில்லை யென்பதும் வெளிப்படை. ஆதலால் ஒருவர் ஒரு கலையில் ஓரளவேனும் திறமையுள்ளவராவதற்கு அவருடைய சுபாவத்தில் அதற்கான ஏதோ ஒரு கிளர்ச்சி இருக்கவேணும் என்பது நன்றாகத் தெரிகின்றது. இந்த 'ஏதோ ஒரு கிளர்ச்சி'யைத்தான் முற்பிறப்பின் 'விட்ட குறை' 'தொட்டகுறை' என்று நம்பிக்கைக்காரர்கள் சொல்லுகிறார்கள். அது சரியா தப்பா என்பதை இங்கே தர்க்கிக்க வேண்டாம்...... எப்படியோ சித்திரங்களின்மேல் ஒரு ஆசையும், பார்த்த சித்திரங்களைப்போல் எழுத வேணும் என்ற பரபரப்பும் எனக்குச் சிறு பிராயத்திலேயே இருந்தது. இந்த என்னுடைய சித்திர மனப்பான்மைக்கு என் தாயார் மிகவும் அனுகூலமாக இருந்தார். நான் விரும்புகின்ற படத்தையோ பொம்மையையோ உடனே வாங்கித் தரச் செய்வார். நான் கோணல் மாணலாக எழுதுகின்ற சித்திரங்களைக் கொண்டாடி மகிழ்வார்......என்னுடைய இளமைப் பருவத்தில் என்னை 'துஷ்டன்' என்று யாரும் சொன்னதாக நினைவில்லை. பலபேர் என்னை 'நல்ல பிள்ளை' என்று பாராட்டி வெகுமதிகள் கொடுத்ததுதான் ஞாபகத்திலிருக்கின்றது. துஷ்டத்தனம் அல்லாவிட்டாலும் சிறு பருவத்துக்குரிய குறும்புத்தனம் நிரம்ப இருந்ததாகத்தான் எனக்கும் நினைவு—

என்னுடைய தாயும் தமக்கைமாரும் பிற்காலத்தில் அடிக்கடி சொன்னதும், பெரும்பாலும் என்னுடைய குறும்புத்தனம் நாகரீகமுள்ளதாகவும் சிரிப்புண்டாக்கக் கூடியதாகவும் இருக்கும். அடிக்கடி அந்தக் குறும்புத்தனம் பிறரைக் கேலி செய்வதற்காக வரையப்படுகிற கோமாளித்தனமான சித்திரங்களாக அமையும். தலைமயிரை முடிக்காமல் இருப்பவர்களைப் 'பேய்' என்று படமெழுதியும், கொஞ்சம் பெரிதான பல்லுள்ளவர்களை 'ராக்கசி' என்று சித்திரித்தும் நான் வரைகின்ற படங்களைப் பற்றி அவர்கள் என் தாயாரிடத்தில் வேடிக்கையாகப் பிராது சொல்லிக் கொள்வார்கள். என் தாயார் அந்தச் சித்திரங்களைப் பார்த்துப் பிராது சொன்னவர்களும் சேர்ந்து சந்தோஷப்படும்படி மெச்சுவார்கள். ஆனாலும் என்னுடைய குறும்புத்தனம் வரம்பு மீறும் போதெல்லாம் என்னுடைய தாயாரின் இனிமையான-ஆனால் கண்டிப்பான-எச்சரிக்கை என்னைக் காத்துவிடும். அதையும் மீறி நான் ஏதேனும் மிகக் குற்றமான குறும்பு செய்துவிட்டால் என் தாய் என்னைத் தண்டிக்கிற முறை வெகு கெம்பீரமானதாக இருக்கும். அடிக்காமல் அதட்டாமல் அன்பினாலேயே என்னை அலறச் செய்துவிடுவார். அடிக்காமலேயே குழந்தைகளைத் தண்டிக்க முடியும் என்கிற எண்ணம் வரும்போதெல்லாம், எனக்கு இன்றைக்கும் என் தாயாரின் நினைவு முன்னால் வந்து நிற்கிறது.

## பள்ளிப்பருவமும்—சித்திரப்பழக்கமும்

'போலீஸ் ஏட்டு' என்றால் அந்தக் காலத்தில் மிக உயர்ந்த உத்தியோகம். இப்போது ஒரு 'சப் இன்ஸ்பெக்டர்' என்ற பதவிக்கும் உயர்ந்தது. சீமையிலுள்ள அரசரைப்பற்றி யாருக்கும் ஒன்றும் தெரியாது. அங்குள்ள 'பார்லிமென்ட்' டையோ மந்திரிகளையோ ஜனங்கள் கண்டதில்லை. கவர்னர் ஜெனரல், கவர்னர், கலெக்டர் என்றவர்களும் கூட காதில்விழுந்த பெயர்களேயல்லாமல் வேறில்லை. அரசாங்கம் என்றால் போலீஸ்காரர்கள் என்றுதான் பொதுமக்கள் அறிவார்கள். இந்தக் காலத்திலும் இது உண்மையென்றால் 'ஜனநாயகப்' பேச்சே பிறக்காத அந்தக் காலத்தில் போலீஸ் உத்தியோகந்தான் சர்க்கார். இந்தக் காலத்தில் எது 'சிவில்' எது 'கிரிமினல்' என்பது சாதாரண ஜனங்களுக்கும் கொஞ்சம் தெரியும். தெரியாதவற்றிற்கும் வக்கீலைக்கூடக் கேட்க வேண்டியதில்லை. மரத்தடியில் ஒரே ஒரு 'பவுண்டன்' பேனாவையும் கொஞ்சம் வெத்துக் காகிதத்தையும் வைத்துக் கொண்டு பிராது எழுதிக் கொடுக்கிற குட்டி சட்ட நிபுணர்களே சொல்லிவிடுவார்கள். எந்தப் பிராதை யாரிடத்தில் எப்படி எழுதிக் கொடுக்க வேணும் என்பதைச் சரியாகச் சொல்லிக்கொடுப்பார்கள். அப்படிச் சொல்லித் தரக் கூடியவர்கள்

இல்லாத அந்தக் காலத்தில் எல்லாக் குறைகளை யும்ஜனங்கள் 'போலீஸ் ஏட்டு' வீட்டில்தான்—கச்சேரியிற்கூட அல்ல—வந்து சொல்லிக் கொள்வார்கள். 'சிவில்' குற்றவாளிகளையும் கூட 'ஏட்டு' கூப்பிட்டு கொஞ்சம் மிரட்டினுற் போதும். ஆகவே ஊருக்கு முக்கியமான அதிகாரி 'போலீஸ் ஏட்டு'தான்.

அப்படிப்பட்ட போலீஸ் ஏட்டு வீட்டுச் செல்வச் சிறுவனை, பள்ளிக்கூடத்தில் வைக்கிற திருவிழா எவ்வளவு சிறப்பாக நடந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். வெகு சிறப்பாக எனக்கு வித்யாரம்பம் நடந்தது. 'பழனி வாத்தியார்' என்ற ஸ்ரீ ஷண்முகம் பிள்ளை எனக்கு எழுத்தறிவித்தார். கொஞ்ச நாளில் அவர் நாமக்கல்லைவிட்டுப் பழனிக்கே போய்விட நேர்ந்தது. அதற்குப் பிறகு நாமக்கல்லில் நான் இப்போதும் வசித்து வருகின்ற தெருவில் இன்றும் நடந்துவருகின்ற நம்மாழ்வார் பள்ளிக்கூடத்தில் படித்தேன். ஸ்ரீ நம்மாழ்வார் என்பவர் ஒரு சாத்தானி வைஷ்ணவர். நல்ல கலாரஸிகர். பிடில் வாசிப்பார். பாட்டும் பாடுவார். பள்ளிக்கூடத்தில் அவரை அதிகமாகப் பார்க்க முடியாது. நாடகக்காரர், சங்கீதக்காரர், நாட்டியக்காரர், முதலானவர்கள் இருக்குமிடத்தில்தான் அவர் இருப்பார். பள்ளிக்கூடத்தை 'பெரிய வாத்தியார்' என்று சொல்லும் அவருடைய தந்தையும் வேருெரு உறவினருந்தான் பார்த்துக் கொள்ளுவார்கள். ஸ்ரீ நம்மாழ்வார்

இடையிடையே பள்ளிக்கூடத்தில் நுழைவார். ஏதாவது கணக்கையோ வாய்ப்பாட்டையோ எழுதச் சொல்லி எங்களுக்கு வேலை வைத்து விட்டுப் போய்விடுவார். சீக்கிரம் திரும்பி வந்தால் நாங்கள் எழுதி வைத்திருப்பதைப் பார்த்துத் திருத்துவார். இல்லாவிட்டால் அன்றையப் படிப்பு அவ்வளவோடுதான். மணியடிக்கிற வரையிலும் பெரிய வாத்தியார் நாங்கள் இரைச்சல் போடாதபடி மிரட்டிக்கொண்டே இருப்பார்.

நான் ‘ஏட்டு’ வீட்டுப் பையன். என்னை ஸ்ரீ நம்மாழ்வார் கொஞ்சம் பிரத்யேகமாகக் கவனித்துக் கொள்வார். எனக்குக் கணக்குப் பாடம் என்றால் கசப்பு. அந்தப் பாடத்தில் என்னை ரொம்பவும் கவனித்துக் கொள்ளவேணும் என்பது என்னுடைய தகப்பனருடைய உத்தரவு. அதற்காக என்னை ஸ்ரீ நம்மாழ்வார் வெகு செல்வமாக அவருடைய வீட்டுக்கும் கூட்டிப்போய், தின்பண்டங்களையும் தந்து கணக்குச் சொல்லிக் கொடுப்பார். அவர் வீட்டுக்குப் போய் கணக்குப் பாடம் கற்றுக்கொள்ள ஆரம்பித்த முதல்நாள் ஒரு கணக்கை எழுதிக் கொடுத்து அதைப் போடச் சொல்லிவிட்டு அவர் வெளியே போய் விட்டார். சிலேட்டையும் பென்சிலையும் கையில் வைத்துக்கொண்டு புது இடமானதால் அங்குமிங்கும் வேடிக்கை பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தேன். எனக்கு நேராக ஒரு ஜாதிக்காய்ப் பெட்டி இருந்தது. அது மண்ணெண்ணை டின்கள் அடக்கம் செய்து வருகிற பெட்டி.

அந்த நாளில் சீமை எண்ணெ டின்கள் இப்போது வருவதுபோல, தனித்தனி டின்களாக வராது. இரண்டிரண்டு டின்கள் ஒரு ஜாதிக்காய்ப் பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டுத்தான் வரும். அந்தப் பெட்டியின்மேல் ஒரு அழகான குதிரை அச்சடித்திருக்கும். இப்போது 'சூரியன் மார்க்', 'நங்கூரம் மார்க்', 'சக்கரம் மார்க்' என்ற பெயருடன் படங்கள் போட்டு வருகின்றதைப்போல அப்போது அது 'குதிரைமார்க்' எண்ணெ. அந்த அச்சுக் குதிரையின் வாட்ட சாட்டம் என் மனதைக் கவர்ந்தது. உடனே என்னால் முடிந்த மட்டில் அந்தக் குதிரையைப்போல ஒரு வடிவத்தை என்னுடைய சிலேட்டில் வரைந்து பார்த்து மகிழ்ந்தேன். வெகு நன்றாக வரைந்து விட்டதாக அதைப் பார்த்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும்போது வாசலில் வாத்தியார் குரல் கேட்டது (இப்போது எனக்குள்ள செவிட்டுத்தனம் அப்போது இல்லை). ஸ்ரீ நம்மாழ்வார் எனக்கு எவ்வளவு செல்வம் கொடுத்தாலும் நான் சரியாகக் கணக்குப் போடுவதில்லையென்பதற்காக அடிக்கடி அடித்தும் கிள்ளியும் தண்டிப்பார். அந்தப் பயத்தால் வாத்தியார் வருவதை அறிந்த உடன் வெகு அவசரமாக எச்சில் தொட்டு அந்த அழகான குதிரையை அழித்து விட்டேன். வாத்தியார் வந்து என பக்கத்தில் உட்கார்ந்து சிலேட்டை வாங்கிப் பார்த்தார். பொம்மை அழிந்து போயிருந்தாலும் சிலேட்டின் ஓரங்களில் எச்சில் காயவில்லை. கணக்கு

மட்டும் அவர் எழுதிக் கொடுத்தபடியே இருந்தது. "என்னத்தை எச்சி தொட்டு அழித்திருக்கிருய்? தப்பாயிருந்தாலும் போட்டதை என்னிடம் காட்டுவதற்கென்ன?" என்று என் தலையில் ஒரு கொட்டு வைத்துவிட்டு "போடு கணக்கை" என்று போய்விட்டார். தலையில் கொட்டியது வலிக்கத்தான் செய்தது. இருந்தாலும் நான் போட்டிருந்த பொம்மையை வாத்தியார் கண்டுகொள்ளவில்லை என்ற சந்தோஷத்தில் அந்த வலியும் தெரியவில்லை. இப்படியே தினந்தினம் குறித்த நேரங்களில் வாத்தியார் வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தேன். அவர் வீட்டில் பெண்டுகள் மயிற்பீலியினுல் விற்பனைக்காக விசிறிகள் செய்வார்கள். வெட்டிவேர், விளாம்பிச்சு முதலானவற்றைக் கொண்டும் படல்கள் விசிறிகள் என்ற பல பொருள்களைச் செய்வதுண்டு. நாமக்கட்டி ஸ்ரீ சூரணம் முதலியவற்றையும் செய்து விற்பார்கள். அந்த விநோத விசிறிகளின்மீதும், வெள்ளை, சிவப்பு பச்சை என்ற நிறங்களிலும் என்னுடைய கண்கள் அலைந்து கொண்டிருக்குமேயல்லாது கணக்குப் போடுவதில் கவனம் செல்லாது. அத்துடன் வருஷம் தவருமல் ஸ்ரீ நம்மாழ்வார் காமன் பண்டிகையை வெகு விமரிசையாக நடத்துவார். அந்தப் பண்டிகை ஆரம்பமாக ஒரு மாதம் இருக்கும் போதே ஸ்ரீ நம்மாழ்வார் வீட்டில் ஒரு காமன் பண்டிகைச் சப்பரம் தயாராகும். அதற்கு அநேக வித வர்ணக் காகிதங்கள், ரேக்குகள், காக்காய்ப்

பொன் முதலியவற்ருல் விதம் விதமான பூக்களைக் கத்தரித்து ஒட்டிக்கொண்டிருப்பார்கள். பட்டிலும் நூலிலும் தினுசு தினுசான குஞ்சங்களைச் செய்வார்கள். முடிவாக மன்மதனும் ரதியும் கரும்பு வில்லுடன் ஒருவர்மேல் ஒருவர் மலர்ப் பாணம் போடுவதைப்போல இரண்டு பெரிய சித்திரங்களை எழுதி, சப்பரத்தின் முன்ருல் இருபுறத்திலும் கட்டுவார்கள். எனக்கு இந்த சித்தரிப்புகளில் கவனம் போகுமேயல்லாது கணக்கைப்பற்றிய கவலேயே வராது. வாத்தியார் என்னை என்னென்ன விதமாகவும் கண்டித்தும் தண்டித்தும் பார்த்தார். என் மனமெல்லாம் சப்பரத்திலும் அதிலுள்ள சித்திரங்களிலும்தான் சஞ்சரித்தது. கடைசியில் சப்பரமாவது சீக்கிரம் முடியட்டுமென்று கத்தரித்த காகிதப் பூக்களுக்குப் பசை தடவிக் கொடுக்க விட்டுவிட்டார். அந்த வேலையை வெகு ஆசையோடு செய்தேன். என் மனதில் முதன் முதல் பதிந்த வர்ணப்படங்கள் இந்த 'ரதியும் ரதிக்கிளியும் ரதிக்கேற்ற மன்மதனும்'தான்.

நான் நாலாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பொழுது, ஒரு நாள் ஸ்ரீ நம்மாழ்வார் எங்கள் வகுப்புக்காக ஒரு கணக்கைக் கறுப்புப் பலகையில் எழுதி அதைப் போட்டு வைக்கும்படி எங்களிடம் சொல்லிவிட்டு, அப்போது நாமக்கல்லில் நடித்துக்கொண்டிருந்த நாடகக் கம்பெனியின் தலைவரான ஸ்ரீ சிந்தாமணி ஆசாரியுடன் வெளியே போய்விட்டார். சிந்தாமணி

ஆசாரி அந்த நாளில் மிகச் சிறந்த நடிகர். நாடகமோ சர்க்கஸோ எது ஊருக்கு வந்தாலும் முதலில் போலீசாருடைய தயவைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டியது அவசியம் அல்லவா? அதற்காகச் சிந்தாமணி ஆசாரி அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார். என் தகப்பனார் பக்கத்திலேயே இருக்கும் என்னையும் பாராட்டுவார். என்னுடன் கொஞ்சிப் பேசுவார். எனக்காகத் தின் பண்டங்களையும் வாங்கி வருவார். நடக்கப் போகிற நாடகத்தின் விளம்பரம் ஏதாவது அச்சடித்து இருந்தால், என் தகப்பனாரிடத்திலும் என்னிடத்திலும் கொடுப்பார். அந்தக் காலத்தில் அச்சிட்ட விளம்பரங்கள் மிகவும் அரிது. அச்சு யந்திரம் அப்போதுதான் நம் நாட்டில் ஆரம்பம். அதுவும் தமிழ் அச்சாபீஸ்கள் மிகமிகக் குறைவான காலம். சேலத்தில் ஒரே ஒரு தமிழ் அச்சுக் கூடம்தான் அப்போது இருந்தது. ஒரு கையகலக் காகிதத்தில் அச்சடித்த நோட்டீசுகள் வரும். அதுவும் கொஞ்சமாகத்தான் வரும். பின்னும், விசேஷ நாடகங்கள் நடக்கிற நாட்களில்தான் அச்சு நோட்டீஸ். மற்ற நாட்களில் வெறும் தமுக் கடித்துக்கொண்டு தெருக்களின் மூலைக்கு மூலை நின்று, கையிலிருக்கும் ஓர் எழுத்துப் பிரதியிலிருந்து "இதனால் சகலமான கனதனவான்களுக்கும் தெரியப்படுத்துவது என்னவென்றால் ......" என்று படித்துத்தான் விளம்பரம் செய்வார்கள்.

நான் சொல்லப் புகுந்த குறிப்பிட்ட நாளில்,

சிந்தாமணி ஆசாரியார் கம்பெனியில் 'கமல இந்திரசபா' என்ற நாடகம், அது அவர்களிடத்தில் ஒரு விசேஷ நாடகம். அதற்காக அச்சு விளம்பரம் வந்திருந்தது. அன்று காலையில் நான் பள்ளிக்கூடத்துக்கு வருவதற்கு முன்னால், எங்கள் வீட்டுக்கு வந்திருந்த சிந்தாமணி ஆசாரியார் என்னிடம் வழக்கம்போல் ஒரு நோட்டீசைக் கொடுத்தார். அதை வெரு உயர்ந்த பொருளாக மடித்து, என் சட்டைப் பையில் பத்திரப்படுத்தியிருந்தேன்......கறுப்புப் பலகையில் ஆசான் எழுதிப்போன கணக்கை, என் சிலேட்டில் எழுதிக்கொண்டேன். மற்றப் பிள்ளைகளைப் போலவே நானும் அந்தக் கணக்கைப் போட முயன்றேன். தப்பும் தவறுமாகப் பாதிக் கணக்கைப் போட்டேன். அதற்குமேல் ஓடவில்லை. சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு சும்மா உட்கார்ந்திருந்தேன். திடீரென்று என் சட்டைப் பையில் இருந்த நாடக விளம்பரத்தின் ஞாபகம் வந்தது. சிலேட்டை அப்படியே மணலின்மேல் கவிழ்த்து வைத்துவிட்டு, நோட்டீசை எடுத்தேன்; மெள்ள விரித்தேன். அதில் ஒரு பக்கத்தில் நாடகத்தைப் பற்றியும் மறுபக்கத்தில் ஒரு படமும் அச்சடித்திருந்தது. அந்தப் பொம்மை ஒரு கமலமும் அதன் மத்தியில் ஒரு யானைமேல் இந்திரனும்' என்ற அர்த்தமாக இருந்தது. மணலில் இருந்த சிலேட்டின்மேல், அந்த நோட்டீசைப் பரப்பி அந்தக் 'கமல இந்திரனை'ப் போல் என் சிலேட்டில் வரைந்தேன். நான்

வரைந்த படம் முதலில் எனக்குத் திருப்தியாக அமையவில்லை. இரண்டு மூன்று தடவை அழித் தழித்து எழுதினேன். கொஞ்சம் திருப்தி தரக் கூடியதாக அமைந்தது. அதற்குப்பின் அதை அழிக்க மனம் வரவில்லை. மறுபடியும் எழுதினால் அவ்வளவுகூட அமையாமல் போய்விடுமோ என்ற பயம். இருந்தாலும், இன்னும் கொஞ்சம் நன்றாக எழுதினால் தேவலை என்று ஆசை. அதற் காக இதை அழிக்காமல் வேறொன்று எழுத வேணும் என்ற எண்ணம் பிறந்தது. அதற்காக, சிலேட்டின் இன்னொரு பக்கத்தைத் திருப்பி, அதில் வாத்தியார் கொடுத்து விட்டுப்போன கணக்குப் பாதி போட்டும் போடாமலிருக்கிற நினைவே இல்லாமல், அந்தப் பக்கத்தை நன்றாகத் துடைத்து அழித்துச் சுத்தம் பண்ணினேன். அதில், மறுபடியும் நோட்டீசைப் பார்த்து, 'கமல இந்திரனை' முன்னிலும் வெகு ஜாக்ரதையாகவும் நிதானமாகவும் வரைந்தேன். அது எனக்கு மிகவும் திருப்தியாக அமைந்துவிட்டது. அதைப் பார்த்தபின், முன்னே எழுதியிருந்தது மிகவும் துச்சமாகத் தோன்றிவிட்டது. அதனால், முன் னால் எழுதினதை அழித்துவிட்டு இதைப் பார்த் துப் பார்த்து ஆனந்த மடைந்தேன். பக்கத்தி லிருந்த பையன்களுக்கும் காட்டி இன்புற்றேன். அவர்கள் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந் ததைக் கண்டு, பெருமையடைந்தேன். அந்தப் படத்தை அப்படியே மணலில் கவிழ்த்து வைத்து விட்டு, ஏதோ கிடைக்காத புது இன்பம்

கிடைத்துவிட்ட பூரிப்போடு மற்றப் பிள்ளைகளுடன் வேடிக்கையும் விளையாட்டுமாக இருந்தேன். அன்றைக்கு வெளியில் போன வாத்தியார் வெகு நேரம் வரவில்லை. பெரிய வாத்தியார் மட்டும் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு, பையன்கள் சத்தம் போடாமல் இருக்கப் பிரம்பை அடிக்கடி மேஜையின்மேல் தட்டிக் கொண்டிருந்தார்.

பள்ளிக்கூடம் விடுகிற நேரம். ஸ்ரீ நம்மாழ்வாரும் ஸ்ரீ சிந்தாமணி ஆசாரியும் வந்தார்கள். வாத்தியார் தம்முடைய நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, நாங்கள் போட்ட கணக்கைக்கொண்டு வரச் சொன்னார். ஒவ்வொரு பையனும் தன் தன்னுடைய சிலேட்டைக் கவிழ்த்தபடியே எடுத்து முழங்காலுக்கு நேராக இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு, வாத்தியாருக்கு அருகில் போனபிறகு சிலேட்டை அப்படியே உயர்த்தி வாத்தியார் முகத்துக்கு நேராகப் பிடிப்பான். பையன் முகம் வாத்தியாருக்குத் தெரியாது; வாத்தியார் முகம் பையனுக்குத் தெரியாது. வாத்தியார் பார்த்துவிட்டு, சரி, தப்பு, என்பதற்கு அறிகுறியாக '✓' அல்லது '×' என்ற குறிகளைப் போடுவார். வாத்தியார் என்ன போட்டார் என்பதையும் கூட அங்கேயே பார்க்காமல், பையன் தன்னுடைய இடத்துக்கு வந்த பிறகு தான் சிலேட்டைத் திருப்பிப் பார்ப்பான். இது வழக்கம். எங்கள் வகுப்பில் அப்போது ஏறக்குறைய முப்பது பையன்கள். நான் முதல்

இருபது பையன்களுக்கு அப்பால் உட்காரந் திருந்தேன். இன்னதென்று தெரியாத ஏதோ ஒரு பூரிப்பிலேயே மெய் மறந்து இருந்த என் மனம், வாத்தியார் வந்ததையும் அவர் நாற்காலி யில் உட்கார்ந்ததையும், பையன்களைக் கூப்பிட்ட தையும், பையன்கள் ஒவ்வொருவனுகப் போய் வருவதையும் வேடிக்கை பார்த்துக்கொண்டே இருந்துவிட்டதில், என்னுடைய சிலேட்டில் கணக்கு எப்படி இருக்கிறது என்பதை மறந்தே போய் விட்டேன். எனக்கு மேலிருந்த பையன் போய்வந்தான். என்முறை வந்தது. நானும் எல்லாப் பிள்ளைகளையும் போலவே போய், என் னுடைய சிலேட்டை வாத்தியாருடைய முகத் துக்கு நேராகப் பிடித்தேன்........பளீர் என்று ஒரு பிரம்படி என்னுடைய முழங்காலுக்குக் கீழ் விழுந்தது. அந்த அடி விழுந்த பிறகுதான், நான் 'கமல இந்திரன்' படம் எழுதியிருந்தது நினைவுக்கு வந்தது. "ஏண்டா! உனக்கு இவ் வளவு துணிச்சலா! சுட்டுப் பொசுக்கினுலும் கணக்கு வரமாட்டேங்குது; கணக்கு வராவிட் டாலும் தொலையுது, இவ்வளவு திமிரா உனக்கு? கணக்குப் போடச் சொன்னுல்.....கணக்கைச் சிலேட்டில் கூட—எழுதாமல்.....என்னமோ...... பொம்மையைக் கொண்டுவந்து.....இரு சொல் றேன் உன்னை.....உனக்கு இவ்வளவு செல்லங் கொடுத்தது என் தப்பு" என்று வெகு கோபத் தோடு, உதட்டைக் கடித்துக்கொண்டு, கண்ணை உருட்டி மிரட்டினுர்.

அடி பலமான அடி. நான் துள்ளித் துடித்துப்போனேன். என்னை நன்ருக அறிந்திருந்த சிந்தாமணி ஆசாரியாருக்கு, அது பொறுக்கவில்லை. அவர் "என்ன, சார், சிறு குழந்தையை அப்படி அடித்துவிட்டீர்கள்!" என்று சொல்லிக் கொண்டே, என் கிட்ட வந்து, அணைத்துத் தேற்ற முயன்ருர். என் கையிலிருந்த சிலேட்டை வாங்கி, வாத்தியார் அப்படி அடித்ததன் காரணம் என்னவென்று கவனித்தார்...........தன்னுடைய டிராமா நோட்டீசிலுள்ள படத்தை நான் வரைந்திருப்பதைக் கண்டார். "அடடா! நம்ம நோட்டீசிலிருக்கிற பொம்மையை அப்படியே எழுதியிருக்கிருனே! பேஷ்! பேஷ்!......இவ்வளவு நன்ருக அவன் படம் எழுதியிருக்கிறதை மெச்சாமல், அவனை அப்படி அடித்துவிட்டீர்களே, சார்!" என்று சொல்லிக்கொண்டே, சிந்தாமணி ஆசாரியார் தம் ஜேபியிலிருந்து ஒரு முழு ரூபாயை எடுத்து எனக்கு வெகுமதி செய்ய வந்தார். நான் வாத்தியாரைப் பார்த்து நடுங்கிக் கொண்டே, அந்த வெகுமதியை வாங்கப் பயந்து நின்றேன். இதற்குள் கோபம் கொஞ்சம் குறைந்துவிட்ட நம்மாழ்வார், "கணக்கு எங்கே? போர்டில் போட்ட கணக்கைக்கூடச் சிலேட்டில் ஏன் எழுதவில்லை?" என்று கேட்டுக்கொண்டே சிந்தாமணி ஆசாரியார் கையிலிருந்து சிலேட்டை வாங்கி, முன் சரியாகப் பார்க்காத அந்தச் சித்திரத்தைக் கவனமாகப் பார்த்தார். "படம் நல்லாத்தான் இருக்கிறது. படம் போட்டுக்கொண்

டிருந்தால், கணக்கு வந்துவிடுமா? கணக்கை ஏன் எழுதவில்லை?'' என்று கேட்டார். நான் அழுதுகொண்டே கணக்கைச் சிலேட்டில் எழுதியிருந்ததையும், மேற்புறத்தில் முதலில் பொம்மை போட்டதையும், பிறகு மறந்தாற்போல் கணக்கை அழித்துவிட்டு அந்தப் பக்கத்திலும் பொம்மை போட்டதையும், பின்னால் அதை மறந்துவிட்டுப் பொம்மை இருக்கிற நினைவில்லாமல் கொண்டு வந்து காட்டிவிட்டதையும் உள்ளபடி சொன்னேன். நான் வேண்டுமென்றே அவமதிப்பாகக் கணக்குக்குப் பதிலாக, பொம்மையைக் காட்டினேன் என்ற கோபத்தால் அடித்துவிட்ட அவருக்கு, நான் அந்த வரலாற்றை உள்ளபடி சொன்னதும் பச்சாதாபம் வந்துவிட்டது. உடனே பள்ளிக்கூடத்தைக் கலைத்துப் பையன்களைப் போகச்சொன்னார்.

எல்லாரும் போனபின், நாற்காலியில் இருந்தபடியே என்னை அருகில் இழுத்து இரண்டு கால்களுக்கும் இடையில் நிறுத்தி அணைத்துக் கொண்டு, சிந்தாமணி ஆசாரியார் நீட்டிய அந்த ரூபாயை வாங்கிக்கொள்ளச் சொன்னார். என் காலில் அடிபட்ட இடத்தைப் பார்த்தார். அது நன்றாகத் தடித்துச் சிவந்து ரத்தம் கசிந்துவிடும் போல் இருந்தது. அந்த இடத்தை மெல்லத் தடவிக்கொடுத்து வெகு நேரம் என்னைத் தேற்றினார். பள்ளிக்கூடத்திலிருந்து நாலைந்து வீடுகளுக்கு அடுத்தாற்போல்தான் எங்கள் வீடு. வாத்தியாரும் சிந்தாமணி ஆசாரியும் என்னை

வீட்டுக்குக் கொண்டுவந்து விட்டார்கள். திண் ணையில் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு என் தகப்பனுர் சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார். அவரிடத்தில் நடந்ததைச் சொல்லி, அடித்துவிட்டதற்கும் வருத்தப்பட்டு விட்டு, வாத்தியாரும் ஆசாரியாரும் போய்விட் டார்கள். அவர்கள் போனவுடன் எனக்கு அடி யின் வலி அதிகப்பட்டு, நான் தேம்பித் தேம்பி அழுதேன். என் தகப்பனுர் 'வாத்தியார் மாணுக் கனை அடிக்க வேண்டியது சரிதான்', 'அடியாத மாடு படியாது' என்ற நம்பிக்கையுள்ளவர். அத ஞல், அடியைப் பற்றி அவர் கவலை கொள்ள வில்லை. "ஏன் படம் போட்டாய்? படம் எழு திக்கொண்டிருந்தால் படிப்பு வருமா? அழாதே போய்ச்சாப்பிடு, போ. இனிமேல் படம் போடாதே, கணக்குப்போடு. போ, கெடக்குது போ" என்றதோடு, என்னை உள்ளே அனுப்பி விட்டார். நான் என் தந்தை ஆறுதல் சொல் லாத ஆத்திரமும் சேர்ந்து தேம்பித் திணறி அழுதுகொண்டே, அம்மாளிடம் போனேன். என்றுமில்லாத அழுகையுடன் போன என்னை, என் தாயார் ஓடிவந்து தூக்கி விசாரித்தார். நான் வேறென்றும் சொல்லாமல் அடிபட்ட இடத் தைக் காட்டினேன். அவர் அந்தத் தடிப்பைப் பார்த்துவிட்டு அலறித் துடித்து விட்டார். "ஐயோ! இப்படியா அடித்துப் படிப்புச் சொல்லிக்கொடுப்பது? நல்ல படிப்பு! நல்ல பள்ளிக்கூடம்! நல்ல வாத்தியார்! அந்தப் பள்ளிக்

கூடமுங் கெட்டுது, இந்தப் படிப்புங்கெட்டுது. இப்படி அடிக்கிற பள்ளிக்கூடத்துக்கு, நாளை யோட போகவேண்டாம்,'' என்று சொல்லிக் கொண்டே, அடிபட்ட இடத்துக்கு வைத்தியம் செய்தார். என் தாயார், குழந்தைகளை அடிக் காமலே படிப்பிக்கவேணுமென்ற நம்பிக்கை யுள்ளவர்......இதற்குப் பிறகு நான் சித்திரம் எழுதுவதைக் கண்ட போதெல்லாம் என் தகப்ப ஞர் 'படம் எழுதிக்கொண்டிருந்தால் படிப்பு எப்படி வரும்?' என்று கண்டிப்பார். அதற் காகப் பயந்து சில சமயங்களில் என் தாயாருக்கு அருகில் அடுப்பு வெளிச்சத்திலும்கூடப் படம் எழுதிக் கொண்டிருப்பேன். தகப்பனுருக்கு முன் னுல் வேறு பாடங்களைப் படிப்பேன்.

## 2

நான் கோயமுத்தூரில் 'பிராஞ்சு ஸ்கூலில்' மூன்றாவது பாரம் படித்துக்கொண்டிருந்தேன். 'பிராஞ்சு ஸ்கூல்' என்பது கோயமுத்தூர் காலேஜுக்குக் கிளை. மூன்றாவது பாரம் முடிய அங்கே தான். அந்த 'பிராஞ்சு' பள்ளிக்கூடத்துக்கு அப்போது ஹெட்மாஸ்டர் எஸ். பி. ராமகிருஷ்ணையர், பி. ஏ., எல். டி. அவர் பி. ஏ. கிருஷ்ணையருக்கு மாப்பிள்ளை. பி. ஏ. கிருஷ்ணையர் கோயமுத்தூர் காலேஜின் வைஸ்பிரின்ஸிபால். (கோயமுத்தூரில் முதல் முதல் பி. ஏ. பட்டம் வாங்கினவர்களில் சிறந்தவரென்று அவரை பி. ஏ. கிருஷ்ணையர் என்றுதான் ஊர் முழுதும் சொல்லுவார்கள்). வைஸ்-பிரின்ஸிபாலின் மருமகன் ஆனதால் எஸ். பி. ராமகிருஷ்ண ஐயருக்கு வெகு இளம் பிராயத்திலேயே ஹெட்மாஸ்டர் பதவி கிடைத்தது. அதே காரணத்தால் 'பிராஞ்சு' பள்ளிக்கூடத்தில் அவர் இட்டது சட்டமாக நடந்து வந்தது. அழகான முகவெட்டுள்ளவர். சிவந்த நிறம். தலைப்பா முதல் பாதம் வரையில் ஒரே வெள்ளையாக வெளுத்த சலவை உடைதான் தினந்தினம் தரிப்பார். நெற்றியில் பிறைச் சந்திரன் போன்ற சந்தனப்பொட்டின் முனைகள் குத்திவிடும் போலக் கூர்மையாக இருக்கும். கண்கள் ஜ்வலிக்கும். அசாதாரணமாக உயர்ந்து நீண்டு கூரான அவருடைய மூக்குமட்டும் மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருக்கும். அநேகமாக தினந்தினம் க்ஷவரம் செய்த முகத்துடன் விளங்கு

வார். ஒருதரம் அவரைப் பார்த்தவர்கள் அவரைப் பற்றிய எதை மறந்தாலும் அவருடைய மூக்கைமட்டும் மறக்கவே மாட்டார்கள். அவருடைய தலைப்பாவின் கட்டும் கண்ணைக்கவரும். மொத்தத்தில் மிகவும் வசீகரமான வடிவம் வாய்ந்தவர். ஆனால் மாணவர்களை மிகவும் கடுமையாகத் தண்டிப்பார். வெகு கண்டிப்பானவர். அடிக்க அஞ்சமாட்டார். வேலையில் கெட்டிக்காரர் என்ற பெருமிதமும், இளமையின் முறுக்கும், கடுகடுத்த இயல்பும், வைஸ்-பிரின்ஸிபாலின் மாப்பிள்ளை என்ற செல்வாக்கும் எல்லாம் சேர்ந்து அவருடைய மற்ற அழகுகளைப் பாழாக்கி, நாங்கள் கண்டவுடன் கதிகலங்க வேண்டிய ஒரு உருவமாக்கிவிட்டன. கணக்குப் பாடத்துக்கும் அவர்தான் ஆசான். அந்தக் காலத்தில் அநேகமாக எல்லாப் பாடங்களுக்கும் மூன்றாவது பாரத்துக்கு ஒரே உபாத்தியாயர் தான். தமிழ்ப்பாடங்கூட வகுப்பு வாத்தியாரே நடத்திவிடுவார். சம்ஸ்கிருதம், டிராயிங், ஜிம்னாஸ்டிக்ஸ்—இவற்றுக்கு மட்டும்தான் தனி உபாத்தியாயர்கள்.........ஒரு நாள் எஸ். பி. ராமகிருஷ்ணையர் எங்களுக்குக் கணக்குப் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். அந்த நாளில் மூன்றாவது பாரம் முடிய கணக்குப்போடுவது சிலேட்டில் தான். இந்தக் காலத்தில் முதல் வகுப்பிலிருந்தே நோட்டுப் புத்தகங்களையும் காகிதப் பென்ஸில்களையும் எல்லாப் பாடங்களுக்கும் வாங்கியே தீர வேண்டியிருக்கிற நிர்ப்பந்தத்தை நினைத்தால், நம்

நாட்டின் கல்வி இலாகாவென்பது அயல் நாடுகளில் காகிதத்தையும் பென்சல்களையும் உற்பத்தி செய்கிற கம்பெனிகளின் கமிஷன் ஏஜண்டோ என்றுகூட எண்ணவேண்டிய வருத்தம் வருகிறது. ஆனால் அந்தநாளில் மூன்றாவது பாரம் முடிய நாங்கள் எல்லாப் பாடங்களையும் சிலேட்டில்தான் எழுதிப் படித்தோம்......இனி கதையைத் தொடர்வோம். எஸ். பி. ராமகிருஷ்ணையர் ஒரு பெரிய கணக்கைக் கொடுத்து எங்களைப் போடச் சொல்லிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஒரு புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அறையின் மூன்று பக்கங்களில் பெஞ்சுகளும் நாலாவது பக்கத்தின் நடுவில் நாற்காலி–மேஜையும் வகுப்பின் அமைப்பு. நான் உபாத்தியாயருக்கு வலது புறத்தில் கடைசி நாலு பேரில் ஒருவனாக உட்கார்ந்திருந்தேன். மற்றப் பையன்களெல்லாம் கணக்கை ஆரம்பித்து, பல பையன்கள் ஏககாலத்தில் சிலேட்டில் எழுதுகிற சத்தம் ஆரம்பித்தது. நான் கணக்கை எப்படி ஆரம்பிப்பது என்ற யோசனையிலேயே இருந்து கொண்டு எனக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஹெட்மாஸ்டரைப் பார்த்துக்கொண்டிருக்க நேர்ந்தது. அள்ளைப் பார்வையில் அவருடைய அழகான தலைப்பாக்கட்டும் உயர்ந்து நீண்ட கூர்மையான மூக்கும், சிறு உதடுகளும், உருண்ட தாழ்வாயும் என்னுடைய சித்திர ஆசையைக் கிண்டிக் கிளப்பி என்னைப் பரவசப் படுத்திவிட்டது. அடுத்த பாடம் டிராயிங்கு.


நான் முற்றிலும் என்னையே மறந்துவிட்டு டிரா யிங்கு நோட்டை எடுத்து சிலேட்டின்மேல் வைத்துக்கொண்டு எஸ். பி. ராமகிருஷ்ணைய ருடைய முகவெட்டை வரைந்தேன். என் பக்கத் தில் வெங்கட்ரமணன் என்ற பையன்; அவனும் டிராயிங்கு எழுதுவதில் வெகு கெட்டிக்காரன். ஏறத்தாழ என்னைப்போலவே வரைவான். ஆனல் அவன் கணக்குப் பாடத்தில் என்னைப்போல் அவ்வளவு மோசமல்ல. வெங்கட்ரமணனும் நானும் பள்ளிக்கூடத்தில் இணைபிரியாத தோழர்கள். டிராயிங்கில் என்னோடு போட்டிபோடக் கூடிய வன் அந்தப் பள்ளிக்கூடத்திலேயே அவன் ஒரு வன்தான். ஒவ்வொரு வருஷத்திலும் பள்ளிக்கூட வருஷக் கொண்டாட்டத்தில் வழங்கப்படும் டிரா யிங்கு பரிசுகளில் முதல் இரண்டு பரிசுகளும் எங்கள் இருவருக்குள்தான் இருக்கும். வகுப்பில் அக்கம்பக்கமாகத்தான் உட்கார்ந்திருப்போம்.

நான் ஹெட்மாஸ்டருடைய உருவத்தை எழுதி முடிக்கிற சமயத்தில் வெங்கட்ரமணன் கணக்கைப் போட்டுவிட்டு என் சித்திரத்தைப் பார்த்தான். என் சித்திரத்தின்மேல் வந்த பூரிப் பினலோ அல்லது போட்டிப் பொருமையி ைலோ வெடுக்கென்று என்னுடைய டிராயிங்கு நோட்டை எடுத்தான். எனக்குக் கோபம் வந்து அதைப் பிடுங்கப்போனேன். அந்தச் சமயத்தில் பார்த்துவிட்டார் ஹெட்மாஸ்டர். சடக்கென்று எழுந்துவந்து "என்னடா அது?" என்று வெங்


கட்ரமணன் கையிலிருந்த டிராயிங்கு நோட்டை வாங்கினுர். அவன் பயந்துபோய் "என்னுடை தல்ல, அவனுடைது" என்று என்னைக் காட்டினுன். ஹெட்மாஸ்டர் சித்திரத்தைப் பார்த்தார். கவனித்துப் பார்த்தார். "யார் போட்டது?" என்று கேட்டுக்கொண்டே டிராயிங்கு நோட்டின் முன் பக்கத்தைத் திருப்பி என் பேரைப் பார்த்தார். என்னை உற்றுப் பார்த்தார். வெங்கட்ரமணனுடைய சிலேட்டை வாங்கிப் பார்த்தார். அவன் கணக்கைப் போட்டிருந்தான். என் சிலேட்டை வாங்கினுர், கணக்கு எழுதினபடியே இருந்தது. மறுபடியும் டிராயிங்கு நோட்டை விரித்து சித்திரத்தைப் பார்த்தார். "ஏண்டாலே கணக்கிலே சுத்த சூன்யமாயிருந்துண்டு கணக்கு 'பீரியட்லே' டிராயிங்கா போட்றே? 'காரிகேச்சர்' (கேலிப்படம்) போட்டிருக்கையா! ஏன் மூக்கை இன்னுங் கொஞ்சம் ஒசரமா நீட்டிப் போட்றதுதானே?.........டே! பியூன்!" என்றுர். பியூன் ஓடிவந்தான். தன்னுடைய அறையில் இருக்கிற பிரம்பை எடுத்துவரச் சொன்னுர். பிரம்பு வந்தது. நடுங்கிக் கொண்டிருந்த என்னைப் பார்த்து "ஒனக்குக் 'கார்ப்பொரல் பனிஷ்மெண்ட்'தான் சரி. வாத்தியாரைக் கேலி செய்றவனுக்குப் படிப்பு எங்கே வரும். நீட்டு கையை" என்றுர். வேறு கதியில்லாமல் கையை நீட்டினேன். ஒவ்வொரு கைக்கும் மூன்று அடிவீதம் ஓங்கி ஓங்கி அடித்துவிட்டுப் பிரம்பை சேவகனிடம் வீசி எறிந்தார்......

மூன்று நாள் கை வீங்கிக்கொண்டது. என்னுடைய வலது கை பத்து நாள் வரையிலும் எதுவும் எழுத உதவவில்லை. பசுமரத்தாணி போல என் மனதிற் பதிந்துவிட்ட இந்த நிகழ்ச்சியை இன்றைக்கு நினைத்தாலும் என் கை வலிக்கிறது. அதற்குப் பிறகு அந்த 'பிராஞ்சு ஸ்கூலை' விட்டுப் போகிறவரையிலும் எந்த நேரத்திலும் எதைக் கண்டாலும் டிராயிங்கு எழுதுகிற என்னுடைய உத்ஸாகம் ஒடுங்கிக் கிடந்தது.

---




இங்கிலாந்தில் நடந்த சித்திரப் போட்டியில்
7 கினி பரிசு பெற்றது.




PORTRAIT OF LORD PENTLAND

INHISOWNNAME (using only capitals)

The word Pentland has been arranged in Regular order beginning from P - as the ear

1. P – ear
2. E – Collar of the Coat
3. N – Part of the Coat & Collar [knot of the tie
4. T – Part of chin, the other end of collar and the
5. L – Part of the chin
6. A – moustache mouth & chin
7. N – moustache, nostril nose
8. D – eye, eye brow & the head

1913ல் சென்னை காட்சி சாலையில் வைக்கப்பட்டு பரிசு பெற்றது.

# 3

கணக்கில் மோசம் என்றாலும் மற்ற எல்லாப் பாடங்களிலும் நல்ல மார்க் வாங்குவேன். இங்கிலீஷ், தமிழ், மொழிபெயர்ப்பு, ஜிம்னாஷ்யம் அநேகமாக எப்போதும் வகுப்பில் முதலாக இருப்பேன். அதனால் வருஷம் தவறாமல் மேல் வகுப்புக்குப் 'புரமோஷன்' மட்டும் கிடைத்து விடும். பிராஞ்சு ஸ்கூலைவிட்டு நாலாவது பாரம் படிக்க காலேஜ் கட்டிடத்துக்குப்போனேன். எஸ். பி. ராமகிருஷ்ண ஐயருடைய பயம் ஒழிந்தது. என்னுடைய சித்திர உணர்ச்சியும் வசந்தகாலம் வந்த செடி கொடிகளைப்போல புதுத்துளிர்விட்டுப் புஷ்பிக்க ஆரம்பித்தது. அத்துடன் காலேஜ் 'டிராயிங்கு மாஸ்டர்' கோபால் ராவ் என்பவர் என்னுடைய சித்திரங்களைப் பார்த்து மிகவும் மெச்சி தட்டிக் கொடுத்தார். காலேஜில் 'ரீடிங் ரூம்' என்ற பத்திரிகைகள் படிக்கிற இடம் ஒன்று உண்டு. அதில் அநேக ஆங்கில அமெரிக்க மாதாந்த சஞ்சிகைகள் இருக்கும். அவைகள் படங்கள் நிறைந்திருக்கும். அவற்றிலுள்ள சித்திரங்களைப் பார்த்துக்கொண்டும் அவற்றைப்போல வரைந்துகொண்டும் அடிக்கடி காலங்கழிப்பேன். அதற்காகவே வெகு நேரத்துக்கு முன்னாலேயே பள்ளிக்கூடத்துக்குப் போய்விடுவேன். அதனால் காலேஜுக்குப் போன நாலைந்து மாதத்துக்குள் என்னுடைய சித்திரப் பழக்கம் மிகவும் செழித்து உரம் பெற்றுவிட்டது.

ஈ. ஹெச். எல்லியட் என்ற ஒரு துரை எங்களுக்கு 'பிரின்ஸிபால்'. அவர் வாரத்தில் ஒரு நாள் நாற்பது நிமிஷநேரம் நாலாவது பாரத்துக்கு 'இங்கிலீஷ்–காம்பொஸிஷன்' என்ற வியாசம் எழுதுகிற பாடத்துக்கு வருவார். உயரமான கனத்த மனிதர். வயது ஐம்பத்தைந்து இருக்கும். காது கொஞ்சம் மந்தம்......ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி வியாசம் எழுதச் சொல்லிவிட்டு–துரை உட்கார்ந்திருப்பார். அந்தப் பாடத்துக்கென்று எங்களிடம் ஒரு தனி நோட்டுப்புத்தகம் இருக்கும். அதில் வியாசத்தை எழுதுவோம். அந்தப் பாட நேரம் முடிகிறவரையிலும் துரை பெரிய வகுப்புகளுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டிய பாட புத்தகங்களைப் பார்த்துக்கொண்டிருப்பார். நேரம் ஆனவுடன் எங்களுடைய நோட்டுகளையெல்லாம் மேஜையின் மேல் கொண்டுபோய் வைத்துவிடுவோம். அவற்றை ஒரு கட்டாகக் கட்டி துரை எடுத்துக் கொண்டு போய்விடுவார். ஒவ்வொரு வியாசத்தையும் திருத்தி குற்றங்களைப்பற்றி அந்தந்த நோட்டில் குறிப்பெழுதி அடுத்த வாரம் கொண்டு வருவார். அதிகத் தப்புள்ள நோட்டுகளில் சிலவற்றை எடுத்து அவற்றிற்குச் சொந்தக்காரப் பையன்களை எழுந்து நிற்கச்சொல்லி,–அவருக்குக் காது மந்தமானதால்–தானே அந்தப் பையன்கள் நிற்கிற இடத்துக்குச் சென்று அருகில் நின்று கொண்டு வெகு அன்பான வார்த்தைகளில் குளிர்ந்த முகத்துடன் அவரவர்கள் எழுதியிருப்

பதிலுள்ள குற்றங்களைச் சுட்டிக்காட்டிவிட்டு, எல்லா நோட்டுகளையும் திருப்பிக் கொடுத்து விடச் செய்வார். நேரமிருந்தால் அந்தக் குறிப்பிட்ட வியாசத்தை இன்ன முறையில் ஆரம்பித்து இப்படி முடிக்கவேணும் என்று சில பொது விதிகளைப்பற்றி உபந்யாசம் மாதிரிச் சொல்லுவார். அதிகத் தப்பும் தவறுமாக எழுதினவனையும்கூட கடுத்துப் பேசமாட்டார். குற்றங்களை மட்டும் சுட்டிக்காட்டுவார். அவருடைய வகுப்பு வெகு கெம்பீரமாக நடக்கும். துடுக்கான பையன்களும் அடக்கமாக இருப்பார்கள்.........

ஒருநாள் 'நாகரீகப் பழக்க வழக்கங்கள்' என்ற விஷயத்தைப் பற்றி வியாசம் எழுதச் சொல்லிவிட்டு ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். எனக்கு வியாசம் எழுதுவது கணக்குப் போடுவது போல் அல்ல. அதில் நான் கெட்டிக்காரன் என்று பேர். வியாசம் எழுதவேண்டிய நாற்பது நிமிஷத்தில் பதினைந்து நிமிஷத்துக்குள் என் வியாசத்தை முடித்து வைத்துவிட்டேன். அதன் பிறகு சும்மாயிருக்க வேண்டியிருந்தது. துரையின்மேல் என் பார்வை ஓடிற்று. அவர் தாம் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை விரித்தபடியே மேஜையின் மேல் கவிழ்த்து வைத்தார். அப்புத்தகத்தின் அருகில் மூக்குக் கண்ணாடியை மடக்காமல் வைத்தார். மேஜையின்மேல் மல்லாந்து இருந்த தன் தொப்பியைக் கவிழ்த்து வைத்தார். இடது முழங்கையை மேஜையில் ஊன்றிக்கொண்டு,

பெருவிரலால் தாழ்வாயைத் தாங்கிக்கொண்டு, வலது கையால் நாற்காலியின் வலது கையைப் பிடித்துக்கொண்டு ஆழ்ந்த யோசனையில் உட்கார்ந்திருந்தார். அந்த நிலைமை எனக்கு ஒரு நல்ல சித்தரமாகத் தென்பட்டது. வியாசத்தையோ எழுதிவிட்டேன். எஸ். பி. ராமகிருஷ்ண ஐயரோ அங்கில்லை. துரையோ மிகவும் நல்லவர். எந்தவிதமான கூச்சமும் அச்சமும் குறுக்கிடாமல் எடுத்தேன்—டிராயிங்கு நோட்டை. பள்ளிக் கூடத்தில் பாடம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் டிராயிங்கு நோட்டுமட்டும் எந்நேரமும் என்னிடம் இருக்கும். மேஜையின் மேலிருந்த தொப்பி, புத்தகம் மூக்குக்கண்ணாடி உள்பட எலியட் துரையைப் படம் எழுதினேன். பின்னாலிருந்த கருப்புப் பலகையும் அதில் அவர் எழுதின 'Civilized habits' (நாகரீகப் பழக்க வழக்கங்கள்) என்ற வாக்கியமும் படத்தில் பதிவாயின. முழுதும் எழுதிவிட்டுச் சரி பார்த்தேன். முகத்தின் அடையாளம் மூக்குக்குக் கீழ், கொஞ்சம் சரியாக இல்லையென்று தோன்றிற்று. ஒரு முகத்தின் அடையாளம் வருவதற்கு மூக்கின் அடிப்பாகத்திலிருந்து வாயும் உதடுகளும் தாழ்வாயும்தான் வெகு முக்கியமான பாகம். வாயையும் அதன் கீழுள்ள பாகங்களையும் மறைத்துக் கொண்டு நமக்கு வெகு பழக்கமானவர்கள் வந்தாலும் உடனே அடையாளங் கண்டுகொள்வது அசாத்தியமாக இருக்கும். அந்தப் பாகம் ஒரு சித்திரத்தில் சரியில்லையென்றால் அடையாளமே

போச்சு. ஆகையினால் நான் எழுதிய துரையின் படத்தில் அந்தப் பாகத்தை மட்டும் கொஞ்சம் திருத்தி எழுதவேண்டும் என்று முன் எழுதியிருந்ததை ரப்பரால் அழித்தேன். மறுபடியும் எழுதினது முன்னிலும் மோசமாக இருந்தது. இரண்டு மூன்று தடவை அழித்தழித்து எழுத வேண்டியதாகிவிட்டது. டிராயிங்கு காகிதத்தை ஒரு தடவைக்குமேல் அழித்தால் அந்தம் கெட்டுப்போகும். இரண்டு மூன்று தரம் அழித்து விட்டால் அப்புறம் அழிப்பதுகூட கஷ்டமாகப் போய்விடும். ஆகையினால் ரப்பரைத் தீட்டிக் கொண்டு காகிதம் கெட்டுப்போகாமல் ஜாக்ரதையாக அழித்துச் சரிப்படுத்துவதற்காக நான் வெகு நேரம் தலையைக் குனிந்துகொண்டே இருக்க வேண்டி ஏற்பட்டது. சத்தமில்லாமல் வியாசம் எழுதவேண்டிய நேரத்தில், தலையை நட்டுக் கொண்டு எதையோ அழிப்பதும், அழித்த தூசுகளை அப்புறப்படுத்தத் தட்டுவதுமாக இருந்ததை 'பிரின்ஸிபால்' கவனித்துவிட்டார்.

கூடுமான வரையிலும் காகிதம் கெடாமல் நிதானமாக வெகு நேரம் தலையைக் கவிழ்த்துக் கொண்டு அழிக்க வேண்டியதை அழித்து இடம் பண்ணிக்கொண்டு மறுபடியும் துரையைப் பார்த்து எழுதத் தலை நிமிர்ந்தேன். துரை எனக்கு முன்னால் விஸ்வரூபமாக நின்று கொண்டிருந்தார். அவர் எத்தனை நேரமாக அங்கே நின்றுகொண்டிருந்தாரோ தெரியாது. துரை என்னைக் கவனித்துவிட்டதற்கு உடந்தையாக

இருந்ததுபோல அதுவரையிலும் சத்தமில்லா திருந்த பையன்கள் அத்தனைபேரும் நான் தலையை உயர்த்தி துரை நிற்பதைப் பார்த்து விட்ட உடனே 'கொல்' லென்று சிரித்து விட்டார்கள். நான் துரையைக்கண்டு அஞ்சி எழுந்து நின்றேன். அவர் இங்கிலீஷில் "என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்னுடைய டிராயிங்கு நோட்டை எடுத்துப் பார்த்துவிட்டு "வியாசம் எழுதவில்லையா?" என்றார். அவர் கேட்டு முடிவதற்குள் வியாசம் எழுதின நோட்டை எடுத்து எழுதின பக்கத்தைத் திருப்பிக் கொடுத்தேன். படித்துப் பார்த்தார். வியாச நோட்டை அவரே மூடி வைத்துவிட்டு மறுபடியும் என் சித்திரத்தைப் பார்த்தார். அதைக் கையிற் பிடித்த படியே திரும்பி நின்றுகொண்டு, நான் இருந்த இடத்திலிருந்து பார்க்கிற பார்வையாக, தான் உட்கார்ந்திருந்த இடத்தையும் மேஜையையும், மேஜைமேலிருந்த பொருள்களையும் சித்திரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தார். மேஜைக்குப் போனார். என்னுடைய டிராயிங்கு நோட்டை மேஜையின்மேல் வைத்தார். வாசற்படியண்டை சென்றார். "பியூன்" என்று கூவினார். 'பியூன்' என்ற சொல் என் காதில் விழுந்த உடனே, முன் எஸ். பி. ராமகிருஷ்ணையர் 'பியூன்' என்று கூப்பிட்ட நினைவு என் மனதில் ஈட்டிபோல் பாய்ந்தது. அது வரையிலும் லேசாக இருந்த என் அச்சம் அதிகரித்தது. 'பியூன்' வந்தான். பிரம்பைக் கொண்டுவரச் சொல்லுவார் என்று நான்

நடுங்கிக் கொண்டிருந்தேன். "ஹெட்மாஸ்டரைக் கூட்டிவா" என்று துரை பியூனுக்கு உத்தரவிட்டார். "ஹெட்மாஸ்டர் என்னத்துக்கு! ஓஹோ கசையடி கொடுப்பதை ரிஜிஸ்டரில் பதிவு செய்யவோ!" என்றெல்லாம் எண்ணி என் தலை சுழல ஆரம்பித்துவிட்டது.

சி. என். கிருஷ்ணசாமி ஐயர் (எம் ஏ., எல். டி.) என்பவர் ஹெட்மாஸ்டர். வெகு கண்டிப்பான உபாத்தியாயர். அவர் ஆறுவது பாரத்துக்கு—அந்தக் காலத்தில் 'மெட்ரிகுலேஷன்' வகுப்பு—வகுப்பு வாத்தியார். கோயமுத்தூர் காலேஜில் அப்போது 'மெட்ரிகுலேஷன்' வகுப்பில் ஏ. பி. என்று இரண்டு பிரிவுகள். 'மெட்ரிகுலேஷன்' சர்க்கார் பரிட்சையில் முதல் வருஷம் தவறினவர்கள் எல்லாரும் ஏ. பிரிவில் இருப்பார்கள். ஏழுவருஷம் எட்டு வருஷம் தவறிப் போன பெரியபெரிய பையன்களும்கூட ஏ. பிரிவில் இருப்பார்கள். அந்தப் பிரிவிற்கு சி. என். கிருஷ்ணசாமி ஐயர் வகுப்பு வாத்தியார். மற்ற வாத்தியார்களிடத்தில் அடங்காப் பிடாரிகளான பையன்களெல்லாம் அவரிடத்தில் ஒடுங்கி யிருப்பார்கள். 'சிரிப்பு' என்பதை அவருடைய முகத்தில் பள்ளிக்கூட நேரங்களில் பையன்கள் பார்க்கவே முடியாது. எஸ். பி. ராமகிருஷ்ணையரைப் போலக் கடூரமானவர் அல்லாவிட்டாலும் வெகு கண்டிப்புள்ளவர். அவர் அநேகமாக யாரையும் அடிக்கமாட்டார். இருந்தாலும் மாணவர்கள் அவரைக் கண்டால் அஞ்சுவார்கள். தென்னிந்தி

யாவில் மிகச் சிறந்த கல்விமான்களில் ஒருவராகக் கருதப்பட்டவர். சர்க்காரிடத்திலும் கல்வி இலாகாவிலும் மிகவும் மதிப்படைந்தவர்......துரையின் உத்தரவுப்படி பியூன் ஹெட்மாஸ்டர் சி.என். கிருஷ்ணசாமி ஐயரைக் கூட்டிக்கொண்டு வந்தான். என்னுடைய டிராயிங்கு நோட்டை துரை கிருஷ்ணசாமி ஐயரிடத்தில் காண்பித்து படத்திலிருப்பது 'யார்' என்று கேட்டார். உடனே கிருஷ்ணசாமி ஐயர் யாரென்பதைச் சொல்லிவிட்டு "எழுதினது யார்? ஏன்" என்று கேட்டார். துரை என்னைச் சுட்டிக்காட்டிவிட்டு என்னுடைய வியாச நோட்டுப் புத்தகத்தை துரை தாமே எடுத்து ஹெட்மாஸ்டரிடம் காட்டினார் வியாசத்தைப் படித்துவிட்டு கிருஷ்ணசாமி ஐயர் புன்முறுவல் பூத்தார். பிரின்ஸிபாலுக் கென்றுவது அவர் முகத்தில் சிரிப்புத் தோன்றினதை நாங்கள் அப்போதுதான் முதல் முதல் பார்த்தோம். பிரின்ஸிபாலுடைய முகம் மலர்ந்தது. துரை என் அருகில் வந்து என்னுடைய முதுகைத் தட்டிக் கொடுத்து "நான் உன்னை மிகவும் மெச்சுகின்றேன். உன்னுடைய சித்திரம் நன்றாயிருக்கிறது" என்று இங்கிலீஷில் சொல்லிவிட்டு ஹெட்மாஸ்டரிடத்தில் என்னைப்பற்றி (அடுத்தாற்போல் வரப்போகிற 'பரிசு வழங்கும்' தினத்தில் கவனிக்க வேணுமென்ற) சிபார்சுகளைப் பேசிவிட்டு ஹெட்மாஸ்டரை அனுப்பிவிட்டார். ஹெட்மாஸ்டர் போனபிறகு துரை மறுபடியும் முன்போல் நாற்காலியில் போய் உட்கார்ந்து

கொண்டு என் சித்திரத்தில் குறையாக இருந்த பாகத்தைப் பூர்த்தி செய்யச் சொன்னார். நான் செய்து கொண்டிருந்தேன். அதற்குள் 'காம் போஸிஷன்' பாடத்தின் நேரம் தீர்ந்துபோய் மணியடித்து விட்டார்கள். அடுத்த பாடம் 'ஜியாமெட்ரி.' அதற்கான ஆசான் ஸ்ரீ சுப்பராய ஐயர் என்பவர் வகுப்புக்குள் நுழைந்தார். பிரின்ஸிபால் நாற்காலியில் உட்கார்ந்திருப் பதைக் கண்டு தயங்கினார். சுப்பராய ஐயரைக் கண்ட பிரின்ஸிபால் "ஓ! நேரம் முடிந்து விட்டதா? தயவு செய்து கொஞ்சம் பொறுங்கள்" என்று சொல்லிவிட்டு நான் எழுதிமுடிப்பதற்காக உட்கார்ந்தே இருந்தார். நான் படத்தை முடித்து விட்டு, 'முடிந்தது' என்பதற்கு அறிகுறியாக துரையைப் பார்த்து தலையை ஆட்டி நோட்டை மூடினேன். துரை எழுந்து வந்து பூர்த்தியான படத்தைப் பார்த்தார். அளவு கடந்த சந்தோஷம் வந்துவிட்டது. என் கையைப் பிடித்துக் குலுக்கி விட்டு தன் சட்டைப் பையிலிருந்த தங்கக் குழாயும் மூடியும் உள்ள ஒரு பென்சிலை எடுத்து எனக்கு வெகுமதி செய்தார். (அது 18 காரட் தங்கம். கீழே விழுந்துவிடாதபடி சட்டையில் மாட்டுவதற்கு ஒரு கொக்கியும் சங்கிலியும் சேர்ந் தது). அதை எனக்குத் தந்து பிறகு டிராயிங்-மாஸ்டரைக் கூப்பிடச் சொன்னார். ஸ்ரீ சுப்பராய ஐயரே போய் டிராயிங்மாஸ்டரைக் கூட்டி வந் தார். டிராயிங் வாத்தியாரிடத்தில் என்னைப் பற்றிச் சிபார்சு செய்து என்னுடைய சித்திர

வித்தை விருத்தியடைய வேண்டிய எல்லா ஒத் தாசைகளையும் செய்ய வேணுமென்று துரை உத்தரவிட்டார். டிராயிங்மாஸ்டர் என்னுடைய சித்திரத் திறமையை முன்னாலேயே தாம் அறிந் திருந்ததை பிரின்ஸிபாலுக்குச் சொல்லி தன்னு லான எல்லா ஒத்தாசைகளையும் எனக்குச் செய்வ தாகத் துரைக்குச் சொன்னார். அப்போது எனக் குண்டான எல்லையற்ற பூரிப்பை இப்போது எப்படி எழுத முடியும்?.........அடுத்த வாரம் பிழை திருத்திய எங்கள் வியாச நோட்டுகளோடு பிரின்ஸிபால் வந்தார். என்னைக்கண்டு மறுபடி யும் மெச்சிப் பேசுவார் என்று நினைத்து அவ ருடைய வரவை வெகு ஆவலோடு எதிர்பார்த் துக் கொண்டிருந்த நான் ஏமாற்றமடைந்தேன். துரை என்னைத் தேடவில்லை. என்னுடைய நினைவே அவருக்கு இல்லைபோல இருந்தது. வழக்கம்போலத் தப்பு அதிகமாக எழுதியிருந்த வர்களுக்குச் சொல்ல வேண்டிய திருத்தங்களைச் சொல்லிவிட்டு, 'நாகரீகப் பழக்க வழக்கங்கள்' என்ற அந்த வியாசத்தின் விஷயத்தைப்பற்றி உபந்யாசம் செய்தார். அவர் பேசிக்கொண்டே வரும்போது "நாகரீகமடைந்த ஜனங்கள் உணவு உட்கொள்ளத் தங்கள் கைகளை உபயோகப் படுத்த மாட்டார்கள்" என்று சொன்னார். நான் சந்தேகம் கேட்க எழுந்து நின்றேன். துரை என் னருகில் வந்தார். "என்ன வேணும்?" என்றார். நான் "கையினால் உணவை எடுத்துச் சாப்பிடுகிற ஜனங்கள் எல்லாரும் அநாகரீகமானவர்களா?"

என்றேன். துரைக்கு உடனே சிரிப்பு வந்து விட்டது. சிரித்துக்கொண்டே தன் மூக்குக் கண்ணுடியை எடுத்து கையிற் பிடித்துக் கொண்டு என்னை உற்றுப் பார்த்து “ஓ! ரமா லிங்கமா! (ராமலிங்கம் என்பதைத் துரை ரமா லிங்கம் என்றுதான் உச்சரிப்பார்) உன்னுடைய கேள்வி நியாயமான கேள்விதான். நான் ஐரோப்பிய வழக்கங்களை மனதில் வைத்துக் கொண்டு சொன்னேன். உங்களை யெல்லாம் அநாகரீகம் என்பதற்காகச் சொன்னதல்ல” என்று பல சமாதானங்களைச் சொன்னுர். எனக் குத் திருப்தியாகாவிட்டாலும் அதற்குமேல் நான் ஒன்றும் கேட்கவில்லை.........வகுப்பு முடிந்தது. பிரின்ஸிபால் போய்விட்டார். அவர் போன பிறகுதான் என்னுடைய வியாச நோட்டில் அவர் ஏதாவது திருத்தியிருக்கிருரா என்று பார்த் தேன். அதில் சில தப்புகளைத் திருத்தி அடியில் என்னமோ எழுதியிருந்தார். அது இங்கிலீஷ் கிறுக்கெழுத்து. எனக்கு விளங்கவில்லை. மற்றப் பையன்களுக்கும் தெரியவில்லை. அடுத்த ஜியா மெட்ரி பாடத்துக்கு வந்த சுப்ராயரிடம் அதைக் காண்பித்துக் கேட்டேன். “சாயந்திரம் நாலு மணிக்கு என்னுடைய அறைக்கு வந்து என்னைச் சந்திக்க” என்று துரை எழுதியிருப்பதாகச் சொல்லிவிட்டு “இந்தப் பாடங்களில் மட்டும் இவ்வளவு கெட்டிக்காரனுக இருக்கிருயே, கணக்கைமட்டும் ஏன் கவனிக்கிறதில்லை” என்று சொல்லி முகஞ்சுளித்தார். கணக்கு, ஜியாமெட்ரி

ஆல்ஜீப்ரா—மூன்றுக்கும் அவர் வாத்தியார். "நானென்ன சார் பண்ணுவேன்? எவ்வளவு கவனித்தாலும் கணக்கு எனக்கு வரமாட்டேன் என்கிறதே!" என்று நான் வருத்தத்தோடு சொன்னேன். அவர் அனுதாபங் கூறினார்...... வியாச நோட்டில் துரை எழுதியிருந்த விஷயத்தை அறிந்தபின் அவர் என்னை மறந்து விடவில்லை யென்பதைக் கண்டேன். மணியை எண்ணிக்கொண்டே யிருந்தேன். சரியாக நாலு மணிக்குப் பிரின்சிபாலின் அறைக்குப்போனேன். என்னைக் கண்டவுடன் வரவேற்று, முன்னு லேயே எனக்கென்று எடுத்து வைத்திருந்த மாதிரி இரண்டு சிறு புத்தகங்களை எனக்கு 'வெகுமதி' என்று சொல்லிக் கொடுத்தார். வாங் கிக்கொண்டு வணக்கம் செய்தேன். "டிரா யிங்கை விடாமல் பழகு. பாடங்களையும் நன் ருகப் படி" என்று சொல்லி அனுப்பிவிட்டார். அந்த இரண்டு புத்தகங்களில் ஒன்று 'எஸ்ஸே ரைட்டிங்'—'வியாசம் எழுதுவது எப்படி' என் பதைப்பற்றிய புத்தகம். இன்னொன்று தோல் கட்டடம் செய்து ஓரங்களுக்குத் தங்க நிறம் தடவி, மேலே தங்கநிற எழுத்துக்களால் பெயர் அச்சிட்டிருந்த 'பைபிள்' என்ற கிறிஸ்துவ வேதம். இப்படி எலியட் துரையவர்கள் அளித்த ஆதரவின் உத்ஸாகத்தால் என்னுடைய சித்திரப் பழக்கம் வெகு சீக்கிரத்தில் நல்ல விருத்தி யுடைந்தது.

# விபரீதம்

என்னுடைய சித்திரத் திறமையினுல் நேர்ந்த ஒரு விசித்திரமான விபரீதத்தை இங்கே குறிப்பிடுவது மிகையாகாது: நான் நாலாவது பாரம் தேறிய சமயத்தில் என் தந்தை அசௌக்கியமடைந்து ரஜா எடுத்துக்கொண்டு நாமக்கல்லில் தங்கியிருந்தார். அதனுல் என்னுடைய ஐந்தாவது பாரப் படிப்பு நாமக்கல்லில் ஆரம்பமாயிற்று. ஆறுமாதத்துக்குள் என் தந்தை சௌக்யமடைந்து மறுபடியும் வேலைபார்க்க கோயமுத்தூருக்குத் திரும்பி விட்டபடியால் ஐந்தாவது ப்ாரத்தின் பிற்பகுதியை கோயமுத்தூரில் படித்தேன். ஐந்தாவது பாரத்தில் வெங்கடவரதன் என்ற மிகவும் மனமொத்த சகபாடி ஒருவன் இருந்தான். மைசூரிலிருந்து கோயமுத்தூருக்குக் குடியேறிய ஒரு பிரபலமான மாத்வ குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுடைய தாய் மாமன் வாசுதேவ ராவ் என்பவர் கோயமுத்தூரில் ஒரு பெரிய பணக்காரர். வெங்கடவரதனுடைய தந்தை நாலு வருஷங்களுக்கு முன்னுல் மைசூரில் இறந்து போனுர். அவரும் நல்ல பணக்காரர். வெங்கட வரதனுடைய தாயார் நாலு குழந்தைகளுடன் கோயமுத்தூரில் தன் தமயன் வீட்டுக்கே வந்துவிட்டார். வெங்கடவரதன் படிப்பில் வெகு கெட்டிக்காரன். எல்லாப் பாடங்களிலும் நூற்றுக்கு எழுபதுக்குக்

குறையாமல் மார்க் வாங்குவான். வெகு வேடிக்கையான பேச்சுக்காரன். எங்களுக்குள் இணை பிரியாத நட்பு. பள்ளிக்கூடத்திலும் பந்தாட்டத்திலும் 'பார்' விளையாட்டிலும் எப்போதும் சேர்ந்தே இருப்போம். தினந்தினம் காலையில் பள்ளிக்கூடத்துக்குப் போக அவன் என் வீட்டுக்கு வருவான். இருவரும் சேர்ந்து காலேஜுக்குப் போவோம். மாலையில் பந்தாட்டத்திலிருந்து இருவரும் எங்கள் வீட்டுக்கு வந்து, நான் புத்தகங்களைப் போட்டுவிட்டு அவனுடன் அவர்கள் வீட்டுக்குப் போவேன். விடுமுறை நாட்களில் நான் வெகுநேரம் அவன் வீட்டில் இருப்பேன். சில நாட்களில் நான் அங்கேயே சாப்பிடுவேன். மிகவும் ஆசாரமுள்ள குடும்பம். பிராம்மணன்—பிராம்மணன் அல்லாதவன் என்ற பிணக்குகள் பிறக்காத அந்தக்காலத்தில்கூட அவர்கள் வீட்டில் அப்போது எனக்கிருந்த சுதந்தரத்தை இப்போது நினைத்தாலும் இன்பம் உண்டாகின்றது. சமையற்கட்டைத் தவிர மற்ற இடங்களில் நான் தாராளமாகப் புழங்குவேன். மடியோடிருப்பவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் என்னைத் தொட்டுப் பழகுவார்கள். சாப்பிடும்போது மட்டும் தனியே உட்கார்ந்து சாப்பிடுவேன். என் இலையை வேலைக்காரி எடுத்துவிடுவாள். நானும் வெகு சுசிகரமாக இருப்பேன், அதிகாலையில் எழுந்து 'சாண்டோ டெவலப்பர்' அல்லது 'கிரிப்டம்பெல்ஸ்' இவற்றில் தேகப் பயிற்சி செய்துவிட்டு நீராடி நெற்றியில் விபூதியும்

சந்தனப் பொட்டும் அழகுபார்த்து அணிவேன். வெகு உல்லாசமான உடை தரிப்பேன். ஒவ்வொரு தீபாவளிக்கும் என் தந்தைக்குக் குறைந்தது ஐம்பது ஜரிகை வேஷ்டியாவது சன்மானம் வரும். கோயமுத்தூர் ஜரிகை வேஷ்டி மிகவும் பேர் பெற்றது. ஜரிகையில்லாத வேஷ்டியைக் கட்டமாட்டேன். சலவையில்லாத சட்டையை அணியமாட்டேன். வாசனை பூசிக்கொள்வதில் வெகு ஆசை. ஆகையினுல் என் அருகில் வரவோ என்னைத் தீண்டவோ யாரும் அருவருப்படைய மாட்டார்கள்.

இப்படியாக அந்த வெங்கடவரதனுடைய வீட்டில் நான் மிகவும் தாராளமாகப் பழகி வந்தேன். வெங்கடவரதனுடைய மாமனுக்குப் பதின்மூன்று வயதுள்ள மூத்த மகள் சீதா. அப்பெண்ணின் அழகு கண்ணைப் பறிக்கும். ரோஜாப் பூவின்மேல் லேசாக மஞ்சள் பூசினது போன்ற நிறம். கருத்த கேசம். அகன்ற நெற்றி. பளிங்கு போன்ற கண்கள். வடிவான மூக்கு. மஞ்சள் பூசாத ரோஜா இதழ்களைப் போன்ற உதடுகள். பால்வண்ணமான பல்வரிசை. என்னேரமும் சிரித்த முகம். பட்டுப் பாவாடைதான் கட்டுவாள். கழுத்தில் ஒரு சங்கிலி. காதில் சிறு வயிரத்தோடுகள். கையில் கனமில்லாத வளையல்கள். இடுப்பில் சிற்சில சமயங்களில் தங்க ஒட்டியாணம். காலில் ஒரு பட்டைக் கொலுசு. வெகு வசீகரமான வடிவம். படம் பிடித்துக் கொள்ள எவரும் விரும்புவார்கள். அந்த அழகு

என்னுடைய சித்திரக் கண்களைச் சிறைப்படுத்தினதும் நான் அவளைப் படமெழுத ஆசை கொண்டதும் ஆச்சரியமல்ல. வெங்கடவரதனுடன் அவர்கள் வீட்டுக்குப் போன முதல் நாளே எனக்கு இந்த ஆவல் உதித்தது. உடனே உட்காரச்சொல்லி ஒருபடம் எழுதிப் பார்த்து விடவேணுமென்று என் கை துடித்தது. ஆனால் ஒழுக்கம் பழகியிருந்த என் அறிவு அந்தப் பதட்டத்தை அடக்கிவிட்டது. சீதா நன்ருகப் பாடுவாள். பிடில் வாசிக்கப் பழகிக் கொண்டிருந்தாள். அழகாகக் கோலம் போடுவாள். அந்த வீட்டுக்கு நான் போகவரப் பழக்கம் முதிர்ந்து விட்ட பிறகு ஒரு நாள் நானும் வெங்கடவரதனும் மேல் மாடியில் அவன் வழக்கமாகப் படிக்கிற அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். மத்தியானம் சுமார் பனிரண்டு மணி இருக்கும். சீதா என் நண்பனை சாப்பிடக் கூப்பிடுவதற்கு அங்கே வந்தாள். அவள் கையில் ஒரு நோட்டுப்புத்தகம் இருந்தது. அது அவள் கோலம்போடப் பழகும் நோட்டு. சிரித்த முகத்துடன், வெகு இனிமையான குரலில், மரியாதையான தொனியில் சீதா வெங்கடவரதனைச் சாப்பாட்டுக்கு அழைத்துக் கொண்டே மேஜைக்கருகில் வந்து நின்ருள். நான் அவளைப் படம் எழுத வேணுமென்ற ஆசையில் என்னுடைய சித்திரக் கண்கொண்டு அவளுடைய அடையாளக் குறிப்புகளைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது அவளுடைய கையிலிருந்த கோலப் புத்த

கத்தை கவனித்தேன். "அதென்ன, டிராயிங்கு நோட்டா?" என்று நான் வெங்கடவரதனைக் கேட்டேன். உடனே அவன் "ஆமாம் ராமலிங்கம், நான் உன்னிடம் சொல்ல வேணுமென்று நினைத்துக்கொண்டே இருந்தேன், மறந்து விட்டேன். நம்ம சீதா ரொம்ப நன்றாகக் கோலம் போடுவாள். அவளுடைய பாட்டு, பிடில் வாசிப்பு எல்லாம் நீ கேட்டதில்லையே! அவளுக்கு டிராயிங்கு சொல்லித்தந்தால் நன்றாக வரும். நீ தான் டிராயிங்கில் கெட்டிக்காரனாச்சே அவளுக்குக் கொஞ்சம் சொல்லிக் கொடேன்?" என்று சொல்லி அவளுடைய கோலப் புத்தகத்தை என்னிடம் காட்டச் சொன்னான். அவளும் அவன் சொன்னதை யெல்லாம் சம்மதித்தவள் போல சிரித்த முகத்தோடு கோலப் புத்தகத்தை என்னிடம் கொடுத்தாள். நான் அவள் வரைந்திருந்த கோலங்களைப் பார்த்து மிகவும் மெச்சிப் பேசிவிட்டு "சீதாவுக்கு டிராயிங் வெகு சீக்கிரம் வரும். நான் சொல்லித்தருகிறேன். அவளையே உட்காரவைத்துப் படம் போட்டுக் காட்டுகிறேன்." என்று சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் சொன்னேன். "சரி அப்படியே செய்" என்று சொல்லிவிட்டு வெங்கடவரதன் சாப்பாட்டுக்கு எழுந்தான். நானும் சந்தோஷமாக வீட்டுக்குப் போனேன்.

சீதா கலைகளில் நல்ல தேர்ச்சி பெற வேணும் என்று வெங்கட வரதனுக்கு வெகு ஆவல். சீதாவை வெங்கடவரதனுக்கே விவாகம் செய்து

கொடுத்துவிட வேணுமென்று சீதாவின் தகப்ப ஞருடைய விருப்பம். ஆனல் அவளுடைய தாயாருக்கு அது சம்மதமில்லையென்று வெங்கட வரதன் என்னிடம் அடிக்கடி சொல்லுவான். சீதாவிடத்தில் வெங்கடவரதன் வெகு பிரியமாக இருப்பான். வெகு செல்வமாகப் பேசுவான். சீதாவும் அவனிடத்தில் கொஞ்சிப் பேசுவாள்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை என்னுடைய எல்லா டிராயிங் நோட்டுகளையும் எடுத்துக் கொண்டு, இரண்டு மூன்று புது டிராயிங் பென்சில்களைச் சீவி தீட்டி முனைப்படுத்திக் கொண்டு, ஐந்தாறு ரப்பர்த் துண்டுகளையும் எடுத் துக்கொண்டு வெங்கடவரதன் வீட்டுக்குச் சீதா வைப் படம் எழுதப் போனேன். வெங்கட வரதன் சீதாவை நன்ருக அலங்காரம் பண்ணிக் கொள்ளச் செய்திருந்தான். நான் போன உடன் வெங்கடவரதன் என்னுடைய சித்திரங் களையெல்லாம் சீதாவுக்குக் காட்டினன். அவள் படங்களையும் அவற்றை வரைந்த என்னையும் மாறிமாறிப் பார்த்துச் சந்தோஷப்பட்டாள். அதன்பின் சீதாவுக்கு என்னிடத்திலிருந்த கொஞ்சம் கொஞ்சம் சங்கோஜமும் போய்விட் டது. வெகுநாள் பழகினவளைப்போல மிகுந்த ஆவலுடன் தன்னைப்படம் எழுதுவதற்கு நான் சொன்னபடியெல்லாம் உட்கார்ந்தாள். ஐந்தாறு மாதிரியாக அவளைப் படம் எழுதினேன். அவற் றைப் பார்த்து அவள் ஆனந்தப் பரவசமடைந்து விட்டாள். அந்தப் படங்களைக் கொண்டுபோய்

தன்னுடைய தாயாரிடத்திலும் தகப்பனுரிடத்திலும் அத்தையிடத்திலும் காட்டிக் களித்தாள். அவர்களும் என் சித்திரத் திறமையைப் புகழ்ந்தார்கள். அன்றைக்குத்தான் முதல்முதல் என்னை அவர்கள் வீட்டில் சாப்பிடச் சொன்னுர்கள். மறுநாள் நானே சீதாவுக்கு ஒரு டிராயிங்கு நோட்டு, பென்சில், ரப்பர் முதலியவற்றை வாங்கிக்கொண்டு போய்க் கொடுத்துடிராயிங் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தேன். வெகு விரைவில் சீதாவின் சித்திரப்பழக்கம் விருத்தியடைந்தது. அநேகமாக தினந்தினம் குறிப்பிட்ட நேரத்தில் நான் போய் பக்கத்திலிருந்து அவள் சித்திரம் வரைவதைப் பார்த்துத் திருத்துவேன். சீதா சித்திரம் கற்றுக்கொள்ள வென்று வெகுநேரம் என்னுடன் மாடியில் இருப்பாள். பெரும்பாலும் வெங்கடவரதன் எங்களுடன் இருப்பான். யாரும் இல்லாவிட்டாலும் நாங்கள் இரண்டு பேரும் மட்டும் டிராயிங் போட்டுக் கொண்டு இருப்பதும் உண்டு. நான் விரும்பாமலும் எனக்குக் காப்பி பலகாரம் முதலியவற்றைக் கொண்டுவந்து சீதா கொடுப்பாள். வெங்கடவரதன் சொல்லாமலும் தானே என்னைச் சாப்பிடச்சொல்லி அடிக்கடி வற்புறுத்துவாள். மாலை நேரங்களில் அவளுக்கு பிடில் வாத்தியார் பாடம் சொல்லிக்கொடுக்கும் போதெல்லாம் நானும் அருகிலிருந்து ஆனந்தப்படுவேன். இப்படியாக சுமார் ஐந்துமாத காலம் நானும் சீதாவும் பழகிவந்தோம். அவளுக்காக நானே ஒரு

கலர் பாக்ஸ்'—சாயப் பெட்டியை வாங்கித் தந்து புஷ்பங்கள், செடிகள், நீர்நிலைகள், ஆகாயம் இவற்றிற்கு வர்ணம் தீட்டக் கற்றுக்கொடுத் தேன். அதையும் அவள் வெகு சீக்கிரம் கற்றுக் கொண்டாள். இதற்குள் எங்கள் இருவருக்கும் இடையில் ஒருவித அபூர்வமான நட்பு வளர்ந்து விட்டது. அதை வெறும் 'அன்பு' என்று சொன்னால் பத்தாது. வேறு பெயர் சொல்ல நல்ல பதம் கிடைக்கவில்லை. நாங்கள் இருவரும் ஒரு தனி இனம்போல் எண்ண ஆரம்பித்தோம். நான் கூசினாலும் சீதா கொஞ்சங்கூடக் கூச்சப் படாமல் கொஞ்சிப் பேசிக் குற்றமற்ற பிரியம் கொண்டாடினாள். நான் அவர்கள் வீட்டிற்கு ஒரு நாளைக்குப் போகாவிட்டாலும் "ராமலிங்க மாமா! ஏன் நேற்று வரவில்லை? உங்களுக்காக எடுத்து வைத்திருந்த கேசரியை இன்று காலை யில்தான் வேலைக்காரிக்குக் கொடுத்தேன்" என்று அவளுடைய தாய்தந்தையர் முன்னாலும் கேட் பாள். சீதாவின் மாசற்ற அந்த உருவத்தை இன்றைக்கு நினைத்தாலும் எனக்கு மருவற்ற மகிழ்ச்சி யுண்டாகிறது.

அவளுடைய வடிவழகை வர்ணந் தீட்டி ஒரு சித்திரம் வரைந்து பார்க்க வேண்டுமென்ற ஆசை வந்தது. ஒரு சனிக்கிழமை—பள்ளிக் கூடம் இல்லாததனால்—குறிப்பிட்ட ஆடை யாபரணங்களை அணிந்துகொள்ளச் சொல்லி உருவத்தை வரைந்துகொண்டு மறுநாள் ஞாயிற் றுக்கிழமைய தினம், அதற்கு வர்ணம் தீட்ட

வெங்கட வரதனும் நானும் ஏற்பாடு செய்திருந்தோம். சனிக்கிழமை குறிப்பிட்டிருந்தபடி வெங்கடவரதனும் அருகிலிருக்க சீதாவின் வடிவத்தை ஒரு புதுமாதிரியாக சில புஷ்பச் செடிகளுக்கிடையில் உட்காரச் செய்து வரைந்தேன். மறுநாள் அதற்கு சாயம் பூசுவதென்று வந்து விட்டேன். மறுநாள் சுமார் ஒன்பது மணிக்கு அதற்கு சாயம் தீட்டவென்று போனேன். மேல் மாடி அறையில் வெங்கடவரதன் காணப்படவில்லை. வேலைக்காரன், வெங்கடவரதனும் அவனுடைய தாயாரும் மாமாவும் கொள்ளேகாலத்தில் ஒரு கலியாணத்துக்குத் திடீரென்று புறப்பட்டுப் போயிருப்பதாகச் சொன்னான். வேலைக்காரனையே கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரச் சொல்லிவிட்டுக் கதவுக்கருகில் மேஜையை இழுத்துப்போட்டு வாசல் வெளிச்சம் படத்தின் மேற்படுகின்றபடி உட்கார்ந்துகொண்டு வர்ணம் தீட்டஆரம்பித்தேன். கதவுக்கு அப்பால் திறந்த இடத்தில் ஒரு சிறு கீற்றுக் கொட்டகை. அதில் பெண்களுடைய மடிப்புடவைகள் உலர்த்தப்பட்டிருக்கும். பெண்டுகள் மாடிக்கு வந்துபோக அந்தப் பாகத்தில் ஒரு படிக்கட்டு உண்டு. நான் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் பின்னால் அந்த அறையின் கோடியில் இன்னொரு கதவு. அது தான் வீதியிலிருந்து மாடி ரூமுக்கு வரும் வழி. நான் உட்கார்ந்த இடம் அந்த அறையின் பின்புறக் கதவண்டை, திறப்பான இடத்தின் வெளிச்சத்துக்காக அங்கே உட்கார்ந்தேன்.

நான் வெகு கவனத்துடன் வர்ணம் கொடுத்துக் கொண்டிருந்தேன். எனக்குப் பின்னால் காலடி ஓசை கேட்டது. அது சீதா வந்த சத்தம். நான் திரும்பிப் பார்த்தேன். சீதா என் நாற்காலிக்குப் பின்னால் பதுங்கி உட்கார்ந்து கொண்டாள். அவள் என்னோடு விளையாட்டுச் செய்ய அப்படி உட்கார்ந்து கொண்டாளென்பதை அறிந்த நான் அவளைக் கண்டு கொள்ளாதவனைப் போலவே படத்துக்கு வர்ணம் பூசிக் கொண்டிருந்தேன். சுமார் பத்து நிமிஷம் சந்தடி செய்யாமல் சீதா பின்னால் நின்று கொண்டு நான் வர்ணம் பூசுவதைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவள் வெகு சமீபத்தில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பதை என் காதுக்கு அருகில் கேட்ட அவளுடைய மூச்சினால் அறிந்தேன். அவளைப் பார்க்க வேணுமென்று என்னுள் எழுந்த ஆசையையும் அடக்கிக் கொண்டு நான் திரும்பாமல் என்னுடைய வேலையில் இருந்தேன். அவள் வந்ததை நான் அறிந்து கொள்ளவேயில்லை என்று எண்ணியோ என்னவோ சட்டென்று சீதா தன்னுடைய இரண்டு கைகளாலும் என் கண்களைப் பொத்தினாள். நான் என் கையிலிருந்த சாயக் கோலை அப்படியே போட்டு விட்டு என்னுடைய இரண்டு கைகளாலும் அவளுடைய இரண்டு கைகளையும் வளையல்களோடு சேர்த்துப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் அப்படியே சும்மா இருந்தேன். நறுக்கென்று சீதா கைகளை இழுத்துக் கொண்டாள்.

நான் கண்களைத் திறந்தேன். கதவுக்கு முன்னால், அங்கே உலர்ந்து கொண்டிருந்த மடிப்புடவையை எடுக்க வந்த சீதாவின் தாயார், ஈரப்புடவையோடு நின்று கொண்டு என்னை முழித்துப் பார்த்தார். சீதா பின்னால் நின்று கொண்டு சிரித்தாள். "சீதா!" என்று மிரட்டிவிட்டு அவளுடைய தாயார் மடிப்புடவையை எடுத்துக் கொண்டு வேகமாகக் கீழே போய் விட்டார். நான் எழுந்து சீதாவைப் பார்த்து "ஏன் அப்படிச் செய்தாய்? அம்மா கோபத்தோடு போயிருக்கிறார்கள். நீ போய்ச் சமாதானம் சொல்லு" என்றேன். "அம்மாள் ஒன்றும் சொல்ல மாட்டாள்" என்று சீதா பின்னும் சிரித்துக் கொண்டு அங்கேயே நின்று கொண்டிருந்தாள்.

கீழே போன சீதாவின் தாயார் புடவையை மாற்றிக் கொண்டு வெகு வேகமாக நாங்கள் இருந்த இடத்துக்கு வந்தார். வர்ணந் தீட்டியிருந்த என்னுடைய டிராயிங்கு நோட்டைத் தூக்கி வெளியில் வீசி எறிந்தார். வர்ணங்களையும் கோல்களையும் வாரிக் கீழே போட்டார். "டேய்! ராமலிங்கம்! போ வெளியிலே. இனிமேல் இந்த வீட்டுப்பக்கம் வந்தால் நான் வெகு பொல்லாதவளாயிருப்பேன். போ, நிக்காதே" என்றார். சீதாவுக்குப் பொறுக்கவில்லை. ஓ வென்று அழுது விட்டாள். அழுது கொண்டே "ஏனம்மா........ யாதக்கு அவனெ........நாந்தா" என்று ஏதேதோ கன்னட பாஷையில் புலம்பிக் கொண்டு தாயாரிடம் எனக்காகப் பரிந்து பேசினாள். சீதா

வின் தாயார் அவள் புலம்புவதற்கு ஒன்றும் பதில் பேசாமல் என்னை உருட்டிப் பார்த்துக் கொண்டே வெளியில் போகச் சொல்லிக் கையினால் கதவைக் காட்டினார். நான் அதற்குமேலும் அங்கே எப்படி நிற்பது? பதிலே பேசாமல், டிராயிங்கு நோட்டு, சாயங்கள் முதலிய வற்றையும் கூட எடுக்காமல் வீட்டுக்குப் போய் விட்டேன்.

சீதாவை இனிப் பார்க்க முடியாதே என்ற வருத்தமும், ஒரு குற்றமும் செய்யாத என்னை அந்த அம்மாள் அவ்வளவு அவமானப் படுத்தி விட்டாளே என்ற கவலையும் என்னை மிகவும் கலக்கி விட்டன. அத்துடன் அருமை நண்பன் வெங்கட வரதன் என்ன நினைப்பானோ என்ற வருத்தமும் வாட்டியது. நாலு நாள் நல்ல தூக்கமில்லை. பள்ளிக்கூடத்திலும் படிப்பிலே மனம் படியவில்லை. கொள்ளேகாலத்துக்குப் போயிருந்த வெங்கடவரதன் நாலு நாளைக்குப் பிறகு என் வீட்டுக்கு வந்தான். வந்த உடன் "என்னடா ராமலிங்கம்! மாமி என்னமோ பிராது சொல்லுகிறாளே அது என்ன?" என்றான். நான் ஒன்றையும் ஒளிக்காமல் நடந்ததைச் சொன்னேன். அதைக் கேட்டு அவன் "சீதாவும் நீ சொல்லுகிற படிதான் சொன்னாள். அந்தச் சிடுமூஞ்சி மாமி அப்படித்தான். நானும் சீதாவும் சிரித்து விளையாட்டுப் பேச்சுகள் பேசுவது கூட அந்த மாமிக்குப் பிடிக்கிறதில்லை. நீ அதற்காக வருத்தப் படாதே. இன்னும் நாலைந்து மாதத்துக்குள்

எனக்கும் சீதாவுக்கும் கல்யாணமாகப் போகிறது. அப்புறம் இந்த மாமியின் அதிகாரம் எங்கே?" என்ருன். அதைக் கேட்டு நான் மிகவும் ஆறுதலடைந்தேன்... என்ருலும் வெங்கடவரதன் வீட்டுக்கு நான் போவது முடியாத காரியமாகி விட்டது. சீதாவின் இனிய முகமும் அவளுடைய பாட்டும் பிடில் வாசிப்பும் என் மனக்கண்முன் அடிக்கடி வந்து வந்து வருத்திக் கொண்டே இருந்தன. வெங்கடவரதன் வழக்கம் போல் பள்ளிக்கூடம் போக எங்கள் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான். நான் சீதாவைப்பற்றி அடிக்கடி விசாரிப்பேன். நான் அவர்கள் வீட்டுக்குப் போவது நின்று போனதைப்பற்றி சீதா மிகவும் துக்கப்படுவதாகவும் என்னைப் பார்க்க வேணு மென்று அவள் மிகவும் விரும்புவதாகவும் அடிக்கடி சொல்லுவான்.

ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு நாள் இரவு எட்டுமணி இருக்கும். நான் பாடம் படிக்க விளக்கண்டை உட்கார்ந்தேன். நான் படிக்கும் இடம் வீதிப்புறத்தில் மூன் காடிகாருவாக இருந்த ஒரு துண்டான அறை. வெங்கடவரதன் சிரித்துக் கொண்டே உள்ளே வந்தான். அந்நேரத்தில் அவன் வருவது வழக்கமில்லை. நான் அவனை வரவேற்க எழுந்தேன். அதற்குள் அவனுக்குப் பின்னுல் வந்த சீதாவும் வந்து நின்று என்னைப் பார்த்துச் சிரித்தாள். சீதாவைக் கண்டு மெய் மறந்த சந்தோஷத்திஞல் வரவேற்கவும் வாய் வராமல் திகைத்து நின்றேன். நான்

பேச நினைக்கு முன் சீதா "ராமலிங்க மாமா! அம்மா அப்படி யெல்லாம் சொல்லி விட்டதுக்காகக் கோபிக்க வேண்டாம். உன்னைப் பார்க்காமல் எனக்கு எப்படியோ இருக்கு." என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்து தன் கையில் வைத்திருந்த ஒரு பெரிய பட்சணப் பொட்டலத்தை என்னிடம் கொடுத்தாள். நான் அதை வாங்கிக் கொண்டு "இங்கே வந்ததை அம்மாள் அறிந்தால் இன்னும் கோபித்துக் கொள்ளுவார்களே! அவருக்குத் தெரியாமல் எப்படி சீதா வந்தாய்?" என்று கேட்டேன். அதற்கு வெங்கடவரதன் பதில் சொன்னான். சென்ற பத்து நாட்களாக தினந்தினம் என்னைப் பார்க்க வேணுமென்று சீதா துடித்ததாகவும், அதற்காக இரண்டு பேரும் சேர்ந்து ஒரு யுக்தி செய்ததாகவும் சொன்னான். அந்த யுக்தி என்னவென்றால்: அன்றைக்குப் பெண்கள் பாடசாலையில் பரிசளிப்பு விழா. அதில் பெண்கள் ஒரு நாடகம் நடிக்கிறார்கள். அந்த நாடகம் மாலை ஆறு மணி முதல் ஒன்பது மணி வரைக்கும். சீதா தன்னுடைய தாயாரின் அனுமதியின் மேல் வெங்கடவரதனுடைய தாயாருடன் நாடகம் பார்க்க வந்தாள். சீதாவும் வெங்கடவரதனும் செய்திருந்த ஏற்பாட்டின்படி சீதா நாடகம் ஆரம்பிக்குமுன் யாரோ ஒரு பெண்ணுடன் பேசி விட்டு வருவதாக வெங்கடவரதனுடைய தாயாரிடம் சொல்லிவிட்டு வெளியில் வந்தாள். சீதா கொடுத்த பட்சணப் பொட்டலம் நாட

கத்துக்குப் புறப்படு முன்னல் அவளே வெங்கட வரதனிடம் கட்டிக் கொடுத்திருந்தது. சீதா நாடகம் நடக்கு மிடத்திலிருந்து வெளியில் வருகிற வரைக்கும் அந்தப் பொட்டலத்தை வெங்கடவரதனே வைத்திருந்தான். எங்கள் வீட்டுக்கருகில் வந்து அந்தப் பொட்டலத்தை தானே என்னிடம் தரவேணு மென்று ஆசைப்பட்டு வெங்கடவரதன் கையிலிருந்து சீதா வாங்கிக் கொண்டாளாம். நாடகம் முடிவதற்குள் சீதாவை நாடகம் நடக்கிற இடத்தில் கொண்டு போய் விட்டு விடவேணும். இதுதான் சீதா என்னைப் பார்க்க வந்த விதம். அரை மணி நேரம் சீதா என்னுடன் வழக்கம் போல் சிரித்து விளையாடிப் பேசிக் கொண்டிருந்தாள். என்னுடைய சாயப் பெட்டி, சாயக் கோல்கள் முதலியவற்றையெல்லாம் பத்திரமாக எடுத்துவைத்திருப்பதாகவும் அடிக்கடி அவற்றை என்னைப் பார்ப்பது போலப் பார்த்து வருவதாகவும் சீதா சொல்லிச் சிரித்தாள். நான் உடனே அவற்றையெல்லாம் என்னுடைய ஞாபகார்த்தமாக அவளிடத்திலேயே இருக்கட்டும் என்றேன். மறுபடியும் ஒரு நாள் வருவதாகப் போனர்கள். ஆனல் மறுபடியும் வரமுடியவில்லை .........மூன்று மாதத்துக்குப் பிறகு சீதாவுக்குக் கலியாணம் நடந்தது. ஆனல் விவாகம் வெங்கடவரதனுக்கும் அவளுக்கும் அல்ல. சீதாவை வெங்கடவரதனுக்கே கொடுக்க வேணு மென்று அவளுடைய தகப்பனர் நிச்சயித்து அப்படியே பகிரங்கமாகச் சொல்லிக் கொண்டும் இருந்தார்.

ஆனல் சீதாவின் தாயாருக்கு ஆதியிலிருந்தே அது சம்மதமில்லாமல் இருந்து வந்தது. கடைசியில் சீதாவின் தாயாருடைய பிடிவாதமே வெற்றி பெற்றது. சீதாவை கொள்ளேகாலத்தில் ஒரு மிகப் பெரிய பணக்காரனுக்குக் கொடுத்து விட்டார்கள். சீதா கலியாணம் நடந்த ஐந்து நாளும் அழுது கொண்டே இருந்ததாக என் நண்பன் வெங்கடவரதனே சொன்ஞன். அந்த அழுகைக்குக் காரணம் அவள் மிகவும் பிரியம் வைத்திருந்த வெங்கடவரதனை விட்டு வேருெருவருக்கு வாழ்க்கைப்படச் செய்தது தான் என்று எல்லாரும் பேசிக் கொண்டார்கள். அந்த விவாகத்துக்குப் பிறகு வெங்கடவரதனும் அவன் தாயார் முதலானவர்களும் வேறு வீட்டுக்குக் குடி போய் விட்டார்கள். நானும் வெங்கடவரதனும் எப்போதும் போலவே இருந்து வந்தோம்.........

சுமார் பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு ஒரு நாள் இரவு ஒன்பது மணிக்கு நான் திருச்சிஞப்பள்ளி ரைல்வே ஜங்ஷனில் கரூர் போவதற்கு வண்டிக்காகக் காத்திருந்தேன். பிளாட்பாரத்தில் உலாவிக் கொண்டிருந்தேன். ஒரு மூன்று வயதுக் குழந்தை விளையாடிக் கொண்டே எனக்குக் குறுக்கே ஓடிவந்து என் மேல் மோதிற்று. சிறிது தூரத்தில் மூட்டை முடிச்சுகளுடன் உட்கார்ந்திருந்த அக்குழந்தையின் தாய் குழந்தையைக் கூப்பிட்டாள். நான் அந்தக் குழந்தையை எடுத்து அந்த அம்மாளிடம்

கொண்டு போய் விட்டேன். அந்த அம்மாள் மொட்டையடித்து முக்காடிட்டுக் கொண்டிருந்த ஒரு பிராம்மணக் கைம்பெண். அவளருகில் இன்னும் இரண்டு வயசான குழந்தைகளும் ஒரு கிழவரும் ஒருகிழவியும் உட்கார்ந்திருந்தார்கள். நான் குழந்தையை மட்டும் அங்கே விட்டு விட்டு மறுபடியும் உலாவிக் கொண்டிருந்தேன். ஒரு தரம் அந்த அம்மாளிருந்த இடத்துக்கருகில் நான் வந்த போது அவள் எழுந்து என்னருகில் வந்து என்னைக் கூர்ந்து பார்த்தாள். நான் கவனிக் காதவன்போலப் போய்விட்டேன். திரும்பி வரும்போதும் அந்தம்மாள் அங்கேயே நின்று கொண்டு என்னையே கவனித்துப் பார்த்தாள். நானும் முன் போலவே பராமுகமாகவே அவளைக் கடந்து போய்விட்டேன். கொஞ்சதூரம் போன பின், பின்னால் யாரோ என்னைக் கூப்பிட்டது கேட்டது. திரும்பிப் பார்த்தேன். அந்த அம்மாள் என்னைக் கை நீட்டி அழைத்தாள். நான் போனேன். அந்த அம்மாள் எனக்கு வெகு சமீபத்தில் வந்து என் முகத்தை உற்றுப் பார்த்து விட்டு "என்னைத் தெரியவில்லையா?" என்றாள். அந்நாளில் பிளாட்பார விளக்குகள் இப்போது போலப் பிரகாசமாக இருக்காது. நான் "யார்? தெரியவில்லையே," என்று கவனித்துப் பார்த்தேன். அந்த அம்மாள் தன்னுடைய முக்காட்டை நீக்கி முகத்தை நன்றாகக் காட்டி "ராமலிங்க மாமா! என்னைத் தெரியவில்லையா?" என்று விசனத்தோடு சிரித்தாள். அந்தச் சிரிப்பில்

என்னுடைய மனதில் மங்காதிருந்த சீதா விளங்கினாள். சீதாவின் அமங்கல உருவத்தைக்கண்டு எனக்கு அழுகை வந்து விட்டது. இருவரும் அங்கேயே உட்கார்ந்து வண்டி வருகிற வரைக்கும் பேசினோம். இரண்டு வருஷத்துக்கு முன்னால் தன் கணவன் இறந்து போனதாகவும் தனக்கு மூன்று குழந்தைகள் என்றும், மாமனார் மாமியாருடன் ராமேச்வரம் போய் விட்டு ஊருக்குத் திரும்பிப் போவதாகவும் சொன்னாள். வெங்கடவரதனைப் பற்றி விசாரித்தேன். அவள் உடனே கலகலவென்று கண்ணீர் விட்டு அழுது விட்டாள். அழுகையை அடக்கிக் கொண்டு வெங்கடவரதனும் 'ப்ளேகில்' இறந்து விட்டதாகச் சொன்னாள். என் இதயம் வெடித்து விடும் போன்ற விசனம் வந்தது. வெகு நேரம் உணர்வு கலங்கி உட்கார்ந்திருந்தேன். பிறகு என்னுடைய க்ஷேமலாபங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். ஈரோடு போகும் வண்டி பிளாட்பாரத்துக்கு வந்தது. சீதாவுக்கு ஒத்தாசை செய்து குழந்தைகளையும் மூட்டை முடிச்சுகளையும் வண்டியில் ஏற்றி அதே அறையில் நானும் ஏறிக்கொண்டு நெடுகப் பேசிக் கொண்டே வந்தோம். கரூரில் நான் இறங்க வேண்டியவன் என்று தெரிந்து கரூருக்கு இரண்டு ஸ்டேஷன்கள் இருக்கும் போதே சீதா, தன்னுடன் கொள்ளேகாலம் வரையிலும் வந்து தன் வீட்டில் ஒரு நாளாவது தங்கியிருந்து வர வேணுமென்று என்னைக் கட்டாயப் படுத்தி

கோயமுத்தூருக்கு டிக்கட் வாங்குவதற்கு அவளே பணம் கொடுத்தாள். நான் கரூரில் இறங்க வேண்டிய எல்லா அலுவல்களையும் மறந்து விட்டு சீதாவுடன் கொள்ளேகாலம் போய் மூன்று நாள் அவளுடைய செல்வம் நிறைந்த வீட்டில் விசேஷ விருந்தாளியாக இருந்தேன். நான் அங்கிருந்து திரும்பி வரும் போது சீதா எனக்கு வெகு விலையுயர்ந்த கொள்ளேகாலத்துப் பட்டுத் துப்பட்டாக்களும் மடிவேஷ்டிகளும், ஒரு ஜரிகை இழைத்த சால்வையும் மற்றும் பல பொருள்களையும் தந்து அடிக்கடி அங்கே வந்து போக வேணுமென்று வழியனுப்பினுள். அதன் பிறகு அரசியல் போராட்டங்களில் அதிகமாக ஈடுபட்டு விட்ட நான் கொள்ளேகாலம் போக ஆசையிருந்தும் முடியவில்லை. 1927-ல் சீதாவும் செத்துப் போனதாக அவளுடைய பந்து ஒருவர் கோயமுத்தூரில் எனக்குச் சொன்னுர்.

என்னுடைய வாழ்க்கையில் நடந்த எல்லா நிகழ்ச்சிகளிலும் இன்றைக்கும் கொஞ்சங்கூட மங்காமல் மறக்க முடியாமல் என் மனதில் பச்சைப்பசேலென்று இருந்து வருவது சீதாவின் மாசற்ற அன்பும் வெங்கடவரதனின் கெம்பீர மான நட்பும்தான். நான் சித்திரக்கலையில் மிகவும் தேர்ச்சியடைந்த பிற்காலத்தில் பல ஐரோப்பிய சித்திர வித்வான்களுடைய படங்களையும் அவர் களுடைய முறைகளையும் பல ஆங்கில அமெரிக் கப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ஆவ லோடு தேடிப் படிப்பதுண்டு. அவற்றுள் ஒரு

ஆங்கிலச் சித்திரக்காரர் வரைந்த "ஆர்ட் வின்ஸ் ஹார்ட்" என்ற ஒரு அழகான படத்தைப் பார்த்தேன். தமிழில் அதைச் சொன்னால் "கலைத்திறம் இதயத்தைக் கவர்கின்றது" என்று சொல்லலாம். அந்தப் படத்தில் ஒரு சித்திரக்காரன் ஒரு பீங்கான் கூஜாவின்மேல் வர்ணம் தீட்டிப் படம் எழுதிக் கொண்டிருக்கிறான். அதை வெகு ஆசையோடு பார்த்துக் கொண்டு ஒரு யுவதி மெய்மறந்து நிற்கிறாள். அந்தப் படத்தைப் பார்த்த உடன் சீதா என் கண்ணைப் பொத்திய நினைவு வந்தது என் மனதில் இன்னும் இருக்கிறது. பாரதியார் அழகுத் தெய்வத்தைப் பாடிக் களித்த உணர்ச்சியும், 'அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்' என்று வள்ளுவர் சொன்னதும் வெறும் கற்பனைகள் அல்லவென்று அடிக்கடி நினைப்பூட்டி சீதாவும் வெங்கடவரதனும் என்னுடைய நினைவில் நிலவுகின்றார்கள்.

1906-ம் வருஷம் நான் 'மெட்ரிகுலேஷன்' பரிட்சைக்குப் பணம் கட்டினேன். 'பெயில்' ஆகிவிட்டேன். பெயிலானதில் ஒரு விசித்திரம். நான் இங்கிலீஷிலும் தமிழிலும் அநேகமாக வகுப்பில் முதல் மூன்று பேருக்குள் இருப்பேன். சரித்திரம், பூகோளம், சயன்ஸ் இவற்றில் நல்ல மார்க்கு வாங்குவேன். கணக்கு ஒன்றுதான் எனக்குக் கழுத்தறுப்பு. அதிலும் சில சமயங்களில் 'பாஸ் மார்க்' வாங்கிவிடுவேன். எப்படியென்றால்: அரித்மெடிக், அல்ஜீப்ரா, ஜியாமெட்ரி என்ற மூன்றும் சேர்ந்துதான் கணித பாடம். இந்த மூன்றிலும் சேர்த்து 42 மார்க் வாங்கினால் பாஸ். 'ஜியாமெட்ரி'யில் டிராயிங்கு வேலை அதிகம். அதனாலோ என்னவோ 'ஜியாமெட்ரி' எனக்கு அவ்வளவு கஷ்டமாயில்லை. அதில் 25 மார்க்கு வரையிலும் வாங்குவேன். அல்ஜீப்ரா 'வில் 10 மார்க்கு வரையிலும் வரும். மிச்சம் வேண்டியது 7 மார்க்குதான். 'அரித்மெட்டிக்'கில் மொத்தம் 100 மார்க்குக்கு இந்த 7 மார்க்கு கிடைப்பதும் வெகு பாடாக இருக்கும். சில சமயங்களில் கிடைத்துவிடும். அனேகமாகக் கிடைக்காது. 'மெட்ரிகுலேஷன்' பரிட்சையில் இங்கிலீஷ் தமிழ் முதலான மற்றப் பாடங்களிலும் நன்றாக விடை எழுதியிருந்தேன். 'ஜியாமெட்ரி'யில் வழக்கமாக எழுதுவதைக் காட்டிலும் குறைவாகப் போய்விட்டது. 'அல்ஜீப்ரா' மோசம். அரித்மெட்டிக்கில் ஒரு

கணக்குக்கூட 'ரைட்' இல்லை. ஆனால் எங்களுடைய 'ரிஸல்ட்' விவரம் தெரிந்தபோது நான் இங்கிலீஷிலும் தமிழிலும்தான் 'பெயில்'. கணக்குப் பாஸ்! எப்படிக் கணக்கில் தேறினேன். ஏன் இங்கிலீஷும் தமிழும்கூடப் போய்விட்டது என்பது தெய்வத்துக்குக்கூடத் தெரியுமோ என்பது சந்தேகந்தான்......1907-ம் வருஷம் மீண்டும் 'மெட்ரிகுலேஷனுக்கு'ப் படித்தேன். முதல் ஆறுமாதம் கோயமுத்தூரில் படித்தேன். அப்போது பொள்ளாச்சியில் 'சர்க்கிள்' இன்ஸ்பெக்டராக வேலைபார்த்துக் கொண்டிருந்த என் தந்தை பிராணபாயமான நோயடைந்தார். அவருக்கு ஜோசியத்தில் வெகு நம்பிக்கை. ஜாதகம் பார்த்ததில் அப்போது அவருக்கு மிகவும் போதாத காலம் என்றும் உத்யோகத்துக்காவது உயிருக்காவது அபாயமான தசை என்று ஜோசியர்கள் சொன்னதால் உடனே என் தந்தை பென்ஷன் வாங்கிக்கொள்ள ரஜா எடுத்துக்கொண்டு நாமக்கல்லுக்கே வந்துவிட்டார். அந்தச் சமயத்தில் காட்டுப்புத்தூரில், புதிதாக அந்த வருஷந்தான் சர்க்கார் அங்கீகாரம் பெற்ற 'ஜமீன்தார் ஹைஸ்கூல்' ஸ்ரீ. பி. ஜி. சுந்தரம் ஐயர் என்ற வெகு திறமையுள்ள தலைமை உபாத்தியாயரின் கீழ் வெகு நன்றாக படிப்பு சொல்லிக் கொடுப்பதாக அந்தப் பள்ளிக்கூடத்தில் போய்ச் சேர்ந்தேன். காட்டுப்புத்தூரில் எனக்கு ஒன்றுவிட்ட சிற்றன்னையின் கணவர் ஐயாசாமி பிள்ளை என்பவர் ஜமீன்தார் வீட்டுக்

கார்யஸ்தராக இருந்தார். அவருடைய ஆதர வில் அங்கே படித்து அந்த வருஷம் 'பாஸ்' ஆனேன். 1908—1909-ல் திருச்சியில் எஸ். பி. ஜி. காலேஜில் 'எவ். ஏ.' படித்தேன். அந்த காலேஜ் இப்போது 'செயின்ட் ஹீபர் ஹைஸ்கூ'லாக இருக்கிறது. 1909-ல் எனக்கு விவாகம் நடந்தது. அதே வருஷத்தில் எனக்குக் கடுமையான காதுவலி ஏற்பட்டது. எவ். ஏ. பரிட்சைக்குச் சில நாட்களுக்கு முன்னால் காதுவலி அதிகப்பட்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். படிப்பு நின்றுவிட்டது. காது வைத்தியம் செய்து கொள்ளச் சென்னைக்குப் போனேன். சென்னையை அடுத்த பரங்கிமலையில் காட்டுப்புத்தூர் ஐயாசாமி பிள்ளை என்று முன்னே சொல்லப்பட்ட என் சிறிய தகப்பனாரின் மூத்த குமாரனை ஐயாக்கண்ணு பிள்ளை என்பவர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டராக இருந்தார். அவர் கோயமுத்தூரில் எங்கள் வீட்டில் படித்துக் கொண்டிருந்தவர். என்னுடைய படிப்பையும் ஒழுக்கங்களையும் மிகவும் கவனத்துடன் கண்காணித்து என்னிடம் மிகவும் அன்பாயிருந்தவர். அத்துடன் அவருடைய மனைவி அரியநாயகத்தம்மாள் என் மனைவியின் தமக்கை. ஐயாக்கண்ணு பிள்ளை கோயமுத்தூரில் 1903-ம் வருஷம் எங்கள் வீட்டில் படித்துக் கொண்டிருக்கும்போதுதான் புதிதாகப் போலீஸ் இலாகாவில் புகுத்தப்பட்ட 'சப்பின்ஸ்பெக்டர்' உத்யோகத்துக்கு என்னுடைய தகப்பனாருடைய சிபார்சின்மேல்

சேர்க்கப்பட்டவர். ஆகையினால் எங்களுக்குப் பலவிதத்திலும் வேண்டியவர். அதனால் பரங்கி மலையில் அவர் வீட்டில் ஜாகை வைத்துக் கொண்டு, பட்டணத்தில் டாக்டர். டி. எம். நாயரிடத்தில் காது வைத்தியம் பார்த்துக் கொண்டேன். பிற்காலத்தில் ஸர். தியாகராஜச் செட்டியாருடன் சேர்ந்து பிராம்மணரல்லாதார் இயக்கத்தை ஆரம்பித்த டாக்டர் நாயர் இவர் தான். நாயர் காது, மூக்கு, தொண்டை இவற்றைப் பற்றின வியாதிகளுக்கு நிபுணர் என்று பெயர். அவருடைய தமயனார் கோபாலன் நாயர் என்பவர் நாமக்கல்லில் 'டெபுடி-கலெக்டராக' இருந்தவர். என் தகப்பனாருக்கு ரொம்பவும் வேண்டியவர். அந்த உறவை என் தகப்பனார் சொல்லிக் கொண்டதற்காக, டாக்டர் நாயர் சிங்கம் போன்ற அவருடைய முகத்தில் சிரிப்பைக் கூட்டி என்னைச் செல்லமாகக் கவனித்து வைத்தியம் செய்தார்......... காதுவலியெல்லாம் 'தொண்டையின் கோளாறு' என்று என்னுடைய தொண்டையை மின்சாரக் கொள்ளிக் கட்டையினால் சுட்டுப் பொசுக்கினார். அதுதான் வைத்தியத்தின் ஆரம்பம். காதுவலி கொஞ்சங் கூடத் தெரியாதபடி தொண்டைவலி அதிகமாகிப் பதினைந்து நாள் கஞ்சிகூட முழுங்க முடியாமல் கஷ்டப்பட்டேன். தொண்டை ரணம் ஆறிற்று. காதுவலியும் குறைந்தது. ஆனால் அதுவரையிலும் வலியினால் கொஞ்சம் மந்தமாகமட்டும் இருந்த என் காது வலியில்லாமலும் செவிடாகிவிட்டது.

தொண்டையிலிருந்த சங்கீதக் குரலும் சத்தங் கெட்டுவிட்டது. நாலுமாதம் வைத்தியம் நடந்தது. 'சீசன் டிக்கெட்டில்' தினந்தினம் பரங்கி மலையிலிருந்து பட்டணம் போய் வருவேன். மூக்கில் ஒரு குழாயை விட்டு தினந்தினம் டாக்டர் காற்றடித்து அனுப்புவார். நாலாவது மாதக் கடைசியில் டாக்டர் நாயர் கோடைகாலத்துக்காக நீலகிரிக்குப் புறப்பட்டார். 'ஹக்ஸ்லி இன் ஹேலர்' என்ற ஒரு புகை உறிஞ்சும் கருவியை வாங்கி, தினந்தினம் இரண்டு வேளையும் அதில் சொல்லப்பட்டிருக்கிறபடி புகையை உறிஞ்சி, மூக்கை அடைத்துக் கொள்ள வேணும் என்று எனக்கு எழுதிக் கொடுத்து விட்டு, அவர் நீலகிரியிலிருந்து திரும்பி வந்த பிறகு மறுபடியும் வரச் சொன்னார். அதுவரையிலும் நடந்த வைத்தியத்தில் எனக்கு திருப்தி இல்லை. காதுவலி நின்று விட்ட ஒரு லாபம் இருந்தாலும், காது செவிடாகி விட்டதும் குரலின் குணங் கெட்டுப் போனதும் பெருத்த நஷ்டங்களாக எனக்குத் தோன்றியது. கோடைகாலத்துக்குப் பிறகு மறுபடியும் என்னை வரும்படி அவர் சொன்னபோது, "மறுபடியும் வந்தால் என் காது செவிடாகப் போனதைச்சரி செய்தே விடுவீர்களா?" என்று கேட்டேன். அவருக்குக் கோபம் வந்து விட்டது. இங்கிலீஷில், "தன் தொழிலை அறிந்த எந்த டாக்டரும் எந்த ஒரு நோயையும் சொஸ்தப்படுத்தி விடுவேன் என்று வாக்குறுதி கொடுக்கமாட்டான். என்னால் முடிந்ததைச் செய்வேன். இஷ்ட

யிருந்தால் வா. இல்லாவிட்டால் அக்கரையில்லை," என்று அவருடைய கத்தை மீசை என்னைக் குத்தி விடும் போல் என் காதுக்கருகில் கத்தினார். வருத்தத்தோடு வெளியில் வந்துவிட்டேன். நான் அவருடைய பங்களாவின் வெளிக்கதவைத் தாண்டினதும் அவருடைய பியூன் ஓடிவந்து கூப்பிட்டான். போனேன். டாக்டர் நாயர் "ராமலிங்கம் நீ மறுபடியும் வா. கவனித்து வைத்தியம் செய்கிறேன். உன்னுடைய காது சரியாகி விடும். பயப்படாதே" என்று என்னை உட்காரச் சொல்லி, கேக்கும், பிஸ்கோத்தும், பழமும் கொண்டுவரச் செய்து என்னைத் தின்னச் செய்தார். தன் பங்களாவில் எப்போதும் வைத்திருக்கிற 'ஸ்பென்ஸர் கலர்' ஒன்றையும் குடிக்கச் செய்து என்னுடைய முதுகைத் தட்டிக் கொடுத்து இன்மொழிகள் பேசி அனுப்பினார். மறுபடியும் நான் அவரிடம் போகவில்லை. நாட்டு வைத்தியம் செய்து தைலஸ்னானங்கள் பண்ணி குரலும் காதும் கொஞ்சம் குணமடைந்தன. தொண்டை ஏறத்தாழச் சரியாகிவிட்டது. காது மட்டும் பாதி செவிடாகவே நின்று விட்டது.

## உத்யோக முயற்சி.

நான் பட்டணத்திலிருந்து வருவதற்குள் என் தந்தை எனக்கு உத்யோகம் தேட ஆரம்பித்துவிட்டார். என்னையும் எப்படியாவது போலீசில் சேர்த்துவிட வேணுமென்று அவருக்கு வெகு ஆசை. எனக்கு அவர் போலீஸ் இலாகாவில் உத்யோகம் தேடிய முயற்சியைப்பற்றிச் சொல்லுமுன், கோயமுத்தூரில் நடந்த ஒரு வேடிக்கையான நிகழ்ச்சியை இங்கே குறிக்க வேண்டும்: நான் கோயமுத்தூரில் நாலாவது பாரம் படித்துக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் இரண்டுமாத ரஜாவில் போயிருந்த டவுன் இன்ஸ்பெக்டருக்குப் பதிலாக என் தந்தை இன்ஸ்பெக்டர் வேலை பார்த்து வந்தார். எங்கள் வீடு ஆரிய வைசியத் தெருவில். அதே வீதியில் ஏழெட்டு வீடுகளுக்கப்பால் டவுன் போலீஸ் ஸ்டேஷன். மாலை நேரங்களில் அடிக்கடி நான் போலீஸ் கச்சேரிக்குப் போவேன். என்னைக் கண்டதும் என் தந்தை யாரையாவது அனுப்பி எனக்கு ஏதாவது தின்பண்டங்களை வாங்கித் தரச் செய்வார். அதற்காகவே நான் போவது. அப்படி ஒரு நாள் போனேன். என் தகப்பனார் இன்ஸ்பெக்டர் உடையில் கச்சேரி வாசலில் வீதியில் நின்று கொண்டு சில வியாபாரிகளுடன் என்னமோ பேசிக்கொண்டிருந்தார். நான் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு,

அவருடைய பேச்சு சீக்கிரம் முடிந்து என்னைக் கவனிக்க மாட்டாரா என்று எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தேன்.

தெருக்கோடியில் ஒரு வெள்ளைக்கார துரை தென்பட்டார். அவர் நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். ஒரு துரையைக் கண்டால் யாருக்குமே கொஞ்சம் பயபக்தி உண்டாவது இப்போதும் உண்டு. நான் சொல்லுகின்ற நிகழ்ச்சி சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன்னால் நடந்தது. அந்தக்காலத்தில் துரை என்றாலே அச்சம் தான். அதுவும் போலீஸ்காரருக்கு துரைமாரைக் கண்டுவிட்டால் தனிப்பட்ட சுறுசுறுப்பு. துரைக்கு என்ன உத்யோகமோ, பெரிய உத்யோகத்திலிருக்கிற எந்தத் துரைக்கு என்ன சொந்தமோ என்று எண்ணி நிமிர்ந்து நின்று சரியான முறையில் 'சல்யூட்' அடிப்பார்கள்........துரை தூரத்தில் வரும்போதே என்னுடைய தகப்பனார் நான் பிடித்துக் கொண்டிருந்த அவருடைய கையை இழுத்துக் கொண்டு, தன்னுடைய சட்டையை சரிபார்த்துவிட்டு 'அட்டென்ஷ' னாக துரையை எதிர் நோக்கி நின்றார். பேசிக் கொண்டிருந்த மற்றவர்கள் விலகி நின்றார்கள். துரை வந்தார். ஸ்டேஷனுக்கு முன்னால் நின்றார். என் தந்தை சல்யூட் செய்தார். துரை தன் தொப்பியை எடுத்து பதில் மரியாதை செய்து விட்டு என் தகப்பனாரோடு ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார். என் தந்தைக்கு இங்கிலீஷ்

துளிகூடத் தெரியாது. வெறும் வாய்ப்பழக்க மாக 'குட்மார்னிங்', 'குடீவனிங்', 'எஸ்', 'நோ', 'ஆல்ரைட்', 'வெரிகுட்' என்று சில பதங்களைமட்டும் இங்கிலீஷ் தெரிந்தவரைப் போல் உச்சரிப்பார். அத்துடன் போலீஸ் ஜவான்களுக்கு 'ஆடிக்கு ஒரு முறை' 'அமா வாசைக்கு ஒரு தரம்' ட்ரில் பழக்குவதற்காக சொல்லப்படுகிற 'ரைட்டர்ண்'' 'லெவ்ட்டர்ண்', 'க்விக்மார்ச்' முதலான சொற்றொடர்களை அவர் தமிழில் படித்தபடி தப்புந் தவறுமாகச் சொல்லத் தெரியும்.........துரை என் தந்தைக்குச் சமீப மாக வந்து நின்று கொண்டு "இது தானே டவுன் போலீஸ் ஸ்டேஷன்" என்று இங்கிலீ ஷில் கேட்டார் "எஸ்ஸார்" என்று என் தந்தை துரைமார்களுடன் பழகிய வழக்கத்தால் சொன் னார். "துரைமார்கள் குடியிருக்கும் இடத்துக் கும் இந்த இடத்துக்கும் இரண்டு மைலுக்கு மேலே இருக்கும் போலிருக்கிறதே" என்றார் துரை.

"எஸ்ஸார்" என்றார் தந்தை.

"போலீஸ் ஸ்டேஷன் ஊருக்கு மத்தியில் அமைந்திருக்கிறதாகத் தோற்றுகிறது."

"எஸ்ஸார்."

"இந்த ஊரின் சீதோஷ்ண நிலைமையும் நன் றாகத் தானிருக்கிறது."

"எஸ்ஸார்."

"டவுன் இன்ஸ்பெக்டர் நீங்கள்தானே?"

" எஸ்ஸார்."

" ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீசர் யார்?"

" எஸ்ஸார்."

" ஸ்டேஷன் ஆபீசர் யாரென்று கேட்கிறேன்."

" எஸ்ஸார்."

" உமக்கு நான் சொல்வது கேட்கவில்லையா? காது மந்தமா?"

" எஸ்ஸார்."

" உமக்கென்ன பைத்தியமா? எல்லாவற்றிற்கும் 'எஸ்ஸார்' என்கிறீரே?"

" எஸ்ஸார்."

" உமக்கு இங்கிலீஷ் தெரியாதா"

" எஸ்ஸார்."

" நான்ஸென்ஸ்" என்று துரை கோபத்தோடு கச்சேரிக்குள் நுழைந்தார். இதற்குள் யாரோ உள்ளே போய்,'ரைட்டருக்குச்' சொல்லி அவர் வெளியே ஓடிவந்தார். எதிரில் வந்த அவரைப் பார்த்து துரை "உமக்கு இங்கிலீஷ் தெரியுமா?" என்றார். 'ரைட்டர்' இங்கிலீஷ் படித்தவர். "எனக்குத் தெரியும்" என்றார்' "இன்ஸ்பெக்டருக்கு இங்கிலீஷ் தெரியாதா?". என்று துரை கேட்டார். "கொஞ்சங்கூடத் தெரியாது" என்றார் ரைட்டர். "என்ன! கொஞ்சங்கூட இங்கிலீஷ் தெரியாதவரா இங்கே இன்ஸ்பெக்டர்? இந்தக் குற்றத்தை உடனே சரிப்படுத்துகிறேன்"என்று சொல்லிக்கொண்டே

கச்சேரியைச் சுற்றிப்பார்த்துவிட்டு துரை வெளியே போய்விட்டார்.

அந்தத்துரை அன்றுகாலையில்தான்கோயமுத்தூருக்கு வந்து சேர்ந்த புது போலீஸ் 'சூப்பரின்டெண்டெண்ட்' பழைய 'சூப்ரண்ட்' துரையை மாற்றிவிட அவரை வழியனுப்பியபோலீசார் புது 'சூப்ரண்ட்' வரப்போகிறார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். வழக்கமாகப் புது துரைகள் ஊருக்கு வருவதற்கு முன்னாலேயே அவர்கள் வந்து இறங்கப் போகிற தேதி, நேரம், இடம் முதலான விவரங்களைத் தெரியப்படுத்தி விட்டுத்தான் வருவார்கள். இன்ஸ்பெக்டர் தம்முடைய பரிவாரங்களுடன், மாலைமரியாதைகளோடு ரைலுக்கு போய் வரவேற்பார்கள். இந்த துரை அப்போதுதான் சீமையிலிருந்து வந்தவர். வரவேற்பு வழக்கங்களில் பழக்கப்படாதவர். எச்சரிக்கை யில்லாமல் ஊருக்கு வந்து சேர்ந்தார். வேடிக்கையாகக் கச்சேரியையும் ஊரையும் பார்க்க நடந்தே வந்துவிட்டார்... துரை கோபத்தோடு போனதில் என் தந்தைக்குப் பயம். துரை எச்சரிக்கை யில்லாமல் வந்து தணிக்கை செய்தாலும் செய்வாரென்று எதிர்பார்த்து அன்றைக்கு இரவு முழுதும் தூக்கமில்லாமல் ரிக்கார்டுகளை யெல்லாம் நேர் செய்து, துப்பாக்கி, பைனட் முதலியவற்றைத் துடைக்கச் செய்து, கச்சேரியை அழகுபடுத்திவிட்டு மறுநாட்காலையில் 'சூப்ரண்ட்' ஆபீசிலிருந்து என்ன சேதி வருமோ என்று பயத்துடன் எதிர் பார்த்

துக் கொண்டிருந்தார். எதிர்பார்த்தபடியே துரை தன்னுடைய குமஸ்தாவுடன் கச்சேரியை எச்சரிக்கை யில்லாத் தணிக்கை செய்ய வந்து விட்டார். தணிக்கையில் துரைக்குத் திருப்தி உண்டாயிற்று. கச்சேரியை மெச்சிப்பேசி அதை என் தந்தைக்கு மொழிபெயர்த்துச் சொல்லச் செய்து சந்தோஷப்பட்டார். தணிக்கை நடந்து கொண்டிருக்கும்போதே என் தந்தையினுடைய உத்தரவில் தயாரிக்கப்பட்டிருந்த மாலை, பழ வகைகள், மிட்டாய்த்தினுசுகள், காப்பி முதலிய வற்றை, துரைக்கு வழங்கி மரியாதை நடத்தினார் கள். அவற்றை யெல்லாம் திருப்தியாக ஏற்றுக் கொண்டு துரை போய்விட்டார். அதன் பிறகு என் தகப்பனுருடைய உத்யோகத் திறமையை, ஆபீஸ் ரிகார்டுகளிலிருந்தும் அதிகாரிகள் சொன் னதிலிருந்தும் அறிந்து அந்த துரை என் தந் தைக்கு மிகவும் வேண்டியவரானார். ஆறுமாதத் துக்குப் பின் அதே துரை என் தகப்பனார் கண்டு பிடித்த ஒரு முக்கியமான கேசுக்காக 'டிபார்ட் மெண்டல்' பரிசாக ரூ. 150 வாங்கித்தந்து பல் லடம் தாலுக்காவிற்கு சர்க்கிள் இன்ஸ்பெக்ட ராக ஒரு வருஷத்துக்கு 'ஆக்டிங்கு' வேலை பார்க்க உத்தரவிட்டார். அந்த துரையின் பெயர் **ராபர்ட்ஸன்**.

அந்த ராபர்ட்ஸன் துரை, நான் காது வைத் தியம் பார்த்துக்கொண்டு சென்னையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிவந்த சமயத்தில், டி. ஐ. ஜியாக (டெப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல்)

இருப்பதாக என் தகப்பனருக்குச் சேதி கிடைத்தது. அதைக் கேட்டு என் தந்தை அடைந்த சந்தோஷத்துக்கு அளவு சொல்லமுடியாது. உடனே சென்னைக்கு ஓடினர். துரையைக் கண்டு பேசினர். குதூகலத்துடன் திரும்பி வந்தார். நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆகிவிட்டதாகவே இன்பப்பட்டார். துரை என்னை நேரடியாக இன்ஸ்பெக்டர் வகுப்புக்கு எடுத்துக் கொள்வதாகச் சொன்னதாகவும், அந்த வகுப்புக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டியவர்களைப் பொறுக்கி யெடுக்கிற நாள் அடுத்தமாதம் 15-ம் தேதியென்றும், அன்றைக்கு என்னையும் கூட்டிக் கொண்டு சென்னையில் தன்னை வந்து பார்க்கும் படி துரை சொல்லியிருப்பதாகவும், என் தந்தை எல்லாரிடத்திலும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்து கொண்டிருந்தார்.

அவர் எவ்வளவுக் கெவ்வளவு சந்தோஷப் பட்டாரோ அவ்வளவுக் கவ்வளவு எனக்கு சங்கடம் உண்டாயிற்று. முதலில் வேலைக்குப் போக வேணும் என்ற எண்ணமே எனக்கு உதிக்க வில்லை. இரண்டாவது காது சரியாகக் கேளாமல் எவரிடத்திலும் ஏவல் கேட்பது கஷ்டமாக இருக்குமே என்ற கவலை. மூன்ருவது போலீஸ்வேலை எனக்குப் பிடிக்கவே இல்லை. பிடிக்காதது மட்டும் அல்ல. அந்த வேலையில் ஒருவிதமான அச்சமும் அருவருப்பும் என்னுள் இருந்து கொண்டேயிருந்தது. போலீஸ் வேலை பல பாபங்களுக்கு இடமானதென்றும் 'போக்

கிடம் அற்றவனுக்குத்தான் போலீசு' என்றும் என் தாயார் என் தந்தையுடன் அடிக்கடி விவாதித்ததெல்லாம் என் மனதில் பதிந்திருந்தன. சில சமயங்களில் நிரபராதிகளை, வெறும் போலீஸ்காரர் கோபத்துக்காக, குற்றவாளிகளோடு சேர்த்து விடுவதையும் அவர்கள் மேல் சாட்சிகளைத் தயார் செய்ய, 'இப்படிச்சொல்லு' 'அப்படிச்சொல்லு' என்று சொல்லிக் கொடுப்பதையும் என் தாயார் அடிக்கடி ஏளனம் செய்து, தந்தை சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருக்கும் சமயங்களில் இடித்துப் பேசுவதும் என் மனதில் இருந்தது. என் அன்னையிடம் பலபேர் சிபார்சுக்காக வருவார்கள். அவர்களுடைய குறைகளை ஆற அமரக் கேட்டு அவர்களுக்கு அனுகூலம் செய்ய வேண்டியது நியாயம் தான் என்று எண்ணினால் என் தாயார் அவர்களுக்காக என் தந்தையுடன் வெகுதைரியமாக வாதிப்பார்கள். என் தகப்பனார் உணவு கொண்டபின் குழந்தைகளோடு கொஞ்சுவது வழக்கம். அந்தச்சமயம் பார்த்துத்தான் என் தாயார் சிபார்சுகள் செய்வார். ஒருநாள் யாருக்காகவோ சிபார்சு பேசும் போது என் தாயார் "போலீசு வேலை பொல்லாத வேலை. நாம் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேணும். நம்ம குஞ்சு குழந்தைகள் நன்றாயிருக்கவேணுமானால் நீங்கள் மட்டும் 'அநியாயக்காரன்' 'பாவி' என்று பேரெடுத்துவிடக்கூடாது. பாருங்கள் கிருஷ்ணசாமி நாயுடு கொள்ளையடிச்சான். இப்ப அவன் குழந்தைகள் குடிக்கக் கஞ்சியில்லாமல் தவிக்

குது. நம்ம ராமராவ் ஊரை அடிச்சு உலையில் போட்டுக்கொண்டிருந்தான். அவன் குடும்பம் போன கெதியைப் பாருங்கள்" என்றெல்லாம் சொன்னது என் நினைவில் இருந்து கொண்டே இருந்தது. ஆகையினால் போலீசுக்குப் போக எனக்கு இஷ்டமே இல்லை. துரையைப் பார்க்கப் பட்டணம் போக வேண்டிய நாள் வருவதற்கு முன்னாலேயே சிறுகச்சிறுக என்னுடையகாது சரியாகக் கேட்பதில்லை என்பதையே காரண மாகச்சொல்லி வேலைக்குப்போக மனமில்லை யென்பதை என் தந்தைக்குத் தெரியப்படுத்தி னேன். ஆனால் அவர் விட்டவரல்ல. அவர் ராபர்ட்ஸன் துரை டி. ஐ. ஜியாக இருக்கிற அவ் வளவு அபூர்வமான சந்தர்ப்பத்தை விட்டுவிட் டால் பிறகு கிடைக்காதென்றும் எப்படியாவது வேலையில் ஓட்டிக்கொண்டால் காது விஷயம் பின்னால் கவனித்துக் கொள்ளலாம் என்றும் என்னை மிகவும் கெஞ்சிக் கெஞ்சி, சொல்லிக் கொண்டே வந்தார். எனக்கு அவர் சொன்னது ஒன்றும் ஏறவே இல்லை. குறிப்பிட்ட நாள் நெருங்க நெருங்க என் தந்தை இரவு பகலாக எனக்கு இதோபதேசம் செய்ய முயன்றது பெரும் இம்சையாகத் தோன்றிவிட்டது. அதனால் நாங்கள் பட்டணம் பயணமாக வேண்டிய தினத் துக்கு மூன்று நாளைக்கு முன்னால் நான் என்னு டைய வழக்கத்துக்கு விரோதமாக ஒருவருக்கும் தெரியாமல் ஊரைவிட்டே ஓடிவிட்டேன். பந் துக்கள் வீட்டுக்குப் போனால் தகப்பனார் வந்து

இழுத்துக் கொண்டுபோய் விடுவாரென்று பதி னைந்து நாள் எங்கெங்கோ சுற்றியலைந்துவிட்டுக் கரூரில் என் தமக்கை விருத்தாம்பாள் வீட்டுக் குப் போய்ச் சேர்ந்தேன்.

இதற்காக என் தந்தை நெடுநாள்வரைக்கும் வாய் வந்த மட்டிலும் என்னைப் போலீஸ் பாஷை களில் திட்டிக்கொண்டே யிருந்தார். பின்னால் நான் பா. வெ. மாணிக்கம் நாயகருடன் டில்லி தர்பாருக்குச் சென்று ஜார்ஜ் மன்னரிடம் சித்திர வித்தைக்காகத் தங்க மெடல் பரிசுபெற்று வந்த பிறகுதான் அந்தத் திட்டுக் குறைந்தது. அதற் குப்பிறகு என் சித்திரவித்தை ஜீவனத் தொழி லாகி முதல் முதலாக ஒரு பெரிய 'ஆயில் பெயின் டிங்க், வரைந்து அதற்குச் சம்பாவனையாகக் கிடைத்த ஒரு எழுநூறு ரூபாய் உண்டியலைக் கொண்டுவந்து என் தந்தையிடம் கொடுத்த பிறகுதான் அந்தத் திட்டு முற்றிலும் மறைந்தது.

சென்னையில் காதுவைத்தியம் நடந்து கொண்டிருந்தபோது என்னுடைய சித்திரப் பயிற்சிகளுக்கு வேண்டியமட்டும் அவகாசம் இருந்தது. டாக்டரிடம் போய் வருகிற நேரம் போக மற்ற நேரமெல்லாம் படம்வரைந் துகொண்டும் பாட்டெழுதிக் கொண்டுமே இருப் பேன். என்னுடைய சகலை ஐயாக்கண்ணு பிள்ளை அதற்கு மிகவும் அனுகூலமாக இருந் தார். காது வைத்தியத்துக்குப் பிறகு நாமக் கல்லிலேயே சித்திரத்தை விருத்தி செய்து கொண்டு இருந்து வந்தேன். என் தந்தை

என்னைச் சும்மா இருக்க விடவில்லை. போலீசு உத்யோகந்தான் வேண்டாமென்றாலும் வேறு எந்த சர்க்கார் உத்தியோகத்திலாவது வயசுமீறிப் போவதற்குள் நான் நுழைந்துகொள்ள வேணும் என்று என் தந்தை பட்சியாகப் பறந்தார். நேராகவும் நண்பர் மூலமாகவும் நித்த நித்தம் இதே பாடமாகச் சொல்லிக்கொண்டிருந்தார். நான் எந்நேரமும் படம் எழுதிக்கொண்டும் பாட்டுப் பாடிக்கொண்டும் பந்தாடிக்கொண்டும் இருந்தது அவருக்கு வெகு வேதனையாக இருந்தது. 'பிழைப்புக்கு வழி தேடிக்கொள்ளாமல் எவ்வளவு வித்தையிருந்தாலும் என்னத்திற்கு உதவும்' என்று இடித்துக்கொண்டே இருப்பார். அருமையாகப் பெற்று, செல்வமாக வளர்த்து நல்ல பிள்ளையென்று நம்பியிருந்த மூத்த மகன் தந்தையின் விருப்பத்துக்கு விரோதமாக இருக்கிறானே என்று அடிக்கடி எல்லாரிடத்திலும் சொல்லி ஏங்குவார். அவர் என்ன சொன்னாலும் எப்படி வைதாலும் பதிலே பேசாமல், நான் என் வழியிலேயே இருந்து வந்தேன். ஆனால் அவர் சும்மா இருக்கவில்லை. அங்கும் இங்கும் அலைந்து அப்போது நாமக்கல்லில் தாசில்தாராக இருக்க நேர்ந்த தன் நண்பரிடம் சொல்லி எனக்கு தாலூக்கா கச்சேரியில் குமாஸ்தா வேலை சம்பாதித்தார். என் நண்பர்களுடைய கட்டாயத்தின் மேல் தந்தையைத் திருப்தி செய்வதற்காக அதை ஒத்துக்கொண்டேன். மூன்று மாதம் வேலை பார்த்தேன்.

ஒரு நாள் தாசில்தார் கச்சேரியில் இல்லை யென்று, பக்கத்தில் பள்ளிக்கூடப் பையன் களுடன் பந்தாடப் போயிருந்தேன். திடீரென்று தாசில்தார் கச்சேரிக்கு வந்து எதோ ஒரு வேலைக் காக என்னைத் தேடினார். நான் கச்சேரியில் இல்லாமல் பந்தாட்டத்தில் இருப்பதை அறிந்து கூட்டிவரச் செய்து "என்னடா இன்னும் விளை யாட்டுப் பையனாகவே இருக்கிறாயே! ஆபீஸ் மூடுகிற வரையிலும், நான் இருந்தாலும் இல்லா விட்டாலும் நீ உன் மேஜையை விட்டுப் போகக் கூடாது. தெரியுமா?" என்று மிரட்டினார்...... மாலை நேரங்களில் ஏதாவது விளையாட்டில்லாமல் இருந்து வழக்கமில்லை, வேலை முடிந்து விட்டா லும் தாசில்தார் இல்லாத போதும் கூட வெளியில் போக முடியாமல் கச்சேரி நாற்காலியில் கட் டுண்டு கிடப்பது எனக்கு வெகு கஷ்டமாயிருந் தது. மற்றொருநாள் மறந்தாற் போல் பந்தாடப் போய்விட்டேன். அதை யறிந்து தாசில்தார் முன்னிலும் அதிகமாகக் கண்டித்தார். அதன் பிறகு பந்து விளையாடும் ஆசையையே விட்டு ஆபீசில் சும்மாயிருக்க நேரிடுகின்ற நேரங்களில் சித்திரம் எழுதிக் கொண்டிருக்க ஆரம்பித்தேன்.

ஒரு நாள் தாசில்தார் வெளியூருக்கு முகாம் போயிருந்தார். நான் அன்றைக்குச் செய்ய வேண்டிய கச்சேரி வேலைகளை முடித்து விட்டு என் நாற்காலியில் சும்மா உட்கார்ந்து கொண் டிருந்தேன். எனக்கு நேராக இன்னொரு மேஜை யில் வரதராஜ ஐயர் என்ற குமாஸ்தா வேலை

செய்து கொண்டிருந்தார். கொஞ்சம் வயசான வர். பெரிய குடும்பி. கள்ளங்கபடமில்லாதவர். கனத்தசரீரம். சாதாரணமாக இருக்கிறபோது இனிமையான முகம் உள்ளவர்தான். வெகு சரச மாகச் சிரித்துப் பேசுவார். ஆனால் கச்சேரி வேலையில் ரொம்பக்கவனமாக இருக்கிற போது அவருடைய உருவம் பல வேடிக்கையான விகா ரங்களைக் காட்டும். முகத்தைச் சுளிப்பார். உதட் டைப் பிதுக்குவார். பல்லைக்கடிப்பார். உருட்டி விழிப்பார். கச்சேரியே கேட்கும்படி நொச்சுக் கொட்டுவார். தனக்குத்தானே பேசிக்கொள்ளு வார். ஒரு கையில் பேனா. இன்னொரு கையில் பொடிமட்டை. நாலு வரி எழுதுவார். ஒரு சிம்டா பொடியை உறுஞ்சுவார். மூக்கில் பொடி யும் சளியும் ஒழுகிக்கொண்டேயிருக்கும். அதை இடது கையால் துடைத்து அப்படியே வேஷ்டி யில் அப்பிக் கொண்டே வேலையில் கண்ணாயிருப் பார். குறுகிப் பரட்டையான தலைமயிர் அவிழ்ந்து ஆடிக்கொண்டிருப்பதை அறியமாட்டார். அந்தச் சமயத்தில் தாசில்தார் கூப்பிட்டு விட்டால் மயிரை முடியவும் மறந்துபோய் அதன்மேல் தலைப்பாகையை மட்டும் அவசரமாக வைத்து அழுத்திக்கொண்டு ஓடுவார். அவருடைய அலங் கோலத்தைக் கண்ட யாருக்கும் பரிதாபமே உண் டாகும்......நான் சொல்லப் புகுந்த அன்றைய தினம் அவர் வெகு முக்யமான ஜாப்தா ஒன்றைத் தயார் செய்துகொண்டிருந்தார். அதற்காக ரூல் தடி. ரப்பர், பென்சில், பேனாக்கள், சிவப்பு மை

கருப்பு மை முதலான அத்தனையும் வேண்டி யிருந்தது. அவற்றை அவர் மாற்றி மாற்றி எடுத்து வேலை செய்வதும், இடையிடையே பொடி போடுவதும், சளியைத் துடைப்பதும், தலைமயிர் ஆடுவதும், தொப்பை குலுங்குவதும், வேர்வை கொட்டுவதும் எல்லாமாகச் சேர்ந்து வேடிக்கையான ஒரு படமெழுதவேண்டிய காட்சியாக இருந்தது. உடனே கச்சேரிக்காகிதப் புரையில் நான் வைத்திருந்த என்னுடைய டிரா யிங்கு நோட்டை எடுத்து வரதராஜ ஐயரை வரைந்து கொண்டிருந்தேன்.

எதிர்பாராதபடி எனக்குப் பின்னுலிருந்த கதவின் வழியாக தாசில்தார் உள்ளே நுழைந் தார். நான் படம் எழுதுவதைப் பார்த்தார். "விளையாட்டுப் பசங்களையெல்லாம் வேலையில் வைத்தால் இப்படித்தான். ஏண்டா! என்ன கொஞ்சங்கூட புத்தியில்லாதவனுக இருக்கிறாய்! படம் போட்டுக் கொண்டிருக்கவும் பந்தாடிக் கொண்டும் இருக்கிறவனுக்குக் கச்சேரி வேலை என்னத்துக்கு. இப்படியெல்லாம் செய்துகொண் டிருந்தால் உன்னை 'டிஸ்மிஸ்' செய்துவிடுவேன்". என்று சொல்லிக்கொண்டே நான் என்ன படம் எழுதியிருக்கிறேன் என்றுகூடப் பார்க்காமல் போய்விட்டார். எனக்குப் பொறுக்க முடியாத வருத்தம் வந்துவிட்டது. அவர் போன சிறிது நேரத்துக்கெல்லாம் நான் என் வேலையை ராஜி ஞமா எழுதி, அதை அவருடைய வீட்டுக்குக் கையெழுத்து வாங்கக் கச்சேரிக் காகிதங்களைக்

கொண்டுபோகிற சேவகனிடம் கொடுத்துத் தாசில்தாரிடம் சேர்ப்பிக்கச் சொல்லிவிட்டு, மேஜைச் சாவியை 'சிரஸ்தாரி'டம் கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்து என் தந்தையிடமும் சொல்லிவிட்டேன். என் தந்தை "இப்படி யெல்லாம் கோபித்துக் கொண்டால் சர்க்கார் உத்யோகம் செய்வது எப்படி? பெரிய அதிகாரி என்ன சொன்னாலும் கேட்டுக்கொள்ளத்தான் வேணும். அநியாயமாக உத்யோகத்தைக் கெடுத்துக் கொண்டாயே!" என்று என்னென்னமோ சொல்லிக்கொண்டு அன்று இரவு முழுதும் தூக்கமில்லாமல் துக்கப்பட்டுக் கொண்டிருந்தார். மறுநாள் தாசில்தாரே தம்முடைய வண்டியில் எங்கள் வீட்டுக்கு வந்தார். என் தந்தைக்கு தாசில்தார் நெருங்கிய நண்பர். என் ராஜிநாமாக் கடிதத்தைப்பற்றி என் தந்தையிடம் சொல்லி இருவருமாக எனக்குப் புத்திசொல்ல வேண்டுமென்றே தாசில்தார் வந்தார். என் தகப்பனுருடன் பேசிவிட்டு என்னைக் கூப்பிட்டு "உன்னுடைய நன்மைக்காகத்தான் உன்னைக் கண்டித்தேன். கச்சேரி வேலையைக் கவனமாக சீக்கிரம் கற்றுக்கொண்டால் நான் இங்கே இருக்கும் போதே உன் உத்யோகத்தை 'காயம்' செய்து உன்னை 'ரெவின்யூ இன்ஸ்பெக்டர்' வேலைக்கு விரைவில் தயாராக்கலாம் என்றுதான் ஆசை. நீ இப்படிச் சிறுபிள்ளைத்தனமாக ராஜிநாமா எழுதிக்கொடுத்து விட்டாயே. வா, ஏறு வண்டியிலே, சர்க்கார் வேலை கிடைப்பதென்றால்

சாமான்யமா" என்று வெகுநேரம் அறிவு கூறினார். நான் பதிலே பேசாமல் தலைகுனிந்து நின்றுகொண்டே இருந்தேன். பலமுறை என்னைக் கூப்பிட்டுப் பார்த்துவிட்டு "அவனுக்கு வேலையில் அக்கறையில்லை. அவனைக் கசக்கி என்ன பிரயோஜனம்," என்று என் தந்தையிடம் சொல்லிவிட்டுத் தாசில்தார் போய்விட்டார். என் தந்தை பட்ட பாட்டை எழுதவே முடியாது. என்னென்னவோ விதமாகவெல்லாம் சொல்லிப் பார்த்தார். நான் கச்சேரிக்குப் போகவேயில்லை. வெகுநாள் திட்டிக்கொண்டிருந்து, விட்டுவிட்டார்.

சில மாதங்களுக்குப் பிறகு நாமக்கல் 'போர்டு ஹைஸ்கூ'லைச் சேர்ந்த ஆரம்பப் பாடசாலையில் மூன்றாவது வகுப்புக்கு உபாத்தியாயர் உத்யோகம் கிடைத்தது. அதுவும் என் தந்தையின் முயற்சியே. அதை நான் ஏற்றுக் கொண்டதும் என் தந்தையைச் சந்தோஷப் படுத்தவே. அதிலும் மூன்றே மாதம்தான் வேலை பார்த்தேன். அதற்குமேல் என்னை வேலைக்குச் சிபார்சு செய்ய அப்போதிருந்த 'ஹெட்மாஸ்ட'ருக்குப் பிரியமில்லை. ஏனென்றால் என்னுடைய தீவிரவாதம் அவருக்குப் பிடிக்கவில்லை. நான் அப்போதே தீவிர வாதிகளான திலகர், லஜபதிராய் முதலானவர்களைப் பாராட்டிப் பேசுவேன். வைசிராய் கர்ஸன் வங்காளப் பிரிவினை செய்ததைக் கண்டித்து எழுந்த தேசீய உணர்ச்சியைச் சேர்ந்தவன். பாபு பெபின் சந்திரபால் சென்னையில்

செய்த ஏழு அரசியல் பிரசங்கங்களைப் பின் பற்றிப் பிரியம் காட்டினவன். 1908-ம் வருஷத்தில் சூரத்தில் பாபு ராஷ்பிஹாரி கோஷ் அவர்களின் தலைமையில் நடக்க இருந்த காங்கிரஸ் கூட்டத்தில் சர் பிரோஸஷா மேத்தா, கோகலே முதலான மிதவாதிகளுக்கும் திலகர், கபார்தே முதலான தீவிரவாதிகளுக்கும் பிளவு ஏற்பட்ட போது நான் திலகர் கட்சியை ஆதரித்தவன். எங்களுடைய தேசாபிமானப் பேச்சை நன்றாக அறிந்திருந்த அந்த ஹெட்மாஸ்டர் என்னையும் எனது நண்பர் நாகராஜ ஐயங்காரையும் 'ஹாட் பிளட்' (கொதிக்கும் ரத்தமுள்ள) என்று சொல்லுவார். அவருக்கு என்னுடைய உல்லாசமான உடைகளும், முறுக்கான நடைகளும் பிடிப்பதில்லை. அதற்காகவோ அல்லது வேறு எதற்காகவோ அடுத்தபடி காலியான உபாத்தியாயர் ஸ்தானத்துக்கு நான் லாயக்குள்ளவனாகக் காத்திருந்தும் சிபார்சு செய்யவில்லை.

அதன் பிறகு வீட்டில் சித்திரம் எழுதிக் கொண்டு வேறு வேலைக்குப் போகாமல் இருக்க நேர்ந்தது. அப்போது என்னுடைய சித்திரங்கள் என் நண்பர்களுடைய கவனத்தைக் கவர்ந்தன. என்னுடைய பால்ய சிநேகிதரான ஸ்ரீநாகராஜ ஐயங்கார் அப்போதுதான் வக்கீல் பரீட்சை தேறி விட்டு நாமக்கல்லில் தொழில் ஆரம்பிக்கப் போகிறார். அவர் நல்ல கலாரஸிகர். என்னுடைய சித்திரத் திறமையை மிகவும் வியந்து புகழ்ந்து மேலும் மேலும் உத்ஸாகம் ஊட்டி, 'சித்திர

வித்தை மிகவும் அபூர்வமானது, அதைத் தொழி லாக மேற்கொண்டால் மிகவும் மேன்மையடைய லாம்' என்ற உணர்ச்சியை எனக்கு முதன்முதல் உண்டாக்கியவர் நாகராஜ ஐயங்கார்தான். நாக ராஜ ஐயங்காருடைய முயற்சியால் வருஷா வரு ஷம் நாங்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ ருடைய ஜயந்தி விழாவை அன்னதானத்துடன் நடத்தி வந்தோம். 1910-ம் வருஷ ஜயந்தி விழா வில் பரமஹம்ஸருடைய உருவப்படத்தை ஊர் வலம் கொண்டு போவதென்று தீர்மானித்து அதற்காக ஒரு பெரிய படம் எழுதும்படி என்னை ஏவினார்கள். நான் முதன்முதல் வரைந்த அவ்வளவு பெரிய படம் அதுதான். அது பார்த் தவர்களெல்லாம் பாராட்டத்தக்கதாக அமைந் தது. அதற்குப்பின் ஸ்ரீ விவேகானந்தர், திலகர், அரவிந்தகோஷ், லஜபதி ராய் முதலான பல படங்களைப் பொது இடங்களுக்காக வரைந்தேன். அந்தச் சமயத்தில் எங்களுக்கு ஆசானாக இருந்த ஸ்ரீ வி. லக்ஷ்மண ஐயர் என் பவர் 'பென்ஷன்' பெற்று வேலையிலிருந்து விலக நேர்ந்தது. அவருக்குப் பிரிவு உபசாரம் நடத்தி அவருடைய ஞாபகார்த்தமாக அவருடைய படம் ஒன்று பெரிதாக வரைந்து நாமக்கல் 'டவுன் ஹாலில்' வைப்பதென்று தீர்மானித் தோம். அந்தப் படத்தை என்னை எழுதச் சொன் னார்கள். தொழில் போல நான் முதலில் எழுதிய படம் அதுதான். அந்தப் படமும் மிகவும் மெச் சத்தகுந்ததாக அமைந்தது. அதற்குத் திறப்பு



கோகலே :—மிகச் சிறந்த, திறமையுள்ள இந்தியர்கள்கூட சர்க்கார் உத்யோகத்தில், ஆங்கிலேயர்களைக் காட்டிலும் ஏன் மட்டமாக மதிக்கப்படுகிறார்கள்?

மாக்டனால்ட் :—நான் என்ன செய்யட்டும்? நீங்கள் ஆங்கிலேயர்களைப்போல் வெள்ளையாக இல்லையே!

விழா வெகு சிறப்பாக—பழைய மாணவர்களும் புதுமாணவர்களும் சேர்ந்து—நடத்தினார்கள். அப்போதுதான் என்னுடைய சித்திரத் திறமை விளம்பரம் பெற்றது.

கருப்பு-வெள்ளையாக வெறும் கருப்பு 'சாக்' பென்சில்களைக் கொண்டு நான் வரையும் படங்கள் 'போட்டோ புரோமைட் பேப்பரில்' எந்திரத்தால் 'என்லார்ஜ்' செய்யப்பட்ட படங்களைக்காட்டிலும் நன்றாக இருக்கும். கையால் எழுதப்பட்டதென்று நம்பமுடியாதபடி அவ்வளவு நயமாக இருக்கும். அதற்காக நான் ஒவ்வொரு படத்தின் மூலையிலும் கையால் வரையப்பட்டது—வி. ஆர். லிங்கம்' என்று இங்கிலீஷில் கையெழுத்துப் போடுவேன்.

## ஒரு அதிர்ஷ்டம்

சிம்சன் என்கிறவர் ஒரு ஆங்கிலேயர். அவர் டி. பி. டபள்யூ பெரிய எஞ்சினியர். நாமக்கல்லுக்கு உத்யோக முறையில் முகாம்வந்து முசாபரி பங்களாவில் தங்கியிருந்தார். அவர் ஒருநாள் சாயங்காலம் நாமக்கல் 'டவுன் ஹாலு'க்குள் நுழைந்தார். நான் வரைந்த, லக்ஷ்மண ஐயருடைய படம் அங்கே இருந்தது. அது அவர் கண்ணைக் கவர்ந்தது. கிட்டப்போய் படத்தைப் பார்த்தார். படத்தின் மூலையில் 'கையால் வரையப்பட்டது' என்று எழுதியிருந்ததைப் பார்த்தார். "இது கையால் எழுதப்பட்டதா?" என்று

அங்கிருந்தவர்களைக் கேட்டார். 'ஆம்' என்று பதில் வந்தது. "இந்தப் படத்தை எழுதினவர் எந்த ஊர்?" என்றார். "இந்த ஊர்தான் என்று யாரோ சொன்னார்கள். ஓவர்சியரை வீட்டு என்னை அழைத்துவரச் சொன்னார். அன்றைக்கு நான் அகப்படவில்லை. மறுநாள் 'ஓவர்சியர்' எங்கள் வீட்டிற்கு வந்து இஞ்சினியர் துரை என்னைக் கூப்பிடுவதாகச் சொன்னார். 'துரை' என்றவுடன் எனக்குத் துணுக்கம் உண்டாயிற்று. டவுன் ஹாலில் முதல்நாள் நடந்ததையெல்லாம் ஓவர்சியர் சொன்னார். துரை என்னைப் பார்க்க மிகவும் பிரியப்படுவதாகவும், எதற்காக என்பது தனக்குத்தெரியாதென்றும் சொல்லி அழைத்தார். நான் பதில் சொல்லுவதற்குள் என் தகப்பனார் "பெரிய இஞ்சினீயர்! அதுவும் துரைமகன். உன் மேல் பிரியப்பட்டு அழைக்கிறாராம். போ, போ, உடனே புறப்படு அவருடைய தயவு கிடைத்தால் நல்ல உத்தியோகம் கிடைத்தாலும் கிடைக்கும். 'இச்சிபெட்டின வாடுகு இஞ்சினீயர் டிபார்ட் மெண்ட்' என்பார்கள்" என்று என்னை முடுக்கினார். நானும் புறப்பட்டேன். துரையைப் பார்க்கப் போவதென்றால் அப்படியே போகலாமா? காலர், நெக்டை, குல்லாய் எல்லாம் பூட்டிக்கொண்டு 'நாகரீகமாக'ப் போனேன்...... துரை மிகவும் இனிய முகத்தோடு என்னைக் கைகுலுக்கி வரவேற்றார். ஒரு நாற்காலியைக் காட்டி உட்காரச் சொன்னார். அது எனக்கு அதற்கு முன்னால் ஏற்படாத அனுபவம். துரை

என்ருல் தூர நின்று ஒதுங்கிப் பதுங்கி சலாம் போடுவதைத்தான் கண்டிருந்தேன். துரை நான் 'ஆர்ட்டிஸ்டா ?' (சித்திரக்காரஞ) 'போட்டோ கிராப்பரா ?'' என்று கேட்டார். நான் 'ஆர்ட்டிஸ்ட்' என்று சொன்னேன். டவுன் ஹாலில்தான் பார்த்த (லக்ஷ்மண ஐயர்) படம் என்ன காகிதத்தின் மேல் வரையப்பட்டிருக்கிற தென்று கேட்டார். உடனே நான் 'வாட்மன் டபிள் எலிபெண்ட் ரவ் பேப்பரின்'மேல் வெறும் கரிப்பொடியால் எழுதப்பட்டது என்றேன். அவர் இஞ்சினியர் ஆனதால் அந்தக் காகிதத்தின் பெயரையும் கரிப்பொடியால் சித்திரம் வரை வதையும் அறிந்தவர். "அப்படியா? அந்தப் படத்தின் 'வினிஷ்' (தீர்மானத்தின் நயம்) வெகு நன்ருயிருக்கிறது'' என்று என்னை மெச்சிப் பேசிக்கொண்டே தன்னுடைய கைப் பெட்டியைத் திறந்து ஒரு சிறு போட்டோ படத்தை எடுத்து என்னிடம் கொடுத்தார். அது கைக் காமிராவினுல் எடுக்கப்பட்ட ஒரு சிறுபடம். படத்தில் சுமார் நாலுவயதுள்ள ஒரு அழகான குழந்தை இறந்துபோய் இருந்தது. உயிருள்ள போது உட்காருவதைப்போல நாற்காலியில் உட்கார வைத்து எடுத்த படம். துக்கம் மிகுந்த குரலில் துரை அந்தப் படத்தைப்பற்றிச் சொன்ஞர்

"இது என்னுடைய ஒரே குழந்தையின் படம். ஒன்பது மாதத்துக்கு முன்ஞல்தான் தாயும் குழந்தையும் சீமையிலிருந்து இந்தியா விற்கு வந்தார்கள். நாலுமாதத்துக்கு முன்ஞல்

திடீரென்று குழந்தை இறந்துவிட்டது. இந்த அழகில் அந்தக்குழந்தையின் வேறுபடம் ஒன்றும் இல்லை. சிறு வயதில் சீமையில் எடுத்த படங்களில் ஒன்ருவது சாவதற்குமுன் குழந்தைக்கிருந்த அழகையாவது அடையாளத்தையாவது காட்டக்கூடியதாக இல்லை. இறந்தபிறகு எடுத்த தாஞலும் இந்த போட்டோவில் அடையாளம் சரியாக அமைந்திருக்கிறது. ஆஞல் அந்தக் குழந்தையின் அபூர்வமான ஒருவித சிரிப்பும் ஜீவனும்தான் இந்தப் படத்தில் இல்லை. இதை நாலைந்து பேர்களிடத்தில் கொடுத்து கண்ணைத் திறந்து 'என்லார்ஜ்' செய்யச் சொன்னேன். ஒன்ருவது சரியாக வரவில்லை. எனக்கும் கொஞ்சம் சித்திரவேலை தெரியும். நானே ஒரு என்லார்ஜ்மெண்டின்மேல் வேலை செய்து பார்த்தேன். வரவில்லை, நான் வாயாற் சொல்லப்போகிற குறிப்புகளை மனதில் வைத்துக்கொண்டு கண்களின் சரியான வடிவத்தையும், உதட்டில் அந்த அபூர்வ புன்சிரிப்பையும் யாராவது ஒரு சித்திரக்காரர் முயற்சி செய்தால் முடியும் என்று எண்ணிக்கொண்டே இருந்தேன். நீங்கள் எழுதிய படத்தைப் பார்த்து ஒருக்கால் உங்களால் என் கோரிக்கை பூர்த்தியாகலாம் என்று எண்ணினேன். முயற்சி செய்வீர்களா ?" என்ருர். நான் சிறிதும் தயங்காமல் "செய்கிறேன்" என்று சொன்னேன். "ரொம்ப வந்தனம்" என்று சொல்லிவிட்டு, அந்தப் படத்தை என்னிடத்திலிருந்து வாங்கித் தன்கையில் வைத்துக்கொண்டு

செய்யவேண்டிய மாறுதல்கள் இன்னின்னபடி இருக்கவேண்டும் என்பதைத் திருப்பித் திருப்பி என்க்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது போலச் சொன்னார். நானும் அவற்றைக் கவனத்தோடு மனனம் செய்துகொண்டேன். படம் 15×12 அங்குல அளவில் இருந்தாலும் போதும் என்றார். எல்லாம் சொல்லி முடிந்த பிறகு "அதற்கு என்ன 'சார்ஜ்' (விலை) ஆகும்" என்றார். எனக்கு அந்நாள் வரையிலும் 'சார்ஜ்' பேசி அனுபவம் இல்லை. அந்த அளவு படத்துக்கு அவர் சொல்லுகிற வேலைக்கு மற்ற தொழிலாளிகள் என்ன கூலி கேட்பார்கள் என்பதை நான் காதாறக்கூடக் கேட்டதில்லை. நான் விலை சொல்லத் தெரியாமல் விழித்தேன். துரை இரண்டு மூன்றுதரம் கேட்டார். நான் அது வரையிலும் அந்தமாதிரி வேலை செய்ததில்லையென்றும் என் சித்திரவேலையைத் தொழில் முறையில் இன்னும் ஆரம்பிக்கவில்லையென்றும் என் நிலைமையை உள்ளபடி சொல்லிக் கடைசியாக "படம் சரியாக அமைந்தால் தாங்கள் சந்தோஷத்துடன் என்ன கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்றேன் "சந்தோஷத்துக்காக எவ்வளவு வேணுமானாலும் தரலாம். அது பின்னால். இப்போதைக்குச் செய்கிற வேலைக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைப் பேசிக்கொள்வதுதான் நல்லது. அதுதான் நல்ல பழக்கம். நான் ஐம்பது ரூபாய் தருகிறேன். போதுமா? என்றார் துரை. ஐம்பது ரூபாய்! அது எனக்குப்

பெருந் தொகையாகவே தோன்றியது. தாலுகா கச்சேரியில் மூன்றுமாதம் உத்யோகம் பண்ணி னேன். மூன்று மாதத்துக்கும் சேர்த்து நாற்பத் தைந்து ரூபாய்தான் சம்பளம் (அப்போது குமாஸ்தா வேலைக்குச் சம்பளம் மாதம் 15 ரூபாய்தான்). வாத்தியார் வேலையில் வாங்கினது அதேதான். அது வரையில் எழுதிக்கொடுத்த மற்ற படங்களுக்கும் இருபது ரூபாய்க்கு மேல் எவரும் கொடுத்ததில்லை. ஐம்பது ரூபாய் நல்ல கூலியென்றே நினைத்து நான் உடனே ஒத்துக் கொண்டேன். படத்தை எழுதிமுடிக்க இருபது நாள் வாய்தாக் கொடுத்து, அதற்கப்பால் நாமக் கல்லுக்கு மறுபடியும் முகாம் வருவதாகச் சொல்லிவிட்டு "ஏதாவது அட்வான்ஸ் வேண் டுமா?" என்றார் துரை. வேண்டாமென்று சொல்லிவிட்டு படத்தை மட்டும் வாங்கிக் கொண்டு விடைபெற்று வீட்டுக்குப் போனேன்.

பெரிய இஞ்சினியர் துரையுடன் பேசப் போன என்னை என் தந்தை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தார். நான் வந்தவுடன் விசாரித் தார். நான் எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னேன். "இந்த ஐம்பது ரூபாய் எத்தனை நாளைக்கு உதவும்? துரையிடம் ஏதாவது உத் யோகம் கேட்கிறதுதானே?" என்றார் தந்தை. நான் முகத்தைச் சுளித்து முணகினேன். தகப்ப னார் மிகவும் சலித்த குரலில் "சரி.........கிழவன் பேச்சு கிண்ணாரத்துக்கு ஏறுமா?.........என்ன இருந்தாலும் இதெல்லாம் ஒரு சர்க்கார் உத்யோ

கத்துக்கு ஈடாகுமா! பேசாமல் முப்பது நாளைக் கணக்கெண்ணிவிட்டு சம்பளத்தை வாங்கிக் கொண்டு சிவனேண்ணு இருக்கக்கூடிய வேலையை வேண்டாமென்று விட்டுவிட்டு........ சரி...... படத்தையாவது கவனித்து எழுதுபோ." என்ருர். நான் என் அறைக்குச் சென்றேன். சிறிது நேரத்தில் என் தந்தை கையில் ஒரு பஞ் சாங்கத்துடன் என் அறைக்குள் வந்தார். அவருக்கு நாள்நட்சத்திரத்தில் வெகு நம்பிக்கை. வேளைநேரம் பார்க்காமல் எந்த வேலையும் ஆரம்பிக்கமாட்டார். படம் எழுத ஆரம்பிப்பதற்கு அடுத்த வெள்ளிக்கிழமை நல்ல நாள், பூர நட்சத்திரம். எப்பப் படமெழுத ஆரம்பித்தாலும் பூர நட்சத்திரத்தைப் பார்த்து ஆரம்பி...தெரியுமா?" என்ருர். நானும் சம்மதித்தேன். நட்சத்திரங்களைப்பற்றிய விசாரம் எனக்கு இல்லையென்ருலும் என்னுடைய தகப்பனருடைய திருப்திக்காக அவர் சொன்ன நேரத்தில் படத்தை ஆரம்பித்தேன்—அந்தப் படத்துக்குப் பிறகும் நான் வரைந்த எல்லாப் படங்களையும் என் தந்தையின் நினைவிற்காக வேனும் பூர நட்சத்திரத்திலே தான் ஆரம்பிப்பேன். அப்படித்தான் எல்லாரும் செய்ய வேணும் என்பதற்காகச் சொன்னதல்ல. நான் அப்படிச் செய்தேன்.

என்னுடைய சித்திரத் திறமைகளையெல்லாம் கூட்டித் தீட்டிக் கொண்டு துரையிடத்தில் நல்லபேர் வாங்கவேண்டுமே என்ற அபிலாஷையுடன் வெகு கவனிப்பாக வேலையைத் துவக்

கினேன். துரை சொன்ன குறிப்புகளையெல்லாம் திருப்பித்திருப்பி நினைத்துப் பார்த்துப் பார்த்து சுமார் பத்து நாளில் படத்தை ஒருவாறு முடித்தேன். அடுத்த ஒருவாரம் முழுதும் அடிக்கடி அதைச் சரிபார்த்து அப்போதைக்கப்போது தோன்றுகின்ற சிறுசிறு திருத்தங்களை என்னுடைய மனோதர்மம் இடங்கொடுத்தவரையிலும் செய்து கொண்டேயிருந்தேன். இதற்குமேல் ஒன்றும் செய்யக்கூடாது' என்று தோன்றியபின் அதை முறைப்படி ஒரு உயர்ந்த அட்டையில் ஒட்டி, பூச்சியரித்துவிடாதபடி மெல்லிய காகிதத்தால் மூடி நாற்புறமும் பின்பக்கத்தில் ஒட்டி பத்திரப்படுத்திக் கொண்டு துரையின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

துரை சொல்லிப்போன தேதியில் மாலை 5-30 மணிக்கு ஓவர்சியர் வந்து துரை வந்து விட்டதாகச் சொல்லி என்னைப் படத்தோடு வரச்சொன்னாரென்றும் அழைத்தார். உடனே என் உடைகளை மாற்றிக் கொண்டு படத்தை இரண்டு அட்டைகளுக்கிடையில் வைத்துக் கட்டி எடுத்துக்கொண்டு பங்களாவிற்குப் போனோம். துரை எங்களை எதிர்பார்த்துக் கொண்டு தாழ்வாரத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்திருந்தார். முன்போலே எழுந்து கை குலுக்கி என்னை வரவேற்றார். படத்தை வாங்கினார். உள்ளே கொண்டுபோய் அதை வைத்து விட்டு வெளியில் வந்து ஓவர்சியருக்கு உத்யோக சம்பந்தமான ஏதோ அவசர வேலை சொன்னார்.

ஓவர்சியர் போய்விட்டார். என்னை உட்காரச் சொல்லிவிட்டு விளக்குக்காகக் காத்திருந்தார். விளக்கு வந்தது. துரை உள்ளே போனார். நானும் போனேன். கட்டுகளை நீக்கிப் படத்தை எடுத்தார் மேஜையின்மேல் வைத்தார். எட்ட நின்று கொண்டு சுமார் இரண்டு மூன்று நிமிஷம் படத்தையே பார்த்துக் கொண்டு நின்றார். முன்னால் போனார். பின்னே சென்றார். விளக்கை எடுத்து வேறு இடத்தில் வைத்துப் படத்தைப் பார்த்தார். விளக்கை இன்னொரு இடத்தில் வைத்துப் பார்த்தார். அறையை விட்டு வெளியிற் சென்று தூரத்தில் நின்று கொண்டு பார்த்தார். மீண்டும் உள்ளே வந்து படத்தின் வெகு சமீபத்தில் நின்று அண்ணாந்துகொண்டு ஆலோசித்தார். சுமார் பதினைந்து நிமிஷம் இப்படியெல்லாம் பார்த்துக்கொண்டே இருந்தார். என்னிடத்தில் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. முகத்திலும் சந்தோஷக் குறிகள் காணப்படவில்லை. கண்ணையும் முகத்தையும் அடிக்கடி சுருக்கிக் கொண்டு படத்தைப் பார்த்த போது அது அதிருப்தியினால் சுளித்துக் கொண்டதோ என்றுகூட எனக்குத் தோன்றியது. 'படம் சரியாக அமையவில்லை போல் இருக்கிறது' என்ற திகில் எனக்கு வந்துவிட்டது. என் ஆசைகளெல்லாம் குலைய ஆரம்பித்தன். நான் போட்டிருந்த திட்டங்களெல்லாம் கெட்டுப் போனது போல ஒரு ஏக்கம் மனதில் எழுந்தது, என் மனக் கோட்டை இடிந்து விடும் போல் இருந்தது.

படத்தை பார்த்துக்கொண்டே மெள்ள நடந்து துரை என்னருகில் வந்தார். என்னுடைய இடது தோளின் மேல் அவருடைய வலது கையை வைத்துக் கொண்டு நின்றபடியே என்னிடம் ஒன்றும் பேசாமல் கொஞ்சநேரம் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். அப்போதும் அவர் முகத்தில் துன்பக் குறியே தோன்றிற்று. இன்பக் குறி சிறிதும் இருக்கவில்லை. என்னுடைய நெஞ்சு அவல் இடிப்பது போல அடித்துக்கொண்டது, மூச்சு முடுகி வந்தது.......

அடுத்த நிமிஷத்தில் துரை என் இரண்டு தோள்களையும் பிடித்து மெதுவாகக் குலுக்கி, என் முகத்துக்கு நேராகத் தன் முகத்தை வைத்துக் கொண்டு "நீங்கள் அதிசயிக்கத் தகுந்த வெற்றியடைந்து விட்டீர்கள். என் குழந்தையை இங்கே பார்க்கிறேன். அந்தக் கோணலான புன்சிரிப்பு அப்படியே அமைந்து விட்டது. கண்ணில் ஜீவன் ஜொலிக்கிறது. படத்தைப் பார்க்கப் பார்க்க துக்கம் பொங்கி வருகிறது. என்னுடைய மனைவி இதைப் பார்த்தால் அழுதேவிடுவாள்...........நான் உங்களை மிகவும் பாராட்டுகின்றேன். நீங்கள் வெகு இளைஞர். உங்களுடைய வருங்கால வாழ்வு மிகவும் சிறப்புடையதாக இருக்குமென்று நம்புகின்றேன். உங்களுக்கு நல்வாழ்வு கூறுகின்றேன்." என்று என்னை ஒரு நாற்காலியில் உட்காரச்சொல்லித் தானும் உட்கார்ந்து கொண்டு படத்தைப் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியுற்றார்.

திடீரென்று எழுந்து "ஓ! உங்களுக்குப் பணம் கொடுக்க மறந்துவிட்டேன்." என்று தன் கைப்பெட்டியைத் திறந்து ஒரு பெரிய 'மணி பர்ஸை' எடுத்தார். "உங்கள் வேலைக்கு ஐம்பது ரூபாய் பத்தாது. அதிகம் கொடுக்க ஆசைப் படுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே மணி பர்சிலிருந்து ஒரு கத்தை நோட்டுகளை எடுத்து என்கையிற் கொடுத்துவிட்டு மறுபடியும் படத் தண்டை போய்விட்டார். அதிகமாக எவ்வளவு கொடுத்திருக்கிறார் என்பதை உடனே அறிய ஆவல்கொண்டு நோட்டுகளை எண்ணினேன். அந்தக் கத்தையின் மேலாகக் கண்ணிற்பட்டது பத்துரூபாய் நோட்டுகள்தான். எண்ணிப் பார்க்க விரித்த உடன் கத்தையின் மத்தியில் சில நூறு ரூபாய் நோட்டுகளும் இருந்தன. என் கண்களை யும் நம்பாமல் திருப்பி திருப்பிப் பார்த்தேன்; உள்ளே இருந்தவை உண்மையாகவே நூறு ரூபாய் நோட்டுகள் தான். எண்ணினேன். பதி னேழு பத்துரூபாய் நோட்டுகளும், ஒரு ஐந்து ரூபாய் நோட்டும் ஐந்து நூறுரூபாய் நோட்டு களும் இருந்தன. எல்லாம் சேர்ந்து அறுநூற்று எழுபத்தைந்து ரூபாய்! அப்பாடா! அத்தனை யுமா எனக்கு! ஐம்பது ரூபாய் கொடுக்க வேண்டிய வேலைக்கு, எவ்வளவு சந்தோஷம் வந்து விட்டாலும்தான் என்ன அறுநூற்று எழு பத்தைந்து ரூபாயா அதிகம் கொடுப்பார்கள்! அதுவரையிலும் அவ்வளவு ரூபாயைத் தொட் டுக்கூடப் பார்த்தறியாத எனக்குத் திகைப்பும்

கொஞ்சம் திகிலும்கூட வந்துவிட்டது. துரை சோதிக்கிருரோ என்று எண்ணினேன். அதை அப்படியே ஜோப்பில் போட்டுக்கொள்ள ஆசை வந்தது. ஆசையை அறிவோ பயமோ தடுத்தது. விவரிக்க முடியாத ஏதேதோ எண்ணங்கள் என் மனதில் தோன்றிக் கடைசியில் ஜோப்பில் போட்டுக் கொள்ளத் தைரியம் வராமல், அந்த நோட்டுகளை முன்னிருந்தபடியே மடக்கி எதிரிலிருந்த நாற்காலியின்மேல் வைத்துவிட்டு, துரையைப் பார்த்தேன். அவர் என்னைக் கவனிக்காமல் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். சிறிது நேரங் கழித்து திரும்பிப் பார்த்து, "திருப்திதானே?" என்ருர். நான்பதில் சொல்லாமல் ஓர் சங்கடச் சிரிப்புடன் எழுந்து நின்றேன். எனக்குத் திருப்தியில்லையோ வென்று எண்ணி அவர் என்னருகில் வந்தார். நோட்டுக் கத்தை என் கையிலில்லாமல் எதிரிலிருந்த நாற்காலியின் மேல் கிடப்பதைக் கண்டார்.

"ஏன்? போதாதோ? வேணுமாஞல் இன்னும் சேர்த்துத்தருகிறேன்" என்ருர்.

"அதிலிருக்கிற அத்தனையுமா எனக்கு?" என்றேன்.

"ஆம், அத்தனையும் உங்களுக்குத் தான் எடுத்துக் கொள்ளுங்கள்" என்ருர்.

"ரொம்ப அதிகமாக இருக்கிறதே!" என்றேன்.

ஓ! அதற்காகவா தயங்குகிறீர்! அப்படி

யொன்றும் ரொம்ப அதிகமாக நான் கொடுத்து விடவில்லையே. நூற்று இருபத்தைந்து ரூபாய் தானே அதிகம்? பரவாயில்லை. அது எனக்குப் பிரமாதமில்லை. நான் சந்தோஷமாகத்தான் தருகிறேன். எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

"இல்லையே; அதற்குமேல் ரொம்ப அதிகமாக இருக்கிறதே" என்றேன்.

"ஓ, அப்படியா? எவ்வளவிருக்கிறது?" என்று நாற்காலியின் மேற் கிடந்த நோட்டுக் கத்தையை எடுத்து எண்ணிப் பார்த்தார். கலகலவென்று சிரித்துவிட்டு, "ஓ, நீங்கள் வெகு அதிர்ஷ்டசாலியாக இருக்கிறீர்கள்," என்று சொல்லிக் கொண்டே மணிபர்ஸை மறுபடியும் எடுத்து அதில் இன்னொரு அறையில் இருந்த வேறொரு கத்தை நோட்டுகளை இழுத்தார். அதிலும் பதினேழு பத்து ரூபாய் நோட்டுகளும் ஒரு ஐந்து ரூபாய் நோட்டும் இருந்தன. நூறு ரூபாய் நோட்டு ஒன்றுகூட அதில் இல்லை. சிரித்துக் கொண்டே துரை சொன்னார்," இந்த நோட்டுக் கத்தைகள் உங்களுக்காக வைக்கப்பட்டதல்ல. வேறு இரண்டு பேருக்கு ஆளுக்கு நூற்று எழுபத்தைந்து ரூபாய் அனுப்ப வேணும். அதற்காக நூற்றெழுபத்தைந்து ரூபாய் அடங்கிய இரண்டு கத்தைகளை நான்தான் வெவ்வேறு அறையில் வைத்தேன். ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளைத் தனியே வைக்க எண்ணி எடுத்து ஏதோ மறதியினால் இந்தக் கத்தைக்குள் வைத்துவிட்டேன்

போல் இருக்கிறது. உங்களுடைய அதிர்ஷ்டம்! அந்தக் கத்தை உங்களுக்குக் கிடைத்தது." என்று சொல்லி முன்னே கொடுத்தபடியே அந்த 675 ரூபாய் கத்தையை அப்படியே மறுபடியும் என்னிடம் நீட்டினார். நான் அதை வாங்கிக் கொள்ளத் தயங்கினேன். "அதை உங்களுக்குத் தந்துவிட வேணும் என்பது தெய்வ கட்டளை போல் இருக்கிறது. அந்தக் கட்டளைக்கு நாம் இருவரும் கீழ்ப்படியவேணும். நான் சந்தோஷ மாகத் தருகிறேன். நீங்களும் சந்தோஷமாக வாங்கிக்கொள்ளுங்கள்" என்று என் கையில் வைத்தார். நான் வர்ணிக்க முடியாத சந்தோஷத் தோடு வாங்கிக் கொண்டேன். அந்தச் சமயத்தில் 'பட்லர்' அறைக்குள் வந்தான். முன்னே விளக் கைக் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போன வன் இதுவரையிலும் சமைத்துக்கொண்டிருந் தான். சாப்பாடு பரிமாறலாமா என்று கேட்க இப்போது வந்தான். படத்தைப் பார்த்தான். வந்த காரியத்தை மறந்துவிட்டுப் படத்தின் முன் னால் நின்று விட்டான். 'பட்லர்' அந்தக் குழந்தை யோடு வெகு அன்பாகப் பழகினவன். ஆசை யோடு படத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பட் லரைப் பார்த்து துரை, 'படம் எப்படி யிருக் கிறது,' என்று கேட்டார். பட்லர் தன்னுடைய கொச்சை இங்கிலீஷில் என் வேலைக்கு வெகு நல்ல மதிப்புரை சொன்னான்.

வெகு சந்தோஷமாக விடைபெற்றுக் கொண்டு, அடக்கமுடியாத வெற்றிவெறியுடன்

வீட்டுக்கு வந்தேன். வரும்போதே அவ்வளவு பணத்தையும் என்ன செய்வதென்று மனதிலேயே திட்டம் போட்டுக் கொண்டு வந்தேன். வெகு நாளாக எனக்கு ஒரு ஆசை, உயர்ந்த சாயப் பெட்டியையும், வர்ணக் கோல்களையும், சித்திர வேலைக்கு வேண்டிய மற்ற கருவிகளையும் வாங்கி 'ஆயில் பெயின்டிங்' செய்து பழகவேணும் என்பது. சர்க்கார் உத்யோகத்துக்குப் போகாமல் நான் சித்திரம் எழுதிக் கொண்டிருப்பதில் துளிகூட விரும்பாத என் தந்தையிடம் அந்தக் கருவிகளை வாங்கப் பணம் கேட்கத்தைரியம் வராமலேயே இருந்து விட்டேன். தெய்வாதீனமாகக் கிடைத்த இந்தப் பணத்தில் அந்த ஆசையைத் தீர்த்துக் கொள்வது என்ற தீர்மானத்துடன் வீட்டுக்குள் நுழைந்தேன். என்னை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த என் தந்தை "துரை என்ன சொன்னார்" என்றார். "துரை வெகுநல்ல வெகுமதி செய்தார்" என்று சொல்லி முன்னாலேயே தனியாக எடுத்து வைத்திருந்த—அந்த வேலைக்கு துரை எனக்குக் கொடுக்க எண்ணியிருந்த—நூற்று எழுபத்தைந்து ரூபாயையும் என் தந்தையிடம் கொடுத்தேன். எண்ணிப் பார்த்து வெகு அதிசயப்பட்டு ஆனந்தமடைந்து விட்டார். 'தெய்வ கட்டளை' யாகக் கிடைத்த ஐந்நூறு ரூபாயை நானே வைத்துக் கொண்டு எனக்கு வேண்டிய எல்லா சித்திரச் சாமான்களையும் ஒவ்வொன்றாக வாங்கினேன். அதற்கெல்லாம் 'பணம் ஏது' என்று கூட என்

தந்தை சில சமயங்களில் சந்தேகித்த துண்டு. அப்போது அவருக்கு ஒன்றும் பதில் சொல்வ தில்லை. வெகுநாளைக்குப் பிறகு என் தந்தை வேறு ஒரு விஷயமாக என்னிடம் சந்தோஷமாக இருந்த வேளையில் துரை கொடுத்த 675 ரூபா யைப் பற்றிய விவரமெல்லாம் வெளியிட்டேன்.

சிம்சன் துரை எனக்குச் செய்த சிறப்புதான் என்னுடைய சித்திர வேலையைத் தொழிலாக ஸ்திரப்படுத்தி விட்டது. நான் மாணுக்கனாக இருந்த போது என் சித்திர வித்தையை மெச்சி ஆதரித்த பிரின்ஸிபால் எலியட் துரையையும் இந்த சிம்ஸன் துரையையும் நான் என்றும் மறப்பதில்லை.

## மாணிக்கம் நாய்க்கருடன் டில்லிப் பயணம்

1912-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 4-ந் தேதி எனக்கு ஒரு தந்திவந்தது. உடனே திருச்சிறுப்பள்ளிக்கு வரும்படி **பா. வே. மாணிக்கம் நாய்க்கர்** அனுப்பிய தந்தி அது. மாணிக்கம் நாய்க்கர் அப்போது திருச்சி ஜில்லாவின் 'எக்ஸிகூட்டிவ் எஞ்சினியர்.' பாகல் பட்டியில் இருந்து வருகிற **பா. வே. பொன்னுசாமி நாய்க்கர்** என்னும் பெரிய தமிழறிஞரின் தம்பி, பிற்காலத்தில் 'சூப்பரிண்டெண்டிங்' எஞ்சினியராக இருந்து 'பென்ஷன்' பெற்றவர். 'பி. ஈ.' 'பார்-அட்-லா'; பட்டங்கள் பெற்றவர். தமிழில் நல்ல படிப்பும் ஆர்வமும் உள்ளவர். எனக்கு நெருங்கிய நண்பர்; உறவும் கூட. என்னுடைய சித்திரவித்தையையும் தமிழறிவையும் கண்டு நாய்க்கர் என்னிடம் விசேஷ மதிப்பும் பிரியமும் உடையவரானார். என்னுடைய சித்திரக் கலையை விருத்தி செய்து, அதனுடன் ஒட்டிய ஒரு தொழிலில் என்னை ஆளாக்க வேண்டுமென்று போட்டோ வேலையும் அவரே எனக்குச் சொல்லிக் கொடுத்தார். வெகு சீக்கிரத்தில் போட்டோ வேலையிலும் நல்ல தேர்ச்சி அடைந்தேன். அடிக்கடி என்னைத் தந்தியில் அழைப்பார். சித்திரம், போட்டோ, இலக்கியம் முதலியவற்றில் அள

வளாவிக்கொண்டு அவருடன் சிலநாளிருந்து விட்டு வருவேன்.

இப்போது வந்த தந்தியும் அப்படிப்பட்ட அழைப்புத் தானுக்கும் என்று எண்ணிக்கொண்டு திருச்சிக்குப் போனேன். ஆனால் இந்தத்தடவை எனக்கு ஒரு பெரிய அதிருஷ்டம் காத்திருந்தது. அந்த வருஷம் டிஸம்பர் மாதம் 12-ம் தேதியில் டில்லியில் நடக்கப் போகிற ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடி சூட்டு தர்பாருக்கு அவர் போவதாகவும், அங்கிருந்து வட நாட்டு க்ஷேத்திரங்களையெல்லாம் பார்த்து வர நாலைந்து மாதத்திற்கு யாத்திரை செய்யப் போவதாகவும், போகிற இடங்களையெல்லாம் போட்டோப் பிடித்து வர என்னையும் கூட்டிக் கொண்டு போக எண்ணியிருப்பதாகவும் சொன்னார். "இன்னொரு முக்யமான விஷயம் தர்பாரை ஒட்டி ஒரு கண் காட்சி நடக்கிறது. அதற்கு நீங்கள் ஏதாவது சித்திரம் ஒன்று தயார் செய்து அனுப்புங்கள். காட்சிப் பொருள்களை சென்னை சர்க்கார் மூலமாகத்தான் அனுப்ப வேணும். அதற்காக நியமிக்கப் பட்டிருக்கிற துரை எனக்கு மிகவும் பழக்கமானவர். நான் அவரிடம் கொடுத்து கவனிக்கச் செய்கிறேன்" என்றார்.

இரண்டொரு நாள் திருச்சியிலிருந்து விட்டு ஊருக்கு வந்து ஜார்ஜ் மன்னர் ஓர் சிம்மாசனத்தில் வீற்றிருப்பது போலவும், இந்தியத்தாய் அவருக்கு முடி சூட்டுவது போலவும் ஒரு

படத்தை வெகு சிரத்தையோடு வரைந்து சட்டம் கண்ணாடி போட்டு, ஜாதிக்காய்ப் பெட்டியில் அடக்கம் செய்து நாய்க்கருக்கு அனுப்பினேன்.

ஆறுமாதத்துக்கு வேண்டிய சகல சாப்பாட்டுச் சாமான்களுடன் ஒரு சமையற் காரனையும் ஒரு பியூனையும் கூட்டிக் கொண்டு 1912 நவம்பர் 14ம் தேதி திருச்சியிலிருந்து புறப்பட்டோம். சென்னையில் பேசின்பிரிட்ஜிலுள்ள **பலபத்ர நாயக்கருடைய** இரும்பு வார்ப்பட சாலையில் தங்கினோம். சுமார் பத்து நாள் வரையிலும் டில்லி தர்பாருக்கு வேண்டிய டிக்கட்டுகளுக்காக நாய்க்கர் பெரிய பெரிய துரைமார்களைப் பார்க்க வேண்டியிருந்தது. ஏனெனில் டில்லி தர்பாருக்கு அனுமதி கிடைக்கக் கூடிய அந்தஸ்து எனக்கில்லை. பெரிய பெரிய ஜமீந்தார்களுக்கும் கூட இடம் கிடைக்கவில்லை. கடைசியில் நாய்க்கருடைய முயற்சியால், டில்லி கண்காட்சிக்கு படம் அனுப்பியிருக்கிற ஒரு சித்திர வித்வான் என்ற முறையில் எனக்கு அனுமதிச் சீட்டு கிடைத்தது.

அதன் பிறகு டில்லி பயணத்துக்கு வேண்டிய பல அவசியமான சாமான்களை வாங்கிவர மாணிக்கம் நாய்க்கரும், பலபத்ர நாய்க்கரும், நானும் மவுண்ட் ரோட்டுக்குப் போனோம். எல்லாவற்றிற்கும் முன்னால், '**ஸ்பென்ஸர்**' கம்பெனிக்குப் போய் இரண்டுடஜன் உயர்ந்தரகமான **பிராந்தி** பாட்டில்களை தூரப்பிரயாணத்திற்கு

வேண்டியபடி 'பாக்கிங்' செய்யும் படி நாய்க்கர் உத்தரவு செய்தார். நான் திடுக்கிட்டுப் போனேன். மாணிக்கம் நாய்க்கர் குடிக்கிற பழக்கம் உள்ளவரல்ல. பின் என்னத்திற்குப் பிராந்தி! அடுத்தபடியாக ஐந்நூறு 'ஸ்பென்ஸர்' சுருட்டுகளுக்கு 'ஆர்டர்' செய்தார். சுருட்டுப் பிடிக்கிற பழக்கமும் அப்போது நாய்க்கருக்கு இல்லை! நான் ரகசியமாக பலபத்ர நாய்க்கரிடம், "இதெல்லாம் எதற்கு," என்றேன். அவரும் ரகசியமாக, "டில்லிக்குப் போய், பாருங்கள் தெரியும்" என்றார். எனக்குப் புரியவில்லை.

'அடிசன்' கம்பெனியில் ஒரு 'ட்ரையம்ப்' மோட்டார் சைகிளை 'சைட் காரு'டன் நாய்க்கர் வாங்கினார்.

நவம்பர் மாதம் 28ம் தேதி காலை 10-30 மணிக்கு சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து புறப்பட்ட 'தர்பார் ஸ்பெஷல்' வண்டியில் ஏறி டிஸம்பர் 1ம் தேதி காலையில் டில்லிக்கு வந்து இறங்கினோம். எவ்வளவோ முன் ஜாக்ரதையுடன் எதையும் செய்யும் நாய்க்கர், டில்லியில் தங்குவதற்கு முன்னேற்பாடு ஒன்றும் செய்து கொள்ளவில்லை. மூட்டை முடிச்சுகளையும், ஆட்களையும், ரயிலடியிலேயே விட்டு விட்டு மோட்டார் சைகிளில் நாய்க்கரும் நானும் வாடகைக்கு இடந்தேட ஊருக்குள் போனோம். வாடகைக்கு விடக்கூடிய எல்லா இடங்களையும் மூன்றுமாதங்களுக்கு முன்னாலேயே வேண்டிய

வர்கள் பிடித்துக்கொண்டார்கள். மாலை 4-மணி வரையிலும் தேடிவிட்டு ரயிலடிக்குத் திரும்பி வந்தோம். இருக்க இடமில்லாமல் திண்டாடித் தெருவில் நின்றுகொண்டிருந்தோம். டிஸம்பர் மாதம்; பனிக்காலம். தென்னிந்தியன் பொறுக்க முடியாத குளிர். ராத்திரிப் பொழுதை எங்கே கழிப்பதென்று ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தோம். இந்தச் சமயத்தில் அங்கே ஒரு தமிழர் வந்தார். அவர் பெயர் **ராஜம் ஐயங்கார்.** தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்தவர். சுபங்கனபல்லி நவாப் சமஸ்தானத்தில் பெரிய உத்யோகம். நாய்க்கருக்கு முன்னலேயே பழக்கமானவர். அவர் நாங்கள் நின்ற நிலையை உணர்ந்து இரவைக் கழிக்க தன்னுடைய இருப்பிடத்தில் தங்கலாம் என்றும், நாளை இடந்தேடிக்கொள்ளலாமென்றும் அழைத்தார். அன்று இரவை அங்கே கழித்தோம். மறுநாள் அதிகாலையில் ஆகாரம் செய்துகொண்டு நாய்க்கரும், ராஜம் ஐயங்காரும், நானும் ஒரு வாடகை வண்டியில் நாள் முழுதும் அலைந்து திரிந்து, கடைசியாக ஒரு தரகனுடைய தயவினல் **பழைய டில்லியில்** 'சாந்தினி செளக்' என்னும் பாகத்தில் ஒரு அசுத்தமான சந்தில் மாட்டிடையர் வீட்டின் மாடியில் பத்தடி சதுரமுள்ள ஒரு அறையை ஒரு மாதத்திற்கு நூற்றைம்பது ரூபாய் வாடகைக்குப் பிடித்தோம்.

அவ்வளவு வாடகை தந்தும் சமைக்க இடமில்லை. அதனல் தர்பார் முடியுமட்டும் ஓட்டல் சாப்பாடுதான். ஒவ்வொருவேளைக்கும் ஆணு

தும் என்ற எங்கள் பியூன் ஓட்டலிலிருந்து சாப்பாடு வாங்கி வருவான். மாணிக்கம் நாய்க்கருக்குப் புலால் உணவுதான் அதிகம் பிடிக்கும். வெள்ளிக்கிழமை, அமாவாசை முதலிய விலக்கான நாட்கள்தவிர மாமிச மில்லாமல் சாப்பிட மாட்டார். நானும் அந்தக் காலத்தில் புலால் உண்பவன்.

டில்லிக்குப்போன ஐந்தாம் நாள் நாங்கள் சாப்பிடும்போது என்னுடைய தட்டத்தில் ஒரு பெரிய நல்லிஎலும்பு விழுந்தது. அது நம் ஊரில் வழக்கமாக இருப்பதைக் காட்டிலும் மிகப் பெரியதாக இருந்ததைக்கண்டு, இங்கே "ஆடுகள் எவ்வளவு பெரியதாகவும் கறி எவ்வளவு நன்ருகவும் இருக்கிறது பாருங்கள்", என்று வியப்புடன் நாயக்கரிடம் சொன்னேன். வாய் நிறைய சாப்பாட்டை மென்று கொண்டிருந்த நாய்க்கர் குப்பென்று சிரித்துவிட்டார். வாயிலிருந்த உணவெல்லாம் வெளியில் சிதறிவிட்டது. புரை ஏறிக்கொண்டது. கொஞ்சநேரம் பதில் சொல்ல அவரால் முடியவில்லை. அவர் ஏன் சிரித்தார் என்று எனக்குப் புரியவில்லை. புரைஏறிய சங்கடம் தீர்ந்தபின் "சாப்பிடுங்கள் அப்புறம் பேசிக்கொள்ளலாம்", என்ருர். போஜனம் முடிந்து நாங்கள் தாழ்வாரத்தில் உட்கார்ந்தோம். ஆனந்தமும், சமையற்கார வையாபுரியும் உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். நாய்க்கர் சாப்பிடும்போது சிரித்ததின் காரணத்தை சொல்லுவாரென்று எதிர்பார்த்துக்கொண்டே இருந்தேன்.

அவர் என் குறிப்பையறிந்து மறுபடியும் சிரித்தார். அடுத்தடுத்து அவராகவே சிரித்துக்கொண்டாரே யல்லாமல் ஒன்றும் சொல்லவில்லை. "ஏன் அப்படிச் சிரிக்கிறீர்கள்? நகைப்புக்கிடமாக அப்படி நான் என்ன சொல்லிவிட்டேன்?" என்றேன்.

அவர் "பியூன் வரட்டும் சொல்லுகிறேன்", என்று பின்னும் சிரித்தார்.

ஆனந்தம் சாப்பிட்டுவிட்டு வந்தான்.

"டேய் ஆனந்தம்! சாப்பாடு தினந்தினம் எங்கேயிருந்து வாங்கிவருகிறாய்?" என்றார் நாய்க்கர்.

"பக்கத்தில் பெரிய ரோட்டில் இருக்கிற ஓட்டலில்" என்றான் ஆனந்தம்.

"அந்த ஓட்டல் இந்து ஓட்டலா மகம்மதிய ஓட்டலா?"

"அதென்னமோ ஒண்ணும் தெரியலிங்கோ. யாரைப்பார்த்தாலும் ஒரே பேச்சுதான் பேசுராங்கோ. ஒரேமாதிரி டிரஸ்தான் போட்டிருக்கிறாங்கோ. இங்கே இந்து முசல்மான் எல்லாரும் தான் தாடிவச்சிருக்கிறாங்களே, கண்டுபிடிக்க முடியிலிங்கோ" என்றான்.

"சரி நீபோய் யாரையாவது விவரமாக விசாரித்துக் கொண்டுவா", என்று நாய்க்கர் ஆனந்தத்தை அனுப்பினார். ஆனந்தம் போனான்.

பத்து நிமிஷத்துக்குள் திரும்பிவந்தான். "அது முஸ்லிம் ஓட்டலுங்களாம்" என்றான்.

"சரிதான்", என்று மறுபடியும் சிரித்து விட்டு நாய்க்கர் என்னைப்பார்த்து "நீங்கள் உறிஞ்சின எலும்பு ஆட்டெலும்பல்ல, மாட்டெலும்பு. அதனால்தான் அவ்வளவு பெரிதாயிருந்தது", என்றார்.

சொன்னாரோ இல்லையோ, உடனே நான் ஐந்துநாளாக சாப்பிட்டதெல்லாம் வெளியில் வருவதுபோல் எனக்கு உமட்டல் உண்டாகிவிட்டது. "ஐயையோ! மாட்டுக்கறியையா இத்தனைநாளும் தின்றோம்" என்று மிகவும் துடித்துப்போனேன். மாட்டைத் தின்பதுதான் பாவம் ஆட்டைத்தின்பது அப்படியல்லவென்று பழகிவிட்ட மனப்பான்மையினால் அப்படி வருந்தினேன். என்றாலும் இந்தநிகழ்ச்சிதான் முதல் முதல் எனக்குப்புலால் உணவின்மேல் அருவருப்பை உண்டாக்கியது.

டிஸம்பர் 12-ம் தேதி தர்பார் நடந்தது. டில்லி தர்பாரின் வைபவத்தை எழுத இங்கே இடம்போதாது. கதைகளிற் படித்த தேவேந்திர பட்டணமாகத்தான் டில்லி விளங்கியது. கம்பன் சொல்லுகிற எழுச்சிப்படலம் வெறும் கற்பனை அல்லவென்று அங்கே கண்ணால் கண்டேன்.

தர்பார் பொருட்காட்சியில் எனக்கு ஒரு தங்கப்பதக்கம் பரிசு கிடைத்தது. நான் டில்லி தர்பாரில் தங்கமெடல் வாங்கினவனாகிவிட்டேன்.

பரிசுவாங்கின கலைஞர்களுக்கென்று மன்னர் பிரான் ஒருவிருந்து நடத்தினார். அதில் வித்வான் களெல்லாம் அரசருக்கு அறிமுகப் படுத்தப்பட் டார்கள். அந்தவிருந்து டில்லிக்கோட்டைக்குள் ஷாஜஹான் சக்ரவர்த்தியின் மயில்வாகன மண்ட பத்தில் நடந்தது. வித்வான்களுக்குமட்டும் நடத் தப்பட்ட விருந்தானதால் அதில் நாய்க்கருக்கு இடமில்லை. நான் மட்டும் போனேன். தர்பாரில் சக்ரவர்த்தியுடன் ஒரேமேடையில் உட்கார்ந்தி ருந்த சுதேசமன்னர்கள்கூட தூரத்தில் இருந்த படியேதான் ஜார்ஜ்மன்னரைப் பார்த்தார்கள். ஆனால் இந்தவிருந்தில் நாங்கள் சக்ரவர்த்தியுடன் பக்கத்தில் பழகினோம்.

டில்லியில் சுமார் ஒரு மாதம் தங்கி அருகி லிருந்த குதப்மினார், அசோகா ஸ்தூபி முதலான பல இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு லாகூர் போனோம். அங்கே பத்து நாள் இருந்தோம்.

ஒவ்வொரு ஊரிலும் தினந்தினம் காலை ஆகாரம் முடிந்தவுடன், நானும் நாய்க்கரும் பகல் உணவுக்கு ஏதாவது மூட்டை கட்டிக் கொண்டு, போட்டோ சாமான்களுடன் மோட்டார் சைக்கிளில் அருகிலுள்ள முக்கியமான இடங் களைப் பார்த்துவிட்டு, படமும் பிடித்துக் கொண்டு, இரவுக்கு இருப்பிடம் வந்து விடு வோம். இப்படியாக பேஷாவருக்குப் போனோம்.

அங்கே தங்கியிருக்கும் போது, ஒரு நாள் பெஷாவருக்குப் பதினைந்து மைல் தூரத்திலுள்ள

ஒரு புராதன கோரியைப் பார்க்கப்போனோம். திரும்பி வருகிறபோது ஊருக்கு ஆறு மைல் தூரத்தில் மோட்டார் பைசைக்கிளிலிருந்த பெட்ரோல் தீர்ந்து விட்டது. இருட்டுகிற சமயம். 'சைட் காரோடு' மோட்டார் பைசைக்கிளை தள்ளிக் கொண்டு நடப்ப தென்றால் அதுவும் குளிர் நடுக்குகின்ற தேசத்தில், மிகவும் சங்கடமான வேலை. முக்கி முரண்டி ஒரு மைல் வந்தோம். இருட்டி விட்டது. நாய்க்கர் நல்ல பல சாலி. நானும் நல்ல தேகக் கட்டுள்ள வாலிபன். இருந்தாலும் இரண்டு பேருக்கும் மூச்சுவாங்க ஆரம்பித்து விட்டது. கொஞ்சம் நின்று இளைப்பாறினோம். சற்று தூரத்தில் ரோட்டுக்குப் பக்கத்தில் ஒரு பிரகாசமான வெளிச்சம் தெரிந்தது. அந்த வெளிச்சத்தை நோக்கி வண்டியைத் தள்ளிக் கொண்டு போனோம். அந்த வெளிச்சம் ஒரு பங்களாவின் முகப்பில் இருந்த ஒரு பெரிய விளக்குத் தான். பாதை ஓரத்திலிருந்த அந்த பங்களாவின் வெளிக் கதவு திறந்திருந்தது. நாய்க்கர் மோட்டார் பைசைக்கிளையும் தள்ளிக்கொண்டு கேட்டுக்குள் நுழைந்தார். நான் பின்னால் போனேன். உடனே ஒரு பெரிய வேட்டை நாய் வெகு பயங்கரமாகக் குலைத்துக்கொண்டு எங்கள் பக்கம் பாய்ந்து வந்தது. அதன் பின்னாலேயே ஒரு மனிதன் நாயைக் கூப்பிட்டுக் கொண்டு ஓடி வந்தான். அவன் நாயை அடக்கினான். வந்த மனிதனுடைய உடையிலிருந்து அவன் ஒரு 'பட்லர்' என்று தெரிந்து கொண்டோம். பட்லர் எங்களை

விசாரிக்கு முன்னுல் நாய்க்கர், அந்த பங்களா வில் வசிப்பது யார் என்று அவனைக் கேட்டார். அவன் 'பட்லர்' இங்கிலீஷில் அந்த பங்களா பெரிய எஞ்சினீயருடையது என்றான். நாய்க்கர் அந்த எஞ்சினீயரைப் பார்க்க வேணும் என்று சொன்னுர். அதற்கு பட்லர் எஞ்சினீயருக்கு ஜுரம் என்றும் அப்போது யாரையும் பார்க்க மாட்டா ரென்றும் கண்டிப்பாகச் சொன்னுன். வெகு நேரம் கேட்டுக் கொண்டதன் பேரில் நாய்க்கருடைய 'விசிடிங்' கார்டை துரையிடம் கொடுக்கச் சம்மதித்தான். விசிடிங் கார்டில் "பி.வி. மாணிக்கம் நாய்க்கர். எக்ஸிகியூடிவ் எஞ்சினீயர் பி. டபள்யு. டி—மதருஸ்" என்று ஆங்கிலத்தில் அச்சடித்திருக்கும். அதை உள்ளே கொண்டு போன இரண்டு நிமிஷத்துக் கெல்லாம் பட்லர் ஓடி வந்தான். எங்களை அழைத்துக் கொண்டு போனுன். நாற்காலிகளை எடுத்துப் போட்டு முன் கட்டில் உட்காரவைத்தான். கொஞ்ச நேரத்துக் கெல்லாம் உடம்பு முழுவதை யும் கம்பளியால் மூடிக் கொண்டிருந்த ஒரு உரு வம் வந்தது. வரும்போதே, "வாருங்கள் மிஸ்டர் மாணிக்கம் நாய்க்கர். உங்களைப் பார்த்து நெடு நாளாச்சே. நான் இங்கே இருப்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது? நீங்கள் வந்ததற்கு மிகவும் சந்தோஷப் படுகிறேன். உங்களைக்குதூகலத் துடன் வரவேற்க முடியாமல் நான் அசௌக்ய மாயிருக்கிறேன்." என்று ஆங்கிலத்தில் சொல் லிக் கொண்டே நாய்க்கருடைய கையைக்

குலுக்கி விட்டு அருகிலிருந்த நாற்காலியில் அவ்வுருவம் உட்கார்ந்தது. உட்கார்ந்தவருடைய முகத்தை நாய்க்கர் சற்று உற்றுப் பார்த்து விட்டு, "ஓ! மிஸ்டர் ஜேக்கப்! நீங்களா இங்கே! என்ன அதிர்ஷ்டம் எனக்கு!" என்று ஆனந்தப் பரவசமானார். ஜேக்கப் துரை சென்னை மாகாணத்தில் முன்பு 'சீப் எஞ்சினீயராக இருந்தவர். நாய்க்கரிடத்தில் மதிப்புள்ளவர். அந்த இடத்தில், அந்த நேரத்தில், அந்த நிலைமையில் அவ்வளவு தெரிந்த ஒரு பெரிய உத்யோகஸ்தர் கிடைத்ததனாலுண்டான சந்தோஷத்தை அளவிடவும் முடியுமா? எங்கள் வரலாற்றை நாய்க்கர் சொன்னார். கேட்டுக் கொண்டிருந்த துரை, "உங்களுக்கு வேண்டிய பெட்ரோல் தருகிறேன். ஆனால் இவ்வளவு நாளைக்குப் பின் உங்களை இப்படி சந்தித்து உடனே அனுப்பிவிட மனமில்லை. விடிவதற்குள் எனக்குக் காய்ச்சல் குணப்பட்டு விடும். காலையில் உங்களோடு அளவளாவிப் பேசவேண்டும். இப்போது தலைநோய் அதிகமாயிருக்கிறது. நான் படுத்துக் கொள்ள அனுமதியுங்கள். மன்னிக்க வேணும்" என்றார். நாய்க்கர் சம்மதித்தார். உடனே துரை, எங்களுடைய ஆகாரம், படுக்கை முதலியவற்றிற்கு தக்க உத்தரவுகளை பட்லரிடம் சொல்லிவிட்டு, விடை பெற்றுக் கொண்டு படுக்கைக்குப் போய் விட்டார்.

பட்லர் உள்ளே ஒரு அறைக்கு எங்களை அழைத்துப்போனான். குளிர் என்றால் தாங்க

முடியவில்லை. உள்ளே போனதும் ஒரு சோபா வில் குளிருக்காகக் குறுகிப் படுத்துக் கொண் டேன். அரை மணி நேரத்துக்குள் பட்லர் ஆகா ரம் கொண்டு வந்தான். நாய்க்கர் என்னைச் சாப் பிடக் கூப்பிட்டார். எனக்கு எழுந்திருக்க முடிய வில்லை. கைகால் எல்லாம் குளிரால் விரைத்துப் போய் நீட்ட முடியவில்லை. நாய்க்கர் என்னைத் தூக்கி உட்காரவைத்து விட்டு, சாப்பாட்டு மேஜையில் பட்லர் கொண்டு வந்து வைத்த பிராந்தி பாட்டலை எடுத்து ஒரு டம்ளரில் கொஞ் சம் ஊற்றி, "முதலில் இதைக் கொஞ்சம் குடி யுங்கள்," என்ருர். நான் கூசினேன். நாய்க்கர் கட்டாயப் படுத்தி குடிக்கச் செய்தார். கொஞ்ச நேரத்துக் கெல்லாம் உடலிலும், உள்ளத்திலும் இதுவரையில் அறியாத ஒரு சுறுசுறுப்பான உணர்ச்சி உண்டாகி விட்டது. சென்னையில் 'ஸ்பென்ஸர்' கம்பெனியில் மாணிக்கம் நாய்க் கர் மற்ற சாமான்களுக்கு முன்ஞல் பிராந்தி பாட்டில்களை வாங்கியதன் மர்மம் அப்போது தான் எனக்குப் புரிந்தது.

பட்லர் சுடச் சுட ஆகாரம் பரிமாறிஞன். நல்ல சாப்பாடு. வயிருர உண்டபின் இன்னும் கொஞ்சம் பிராந்தியை நானே ஊற்றிக்குடித்து விட்டு எனக்குக் காட்டப்பட்ட கட்டிலில் படுத் தேன். பிறகு எந்த லோகத்துக்குப் போனேனே தெரியாது. விழித்துப் பார்த்தபோது விடிந்து வெகுநேரம் ஆகியிருந்தது. நாய்க்கரும் துரையும் முன்கட்டில் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்

தார்கள். அவசரமாகக் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு நானும் வந்து அவர்களுடன் உட்கார்ந்தேன். அங்கேயே காலை ஆகாரம் கொண்டு வரப்பட்டது.

சாப்பிடும் போதும் சாப்பிட்ட பிறகும் ஜேகப் துரை நாய்க்கருடன் பேசின பேச்சுகளின் சாரம் என்னவெனில்: பஞ்சாபில் தரிசாக இருந்த நிலங்களைச் சாகுபடி செய்யப் புது வாய்க்கால்களை வெட்டுகின்ற 'சானல்' வேலைக்குத் தலைமை எஞ்சினீயராக ஜேகப்துரை வேலை பார்த்து வந்தார். அந்த வாய்க்கால்கள் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் ஓரமாக ஓடுகின்ற சிந்துநதியின் ஓர் உப நதியிலிருந்து வெட்டப்பட்டு வருகின்றன. அந்த உபநதி பிரிட்டிஷ் எல்லையின் ஓரத்தில் ஒரே ஒரு இடத்தில்தான் அணை போடக்கூடியதாயிருந்தது. அந்த இடம் பிரிட்டிஷ் எல்லைக்கு அப்பால் வசிக்கிற எல்லைப் புறஜாதியாருக்குச் சொந்த மென்றும், அங்கே இந்தியசர்க்கார் அணைபோட்டு விட்டதால் எல்லைப்புற ஜாதியாருடைய சாகுபடிகளுக்கு ஏதோ குந்தகம் ஏற்பட்டுவிட்டதென்று அந்த ஜாதியார் இந்திய அரசாங்கத்தாரோடு பகைமை கொண்டார்களாம். அதிலிருந்துதான் அடிக்கடி எல்லைப் புறசச்சரவுகள் நடந்து வருகின்றனவாம். இந்த எல்லைப்புற ஜாதியார் ஆப்கனிஸ்தானத்துக்கும் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் இடையிலுள்ள மலைப் பிரதேசத்தில் சுதந்தரமாக வசித்துவருகிறார்கள். இந்த அணைபோட்ட மனஸ்தாபம் ஏற்பட்ட

நாள் முதல் அவர்கள் அடிக்கடி பிரிட்டிஷ் எல்லைக்குள் இறங்கி, ஆடு மாடுகளையும் சில சமயங்களில் மனிதர்களையும் கூடப் பிடித்துக் கொண்டு போய் விடுவார்களாம். நேரான யுத்தம் செய்யப் போதாதென்றாலும், மலை இடுக்குகளில் மறைந்திருந்து பெரிய சேனைகளையும் கூடத் திகைக்கச் செய்து விடப் போதுமான வசதிகள் உள்ளவர்கள்.

துரையின் உத்யோக அலுவல்கள் முழுதும இந்த எல்லைப்புறத்தின் ஓரமாக இருந்ததால் அடிக்கடி அபாயத்துக்கு அஞ்ச வேண்டிய நிலைமை நேருமாம். இருந்தாலும் பிரிட்டிஷ்சர்க்கார் அந்த எல்லைப்புறத்தின் பலபாகங்களில் கோட்டைகளை பலப் படுத்தி ஏராளமான ராணுவத்தை வைத்துப் பாதுகாத்து வருவதால் இப்போது அவ்வளவு பயமில்லை என்றும் சொன்ஞர்.

தன் மேற்பார்வையில் முடிந்திருக்கிற சில அபூர்வ மலைச்சுரங்கங்களை வர்ணித்தார். ஒரு இடத்தில் சுமார் மூன்று மைல் நீளத்திற்கு ஒரு மலையைக் குடைந்து அதன் வழியாக வாய்க்கால் வருவதைப்பற்றி அவர் சொல்லும் போது நாய்க்கர் அவற்றை யெல்லாம் தான் பார்க்கவேணுமென்று மிகவும் விரும்பிஞர். துரையும் நாய்க்கருடைய விருப்பத்தை ஆமோதித்தார். ஆஞல் அந்த இடங்களுக்கு ' டியூட்டியில் இல்லாத வேறு யார் போவதாஞலும் ராணுவ அதிகாரியின் அனுமதி

பெறவேண்டும். அந்த அனுமதிக்காக நாய்க்கரை ஒரு விண்ணப்பம் எழுதச்சொன்னார். அதில் தன்னுடைய சிபார்சையும் எழுதி துரை தபாலுக்கு அனுப்பினார். பகல் சாப்பாட்டையும் அங்கே முடித்துக்கொண்டு பெஷாவருக்குப் போனோம்.

இரண்டு நாளைக்குப் பிறகு அனுமதி கிடைத்தது. நாய்க்கரும் நானும் பயணத்தோடு துரையின் பங்களாவிற்குப்போனோம். அந்தக் காலத்தில் மோட்டார்வண்டிகள் அபூர்வம். 'சானல்' வேலைக் கென்று 'எஞ்சினீயரிங் டிபார்ட்மெண்டு'க்காக ஒரு புது 'கார்' வாங்கப்பட்டிருந்தது. அந்த வண்டியில்தான் எங்கள் சுற்றுப்பிரயாணம். எங்களுடைய 'மோட்டார் பைசைக்கிளி'ல் வேறொரு 'அஸிஸ்டென் எஞ்சினி'யரும் அவருடைய சேவகனும் ஏறிக்கொண்டு பின்னால் வந்தார்கள். அனேக இடங்களில் மோட்டாரை விட்டுவிட்டு 'சானல்' வேலைக் கென்று போடப்பட்டிருந்த இரும்புப் பாதை வண்டிகளில் பிரயாணம் செய்தோம். ஐந்துநாள் சுற்றி, அழகான மலைக்காட்சிகளையும், அற்புதமான 'எஞ்சினீயரிங்' வேலைகளையும் பார்த்தோம். அதேபயணத்தில் பக்கத்திலிருந்த கைபர்கணவாயிலும் வெகுதூரம் போய்ப்பார்த்தோம். இப்படிப்பல இடங்களையும் பார்த்துவிட்டுக் கடைசியாக ஒருமலைக்கோட்டைக்குப் போனோம். அதுதான் எங்களுடைய சுற்றுப்பிரயாண திட்டத்தில் கடைசியாகப் பார்க்கவேண்

டிய இடம். அந்த இடம் தமிழ்நாட்டிலுள்ள கூனூர், கொடைக்கானல்—ஏர்காடு முதலான இடங்களைப் போன்ற மலையின்மேல் உள்ளது. அங்கு போகும் பாதை முதல்தரமான 'ரோட்'. ரஸ்தாவின் ஒரு புறத்தில் செங்குத்தான மலைச் சாரல். மற்றொருபக்கத்தில் பாதாளமான பள்ளத் தாக்கு. பாலங்கள்வரும்போது இருபுறத்திலும் பயங்கரமான கபிகள்.

அங்கே போவதற்கென்று முதல் நாள் மாலையிலேயே அம்மலையின் அடிவாரத்திலுள்ள டி. பி. டபிள்யூ பங்களாவிற்கு வந்து தங்கியிருந்தோம். விடியுமுன் புறப்பட்டு சுமார் எட்டுமணிக்குள் கோட்டைக்குப் போனோம். அங்கிருந்த ராணுவத் தலைவரான துரை எங்களை வரவேற்றார். பன்னிரண்டுமணிக்குள் பார்க்கவேண்டிய இடங்களையெல்லாம் பார்த்தோம். அந்தக் கோட்டைக்குப் பக்கத்திலும் சில 'எஞ்சினீயரிங்' வேலைகள் நடந்துகொண்டிருந்தன. சுமார் ஒரு மணிக்கு ராணுவத் தலைவர் பங்களாவில் விருந்துண்டு இளைப்பாறினோம். மூன்று மணிக்கு நாய்க்கரும் நானும் அடிவாரத்துக்குப் பயணமாக வேண்டியிருந்தது. ஜேகப் துரை உத்தியோக அலுவலாக அங்கே தங்கவேண்டியிருந்தது. சிற்றுண்டியும் தேநீரும் குடித்துவிட்டு புறப்பட்டோம். நேர்ந்தால் மறுபடியும் சந்திப்பதாகவும் இல்லையானால் சென்னைக்குப்போய் கடிதம் எழுதுவதாகவும் சொல்லி நாய்க்கர் ஜேகப் துரையிடம் விடைபெற்றுக் கொண்டார். நாங்கள் அடி

வாரத்துக்கு வரவேண்டிய அந்தமலைப்பாதை சற்று பயமுள்ளது. பாதையின் ஒரு புறத்தி லுள்ள மலைச் சாரல்கள் முழுதும் முன்னே சொல் லப்பட்ட எல்லைப்புற ஜாதியாரின் நடமாட்டம் நிறைந்தது. இருட்டிய பின் அந்த ரோட்டில் காவல் செய்யும் ராணுவத்தாரைத் தவிர மற்ற புழக்கம் இருக்காது. ஆகையினாலே இருட்டுவதற் குள் நாங்கள் அடிவாரம் சேர்ந்துவிட வேண்டு மென்று ராணுவத் தலைவர் எச்சரிக்கை செய்து விடையும் தந்தார். அங்கிருந்து எங்களுடைய பிரயாணம் எங்களுடைய மோட்டார் பைசைகி ளில்தான். நாய்க்கர் துரைமார்களுடன் கை குலுக்கிவிட்டு வண்டியை ஓட்டினார்.

நாங்கள் புறப்படும் போது மணி மூன்றரை. அடிவாரத்துக்கும் அந்த இடத்திற்கும் பதினைந்து மைல்தான். சமநிலத்து ரஸ்தாவில் அரை மணி யில் போய்விடலாம். ஆனால் வளைந்து வளைந்து போகும் மலைப்பாதையில், அதுவும் இறங்கும் போது வேகமாக விடக்கூடாது. 'பிரேக்' போட்டுக்கொண்டுதான் போகவேணும். சுமார் மூன்று மைல் வந்தோம். மோட்டார் பைசைக் கிள் தகரார் செய்ய ஆரம்பித்து விட்டது. வண்டி யை நிறுத்தி நாய்க்கர் சோதித்தார். எண்ணைக் குழாயில் ஏதோ அடைத்துக்கொண்டு, மோட் டார் பெட்ரோல் எடுக்கவில்லை என்று தெரிந் தது. அதற்கு, சாதாரண சிகிச்சைகளான வாயை வைத்து ஊதுவதையும் உறிஞ்சுவதையும், 'பம் பை'க்கொண்டு காற்றடிப்பதையும் செய்து

பார்த்தோம். பலிக்கவில்லை. மோட்டார் ரிப்பே ரில் நாய்க்கர் வெகு கெட்டிக்காரர். அவரையும் கூட அந்த மோட்டார் வெகு நேரம் திணறச் செய்துவிட்டது. இருந்தாலும் நாய்க்கர் அதைச் சரிப்படுத்தி விட்டார். இதற்குள் மணி ஐந் தரை ஆகிவிட்டது. புறப்பட்டோம். இன்னும் இரண்டுமைல் வந்தோம். இருட்டுகிற சமயம். ஒரு முடுக்கான மூலையில் வந்துகொண்டிருக்கும் போது பக்கத்து மலைச்சாரலிலிருந்து 'படார்!' என்ற ஒரு வெடிச்சத்தம் கேட்டது! இருட்டிப் போனால் அந்தப் பாதையில் அபாயமுண்டு என்று துரை எச்சரிக்கை செய்தது என் நினைவுக்கு வந்தது. எனக்குக் கிலி பிடித்துவிட்டது. உடனே நாய்க்கர் மோட்டாரை நிறுத்தினார். வெடி கேட்ட திசையைத் திரும்பிப் பார்த்தார். ஒரு 'சல்யூட்' செய்தார். அவர் சலாம் செய்ததைப் பார்த்து எனக்கு ஆச்சரியம் உண்டாகி, அச்சம் குறைந்தது. குன்றின் மேல் ஒரு உயரமான உருவம் கையில் துப்பாக்கியுடன் நின்று கொண் டிருந்தது. அந்த உருவம் எங்களுக்குப் பழக்க மானது அல்ல! பின் ஏன் அவனுக்கு நாய்க்கர் சலாம் செய்தார்!...நாய்க்கர் என்னையும் சலாம் செய்யும்படி தமிழில் சொன்னார். நானும் சலாம் போட்டேன்......

நாய்க்கருடைய சட்டைப்பையில் இரண்டு கைத்துப்பாக்கிகள் எப்போதும் இருக்கும். என் னுடையமுதுகில் ஒரு இரட்டைக்குழாய் வேட் டைத்துப்பாக்கியை ஊர் சுற்றும்போதெல்லாம்

நாய்க்கர் கட்டிவிடுவார். நான் அதற்குமுன் துப்பாக்கியைத் தொட்டதுகூடக் கிடையாது. சுடத் தெரியாவிட்டாலும் தோளில் ஒரு துப்பாக்கி இருப்பதை பெருமையாக எண்ணிக்கொண்டே தான் தினமும் அதைச்சுமந்து கொண்டுபோனேன். மலைச்சாரலில் துப்பாக்கி வெடிகேட்டதும் நாய்க்கரும் துப்பாக்கியை எடுப்பாரோ என்று எண்ணினேன். ஏனோ நாய்க்கர் எங்களிடத்திலும் துப்பாக்கிகள் இருக்கின்றன என்று காட்டிக்கொள்ளாமல் சலாம்போட்டார். சலாம் செய்தவுடன் மலைமீதிருந்தவன் தான் இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டிருந்த துப்பாக்கியை இடதுகையில் பிடித்துக்கொண்டு வலது கையைநீட்டி எங்களை அப்படியே நிற்கச்சொல்லி உத்தரவு காட்டினான். உடனே அவன் மறைந்துவிட்டான். நான் பயந்து நடுங்கிக்கொண்டுதான் நின்றேன். பக்கத்தில் இரண்டு பாறைகளுக்கிடையில் ஒரு அடர்ந்த புதர் காணப்பட்டது. அந்தப்புதரிலிருந்து ஏழெட்டு உயரமான தடித்த மனிதர்கள் திபுதிபுவென்று வெளியில் வந்தார்கள். எங்கள் மோட்டார் பைசைக்கிளை பிடித்துத் தள்ளிக்கொண்டு எங்களையும் இழுத்துக்கொண்டு அதேபுதரின் வழியாக நுழைந்தார்கள்.

நாங்கள் எல்லைப்புற ஜாதியாரிடம் சிக்கிக்கொண்டோம். நாய்க்கர் அவர்களுடன் பழகியவர்போல் போனார். நான் நடுங்கிக்கொண்டே நாய்க்கர்பின்னால் நடந்தேன். புதரைத்தாண்டியவுடன் பெரியபள்ளத்தாக்கு. ஒற்றையடிப்பா

தையில் அந்தப்பள்ளதாக்கில் இறங்கினோம் கொஞ்சதூரம் போனபின் இன்னொருபுதர். அதற்குப்பின்னால் குகைபோன்ற கணவாய். இருபுறமும் அடர்ந்து செழித்த மரங்கள். அதனால் இருட்டு அதிகம். அங்கே விளக்கோடு ஒருவன் காத்துக்கொண்டிருந்தான். சுமார் மூன்று மைல் அந்தக்கணவாயில் நடந்தோம். கணவாய் கடந்ததும் நல்ல சமநிலம். வயல்களும் வரப்புகளும் இருந்தன. அங்கே நாலுபக்கமும் மலைகளால் சூழப்பட்ட ஒரு கிராமம் தென்பட்டது.

எங்கள் மோட்டார் பைசைக்கிளை ஐந்தாறு பேர் தூக்கிக் கொண்டே வந்து விட்டார்கள். கிராமத்தின் முகப்பிலிருந்த மண்குடிசை போன்ற ஒரு வீட்டுக்குள் எங்களைக் கூட்டிக் கொண்டு போனார்கள். வெளியில் குடிசை போலக் காணப்பட்ட அந்த வீடு உள்ளே மிகவும் நவீன நாகரீகங்கள் நிறைந்த ஒரு நேர்த்தியான இடமாக இருந்தது. வெகு பிரகாசமான விளக்குகள். மிக உயர்ந்த மேஜைகள். நல்ல நல்ல நாற்காலிகள். சுகமான சோபாக்கள். நீண்ட நிலைக்கண்ணாடிகள். பெரிய கூடம், கூடம் முழுவதும் விரிக்கப்பட்டிருந்த ஒரே ரத்தனக்கம்பளம் விலை மதிக்க முடியாதது.

நாங்கள் உள்ளேபோனதும் அந்தக் கூட்டத்தாருக்குத் தலைவன்போல் காணப்பட்ட மனிதன் எங்களிருவரையும் வெளிச்சத்துக்குச் சமீபத்தில் நிறுத்தி, கைதிகளைப் பார்க்கிற பார்வையுடன்

ஏற இறங்கப் பார்த்தான். நாய்க்கர் உயரமான கனத்த ஆள். கம்பீரமான உருவம். தனக்கென்று ஒரு தனிமாதிரியாக அவர் தலைப்பாகை கட்டுவார். நான் தமிழ் நாட்டில், வக்கீல்களும், வாத்தியார் களும் கட்டுவதைப் போன்ற மைசூர் தலைப்பா கட்டியிருந்தேன். அந்தத்தலைவன் எங்கள் தலைப் பாக்களையே வெகுநேரம் உற்று உற்றுப் பார்த்து விட்டுக், கடைசியாக அதிகாரத் தொனியோடு என்னமோ கேட்டான். அது புரியவில்லையென்று கையால் ஜாடை காட்டி நாய்க்கர் சிரித்தார். இது வரையிலும் கடுகடுத்த முகத்தோடு பார்த்துக் கொண்டிருந்த அந்தத் தலைவனும் நாய்க்கர் சிரித்த வுடன் தானும் சிரித்து விட்டுத், திருப்பித்திருப் பிக் கேள்விகளைக் கேட்டான்· எனக்குக் கொஞ் சம் ஹிந்துஸ்தானி புரியும். இரண்டு மாதமாக பஞ்சாபியையும், உருதுவையும் கேட்ட பழக்க மும் உண்டு. ஆனால் அவன் பேசினது என்ன பாஷையோ தெரியவில்லை. எங்கள் தலைப்பாக் களை எடுக்கச்சொல்லிச் சைகை காட்டினான். நாங்களிருவரும் தலைப்பாக்களை எடுத்தோம். எங்கள் தலையைப்பாத்தான். நாங்கள் இரண்டு பேரும் அப்போது குடுமி வைத்துக்கொண்டிருந் தோம். எங்கள் குடுமியைத் தொட்டுப்பார்த்துச் சிரித்தான். என்னுடைய தலைமயிர் நீண்டு அடர்ந்தது. பெரிய முடி போட்டிருந்தேன். அதைத் தொட்டுபார்த்தான். நான் அதை அவிழ்த்துவிட்டேன். மேலும்சிரித்தான். என் முதுகைத் தட்டிக் கொடுத்துவிட்டு எங்கள்

தலைப்பாக்களின் துணியையும் ஜரிகையையும் வெளிச்சத்தில் பார்வையிட்டான். கடைசியாக நாய்க்கரைப்பார்த்து ஒரு கேள்விகேட்டான். அந்தக்கேள்வியில் "இங்கிலீஷ்காரனா?" என்ற பொருள்தரக்கூடிய பஞ்சாபி வார்த்தை போல இருந்தது. உடனே நாய்க்கர் கொச்சையான ஹிந்துஸ்தானியும், தமிழும் கலந்த பாஷையில், "இல்லை, இல்லை. நாங்கள் இங்கிலீஷ்காரரைச் சேர்ந்தவர்கள் அல்ல", என்ற மாதிரி சொன்னார். நான் சும்மா இருக்காமல இங்கிலீஷில் இரண்டொரு வார்த்தைகளை ஆரம்பித்தேன். உடனே நாய்க்கர், "ஆங்கிலத்தில் ஒரு சொல்கூடப் பேச வேண்டாம்", என்று தமிழில்சொன்னார். நான் புரிந்துகொண்டேன். பின்னும் நாய்க்கர், "ஹம் அங்ரீஸ்நை. பகுத்தூர். தமிழ்தேஸஹை. ஹம் உதர். அங்கிரீஸ் ஹாரம். ஹம்நை", என்றமாதிரி அடுக்கினார். அதைக்கேட்டதும் ஏதோ புரிந்து கொண்டவன்போல் புன்சிரிப்புச் செய்துவிட்டு, அங்கிருந்தவர்களுள் ஒருவனைக்கூப்பிட்டு ஏதோ உத்தரவு செய்தான். உத்தரவிட்ட ஆள் வீட்டைவிட்டு வெளியில்போனான். நாங்கள் நின்றுகொண்டே இருந்தோம். தலைவன் எங்கள் தலைப்பாக்களை திருப்பித்தந்துவிட்டு அங்கிருந்த மற்றவர்களோடு பேசிக்கொண்டிருந்தான்.

வெளியே போனவன் வேறொரு மனிதனைக் கூட்டிக்கொண்டு வந்தான். அந்தப் புதுமனிதனிடம் தலைவன் ஏதோ சொன்னான். அந்தப் புது மனிதன் எங்களோடு இங்கிலீஷில் பேசஆரம்

பித்தான். அவன் நன்ருக இங்கிலீஷ்பேசினுன். நாய்க்கர் என்னை ஒன்றும் பேசக்கூடாதென்று கண்டிப்பான உத்தரவு தமிழில் சொல்லிவிட்டு, எங்களுக்கு இங்கிலீஷ்தெரியாது, அந்தப்பாஷை யும் பிடிக்காது, என்று மிகவும் கொச்சையான இங்கிலீஷில் தத்தித்தத்திச் சொன்னுர். நாய்க்க ருடைய பேச்சின்கருத்து என்னவென்ருல், "எங்களுக்கு இங்கிலீஷ் பாஷையென்ருல் கொஞ் சம் கூடப்பிடிக்காது. இங்கிலீஷ்காரர்கள் மிகவும் பொல்லாதவர்கள். எங்களுக்கும் அவர்களுக்கும் விரோதம்" என்பது. இதை அப்படியே மொழி பெயர்த்து அந்த இங்கிலீஷ் தெரிந்த ஆள் தலை வனுக்குச்சொன்னுன். தலைவனுடைய முகம் மலர்ந்தது. என்னுடைய நடுக்கம் குறைந்தது. "பின் எதற்காக இங்கிலீஷ்காரருடன் இங்கே வந்தீர்கள்?" என்று தலைவனுடைய உத்தரவின் மேல் அந்த இங்கிலீஷ் தெரிந்தவன் கேட்டான். மறுபடியும் நாய்க்கர் தட்டுக்கெட்டுத் தடுமாறிய தமிழும் கலந்த இங்கிலீஷில், "இங்கே யாரோ எல்லைப்புறஜாதியார் இருக்கிருர்களாம். அவர் களுக்குச் சொந்தமான இடத்தில் இங்கிலீஷ் காரன் அணைபோட்டுவிட்டானும். அவர்கள் அதற்காகச் சண்டைபோட்டு அடிக்கிருர்களாம். முடியுமானுல் அவர்களைப்பார்த்து அவர்களைச் சிநேகம் செய்துகொண்டால் நாங்களும் எங் கள் நாட்டில் இங்கிலீஷ்காரனேடு சண்டை ஆரம் பித்து இரண்டுபக்கத்திலும் ஏககாலத்தில் சண் டைசெய்து அவனைத் தொலைத்துவிடலாம். அந்த

எல்லைப்புறஜாதியாரை ரகசியமாகச் சந்திக்க முடியுமா என்று நாலைந்துநாளாக இந்தப் பக்கங் களில் சுற்றிக்கொண்டு இருக்கிறேன். அந்த எல்லைப்புறத்தார் யார்என்று தெரியவில்லை", என்ற கருத்தை அந்த இங்கிலீஷ் படித்தவனுக் குப் புரியும்படி சொல்லிவிட்டார். அவன் தலை வனுக்கு மொழிபெயர்த்தான். தலைவனுக்குப் பூரிப்பு பொங்கிவிட்டது. விழுந்துவிழுந்து சிரித் தான். சிரித்துவிட்டுத் தலைவன் சொல்லமற்றவன் மொழிபெயர்த்து, "உங்கள் தலைப்பாக்களைக் கண்டு சந்தேகித்துத்தான் உங்களைச்சுடாமல் ஆகாசத்தில் சுட்டேன். நீங்கள்நின்று சலாம் செய்தவுடன் நீங்கள் பகையாளிகளைச் சேர்ந்த வர்களல்ல என்று அனுமானித்தேன். பிறகு இங்கேவந்து உங்கள் தலைமயிரைப்பார்த்தும் நீங்கள் இங்கிலீஷ் ராஜ்யத்தைச் சேர்ந்தவர் களல்லவென்று தெரிந்துகொண்டேன். சந் தோஷம். நீங்கள் பார்க்கவிரும்புகின்ற எல்லைப் புறத்தார் நாங்கள்தான். உங்களுக்கு வேண்டிய ஒத்தாசை நான் செய்கிறேன். நாம் இருவரும் சேர்ந்து இங்கிலீஷ்காரனைத் தொலைப்போம்", என்ற கருத்தைச்சொல்லி, சிரித்து நாய்க்க ருடைய கையைப் பிடித்துக்குலுக்கி உட்காரச் சொன்னான்.

மற்றவிஷயங்களை சாப்பாட்டுக்குப்பின் பேசிக்கொள்ளலாம் என்று அங்கே நின்றவர் களிடம் பற்பல உத்தரவுகளை வீசினான். மறு படியும் வருவதாக வெளியேபோய்விட்டான்.

அவனோடு பலபேர் போய்விட்டார்கள். இரண்டு மூன்று பேர்மட்டும் எங்களுக்குப் பாராசெய்யவோ, பணிவிடைசெய்யவோ இருந்தார்கள். நான் சோபாவில் சாய்ந்தபடியே கண்ணைமூடிக் கொண்டு நாய்க்கருடைய அதிஅற்புதமான கற்பனைசக்தியை எண்ணியெண்ணி ஆனந்தப்பட்டு களிப்பில் மயங்கிக்கிடந்தேன். அடிக்கடி சிரிப்பு வரப்பார்த்தது. ஆனால் அடக்கிக்கொண்டேன்.

மணி பத்தரையிருக்கும். எங்களுக்கு ஆகாரம் கொண்டுவரப்பட்டது. ஆகாரத்தோடு தலைவனும் இன்னும் ஐந்தாறு புதுமனிதர்களும் வந்தார்கள். அவர்களுடைய விலைஉயர்ந்த உடையிலிருந்து அவர்கள் அந்தஜாதியாருக்குள் பெரிய மனிதர்களாக இருக்கவேண்டுமென்று தெரிந்தது. அவர்களுடன் கைகுலுக்கினோம். அந்த இங்கிலீஷ் படித்தவனும் வந்தான். மகம்மதிய வழக்கப்படி நடுவில் உணவுப்பொருள்கள் வைக்கப்பட்டு, நாங்கள் சுற்றிலும் உட்கார்ந்து அவரவர்களுக்கு இஷ்டமானதை அவரவர்களே பரிமாறிக்கொண்டு சாப்பிட்டோம். ரொட்டியும், வெண்ணெயும், பாலும் பழங்களும், மச்சமும் மாமிசமும் மிகவும் உயர்ந்தரகங்களாயிருந்தன. பிராந்தி முதலான போதைவஸ்துக்கள் மட்டும் இல்லை. அந்தமாதிரியான உணவுகளை அதற்கு முன்னாலும் பார்த்ததில்லை; பின்னாலும் பார்த்ததில்லை. மாமிசம் மாட்டுக்கறியாக இருக்குமோ என்று அருவருத்து நான் அதைமட்டும் விட்டுவிட்டு மற்றவைகளை உண்டேன்.

சாப்பாடுமுடிந்தது. உணவுகளை அகற்றி விட்டு அதே இடத்தில் ஒரு ஹூக்காச்செம்பு வைக்கப்பட்டது. அந்த ஹூக்காச்செம்பு வேறெங்கும் பார்த்திராத அவ்வளவு பெரியதாக வும் பன்னிரண்டு புகை உருஞ்சும் குழாய்கள் உள்ளதாகவும் இருந்தது. ஆளுக்கு ஒரு குழா யைப் பிடித்துக்கொண்டு புகைவிட்டுக்கொண் டே பேசிக்கொண்டு இருந்தோம்.

மணி பன்னிரண்டுக்குப்பக்கமாயிற்று. விடி ந்து பேசிக்கொள்ளலாமென்று கூட்டம் கலைந் தது. எங்களுக்கு உயர்ந்த வில்கட்டில்களில் வெல் வெட் மெத்தைபோட்டுக் கொசுவலை கட்டிய படுக்கைகள் தயாரிக்கப்பட்டன.

விடிந்தது. மாணிக்கம் நாய்க்கர் எனக்கு முன்னால் எழுந்து பல்துலக்கிக்கொண்டிருந்தார். நான் பக்கததில் போய் நின்றேன். நாய்க்கர் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, "நீங்கள் மிகவும் ஜாக்ரதையாக இருக்கவேணும். நான் அவர் களுடன் எதைச்சொன்னாலும், எப்படிப்பேசி னாலும், சிரித்துக்கிரித்துக் கெடுத்துவிடக்கூடாது. நீங்கள் வாயே திறக்கப்படாது. அவர்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டால் நாம் தப்பமுடியாது," என்றார். நான் முன்னமேயே அப்படி முடிவு கட்டி யிருப்பதைத் தெரிவித்தேன். எங்கள் இரண்டுபேருக்கு மட்டும் காலை ஆகாரம் வந்தது. நாங்க்ள சாப்பிட்டு முடிந்தவுடன் தலைவனும், அந்த இங்கிலீஷ் தெரிந்தவனும் இன்னும்

இருபதுபேரும் வந்தார்கள். வெகு சந்தோஷமாகப் பேச்சுவார்த்தைகள் மொழிபெயர்ப்போடு நடந்தன.

எல்லைப்புறத்தில் சுமார் நாலு லட்சம் பேர் ஆயுதபாணிகளாக இருப்பதாகவும் இன்னும் ஒரு மாதத்தில் இங்கிலீஷ்காரரோடு போர் தொடுக்கப் போவதாகவும் சொல்லி, எங்களது சேனை எவ்வளவு பேர் கொண்டது என்று தலைவன் கேட்டான். நாய்க்கர் தன்னுடைய சேனை பத்துலட்சம் கொண்டது என்றார். என்னையறியாமல் எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. உடனே அந்தச் சிரிப்பை இருமலாக மாற்றிக் கொண்டேன். நாய்க்கர் என்னைத் திரும்பிப் பார்த்தார். நான் திகிலடைந்தேன்.

பிறகு போர் நடத்தப் போகும் 'பிளான்'களுடைய பேச்சு வந்தது. நாய்க்கர் கோணல் மாணலாக ஒரு இந்தியா படம் வரைந்து, வடமேற்கில் எல்லைப் புறத்தைக் காட்டி தெற்கே விந்திய பர்வதம் வரைக்கும் தனக்குச் செல்வாக்குள்ள நாடென்று கோடிழுத்துக் காட்டி என்னென்னமோ பொய்யும் புளுகுமாக யுத்தத்திற்கு அணிவகுத்துக் காட்டினார். அங்கிருந்தவர்களில் ஒருவனாவது பூகோளம் படித்தவனல்ல என்று கண்டு கொண்டேன். அந்த இங்கிலீஷ் தெரிந்தவனும் கூட நம்மைப் போல் பள்ளிக்கூடத்தில் பூகோளம் படித்து பிரிட்டிஷ்ராஜ்ஜியத்தின் எல்லைகளை மனப்பாடம் பண்ணியிருக்க

முடியாது. நாய்க்கர் எதைச் சொன்னாலும் ஏனென்பாரில்லை.

திட்டங்களையெல்லாம் வகுத்தபின், எங்களுக்குள் கடிதப்போக்கு வரவுக்கு நாய்க்கர் சென்னையில் ஒரு பொய்யான விலாசம் கொடுத்தார். இங்கிலீஷ் தெரிந்தவன் எழுதிக் கொண்டான். அவனே 'நௌஷேரா' என்ற ஊரில் ஒரு விலாசத்தை எழுதி நாய்க்கருக்குக் கொடுத்தான். இந்த ரகஸியங்களை வெளியில் சொல்லிவிடக் கூடாதென்று சத்தியம் வாங்கிக் கொண்டார்கள். மத்தியானம் எங்களுக்கொரு விருந்து ஏற்பாடு செய்திருப்பதாயும், மாலையில் நேற்று சந்தித்த நேரத்தில் எங்களை ரோட்டுக்கு கொண்டு போய் விடுவதாகவும் சொன்னார்கள்.

சுமார் ஐம்பது பேருடன் விருந்துண்டோம். நாலு மணிக்கு புஷ்பங்களும், பழக்கூடைகளும் வந்தன. பழங்களை சைக்கிளின் 'சைட்காரில் கொண்டமட்டும் கொட்டினார்கள். ராஜோபசாரந்தான். புறப்படு முன் நாய்க்கர் மோட்டார் சைக்கிளை ஓட்டிப்பார்த்தார். அது சரியாக இருந்தது. நாலரை மணிக்குப் புறப்பட்டோம். ஐந்தரை மணிக்குள் ரஸ்தாவுக்குப் பின்னாலிருந்த புதருக்கு வந்துவிட்டோம். ஆறு மணி வரையிலும் காத்திருந்தோம். அந்த இடங்களில் என்னேரமும் காவல் செய்து வருகிற எல்லைப்புற ஜாதியைச் சேர்ந்த துப்பாக்கி வீரர்கள் கரட்டின் மேலிருந்துகொண்டு 'ரோட்டை' எட்டி

யெட்டிப் பதுங்கிப் பதுங்கிப் பார்த்துக் கொண் டிருந்தார்கள்.

அங்கே அரைமணி நேரத்துக்கொருதரம் இங்கிலீஷ் சோல்ஜர்கள் பாரா வருகிற வழக்க மாம். அந்த அரைமணி நேரத்துக்குள் தான் இவர்கள் ரஸ்தாவுக்குள் இறங்குகிற வழக்க மாம். அதனுல் ஒரு பாராக் கூட்டம் வந்து போனவுடன் எங்களை ரஸ்தாவுக்கு அனுப்பத் தான் மேலேயிருந்த வீரர்கள் பார்த்துக் கொண் டிருந்தது. ஆறுமணி பத்து நிமிஷம். மேலே யிருந்தவர்கள் கொடி காட்டி சைகை செய்தார் கள். உடனே தலைவன் எங்களைக் கைகுலுக்கி அந்தப் புதரைக் காட்டினுன். புதரில் நுழைந் தோம். ரஸ்தாவிற்கு வந்தோம். சற்று நேரத்தில் எங்களுக்குப் பின்னுல் மோட்டார் பைசக்கிளை யும் புதருக்குள் இருந்தபடியே வெளியில் தள்ளி விட்டு ஆட்கள் மறைந்துவிட்டார்கள். ரோட்டில் யாருமில்லை. ஒருமைல் வந்த பிறகுதான் நாய்க்கர், "தப்பிப் பிழைத்தோம்" என்று வாய்திறந்தார்.

வழியில் பல இடங்களில் ராணுவ டாணுக் கள். அங்கங்கே எங்களை நிறுத்தி எங்கள் அனு மதிச் சீட்டைப் பரிசோதித்தார்கள். கடைசி தாணுக்காரன் எங்களை வெகுநேரம் சோதித்து, "நேற்ருேடு அனுமதி முடிந்து விட்டது. இன் றைக்கு அனுமதி இல்லையே," என்ருன். நாய்க் கர், ராணுவத்தலைவரின் அனுமதியின்பேரில் ஒரு நாள் அதிகமாகத தங்கினதாகவும். அவர் விருந்து

நடத்திப் பழங்களையும், புஷ்பங்களையும் கொடுத்தனுப்பியதாகவும் சொல்லி ஐந்தாறு ஆரஞ்சுகளையும் சில ஆப்பிள்களையும் ஒரு குலை கருப்புத் திராட்சையையும் எடுத்து அந்த 'சோல்ஜருக்குக் கொடுத்துச் சிரித்தார். அவன் அதை வாங்கிக் கொண்டு வந்தனம் சொல்லி விட்டுவிட்டான்.

முன்னே தங்கின டி. பி. டபள்யூ பங்களாவிற்கு வந்து சேர்ந்தோம். அங்கே ஜேகப் துரையின் 'மோட்டார்கார்' நின்று கொண்டிருந்தது. நாய்க்கர் திடுக்கிட்டுப் போனார். வெகு நேரம் பங்களாவிற்குள் போகாமல் வெளியில் நின்று கொண்டே யோசனை செய்தார். திடீரென்று உள்ளே போகத் தீர்மானித்தார். போனோம். துரை எங்களைக்கண்டு ஆச்சரியப்பட்டார். விசாரித்தார்; நாய்க்கர் சிரித்துக்கொண்டே துரையைக் கூட்டிக்கொண்டு பங்களாவின் பின் கட்டிற்குப் போய் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

அன்றிரவைப் பங்களாவில் கழித்தோம். மறுநாள் காலை ஆகாரத்துக்குப் பின் நானும் நாய்க்கரும் பெஷாவாருக்குப் புறப்பட்டோம். துரை உத்யோக வேலையாக வேறெங்கேயோ போனார்.


பெஷாவருக்குவந்து இளைப்பாறிய பின்நான் "ஜேகப் துரைக்கு எப்படிச் சொன்னீர்கள்?" என்று கேட்டேன. "எலலாவற்றையும் நடந்தபடி சொன்னேன். துரை அதிசயிதது ஆனந்த

மடைந்தார். கடைசியாக இதைப்பற்றி யாரிடத்திலும் கொஞ்சங்கூடச் சொல்ல வேண்டாமென்று எச்சரிக்கை செய்தார்'' என்றார்.

## யாத்திரை


சுமார் ஐந்துமாத காலம் வட இந்தியாவிலுள்ள பல இடங்களைப் பார்த்தோம். ஹரித்துவாரம், ரிஷிகேசம், மஸ்ஸூரி, ரூர்க்கி, சிம்லா, ஆக்ரா, கான்பூர், அலகாபாத், லக்னௌ, அமிருதஸரஸ், ஸ்ரீ நகர், காசி, கயா, மதுரா, பிருந்தாவன், கோவர்தனம், கோகுலம், பாட்னா, கல்கத்தா முதலான அனேக இடங்களில் தங்கினோம். ஆஜ்மீர், கபூர்தலா, காசி, தர்பங்கா முதலான சில சுதேச மன்னர் சமஸ்தானங்களுக்கும் போனோம். மாணிக்கம் நாய்க்கர் பெரிய சர்க்கார் உத்யோகஸ்தர் ஆனதால் சுதேச மன்னர்கள் எங்களை சமஸ்தான விருந்தாளிகளாக உபசரித்தார்கள். நாங்கள் பார்த்த பல சமஸ்தானங்களிலும் கபூர்தலாமட்டும் என் கண்ணிலேயே இருந்து கொண்டிருக்கிறது. கபூர்தலா மகாராஜா வெகு உல்லாசமானவர். நல்ல ரஸிகர். அவர் ஸ்பெயின் தேசத்து மாதிரியில் ஒரு சிங்கார மாளிகை கட்டியிருந்தார். அந்த மாளிகையின் ஒரு பகுதியில், விருந்தினர்கள் விடுதியில் எங்களுக்கு இடங் கொடுத்தார்கள். அந்த மாளிகையில் நான் கண்ட சித்திரங்கள் எனக்கு மிகவும் ஊக்கமளித்தன. பத்தடி பதினைந்தடி உயரமும் உள்ளனவாக மிகச்சிறந்த ஐரோப்பிய சித்திரக்காரர்

என் கதை : நாமக்கல்
கவிஞர் ஓவியம்



மத்வாச்சாரியார். ஜீவாத்மா வேறு பரமாத்மா வேறு என்று காண்பிக்கிறார். வெற்றிக் குறி 'வி' (V) அல்ல.
பக்தர்கள் பலர் வேண்டுகோளுக்காக எழுதப்பட்டது.

என் கதை : நாமக்கல்
கவிஞர் ஓவியம்



ரப்பர் இல்லாமல் பென்சிலால் நேரில் பார்த்து வரைந்தது.

களால் வரையப்பட்ட வெகு கம்பீரமான படங்களை அங்கேதான் பார்த்தேன். ஒவ்வொன்றும் ஐம்பதினாயிரம், அறுபதினாயிரம், லட்சம் ரூபாய் கொடுத்து வாங்கப்பட்டதென்ற பல படங்கள் அம்மாளிகையில் வெவ்வேறு இடங்களை அலங்கரித்தன. சித்திரங்களால் சிங்காரிக்கப் படாத சுவர் அந்த மாளிகையில் இல்லை. இயற்கைக் காட்சியின் படங்களே அதிகம். உருவப்படங்களும் அங்கங்கே இருந்தன. அந்த மாளிகைக்குள் நுழையும் தலைவாசலுக்கு நேராக உள்ளே கொஞ்ச தூரத்தில், அப்போது இருந்த மகாராஜா சிம்மாசனத்தில் உட்கார்ந்திருப்பது போன்ற ஒரு ஓவியம் இருந்தது. அதற்கென்று கட்டப்பட்ட ஒரு கூண்டில் அந்தப்படம் அமைக்கப்பட்டிருந்தது. படத்தின் மேல் வெளிச்சம் விழுகிறவிதம் வெகு சாமர்த்தியமான ஒரு சூழ்ச்சியால் மிதப்படுத்தப்பட்டிருந்தது. உள்ளே நுழையும்போதே முதலில் கண்ணுக்குப் படக்கூடியது அந்தப் படம்தான். அதைப் பார்த்தவுடன், வருகிறவர்களை வரவேற்க மகாராஜாவே எதிரில் உட்கார்ந்து காத்திருப்பது போல இருந்தது. கொஞ்ச நேரம் போனபிறகுதான் அது படம் என்று தெரியும். அது ஒரு இத்தாலி தேசத்துச் சித்திரக்காரரால் வரையப்பட்டதென்றும் அதன் விலை பத்தாயிரம் பவுன் (அப்போதைய விலையில் சுமார் லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய்) என்றும், அந்த மாளிகையைப் பார்த்துக்கொள்வதற்

கென இருந்த எஞ்சினீயர் சொன்னார். அந்தப் படத்தின் அருகிற் போய்ப்பார்க்க எனக்கு ஆசை வந்தது. கிட்டப் போகப்போக உருவம் கெட்டு விட்டது. கித்தான் மேல் மொத்தை மொத்தை யாக வர்ணங்கள்தான் இருந்தன. எனக்கு அள விடக் கூடாத ஆச்சரியம் உண்டாகி விட்டது. தூரத்தில் ஒவ்வொரு பாகமும் உருண்டு திரண்டு உயிராக விளங்கிய அந்தச்சித்திரம் சமீபத்தில் வெறும் சாயக்கொத்துக்களாகச்சப்பிட்டுப்போய் விட்டது. பழையபடி பின்னால் போய் எட்ட நின்று பார்த்தேன். அடடா! என்ன அற்புதம்! அது ஒரு வெகு அபூர்வமான வேலைப்பாடு. உண் மையான ஜீவன் காட்டக் கூடிய உருவம் அந்த ஒரு முறையில் வரையப் பட்ட படங்களில் தான் அமையும். ஆனால் அதைத் தூரத்தில் இருந்து தான் பார்க்கவேணும். அந்த வேலை தெரிந்த கலைஞர்கள் வெகு சிலரே என்பதைப் பின்னால் அறிந்தேன். அந்த மாதிரிப் படம் வரைய வேணு மென்று ஆனமட்டும் முயன்று பார்த்தேன். முடியவில்லை. அந்த முறை தெரிந்த ஆசான் இந்த நாட்டில் இப்போது ஏது!

* * * * *

நாங்கள் வட மதுரையில் (மத்ரா) தங்கி யிருந்த போது மாணிக்கம் நாய்க்கருடைய தகப் பனாரின் திவச நாள் வந்தது. திவசம் கொடுப் பதில் மாணிக்கம் நாய்க்கர் நம்பிக்கை யுள்ளவ ரென்று சொல்ல முடியாது. ஆனால் தன் தந்தை

யின் வழக்கங்களை அவமதிக்கக் கூடாதென்பதற்காக வைதிக முறைப்படி சிரார்த்தம் நடத்துவார்.

வடநாட்டிலுள்ள எல்லா க்ஷேத்திரங்களிலும் ரைல்வே ஸ்டேஷனிலேயே பண்டாக்கள் காக்கைகள்போலக் காத்துக் கொண்டிருப்பார்கள். கழுகுகளைப்போல கொத்திப்பிடுங்கி தட்சிணை வாங்குவார்கள். பண்டாக்கள் என்றால், கோவில்களில் சேவைகளைச் செய்வித்து சிரார்த்தம் முதலான சடங்குகளைச் செய்துவைக்கும் பஞ்சாங்கப் பிராமணர்கள். அப்படிச் சேவைபண்ணிவைக்கிற பிராமணர்கள் தமிழ்நாட்டு ஸ்தலங்களிலும் உண்டு. ஆனால் வடநாட்டுப்பண்டாவுக்கும் தமிழ்நாட்டு வைதிக வாத்தியார்களுக்கும் எவ்வித ஒற்றுமையும் காணமுடியாது. வடநாட்டுப் பண்டாக்களில் பெரும்பாலாருடைய ஆடை, அலங்காரம், ஆசாரங்கள் எல்லாம் தமிழனுக்கு அருவருப்பையே உண்டாக்கும். அவர்களில் எல்லாரும் நித்தியஸ்னனம் செய்வார்களோ என்பது கூடச்சந்தேகந்தான். குளிர்தேசமானதால் கோட்டும் சட்டையும் முண்டாசுமாகத்தான் இருப்பார்கள். நம்மோடு நடந்துகொள்ளுகிற மாதிரியிலும் தமிழ்நாட்டானுடைய நளினமும், நயமும் இராது.

மதுராபுரி, கிருஷ்ணபரமாத்மாவின் லீலைகள் நடந்த முக்கியமான இடங்களில் ஒன்று. விசேஷமான க்ஷேத்திரம். யமுனா நதிதீரம். அங்கே தன் தகப்பனாருடைய சிரார்த்த நாள் நேர்ந்ததில்

நாய்க்கருக்கும் மிகச்சந்தோஷம். நாங்கள் மதுரா புரிக்குப் போனதுமுதல் மூன்றுநாளாக எங்களைச் சுற்றிக்கொண்டிருந்த ஒருபண்டாவிடம் சிரார்த்தத்திற்கு ஏற்பாடுகளைச் செய்யச்சொல்லி சாமக்கிரியைகளுக்கு வேண்டிய பணத்தையும் கொடுத்தோம். சிரார்த்தநாள் காலையில் பண்டா வந்தார். கையில் கொஞ்சம் தர்ப்பையும், மட்டை யுடன் உலர்ந்துபோன ஒரு தேங்காய்க் குரும்பை யும் கொஞ்சம் புஷ்பங்களும் இருந்தன. இந்தக் காய்ந்துபோன குரும்பை ஒன்றையேதான் 'நரியல்' என்று வைத்துக்கொண்டு எல்லாச் சடங்குகளுக்கும் உபயோகப் படுத்திக்கொள் வார்கள். திவசத்திற்கு வேண்டிய சாமான் கள் அவ்வளவுதானு என்று கேட்டோம். ஜெப்பி லிருந்த ஒருகாகிதப் பொட்டணத்தை எடுத்துக் காட்டினர். அதில் கொஞ்சம் எள்ளும் இன் னும் சில வடநாட்டுத் தானியங்களும் இருந்தன. அவ்வளவுதான்.

பண்டாவை முன்னுற்போகச் சொல்லிவிட்டு நானும்நாய்க்கரும் மோட்டார்சைக்கிளில் யமுனு நதிப் படித்துறைக்குப் போனேம். ஸ்னனம் செய்தோம். நாய்க்கர் வைதிகமாகப் பட்டாடை யைக் கச்சம்வைத்துக் கட்டிக்கொண்டார். திவசச்சடங்குகள் நடந்தன. அந்தச் சடங்குகளி லும் தமிழ்நாட்டுப் புரோகிதன் நடத்திவைக்கிற பக்தி சிரத்தையோ மந்திர விஸ்தாரங்களோ இல்லை. ஏதோ ஒருவிதமாகச் சடங்குகளை நடத்தி பிண்டப்பிரசாதத்தை ஆற்றில் விடுவதற்காக

நாய்க்கரைக் கூட்டிக்கொண்டு பண்டாவும் ஆற்றில் முழங்கால் ஆழத்தில் இறங்கி நின்றார். நாய்க்கர் தம்முடைய இரண்டுகைகளிலும் பிண்டத்தைப் பூசனைப்புஷ்பங்களோடு ஏந்திக்கொண்டு நிற்கிறார். பண்டா அந்தஇடத்தில் சொல்ல வேண்டிய மந்திராதிகளைச் சொல்லிவிட்டு அந்தப்பிண்டப் பிரசாதத்தின்மேல் தக்ஷிணை வைக்கச் சொன்னார். நாய்க்கர் ஐந்துரூபாய் வைக்கும்படி எனக்குச்சொன்னார். ஐந்துரூபாய் நாணயங்களை நாய்க்கர் கையிலுள்ள பிண்டங்களின்மேல் வைத்தேன். அதைப்பார்த்துவிட்டு பண்டா அது போதாதென்று கேட்டார். நாய்க்கர், "மூன்று நாளாக நம்மைச் சுற்றிக்கொண்டே அலைகிறார். போகட்டும், இன்னும் ஐந்துரூபாய் வையுங்கள்" என்றார். நான் வைத்தேன். பண்டாவுக்கு அதுவும் பத்தவில்லை. எங்களுடைய பெட்டிகள் படுக்கைகள் முதலான பிரயாணச் சாமான்களையும், பியூன், சமையற்காரன், மோட்டார்சைக்கிள் முதலியவற்றையெல்லாம் மூன்று நாளாகப் பார்த்திருந்த பண்டா, நாய்க்கர் நல்ல பணக்காரரெனக் கண்டுகொண்டு எட்டியமட்டும் கறந்துவிட எண்ணி, "இல்லை பிரபு! தாங்கள் எவ்வளவோ தூரத்திலிருந்து க்ஷேத்திர யாத்திரைக்காக வந்திருக்கிறீர்கள். மத்ரா வெகு விசேஷமான ஸ்தலம். இங்கே செய்கிற சிராத்தம் காசி, ராமேஸ்வரம், கயா முதலிய இடங்களில் செய்வதைக்காட்டிலும் உயர்ந்தது. பிராமணனுக்குத் திருப்தியான தானம்செய்தால்..."

என்று என்னென்னமோ ஹிந்துஸ்தானியில் சொல்லி கெஞ்சிப் பல்லைக்காட்டினார். நாய்க்கர் மறுபடியும் ஐந்துரூபாய் வைக்கச் சொன்னார். நானும் வைத்தேன். பண்டாவின் ஆசை அடங்க வில்லை. மீண்டும் அந்தப்புண்ணியம், இந்தப் புண்ணியம், அப்படிமோக்ஷம் இப்படிமோக்ஷம், என்றுசொல்லி நாய்க்கரை ராஜாவென்றும், மகா ராஜாவென்றும், பிரபுவென்றும் புகழ்ந்து கை கூப்பிக் கும்பிட்டு தக்ஷிணைபோதாதென்று பண் டா மன்றாடினார். நாய்க்கர் மிகவும் சலிப்புடன், "தொலையுங்கோ இன்னும் ஐந்துரூபாய்" என்றார். நானும் தொலைத்தேன். பேராசைபிடித்துவிட்ட பண்டாவுக்கு இருபதுரூபாய்வைத்தும் போத வில்லை. மறுபடியும் பழைய புகழ்மாலைகளையே புனைந்து, "உங்களுடைய அந்தஸ்துக்குக்குறைந் தது நூறுரூபாயாவது தரவேணும். இல்லாவிட் டால் சிரார்த்தபலன் இல்லை" என்று பின்னும் கெஞ்சிப் பிடிவாதம் செய்தான். வந்துவிட்டது கோபம் நாய்க்கருக்கு. கோபம்வந்துவிட்டால் நாய்க்கர் ஒரு காட்டுப் புலிதான். தாய், தந்தை, உடன்பிறப்பு, உற்றார், உறவினர் என்ற எதையும் எண்ணிப் பார்க்கமாட்டார். எதிரியை முறி யடிக்க எதையும்செய்யத் தயங்கமாட்டார். அவருக்கு எவ்வளவுக் கெவ்வளவு கோபம்வரு கிறதோ அவ்வளவுக் கவ்வளவு பேச்சுக் குறைந்து விடும். அவருடைய கோபத்தை வார்த்தை களால் வெளியிடமாட்டார். அவர்முகத்தில் காணலாம். செய்கையில் முடித்துவிடுவார்.

அவருடைய கடுங் கோபத்தை முகத்திற் கண்டு பழகியிருந்த நான் பண்டாவை என்ன செய்து விடுவாரோ என்று பயந்தேன்.

எவ்வளவு கோபத்திலும், நாய்க்கர் புத்திக் கூர்மையுள்ள பேச்சுக்களையும், நல்ல ஹாஸ்யத்தையும் ஏற்றுக்கொண்டு ரஸிப்பார். அவர் கம்ப ராமாயணத்தில் நல்ல புலமையுள்ளவர். சிற்சில இடங்களில் பண்டிதர்கள் வியக்கும்படியான குதர்க்க அர்த்தங்களையும் வெறும் விவாதத்துக்காகச் சொல்லுவார். நானும் அவரும் அடிக்கடி கம்பராமாயணத்தில் சல்லாபிப்போம். நான் அநேக இடங்களில் பாட்டுகளை மனப்பாடமாக ஒப்பிப்பேன். அதில் அவருக்கு வெகு திருப்தி. ஏனென்றால் அவருக்குப் பாட்டுகள் பாடம் இல்லை.

அப்படிச் சல்லாபிக்கிற நினைப்புடன் நான் இந்தப் பண்டாவின் பேராசையைக் கண்டு வேடிக்கையாக, "அருத்தி வேதியர்க்கு ஆன் குலம் ஈந்து, அவர் கருத்தினுளைசை கரையின்மை கண்டு, இறை சிரித்த தன்மை நினைந்தழும் செய்கையாள்," என்ற கம்பன் பாட்டைச் சொல்லிச் சிரித்தேன். இந்தப் பாட்டைச் சொன்ன உடனே நாய்க்கர் முகத்தில் தாண்டவமாடிய மூர்த்தன்யம் திடீரென்று மாறிச் சிரித்து விட்டார். நாய்க்கரின் கொதிப்புக் கொஞ்சம் குறைந்தது.

அந்தக் கதை அப்படியே நிற்கட்டும். இதைப் படிக்கிறவர்களில் மேற்சொன்ன கம்பன் பாட்டை அறியாதவர்களும் இருக்கலாம். ஆனால் அந்தப்பாட்டின் சாரத்தைச் சொல்லிவிட வேண்டியது அவசியம். இந்தப் பாட்டு சுந்தர காண்டம் காட்சிப் படலத்தில் உள்ளது. அனுமான் சீதைக்காக இலங்காபுரி முழுவதையும் தேடிக்கொண்டு வருகிறார். அந்தச் சமயத்தில் அசோக வனத்தில் ராமனை நினைந்து நினைந்து அழுதுகொண்டிருக்கிற சீதையை கம்பர் சித்தரிக்கின்றார். ஸ்ரீராமனுடைய பற்பல அருமை பெருமைகளை ஒவ்வொன்றாக எண்ணி யெண்ணிச் சீதை துக்கப்படுகிறாள். அந்த அருமைக் குணங்களில் ஒன்றைக் காட்டின ஒரு நிகழ்ச்சியை சீதை இப்போது நினைக்கிறாள். அந்த நிகழ்ச்சி என்னவென்றால்: ராமன் வனத்திற்குப் புறப்படுவதற்கு முன்னால் தன்னுடைய சொந்தமான பொருள்களை யெல்லாம் தானம் செய்கிறான். ஒரு வேதியர் தனக்குப் பசுமாடுகள் வேண்டுமெனக் கேட்கிறார். "உமக்கு எத்தனை மாடுகள் வேண்டும்" என்று ராமன் கேட்கிறான். "எத்தனை கொடுத்தாலும் சந்தோஷம்" என்றார் வேதியர். ராமன் அந்த வேதியருக்குத் தன்னுடைய ஆயிரக்கணக்கான பசுக்கள் அடங்கிய மந்தையைக் காட்டி, "இங்கிருந்து ஒரு கல்லை வீசுங்கள், அந்தக் கல் எங்கே விழுகிறதோ அந்த எல்லைக்குள் உள்ள எல்லாப் பசுக்களையும் உங்களுக்கே தந்து விடுகிறேன்" என்றான். வேதி

யர் தன்னுடைய பலத்தையெல்லாம் சேர்த்து வெகு வேகமாகக் கல்லை வீசினார். அந்தக் கல் அநேக ஆயிரம் பசுக்களை அடக்கக் கூடிய எல்லையைத் தாண்டி விழுகிறது. சொன்னபடி அதிலடங்கிய அத்தனைப் பசுக்களையும் அந்த வேதியருக்கு ராமன் கொடுக்கிறான். அத்தனை மாடுகளையும் வேதியர் தன்னுடைய ஆட்களிடம் ஒப்பித்துத் தன் வீட்டுக்கு அனுப்பி விட்டுப் பின்னும் நின்றாராம். ராமன் "ஏன் நிற்கிறீர்கள்? இன்னும் என்ன வேண்டும்"? என்று கேட்டான். வேதியர், "மீதியிருக்கிற பசுக்களையும் தந்தால் தேவலை" என்று கேட்டாராம். அதைக் கேட்ட ராமன் அந்த வேதியருடைய பேராசையைக் கண்டு கோபங் கொள்ளாமல் சிரித்தானும். சிரித்து விட்டு மிச்ச மிருந்த பசுக்களையும் முகங் கோணுமல் அவருக்கே கொடுத்தனுப்பினனும். அந்தப் பெருங்குணத்தை நினைத்து சீதை அசோக வனத்தில் புலம்புகிறாள் என்பதை:

> " பரித்த செல்வம் ஒழியப்படரும் நாள்
> அருத்தி வேதியர்க்கு ஆன்குலம் ஈந்து, அவர்
> கருத்தின் ஆசை கரையின்மை கண்டு இறை
> சிரித்த தன்மை நினைந்தழும் செய்கையாள் "

என்று கம்பன் பாடியிருக்கிறான்.

நான் அகஸ்மாத்தாகச் சொன்ன அப்பாட்டு அப்போதைக்கு நாய்க்கருடைய கோபத்தைக் குறைத்தது, என்றாலும் பண்டாவின் மேல் வந்த வெறுப்பை விலக்கவில்லை. "இந்த இருபது ரூபாயை வாங்கிக் கொள்ளுகிறானு இல்

லேயா என்று கேளுங்கள்,'' என்ருர் நாய்க்கர். நான் எனக்குத் தெரிந்த ஹிந்துஸ்தானியில் அதை எடுத்துக்கொண்டு சடங்குகளை முடிக்கும்படி பண்டாவைக் கேட்டுக்கொண்டேன். பண்டா மறுபடியும் பழைய பல்லவியையே பாட ஆரம்பித்தார். பிண்டப் பிரசாதத்துடன் அப்படி நிருத்திக்கொண்டு வாங்கிவாங்கிப் பழகினவர். பெரும்பாலும் யாத்திரைக்காரர்கள் தங்களுடைய பெற்ருேர்களுக்கென்று புண்ணிய தீர்த்தத்தில் செய்கிற சடங்கிற்குப் பங்கம் வரப்படாதென்று பயந்து பண்டாக்களை எட்டிய மட்டும் திருப்தி செய்து விடுவதே வழக்கம். ஆதலால் எங்களிடத்திலும் அதையே எதிர்பார்த்து அந்தப் பண்டா பணத்தை எடுத்துக்கொள்ளாமல் பின்னும் பின்னும் தன்னுடைய பாட்டையே பாடிக்கொண்டிருந்தார். நாய்க்கர் "என் கையிலிருக்கிற பணத்தை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று எனக்கு உத்தரவிட்டார். நான் அந்த ரூபாய்களை எடுத்து அவற்றை மீண்டும் பையில் போடலாமா என எண்ணிக்கொண்டே இடுப்பிற் சொருகியிருந்த பையைப் பார்க்கக்குனிந்தேன். தலை நிமிர்வதற்குள் நாய்க்கர் தன் இரண்டு கைகளையும் உயர்த்தித் தன் கையிலிருந்த பிண்டப் பிரசாதத்தை அப்படியே பண்டாவின் தலையில் ஓங்கியடித்துவிட்டுக் கரையேறினுர். பண்டா, "அரே பாபி! பிராம்மணத் துரோகி! பிதுர்த் துரோகி! தெய்வத் துரோகி! நீ அந்தப் பாபத்தில்போவாய்! இந்தப்பாபத்தில்போவாய்!

ரௌத்ரவாதி நரகந்தான் உனக்குக் கிடைக்கும். உன்னுடைய பித்ருக்களெல்லாம் தேவலோகத்தி லிருந்துகொண்டு உன்னைச் சபிப்பார்கள்,'' என்று என்னென்னமோ சபித்துக்கொண்டு அப்பி அடித்துக்கொண்டு பின்னாலேயே வந்தான். அவன் போட்ட கூச்சலில் அவனுடன் சேர்ந்த சுமார் இருபதுபண்டாரக்கள் கூடிவிட்டார்கள். மற்றஜனங்களும் பலபேர் வேடிக்கை பார்க்க வந்து விட்டார்கள். சிரார்த்தம் செய்து வைத்த தற்கு தட்சிணைகொடுக்காமல் பிண்டத்தைத் தன் தலையிலடித்து விட்டார்களென்று அந்தப்பண்டா தன்னுடைய இனத்தவர்களுக்குச் சொன்னான். எல்லாப்பண்டாக்களும்சேர்ந்துகொண்டு சிட்டுக் குருவிகளுக்குள் ஒருதுக்கம் நேர்ந்துவிட்டால் அனேககுருவிகள் ஒன்றாகக் கூடிக்கொண்டு சிடு சிடுப்பதைப்போல் அத்தனைப் பண்டாக்களும் ஆளுக்கொருவிதமாக எங்களைச் சபித்தார்கள். நாய்க்கர் அவர்களைச் சிறிதும் பொருட்படுத்தா மல் தன்னுடைய வைதிக உடைகளைக் களைந்து விட்டுமோட்டார் ஓட்டும் உடைகளைப் போட்டுக் கொண்டு 'சைக்கிளை ஸ்டார்ட்' செய்தார். நான் வழக்கம்போல் சைட்காரில் உட்கார்ந்து கொண் டேன். சைக்கிள் புறப்படுவதற்கு முன்னால், பண்டாக்களில் பத்துப்பேர் முன்னாலும் பத்துப் பேர் பின்னாலுமாக நின்று எங்களை வழிமறித்துக் கொண்டு, தட்சிணையாவது கொடுத்துவிட்டுத் தான்போகவேணுமென்று கேட்டார்கள். நாய்க் கர் முடியாதென்று சொல்லிவிட்டார் அந்தப

பண்டாக்களில் கொஞ்சம் வயசான ஒருவர் எங்களிடம்வந்து மிகவும் வணக்கமானதினுசில் தட்சிணைத் தகராறுக்காக தெய்விகச்சடங்குகளை அப்படி அரைகுறையாக விட்டுப்போவதெல்லோருக்கும் பாபம் என்றுசொல்லி அந்த இருபதுரூபாயை வாங்கிக்கொண்டு சிரார்த்தத்தைப் பூர்த்திசெய்து விடுவதாகப் பஞ்சாயத்துச்சொன்னார். அதைக் கேட்டுக்கொண்டே நாய்க்கர் மோட்டார் சைக்கிளை முடுக்கினார். அதுநகர்ந்தது. முன்னாலிருந்தவர்கள் விலகிக்கொண்டார்கள். ஆனால் பின்னாலிருந்தவர்கள் ஆளுக்கொரு இடத்தில் சைக்கிளையும் சைட்காரையும் இழுத்துப் பிடித்துக்கொண்டார்கள். அப்போதுதான் ஓட்டிவிடப்பட்ட மோட்டார் எஞ்சினில்இன்னும் விசைஏறவில்லையென்றாலும் மெள்ள மெள்ள அத்தனைபேரையும் இழுத்துக்கொண்டு மோட்டார் ஓடஆரம்பித்தது. பின்னாலிருந்தவர்கள் கோணல்மாணலாக இழுத்தமாதிரியால் வண்டி சரியானபாதையைவிட்டு விலகி பக்கத்திலிருந்த ஒருவீட்டின் வாசற்படியிற்போய் மோதிக்கொள்ளும்போல் இருந்தது. உடனே நாய்க்கர் 'பிரேக்' போட்டார். வண்டிநின்றது. ஆனால் ஒருபள்ளத்தில் சாய்ந்துவிட்டது. நாய்க்கர் விழுந்துவிடுவார் போலச் சாய்ந்து சமாளித்துக்கொண்டார். உடனே வண்டியைவிட்டு இறங்கினார். நானும் இறங்கினேன். நாய்க்கர் தன்னுடைய சராய் ஜேப்பில் கையைவிட்டு அதில் எப்போதும் இருக்கிற தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்

தார். இங்கிலீஷிலும் தமிழிலும் பண்டாக்களைச் சவால் கூவினர். அநேகம்பேர் துப்பாக்கியைக் கண்டு தூரப்போய்விட்டார்கள். சிலர் எதிர்த்து நின்று வாதாடினர்கள். நாய்க்கர், கோபம்வந்து விட்டால் எதையும் செய்துவிடுவாரென்று பயந்து, நான் அவர் கையைப் பிடித்துக்கொண்டு, "என்ன! நீங்கள்கூட..........." என்று கேட்டுக் கொண்டே அவர் கையிலிருந்த 'ரிவால்வரை' என்னிடம் விட்டுவிடும்படி கெஞ்சினேன். நாய்க்கர் ஒரு அதிசயமான பிறவி. அபூர்வமான ஆற்றலுடையவர். அதிசயிக்கத்தக்க புத்தி கூர்மையும் உத்ஸாகமும் உள்ளவர். மிகவும் பிடிவாதம் உடையவரென்றாலும் தன்னுடைய குற்றத்தை உணர்ந்துவிட்டால் வெகு கெம்பீரமாகப் பணிந்துபோவார். உடனே ரிவால்வரை விட்டு விட்டார். மோட்டார்சைக்கிளை நேர்படுத்தி மறுபடியும் நாங்கள் பயணமானோம். இதற்குள் அந்தப் பண்டாக்களில் ஒருவன் எங்கிருந்தோ ஒரு போலீஸ்ஜவானைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டான்.

போலீஸ்காரன் நாய்க்கரையும் மோட்டாரையும் பார்த்துவிட்டு ரொம்பவும் மரியாதையான தொனியில் எங்களுடைய விலாசத்தை விசாரித்தான். நாய்க்கர் பதில் சொல்லவில்லை. மோட்டார்சைக்கிளை 'ஸ்டார்ட்' செய்துகொண்டிருந்தார். நான் 'சைட்காரில்' உட்கார்ந்தபடியே நாய்க்கருடைய உத்தியோகத்தையும் விலாசத்தையும் சொன்னேன். நாய்க்கருடைய உயர்ந்த பதவியை அவர்கள் அறியவேணுமென்பது என்

னுடைய ஆசை. நான் சொன்னவிலாசத்தைப் போலீஸ்காரன் எழுதிக்கொண்டிருக்கும்போதே மோட்டார் சைக்கிள் ஓடத்தொடங்கிற்று.

டாக் பங்களாவிற்கு வந்து, திவசங் கொடுத்துவந்த அலுப்பைத் தீர்த்துக்கொள்ளச் சாப்பாட்டில் உட்கார்ந்தோம். ஒரு டாங்கா வண்டி பங்களாவிற்குள் வந்தது. "போலீசாகத் தான் இருக்கும்" என்றார் நாய்க்கர். அப்படியே இருந்தது. ஒரு சப் இன்ஸ்பெக்டரும் ஒரு ஜவானும் இறங்கினார்கள். நாய்க்கர் சாப்பிட்டு வந்து அவர்களை வரவேற்றார். தட்சிணைத் தகராருக்காகத் தன்னைச்சுட்டுவிடுவதாக ரிவால்வரைக் காட்டிப் பயமுறுத்தினதாகப் பண்டா செய்து கொண்ட பிராதின்மேல் வந்ததாகப் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் சொன்னார். நாய்க்கர் நடந்ததையெல்லாம் விவரமாகக் கூறினார். நாய்க்கருடைய உயர்ந்த உத்தியோக அந்தஸ்தை அறிந்த பின் சப்இன்ஸ்பெக்டருடைய விசாரணையின் வேகம் குறைந்தது. சென்னை மாகாணத்தைப் பற்றியும் அதிலுள்ள ஸ்ரீரங்கம், ராமேஸ்வரம் முதலிய க்ஷேத்திரங்களைப் பற்றியும், எங்களுடைய பிரயாணத்தைப் பற்றியும், டெல்லி தர்பாரைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்து விட்டுப் போலீஸ்காரர்கள் போய்விட்டார்கள். மத்ராவை விட்டு இடையிலிருந்த பல இடங்களைப் பார்த்துக்கொண்டு கல்கத்தாவில் சில நாள் தங்கினோம். கல்கத்தாவிலிருந்து பூரிக்குச்சென்று ஜகந்நாதர் கோவிலைத் தரிசித்துக்கொண்டு சென்னைக்குத்

திரும்பினோம். சென்னையில் இரண்டுநாள் தங்கி விட்டு நேரே ராமேஸ்வரம்போய் கயாவிலிருந்தும் காசியிலிருந்தும் கொண்டுவந்திருந்த கங்கா தீர்த் தத்தைக் கொண்டு ராமலிங்கத்துக்கு அபிஷே காதிகளை முழுதும் வைதிக முறையில் நடத்தி விட்டுத் திருச்சினப்பள்ளியில் மாணிக்கநாய்க்கர் வீட்டுக்கு வந்துசேர்ந்தோம். திருச்சினப்பள்ளி யில் தீர்த்தயாத்திரை முடித்தவர்கள் வழக்கமாக நடத்துகின்ற சமாராதனை முதலான சடங்குகளை யும் மாணிக்கம் நாய்க்கர் வெகு சந்தோஷமாகச் செய்வித்தார்.

இங்கே குறிப்பிடவேண்டிய விஷயம் என்ன வென்றால்: மாணிக்கம் நாய்க்கர் நாஸ்திகர் அல் லர். ஆனாலும் வைதிகச் சடங்குகளை நம்பினவர் அல்லர். பார்ப்பனச் சடங்குகளைப் பழிப்பவர். இப்போது தமிழ் நாட்டில் பேசப்பட்டு வருகிற ஆரியதிராவிட பிரச்னைகளை அந்தக் காலத்தி லேயே மாணிக்கம் நாய்க்கர் பேசிக் கொண்டி ருந்தவர். ஆரியர் நாகரீகம் புகுந்து தமிழர் நாகரீ கம் கெட்டுப் போயிற்றென்று அடிக்கடி சொல் லுவார். கம்பராமாயணத்தை மிகச்சிறந்த கவி தையாகவும் தமிழ் இலக்கியமாகவும் கொண் டாடுவாரென்றாலும் ராமாயணத்தை ஆரியர்களு டைய ஏற்றத்தைச் சொல்லுகின்ற நூலாகவே மதிப்பார். ஆரிய மன்னனாகிய ராமனைச் சிறப் பித்து திராவிட மன்னனாகிய ராவணனைக் குறைத்துப் பேசுகின்ற ஒரு ஆரியக் கவியினால் ஆக்கப்பட்ட கதையாகத்தான் ராமாயணத்தை

மாணிக்கம் நாய்க்கர் மதித்தார். 'ராமாயணம் என்ற பெயர் 'ராவணாயனம்' என்று இருக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லுவார். 'ராவணாயனம்' என்று ஒரு நூலை, தான் எழுதப் போவதாக அதற்கு அவர் குறிப்புகளை எழுதிக் கொண்டிருந்ததும் எனக்குத் தெரியும். சுருங்கச் சொன்னால் இன்றைக்குக் கம்பராமாயணத்தைக் குறைத்துப் பேசுகின்ற கட்சி மாணிக்கம் நாய்க்கர் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டதென்றால் அது தவறாகாது. பிற்காலத்தில் 'சுயமரியாதை' இயக்கத்தை ஆரம்பித்து கம்பராமாயணத்தை எரித்து விடவேண்டும் என்ற ஸ்ரீ ஈ.வெ. ராமசாமி நாய்க்கரும்கூட தாம் மாணிக்கம் நாய்க்கரிடத்தில் கேட்டுக் கொண்ட பாடத்தைத்தான் காரியத்திற் காட்ட முன் வந்தாரோ என்றும் நான் எண்ணுவதுண்டு. ஏனெனில் ராமசாமி நாய்க்கர் மாணிக்கம் நாய்க்கருக்கு நெருங்கிய நண்பர். பந்துவல்ல. மாணிக்கம் நாய்க்கர் வேளாளர். ராமசாமி நாய்க்கர் கன்னட தேசத்திலிருந்து குடியேறினவர்களாகச் சொல்லப்படுகிற நாய்க்கர் பரம்பரையைச் சேர்ந்தவர். நாய்க்கர் என்ற பட்டம் மட்டும் எப்படியோ பொதுவாக இருக்கிறது. நானும் ஸ்ரீ ராமசாமி நாய்க்கரும் பல முறை மாணிக்கம் நாய்க்கருடன் தங்குவதுண்டு. ராமசாமி நாய்க்கருடைய கட்சி அபிப்பிராயங்கள் எப்படியிருந்தாலும் என்னிடம் மிகவும் அன்புடையவர். வெகு சரசமானவர். மிகவும் விரும்பத்தக்க நண்பர். தன்னிடத்திலுள்ள எதையும்

பிறருக்குக் கொடுத்து இன்புறக் கூடியவர். கட்சி வாதத்துக்காக எவ்வளவு கடுரமாகப் பேசினுலும் மனிதனுக்கு மனிதன் வெகு மரியாதை யுள்ளவர். நான் பள்ளிக்கூடப் படிப்பை விட்டபின் அடிக்கடி மாணிக்கம் நாய்க்கரிடம் போவேன். அங்கே ஸ்ரீ ராமசாமி நாய்க்கர் அறிமுகமானுர். அந்தக்காலங்களில் மாணிக்கம் நாய்க்கர் தன்னுடைய 'ராவணுயனத்தைப்' பற்றி அடிக்கடி பேசுவார். ராமசாமி நாய்க்கரும் நானும் கேட்டுக் கொண்டிருப் போம். சில சமயங்களில் எனக்கும் மாணிக்கம் நாய்க்கருக்கும் அபிப்பிராய பேதம் உண்டாகும். அந்தச் சமயங்களில் ராமசாமி நாய்க்கர் இரண்டு கட்சியிலும் சேராமல் வெகு சாமர்த்தியமாக நடுநிலே வகிப்பார்.

எனவே மாணிக்கம் நாய்க்கர் பார்ப்பனீயச் சடங்குகளேயும் ஆரியர் வழக்கங்கள் என்று தான் கருதினவற்றையும் பழித்துப் பேசுகின்ற பான்மையுள்ளவர். அப்படிப்பட்ட மாணிக்கம் நாய்க்கர் வட நாட்டு க்ஷேத்திரங்களேயெல்லாம் வைதிக முறையிலேயே தரிசனம் செய்தார். மத்ராவில் கெட்டுப்போன தன் தகப்பனுருடைய திதியை காசியில் ஒரு தமிழ் நாட்டுப் புரோகிதனேக் கொண்டு பூர்த்தி செய்தார். ஹரித்துவாரத்திலும் பிரயாகையிலும் காசியிலும் கங்கை நீரைப் பல குடங்களில் நிரப்பிப் பந்தனம் செய்து கொண்டார். நேரே ராமேஸ்வரத்துக்குப் போய் வைதிக முறையில் அபிஷேகம் செய்த பிறகு தான் வீட்டுக்குப் போனுர். வீட்டுக்கு வந்ததும்

சமாராதனை நடத்தினார். அத்தனையும் பார்ப்ப னர்களைக் கொண்டே நடத்தினார். அதெல்லாம் அப்போது எனக்கு ஆச்சரியமாகத் தோன்ற வில்லை. இப்போது அவற்றை நினைத்துப் பார்த் தால் இந்த காசி, கயா, கங்கை, யமுனை என்ற நம்பிக்கைகள் அவனறியாமலேயே தமிழனு டைய ரத்தத்தில் எவ்வளவு ஏறியிருக்கிறதென் பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இதே மாதிரி வடக்கேயிருக்கிற ஒவ்வொரு ஹிந்துவும் நாங்கள் தமிழ் நாட்டுக் காரர்கள் என்பதை அறி ந்தவுடன் திருப்பதி, ஸ்ரீரங்கம், மதுரை, ராமேஸ் வரம் முதலிய க்ஷேத்திரங்களைப் பற்றியே விசா ரித்து எங்களுக்கு மரியாதை செய்ததும் வெகு ஆச்சரியப்படத்தக்கதே. இதையெல்லாம் நினைத் துப் பார்க்கிறபோது தமிழன் வட நாட்டானைக் கெடுத்து விட்டானா வட நாட்டான் தமிழனைக் கெடுத்து விட்டானா என்பது எனக்கு இன்னும் விளங்கவில்லை. சடங்கு சம்பிரதாயங்களை வெகு தீவிரமாகக் கண்டித்த மாணிக்கம் நாய்க்கரும் கூட, காசிக் கயிற்றை நெடுநாள் கையிற் கட்டிக் கொண்டிருந்ததை நான் அடிக்கடி நினைத்து அதி சயித்துக் கொண்டிருக்கிறேன்.

## நாடகமும் கவிதையும்

என்னுடைய கவிதை உள்ளமும் சித்திர வித்தையும் பண்படுவதற்கு மிகவும் உதவியாக இருந்தது நாடக மேடை. போலீஸ் அதிகாரியின் புதல்வன் என்ற முறையில் எந்த நாடகத்துக்கும் இலவசமாகவும் செல்வாக்குடனும் போவதற்கான வசதிகள் இருந்தன. அதுமட்டுமல்லாமல் இயற்கையாகவே நாடகமோ தெருக்கூத்தோ பார்ப்பதில் எனக்கு அளவுகடந்த ஆசை. 1899 முதல் 1917 வரையிலும் தமிழ் நாட்டிலிருந்த சிறந்த நாடக வித்வான்கள் அனைவரையும் நான் அறிவேன். எந்தக் காரியம் எப்படிப் போனாலும் நல்ல நாடகம் எவ்வளவு தூரத்தில் நடந்தாலும் பார்க்கப் போவேன். அந்தக் காலத்துத் தெருக் கூத்துகளிலும் பொம்மை ஆட்டங்களிலும் வெகு எளிய நடையில் உயர்ந்த கருத்துகளுள்ள பாட்டுகளைப் பாடுவார்கள். என்னுடைய சிறு பிராயத்திலும் அந்தக் கவிகள் என் உள்ளத்தைக் கவர்ந்தன. எனக்கு முதன் முதல் பாட்டுகளைச் செய்யும் ஆசையை உண்டாக்கினது தெருக்கூத்துகளும் பொம்மலாட்டங்களுந்தான். அதன் பிறகு நாடக மேடை. நான் பார்த்த நாடகக் கலைஞர்களிற் பலரை இன்றைக்கு நினைத்தாலும் என் உள்ளமும் உணர்ச்சிகளும் சிலிர்க்கின்றன. தமிழ் நாட்டின் நாடகக் கலைக்கு மட்டுமல்ல; இந் நாட்டில்

இப்போது சிறந்து விளங்குகின்ற எல்லாக் கலைகளுக்கும் அவர்கள் செய்துவைத்துப் போயிருக்கிற சேவைகள் எண்ணிறந்தன. அவர்களிற் பலர் வாழ்த்தி வணங்கத்தகுந்த கலைத் தெய்வங்கள். அவர்களுடைய நாடகங்களில், இப்போது இருந்து வருவதைப்போன்ற, கண்ணைக் குத்திக் காதைத் தொளைக்கின்ற பக்க மேளங்கள் இல்லை. தம்பூரா, புல்லாங்குழல், சிற்சில சமயங்களில் வீணை, முகர்சிங், மிருதங்கம், தபேலா, கடம், கஞ்சிரா, தப்பளாக்கட்டை, ஜால்ரா முதலான பலவிதப் பக்க மேளங்களும் உண்டு. எல்லாம் திரை மறைவில்தான் இருக்கும். சிறந்த படுதாக்களும் அழகிய சீன்களும் அப்போதைக்கப்போது தயாராகும். ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக் கொண்டு தங்கள் திறமையைக் காட்டின பல சித்திர வித்வான்கள் தமிழ்நாட்டில் தோன்றியது அப்போதுதான். பள்ளிக்கூடத்துக்குப் போவதையும் மறந்து அந்த சீன் எழுதும் சித்திர வித்வான்களுடைய வேலையைப் பார்த்துக்கொண்டேயிருப்பேன். ஒவ்வொரு நாடகக் கம்பெனியிலும் ஒரு தமிழ்ப் புலவர் புதுப்புதுப் பாட்டுகளைப் புனைந்து கொடுப்பார். அந்தப் பாட்டுகளை எழுதித்தரச்சொல்லி அவைகளைப்போல நானும் பாட்டுகளைச் செய்ய முயலுவேன்.

அப்போதிருந்த நடிகர்களிற் பலரும் சர்வசாதாரணமாக ஆறு கட்டை. சுதிக்கு விடியவிடியப்பாடுவார்கள். இந்தக் காலத்தில் ஆறு கட்டை சுதிக்கு வெகுநேரம் பாடக்கூடிய வித்வான்கள்

இல்லையென்றே சொல்லிவிடலாம். இந்த ஆறு கட்டை சுதிக்குப் பக்க மேளங்கள் ஒன்றோ டொன்று இசைந்து, அவற்றுடன் நடிப்பும் பாட்டும் பாவம் குறையாமல் நிற்கின்ற நேரத்தில் உண்டான உணர்ச்சிகளை இப்போதுள்ள நாடகங்களில் நான் காணவில்லை. அந்தக்காலத்து நாடகமேடையின் பாணியே அலாதி. அதற்குப் பிறகு தமிழ் நாட்டு நாடக மேடை சீர் திருந்துவது போல சீர்கெட்டுப் போனதாகவே நான் கருதுகின்றேன். அது காலப்போக்கின் கதியே யன்றி ஒருவருடைய குற்றமுமல்ல. இந்த இடத்தில், பாட்டில்லாமல் வெறும் நடிப்போடுமட்டும் நடக்கிற நாடகத்தையோ, அல்லது பாடுவதை பக்க உதவியாகமட்டும் வைத்துக்கொண்டு சம்பாஷணைகளைப் பாட்டாகப் பாடாமல் வசனமாகவே நடத்துகின்ற நாடகத்தையோ நான் குறிப்பிடுகின்ற விஷயங்களோடு கூட்டிக் குழப்பி விடக்கூடாது. நாடக மேடையில் பக்க மேளங்களுடன், பேசுவதையும் பாட்டாகவே பேசி, சிரிப்பதையும் பாட்டாகவே சிரித்து, அழுவதையும் பாட்டாகவே அழுது, பாவங்கள் அனைத்தையும் பாட்டிலேயே நடிப்புடன் சேர்த்து, பார்ப்பவர்களை உண்மையாகவே பரவசப்படுத்தி விடக்கூடிய அதி அற்புதமான ஒரு முறையை அந்தக் கலைஞர்கள் கையாண்டார்கள் என்பதை மட்டும் நான் சொல்லுகின்றேன். உதாரணமாகத் தமிழ் நாட்டு நாடக ரஸிகர்கள் கோயில் கட்டிக் கும்பிடவேண்டிய கலைஞருள் ஒருவ

ராகிய காலஞ்சென்ற பி. எஸ். அரங்கசாமி ஐயங்கார் நல்லதங்காளாக வேடம் பூண்டு, தன்னுடைய ஏழு குழந்தைகளையும் கிணற்றில் தூக்கிப் போடும்போது, ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு தேவாரப் பதிகத்தை வின்யாசப் படுத்திப் பாடுவார். இப்படி ஏழு குழந்தைகளுக்கும் ஏழு தேவாரத் திருப்பதிகங்களைப் பாடி விட்டுக் 'கடோசி'யாகத் தான் கிணற்றில் குதிக்கு முன் ஒரு தேவாரத்தை வெகு நிதானமாக, ஏழு குழந்தைகளை ஏக காலத்தில் பறிகொடுத்த ஒரு தாயின் இயற்கையான துக்கம் தோன்றப் பாடி விட்டுக் கிணற்றில் குதிப்பார். இந்த ஒரு காட்சி மட்டும் ஒருமணி நேரத்துக்கு மேல் நடக்கும். அந்த நடிப்பு முழுதும் இயற்கைக்கு விரோதமான முறை. ஒரு தாய் தன்னுடைய ஏழு குழந்தைகளையும் இவ்வளவுநிதானமாகத் தேவாரம் பாடிக்கொண்டா கிணற்றில் போடுவாள்? என்னமோ ஆத்திரமாக, சட்டுப் புட்டென்று இரண்டு மூன்று குழந்தைகளைச் சேர்த்துக்கூடத் தள்ளிவிட்டுத் தானும் விழுந்து விடுவாள். அதுதான் சாதாரண மனித சுபாவம். அப்படி யில்லாமல் தன்னுடைய குழந்தைகளைக் கிணற்றில் போட்டுக் கொன்றுவிட்டுத் தானும் விழுந்து செத்துப் போவதற்கு இவ்வளவு நீட்டலும் நெளித்தலும் பாட்டும் வேணுமா என்று பரிகாசம் பண்ணி விமர்சனம் பேசலாம். ஆனாலும் அந்த அற்புத நடிகன் அரங்கசாமி ஐயங்கார் கையாண்ட முறையில் அந்த நாடகத்தைப்

பார்த்தவர்கள் அடைந்த பரவசத்தை எவ்வளவு எழுதினாலும் முழுக்கச் சொல்லிவிட முடியாது.

அரங்கசாமி ஐயங்காருடைய நல்லதங்காள் நாடகம் என்றாலும், அவர் சந்திரமதியாக நடிக்கும் 'மயானகாண்டம்' நாடகம் என்றாலும் அன்றைக்குப் பகல் பன்னிரண்டு மணிக்குள்ளேயே முதல் மூன்று வகுப்பு டிக்கட்டுகளும் தீர்ந்து போகும். மற்ற வகுப்புகளுக்கும்கூட மாலையில் இடங்கிடைப்பது எளிதல்ல. ஒன்பதரை மணிக்கு ஆட்டம் ஆரம்பம் என்றால், எட்டுமணிக்கே கொட்டகை நிறைந்து விடும். பல நாட்களில் இடமில்லாமல் பணத்தைத் திருப்பிக்கொடுக்க வேண்டியிருக்கும். அரங்கசாமி ஐயங்கார் எந்தச் சரித்திரத்தில் நடித்தாலும் நன்றாகத்தான் இருக்கும். ஆனாலும் அவர் நல்லதங்காள் வேஷத்துக்கே அவதாரம் என்று சொல்லுவார்கள். அந்தப் பேச்சு மெய்யானதுபோல அவர் இறந்ததும் நல்லதங்காளாகவே இறந்தார். ஏழு குழந்தைகளையும் கிணற்றில் போட்டுவிட்டுத் தானும் இறப்பதாகச் சொல்லிக் கிணற்றில் குதித்தபோது அடிபட்டு மாரடைத்து மாண்டு போனார். தாம் மேற்கொண்ட வேஷத்தில் மெய்மறந்து இரண்டறக் கலந்துநின்று நடிப்பதில் அரங்கசாமி ஐயங்கார் நிகரற்றவர். அவர் சந்திரமதியாக வேடம் புனைந்து, மகன் லோகிதாசனை அசலாத்துப் பிள்ளைகளோடு சமித்து கொண்டுவர அனுப்பிவிட்டு, காலகண்டையருடைய வீட்டு வேலையைச் செய்து கொண்டிருக்கிற சமயத்தில் அசலாத்துப் பிள்ளைகள் வரு

வார்கள். காட்டுக்குப்போன மகன் வரவில்லையே என்று ஏங்கியிருக்கும் சந்திரமதிக்குமுன்னுல், மகனைத் தவிர மற்றவர்களெல்லாம் வந்து நிற் பார்கள். தாய் மகனைக்காணுது தவிப்பாள். லோகிதாசன் பாம்பு கடித்து இறந்துபோன விஷயத்தைச் சொல்ல அஞ்சிய அசாலாத்துப் பிள்ளைகள், அவர்கள் தங்களுக்குள் முன்னுலேயே செய்துகொண்டிருந்த ஏற்பாட்டின்படி ஆளுக்கு ஒரு பதமாக -லோகி-தாசன்-தர்ப்பை-கொய்யும்-போது-பா-ம்-பு-க-டி-த்து-இ-ற-ந்-து-போ -ன -ன- என்று கொஞ்சங் கொஞ்சமாகச் சொல்லி முடிப்பார்கள். அவர்கள் சொல்லுகிற மாதிரியாகவே எழுத்துக்கு எழுத்தாகத் தாயின் ஏக்கமும் அதிகரிப்பதை ஐயங்கார் வெகு அற்புதமாக, முகபாவங்களாலும் உடல் நெளிப்புகளாலும் உயர்த்திக்கொண்டே வந்து, மகன் செத்துப் போனுன் என்று சேதி தெரிந்த க்ஷணத்தில் அடியற்ற மரம்போல் திடீரென்று விழுவார். 'அடியற்ற மரம்போல்' என்ருல் அடியற்ற மரம் போலவேதான்! இரண்டு கைகளையும் உயர்த்திக் கொண்டு 'அப்படியே சாய்ந்து மடாரென்று விழுவார். அவர் விழுகிற சத்தமே பார்ப்பவர்கள் நெஞ்சைப் பிளந்துவிடும். அப்படி விழுவதை ஒரு அருங்கலையாக அரும்பாடுபட்டு அவர் அதற்கென்றே அப்பியாசப்படுத்தி யிருந்தார். இயற்கையான ஒரு தாய்கூட அப்படி விழுவது அசாத்தியம். அவருக்குப் பிறகு எத்தனையோ நடிகர்கள் அப்படி விழுவதைச் செய்து பார்த்தார்கள். அவ

ரைப்போல விழ முடியவில்லை. இந்தக் காட்சியில் அவருடைய நடிப்பு ஒரு பெருங் கவிதையாகவே இருக்கும்.

அரங்கசாமி ஐயங்காரும் ஜி. எஸ். முனுசாமி நாயுடுவும் கோயம்புத்தூரில் நாடகம் நடத்திக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு வெகு அதிசயமான சம்பவம் நிகழ்ந்தது: ஒரு நாள் ஐயங்காருடைய நல்லதங்காள் நாடகம். அந்த நாடகத்துக்கு ஜில்லா கலெக்டெர் துரையும் அவருடைய துரைசானியம்மாளும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அப்போதுதான் நேரே சீமையிலிருந்து வந்தவர்கள். நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. குழந்தைகளைக் கிணற்றில் போடுகிறேன். ஆறு குழந்தைகளைக் கிணற்றில் போட்ட பிறகு ஏழாவது குழந்தையைப் பிடிக்கப் போகிருள். அந்தச் சிறுவன் "அம்மா! என்னையாவது விட்டுவிடுங்கள். நான் என்னுடைய உயிரின்மேல் ஆசைக்காகச் சொல்லவில்லை. என் தந்தை நம் மெல்லோரையும் தேடி வருவார். அந்த மூளி அலங்காரி நம்மைப் படுத்தின பாடுகளையெல்லாம் தந்தையிடத்திலும் மாமாவிடத்திலும் சொல்லி அவளுக்குத் தகுந்த தண்டனை செய்துவைக்கவாவது நான் மிஞ்சியிருக்கத் தாங்கள் தயவு செய்யவேண்டும் அம்மா! அத்துடன் நீங்களும் இறந்து போக நிச்சயம் செய்துவிட்டீர்கள். ஏழு மக்களை ஈன்றெடுத்த உங்களுக்கு எள்ளும் தண்ணீரும் இறைக்கவாவது ஒருமகன் இருக்க வேண்டாமா, அம்மா! அம்மா! அதற்காக

வேணும் எனக்கு உயிர்ப்பிச்சை கொடுங்கள்" என்று கெஞ்சுகிறான். தாயின் கையிற் சிக்காமல் அங்குமிங்கும் ஓடுகின்றான். அவனுக்குத் தாயார் தக்க பதில் நியாயங்களைச் சொல்லிவிட்டு அவனை யும் பிடித்துக் கிணற்றில் போடப் போகிறாள். அந்தச் சமயத்தில் கலெக்டர் மனைவி துரைசானி யம்மாள் தேம்பித் தேம்பி அழுது கொண்டு எழுந்து நின்று, இங்கிலீஷில் "ஓ! வேண்டாம்! வேண்டாம்!" என்று மேடையை நோக்கி உரக் கக் கத்திவிட்டு, தன்னுடைய கணவனிடம் "அதைத் தடுங்கள்" என்று சொல்லிக்கொண்டே கணவனுடைய மார்பில் தலையைக் கவிழ்த்துக் கொண்டு அழுதாள். முதல் வரிசையில் உட் கார்ந்திருந்த துரைசானியம்மாள் எழுந்ததைப் பார்த்த மகாஜனங்கள் துரைசானிக்கு என்ன ஆபத்தோ என்று ஒவ்வொருவராக எழுந்து பார்க்க ஆரம்பித்தது, கொட்டகை முழுதும் ஒரே குழப்பமாகிவிட்டது. நடித்துக் கொண்டி ருந்த அரங்கசாமி ஐயங்கார் திகைத்து நின்று விட்டார். உடனே 'ஸ்டேஜ் மானேஜர்கள்' வெகு புத்திசாலித்தனமாகப் படுதாவை இறக் கிக் காட்சியை மறைத்து விட்டார்கள். துரை சானியம்மாளுக்கு மயக்கம் தெளிய அரைமணி நேரம் ஆகிவிட்டது. உடனே துரை, மனைவி யைக் கூட்டிக்கொண்டு வெளியேறிவிட்டார். அதற்குப் பிறகு நாடகம் தொடரப்பட்டது. இதை நான் பக்கத்திலிருந்து பார்த்தவன். தமிழ்பாஷை கொஞ்சங்கூடப் புரியாத அந்த

அன்னிய நாட்டுப் பெண்மணியை அப்படித் துடிக்கச் செய்து விட்டது அரங்கசாமி ஐயங் காரின் நடிப்பும் அக்காலத்திலிருந்த நாடக முறைகளின் சிறப்பும் என்று இப்போது என் நினைவுக்கு வருகின்றது. மேலும் அக்காலத்து நடிகர்களிற் பலரும் தங்களுடைய கலைக்குவேண் டிய கல்வியறிவும் மனோதர்மமும் சுதந்தரமாக நிறைந்தவர்கள். வெறும் பாடத்தை ஒப்பிக்கும் பள்ளிப்பிள்ளைகளைப் போன்ற நடிகர்கள் அல்ல. இலக்கியங்களை இஷ்டப்படி மாற்றமாட்டார் கள். நாடகமேடையை மக்களுக்கு அறங்களைப் புகட்டிச் சமுதாயத்தைப் பண்படுத்த ஒரு சாதக மாக எண்ணினவர்கள். முதலாளி விருப்பத்துக் காகக் கதையை மாற்றி, டைரக்டருடைய சந் தோஷத்துக்காக நடிப்புகளைச் செய்து, நாடக லட்சணங்களை அறியாமல் வெறும் ராகதாளங் களைமட்டும் கருதுகின்ற, வார்த்தை விளங்காத பாட்டுகளைப் பாடி, உணர்ச்சியில்லாத ஓசை களைக் கிளப்பி, எழுதிக்கொடுத்த பாடத்தையும் அனுபவிக்காமல் ஒப்பித்து, ஜீவனில்லாமல் ஓடு கின்ற பல சினிமாக்கள் அல்ல நான் சொல்லும் கலைஞர்களின் நாடகங்கள். சிறுவயதில் என்னு டைய கவிதை ஆசைகளைத் தூண்டிவிட்ட சில சிறந்த நடிகர்களைப் பற்றிய நினைவுகள் இன் றைக்கும் என் மனதில் உதித்து உதவுகின்றன.

ராஜா கோவிந்தசாமி பிள்ளை என்ற ராஜபார்ட் நாடக மேடையில் பாவத்தோடு நிற்கிற தினுசே கண்ணையும் கருத்தையும் கவரும். அழகும் ஆண்

மையும் பொருந்திய அவர் உருவமும் நடையுமே அவரை ஒரு மிக உயர்ந்த மனிதனாக மதிக்கச் செய்யும். அரிச்சந்திரத் தோட்டியாக அவர் மயானத்தில் காவற் பரண்மீது நின்றுகொண்டு "பிறந்தது மண்மேல் இறப்பதற்கென்றே பேசிடும் நூல்" என்ற விருத்தத்தைப் பாடி ஆரம்பமாகும் காட்சி கண் கொள்ளாக் கலையழகு நிறைந்திருக்கும்.

ஒரு தோட்டி தன்னுடைய தெய்வீகத் தாலியைப் பார்த்துவிட்டானே யென்று 'ரமாமணி' என்ற ஒரு பெண்மணி சந்திரமதி வேடத்தில் துடிக்கும் துடிப்பு சொல்லத்தரமன்று.

சீதையாக வேடம் பூண்டு, அசோக வனத்தில் தன்னிடம் வந்து காமப் பேச்சுப் பேசிவிட்ட ராவணனைத் துரும்புபோல மதித்து அவனுக்கு அறவுரை சொல்லுகின்ற ஒரு கலியாணராமையருடைய தமிழ்ப்பேச்சை எத்தனை நேரங் கேட்டாலும் இன்னும் கேட்க வேணுமென்ற இச்சைதான் மிச்சமாகும்.

குயிலினும் இனிய குரலில் பாடும் தோடி சுந்தர ராவ் என்னும் பெண் வேடக்காரரின் பாட்டு அவருடைய பருத்த சரீரத்தையும் மறந்து பரவசப்படச் செய்யும்.

சூளி அலங்காரியாக நடிக்கும் ராமுடு ஐயரின் திறமை, கொடுமை நிறைந்த ஒரு நாத்தியின் செயல்கள் இப்படித் தானிருக்கும் என்பதைப் படம் பிடித்ததுபோல் இருக்கும்.

நெடுநாள் அரங்கசாமி ஐயங்காருக்கு ஜோடியாக நடித்த ஜி. எஸ். முனிசாமி நாயுடு என்பவர் ராமதாஸ் வேஷத்தில் நவாப்பின் சிறையில் அடைபட்டு ராம லட்சுமணர்களையும் சீதையையும் நினைத்து நினைத்துப் புலம்பும் பேச்சும் பாட்டுகளும் கல் நெஞ்சையும் கரைத்துவிடும்.

முனிசாமி நாயுடுவிற்குப் பிறகு அரங்கசாமி ஐயங்காருக்கு 'ராஜபார்ட்'டாக இருந்த பெரிய மகாதேவ ஐயரின் பாட்டுகளைக் கேட்டுக்கொண்டிருந்தால் பசியே தோன்ருது. நாடக மேடைக்கு லாயக்கில்லாத பருத்த வணங்காத சரீரமுள்ள இவருடைய சாரீரம் 'தேவகானம் பொழியும்' என்று சொன்னல் போதாது.

அரங்கசாமி ஐயங்காரிடம் 'பால பார்ட்டுகளாகப்' பழகி பிற் காலத்தில் சிறந்த நடிகர்களாக விளங்கிய அனந்த நாராயண ஐயர், செல்லப்பா ஐயர் என்ற சகோதரர்களை மறக்க முடியாது. அனந்த நாராயணன் மிக உயர்ந்த கலைஞர். எனக்கு நெருங்கிய நண்பர். என்னுடைய தேசியப் பாட்டுகளுக்குப் புதுப் புதுக் கருத்துகளைத் தந்தவர். தமிழ் நாட்டு நாடக மேடைக்கு அவர் செய்த சேவைகள் மிகவும் சிறந்தன .... அரங்கசாமி நாயுடு, வெங்கடாசலம் பிள்ளை, மாணிக்கம் பிள்ளை, சின்ன மகாதேவையர் இன்னும் அநேக நாடகக் கலைஞர்களுடைய நடிப்பும், இவர்களுக்கெல்லாம் அப்போதைக் கப்போது பாட்டுகளைச் செய்து கொடுத்த சங்கர

தாஸ், உடுமலை சரபம் முத்துச்சாமிக் கவிராயர், சந்தான கிருஷ்ண நாயுடு முதலானவர்களுடைய கவிகளும் என்னுடைய கவிதை எண்ணங்களை வளர்த்தன.

அந்தக்காலத்து நாடகங்களில் நடிகர்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் உண்டோ அவ்வளவு முக்கியத்துவம் பின்பாட்டுக்காரருக்கும் உண்டு. பின் பாட்டுக்காரர்கள் நடிகர்களைக் காட்டிலும் சங்கீதத்தில் உயர்ந்தவர்களாகவே இருப்பார்கள். அப்படிப்பட்ட பின்னணி சங்கீதக்காரருக்குள் தேசிகம் ஐயங்கார், உறையூர் முகையதீன் சாயபு, வேலு நாயர் (பின்னால் நடிகராக விளங்கியவர்) முதலானவர்கள் மிகவும் குறிப்பிடத் தகுந்தவர்கள். தேசிகம் ஐயங்காரின் பின்பாட்டு தேன்மாரி என்றே சொல்லலாம். அவருடைய ரவைகள் அவரோடு பிறந்து அவரோடு அழிந்துவிட்டன. நோயாளி, பலஹீனமான தேகமுடையவர். இருந்தாலும் பின்பாட்டு வெகு பிரமாதமானது. உறையூர் முகையதீன் சாயபுவின் பின்பாட்டு தெய்வ ரம்பைகளின் இனிய பெண் குரலோடு கந்தர்வர்களுடைய ஆண் குரலும் கலந்தது போன்று ஒரு ஒப்பற்ற கம்பீரமுடையது. நாடகம் எப்படியிருந்தாலும் முகையதீன் சாயபுவின் பின் பாட்டைக் கேட்பதற்கென்றே வெளியூர்களிலிருந்து வெகு ஜனங்கள் வருவார்கள். ஊரடங்கின பிறகு இவருடைய பின்பாட்டு ஒரு மைல் தூரத்துக்கு மேல் கேட்கும். முகையதீன் சாயபுவின் பின்பாட்டைக் கேட்டே தூரத்திலுள்ள நாடக ரஸிகர்கள்

இந்தச் சமயத்தில்' இன்ன 'சீன்' நடக்கிற தென்று கண்டுகொள்வார்கள்.

என்னுடைய நண்பர் என். நாகராஜ ஐயங்கார், திருச்சினுப்பள்ளியில் எப். ஏ. படித்துக்கொண்டிருந்தார். காலேஜ் எம். எல். ஏ. ஹாஸ்டலில் ஜாகை. இரவு பத்து மணிக்குள்ளாக ஹாஸ்டல் 'சூபரின்டெண்டெண்ட்' பையன்களெல்லாரும் சரியாக இருக்கிறார்களா என்று பார்க்கவேண்டிய மாமூல் வழக்கப்படி சுற்றிப் பார்த்துவிட்டுப் போய்விடுவார். ஹாஸ்டலின் வெளிக் கதவை, பையன்கள் யாரும் இரவில் வெளியே போகக்கூடாது என்பதற்காகப் பூட்டி விடுவார்கள்.

நாகராஜ ஐயங்காருக்கு அரங்கசாமி ஐயங்காருடைய நடிப்பில் அளவுகடந்த ஆசை. ஒவ்வொரு நாடகத்திலும் அவருடைய நடிப்பு வருகிற முக்கியமான பாகத்தையாவது பார்த்துவிட்டால் தான் நாகராஜனுக்குத் தூக்கம் வரும். ஹாஸ்டலுக்கு முக்கால் மைல் தூரத்தில் நாடகக் கொட்டகை. பதினொரு மணிக்குமேல் நாகராஜ ஐயங்கார் முகையதீன் சாயபுவின் பின்பாட்டைக் காது கொடுத்துக் கவனித்துக் கொண்டேயிருப்பார். அரங்கசாமி ஐயங்கார் வரப்போகிற சமயத்தை அறிந்த உடன் ஒரு ஜமக்காளத்தை எடுத்துக்கொண்டு, தன்னுடன் நாடகம் பார்க்க வருவதாக முன்னாலேயே டிக்கட் வாங்கி யிருக்கும் மற்ற மாணவர்களையும் கூட்டிக்கொண்டு ஹாஸ்

டல் வெளிக் கதவுக்கு வருவார். அந்தக் கதவு ஈட்டிகள் போன்ற கம்பி முனைகள் உள்ளது. அதன் குறுக்குச்சட்டத்தில் மெள்ள ஏறி, கையில் மடித்து வைத்திருக்கும் ஜமக்காளத்தை அந்த ஈட்டி முனைகளின் மேற் போட்டு மூடி, காயம் படாதபடி ஒவ்வொருவராக இறங்கிப் போய் நாடகம் பார்த்துவிட்டு வருவது வழக்கம். அப்படி வெகுதூரம் வரைக்கும் நன்ருகக் கேட்கக் கூடியது உறையூர் முகையதீன் சாயபுவுடைய பின்பாட்டு. வேலு நாயருடைய பாட்டு முகையதீன் சாயபுவின் பாணியையே பின்பற்றினதாக இருக்கும். நாடகப் பாட்டுகளின் மெட்டுகளெல்லாம் எனக்கு இந்தப் பின் பாட்டுக்காரர்களால் தான் பிடிபட்டது. பாட்டுகளை இயற்றும் போதும் உறையூர் சாயபுவின் ஓசைகளை மனதில் நினைத்துக்கொண்டே தான் எழுதுவேன். ஏனெனில் அப்போது எனக்கு ராக தாளங்களின் வேறுபாடுகள் தெரியாது.

நாடகக்காரர்களுக்கு புதுப்புதுப் பாட்டுகளை இயற்றிக் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் எனக்குப் பல நேர்ந்தன. அப்படி நான் எழுதின பாட்டுகள் எண்ணிறந்தன. அப்போதைக் கப்போது எழுதின அந்தப் பாட்டுகளில் பல வெகு நல்ல பாட்டுகள் இருந்தன. அவற்றையெல்லாம் சேமித்து வைக்கத் தவறிவிட்டேன். சேமித்திருந்த சிற்சில பாட்டுகளும் சிதறிப்போயின. கொஞ்சநஞ்சம் கிடைக்கக்கூடியவற்றைச் சேகரித்து 'நாடகப் பாட்டுகள்' என்று வெளியிட வேணும் என்ற ஆசை அடிக்கடி உதிப்பதுண்டு

நான் பாட்டெழுதிக் கொடுத்த நாடகக்காரர்கள் பலர். அவர்களுக்குள் எஸ்.ஜி. கிட்டப்பா சகோதரர்கள் மிகவும் முக்கியம். கிட்டப்பா சகோதரர்கள் சுமார் 2½ வருஷம் நாமக்கல்லில் தங்கியிருந்து நாடகம் நடத்தினார்கள். சுப்பையா ராஜ பார்ட். அவருடைய தம்பி செல்லப்பா ஸ்திரீ பார்ட், அவருடைய தம்பி காசி பக்கப்பாட்டு, அவருடைய தம்பி கிட்டப்பா பால பார்ட். இவர்களுக்கெல்லாம் மூத்த சகோதரர் மானேஜர். இவர்கள் நாமக்கல்லில் இருந்தபோது தினந்தினம் புதுப்புதுப் பாட்டுகள் எழுதிக்கொடுப்பேன். இவர்கள் நாமக்கல்லை விட்டபின் எனக்கு நாடகக்காரர்களுடைய தொடர்பு குறைந்துவிட்டது. என்னுடைய அரசியல் வாழ்க்கையே அதற்குக் காரணம். விடுதலை வேட்கை அதிகப்பட்டு இந்திய நாட்டின் சுதந்திரத்தைக் குறித்த இயக்கங்களில் அதிகமாக ஈடுபட்டுவிட்டதால் நாடகம் பார்க்கவும் அதற்காகப் பாட்டெழுதவும் நேரமில்லாமற் போய்விட்டது. என்னுடைய பாட்டுகளும் அதன் பிறகு நாட்டின் அடிமை வாழ்வை அகற்றவேண்டும் என்ற ஆசையையே பின்பற்றிவிட்டன. நல்ல நல்ல நாடகப் பாட்டுகளைச் சேமித்து வைக்க சிரத்தை யில்லாமற் போனதற்கும் ஓரளவு அதுவே காரணம்.

# கிட்டப்பா

கிட்டப்பா சகோதரர்கள் நாமக்கல்லில் நாடகம் நடத்திக் கொண்டிருந்தபோது அவர்களுக்கு நான் இயற்றிக்கொடுத்த பாட்டுகள் அனந்தம். அப்போதைக் கப்போது அவர்கள் கோருகின்ற மெட்டில் பாட்டுகள் அமைத்துக் கொடுப்பேன். என்னுடைய கவித்திறம் மிகவும் பயிற்சி பெற்றது அந்தக் காலத்தில் தான். நான் கவிபாடும் திறமையுள்ளவன் என்பது பிரசித்தமானதும் அப்போதுதான். முதன் முதல் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த பாட்டு இன்னும் என் மனதில் இருந்துகொண்டே யிருக்கிறது.

அப்போது நாமக்கல் ஜமீன்தாராக விளங்கிய துரைசாமி ரெட்டியார் கொஞ்சம் தமிழ் அபிமானி. அவரிடத்தில் எனக்குப் பரிச்சியம் அதிகம். சிறிது செல்வாக்கும் உண்டு. அடிக்கடி அவரிடம் போவேன். துரைசாமி ரெட்டியார் நல்ல ரஸிகர். பேசிக்கொண்டிருப்பதில் வெகு பிரியமுள்ளவர். உலகத்திலுள்ள எல்லா விஷயங்களைப் பற்றியும் பேசுவார். அவருக்குத் தெரியாத 'டிபார்ட்மெண்ட்' ஒன்றுகூட இருப்பதாக ஒப்புக்கொள்ள மாட்டார். சன்மானம் பெறுவதற்காக அவரிடத்துக்குப் பல கலைஞர்களும் கவிராயர்களும் வருவார்கள். ரொம்ப உதாரியல்லாவிட்டாலும் இல்லையென்னுமல் வந்தவர்

களுக்கெல்லாம் கொஞ்சமாவது கொடுத்தே அனுப்புவார். சமஸ்கிருத வித்வான் வந்தால் வேதவியாசர், வான்மீகி, காளிதாசன், தண்டி முதலானவர்களைப்பற்றி அதற்குமுன்னுல் தன் காதிலே விழுந்திருந்த சில விஷயங்களைச் சொல்லி, வடமொழியில் நல்ல கேள்வி ஞானம் உள்ளவர் போலக் காணப்படுவார். தமிழ்ப் புலவர்கள் வந்தால் கம்பன், புகழேந்தி, ஒட்டக்கூத்தன், திருக்குறள், சிலப்பதிகாரம் என்ற பெரும் பெயர்களைப் பேசித் தமிழில் நல்ல ஞானமுள்ளவராக விளங்குவார். கெடியாரக்காரன் வந்தால் கெடியாரத்தில் எத்தனை 'மேக்'குகள் உண்டோ அதில் பாதியாவது பாடமாகச் சொல்லுவார். மோட்டார் வியாபாரி வந்தாலும் அப்படித்தான். யார் வந்தாலும் அதேதான். சாப்பிடுகிற நேரம் தூங்குகின்ற நேரம் போக மீதி நேரமெல்லாம் இப்படி யாரோடாவது எதையாவது பேசிக்கொண்டேதான் இருப்பார். தமிழ் அறிஞர்கள் யாராவது வந்தால் உடனிருந்து ரஸிப்பதற்காக என்னைக் கூப்பிட்டனுப்புவார். நான் தனியே போக நேர்ந்தால் மற்றப் பேச்சுகளுடன் கம்பராமாயணத்தில் எதையாவது சொல்லச் சொல்லுவார். நான் ஒப்பிப்பேன். கேட்பார். அர்த்தம் கேட்பார், சிலசமயம் வாதிப்பார்.

ஒருநாள் ஒரு கம்பராமாயண வித்வான் அவரிடத்தில் வந்து குகப்படலத்தை வெகு நல்ல குரலில் பாடி விளக்கினுர்.

அப்போது :

> "வந்தெதிரே தொழுதானை வணங்கினான்
> மலரிருந்த அந்தணனும் தனைவணங்கும்
> அவனுமவன் அடிவீழ்ந்தான்"

என்ற பாட்டிற்கு வழக்க விரோதமாக அர்த்தம் செய்து, வெகு சாமர்த்தியமான ஆதாரங்களுடன், 'குகனுடைய பாதங்களில் பரதன் விழுந்தான்' என்று பொருள் கூறினார். இது என்னுடைய பாடத்துக்கு விரோதம். நான் ஒத்துக்கொள்ளவில்லை. வாலிப முறுக்குடன் வாதாடினேன். ஜமீன்தாருக்கு வேடிக்கை.

இந்த விவாதம் ஆரம்பிக்கும்போது, (நாடகம் நடத்தக் கொட்டகை போட்டுக்கொள்ள இடம் கேட்பதற்காக) ஜமீன்தாருடைய தய வைக்கோரி கிட்டப்பாவின் தமயன் செல்லப் பாவும் இன்னும் சிலரும் அங்கே வந்தார்கள். வந்தவர்களை வரவேற்றுவிட்டு ஜமீன்தார் எங்களுடைய வாக்கு வாதத்தைக் கவனித்துக்கொண் டிருந்தார். வந்தவர்களும் எங்களுடைய இலக்கியச் சண்டையைக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டியதாயிற்று. செல்லப்பா சிறந்த நடிகர். அடிக்கடி ராமாயணத்தைத் தன்னுடைய கம் பெனியில் நடத்துகிறவர். அவர் நடத்துகிற விதம், நான் அர்த்தம் சொல்லும் மாதிரி, பரத னுடைய காலில் குகன் விழுவதாகத்தான். அத னால் செல்லப்பாவின் அனுதாபம் என்னுடைய கட்சியைச் சேர்ந்தது.

அதனாலுண்டான அபிமானத்தினாலும், நான் தமிழ்ப் படித்தவன் என்றதற்காகவும், சித்திரத் தொழிலாளி என்பதற்காகவும், எல்லாவற்றிற் கும் மேலாக ஜமீன்தாருக்கு வேண்டியவன் என்ப தற்காகவும், மறுநாள் செல்லப்பா என்னுடைய நட்பை நாடி என் வீட்டிற்கு வந்தார். அதுமுதல் எங்களுக்குள் நெருங்கிய நட்பு உண்டாயிற்று. ஜமீன்தாரிடத்தில் அவர் கோரிய காரியத்துக்கும் நான் அனுகூலமாக இருந்தேன். சுப்பையாவும், செல்லப்பாவும் அடிக்கடி என் வீட்டுக்கு வரு வார்கள். அவர்களுடைய நாடகங்களுக்குப் புதுப் புதுப் பாட்டுகள் எழுதிக்கொடுப்பதும் சீன்கள் சித்திரித்துக் கொடுப்பதும் எனக்கு வெகு இன்ப மான பொழுது போக்காக இருந்தது. அவர் களுடைய முதல் நாடகத்துக்கு ஒரு விருத்தம் எழுதிக் கொடுத்தேன். அது நாமக்கல் மகா ஜனங் களுக்கு அவர்கள் வணக்கம் கூறுவது. அக் காலத்து நாடகங்களில் முக்கிய நடிகர்கள் திரை மறைவிலிருந்து மேடையில் தோன்றும்போதே பாடிக்கொண்டுதான் வருவார்கள். அந்தப்பாட்டு முடிந்த உடன் அவையடக்கமாக ஒரு வணக்கம் பாடுவார்கள். அதற்கப்புறந்தான் கதையைப் பற்றின நடிப்புகளெல்லாம். நான் எழுதிக் கொடுத்த வணக்கப்பாட்டு நாமக்கல் ஸ்தல விசேஷத்தை முதன்மையாகக் கொண்டது. நாமக்கல் ஒரு விஷ்ணுஸ்தலம். நாமகிரித் தாயார்—நரஸிம்மஸ்வாமி சந்நிதி. பில்லி, சூனி யம், பேய் பிசாசு முதலியவற்றாலுண்டாகும்

தீமைகளை யெல்லாம் தீர்க்கக்கூடிய திருப்பதி யாக நம்பி, வெகு தூரம் தொலைகளிலிருந்து சேவைக்காரர்கள் வருகிற இடம். பாட்டு அதைப் பற்றியது:

மாயமிகு சூனியம் பில்லிப் பிசாசெனும்
மயக்க மெல்லாமொழித்து
மனதினிற் கனமேனும் எண்ணினவர் தம்
துயரை மாற்றியருள் ஊட்டவென்றே
தீயனைய இரணியன் திக்கிட் டொடுங்
கிடத் திவிரம் தூணில் வந்து
தி(ட)முடன் மார்பீறி குடரெலாம்
மாலையாய்த் திருமார்பிலே யணிந்த
ஞாயமது சூதனன் நரஸிம்ம மூர்த்தி
யுடன் நாமகிரி யம்மன் வந்து
நாடியே குடிகொண்ட நாமக்க லென்னும்
இந் நகர்வாழும் பெரியோர்களே
சேயெனத் தகுமிந்த சின்னஞ் சிறியவர்கள்
செய்கின்ற நாடகத்தை
தாயெனப் பார்த்தெம்மை ஆசிர்வதிக்க நும்
தாள்மலர் சென்னி சேர்ப்போம்.

இந்த விருத்தத்தைக் கிட்டப்பாவின் தமயன் சுப்பையா என்னும் 'ராஜபார்ட்' அவருடைய கனத்த கம்பீரமுள்ள சாரீரத்தில் ராக ஆலாபனத்துடன் நிதானமாகப் பாடுவார். இந்தப் பாட்டைப் பாடி முடித்தவுடன் சபையினுடைய கரகோஷம் வெகுநேரம் காதைத் தொளைத்துவிடும். உள்ளூர்க் கவிஞன் எழுதிக்கொடுத்த பாட்டு என்ற சுதேசி அபிமானத்தினலோ என்னவோ அப்படி ஜனங்கள் ஆரவாரம் செய்வார்கள்.

அதுமுதல் என்னுடைய நாடகப் பாட்டுகள் பிரசித்தி பெற்றன. ஒரு நாடகம் முடிந்தவுடன் அடுத்த நாடகம் என்ன வென்பதை, மேடையி லேயே விளம்பரப்படுத்திச் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லும்பொழுது "அடுத்த நாடகத் தில் உள்ளூர்க் கவிஞர் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை யவர்களால் இயற்றப்பட்டிருக்கிற அநேக புது வர்ணமெட்டுகளுள்ள பாட்டுகளை 'சுப்பையா பாடுவார்,' 'செல்லப்பா பாடுவார்', அல்லது 'கிட்டப்பா பாடுவார்'' என்பதையும் சேர்த்துச் சொல்லுவார்கள். அந்தப் பெருமைக்காகவும் கவிபாடும் ஆசை எனக்கு அதிகப்பட்டது. நான் எழுதிக் கொடுக்கும் பாட்டுகளைப் பாடப்போகிற நாளுக்கு முன்னாலேயே சுப்பையா, செல்லப்பா, காசி முதலானவர்கள் எனக்குப் பாடிக்காட்டி என்னைச் சந்தோஷப்படுத்த எண்ணுவார்கள். ஆனால் விளையாட்டுப் பையனான கிட்டப்பா மட்டும் அப்படி முன்னால் பாடிக்காட்ட வரமாட் டான். ஆனால் மேடையில் நாங்கள் வியக்கும்படி பாடிவிடுவான். கிட்டப்பாவின் மேல் எனக்கு வெகு ஆசை. ஆனால் அந்தக் கிட்டப்பா—பையன்—தன் வயசுக்கு ஒத்தவர்களோடு விளை யாடிக்கொண்டே இருப்பானேயல்லாது என் னோடு பொழுது போக்க இச்சை கொள்வதில்லை. என்றாலும் நான் கிட்டப்பாவை அடிக்கடி இழுத்துக் கொஞ்சுவேன். கிட்டப்பாவைப் பற்றி இப்போது நினைத்தாலும் என் உள்ளம் பூரிக் கின்றது. கிட்டப்பா சகோதரர்கள் நாமக்கல்லில்

நாடகம் நடத்திக் கொண்டிருந்த போது கிட்டப் பாவுக்கு எட்டு வயதுதான் இருக்கும். என்னேரமும் கோலி விளையாடிக் கொண்டிருப்பான். என்றாலும் நாடகக் கலைக்கு அவர் ஒரு அவதார புருஷன் என்பதை அப்போதே காட்டிவிட்டார். அந்தக் குழந்தைப் பருவத்திலேயே அவருக்கு இயற்கையாக அமைந்திருந்த, அற்புத சாரீரத்தையும், அரிய பாடுந்திறமையையும், வெகு சுத்தமான சொல்லழகையும், சாதுரியமான நடிப்பையும் கண்டு சொக்கிப்போன எனக்கு, அவர் பிற்காலத்தில் வெகு பிரபலமான நடிகரும் சங்கீதக்காரரும் ஆனபோது அதிசயம் தோன்றவில்லை. கிட்டப் பாவுக்கு எதைச் சொல்லிக் கொடுத்தாலும் ஒரே ஒரு தரம் சொன்னால் போதும். விளையாட்டுப் புத்தியால் சரியாகக் கவனிக்காத காலங்களில்தான் அதற்குமேல் சொல்லவேண்டியிருக்கும். கேட்டுக்கொண்ட பாடத்தை, சொல்லிக் கொடுத்தவர்கள் அதிசயிக்கும்படி, சுயமாகத் தன்னுடைய சொந்த மனோதர்மங்களையும் சேர்த்துத் திருப்பிச் சொல்லுவார். ஒரு பாட்டின் எடுப்பை அவருடைய இஷ்டப்படி மாற்றிக் கொள்வார். அவர் பாடுகின்ற பாணியை அதை விட நன்றாக வேறு எவரும் பாடிவிட முடியாத படி பாவங்கள் தாமாகவே அமையும். ஒப்பற்ற சுதந்தர உணர்ச்சி உடையவர். இன்னொருவர் சொல்வதற்காகத் தன்னுடைய பாணிகளை மாற்றிக் கொள்ளமாட்டார். என்றாலும் கர்வியல்ல. நல்ல சரச சல்லாபி.

நாமக்கல்லில் அவர்கள் குடும்பம் குடியிருந்த இடம் ஒரு சிறிய தோட்டவீடு. அதைச் சுற்றி லும் பரம ஏழைகளான குடியானவர்கள்தான் அப்போது வசித்தார்கள். கோவணத் துணிகூடக் கந்தலாகவுள்ள ஆடுமாடு மேய்க்கின்ற பையன் கள்தான், கிட்டப்பாவோடு விளையாடக் கிடைக் கும் அசலாத்துப் பிள்ளைகள். அந்த ஏழைப் பிள்ளைகளோடு கிட்டப்பா கட்டிப் புரண்டு களித்து விளையாடுவார். அதற்காகத் தாய் தந்தை யரும், தமயன்களும், சில சமயங்களில் கிட்டப் பாவைக் கண்டிப்பார்கள். அதைக் கிட்டப்பா கொஞ்சங்கூடச் சட்டை செய்யமாட்டார்.

ஒரு நாள் அந்தத் தோட்ட வீட்டிற்குப் பக்கத்திலிருந்த ஒரு புளியமரத்தடியில், சுமார் இருபது ஏழைக் குழந்தைகளுக்கு மத்தியில் உட்கார்ந்துகொண்டு, கிட்டப்பா வெகு உத் ஸாகத்தோடு பாடிக்கொண்டிருந்தார். நானும் செல்லப்பாவும் இன்னும் சிலரும் என்னுடைய வீட்டிலிருந்து பேசிக்கொண்டே, அந்தத் தோட்ட வீட்டுக்குப் போனேம். கிட்டப்பாவின் பாட்டுக் கச்சேரி முழுங்கிக் கொண்டிருப்பதைக் கேட்ட செல்லப்பா "ஐயையோ! இன்னிக்கு அவனுக்கு வெகு முக்கியமான 'பார்ட்' இருக்கிறதே. இப்படிக் கத்திக்கொண்டிருந்தால் ராத்திரிக்குத் தொண்டை கட்டிவிட்டால் என்ன செய்வது? கூப்பிடடா கிட்டப்பாவை" என்று ஒரு ஆளை அனுப்பினுர். போன ஆள் கூப்பிட்டான். கிட் டப்பா அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல்

மெய்மறந்து பாடிக்கொண்டேயிருந்தார். செல்லப்பாவுக்குக் கோபம் வந்துவிட்டது. தானே போனுர். கூட்டத்தில் நுழைந்தார். கிட்டப்பாவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்தார். வீட்டு வாசலண்டை வந்ததும் " ஏண்டாலே! இப்படி என்னேரம் பார்த்தாலும் கண்ட பயல்களோடு சேர்ந்துகொண்டு ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருக்கிருயே; என்ன சொன்னுலும் கேட்பதில்லே......போ உள்ளே." என்று சொல்லிப் பிடித்திருந்த பிடியை விட்டு வீட்டுக்குள் போகச் சொன்னுர். கிட்டப்பா பதிலே பேசவில்லே. அண்ணுவைக் கொஞ்சம் முறைத்துப் பார்த்துவிட்டு, வீட்டுக்குள் போகாமல் மீண்டும் தான் பாடிக்கொண்டிருந்த புளிய மரத்தடிக்கே போனுர். கலேந்துபோன தன் சேத்தாளிகளேக் கூட்டிக்கொண்டு முன் போலவே பாட உட்கார்ந்து கொண்டார். அதற்கு மேல் செல்லப்பா—வாயே திறக்கவில்லே ......அன்றிரவு கிட்டப்பா வேஷம் போட்டுக் கொள்ள மறுத்துவிட்டார். செங்கோடன் என்ற தன்னுடைய விளேயாட்டுத் தோழனுடைய குடிசையிலேயே உட்கார்ந்து கொண்டு உணவு கொள்ளவும் வீட்டுக்கு வரவில்லே. தாயார், தகப்பனுர், தமயன்மார்கள், நான்—எல்லாருமாக எவ்வளவோ கெஞ்சியும் பயனில்லாமற் போய் விட்டது. கடைசியில் நாங்கள் எல்லாரும் செங்கோடனேக் கேட்டுக்கொண்டு அவனுடைய முயற்சியால் சமாதானம் உண்டாயிற்று. தன்

னுடைய விளையாட்டுத் தோழர்கள் அத்தனை பேரையும் நாடகம் பார்க்க செல்லப்பா அழைத்த பிறகுதான் சாப்பிடப் போனுர். கிட்டப்பாவின் கோபத்துக்குக் காரணம் தன்னுடைய தோழர் களை 'கண்ட பயல்கள்' என்று செல்லப்பா சொல்லி விட்டதுதான் என்பதை மறுநாள் கிட்டப்பாவே சொன்னுர்.

கிட்டப்பாவுக்குப் பாட்டு எழுதிக் கொடுப்பதென்றல் எனக்கு வெகு சந்தோஷம். கிட்டப்பா பாடுவதால் என் பாடல்கள் மிகவும் சிறப்புப் பெறும். கிட்டப்பா சகோதரர்கள் நாமக்கல்லை விட்டுப்போன பிறகும், அவர்கள் நாடகம் நடத்திய வெவ்வேறு ஊர்களுக்கும் நான் அடிக்கடி போவதுண்டு. பாட்டும் எழுதித் தந்து கொண்டிருந்தேன். அவர்கள் நாமக்கல்லை விட்டுப் போகும்போது, கடைசி ஆட்டத்தில் எனக்கு வந்தனங்கூறி மாலை சூட்டி மரியாதை செய்து போனுர்கள். மற்ற ஊர்களிலும் நான் போனுல் எனக்குத் தனி மரியாதை காட்டுவார்கள். சில வருஷங்கள் அவர்களுடைய தொடர்பு இருந்து கொண்டேயிருந்தது. பிறகு கொஞ்சங் கொஞ்சமாக விட்டுப் போயிற்று. சகோதரர்களும் கட்டுக் கலைந்து வெவ்வேறு இடங்களில் நடித்துக் கொண்டிருக்க நேர்ந்துவிட்டது. கிட்டப்பாவின் நட்பின் விசேஷத்தைக் காட்டும் ஒரு சிறு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடுவது மிகையாகாது: கிட்டப்பா குடும்பம் நாமக்கல்லை விட்டுப்போன பிற்பாடு சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கப்புறம்,

கிட்டப்பா மிகவும் கீர்த்தி வாய்ந்தவராகித் தமிழ் நாட்டின் நிகரற்ற நாடகமேடை ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தபோது, ஒரு நாள் நான் திருச்சியில் தங்க நேர்ந்தது. அன்றைக்கு அங்கே கிட்டப்பா—சுந்தராம்பாள் நாடகம். பழைய நினைவுகளெல்லாம் வந்து கிட்டப் பாவைப் பார்க்க வேணுமென்ற ஆசை எனக்கு உண்டாயிற்று. ஆனால் நெடுநாளைக்கு முன்னுற் பழகின கிட்டப்பாவுக்கு என்னுடைய நினைவு இருக்குமோ என்ற சந்தேகம். அத்துடன் கிட்டப் பாவைக் காட்டிலும் என்னுடன் அதிகம் பழ கின, அவருடைய சகோதரர்களில் ஒருவராவது அவருடன் அப்போது இல்லையே என்கிற எண் ணம். மற்றும் வாழ்க்கையின் மகோன்னத நிலை யில் இருக்கிற கிட்டப்பா நம்மைச் சரியாக மதிப் பாரா என்ற மயக்கமும் வந்தது. கிட்டப்பாவைச் சந்திக்கலாமா, வேண்டாமா, என்பதை முடிவு செய்யாமலேயே, நாடகத்தையாவது பார்த்து வருவோம் என்று, நானும் ஒரு நண்பரும் போனேம். நாடகக் கொட்டகைக்கு முன்னுல் பிரமாண்டமான கூட்டம். 'டிக்கட்' கிடைக் காமல் ஏக ரகளை. முதல் மூன்று வகுப்புகளில் இடமில்லை. மற்ற வகுப்புகளுக்கும் 'டிக்கட்' வாங்குவது வெகு கஷ்டமாக இருந்தது. எனக் குக் காது சற்று மந்தமானதால், முதல் இரண்டு வகுப்புகளில் இடம் கிடைத்தால்தான், பிரயோ சனமுண்டு. அத்துடன் சிறு பிராயத்திலிருந்தே போலீஸ் உத்தியோகஸ்தரின் புதல்வன் என்ற

முறையில் முதல் வகுப்பைத் தவிர, வேறு இடங்களில் உட்கார்ந்து நாடகம் பார்த்துப் பழக்கமில்லை. அதற்குப் பிறகும் நாமக்கல்லுக்கு வந்த எல்லா நாடகக்காரரும், என்னைக் கவிராயனென்றும், சித்திரக்காரன் என்றும், வெகு மரியாதையுடன் முதல் வகுப்பில் சிறப்பான இடம் கொடுத்துப் பாராட்டிப் பழக்கம். அதனால் பெஞ்சுக்கோ, தரைக்கோ, 'டிக்கட்' வாங்கும் எண்ணம் வரவே நியாயமில்லை. கூட்டத்தோடு கூட்டமாக நின்று கொண்டிருந்தோம். திடீரென்று ஒரு தெரிந்த மனிதர் கண்ணுக்குப் பட்டார். அவர் கிட்டப்பா சகோதரர்களுடன் நாமக்கல்லில் அவர்களுடைய குடும்ப காரியங்களைப் பார்த்துக்கொண்டிருந்தவர். எனக்கு மிகவும் பழக்கமானவர். அவர் அவசரமாகக் கொட்டகைக்குள் போகப்போனார். அவரை அடையாளம் கண்டு கூப்பிட்டேன். அவரும் என்னை உடனே அறிந்துகொண்டு சந்தோஷப்பட்டு க்ஷேமம் விசாரித்தார். கிட்டப்பாவைப் பார்க்கவேண்டுமென்று என் ஆசையை அவரிடம் சொன்னேன். அவர் "நன்னு பார்க்கலாம். அனால் ஆட்டம் முடிந்த பிறகுதான் பார்க்கமுடியும். இப்போ வேஷம் போட்டுண்டிருப்பார். அவ்வளவு சௌகரியப்படாதே" என்றார். "நாடகம் பார்க்கக்கூட இடம் கிடைக்கவில்லையே" என்று சொன்னேன். "இருங்கோ பார்த்துட்டு வரேன்" என்று சொல்லி உள்ளே போனார். இரண்டு மூன்று நிமிஷத்துக்குள் வெகு வேகமாகத் திரும்பி வந்தார். "வாங்கோ,

வாங்கோ, ராமலிங்கம்பிள்ளை வாங்கோ" என்று கத்திக்கொண்டே, என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு கூட்டத்தில் நுழைந்தார். நானும் நண்பரும் பின் பற்றினோம். கூட்டங்களையெல்லாம் தாண்டி, வேறு வழியாக உள்ளே நுழைந்து நடிகர்கள் மேடைக்குப் போகிற பிரத்யேகமான கதவுக்குப் போனோம். உள்ளே நுழைந்தேன். படுதாக்களுக்குப் பக்கத்தில் நல்ல, வெளிச்சமில்லாத அந்தக் கதவுக்கு அருகில் நின்று கொண்டிருந்த ஒரு கனத்த உருவம் "வாருங்கோ வாருங்கோ ராமலிங்கம் பிள்ளை! பார்த்து வெகு நாளாச்சே. என்னைத் தேடி வந்தேளே! ரொம்பச் சந்தோஷம்" என்று என் கையைப் பிடித்துக் குலுக்கி வரவேற்றது. அந்த மனிதரை நான் முன் பின் பார்த்ததாக நினைவில்லை. அடையாளம் தெரியாமல் விழித்தேன். அவர் என்னைப் பேச விடாமல், க்ஷேமலாபங்களை விசாரித்துக் கொண்டே, பிடித்த பிடியோடு என்னைக் கூட்டிக்கொண்டு, கொஞ்சம் வெளிச்சமான இடத்துக்குப் போய் "உங்கள் பாட்டெல்லாம் இன்னும் நினைவிருக்கிறது" என்று சிரித்தார். அந்தச் சிரிப்பில் கிட்டப்பாவைக் கண்டேன். நான் பார்த்திருந்த கிட்டப்பாவுக்கும், இந்தக் கிட்டப்பாவுக்கும், துளிகூடச் சம்பந்தம் இல்லாததாக அவ்வளவு பருத்து அடையாளமும் மாறியிருந்தார். முன்னில்லாத மூக்குக் கண்ணாடியும் அடையாளத்தை மறைத்தது. வேஷம் போட்டுக் கொள்ள வேண்டிய அவசரத்தையும் ஒதுக்கி

விட்டு என்னுடன் அளவளாவி, அவருக்கென்று மேடையில் எப்போதும் தயாராக இருக்கும் பழம், பால், காப்பி முதலியவற்றைக் கொடுத்து உபசரித்துவிட்டு வேஷம் போட்டுக் கொள்ளப் போனார். அவருடைய உத்தரவின்மேல் முதல் வரிசையில் இரண்டு 'ஸ்பெஷல்' நாற்காலிகள் போடப்பட்டன.

நாடகம் பார்த்தேன். நாடகம் முடிந்தபின் மறுபடியும் மேடைக்குள் போனேன். தன்னுடைய ஜாகைக்கு வரவேணுமென்று அழைத்தார். மறுநாள் அங்கே வருவதாக விடைபெற்றுக் கொண்டேன். மறுநாள் முழுதும் அவருடன் தங்கியிருந்துவிட்டு சீக்கிரத்தில் மறுபடியும் வருவதாகச் சொல்லிவிட்டு ஊருக்கு வந்தேன். அதற்குப் பின் அவரைப் பார்க்கவில்லை. திருச்சி நாடகமேடையில் நான் கண்ட கிட்டப்பா இன்னும் என் மனதில் நடித்துக்கொண்டிருக்கிறார். அப்போது கேட்ட பாட்டுகள் என் காதுகளில் அடிக்கடி ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன. தமிழ் மிகவும் இனிமையான மொழியென்று சொல்லுகிறார்களே. அந்தத் தமிழின் இனிமையைக் கிட்டப்பாவின் பாட்டில்தான் நான் பார்த்தேன். சொல்லை முறிக்காமல், சங்கீதம் குறையாமல், பாவம் பழுதுபடாமல், தமிழ்ப் பாட்டுக் கேட்கவேணுமானால் இன்னொரு தரம் கிட்டப்பா பிறந்து வந்தால்தான் முடியும் என்று நான் எண்ணுவதுண்டு. 'சங்கீத' வித்வான்களோ, 'சங்கீதம்' என்ற ஒரு சங்கதியை அறிந்த

வர்கள் எனப்படுகின்ற ரஸிகர்களோ, ஒரு புறம் இருக்கட்டும். 'சங்கீதம்' என்பது இன்ன தென்றே தெரியாமல் கல்வியறிவோ, கலை யறிவோ, பயிற்சியோ, பண்பாடோ என்கிற எதையும் அறியாத பரம ஏழை மக்களுடைய உள்ளத்தையும் உருக்கி விடக்கூடிய பாட்டு கிட்டப்பா பாட்டுத்தான். அவருடைய சங்கீதமே அலாதி—இப்போது 'சங்கீத வித்வான்' என்று சொன்னால் நம்முடைய மனதில் என்ன எண் ணம் வருமோ, அந்த விதமான 'சங்கீத வித்வான்' அல்ல கிட்டப்பா. 'இந்தப் பாட்டில், இந்தப் பதத்தை. 'இந்த இடத்தில் ஏன் அமைத்தான் கவிராயன்' என்பதை அறிந்து, அனுபவித்துப் பாடும் அபூர்வ ஆற்றலை நான் கிட்டப்பா விடத் தில்தான் கண்டேன்.

கிட்டப்பாவை ஒரு கலைத் தெய்வமாகத் தமிழ்நாடு கொண்டாடுவது தகும்! தகும்.!

## அரசியல் வாழ்க்கை

1906-ம் வருஷம் வங்காளப் பிரிவினையால் உண்டான தேசீயக் கிளர்ச்சியே என்னுடைய தேசாபிமான உணர்ச்சிகளின் ஆரம்பம். அந்தக் கிளர்ச்சியைத் தொடர்ந்து பாபு அரவிந்தகோஷ் நடத்திவந்த 'வந்தே மாதரம்', 'கர்மயோகி' என்ற பத்திரிகைகளும் பாபு மோதிலால் கோஷ் ஆசிரியராக இருந்த 'அமிருத பஜார்' பத்திரிகையுந்தான் எங்களுக்குப் பிடித்தமான பத்திரிகைகள். அரவிந்த கோஷ்மீது ராஜத்ரோகக் குற்றத்திற்காக நடந்த பிரம்மாண்டமான விசாரணைகளும் அவருக்கு வக்கீலாக வாதித்த சித்தரஞ்சனதாசரின் வாதங்களும் என்னுடைய தேசீய உணர்ச்சிகளை உரப்படுத்தின. பாபு சுரேந்திரநாத் பானர்ஜீ, தாதாபாய் நவுரோஜி, லாலா லஜபதிராய், பெபின் சந்திரபால், திலகர், கோகலே, மேத்தா, முதலான பல தலைவர்களுடைய பேச்சுக்களையும் செய்கைகளையும் அப்போதைக்கப்போது படிப்பதும் அவற்றைப் பற்றி விவாதிப்பதும் நான் எப். ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே ஆரம்பமாயிற்று. 'யுகாந்தர்' என்ற ஒரு வேகமான பத்திரிகையும் சிற்சில சமயம் கிடைக்கும்.

இப்போது ராஜயோகியாக புதுச்சேரியில் இருந்துவரும் அரவிந்தர் அந்தக் காலத்தில் எழு

திய அரசியல் கட்டுரைகள் லட்சக் கணக்கான வாலிபர்களுடைய வாழ்க்கையை அடியோடு மாற்றியது. இன்றைக்கும் தேசியப் போராட்டத்தில் முன்னணியில் நின்று துன்புறும் பல தலைவர்களும் அக்காலத்தில் அரவிந்தருடைய எழுத்துக்களில் ஈடுபட்ட இளைஞர்களேதான். அரவிந்தர் தன்னுடைய மனைவி 'மிருணாலினி' என்ற பெண்மணிக்கு எழுதிய பல கடிதங்களை, அவர் மேல் நடத்திய ராஜத்துவேஷக் கேசுக்கு ஒரு சாட்சியமாகக் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டன. அந்தக் கடிதங்கள் பத்திரிகையில் வெளியாயின. அவற்றையெல்லாம் ஒரு சிறு புத்தகமாகச் சேர்த்து 'வெல்வெட்' பட்டு ஒட்டிய அட்டையில் 'பைண்டு' செய்து, அதை நண்பர் நாகராஜ ஐயங்கார் வெகு சிறந்த பொக்கிஷமாக வைத்திருப்பார். மிகவும் நம்பகமானவர்களுக்குத்தான் அதைக் கொடுப்பார். வாசித்த உடனே வாங்கி வைத்துக்கொள்வார். அந்தக் கடிதங்கள் பலவும் அரவிந்தர் அரசியல் துறவு பூண்டு மனைவியோடு வாழ முடியாமற் போய்விட்டதற்காக மனைவிக்குச் சமாதானம் கூறுவதையே குறிக்கொண்டன. அந்தக் கடிதங்கள் ஒன்றில், "எனது பிரியமுள்ள மிருணாலினியே! என்ன செய்வது? நீ ஒரு பித்தனை மணந்து கொண்டாய். உன்னைப் போன்ற இளம் பெண்கள் அனுபவிக்க வேண்டிய இன்பங்களை இழந்து வருந்துகின்றாய். உன்னுடன் இருந்து உனக்கு இன்பம் ஊட்டக் கூடிய நிலையில் நான் இல்லையே! என் செய்

வேன்! மிருணாலினி! என்னுடைய அன்னையை ஒரு ராக்ஷஸன் கீழே தள்ளி, அவளுடைய மார்பின் மீது படுத்துக்கொண்டு, அவளுடைய ரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கிறான். அதைப் பார்க்கிற நான் என்னுடைய அன்னையை மீட்க வழி தேடாமல் உன்னுடன் இருந்து காதல் பேசிக் களித்திருக்க என் மனம் இடங்கொடுக்க வில்லையே!'' என்று எழுதியிருக்கிறார். இந்த உரைகள் என்னுடைய வாலிப உள்ளத்தில் ஊசி கொண்டு தைத்தது போல அப்போது பதிந்தது இன்னும் என் நினைவில் இருந்து கொண்டே இருக்கிறது.

எங்கள் மனதில் சுதந்தரக்கனலை மூட்டி வைத்தவர் அரவிந்த கோஷ். அவர் புதுச்சேரியில் புகலடைந்த பின் அந்த ஊர் பல தீவிர தேச பக்தர்களுக்கு உறைவிடமாயிற்று. அதனால் அங்கே போய் அரவிந்தர் முதலானவர்களைப் பார்த்துவர வேணுமென்ற ஆசை எனக்கு அதிகப்பட்டது. நானும் எம். ஸி. சபாபதி முதலியார் என்ற நண்பரும் புதுச்சேரிக்குப் போனோம். அப்போது புதுச்சேரியில் அரவிந்தரை இந்திய ஸி. ஐ. டி. போலீசார் இரவு பகலாகக் கண் காணித்து, அவரிடத்துக்கு யாரார் வருகிறார்கள் போகிறார்கள் என்பதை வெகு கட்டுத் திட்டத் தோடு கவனித்து வந்தார்கள். அதனால் நாங்கள் புதுச்சேரியில் ஒரு வாரம் தங்கியும் அரவிந்தரைப் பார்க்க முடியவில்லை. ஆனால் அப்போது அங்கிருந்த வ. வே. சு. ஐயரவர்களையும், சுப்ரமண்ய

சிவாவையும் பார்த்தோம். அங்கிருந்த சுப்ரமண்ய பாரதியாரைப் பார்க்க வேணுமென்று அடிக்கடி அவர் வீட்டுக்குப் போயும் அகப்படவில்லை.

நான் டில்லியிலிருந்து திரும்பி வந்தபின் என்னுடைய சித்திரத் தொழில் சிறப்பாக நடந்தது. அத்துடன் பொது ஜன இயக்கங்களிலும் நான் பிரகாசிக்கலானேன். பள்ளிக்கூட காலத்திலேயே நான் பிரசங்கம் செய்யப் பழகியிருந்தேன். அதனால் நாமக்கல்லில் நடந்த எல்லாப் பிரசங்க மேடைகளிலும் என்னை எதிர் பார்ப்பார்கள். பொது ஜன சேவைக்கான எல்லா முயற்சிகளிலும் நானும், நாகராஜ ஐயங்காரும் எம். ஸி. சபாபதி முதலியார் என்ற என் தமிழ் ஆசானுடைய தம்பியும் முன்னால் இருப்போம். தென்னாப்பிரிக்காவில் சத்யாக்ரஹம் ஆரம்பித்த காந்தியவர்களுடைய வேண்டு கோளுக்கிணங்கி கோகலேயின் தலைமையில் இந்திய நாட்டில் 'தென்னாப்பிரிக்கா இந்தியர் சகாயநிதி' என்று பணம் வசூல் செய்தோம். நான் முதன்முதல் பொதுப் பண வசூலுக்காக ஊரூராகப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தது அப்போதுதான். நாமக்கல் தாலூகாவில் சுமார் ரூ. 3000 வசூல் செய்து அனுப்பினோம். அந்தச் சமயத்தில் என் சொற்பொழி வாற்றலைக் கண்ட பல நண்பர்கள், அதற்குப்பின்னால் நடந்த எல்லாப் பிரசங்கங்களுக்கும் என்னை ஒரு முக்கியஸ்தனாகி ஆக்கி விட்டார்கள். 1914-ம் வருடத்தில் திருச்சினாப்பள்ளி ஜில்லா

அரசியல் மகாநாடு நடந்தது. அப்போது நாமக்கல் தாலூகா திருச்சிராப்பள்ளி ஜில்லாவோடு சேர்க்கப் பட்டிருந்தது. அந்த மகா நாட்டை இளம்பள்ளி ஜமீன்தார் ஸ்ரீ ராஜலிங்கம் செட்டியாரவர்கள் வரவேற்புத் தலைவராக இருந்து, பெரும்பாலும் தன்னுடைய சொந்தச் செலவில் நடத்தினார். ராஜலிங்கம் செட்டியார் மிகவும் இங்கிதமான மனிதர். நல்ல கொடையாளி. இங்கிலீஷ் படிப்பில்லா விட்டாலும் நவீன நடையுடைகளில் சிறந்து விளங்குவார். எந்தக் காரியத்தை மேற்கொண்டாலும், அதைப் போல் வேறெங்கும் நடக்கவில்லை என்று பிறர் புகழும்படியாக வெகு சிறப்பாகச் செய்வார். செலவுகளை லட்சியம் செய்யமாட்டார். என்னுடைய கவித்துவத்தையும், சித்திரத்தையும், ஆரம்ப காலத்தில் மிகவும் ஆதரித்த வள்ளல். அவர் நடத்திய அந்தஅரசியல் மகாநாடு வெகு சிறப்பாக நடந்ததென்பதைச் சொல்லவும் வேண்டுமா? அப்போது தமிழ்நாட்டில் முக்கியமாக இருந்த பல தலைவர்களும் ராஜலிங்கம் செட்டியாருடைய செலவில் அழைக்கப்பட்டிருந்தார்கள். கருணாகர மேனன் தலைமை வகித்தார். அன்னி பெஸன்ட் அம்மையார் திறப்புவிழா நடத்தினார். அந்த மகாநாட்டிற்கு, பல நண்பர்களுடைய கட்டாயத்திற்காகவும், ராஜலிங்கம் செட்டியாருடைய விருப்பத்திற்காகவும், நான் ஒரு காரியதரிசியாகவும், நண்பர் நாகராஜ ஐயங்கார் தொண்டர் படைத் தலைவராகவும் இருந்தோம். அந்த மகா

நாட்டில் ஒரு பொருட் காட்சியும் நடந்தது. அதில் நான் பல படங்களை வைத்திருந்தேன். அந்தக் காட்சிக்கு, ஜட்ஜுகளான அருண்டேல் முதலானவர்கள் என்னுடைய சித்திரங்களுக்கு ஒரு தங்கப் பதக்கம் சிபார்சு செய்தார்கள். நான் வரைந்திருந்த சில ஹாஸ்யப் படங்களை பெஸன்ட் அம்மையார் விரும்பினர். ராஜலிங்கம் செட்டியார் உடனே அவற்றை அந்த அம்மை யாருக்குக் கொடுத்துவிட்டுப் பின்னால் அந்தப் படங்களுக்கென்று தனியாக எனக்கு ரூ. 500 சன்மானம் கொடுத்தார்.

அந்த அரசியல் மகா நாட்டிற்குப் பிறகு ஒவ்வொரு அரசியல் மகா நாட்டிற்கும் பெரும் பாலும் அழைப்பிற்காகவும், சிறு பான்மை ஆசைக்காகவும் தான் போவேன். இப்படியாகத் திருச்சி சேலம் ஜில்லாக்களில் முக்கியமான அர சியல் பிரசங்கியாகி விட்டேன்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவை விட்டு இந்தியாவிற்கே வந்து இந்திய சுதந்தரப் போராட்டத்தில் தலைவராக ஆரம்பித்த காலத் தில், எனக்குப் பல மனக் குழப்பங்கள் உண் டாயின. அது வரையிலும் நான் திலகருடைய தீவிரக் கட்சியை ஆதரித்தவன். திலகருக்கும் கோகலே அவர்கட்கும் நடந்த விவகாரங்களிலும், நான் திலகரிடமே அனுதாபம் காட்டினவன். திலகருக்கு ஆறு வருஷம் சிறைவாசம் என்று தீர்ப்புச் சொன்ன சமயத்தில், இங்கிலாந்தில்

இருந்து கொண்டிருந்த கோபாலகிருஷ்ண கோகலே அவர்கள், அதைப்பற்றி வாயே திறவாமல் இருந்து விட்டாரே என்று, கோகலேயிடம் அருவருப்புக் கொண்டவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவன் நான். ஆனால் காந்தியவர்களோ, கோகலே அவர்களைத் தன் அரசியல் குருவாக மதித்துப் பேசிக் கொண்டே, இந்திய நாட்டின் சுதந்தரப் போரை நடத்தத் தொடங்கினார். திலகருடைய வீர தீரம் பொருந்திய பரஸ்பர ஒத்துழைப்புக்கும் காந்தியின் சுத்த சாத்விக ஒத்துழையாமைக்கும் அதிக முரண்பாடு இருப்பதாக என் மனம் கலங்கிற்று. இப்படி நான், குழம்பிக் கொண்டிருந்த சமயத்தில் காசியில் 'ஹிந்து சர்வ கலாசாலை'யின் திறப்பு விழா நடந்தது. அந்த சர்வ கலாசாலைக்காக அல்லும் பகலும் அரும்பாடு பட்டு பண்டித மதன் மோகன் மாளவியா அனேக சமஸ்தானாதிபதிகளிடம் லட்சக் கணக்கில் நன்கொடை வாங்கினார். நன்கொடை கொடுத்த பல ராஜாக்களும், மகா ராஜாக்களும், திறப்பு விழாவிற்கு வருந்தியழைக்கப்பட்டு வந்திருந்தார்கள். அந்தச் சபையில் காந்தியைப் பேசச் சொன்னார்கள். காந்தியடிகள் அந்தச் சமயத்துக்கு வேண்டியபடி மாமூலான புகழுரைகள் பேசி நன்கொடை கொடுத்த மகா ராஜாக்களை வாழ்த்திவிடாமல், அந்த ராஜாதி ராஜர்கள் அணிந்திருந்த நவரத்ன ஆபரணங்களைப் பரிகசித்து, "கோடானு கோடி மக்கள் உண்ணக் கஞ்சியும் உடுக்கக் கந்தையும்

இல்லாமல் தவிக்கும் இந்த நாட்டில், இன்னும் உங்களிற் பலர் கோடிக் கணக்கான விலை மதிப்புள்ள ஆபரணங்களை அணிந்து கொள்ளும் ஆடம்பரத்தில் வாழ்வது பாபமல்லவா? ஏழை மக்களின் காவலர்களாக இருக்க வேண்டிய நீங்கள் இப்படிச் செய்வது மிகவும் துரோகமான காரிய மல்லவா? என்று பேசிவிட்டார். இந்தப் பேச்சு அந்த விழாக் கூட்டத்தை இழவுக் கூட்டம்போல் துக்கப்படச் செய்து விட்டது. அன்னி பெஸன்ட் அம்மை முதலானவர்களும் 'ஏண்டாப்பா இந்த அசம்பாவித மனிதனைப் பேச விட்டோம்' என்று சொல்லும்படி ஆகிவிட்டது. அதைப் பற்றிப் பல பத்திரிகைகளில் காந்தியை ஏளனம் செய்து பலபேர் எழுதினார்கள். ஆனால் என் மனதில் என்னவோ முற்றிலும் வேறான உணர்ச்சி உண்டாயிற்று. வழக்கத்துக்கு மிகவும் அசந்தர்ப்பமான அந்தப் பேச்சைப் படித்த உடன் காந்தி அடிகள் ஒரு 'மகா புருஷன்' என மதிக்கலானேன். அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மற்ற தலைவர்கள் என் மனதை விட்டு மறைந்து விட்டார்கள்.

1920-ம் வருஷத்தில் மகாத்மா காந்தி தன்னுடைய ஒத்துழையாமை இயக்கத் தீர்மானத்தைக் காங்கிரஸில் புகுத்தினார். அப்போது 'கிலாபத்' இயக்கமும் சேர்ந்தது. 'கிலாபத்' பிரச்னையில் காந்தியடிகள் மகம்மதிய சகோதரர்களுடன் மனப்பூர்வமாக ஒத்துழைத்ததனால், இந்திய முஸ்லீம்கள் எல்லோரும் காங்கிரசில் ஏகமன

தாகக் கலந்துகொண்டார்கள். அதனால், மகாத்மா காந்தியின் 'ஒத்துழையாமை' தீர்மானத்தைப் பற்றி முதல் முதல் ஆலோசிப்பதற்காக அதற்கென்று கல்கத்தாவில் கூடிய 'ஸ்பெஷல் காங்கிரஸ்' நடந்த போது அதே கொட்டகையில் அகில இந்திய 'கிலாபத்' மகாநாடும் நடந்தது. 'கிலாபத்' மகாநாட்டிற்கென்றும் காங்கிரசுக்கென்றும் தலைவர்களும் பிரதிநிதிகளும் பெருந்திரளாகக் கூடினார்கள். திலகர் பிரான் அதற்கு முன்னாலேயே இறந்து போனார் என்றாலும் 'திலகருடைய' கட்சி, என்ற எண்ணத்துடன் பல தலைவர்கள் காந்தியடிகளின் ஸாத்வீக வழிகளுக்கும் ஒத்துழையாமை திட்டத்துக்கும் விரோதமாக இருந்தார்கள். அந்தத் தலைவர்களுடைய எதிர்ப்புக்கு முக்கிய காரணம் அரசியல் போராட்டத்தில் சத்தியம் சாத்வீகம் என்ற ஆன்மார்த்த விஷயங்களைப் புகுத்தக் கூடாது என்பது தான். அத்துடன் சர்க்கார் உத்யோகம், கோர்ட்டுகள், பள்ளிக்கூடங்கள், முதலியவற்றைப் பகிஷ்கரிப்பதையும் பல தலைவர்கள் விரும்பவில்லை. அநேகமாக அகில இந்தியத் தலைவர்களாக இருந்த எல்லாரும் காந்தியின் திட்டத்தை எதிர்த்தார்கள். ஆனால் பொது ஜனங்களிடம் காந்தியின் செல்வாக்கு மிகவும் அதிகமாக இருந்தது. சம்பாரன் ஜில்லாவில் தோட்டவேலை செய்யும் ஏழைகளுக்காக காந்தியடிகள் சமீபத்தில் சத்யாக்ரகம் நடத்தி வெற்றி பெற்றதும், அவர் 'ரௌலட்' சட்டங்களை எதிர்த்த தீரமும், அதே சமயத்தில்

அமிர்த சரசில் டயர், குஞ்சு குழந்தைகளையும் பெண்டுகளையும் கூடச் சுட்டுக் கொன்று விட்டதனால் மக்களுக்குப் பொங்கியிருந்த மனக்கொதிப்பும், காந்தியடிகள் கிலாபத் இயக்கத்தை ஆதரித்ததால் மகம்மதியர்களிடத்தில் அவருக்குண்டான மதிப்பும், எல்லாம்சேர்ந்ததால் காங்கிரசில் காந்தியினுடைய தீர்மானம் நிறைவேறிவிடுமோ, என்ற பயம் அவருடைய திட்டத்தை எதிர்த்த தலைவர்களுக்கு ஏற்பட்டது. அதற்காக அவர்கள் காந்திக்கு விரோதமாக வோட் கொடுக்கத் தங்கள் சொந்த முயற்சியில் ஏராளமான பிரதிநிதிகளைத் திரட்டிக் கொண்டு கல்கத்தாவுக்கு வந்தார்கள். காந்தியை ஆதரித்தவர்களும் அதேமாதிரி திரண்டு வந்தார்கள்.

நாமக்கல்லில் ஹனீப் சாயபு என்ற ஒரு மகமதிய கனவான் இருந்தார். அவர் பர்மா எண்ணெக்கு ஏஜண்ட். நாமக்கல்லில் இப்போது விளங்கும் பள்ளிவாசல் அவருடைய முயற்சியால் கட்டிமுடித்தது. மகமதிய மார்க்க நூல்களை நன்றாக அறிந்தவர். மிகமிகப் பெரிய மனிதர். சாந்தமே உருவெடுத்தவர். சத்தியம் தவறாதவர். ஜாதிமத வித்தியாசமின்றி தானதருமம் செய்வார். மிகவும் பரோபகார சிந்தையுள்ளவர். எவருக்கும் இல்லையென மாட்டார். அவரிடத்தில் இனிய பார்வையும் இன் சொல்லும் எப்போதும் குடி கொண்டிருக்கும். நாகராஜ ஐயங்காருக்கும் எனக்கும் நெருங்கிய நண்பர். மகமது நபியவர்களின் பெருமையும் குரானின் மகத்துவத்தை

யும் நாங்கள் அறிந்து கொண்டது அவரால். அவருடைய வாழ்க்கையிலிருந்து தான் மக மதிய மார்க்கம் போதிப்பதும், சத்தியமும் சாந்தமும் தான், என்பதை நான் முதல்முதல் அறிந்தேன். பெரிய தியாகி. காந்தியடிகளின் சாத்விக இயக்கத்தைக் கட்டோடு ஆதரித்தவர்.

அவர் கல்கத்தாவில் நடக்கும் காங்கிரசில் காந்தியடிகளை ஆதரிக்க நாமக்கல்லிலிருந்து சில பிரதிநிதிகள் போகவேண்டுமென்று விரும்பினார். தன்னுடைய சொந்தப் பொறுப்பில் நானூறு ரூபாய் செலவுக்குத் தந்து, பீர்பாட்சா சாயபு என்ற ஒரு கனவானையும் நாகராஜ ஐயங்காரையும், என்னையும், குர்தூஸ் சாயபு என்ற ஒருவரையும் நாமக்கல் பிரதிநிதிகளாக கல்கத்தாவுக்கு அனுப்பினார்.

சென்னையிலிருந்து 'கிலாபத் ஸ்பெஷல் என்ற ரயில் வண்டியில் நாங்கள் பிரயாணம் செய்தோம். இதற்கு முன்னால் 'காங்கிரஸ் ஸ்பெஷல்' என்ற ஒரு வண்டி போயாச்சு. கிலாபத் ஸ்பெஷலுக்குப் பின்னால் இன்னொரு 'காங்கிரஸ் ஸ்பெஷலுக்கு' ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தது. இந்த ஸ்பெஷல் வண்டிகளல்லாமல் தினசரி போகிற வண்டிகளிலும் பல பேர் போய் விட்டார்கள். நாங்கள் போன அந்த ரயிலின் பேர் 'கிலாபத் ஸ்பெஷல்' என்றாலும் அதில் பாதிப் பேருக்கு மேல் ஹிந்துக்கள் தான். காந்திக் கட்சியை எதிர்த்த தலைவர்கள் பலபேர் அதில்தான் இருந்தார்கள். சிறப்பாகத்

தமிழ்நாட்டில் திலகருடைய பிரதிநிதியாக விளங்கிய, வி. ஓ. சிதம்பரம் பிள்ளையவர்களும், அவருடைய கோஷ்டியைச் சேர்ந்த சுப்ரமண்ய சிவா முதலானவர்களும், ஸ்ரீ எஸ். சீனிவாசய்யங்காருடைய கூட்டமும் அதில் இருந்தார்கள். நாமக்கல்லிலிருந்து தங்கள் சொந்தச் செலவில் சில பிரதிநிதிகளும் கல்கத்தாவுக்குப் போனார்கள். அவர்களில் ஸ்ரீ கே. வி. வெங்கடாசல ரெட்டியார் எங்களுக்கு முன்னாலேயே போய்விட்டார். ஸ்ரீ ஆர். வரதராஜ முதலியார் எங்களோடு கிலாபத் வண்டியில் வந்தார். சென்னையைவிட்டுக் கல்கத்தா சேருகிற வரையிலும் வண்டியிலுள்ள பிரதிநிதிகளுக்குள் கட்சிப் பிரசாரம் நடந்து கொண்டே வந்தது. சிதம்பரம் பிள்ளையும், சிவா முதலானவர்களும், ஒவ்வொருவருடனும் வாதாடி காந்தியின் சாத்விக வழிகளை ஏற்றுக் கொண்டால் நாடு முழுவதும் இன்னும் வீரியமற்றுக் கோழைக்கதியாகத்தான் போய்விடும் என்று சொல்லுவார். ஸ்ரீ வரதராஜ முதலியார் சிதம்பரம் பிள்ளையின் பேச்சுகளை வழிநெடுக எதிர்த்துக்கொண்டே வந்தார். கல்கத்தாவுக்குப் போன மறுநாள்—காங்கிரசில் வோட்டுப் போட வேண்டியதற்கு இரண்டுநாள் முன்னால்—எங்களுடைய ஜாகையில் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை ஒவ்வொருவரையும் கண்டுபேசி, காந்தியின் தீர்மானத்துக்கு எதிராக வோட்போட வேணுமென்று கேட்டுக் கொண்டார். அப்படி கேட்டுக்கொண்டபோது வாக்குவாதம் முற்றி வரதராஜ முதலியார் சிதம்

பரம் பிள்ளையை அவமதித்துப் பேச ஆரம்பித்து விட்டார். நாகராஜ ஐயங்கார் சமாதானம் செய்தார்.—நான் ஜுரமாகப் படுத்துக்கொண்டிருந்தேன். ஏன் ஜுரம் என்றால் கிலாபத் ஸ்பெஷலுக்கு வழிநெடுக மரியாதைகளும் விருந்துகளும் நடந்தன. பெஜவாடாவிலும் தூணியிலும் பெரிய விருந்துகள். தூணி ஒரு சமஸ்தானம். ராணியார் பாலும் தயிரும் நெய்யும் குடங் குடமாகக் கொடுத்தார்கள். பட்சணங்கள் கூடை கூடையாக ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகத் தந்தார்கள். ஒரு பெரிய கூடையில் சாப்பாடு, பூரிகள், மிட்டாய்கள், தயிர்க்கலயம், நெய்க்கலயம், பால்கலயம் பழங்கள் எல்லாம் வைத்து ஒவ்வொருவருக்கும் கொடுத்தார்கள். நானும், வரதராஜ முதலியாரும் ஆளுக்கு இரண்டு கூடைகள் அதிகமாக வாங்கிக் கொண்டோம். காய்ச்சல் வரக் காரணம் கேட்பானேன்?. அடிதடியில் இறங்கி விடுவார் போல அவ்வளவு கடுமையாக வரதராஜ முதலியார் சிதம்பரம் பிள்ளையைத் தாக்கிப் பேசிவிட்டதைக் கண்ட நாகராஜ ஐயங்கார் மிகவும் வருத்தப்பட்டு காய்ச்சலாகப் படுத்திருந்த என்னிடம் சொன்னார். அன்று இரவு எனக்குக் கொஞ்சம் காய்ச்சல் குறைந்தது. என்னைக் கவனிப்பதற்காக நாகராஜ ஐயங்காரும் வரதராஜ முதலியாரும் என் கட்டிலின் அருகில் உட்கார்ந்தார்கள். எனக்கு ஆகாரம் கொடுத்துக் கொண்டே அவர்கள் இருவரும் அநேக விஷயங்களைப் பற்றிச் சந்தோஷ

மாகப் பேச ஆரம்பித்தார்கள். அந்தச் சமயத்தில் நாகராஜ ஐயங்கார் கொஞ்சங் கொஞ்சமாக ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்களுடைய அருமை பெருமைகளை யெல்லாம் முதலியாருக்குச் சொல்லி, தமிழ் நாட்டின் தவப்புதல்வருள் ஒருவரான சிதம்பரம் பிள்ளையை அப்படி அவமதித்து விட்டது மகாபாதகம் என்பதை எடுத்துக் காட்டினார். நான் நாகராஜ ஐயங்காருக்குப் பக்கப்பாட்டுப் பாடினேன். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையின் சரித்திரத்தை அவ்வளவு விவரமாக அதுவரையிலும் கேட்டிராத வரதராஜ முதலியார் மிகவும் வருத்தப் பட்டார். முதலியார் முன்கோபி என்றாலும் தன் குற்றத்தை உணர்ந்து விட்டால் உடனே தலைவணங்கும் கெம்பீரத் தன்மையுள்ளவர். மறுநாள் விடிந்த உடன் நாகராஜ ஐயங்காரையும் கூட்டிக் கொண்டு முதலியார் மளமளவென பிள்ளையவர்களிடம் ஓடினார். கண்ணீர் சோரக் கைகூப்பி நின்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். தியாகமூர்த்தியான ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை முதலியாரைக் கட்டித்தழுவித் தாமும் கண்ணீர் கலங்கித் தேறுதல் செய்தார். சிதம்பரம் பிள்ளையவர்களுடைய மாசுமருவற்ற மனதின் மாண்பை அப்போதுதான் நேரிற் கண்டோம். வெள்ளைக்காரருக்குப் போட்டியாக சுதேசிக் கப்பல் ஓட்டி, வெள்ளைக்கார கப்பலைக் காட்டிலும் குறைந்த வாடகையில் பிரயாணிகளுக்கு இன்னும் அதிக வசதிகள் செய்து கொடுக்கலாம் என்றதை நடத்திக் காட்டியதீரன் சிதம்பரம்பிள்ளை. அப்படிக்

கப்பல் ஓட்டிய ஒரே ஒரு காரணத்திற்காக வெள்ளைக்காரரின் வெறுப்புக்கு ஆளாகி, சொல்ல முடியாத துன்பம் சகித்து, வயிரம் பாய்ந்த மன உறுதியுடன் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்ற வீரரான சிதம்பரம் பிள்ளை வரதராஜ முதலியார், மன்னிப்புக் கேட்டுக் கொண்டபோது குழைந்து குழைந்து பேசினதைக்கண்டால் 'அட! இவரா சிதம்பரம் பிள்ளை!' என்று எண்ணச் செய்யும். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையுடன் சல்லாபிக்கும் பாக்கியம் அப்போது தான் எனக்குக் கிடைத்தது. என் தமிழறிவையும் கவித்துவத்தையும் அறிந்து ஆனந்த மடைந்து ஆசீர்வதித்தார். அதற்கு ஏழு வருஷத்துக்கு முன்னால் பாடிய என் நாட்டுக் கும்மியை நான் பாடிக்காட்டினேன். அதைக் கேட்ட பிள்ளையவர்கள் சிறு பையனைப் போலத் துள்ளிச் சிரித்துப் பரவசப்பட்டு என்னைப் பல விதமாகப் பாராட்டினார்கள். மறுநாள் என் உடம்பு சரியாகிவிட்டது. காங்கிரசுக்குப் போனேன். காந்திக்கு வோட்டும் போட்டேன்.

அன்றுமுதல் இன்றளவும் நான் காந்தி பக்தனாகவே—அல்லது காந்தி பித்தனாகவே—இருந்து வருகின்றேன். கல்கத்தா பயணத்துக்குப் பின் என் வாழ்க்கை முற்றிலும் மாறிவிட்டது. காந்தீயம் ஒன்றே நம் நாட்டின் விடுதலைக்கு மட்டுமல்லாமல் உலக நலத்துக்கும் கதிமோக்ஷம் என்று கருதலானேன். **காங்கிரஸ் சேவை** என்ற எண்ணத்தைக் காட்டிலும் **காந்தீய சேவை** என்ற எண்ணமே என் மனதில் பதிந்தது. காந்தீயத்திற்

கலந்த அரசியல் பேச்சுகளைவிட ஆன்மஞானப் பேச்சுகளும் சமரச சன்மார்க்கங்களுமே என்னை அடிமை கொண்டுவிட்டன. காந்தீயத்தினுல் நமக்கு வரப்போகிற அரசியல் நலங்கள் எப்படியிருக்குமோ தெரியாது. உலகத்துக்கே பொதுவான நன்மைகள் என்னென்ன உண்டாகும் என்பதையும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. காந்தியடிகள் உயிரோடிருந்து, உலகம் இது வரையிலும் கண்டறியாத ஒப்பற்ற தவ ஒழுக்கத்தை கண்ணுக்கு முன்னுல் நடந்து காட்டிப் பலமுறை பட்டினி கிடந்து, ஆன்ம சக்தியை நிதர்சனமாக நிரூபித்துக் காட்டுகின்ற காலத்திலேயே உலகம் முழுவதும் ஒருவரை யொருவர் கொன்று மடிக்கின்ற யுத்தத்தில் ஈடுபட்டு, காந்தியையும் சிறையிலடைத்து அவருடைய உபதேசங்களையும் ஒடுக்கி விட்டதைப் பார்க்கிறேம். அப்படியிருக்க காந்தியடிகளின் காலத்துக்குப் பின்னுல் அவருடைய சுத்த ஸாத்வீக தத்துவங்கள் உலகமக்களிடம் பரவி மனிதனை மனிதன் கொல்வதை விட்டுவிட்டு சண்டையே இல்லாத நிலைமை ஒரு முகூர்த்த நேரமாவது நிலைக்குமா என்பதும் விழித்துக் கொண்டே காணும் கனவாகத்தான் தோன்றுகின்றது. இருந்தாலும் காந்தியடிகள் சொல்லால் விளக்க முடியாத அரும்பெரும் காரியத்தைச் சாதித்து விட்டார். இந்திய நாட்டின் ஞானத்தை நடந்து காட்டினுர். இந்தியாவின் நாகரிகம் மிகவும் உயர்ந்தது என்பதை நிலை நாட்டினுர். இந்தி

யாவின் ஜீவ தத்துவங்களைக் காப்பாற்றி விட்டார். உலகமகா சரித்திரத்தில் இந்தியாவின் பெருமையை மிகவும் உயர்த்தி விட்டார்.

இமயமலை முதற்கொண்டு இலங்கை முடிய வாழ்ந்து வருகிற சுதேச மக்களிடையில் மற்றெந்த நாட்டிலும் காணமுடியாத ஜீவ காருண்ய மனப்பான்மை உண்டு. அது பல்லாயிரம் வருஷங்களாக வளர்ந்து பண்பட்டது. தமிழன் வளர்த்தானோ ஆரியன் வளர்த்தானோ, மற்றவன் வளர்த்ததோ, அன்றி எல்லாரும் சேர்ந்து வளர்த்ததோ எப்படியோ இருக்கட்டும். அந்த மனப்பான்மை ஒன்றில்தான் மனிதன் மிருகம் அல்லவென்பதைக் காணலாம். அந்த நாகரிக மனப்பான்மை இடையே குறைந்துவிட்ட போது புத்தர்பிரான் தோன்றிப் புதுப்பித்தார். மீண்டும் அந்த மனப்பான்மை குறையத் தொடங்கி மேல் நாட்டுச் சம்பந்தங்களால் அழிந்துவிடும் போல் இருந்த சமயத்தில் காந்தியடிகள் தோன்றி அந்த ஆன்ம ஞான — ஜீவகாருண்ய — மனப்பான்மையை மிகமிகவும் புதுமுறையில் அழியா எழுத்துக்களால் பொறித்து விட்டார். அரசியல் சுதந்தரத்தைக் காட்டிலும் ஆன்ம சுதந்தரம் உயர்ந்தது என்பதையும் 'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை' என்ற தீரத்தையும் இந்தியனுக்கு உண்டாக்கி விட்டார். அன்றியும் ஞானயோகம், ராஜயோகம், பக்தியோகம், கர்ம யோகம் என்று சொல்லப்படுகிற நால்வகை யோகங்களும், இந்த அளவில் ஒருங்கே

நடத்திய ஒரு மனிதரை-காந்தியைத் தவிர-உலக சரித்திரம் கண்டதில்லை என்பது என்னுடைய பித்து. எப்படியோ கல்கத்தா காங்கிரசுக்குப் பிறகு நான் வெறும் காந்தீய அடிமையாகி விட்டேன். என்னுடைய சொந்தச் சிறுமைகளும் குற்றங்களும் எப்படியிருந்தாலும், காங்கிரஸ் இயக்கத்தைப் பொறுத்த மட்டில் நான் செய்த காங்கிரஸ் சேவைகளில் காந்தியடிகளின் கட்டளைகளில் இம்மிகூடப் பிசகாமல் நடந்து செல்லவே முயன்றேன்.

1921 முதல் 1930 வரையிலும் நாமக்கல் தாலூகாவிலும் நான் காங்கிரஸ் தலைவர்களுக்குள் ஒருவனுக மிக நல்ல சேவைகள் செய்தேன். நாமக்கல்லில் காங்கிரஸ் காரியங்களைத் தலைமை பூண்டு பிரசங்கங்களையும் நடத்த நாகராஜ ஐயங்கார், வெங்கடாசல ரெட்டியார், உஸ்மான் சாயபு முதலான பலபேர் இருந்தார்கள். ஆனால் கரூரில் காங்கிரஸ் இயக்கத்துக்குச் சரியான வழி காட்டக்கூடிய தலைவர் யாரும் இல்லாமலிருந்தது. கரூர் எனக்கு மாமனார் வீடு. அங்கே அடிக்கடி போவேன். அந்த ஊரில் காங்கிரஸ் இயக்கத்தை முதல் முதல் ஆரம்பித்தவன் நான். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் சுமார் பத்து வருஷகாலம் கரூர் வட்டாரத்தில் நான் தனித் தலைவனாக விளங்கினேன். கரூர் என்னை மிகவும் கவுரவப் படுத்தி நான் சொன்னபடி யெல்லாம் செய்தது. அமராவதி ஆற்று மணலில் நான் நடத்திய காங்கிரஸ் கூட்ட

ங்கள்கணக்கற்றன. தமிழ் நாட்டிலுள்ள எல்லாத் தலைவர்களும் என் அழைப்பைக் கண்ட உடன் கரூருக்கு வருவார்கள். பல நல்ல வாலிப்ர்கள் தொண்டர்களாக உழைத்தார்கள். சிறப்பாக இப்போது 'கல்கி' ஆசிரியராக விளங்கும் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தியவர்கள் அப்போது தான் தன்னுடைய படிப்பை பகிஷ்கரித்துவிட்டு என்னுடன் கரூர் தாலூகாவில் வெகு நல்ல பிரசாரம் செய்தார். அந்த ஆரம்ப காலத்திலேயே அவருடைய பேச்சுகள் வெகு அழகாகவும் புத்தி சாலித்தனம் மிகுந்ததாகவும் இருந்ததைக் கண்டு நான் மிகவும் மெச்சினேன். இப்போது சுத்தானந்த பாரதியாராக விளங்கும் துறவியார் அப்போது வெறும் சுப்ரமணிய ஐயராக காட்டுப் புத்தூர் ஜமீன்தார் ஹைஸ்கூலில் உபாத்தியாயராக இருந்து வந்தார். காட்டுப்புத்தூர் எனக்கு சிறிய தாயார் வீடு. நான் மெட்ரிகுலேஷன் பரிட்சை தேறினதும் காட்டுப்புத்தூர் ஹைஸ்கூலில்தான். ஆதலின் காட்டுப்புத்தூருக்கு அடிக்கடி போவதுண்டு. சுத்தானந்தர் எனக்காக அடிக்கடி கரூருக்கு வந்து என்னுடன் தங்குவார். அப்போதே அவர் துறவு நிலையில்தான் வாழ்ந்து வந்தார். பாசிப் பயறையும் அரிசியையும் உப்பில்லாமற் பொங்கி உண்பார். என்னுடைய காந்திய சேவைகளையும் என் கவிதைகளையும் மிகவும் பாராட்டி உத்ஸாகம் ஊட்டுவார். அவருடைய பாட்டுகளையும் எனக்குக் காட்டி ஆனந்த முண்டாக்குவார். சுத்தானந்தரை எப்

போது நினைத்தாலும் என் மனதில் இன்பம் ஊறும்.

ஸ்ரீ. திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்களுடைய நல்லுறவினால் நான் தமிழ் நாட்டில் மிக நல்ல பேச்சாளிகளில் ஒருவனாக மதிக்கப்பட்டேன். எந்த ஊரில் காங்கிரஸ் மகா நாடுகள் நடந்தாலும் என்னுடைய பாட்டோ பிரசங்கமோ வேண்டுமென்று விரும்புவார்கள். சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், கல்யாணசுந்தர முதலியார், ஈ. வெ. ராமசாமி நாய்க்கர், டாக்டர் ராஜன், டாக்டர் வரதராஜுலு நாயுடு, டாக்டர் சாமிநாத சாஸ்திரி, மதுரை வைத்தினாத ஐயர் முதலான எல்லாத் தலைவர்களும் என்னை எங்கே கண்டாலும் வெகு குதூகலத்துடன் வரவேற்று என்னுடைய பாட்டுகளுக்குப் பிரதானம் கொடுத்துப் போற்றிப் புகழ்வார்கள். அந்தப் புகழ்ச்சிகளால் நான் மெய்மறந்து உழைக்கலானேன்.

அக்காலத்தில் நடந்த அனேக ருசிகரமான நிகழ்ச்சிகள் உண்டு. அவை எல்லாவற்றையும் சொன்னால் அதுவே பெருங்கதையாகி விடும். படிப்பதற்கும் பாரமாகலாம். இரண்டொன்றை மட்டும் குறிப்பிடுகின்றேன்.

## ஏட் கிருஷ்ணசாமி நாயுடு

கரூரில் எனக்குப் பலமுறை 144 வழங்கப் பட்டது. ஆனால் என்னோடிருந்த பல நண்பர்களைக் கைது செய்தபோதும் கூட என்னை மட்டும் கைது செய்யவே இல்லை. இரண்டு மூன்று தடவை என்னையும் கைது செய்ய வாரண்ட்டுகள் பிறப்பிக்கப்பட்டன. ஆனால் செய்யவில்லை. அதற்குப் பல காரணங்கள். அவற்றுள் வெகு முக்கியமான காரணம் என்னவென்றால், நான் தலைவனாக இருந்து நடத்திய எல்லா காங்கிரஸ் காரியங்களிலும், காந்தியவர்களுடைய சுத்த சாத்விகம் தவறி விடாதபடி கண்ணும் கருத்துமாக கவனிப்பேன். போலீஸ்காரர் தலையிடவேண்டிய அவசியம் நேர்ந்து விடாதபடி பார்த்துக் கொள்வேன். என்னுடைய பிரசங்கங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களைத் தாக்கியோ, ஏளனம் பண்ணியோ ஒரு வார்த்தைகூடச் சொல்ல மாட்டேன். கூடுமான வரை இந்தியனாகப் பிறந்த போலீஸ்காரருக்கு நேர்ந்திருக்கிற தர்ம சங்கடமான நிலைமைக்குப் பரிதாபப் பட்டு, 'இந்திய உத்தியோகஸ்தர்கள் வெறும் அம்புகள் மாதிரியும், வில்லுகள் மாதிரியுந்தான். அம்பை வில்லிற் பூட்டி எய்து விடுகிறவர்கள் வேறு மனிதர்கள். எய்தவன் மேற் கோபங்கொள்ள வேணுமேயல்லாமல் அம்பின் மேலும் வில்லின் மேலும் கோபித்துக்கொண்டு என்ன பயன்'' என்

றெல்லாம் பேசி உத்தியோகஸ்தர்களைக் கடுமை யாகத் தாக்குகின்ற பிரசங்கிகளுக்குச் சொல்லு வேன். இப்படி நான் பேசுவதைப் பல நண் பர்கள் கேலி செய்து நான் போலீசுக்குப் பயந்து வழ வழ' 'கொழ கொழ' என்று பேசுவதாகச் சொல்வதும் உண்டு. நானும் ரொம்ப பயந்தவன் தான். இருந்தாலும் நான் போலீசுக்குப் பயந்ததைக் காட்டிலும் காந்தீயத்துக்கே அதிகமாகப் பயந்தேன். உத்யோகஸ்தர்களைப் புண்படுத்த வென்றே சில பேர் பேசுவதை நான் அப்போதைக்கப்போது நயமான வார்த்தைகளில் கண்டித்து விடுவேன். அத்துடன் போலீஸ் காரர்கள் ஏதாவது தகவல் வேணுமென்று கேட் டால் மற்றவர்கள் சொல்ல மறுத்தாலும் நான் அவர்கள் வேண்டியதை யெல்லாம் ஒளிக்காமல் சொல்லுவேன். காந்தீயத்தில் போலீசுக்கு மறைக்க வேண்டியது ஒன்றும் இருக்கக் கூடா தென்பதை நான் ஆதியிலிருந்து அனுஷ்டித்த வன். அதனாலோ என்னவோ போலீஸ்காரர் என்னை அரஸ்ட் செய்ய அவசரப்படவில்லை.

ஒருநாள் அமராவதிக் கரையில் ஒரு பிரம் மாண்டமான காங்கிரஸ் கூட்டம் நடந்தது. சுமார் இருபதாயிரம் ஜனங்கள் கூடியிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் பேசுவதற்காக டாக்டர் ராஜன், டாக்டர் சாமிநாத சாஸ்திரி, சையத் முர்த்துசா சாயபு, காலஞ்சென்ற ஈரோடு தங்கப் பெருமாள் பிள்ளை, மதுரை மௌலானா சாயபு முதலான இன்னும் பல தலைவர்கள் வந்திருந்

தார்கள். ஆற்று மணலில் பெஞ்சுகளைப் போட்டு ஒரு மேடை செய்து, அதில் ஒரு மேஜையும் தலைவருக்கு ஒரு நாற்காலியும் பேசுகின்றவர் நிற்க இடமும் இருந்தன. அந்த மேடைக்கு மேல் மணலில் நடப்பட்ட மூங்கில்களால் வெறும் மல்லிகை மலர்களால் ஒரு விதானம். பல இடங்களில் மூங்கில்களை நட்டு அவற்றில் வாஷிங்டன் விளக்குகள்.

கூட்டத்துக்குத் தலைவன் நான். டாக்டர் ராஜன் பேசிக்கொண்டிருக்கிறார். அந்தச் சமயத்தில் அந்தக் கூட்டத்தை உத்தியோக முறையில் கவனிக்க வேண்டிய கிருஷ்ணசாமி நாயுடு என்ற போலீஸ் ஹெட்கான்ஸ்டபிள் சில சி. ஐ. டி.க்களுடன் வந்தார். சி. ஐ. டிக்கள் சாதாரண உடையில் இருந்தார்கள். ஜனங்களோடு மணலில் உட்கார்ந்து விட்டார்கள். போலீஸ் உடுப்புடன் இருந்த கிருஷ்ணசாமி நாயுடுவுக்கு அப்படி உடனே உட்கார்ந்து விட முடியாமல் அங்கும் இங்கும் பார்த்தார். அங்கே விளக்குகளை மாட்டுவதற்காகப் போடப்பட்டிருந்த ஒரு 'ஸ்டூல்' இருந்ததைக் கண்டு அதில் உட்கார்ந்து கொண்டார். அவர் அங்கே வந்ததையும் அந்த ஆசனத்தில் உட்கார்ந்ததையும் நான் கவனிக்கவில்லை. நான் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

எனக்கு ஒரு துண்டுக் கடிதம் மேஜையின் மேல் வைக்கப்பட்டது. அதில் "தலைவரவர்களுக்கு : இந்த கூட்டத்துக்குப் பல பெரிய மனி

தர்கள் வந்திருக்கிருர்கள். வியாபாரிகளும், வக்கீல் களும்,மிராசுதார்களும் மணலில்உட்கார்ந்திருக்க, இந்தப் போலீஸ் ஏட்டு எல்லாருக்கும் மேல் நடுக்கூட்டத்தில் நாற்காலியில் உட்கார்ந்திருப் பது மிகவும் மனக்கொதிப்பை உண்டாக்குகின் றது. தாங்கள் உடனே அவரை இறங்கிக் கீழே உட்காரச் சொல்லவேணும்" என்று எழுதப் பட்டிருந்தது. நான் அதைப் பார்த்துவிட்டு, அதை என்னிடம் கொடுத்தவர்கள் பக்கமாகத் திரும்பி புன்னகை புரிந்துவிட்டு, அதை மடித்து மேஜையின் ஒரு புறத்தில் வைத்துவிட்டு, மீண் டும் பிரசங்கத்தில் கவனம் செலுத்தினேன். சிறிது நேரத்துக்குள் எனக்கு ஒரு 'ரிமைண்டர்' வந்தது. அதே விஷயம். முன்னிலும் அழுத்த மாகவும் அகத்தியமாகவும் எழுதப்பட்டிருந்தது. நான் கடிதம் தந்தவர்களைத் திரும்பிப் பார்த்து கை ஜாடை காட்டி சும்மா இருக்கும்படி கேட் டுக்கொண்டேன். அவர்கள் சும்மா இருக்க இஷ்டப்படவில்லை. நான் உடனே ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தேன். அதில் "அவர் ஏதோ யோசனையில்லாமல் உட்கார்ந்து விட்டார். அது எப்படியிருந்தாலும், அவரும் நம்மோடு சேர்ந்த ஒருவர். நடுக்கூட்டத்தில் இத்தனை பேருக்கு முன் ஞல் அவரைக் கீழே இறங்கச் சொல்வது, வேண்டுமென்று ஒரு மனிதரை அவமானப் படுத்துவதாகும். அந்தச் செயல் காந்தீயத்துக்கு முற்றிலும் விரோதமானது. தயவு செய்து பொறுத்துக் கொள்ளுங்கள். இந்தச் சின்ன

விஷயத்துக்காகக் கூட்டத்தின் பெருமையைக் குலைக்க வேண்டாம்'' என்று எழுதிக்கொடுத்தேன். அதைப் பார்த்துவிட்டு "இது சின்ன விஷயம் அல்ல. பல பெரிய மனிதர்கள் போலீஸ் காரன் தங்கள் தலைக்குமேல் உட்கார்ந்திருப்பது பற்றி மிகவும் வருத்தப்படுகிறார்கள். நீங்கள் உடனே அவரை இறங்கி உட்காரச் சொல்ல வேணும்'' என்று மறுபடியும் எழுதிக் கொடுத்தார்கள். நான் மீண்டும் அதற்குப் பதில் எழுதி அதில் "அப்படி அவரை அவமானப் படுத்த எனக்கு இஷ்டமில்லை. வேணுமானால் நான் தலைமைப் பதவியிலிருந்து விலகிக் கொள்ளு கிறேன். நீங்கள் வேறு தலைவரை நியமித்து அவ ரைக் கொண்டு போலீஸ்காரரை இறக்குங்கள். நான் தலைவனாக இருக்கும் வரையில் அப்படி ஒரு வரை அவமானப்படுத்தச் சம்மதிக்கமாட்டேன்'' என்று எழுதியிருந்தேன். அதைப் பார்த்துவிட்டு சில வாலிபர்கள் என் மீது மிகவும் வருத்தப்பட்டு முணுமுணுத்தார்கள். அவர்களுடைய முணு முணுப்பு அதிகப்பட்டுக் கொஞ்சம் சந்தடி உண் டாயிற்று. அந்தச் சந்தடியைக் கேட்டு டாக்டர் ராஜன் தன் பேச்சை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தார். கீழே பெஞ்சிகளின் மேல் உட்கார்ந் திருந்த மற்ற தலைவர்களும் அந்தச் சந்தடிக்கு என்ன காரணம் என்று கவனிக்கலானார்கள். நான் டாக்டர் ராஜனைப் பேசச் சொல்லிக் கேட் டுக்கொண்டு, மற்ற தலைவர்களிடம் கடிதங்களை யும் பதிலையும் கொடுக்கச் செய்தேன். அவர்கள்

எல்லாரும் விஷயத்தை அறிந்து கொண்டு, நான் செய்த முடிவே சரியென்று சொல்லிவிட்டார்கள். அதனால் என்மேல் முணுமுணுத்தவர்களும் வருத்தத்தோடு பொறுத்துக்கொள்ள வேண்டியதாகி விட்டது.

கூட்டம் சுமார் நான்கு மணி நேரம் நடந்தது. அதற்குள் எனக்கும் நண்பர்களுக்கும் இடையில் நடந்த கடிதங்களின் விவரம் முழுதும் போலீஸ் ஏட்டுக்கு எட்டிவிட்டது. கூட்டம் முடிந்தது. ஜனங்கள் கலைந்து தலைவர்களும் போய்க்கொண்டிருந்தார்கள். அந்தப் போலீஸ் ஏட்டு வேடிக்கை போலப் பக்கத்திலிருந்தவர்களிடம் "நான் இந்த 'ஸ்டூலில்' உட்கார்ந்து விட்டதே உங்களுக்குப் பொறுக்க வில்லையே, அப்புறம் எப்படி நாமெல்லாம் சேர்ந்து சாத்வீகமாக வெள்ளைக்காரனை விரட்டுவது?" என்று சொல்லிவிட்டார். கொஞ்சம்கூடக் குற்றமில்லாத இந்தப் பேச்சும் அங்கிருந்த சில வாலிபர்களுக்குக் கொதிப்பை உண்டாக்கி விட்டது. வாலிபர்கள் ஏட்டை ஏளனம் பேசி விட்டார்கள். பேச்சுகள் முற்றிவிட்டன. ரகளை நடந்து விடும் போல் இருந்ததைக் கண்டு அஞ்சினவர்கள் என்னிடம் வந்து சொன்னார்கள். நான் உடனே அங்கே ஓடி ஹெட்கான்ஸ்டபிள் அருகில் நின்று கொண்டு அவரோடு வாதாடிக் கொண்டிருந்த வாலிபர்களை மிகவும் வணங்கிக்கேட்டுக்கொண்டு "மகாத்மா காந்திக்கு ஜே!" என்று கத்தினேன். கூட்டம் முழுவதும் ஒரே 'ஜே' கோஷம். சாந்த

மந்திரமாகிய காந்தி நாமத்தை உச்சரித்த வுடன் கொதிப்புக் குறைந்து விட்டது.......

சுமார் ஆறு மாதத்துக்குப் பிறகு புதிதாக மாற்றப்பட்ட சப் இன்ஸ்பெக்டர் என்னையும் 'அரெஸ்ட்' செய்வதற்கு சப் கலெக்டரிடம் வாரண்ட் வாங்கிவிட்டார். இந்தச் சேதி அங்கங்கே உத்தியோகத்திலிருக்கிற காந்தி பக்தர்கள் மூலமாக, ரகசியமாக எனக்கு எட்டிற்று. பல நண்பர்கள் என்னை உடனே நாமக்கல்லுக்குப் போய் விடும்படி தூண்டினார்கள். நான் ஒப்பவில்லை. என்னைக் கைது செய்யப் போகிறார்கள் என்ற சமாசாரம் ஊர் முழுதும் பரவி, பந்துக்களும் நண்பர்களும் ஏராளமாகக் கூடி, என்னை முற்றுகை செய்து விட்டார்கள். என் தமக்கை புருஷன் மருதநாயகம் பிள்ளை ஓவென்று ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்துவிட்டார். நான் தங்கியிருந்த என் தமக்கை வீடு உள்ளும் புறமும் ஒரே கும்பலாகிவிட்டது. அனேக காங்கிரஸ் அபிமானிகளும் நண்பர்களும் என்னை வழியனுப்ப மாலைகளுடன் வந்து விட்டார்கள். நானும் எனக்கு வேண்டிய துணி மணிகளைத் தயார் செய்து கொண்டு, கைதியாகப் போகிற பெருமைக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். அன்று முழுவதும் போலீசார் வரவில்லை. மறு நாள் அரஸ்ட் செய்யப் போவதாக வதந்தி வந்தது. இரவு முழுதும் நண்பர்கள் கூட்டம். தூக்கம் இல்லை. பொழுது விடிந்தது. வெகு விரைவாகக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு

போலீசாரை எதிர் பார்த்துக்கொண்டிருந்தோம். சைகிள் வாலண்டியர்கள் எங்கள் வீட்டிற்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கும், ஓடினவண்ணமாக வேவு பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். மத்தியானம் ஒரு மணி வரைக்கும் போலீசார் வராத தால் சாப்பாட்டிற்காகக் கூட்டம் கலைந்தது. மீண்டும் மூன்று மணிக்குள் முன் போலவே கும்பல் கூடிவிட்டது. மாலை எட்டுமணி வரையிலும் பார்த்தோம். போலீசார் வரவில்லை. ஒன்றும் புரியாமல் கூடியிருந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைக் கற்பித்துக் கொண்டு கலைந்து விட்டார்கள். என்னுடைய மாமனார் வீட்டாருக்கும் தமக்கை புருஷனுக்கும் கொஞ்சம் முகம் மலர்ந்தது.

இரவு பதிஞேருமணி இருக்கும். நாங்கள் பாதித்தூக்கத்தில் இருந்தோம். ஏட்டு கிருஷ்ணசாமி நாயுடு சாதாரண உடையில் தனியே வந்தார். என்னைத் தனியாக அழைத்துக் கொண்டு மேல் மாடிக்குப்போய்ச் சொல்லலானார் "சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஊரில் இல்லை. இரண்டு வாரரஜாவில் போயிருக்கிறார். அவர் இருந்தால் இந்தக்காரியம் நடந்திருக்காது. அவருக்கு உங்களிடத்தில் ரொம்ப மரியாதை உண்டு. புதுசாக வந்த இந்த சப்இன்ஸ்பெக்டர் எனக்குக்கூடத் தெரியாமல் வாரண்ட் வாங்கிவிட்டு இன்று காலையில் என்னைக் கூப்பிட்டு உங்களைக் கைது செய்யச் சொன்னார் என்னுங்க! நானு உங்களை அரஸ்ட் செய்வது! நான் இது ரொம்ப அனியா

யம் என்று அவரிடம் ரொம்பநேரம் வாதாடி உங்களைப்பற்றி ஆதியோடந்தமாகச் சொல்லி அவரையும் இழுத்துக்கொண்டு சப்கலக்டரிடம் போய் உங்களைப்பற்றிய எல்லா ரிகார்ட்டுகளையும் சொல்லி, வாரண்டை ரத்துசெய்யும்படிக் கேட்டுக்கொண்டேன். காங்கிரஸ் கூட்டங்களை கவனிக்கவேண்டிய 'ஸ்பெஷல்' டூட்டியில் இருக்கிறவன் நான். அதனுலே கலக்டர் என்னுடைய கோரிக்கையின்படி வாரண்டை ரத்து செய்து விட்டார். நீங்கள் கவலையில்லாமல் தூங்குங்கள்." என்று அவர் எனக்கு ஒரு பெரிய உபகாரம் செய்துவைத்துச் சந்தோஷப்படுகிற தோரணையில் சொன்ஞர் ! நானும் அதற்கு நன்றிசெலுத்தி அவரை அனுப்பினேன்.

## பெத்தாச்சி செட்டியார்.

இன்னொரு சமயம் என்னைப் போலீசார் கைது செய்துவிட வேணுமென்று தீர்மானித்து விட்ட பிறகு ஸ்ரீ பெத்தாச்சி செட்டியார் குறுக்கிட்டு அதைத் தடுத்துவிட நேர்ந்தது:

பெத்தாச்சி செட்டியார் கரூர் முனிசிபல் சேர்மன். பசுபதீஸ்வர தேவஸ்தானத்துக்கு தர்ம கர்த்தா. முனிசிபல் காரியங்களையும் கோவில் காரியங்களையும், தன்னுடைய சொந்தச் செலவில் வெகு சிறப்பாக நடத்துவார். மிகப் பெரிய ரகமான மனிதர். வள்ளல் மனம் படைத்தவர். கரூர் நகரம் என்றென்றும் நன்றியுடன் பாராட்ட வேண்டியவர். அவர் காலத்தில் கரூர் கண்ட கலை விழாக்கள் கணக்கற்றன. அவரிடத்தில் பரிசு பெற்ற பாவலரும், நாவலரும், கலைவாணர்களும் எண்ணத் தொலையாதவர். காங்கிரஸ் அபிமானியாக இருக்கக் காரணம் இல்லையென்றாலும் காங்கிரசை அவமதிக்கமாட்டார்.

கரூரில் காங்கிரஸ் இயக்கம் மிகவும் உச்ச நிலையில் இருந்தபோது (1922-23ல்) அப்போது சென்னை கவர்னராயிருந்த வில்லிங்டன் பிரபுவையும், அவருடைய மனைவியாரையும், ஸ்ரீ பெத்தாச்சி செட்டியார் கரூருக்கு அழைத்திருந்தார். கவர்னர் கரூருக்கு விஜயம் செய்யப்போகிற அதே தினத்தில், அதே நேரத்தில் ஒரு காங்கிரஸ் ஊர்

வலமும் பொதுக்கூட்டமும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பெத்தாச்சி செட்டியாருக்கு அந்தச் சங்கதி தெரிந்து, தாம் கவர்னருக்கு வெகு சிறப்பாக நடத்த எண்ணியிருக்கிற வரவேற்புக்கு இந்த காங்கிரஸ் ஊர்வலம் பாதகம் செய்துவிடுமோ, என்ற ஏக்கம் உண்டாயிற்று. கவர்னர் வருவதற்கு இரண்டு நாளைக்கு முன்னால், இரவு பத்துமணிக்கு என்னை செட்டியார் அழைத்துவரச் சொன்னதாக அவருடைய கார் வந்தது. செட்டியாரை நான் முன்பின் அறிந்தவன் அல்ல. இருந்தாலும் போனேன். என்னை வெகு அன்புடன் வரவேற்று எங்களுடைய ஊர்வலம் முதலியவற்றின் விவரங்களை விசாரித்தார். நான் உள்ளபடி சொன்னேன். எங்களுடைய ஊர்வலத்தை ரத்து செய்துவிட்டு பொதுக் கூட்டத்தைமட்டும் நடத்திக்கொள்ளக் கூடாதா? என்று மிகவும் வேண்டிக்கொண்டார். அதை ரத்து செய்யக்கூடிய அதிகாரம் எனக்கில்லை யென்பதையும், ஊர்வலத்துக்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்ட மற்ற காங்கிரஸ்காரர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதையும் சொல்லி, கவர்னர் வரவேற்புடன் முட்டிக்கொள்ளக் கூடாது என்பதற்காகவே, காங்கிரஸ் ஊர்வலத்தை கவர்னர் வரும் பாதையை விட்டு முற்றிலும் வேறு வழியில் நடத்த வேணுமென்று நான் செய்திருந்த ஏற்பாடுகளையும், விவரமாகச் சொன்னேன். அத்துடன் காங்கிரஸ் பொதுக் கூட்டத்தையும் ஊருக்குள் எங்கும் நடத்தாமல்

ஊருக்கு வெளியில் அமராவதி ஆற்றங்கரையில் ஒரு தோப்பில் நடத்த ஏற்பாடு செய்திருப்பதையும் விளக்கிச் சொல்லி, அவருடைய காரியங்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் நான் காங்கிரஸ் ஊர்வலத்தையும் கூட்டத்தையும் நடத்திவிடுவதாகவும் வாக்குறுதி கொடுத்தேன். என்னுடைய வாக்குறுதியைக்கேட்ட பெத்தாச்சி செட்டியார், வெகு சந்தோஷப்பட்டு அவருடைய ஏற்பாடுகளுக்கு ஒரு பங்கமும் நேராதபடி நான் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் மீண்டும் என்னை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு, எனக்கு விடை கொடுத்தனுப்பி விட்டார்.

ஆனால் கவர்னர் வருகிற நாளில், அதே நேரத்தில் காங்கிரஸ் ஊர்வலமும் நடப்பது போலீசாருக்குப் பிடிக்கவில்லை. தங்களுடைய பந்தோபஸ்து குறைவை அது காட்டிவிடுமோ என்பதுதான் அவர்கள் கவலை. ஊர்வலத்தை 144 போட்டு தடுத்துவிட வேணுமென்றும், இரண்டு மூன்று நாளைக்காவது என்னையும் சில காங்கிரஸ் பிரமுகர்களையும் மூடிவிட வேண்டுமென்றும் அவர்கள் முடிவு செய்தார்கள். சப்கலெக்டர் முதலானவர்களும் போலீசார் யோசனையை ஒத்துக்கொண்டார்கள். இந்த ரகசியத்தை கலெக்டர் ஆபீசிலிருந்த ஒரு சர்க்கார் குருவி என் காதில் ஊதிற்று. நான் செட்டியாருக்குத் தெரியப்படுத்தினேன். உடனே பெத்தாச்சி செட்டியார் அதில் தலையிட்டார். நேரே சப்கலக்டரிடம் போனார்.

போலீஸ்காரர்கள் எண்ணியிருக்கிறபடி காங்கிரசுக்குத் தடைகள் போட்டுத் தலைவர்களையும் கைது செய்தால், ஊரில் ஜனங்களுக்குள் அது மிகவும் மனக்கொதிப்பை உண்டாக்கித் தன்னுடைய வரவேற்பின் இன்பத்தை முற்றிலும் கெடுத்துவிடும் என்றும், அதனால் தனக்குத்தான் கெட்டபேர் வரும் என்றும் சொன்னார். மேலும் கவர்னர் வருகைக்கு எந்தவிதமான இடையூறுமின்றி ஊருக்குவெளியில் காங்கிரஸ் கூட்டத்தை நடத்திக்கொள்வதாக நான் கொடுத்திருந்த உறுதியையும் சப்கலக்டரிடம் விளக்கி, போலீசார் எண்ணத்தை மாற்றிவிடச் செய்துவிட்டுச் செட்டியார் எனக்கும் சேதியனுப்பினார்.

கவர்னரும் வந்தார். வழக்கம்போல் பந்தோபஸ்து செய்யப்பட்ட சந்தடியில்லாத பாதையில் அவருடைய ஊர்வலம் நடந்தது. இன்னொரு ரோட்டில் சுமார் அரைமைல் நீளமுள்ள ஜனக்கும்பலின் கோடியில் இரண்டு குதிரைகள் பூட்டி சிங்காரிக்கப்பட்ட வண்டியில் எனக்கு ஊர்வலம் நடந்தது. ஆற்றங்கரையில் தென்னந்தோப்பில் பிரமாண்டமான கூட்டம்.

## "காந்தி காந்திதான்"

கரூரில் நான் காங்கிரஸ் காரியங்களை நடத்திக் கொண்டிருந்த காலத்தில், மகாத்மா காந்தியடிகள் இரண்டுமுறை கரூருக்குக் காட்சி கொடுத்தார். முதல் தடவை அவர் கரூரில் இறங்கினது அவர் திருச்சியிலிருந்து ஈரோடுக்குப் போகிற போக்கில். ரயில் வண்டியை ரயில்வே கம்பெனியாருடைய தயவினால் சுமார் முக்கால் மணிநேரம் கரூரில் தாமதப்படுத்தி, கரூர் ரயில்வே ஸ்டேஷன் காம்பவுண்டுக்குள்ளேயே மேடை போட்டு வரவேற்றோம். அந்தப் பிரயாணத்தில் தான் ஜனங்களுக்குப் போதிய கதர் கிடைப்பதில்லை என்பதற்காக மகாத்மா தன்னுடைய சட்டை, தலைப்பா, மேல்வேஷ்டி முதலியவற்றைத் துறந்துவிட்டு இடுப்புத் துணியோடு மட்டும் இருக்க விரதம் பூண்டது. அவர் அப்போது கரூரில் இறங்கிப் பிரசங்கம் செய்ய ஒத்துக் கொண்டதன் காரணம்—சுமார் ஒரு மாதத்துக்கு முன்னால் கரூரில் நடந்த நாடகக் கொட்டகை கலகம்தான். அவர் அப்போது பேசின பேச்சும் அதைக் குறித்துத்தான்.

அந்த நாடகக் கொட்டகைக் கலகம் என்னவென்றால்: கரூரில் வேலு நாயர் நாடகம் நடத்திக்கொண்டிருந்தார். கரூர் ஜனங்களில் காங்கிரஸ் கமிட்டிகளுக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத

சிலர், காங்கிரஸ் நிதிக்காக ஒரு நாடகம் நடத்திக் கொடுக்க வேணுமென்று வேலு நாயரைக் கேட்டார்கள். வேலு நாயர் அந்த வேண்டுகோளை மதிக்கவில்லையாம். அதற்காக நாடகம் நடந்துகொண்டிருந்த ஒரு நாள் சில விஷமிகள் கொட்டகையின் மீது கல் வீசினார்கள். அந்த விஷமிகள், தாங்கள் கல் வீசுவதற்கு காரணமாக, வேலு நாயர் காங்கிரசையும் காந்தியையும் அவமதித்து விட்டதாகப் புகார் பரப்பிவிட்டார்கள். அதனால் கல் வீசுகிற கட்சிக்கு ஆள்பலம் அதிகப்பட்டுவிட்டது. பெரும்பாலும் விவரம் தெரியாத சிறுவர்கள். காங்கிரஸ் பொறுப்பாளிகள் ஒருவரும் அதிற் சம்பந்தப்படவில்லை. காங்கிரஸ் நிதிக்காக காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்த யாரும், வேலு நாயரைக் கேட்க வேண்டிய முறையில் கேட்கவும் இல்லை, அவர் அதை அவமதிக்கவும் இல்லை. யாரோ கேட்டார்களாம். வேலு நாயர் மதிக்க வில்லையாம் இவ்வளவுதான் உண்மை. இருந்தும், காங்கிரசையும் காந்தியையும் நாடகக்காரர் அவமதித்து விட்டார் என்ற பேச்சு குறும்புக்காரர்களிடையே கொதிப்பை மூட்டிவிட்டது. காந்தியடிகளை வேலு நாயர் அவமதித்து விட்டார் என்ற பொய்க்கதை, 'கங்காதரா மாண்டாயோ' என்ற கதைபோலப் பரவி கலகம் பலப்பட்டு விட்டது. கொட்டகைக்கு நெருப்பு வைத்துவிடத் துணிந்துவிட்டார்கள். கலகம் மிகவும் அதிகப்பட்டு கொட்டகைக்கு நெருப்பு வைக்கமுயற்சி செய்கிறார்கள் என்பதை அறிந்து,

உள்ளே நாடகம் பார்க்கப் போயிருந்த கிருஷ்ண சாமி ஐயர் என்ற போலீஸ் 'டெபுடி சூப்ரண்ட்' உள்ளே இருந்தபடி, டிக்கட் விற்கிற துவாரத்தின் வழியாகத் தன்னுடைய கைத்துப்பாக்கியால் ஜனக்கும்பலின் மீது சுட்டார். அதில் சிலருக்குக் காயம் பட்டது. கூட்டத்தில் சும்மா நின்றுகொண்டு கலகத்தின் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு மகம்மதியச் சிறுவன் மாண்டு போனான். அவன் இறந்தபின் கலகத்தின் வேகம் கொஞ்சம் குறைந்தது. அதற்குள் போலீஸ் கச்சேரிக்குத் தகவல் எட்டி ஆயுதத்தோடு போலீஸ் காரர்களும் வந்தார்கள். அத்துடன் கலகம் அடங்கிவிட்டது.

அதற்காக சுமார் ஒரு வாரத்துக்குப் பிறகு கரூரில் உள்ள முக்கியமான காங்கிரஸ் வாதிகள் எல்லாரையும் கைது செய்துவிட்டார்கள். நான் அகஸ்மாத்தாகக் கலகத்தின்போது கரூரில் இல்லை. நாமக்கல்லில் இருந்தேன். பத்துநாள் கழித்துத்தான் கரூர் போக முடிந்தது. நான் கலகம் நடந்த தினத்தில் கரூரில் இல்லையென்பதை அறிந்து போலீசார் என்னை ஒன்றும் செய்யவில்லை. கரூரில் கலகம் நடந்த அதே தினத்தில், நாடகம் ஆரம்பிக்கிற நேரமாகிய இரவு பத்துமணி வரையிலும், நான் நாமக்கல் பாறையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்ததை, உள்ளூர் போலீசாரும் சி.ஐ.டிக்காரரும் குறிப்பெழுதிக் கொண்டிருந்தார்கள். ஒருக்கால் இந்த 'அலிபி'யைக் கரூர்

போலீஸ்காரர்கள் அறிந்துதான் என்னைச் சும்மா விட்டுவிட்டார்களோ, என்னமோ தெரியாது.

கரூரிலிருந்த எல்லா காங்கிரஸ் பிரமுகர்களையும், கலகத்தில் சம்பந்தப்படுத்திக் கைது செய்து விட்டதால், ஊரில் ஒரே பரபரப்பு ஏற்பட்டு உடனே கரூருக்கு வரும்படி எனக்கு ஆள் மேல் ஆள் அனுப்பினார்கள். நான் போனேன். எனக்கு முன்னால் திருச்சிராப்பள்ளி ஜில்லா காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்த சில தலைவர்கள் கரூருக்கு வந்து, கலகத்துக்குச் சிறிதும் சம்பந்தப்படாத காங்கிரஸ்காரர்களைக் கைது செய்து போலீசார் பொய்க் கேசுகள் நடத்துகிறார்கள் என்று காங்கிரஸ் அதிகாரிகளுக்கு கடிதங்களும் தந்திகளும் அனுப்பியிருந்தார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் எல்லாரும் கலகத்தில் சிறிதும் கலந்து கொள்ளாத நிரபராதிகள் என்பதை நன்றாக அறிந்த கரூர் பொது மக்கள், போலீசார் காங்கிரசை ஒடுக்குவதற்காக இந்தப் பொய்க் கேசுகளைத் தொடுத்திருக்கிறார்கள், என்று மிகவும் அனுதாபப் பட்டார்கள். இந்தப் பொதுஜன அனுதாபத்தை துர்விநியோகப் படுத்திக்கொள்ள நினைத்த சில சுயநலக்காரர்கள்—இதுவரையிலும் காங்கிரசுக்கு எந்தவித அனுதாபமும் காட்டாதவர்கள்—பொதுமக்களிடம், இந்தப் பொய்க்கேசுகளை எதிர்த்து வழக்காடுவதற்கென்று சொல்லி ஆயிரக்கணக்கில் பணம் வசூலித்தார்கள். அதுமட்டு

மல்லாமல், அந்த சுயநலக்காரர்கள் கலகத்தைப் பற்றி நினைத்தபடியெல்லாம் பொய்யான விஷயங்களைத் தலைவர்களுக்கும் எழுதலானார்கள். அதனால் காந்தியடிகள், இந்தக் கலகத்தைப்பற்றிய உண்மையான தகவல்களைச் சேகரம் செய்து அனுப்பும்படி திருச்சினாப்பள்ளி ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு உத்தரவு அனுப்பினார். ஜில்லா காங்கிரஸ் கமிட்டியார் எனக்கு ஆணையிட்டார்கள். நான் கூடுமானவரையிலும் உண்மையான விவரங்களைச் சேகரம் செய்து அனுப்பினேன். அவற்றை யெல்லாம் காந்தியடிகள் படித்துப் பார்த்துவிட்டு, அப்போது அவர் நடத்திக் கொண்டிருந்த 'யங் இந்தியா' பத்திரிகையில் கரூர் கலகத்தைப் பற்றிச் சில குறிப்புகளும் எழுதினார். அந்தக் கலகத்தைப் பற்றித் தம்முடைய அபிப்பிராயமாக மகாத்மா காந்தி அடியில் வருமாறு தீர்ப்புச் சொல்லிவிட்டார். "இந்தக் கலகத்தில் காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்தவர்களோ அல்லது பொறுப்புள்ள காங்கிரஸ் காரர்களோ கலந்துகொள்ளவில்லை யென்பது உண்மை யென்றாலும், இப்படிப்பட்ட பலாத்காரச் செயல்கள் நடக்காதபடி தடுத்திருக்க வேண்டிய கடமை காங்கிரஸ்காரர்களுடையதுதான். கலகம் நடக்கிற விஷயம் ஆரம்பத்திலேயே தங்கள் காதில் விழுந்தும் உடனே அங்கே ஓடி, கலகம் நடக்காமலிருக்கத் தம்மாலான முயற்சிகள் எதையும் கரூர் காங்கிரஸ்காரர்களில் ஒருவராவது செய்யாமற்

போனது பெருங்குற்றம். இப்படி காங்கிரஸ் காரர்கள் பொறுப்பில்லாமல் இருந்தால் ஸாத் வீகப் போராட்டத்தை நடத்தவே முடியாது. ஆகையினுல் கலகத்தைச் செய்த குற்றம் அவர்கள்மேல் இல்லை. ஆனுல் கலகத்தைத் தடுக்க முயற்சியே செய்யாத குற்றம் அவர்கள் மேல் எப்போதும் உண்டு. சட்டப்படி அல்ல, சத்தியப்படிக்கு." என்று காந்தியடிகள் எங் களுக்குக் கடிதம் எழுதிவிட்டார். இதையேதான் கரூர் ரயில்வேஸ்டேஷனுக்கடுத்த மேடையில் காந்தி முதல் தடவை கரூரில் இறங்கிய போது பேசினுர். "எந்த இடத்திலும் ஹிம்சையான காரியங்கள் எதுவும் நடக்காதிருக்கப் பார்த்துக் கொள்வதே காங்கிரஸ் காரரின் முதற்கடமை. அந்தக் கடமையை நீங்கள் மனப்பூர்வமாக மேற் கொள்ளாவிட்டால், நான் இந்த மகத்தான சாத் வீகப்போரை நடத்துவது முடியாமற் போய் விடும்" என்று சொன்னுர்.

இரண்டாவது தடவை மகாத்மா தமிழ்நாட் டில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு மலையா ளம், கொச்சி, திருவாங்கூர் வழியாக சிலோனுக் கும் போகும் திட்டத்துடன் வந்தார். அந்தச் சம யத்தில் அவர் கரூருக்கும் வருவதாக அவருக்காக கப் பிரயாணத் திட்டம் போட்டவர்கள் ஒத்துக் கொண்டார்கள். அவருக்குப் பணமுடிப்புத் தருவ தற்காக நானும், கரூர் காங்கிரஸ் காரர்களும் வெகு பாடுபட்டு சுமார் 3000 ரூபாய் வசூல் செய் தோம். சுற்றுப் பிரயாண விவரங்கள் இரண்டு

மூன்று தரம் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் வெளியாயின. அவற்றிலும் கரூர் வருகிற தேதியும் நேரமும் குறிப்பிடப்பட்டிருந்தன. கரூர் காங்கிரஸ் கமிட்டிக்கும், காந்தியடிகள் கரூர் வருகிற விவரங்களைச் சுற்றுப் பிரயாண அதிகாரிகள் கடிதம் மூலமாக எழுதியிருந்தார்கள். பத்திரிகைகளிலும் கரூருக்கு வருவது வெளியாகி விட்டது. கடிதம் மூலமாகவும் தெரியப்படுத்தி விட்டார்கள். அதனால் கரூர் தாலூகா முழுவதும் கிராமம் கிராமமாகத் தொண்டர்களை அனுப்பி விளம்பரப்படுத்தி வெகு விமரிசையான வரவேற்பு நடத்த வேலை செய்தோம்.

கரூருக்கு காந்தியடிகள் வருவதாக விளம்பரப் படுத்தியிருந்த தேதிக்கு மூன்று நாள் முன்னால் எங்களுக்கு ஒரு தந்தி வந்தது. அது சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அனுப்பிய தந்தி. அதில் "காந்தியடிகளின் உடல் நலத்தைக் கருதி கரூருக்கு வருவது ரத்தாகிவிட்டது. ஏமாற்றத்திற்கு மன்னிக்கவேணும்" என்று இருந்தது. எனக்கு இடிவிழுந்தது போல் ஆகிவிட்டது. வரவேற்புக்காக என்னுடன் வெகு பாடுபட்டு வேலை செய்த கந்தசாமி செட்டியார், ராமசாமி ஐயர், வெங்கட்ரமண ஸ்வாமி ஐயர், நன்னு சாயுபு முதலான பலருக்குவருத்தத்தோடு கோபமும்பொங்கி விட்டது. ஒரு மாதமாகக் கடிதப் போக்கு வரவு நடத்திப் பிரயாணத் திட்டத்தில் கரூர் சேர்த்துக் கொள்ளப் பட்டது. சேர்த்துக் கொள்ளப் பட்ட பிறகு, இருபது நாளாக அதை விளம்பரப்படுத்தி

போகாத இடங்களுக் கெல்லாம் போய், கேட்கா தவர்களை யெல்லாம் கேட்டு, பணமும் வசூல் செய்து, எல்லா ஏற்பாடுகளும் முடிந்து தாலூகா முழுவதும் ஒரே பரபரப்பாக காந்தியடிகளின் தரிசனத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிற சமயத்தில், இப்படி ஒருதந்தி வந்தால் யாருக்குத் தான் கோபம் வராது?

என்ன செய்வதென்று தெரியவில்லை.

கடைசியாக டாக்டர் ராஜனைக் கேட்போம் என்று நானும் கந்தசாமி செட்டியாரும் திருச்சிக்கு ஓடினோம். தந்தியைக் காட்டினோம். அவரும் அதிசயப்பட்டு வருத்த முற்றார். உடனே கோயமுத்தூருக்குச் சென்று ஆச்சாரியாரை சந்தித்துப் பேசும்படி டாக்டர் ராஜன் எங்களுக்கு யோசனை கூறினார். கரூருக்கு மகாத்மா வரவேணும் என்ற முயற்சிகளில் ராஜனும் கலந்திருந்தபடியால் அவர் எங்களுக்கு ஒரு சிபார்சுக் கடிதமும் கொடுத்தார். நேரே கோயமுத்தூருக்குப் போனோம்.

காந்தியடிகள், ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் வீட்டில் தங்கியிருந்தார். நாங்கள் அங்கே போன சமயத்தில், கோபிசெட்டி பாளையத்திலிருந்து எங்களைப் போலவே மனக்குறையுடன், ஸ்ரீசுப்பண கவுண்டரும் இன்னும் சிலரும் வந்திருந்தார்கள். கோபிசெட்டிபாளையமும் கரூரைப் போலவே வருவதாக வாக்களிக்கப் பட்டு, ஏற்பாடுகளெல்லாம் முடிந்த பிறகு கடைசி நேரத்தில் நீக்கிவிடப்பட்டது.

எனக்கு ஆச்சாரியாரிடத்தில் கொஞ்சம் செல்வாக்கு உண்டென்று பேர். ஆச்சாரியாரும் ஸ்ரீ எஸ். ராமநாதனும் தான் அந்தப் பிரயாணத்தின் திட்டங்களுக்கு அதிகாரிகள். ஊர்களைச் சேர்த்துக் கொள்வதோ, விட்டுவிடுவதோ, எல்லாம் அவர்களுடைய தீர்மானத்துக்குட்பட்டது. பிரயாணத் திட்டத்தின் விவரங்கள் காந்தியடிகளுக்குத் தெரியாது. அப்போதைக்கப்போது ஆச்சாரியார் தீர்மானிக்கிற ஊர்களுக்குப் போவது என்ற அளவில்தான் காந்தியடிகள் பிரயாணத் திட்டத்தை அறிவார்.

நான் ஆச்சாரியாரைக் கண்டு கரூரை இப்படித் திடீரென்று நீக்கி விட்ட அநியாயத்தை மாற்றும்படி கேட்டுக் கொண்டேன். அவர் "என்ன செய்வது? காந்திஜிக்கு உடம்பு சரியாயில்லை. அவருடைய சௌக்யத்தைத்தானே நாம் முதலில் கவனிக்கவேண்டும்? உங்களுக்குத் தெரியாததா? புதிதாக கள்ளிக்கோட்டை, கொச்சி முதலான பல இடங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. எல்லா இடங்களுக்கும் அவரை மோட்டாரில் வைத்து அலைக்கடிப்பது ஆபத்தாக முடியலாம். அதற்காகச் சில இடங்களை நீக்க வேண்டியிருந்தது உங்களுக்கு வெகு வருத்தமாகத்தான் இருக்கும். இருந்தாலும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்." என்றார்.

"என்ன சொன்னாலும் இது மிகவும் கொடுமையான அநியாயம். வருவதாக வாக்

களித்து, பத்திரிகைகளிலெல்லாம் விளம்பரப் படுத்தி,ஏற்பாடுகளெல்லாம் முடிந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற ஊர்களைத் தள்ளிவிட்டுப் புதுப்புது ஊர்களைச் சேர்த்துக் கொள்வது, காந்தியடிகளின் உபதேசங்களுக்கே விரோதமாக இருக்கிறதே" என்று வாதித்தேன்.

"என்ன செய்வது? நீங்கள் சொல்லுவது சரியான நியாயந்தான், காந்திஜியின் தேக சௌக்யத்தைக் கவனிக்க வேண்டாமா?" என்றார்.

"கொண்ட கொள்கைகளையும் விட்டுவிட்டு சரீர சௌக்யத்தைப் பெரிதாக எண்ணுகின்றவரா காந்திஜி?" என்றேன்.

"காந்திஜி அப்படி எண்ணமாட்டார். ஆனால் நாம் அவருடைய சுகத்தைக் கவனிக்க வேண்டாமா?" என்றார்.

"சரி அப்படி உடல் நலத்துக்காகச் சில இடங்களை விட்டுவிட வேண்டியது என்றால் வேறு பல இடங்களைப் புதிதாகச் சேர்த்திருப்பது நியாயமா?" என்றேன்.

"அது நியாயம் இல்லைத்தான். இருந்தாலும் சேர்த்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. என்ன செய்வது பொறுத்துக்கொள்ளுங்கள்" என்றார்.

"காந்திஜி வருகிறார் என்று வாங்கின பணத்தை என்ன செய்வது?" என்றேன்.

"அதை கரூர் பேரால் இங்கே கொடுத்து விடுங்களேன்" என்றூர்.

ஆச்சாரியரை உண்மையில் எனக்கொரு ஆசாரியனுகவே கருதுகின்றவன் நான். என்ருலும் அந்தச் சமயத்தில் எனக்கு அவர்மேல் வெகு எரிச்சலுண்டாகி விட்டது. அதை அடக்கிக் கொண்டு "அப்படிச் செய்தால் ஜனங்கள் சும்மா விடுவார்களா? இனிமேல் அவர்கள் எங்களையும் நம்பமாட்டார்கள். உங்களையும் நம்பமாட்டார்கள். காந்திஜியையுங்கூட நம்பமாட்டார்களே!" என்றேன். ஆச்சாரியார் அதை ஒத்துக் கொண்டதுபோல் சிரித்துவிட்டு "என்ன செய்வது? காந்திஜியின் சரீர சௌக்யம் ஒன்றையே கருதித் தான் இப்படிச் செய்யவேண்டி யிருந்தது. தயவு செய்து பொறுத்துக் கொள்ளுங்கள்." என்று வெகு அமைதியுடன் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

நானும் கோபி நண்பர்களும் ஆச்சாரியாரை விட்டு விட்டு ஸ்ரீ ராமநாதனிடம் முறையிட்டுக் கொண்டோம். அவர் "நான் என்ன செய்யட்டும்? ஆச்சாரியார் அப்படி முடிவுசெய்து திட்டத்தை மாற்றிப் பத்திரிகைகளுக்கும் அனுப்பி யாகிவிட்டது. இனிமேல் ஒன்றும் செய்வதற்கில்லை." என்று கையை விரித்தார்.

சொல்லமுடியாத துக்கத்தோடு நானும் கந்தசாமிசெட்டியாரும், கோபியிலிருந்து வந்திருந்த ஐந்தாறுநண்பர்களும், ஒருமரத்தின் அடியில் உட்

கார்ந்தோம். ஒவ்வொருவர் முகத்திலும் பொரி பரக்கிறது கோபம். கண் கலங்குகிறது. வாய் துடிக்கிறது, கொஞ்சம் கொதிப்பு ஆறின உடன் சத்யாக்ரகம் செய்யவேணும் என்றும், சண்டித் தனம் காட்டவேணுமென்றும் ஆளுக்கு ஒரு யோசனையாகப் பேசினார்கள்.

கடைசியாக நான் ஒரு யோசனை சொன் னேன். "நாம் எல்லாரும் சேர்ந்து காந்திஜியையே நேரில்கண்டு 'இது சரிதானா' என்று கேட்டு விடுவோம்." என்றேன். உடனே எல்லாரும் ஒத்துக்கொண்டார்கள்.

காந்தியடிகள் தினந்தினம் மத்தியான ஆகாரத்துக்குப் பிறகு கொஞ்சம் படுத்திருப்பார். அதற்குப் பின் ஒரு மணிநேரம் நூல் நூற்பார். நூற்றுக் கொண்டே பேட்டிகாண வந்தவர்கள் இருந்தால் அவர்களுடன் பேசுவது வழக்கம். அந்தத்தருணத்தில் நாங்கள் நேரில்சென்று காந்தி யடிகளைக் கேட்டுவிடுவதென்று முடிவு செய்து கொண்டு, எல்லாரும் ஷண்முகம் செட்டியார் விருந்தினராகச் சாப்பிட்டோம். காந்திஜி நூல் நூற்கும் காலத்துக்காகக் காத்துக்கொண்டிருந் தோம். எங்களிடத்தில் மிகவும் அனுதாபம் கொண்ட ஒரு தொண்டருடைய தயவால் காந்திஜி நூல் நூற்க ஆரம்பித்து விட்டாரென்று அறிந்தோம்.

நாங்கள் சுமார் பத்துப்பேர் திபுதிபுவென்று காந்தியடிகள் இருந்த அறைக்குள் முன்னெச் சரிக்கையில்லாமல் புகுந்தோம். நமஸ்கரித்-

தோம். புன்சிரிப்புடன் வணங்கி; நூற்றுக்கொண்டே வரவேற்று உட்காரச்சொன்னார். நானும் சிலரும் உட்கார்ந்தோம். கோபியிலிருந்து வந்திருந்த நண்பர்களில் ஒருவர் உட்காராமல் வெகு ஆத்திரப்பட்ட குரலில் "மகாத்மாஜீ! உங்கள் பேரால் இந்த அநியாயங்கள் நடக்கலாமா?" என்று அலறினார். காந்தியடிகள் உடனே நூற்பதை நிறுத்திவிட்டு "என்ன அநியாயம்?" என்றார். உடனே கோபி காங்கிரஸ் கமிட்டிக்கும் சுற்றுப்பிரயாணம் நிர்ணயம் செய்கிறவர்களுக்கும் ஒரு மாதமாக நடந்த கடிதங்களையும், அவற்றில் கோபிக்குவருவதாக ஒத்துக்கொண்டிருந்ததையும், பத்திரிகைகளில் பிரயாணத்திட்டத்தில் கோபியைச்சேர்த்து விளம்பரப்படுத்தியிருந்ததையும், கடைசியாக கோபிக்கு வருவது ரத்தாகி விட்டதென்று கொடுக்கப்பட்ட தந்தியையும் காந்திஜியிடம் கொடுத்தார்கள். காந்தியடிகள் எல்லாக் கடிதங்களையும் கலைக்காமல் வரிசைக்கிரமமாகப் பார்த்துவிட்டு தந்தியையும் படித்துவிட்டு முகத்தில் வருத்தக்குறி காட்டினார். கரூர் கடிதக் கத்தையையும் தந்தியையும் கந்தசாமி செட்டியார் காந்திஜியிடம் கொடுத்தார். அவற்றையும் காந்திஜி அலுப்பில்லாமல் படித்துப் பார்த்துவிட்டு "பிரயாணத்திட்டங்களுக்கு அதிகாரி ராஜாஜிதான். அவரைக் கேட்போம்" என்று ராஜாஜியை அழைக்கச் சொன்னார். அதற்கு முன்னாலேயே அங்கு வந்துவிட்ட ராஜாஜி, முன்னால் வந்தார்.

"ராஜாஜி! உங்கள்மேல் பெரிய குற்றச் சாட்டுகள் இருக்கின்றன. ஏன் அப்படிச் செய்தீர்கள்?" என்றார் காந்தி.

"ஆம். அந்தக் குற்றச்சாட்டுகளை அறிவேன். இருந்தாலும் உங்கள் சரீர சௌக்யத்தையும், கள்ளிக்கோட்டை, கண்ணனூர், கொச்சி, எர்ணுகுளம் முதலிய பல இடங்களுக்குப் போகவேண்டியிருப்பதையும் உத்தேசித்துச் சில இடங்களை நீக்கிவிடவேண்டியிருக்கிறது." என்றார் ராஜாஜி.

"குற்றம் சாட்டுகிற இந்த நண்பர்களுடைய ஊர்களுக்கு வருவதாக நீங்கள் முன்னாலேயே வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்களே!" என்றார் காந்திஜி.

"ஆம். அது குற்றம்தான். இருந்தாலும்...."

"அது சரியல்ல. வாக்குறுதி என்றால் வாக்குறுதியாகத்தான் இருக்கவேண்டும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றியே தீரவேண்டும். எதிர்பாராத இடையூறுகள் ஏற்பட்டாலல்லாமல், வாக்குத் தவறக்கூடாது........சரி, கடைசியாக நிச்சயிக்கப்பட்டிருக்கிற உங்கள் பிரயாணத் திட்டம் எங்கே?" என்று காந்திஜி கேட்டார்.

திட்டம் கொடுக்கப்பட்டது. அதில் அன்றைக்கு அடுத்த இரண்டு நாட்களும் காந்தியடிகளுக்குக் கோயமுத்தூரிலேயே ஓய்வு நாட்களாகக் குறிக்கப்பட்டிருந்தன. அந்தத் திட்டத்தைப் பூராவும் வெகு நிதானமாகப் படித்துப்

பார்த்துவிட்டு மகாத்மா "நல்லவேளை, உங்களுடைய திட்டத்தையும் நான் கெடுக்கவேண்டிய துன்பம் இல்லை. நாளைக்கும் அதற்கடுத்த நாளும் என்னுடைய சொந்த நாட்கள். நாளைக்கு கோபி செட்டி பாளையத்துக்கும், அதற்கடுத்த நாள் கருருக்கும் போக ஏற்பாடு செய்துவிடுங்கள். வேணுமானல் புது ஊர்களைச் சேர்த்துக்கொள்ளுவதை விலக்குங்கள். வருவதாக முன்னலேயே நீங்கள் வாக்களித்திருக்கிற எந்த இடத்தையும் நீக்க வேண்டாம்" என்ருர் மகாத்மா காந்தி.

எங்களுக்குண்டான மகிழ்ச்சிக்கு எல்லை சொல்லவா? சந்தோஷத்தில் தலைகால் தெரியாமல் வெளியில் வந்தோம். எல்லாரும் வெகு வேகமாகப் போய்விட்டார்கள். நான் சற்று தங்கி ராஜாஜியிடம் விடைபெற்றுக் கொண்டேன். அவர் என் முதுகைத் தடவிக்கொடுத்து "உங்கள் வெற்றியை நான் மிகவும் பாராட்டுகின்றேன்" என்று விடைகொடுத்தனுப்பினர். வெளியில் வந்த நண்பர்கள் வெற்றி வெறியுடன் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டும் கொம்மாளமிட்டுக் கொண்டும் போனர்கள். கடைசியில் வெகு அமைதியாக என்னுடன் நடந்து கொண்டிருந்த சுப்பண கவுண்டர் என்னைப் பார்த்து, "காந்தி காந்திதான்" என்று சொன்னது இன்னும் என் நினைவிலிருக்கின்றது.

## நம்புவீர்களா?

1924—ம் வருஷத்தில் என்னுடைய வாழ்க்கையில் மிகவும் அதிசயமான ஒரு நிகழ்ச்சி நேரிட்டது. அந்த நிகழ்ச்சி என்னை அப்போது மிகவும் சீர் குலைத்து விட்டது. என்னுடைய வாழ்க்கைத் திட்டத்தை அடியோடு மாற்றி, அதுவரையிலும் எனக்கிருந்த தன்னம்பிக்கையைத் தளரச் செய்து விட்டது. தங்கு தடை இல்லாமல் ஓடிக் கொண்டிருந்த ஒரு ஆறு, திடீரென்று எதிர்பட்ட ஒரு பாறையின்மேல் மோதி, சிதறுண்டு, திசைமாறி விடுவது எப்படியோ அப்படி. அந்த நிகழ்ச்சிக்கு முன்னால் நான் துக்கம் என்பதைத் துளிகூட அனுபவித்தறியேன். எடுத்த காரியம் யாவினும் வெற்றியாக இன்ப நிலைமை யிலேயே இருந்து வந்தேன். செல்வாக்குள்ள உத்தியோகஸ்தரின் செல்லக்குழந்தையாக வளர்ந்தேன். பெற்றோரும் மற்றோரும் பெருமிதத்தோடு பாராட்ட நல்ல பிள்ளை யென்று பேரெடுத்தேன். பள்ளிக்கூடப் படிப்பு முழுவதும் பரிசுகள் நிறைந்ததாக ஆசான் மார்களின் ஆசிகளைப் பெற்றேன். சித்திர வித்தையிற் சிறப்படைந்தேன். டில்லிக்குச் சென்று தர்பாரில் சக்ரவர்த்தியிடத்தில் தங்கப் பதக்கம் சன்மானம் பெற்றேன். அதனால் என்னுடைய சித்திர வித்தை அடைந்த சிறப்புக்கு அளவே இல்லை. அந்த ஒரே ஒரு காரணத்தால் என் சித்திரத்

தொழில் நல்ல வரும்படியுள்ளதாயிற்று. நிரம்ப சம்பாதனையும் செய்தேன். காங்கிரசில் சேர்ந்தேன். காந்தீயத்தில் ஈடுபட்டேன். காங்கிரஸ் மேடைகளில் மிகநல்ல பேச்சாளியாகப் பிரகாசித்தேன். சென்ற விடமெல்லாம் சிறப்பாக, மாலையும் விருந்தும் மகிழ்ச்சியுமாக இருந்த காலம். அந்தச் சமயத்தில் இடிவிழுந்தது போல் நேரிட்ட இந்தச் சம்பவம், என்னை மிகவும் நிலை குலையச் செய்து விட்டது. சொல்ல முடியாத துக்கத்தில் என்னை அமுக்கித் துடிக்கச் செய்து விட்டது. உண்மையில் மனிதன் எவ்வளவு சிறிய பிராணி என்பதையும், அதுவரையிலும் நான் என்னைப் பற்றி உயர்வாக எண்ணிக் கொண்டிருந்ததெல்லாம் வெறும் இறுமாப்புத்தான் என்பதையும், முதல் முதல் எனக்கு எடுத்துக் காட்டியது இந்தச் சம்பவம். மேடைப் பிரசங்கங்களில் நான் பிறருக்கு உபதேசித்த காந்தீய தத்துவங்கள் ஒன்றுவது எனக்கு அப்போது உதவாமற் போனதைப் பார்த்தபின்புதான், இன்னொருவருக்கு வேதாந்தம் உபதேசிப்பது எவ்வளவு எளிது என்பதும், நாமே அப்படி நடந்து கொள்வது எவ்வளவுகஷ்டம் என்பதும், எனக்குப் புரிந்தது.

மனிதன் தன்னுடைய வெற்றி தோல்விகளைப் பற்றியும், இன்ப துன்பங்களைப் பற்றியும், இரண்டே இரண்டு விதமாகத்தான் சொல்லிக் கொள்ள முடியும். ஒன்று, நாம் விரும்புகின்ற விதமாய் நம்முடைய காரியங்கள் கைகூடி,

நம்முடைய வாழ்க்கை சரளமாக நடக்கின்ற போது, அந்தக் காரியங்களெல்லாம் நம்முடைய புத்திக் கூர்மையினாலும், நம்முடைய முயற்சியினாலும், நம்முடைய உழைப்பினாலும் தான் முடிந்துவிட்டதாக எண்ணி "ஊழையும் உப்பக்கங் காண்பார் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்" என்ற திருக்குறளை மேற்கோளாகக் காட்டி—'தளர்ச்சியில்லாமல் அடுத்தடுத்து முயற்சிசெய்து உழைக்கின்றவர்கள் விதியையும் கூட வென்றுவிடுவார்கள்'—என்று பெருமை பேசிக்கொள்வோம். இன்னொன்று, நம்முடைய முயற்சிகளும் தந்திரங்களும் பலிக்காமல், கோரிய காரியம் கூடாமல், தோல்வியடைந்து விடுகின்றபோது "ஊழிற் பெருவலி யாவுள, மற்றொன்று சூழினும் தான் முந் துறும்" என்ற குறளைக் குறித்துக்காட்டி—'விதியைக் காட்டிலும் வலிமையுள்ளது என்ன இருக்கிறது? நாம் என்னதான் தந்திரங்களைச் செய்தாலும் அந்த விதிதான் முன்னால் வந்து நிற்கும்'—என்றுதான் சொல்லிக்கொள்ள முடிகிறது. இந்த இரண்டு விதங்களையும் எனக்கு ஏககாலத்தில் விளக்கிக் காட்டிய சந்தியாக இருந்தது—நான் சொல்லப்போகிற அந்தச் சம்பவம்.

எனக்குச் சிறுவயசிலிருந்தே தெய்வ நம்பிக்கை உண்டென்றாலும், எதற்கெடுத்தாலும் 'தெய்வச்செயல்', 'தலையெழுத்து,' 'தலைவிதி' என்று பேசுகின்ற இனத்தைச் சேர்ந்தவன் அல்ல நான். எந்தக் காரியத்துக்கும் நம்முடைய முயற்

சியும் செய்கையும்தான் முக்கியம் என்ற மனப் பான்மையிலேயே பழகினவன். எனக்கு நேர்ந்த சந்தர்ப்பங்கள் எல்லாம் இந்த நம்பிக்கையை வளர்க்கத் தக்கனவாகவே வாய்த்தன. ஆகையினுற்ருன், என்னுடைய திடமான கொள்கையையும், என்னுடைய முயற்சியையும் முற்றிலும் முறியடித்து, எந்த ஒரு காரியத்தை ஏற்றுக் கொள்ள நான் பிடிவாதமாக மறுத்து எதிர்த்து நின்றேனே, அதே காரியத்தை அங்கீகரிக்கச் செய்துவிட்ட இந்த நிகழ்ச்சி, என்னுடைய வாழ்க்கையில் மிகமிகவும் முக்கியமான ஒரு கட்டம். என்னுடைய வாழ்க்கையில் நேரிட்ட எத்தனையோ விசேஷமான விஷயங்களை மறந்து விட்டேன். சில சங்கதிகளை மறந்துவிட முயற்சியும் செய்ததுண்டு. ஆனால் இந்த ஒரு ராத்திரியை மட்டும் நான் மறக்கவுமில்லை; மறக்க முடியவுமில்லை; மறந்துவிடக் கூடாதென்றே அதை அடிக்கடி எனக்குள்ளேயே நினைவூட்டிக் கொண்டும், சமயம் நேர்ந்த போதெல்லாம் பிறருக்கு ஒரு பரம ரகசியம் போலச் சொல்லிக் கொண்டும் இருக்கிறேன். ஆனால் இது வரையிலும் அதை என்னுடைய அந்தரங்க நண்பர்களிடத்தில்தான் சொல்லியிருக்கிறேன். ஏனென்ருல் எனக்கு வெகு அபூர்வமானது போல இருக்கின்ற இந்த என் சொந்த விஷயத்தைப் பிறர் ஏளனமாக எண்ணிவிடுவார்களோ என்ற கூச்சந்தான். என்னுடையவாழ்க்கைக்குறிப்புகளைஎழுத வேண்டி ஏற்பட்டுவிட்ட இந்தச் சமயத்தில், அவ்

வளவு முக்கியமான நிகழ்ச்சியாக நான் நினைத்துக் கொண்டிருக்கிற இவ்விஷயத்தை, யார் எப்படி எண்ணிஞலும் சரியென்று எழுதித்தான் ஆக வேண்டியிருக்கிறது. இந்த விசித்திரமான சம்பவம் எனக்குப் பல படிப்பினைகளைக் காட்டினது என்ருலும், இதைப் படிக்கின்ற மற்றவர்களுக்கும் ஏதாவது படிப்பினைகளைப் போதிக்க எண்ணி எழுதப்படவில்லை. வெறும் பொழுது போக்காகப் படித்து ரசிக்கட்டுமென்பதே நோக்கம். அந்த நிகழ்ச்சியை அப்படியே சொல்லுகிறேன்:

எனக்குச் சுமார் பதினைந்து பிராயமாக இருக்கிறபோது என் தாயார் இறந்து விட்டார்கள். எனக்குப் பின் பிறந்தவர்களாக மூன்று பெண் மக்களையும் இரண்டு ஆண் மக்களையும் விட்டு விட்டு அன்னை இறந்து போனுர். கடைசிக் குழந்தையான என் தம்பிக்கு அப்போது நான்கு வயது. இந்தச் சின்னஞ் சிறுசுகளையெல்லாம் என் தாயாருக்குப்பின் என்னுடைய தமக்கை பழநியம்மாள்தான் கவனித்துக் கொண்டார்கள். என்னுடைய இன்ஞெரு தமக்கையான விருத்தாம்பாளும் சிற்சில சமயங்களில் எங்களுக்கு ஆதரவாக இருப்பார். என் தாயார் இறக்கும் தருவாயில் இருக்கிறபோது அவருக்கு இருந்த ஒரே ஒரு கவலை, தன்னுடைய தவப்புதல்வனை எனக்குக் கலியாணம் செய்து வைத்துக் கண்டு களிக்காமல் இறந்துபோக வேண்டியிருக்கிறதே என்பதுதான். தாயார் இறந்து மூன்று வருஷங்களுக்குப் பிறகு நான் கோயமுத்தூரில் ஐந்தா

வது பாரம் படித்துக் கொண்டிருக்கும்போது, என்னுடைய தகப்பஞர் பல்லடம் தாலூகாவி லும், பொள்ளாச்சி தாலூகாவிலும் 'ஸ்பெஷல் டியூட்டியாக' சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வேலை பார்த்தார். அந்த உத்தியோகத்தின் அலைச்சல் களின் பலஞக அவர் மிகவும் அசௌக்ய மடைந்து படுக்கையாகப் படுத்துவிட்டார். அப் படிப் படுத்திருந்த சமயத்தில், தானும் தன் னுடைய மனைவியைப்போல் மூத்த மகனுக்கு விவாகம் முடித்துப் பார்க்காமலேயே இறந்து போக நேர்ந்துவிடுமோ, என்ற ஏக்கம் உண்டாகி அதைப் பற்றியே அடிக்கடி பேசுவார். நல்ல வேளையாக என் தந்தை நோய் நீங்கி சுகமடைந்து மீண்டும் உத்தியோகம் பார்க்க ஆரம்பித்தார். ஆனாலும் அவர் நோயுற்றுப் படுத்திருந்தபோது, அவருக்கு உண்டான என்னுடைய கலியாணத் தைப் பற்றிய கவலைமட்டும் மாறவில்லை. உத்தி யோகத்தில் இருக்கும்போதே என்னுடைய திரு மணத்தைச் சிறப்பாக நடத்திப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் அதிகப்பட்டது. என் னுடைய தமக்கைமார்களும், மற்றுள்ள பந்து மித்திரர்களிற் சிலரும் இதை ஆமோதித்தார்கள். பட்டும் படாததுமாக என் காதில் விழுந்த இந்தக் கலியாணப் பேச்சுகளைக் கேட்டு, நான் 'மெட்ரிகுலேஷன்' பாஸ் ஆகாமல் கலியாணம் செய்துகொள்ள மாட்டேனென்று சொல்லிக் கொண்டிருந்தேன். இருந்தாலும் 'பையன்கள் அப்படித்தான் சொல்வது வழக்கம்' என்று என்

தந்தை விவாகப் பேச்சை விடாது பேசிக் கொண்டேயிருப்பார். பெண் பேசவும் ஆரம் பித்தார்.

கரூரில், தா. வீரப்பபிள்ளை என்பவர் ஒரு பிரபல வியாபாரி. அவர் என்னுடைய தாயா ருக்குப் பெரிய தாயாரின் மகன். என்னுடைய தாயார் குழந்தையாக இருக்கும்போதே அன் னையை இழந்தவர். அதனால் வீரப்பபிள்ளையின் தாயார்தான் என் அன்னையை வளர்த்து வரிசை செய்தவர். அதனால் வீரப்பபிள்ளை என் தாய்க்கு வெகு பிரியமானவர். என் தந்தைக்கும் விரும்பத் தக்கவர். அத்துடன் வீரப்ப பிள்ளையின் தம்பி மருதநாயகம் பிள்ளை என்பவருக்கு, என்னுடைய மூதல் தமக்கை சௌபாக்கியம் என்றவரைக் கலியாணம் செய்து கொடுத்து இரண்டு மூன்று வருஷத்தில் இறந்து போனாள். அதே மருத நாயகம் பிள்ளைக்கு, என்னுடைய இன்னொரு தமக்கை விருத்தாம்பாள் என்பவரை இரண் டாம் தாரமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. (என் னுடன் பிறந்த ஒன்பது சகோதரிகளில் இந்த விருத்தாம்பாள் அம்மாள் ஒருவர்தான் இந்தக் கதையை நான் எழுதுகிற இந்தச் சமயத்திலும் இருப்பவர்). அதனால் கரூர் வீரப்ப பிள்ளையின் வீடு எங்கள் குடும்பத்துக்கு மிகவும் நெருங்கி னது. வீரப்ப பிள்ளைக்கு ஆறு பெண்கள். அவர்களில் மூன்றாவது பெண்ணான மூத்தம்மாள் என்ற சிறுமியை, எனக்குக் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்பது என்னுடைய தந்தை

யின் விருப்பம். எனக்கு அது பிடிக்கவில்லை. ஆனால் நான் என் கருத்தை வெளியிடவில்லை. ஏனென்றால் 'கலியாணம் செய்து கொள்ளச் சம்மதிக்கவே இன்னும் காலம் வரவில்லை. 'மெட்ரிகுலேஷன்' தேறின பிறகுதான் கலியாணப் பேச்சுக்கே காது கொடுக்கப் போகிறோம்; அந்தப் பேச்சு வருகின்றபோது பெண்ணைப் பற்றியும் பேசிக் கொள்ளலாம்; அது வரையிலும் என் தந்தை முதலானவர்கள் எந்தப் பெண்ணைப் பற்றி என்ன சொல்லிக் கொண்டால் நமக்கென்ன? கடைசியில் தாலிகட்ட வேண்டியவன் நான்தானே பார்த்துக் கொள்வோம்' என்று அந்தப் பேச்சுகளை சட்டை பண்ணமலேயே இருந்து வந்தேன்.

ஐந்தாவது பாரம் தேறி ஆறுவது பாரத்துக்கு — 'மெட்ரிகுலேஷன்' வகுப்புக்கு — வந்தேன். கரூருக்கு ஒரு உறவின் முறையாகப் போயிருந்த என் தந்தை, திரும்பி வரும்போது என்னுடைய கரூர் தமக்கை விருத்தாம்பாளையும், இந்த முத்தம்மாள் என்ற பெண்ணையும், தன்னுடன் கோயமுத்தூருக்குக் கூட்டிக்கொண்டு வந்தார். அந்த முத்தம்மாளுக்கு அப்போது பதின்மூன்று, பதினுன்கு வயதிருக்கும். கறுப்புமல்ல சிவப்புமல்ல. உயரமும் அல்ல குள்ளமும் அல்ல. அழகென்று சொல்லவும் முடியாது; அல்லவென்றும் சொல்ல முடியாது. என்னுடைய தந்தை என்னுடைய விருப்பங்களைக் கொஞ்சம் கூட மதிக்காமல் அந்தப் பெண்ணைக் கூட்டிக்

கொண்டு வந்துவிட்டதில் அவர்மேல் எனக்கு அருவருப்புத்தான். ஆனாலும் அதை நான் வெளியிற் காட்டிக்கொள்ள முடியாது. என் தகப்பனார் பொல்லாத கோபி. என்னை மிகவும் செல்வமாகத்தான் வளர்த்தாரென்றாலும், கோபம் வந்துவிட்டால் இன்னதென்று பார்க்காமல் கையில் எது அகப்படுகிறதோ அதை எடுத்து அடித்துவிடுவார். அதனால் என்னுடைய அருவருப்புகளை அவரிடத்தில் காட்டிக்கொள்ள முடியவில்லை. அந்த அருவருப்பையெல்லாம் அந்தப் பெண்ணினிடத்தில் காட்டிக்கொள்வதைத் தவிர நான் வேறொன்றும் செய்ய முடியவில்லை. அவளை நான் நேராகப் பார்ப்பதுகூடக் கிடையாது. ஆனால் என் தந்தையோ அந்தப் பெண்ணை எனக்கு மணம் முடித்துவிட்ட தன் மருமகளைப் போலவே மதிக்க ஆரம்பித்து விட்டார். அவளை மிகவும் செல்லத்தோடு சீராட்டுவார். என்னுடைய தந்தைக்கான பணிவிடைகள் பலவற்றையும் அந்தப் பெண்தான் செய்வாள். காலையில் என் தந்தை ஸ்நானம் செய்வதற்கு வெந்நீர் முதலியவற்றை எடுத்து வைக்க எங்கள் வீட்டிலுள்ள வேலைக்காரி இருந்தாலும், அவள் தயார் செய்து வைத்த வெந்நீரை இந்தப் பெண்தான் போய் எடுத்து ஊற்றி, என் தந்தை நீராடி முடியும் வரை கவனித்துக் கொள்ளுவாள். ஸ்நானம் முடிந்து அவர் வருவதற்குள் புதிதாகச் சந்தனம் அரைத்து, விபூதி சம்புடம், கண்ணாடி முதலியவற்றைத் தயார் செய்து வைப்பாள். அவர் காலை

ஆகாரத்தை முடித்துக்கொண்டு கச்சேரிக்குப் புறப்படுவதற்குள், அவர் முன் அணிந்திருந்த உடைகளிலிருக்கும் சர்க்கார் நிக்கல் வெள்ளிப் பித்தான்களையெல்லாம் எடுத்துச்சலவைசெய்யப் பட்ட வேறு உடைக்கு மாற்றி உடுப்புகளை ஒழுங்கு செய்து வைப்பாள். பூட்சை எடுத்துத் துடைத்து மினுமினுப் பேற்றுவாள். மேல் ஜோட்டை உதறி (ஸ்டாக்கிங்ஸ்) என் தந்தை யின் கால்களுக்குப் பூட்டிவிடுவாள். அவர் பூட்சு களைப் போட்டுக்கொண்டு எழுந்து நிற்கிற வரை யிலும் அவருடைய கால்களுக்கு முன்னல் உட் கார்ந்து கொண்டே இருப்பாள். அந்தப் பணி விடைகளில் ஆனந்தமடைந்த என் தந்தை, அவ ருடைய சொந்த இங்கிலீஷில் "வெறி கிளாட், டியர் முத்தூ" என்று அந்தப் பெண்ணைத் தட்டிக் கொடுத்துவிட்டு கச்சேரிக்குப் போவார். கச்சேரியிலிருந்து வீட்டுக்குள் நுழையும் போதே 'முத்தூ! முத்தூ' என்று கூப்பிட்டுக்கொண்டே வருவார். அந்தப் பெண் துள்ளிக் குதித்துக் கொண்டு அவருக்கு முன்னல் ஓடி, சிரித்துக் கொஞ்சி விளையாடி வரவேற்பாள். மாலை நேரங் களில் வரும்போது அடிக்கடி ஐயர் கடையி லிருந்து பலகார பக்ஷணங்களை வாங்கிக்கொண்டு வருவார். அவற்றை அவருடன் வரும் ஒரு சேவ கன் சுமந்துகொண்டு வருவான். வீட்டுக்குள் வந்ததும் முத்தம்மாளைக் கூப்பிட்டுச் சேவகன் கையிலிருந்ததை, தான் வாங்கி முத்தம்மாள் கையில் கொடுப்பார். அந்தச்சமயத்தில் என்

தமக்கையோ, தங்கையோ, மற்ற யார் முன்னு லிருந்தாலும் அவர்கள் கையில் அதைக் கொடுக்க மாட்டார். அந்த முத்தம்மாள் அப்போது உள்ளே இருந்தாலும் அவள் வந்த பிறகு அவள் கையிலேயேதான் கொடுப்பார். அவள் அந்தப் பொட்டணங்களை, அவிழ்த்து அவற்றிலுள்ள சிறப்பான தின்பண்டங்களிற் சிலவற்றை ஒரு தட்டில் எடுத்து வைத்துவிட்டு, மற்றதையெல் லாம் என் தமக்கை, தங்கைமார்களிடத்தில் கொடுத்து விடுவாள். அவர்கள் மற்றவர்களுக் கெல்லாம் பங்கிடுவார்கள். இதற்குள் என் தந்தை தன்னுடைய உத்தியோக உடுப்புகளைக் களைந்துவிட்டு வந்து, கைகால் அலம்பிக்கொள்ளு வார். தட்டில் எடுத்து வைத்த தின்பண்டங்களை அந்தப் பெண் என் தந்தைக்குக் கொடுப்பாள். அவர் பரம திருப்தியுடன் அதை வாங்கி அதி லுள்ள பக்ஷணங்களில் இரண்டொன்றை எடுத் துக்கொண்டு, மிச்சத்தை அந்தப் பெண்ணுக்கே கொடுத்து விடுவார்.

என் தந்தை மத்தியானத்திலும் இரவிலும் உணவு உண்ட உடனே சுருட்டுப்பிடிப்பது வழக் கம். அவர் சாப்பிட்டுக் கை கழுவிக்கொண் டிருக்கும் போதே, அந்தப் பெண் சுருட்டையும் நெருப்புப் பெட்டியையும், எடுத்து வந்து தயா ராகக் காத்துக்கொண்டிருப்பாள். அவர் வந்த தும் சுருட்டைக் கொடுப்பாள். அவர் அதை வாயில் வைத்துக் கொண்டவுடன் தானே நெருப் புக்குச்சியைக் கொளுத்தி சுருட்டுக்கு நெருப்புக்-

காட்டுவாள். அதையெல்லாம் பார்க்கிற போது, அந்தப் பெண் என் தகப்பனாருக்குக் 'குல்லாய் போடப்' பசப்புகிறாள் என்று என் மனதில் மட்டற்ற எரிச்சலுண்டாகும்.

என் தகப்பனார் சம்பளம் வாங்கிக்கொண்டு வருவார்—அவருக்குச் சம்பளம், 'பத்தா' (படி) குதிரை 'அலவென்ஸ்,' அந்த அலவென்ஸ் இந்த அலவென்ஸ் என்று எல்லாமாகச் சேர்ந்து எழு பது எண்பது ரூபாய் இருக்கும். அந்தக் காலத்து எழுபது எண்பது ரூபாய் இந்தக் காலத்து முந் நூறு நாநூறு ரூபாய்க்குச் சமானம். அந்தச் சம்பளத்தை ஒரு சிறு பையிற்போட்டு எடுத்து வருவார். அந்தக் காலத்தில் இப்போது போல் நோட்டுகள் அதிகம் இருக்காது. பெரும்பாலும் சம்பளம் முழுதும் வெள்ளி நாணயங்களாகத் தான் இருக்கும். வெள்ளி நாணயங்களடங்கிய அந்தச் சிறு பையைக் குலுக்கிக்கொண்டே என் தந்தை 'முத்து, முத்து' என்று கூப்பிடுவார். இவள் ஓடுவாள். அந்தப் பையையும், தன் னுடைய பெட்டகத்தின் சாவியையும், அவர் இந்தப் பெண்ணிடம் கொடுத்து, வைக்கச் சொல்லுவார். வீட்டுச் செலவுகளுக்குப் பணம் வேண்டியிருந்தாலும் அந்தப் பெண்ணைத்தான் எடுத்துவரச் சொல்லுவார்.

இப்படியாக அந்தப் பெண் என் தகப்பனா ருடைய எல்லாக் காரியங்களுக்கும் காரியதரிசி போல் விளங்கியது எனக்கென்னமோ வெறுப் பாகவே இருந்தது.

அந்தப் பெண் பல சமயங்களில் எனக்கும் பணிவிடைகள் செய்ய வருவாள். நான் அதற்கு இடங்கொடுப்பதில்லை. நான் எவ்வளவு அரு வருப்புடன் அவள் எனக்குப் பணிவிடைகள் செய்ய வருவதை விலக்கினாலும், அவள் மீண்டும் மீண்டும் அதைச் செய்ய முயலுவாள். என் தகப்பனார் அவளைத் தன் மருமகளாகவே எண்ணி விட்டதைப் போலவே அவள் என்னைக் கண வனாகவே கருதிவிட்டவள் போலக் காணப்பட் டாள். அதனாலும் எனக்கு அவள் மீதிருந்த அதிருப்தி அதிகப் பட்டுவிட்டது. ஒரு நாள் நான் எண்ணெ தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்யச் சீவக்காய் தேய்த்துக்கொள்ள உட்கார்ந் தேன். எனக்குத் தண்ணீர் விடுவதற்கு எனக்கு அடுத்த தங்கை காவேரி என்னும் பெண் செம்புங் கையுமாக என் அருகில் இருந்தாள். நான் தலை யில் சீவக்காயை அப்பிக்கொண்டு, கண்களை மூடிக்கொண்டு தேய்த்துக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில், என் தங்கை காவேரி ஏதோ அவசரமாக வேறு ஜோலியாக கொஞ்சம் உள்ளே போயிருந்தாள். நான் கண்ணை மூடிக்கொண்டே 'தண்ணீர் தெளி' என்றேன். அப்போது காவேரி அருகில் இல்லை. நான் சொன்னதைக் கேட்ட அந்தப் பெண் உடனே ஓடிவந்து தலைக்குத் தண் ணீர் தெளித்தாள். நான் தலையைத் தேய்த்து விட்டு, உடம்பு, கை கால்களையெல்லாம் தேய்த் துக்கொண்டு, கண்ணைத் திறக்காமலேயே, தண் ணீர் தெளித்தது என் தங்கை காவேரிதான்

என்று எண்ணிக்கொண்டே 'முதுகைத் தேய்' என்றேன்.. அந்தப் பெண் வெகு பயபக்தியுடன் முதுகுக்கு சீவக்காய் வைத்துத் தேய்த்து விட்டாள். காவேரி வழக்கமாகத் தேய்க்கிற நேரத்துக்கு அதிகமாக அந்தப் பெண் முதுகைத் தேய்த்தாள். நான் "போதும் தண்ணி ஊத்து" என்றேன். அவள் அருகிலிருந்த வெந்நீரை மொண்டு மொண்டு என் தலைக்கு விட்டாள் ஐந்தாறு சொம்பு ஜலம் விட்ட பிறகு நான் கண்ணைத் திறந்தேன். எனக்கு முன்னால் அச்சமும் மரியாதையும் கலந்த பார்வையுடன் ஒரு கையால் தன்னுடைய பாவாடை தாவணிகளை ஒடுக்கிப் பிடித்துக்கொண்டு, இன்னொரு கையில் சொம்புடன் நிற்பதைக் கண்டேன். அவளைக் கண்டதும் என்னையும் மீறிக்கொண்டு கோபம் வந்து "அட மூதேவி! நீயா எனக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறாய்? நீயா முதுகு தேய்த்தாய்? எங்கே அந்தக்காவேரி?" என்று ஒரே கத்தாய்க் கத்தினேன். அந்தப் பெண் நடுநடுங்கிப்போய், கையில் ஜலத்தோடு வைத்துக்கொண்டிருந்த சொம்பை அப்படியே வைத்துவிட்டு, அழுது கொண்டே உள்ளே போய்விட்டாள். இதையெல்லாம் எட்ட நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த என் தமக்கை, முன்னால் வந்து, "ஏண்டாப்பா ஒரே முட்டாக கோவிக்கிறாய். அந்தக் குழந்தை உன் தலைக்குத் தண்ணீர் விட்டு விட்டதில் உனக்கு என்ன முழுகிப் போச்சு? அடேயப்பா! உனக்கு இஷ்டமில்லாவிட்டால்

அவளைக் கட்டிக்கொள்ள வேண்டாமே. ஏன் அந்தப் பெண்ணைக் கண்டால் இப்படி நொடிக்கிருய்......" என்று என்னென்னவோ சொல்லி விட்டு எனக்குத் தண்ணீர் விட்டாள். நானும் என்னென்னவோ முனகிக் கொண்டே ஸ்நானத்தை முடித்துக்கொண்டு போய்விட்டேன்.

இப்படியாக அந்தப்பெண் ஏழெட்டு மாதம் எங்கள் வீட்டிலேயே இருக்க நேர்ந்தது. நான் அந்தப் பெண்ணை மிகவும் அவமதிப்பாக நடத்துகிறேன் என்று நினைத்த என் தமக்கை, அப் பெண்ணை உடனே கரூருக்கு அனுப்பிவிட வேறு காரணங்களைச் சொல்லி முயற்சி செய்தாள். ஆனல் இதையெல்லாம் அறியாத என் தந்தை, அந்தப் பெண்ணை அனுப்பிவிட இஷ்டப்படவில்லை. எனக்கு அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து வைக்கிற விஷயத்தை ஒதுக்கி விட்டாலும், தன்னிடத்தில் அப்பெண் நடந்து கொள்ளும் மாதிரியில் மிகவும் மகிழ்ச்சியடைந்து விட்ட என் தந்தை, அவளிடத்தில் அளவு கடந்த அன்பு பாராட்டி வந்தார். என் தந்தை எவ்வளவுக் கெவ்வளவு அந்தப் பெண்ணை விரும்பினரோ அவ்வளவுக் கவ்வளவு நான் வெறுக்கலானேன். ஏன் நான் அப்படிச் செய்தேன் என்று என்னலும் சொல்ல முடியவில்லை. ஏனே, அந்தப் பெண் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை? நான் அவளிடத்தில் அவ்வளவு அருவருப்புக் காட்டிய பின்னும்கூட அந்தப் பெண் என்னிடம் அருவருப்போ அவமதிப்போ காட்டவில்லை?

அவள் பின்னும் பின்னும் என்னிடம் அன்பு காட்ட முயன்றதையும் கூட, நான் குற்றமாகக் கொண்டேனே யல்லாமல் குணமாகக் கொள்ள வில்லை.

ஒருநாள் எங்கள் வீட்டுக்குப் பல விருந்தாளிகள் வந்திருந்தார்கள். என் பெரிய தமக்கை, அவளுடைய கணவன், என்னுடைய சிறிய தமக்கையின் கணவன் முதலான இன்னும் சிலரும் வந்திருந்தார்கள். இரவு ஒன்பது மணி இருக்கும். நான் சாயந்திரம் பந்து விளையாடப் போனவன், பல நண்பர்களுடன் வெகு நேரம் வரையிலும் பேசிக்கொண்டிருந்துவிட்டு, வீட்டுக்கு வந்தேன். என் தகப்பனரும் மற்ற ஆண் பிள்ளைகளும் சாப்பிட்டுவிட்டு, என் தகப்பனர் சுருட்டுப் பிடித்துக் கொண்டு விருந்தினர்களுடன் பேசிக்கொண்டு வீதிப்புறத்தில் சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டிருந்தார். நான் உள்ளே போனேன். பெண்கள் சாப்பிட உட்கார்ந்த சமயம். என் தமக்கைமார்களும், தங்கை மார்களும், இன்னும் இரண்டொரு பெண் விருந்தினர்களும் இலையில் உட்கார்ந்திருந்தார்கள். இந்த முத்தம்மாள் என்ற பெண்ணும், என்னுடைய சிறிய தகப்பனரின் மகள் பழநியம்மாள் என்னும் தங்கையும், பரிமாறிக் கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும் என்னுடைய மூத்த தமக்கை "ஏண்டா தம்பீ! எங்கே போய்விட்டாய் இந்நேரம்? வா உட்காரு" என்று என்னையும் சாப்பிட அழைத்தாள். நான் போய் என் தமக்கையின் அருகில்

உட்கார்ந்தேன். அந்த முத்தம்மாள் என்னும் பெண், நான் அவளிடத்தில் மிகவும் அருவருப்புள்ளவன் என்பதையெல்லாம் முற்றும் மறந்துவிட்டவள் போல, வெகு பரபரப்புடன் ஓடிப்போய் வழக்கமாக நான் சாப்பிடுகிற பீங்கான் வட்டிலை விட்டுவிட்டு, விருந்தினர்களுக்கென்று வாங்கப்பட்ட நல்ல தலைவாழை இலை ஒன்றை எடுத்து வந்து எனக்குப் போட்டுத் தண்ணீர் தெளித்துப் பறந்து பறந்து பரிமாறினுள். விருந்துச் சாப்பாடானதால் பலவித பதார்த்தங்கள் பக்குவம் செய்யப்பட்டிருந்தன. நான் பந்தாடி வந்த பசியோடு உண்டேன். அந்த முத்தம்மாள் எனக்குப் பரிமாறியதை நான் வழக்கம்போலவே அருவருத்தேன் என்ருலும், சமய சந்தர்ப்பத்தை உத்தேசித்தும், அருகிலிருந்த என் மூத்த தமக்கையின்முகத் தாட்சண்யத்துக்காகவும் பேசாமல் சாப்பிட்டேன். நல்ல அப்பளம் பொரித்திருந்தார்கள். முதலில் வைத்த இரண்டு அப்பளத்தையும் தின்றுவிட்டேன். நான் அப்பளங்களை ஆவலோடு தின்றுவிட்டதைக் கவனித்துக்கொண்டிருந்த முத்தம்மாள் மீண்டும் இரண்டு அப்பளங்களை என் இலையில் வைத்தாள். அப்பளம் நன்ருயிருக்கிறதென்று சொல்லிக்கொண்டே என் தமக்கையுடன் வெவ்வேறு விஷயங்களைப் பற்றி வெகு சந்தோஷமாகப் பேசிக்கொண்டே சாப்பிட்டேன்.

இப்படி நான் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்ததனுலோ என்னவோ, பரிமாறிக்

கொண்டிருந்த பழனியம்மாள் என்ற என் சிற்றப்பாவின் மகள் முத்தம்மாளுக்கு உத்ஸாகம் ஊட்டிவிட, அந்தப் பெண் உள்ளேயிருந்து இரண்டு கையிலும் இரண்டு அப்பளங்களை எடுத்துக்கொண்டு வந்து நேரே எனக்கு முன்னால் நின்று, மணவறையில் நாகவல்லி சமயத்தில் பெண்ணும் பிள்ளையும் அப்பளம் தட்டிக் கொள்வார்களே அப்படி என்னுடைய இரண்டு கன்னங்களிலும் இரண்டு அப்பளங்களையும் தட்டிவிட்டாள். பக்கத்தில் இருந்தவர்கள் எல்லாரும் ஏக காலத்தில் கொல்லென்று சிரித்து விட்டார்கள். எனக்கு வந்து விட்டது கோபம். குபீலென்று படமெடுத்த பாம்பைப்போல் சீறி எழுந்தேன். "உனக்கு அவ்வளவு துணிச்சலா? ......" என்று உறுமிக்கொண்டு அந்தப் பெண்ணைத் துறத்திப் பிடிக்கப் போனேன். குறுக்கே வந்த தங்கை பழனியம்மாளையும் தள்ளிக் கொண்டு அந்த முத்தம்மாள் இருந்த இடத்துக்குத் தாவினேன். பயந்து நடுங்கி என்னைப் பார்த்துக்கொண்டே வெகு விசையாக பின்னுக்குப் பதுங்கிய அந்த முத்தம்மாள் பின்னாலிருந்த வாசற்படி தடுக்கி சற்றே பள்ளமாக இருந்த சமையல் அறைக்குள் மடாரென்று மல்லாக்க விழுந்து விட்டாள். அவள் விழுந்து விட்டதைக் கண்டதும் நான் நின்றுவிட்டேன். விழுந்த சத்தத்தைக் கேட்டு என் மூத்த தமக்கை ஓடோடியும் வந்து அந்தப் பெண்ணைத் தூக்கினாள். முத்தம்மாளுக்கு மூச்சுப் பேச்சில்லை, அவளைத்

தூக்கிக்கொண்டு வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த என் தமக்கை, முத்தம்மாளின் மண்டையி லிருந்து மளமளவென்று ரத்தம் ஓடிவந்து 'தன் கையை நனைத்து விட்டதைக் கண்டு "அடப் பாவி! இப்படியா துரத்தித் தள்ளுவார்கள்?" என்று என்னைப் பார்த்துக் கடு கடுத்துவிட்டு கண் கலங்கிக் கொண்டே "அண்ணுவைக் கூப்பிடு! மாமாவைக் கூப்பிடு! ஓடு ஓடு" என்று அலறத் தொடங்கினுள். அருகிலிருந்த பெண் பிள்ளை களெல்லாம் அழத் தொடங்கி விட்டார்கள்.

நான் கொலை செய்துவிட்ட குற்றவாளியைப் போலக் கூட்டில் உயிரில்லாமல் குலைந்து போனேன். இந்த அரவத்தைக் கேட்டு கையிற் பிடித்த சுருட்டோடு ஓடிவந்த என் தந்தை நடந் ததை அறிந்து, என்னை ஏற இறங்க முறைத்துப் பார்த்துவிட்டுக் கையில் நெருப்போடு இருந்த சுருட்டை என்மேல் அடிப்பதுபோல ஓங்கிக் கீழே அடித்துவிட்டு, என் தமக்கை தாங்கிக் கொண்டிருந்து மூர்ச்சையாயிருந்த முத்தம் மாளைத் தன் இருகரங்களாலும் வாரியெடுத்துக் காயத்தைக் கவனித்தார். அந்தப் பெண் மல்லாக்க விழுந்தபோது அங்கே கிடந்த ஒரு விறகுக் கட் டையின் கூர்மையான முனையில் தலை அடிபட்டு அரை அங்குல ஆழமான காயமுண்டாகி விட் டது. உடனடியாகச் செய்யக்கூடிய சிகிச்சை களைச் செய்து ரத்தம் வெளி வருவதை நிறுத்தி ஞர்கள். பக்கத்திலிருந்த போலீஸ் கச்சேரியி லிருந்து ஒரு ஜவானை வரச்செய்து டாக்ட

ருக்குச் சொல்லியனுப்பினூர். டாக்டர் வந்து காயத்துக்குச் சரியான கட்டுக் கட்டிவிட்டு மற்றும் வேண்டிய சிகிச்சைகளைச் செய்தார். ஒரு மணி நேரத்துக்குப் பின் முத்தம்மாள் முழித்துப் பார்த்தாள். என் தந்தையும் தமக்கைமார்களும் அதற்குப் பிறகுதான் பேச ஆரம்பித்தார்கள். டாக்டர் போன பின்புதான் என் தந்தை என்மீது அவருக்கு வந்த கோபத்தை யெல்லாம் கொட்டினூர். அவருக்கு வழக்கமான பல கொச்சை மொழிகளால் என்னை வைதுவிட்டு "என்ன படிப்புப் படிச்சி நீ பாழாய்ப் போனுய்? கிளி மாதிரி கொஞ்சிப் பேசி சிரித்து விளையாடி, யாருக்கும் முகம் கோணுதபடி நடக்கக்கூடிய இந்தப் பெண்ணின் காலில் விழுந்து கும்பிட்டால்கூட உனக்கு அந்த நல்ல புத்தி வராது" என்ருர். அவர் வெகு நேரமாகப் பல வண்டைப் பேச்சுகளையும் சொல்லி என்னைத் திட்டினதிலெல்லாம் கூட வருத்தப்படாத நான், 'அந்தப் பெண்ணின் காலில் விழுந்தாற்கூட உனக்கு அந்த நல்லபுத்தி வராது' என்று சொன்னதை மட்டும் பொறுக்க முடியவில்லை. உடனே நான் வெகு விரைப்பாக அவ்விடத்தை விட்டு என்னுடைய படுக்கையறைக்குப் போய் விட்டேன். அந்தப் பெண்ணை அவ்வளவு உயர்வாகவும் என்னை இவ்வளவு தாழ்த்தியாகவும் என் தகப்பனூர் பேசிவிட்டதை திருப்பித் திருப்பி எண்ணிப் பொருமிக்கொண்டே படுக்கையிற் கிடந்தேன். நான் குழம்புச் சாதம்கூட

சாப்பிட்டு முடியவில்லை. அதற்குள் அவ்வளவு அலங்கோலமும் நடந்துவிட்டபடியால் மறுபடியும் உட்கார்ந்து சாப்பிட முடியாமற் போய்விட்டது. அதனால் எனக்குப் பசி வேறு. எல்லாம் சேர்ந்து என் எரிச்சல்களை அதிகப்படுத்தி விட்டன. அத்தனை எரிச்சலும் வேறு எதன் மீதும் செல்லாமல் அந்த முத்தம்மாளின் மீதே பாய்ந்து, அவள் விழுந்து அடிபட்டு அபாயத்துக்குள்ளானதைக் கண்டு எனக்கு உண்டான கொஞ்சம் பரிதாபத்தையும் கூடப் பறக்கடித்து விட்டன. நான் அவளுக்குச் செய்த அநியாயத்தையும் நினைத்துப் பார்க்காமல் அவளால் எனக்கு அவமானம் நேர்ந்து விட்டதாக நினைத்துக்கொண்டே நித்திரை போய்விட்டேன்.

ஒரு வாரத்துக்குள் முத்தம்மாள் முற்றிலும் குணமடைந்து விட்டாள். என்னுடைய தமக்கைமார் ஊருக்குப் பயணமானார்கள். முத்தம்மாளும் அவர்களுடன் போக ஆசை கொண்டாள். என்னுடைய அன்பில்லாத் தனத்தைப் பார்த்துத்தான் எங்கள் வீட்டில் இன்னும் இருக்க இஷ்டப்படாமல் அவள் போய்விட எண்ணினளோ என்னமோ. என் தந்தைக்கு அந்தப் பெண் ஊருக்குப் போவதாகச் சொன்னதில் வருத்தந்தான். இருந்தாலும் என் தமக்கைகளும் அந்தப் பெண்ணை அனுப்பிவிட வேண்டியது அவசியந்தான் என்று சொன்னதின்மேல் என் தந்தை இணங்க வேண்டியதாயிற்று. என்னைத் தவிர மற்ற எல்லாரும் முத்தம்மாள் பிரிந்து

போவதில் வருந்தினார்கள். என் தந்தை முத்தம் மாளுக்குப் பலவிதமான பாவாடை தாவணித் துணிமணிகளையும், வேறுபல வெகுமதிகளையும் கொடுத்து அன்புடன் அனுப்பிவைத்தார். ஊருக்குப் போகுமுன்பு என்னுடைய தமக்கை மார்கள் என் தந்தையினிடத்தில் எனக்கு அந்தப் பெண்ணை விவாகம் செய்துகொள்ள விருப்ப மில்லை யென்பதைச் சொல்லிவிட்டார்களென் பதை, அவர்களெல்லாம் போனபின்பு என் தந்தை பேசின பேச்சுகளிலிருந்து அறிந்து கொண்டேன். என் தந்தைக்கு வருத்தம் உண் டாக்கும் விஷயந்தான் என்றாலும் அந்தப் பெண் எனக்குப் பிடிக்கவில்லை யென்பதை நான் சொல் லாமலேயே அவருக்கு என் தமக்கைகள் அறியப் படுத்திவிட்டதில் எனக்கு ஒரு ஆனந்தந்தான்.

அந்த வருஷம் நான் 'மெட்ரிகுலேஷன்' பரீட் சைக்குப் பணம் கட்டிப் பரீட்சையும் எழுதி னேன். ஆனால் நான் எந்தெந்தப் பாடங்களில் வெகு கெட்டிக்காரன் என்று பேரெடுத்து இறு மாப்படைந்திருந்தேனோ அந்தப் பாடங்களி லேயே நான் தேருமற் போனேன். அடுத்த வருஷம் 1907-ல் மீண்டும் வகுப்பில் படித்தேன். அந்த வருஷ ஆரம்பத்தில் என் தகப்பனருக்கு மறுபடியும் உடல் நலம் கெட்டு மிகவும் அபாய மான நிலைமை ஏற்பட்டு, உத்தியோகமாவது உயிராவது போகவேண்டிய தெசை என்று ஜோதிடர்கள் சொன்னதன்மேல் உடனே பென் ஷன் பெற்றுக்கொண்டார். கோயமுத்தூரை

விட்டு என் மூத்த தமக்கை பழனியம்மாள் வசித்த நாமக்கல்லுக்கே எங்கள் குடும்பம் மாறியது. நான் அந்த ஆண்டின் பிற்பகுதியில் காட்டுப்புத்தூர் ஹைஸ்கூலில் சேர்ந்து படித்து அந்த வருஷத்தில் 'மெட்ரிகுலேஷன்' பரீட்சையில் தேறினேன். 1908-ல் திருச்சினுப்பள்ளியில் எப். ஏ. வகுப்பில் சேர்ந்தேன்.

எப். ஏ. வகுப்பின் முதல் வருடப் படிப்பு முடிந்து, விடுமுறைக்கு முன் நடந்தபள்ளிக்கூடப் பரிசளிப்பு ஆண்டுவிழாவில் எனக்குப் பல பாடங்களில் முதற் பரிசுகள் கிடைத்தன. இங்கிலீஷ், மொழி பெயர்ப்பு, வியாசம், கவி ஒப்பித்தல், நாடகத்தில் நடித்தல், கால் பந்து விளையாட்டு, ஜிம்னுஷியம், முதலான எல்லாவற்றிலும் எனக்குப் பரிசு. தமிழுக்குத் தனிப் பரிசு. ஜிம்னுஷியம் என்பதிலும், 'பேரலல் பார்ஸ்' 'ஹாரிசாண்டல் பார்', ஹராஸ், ரிங்ஸ், ட்ரெபீஸ், ஸ்டில்ஸ் வாக்கிங், என்ற ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனிப் பரிசுகள் உண்டு. அவற்றுள் அநேகமாக எல்லாவற்றிலும் எனக்கு ஒரு பரிசு கிடைத்தது. இப்படியாக சுமார் நூறு ரூபாய் மதிக்கத்தகுந்த புத்தகங்களையும், மற்ற வெகுமதிப் பொருள்களையும் என்னுடைய பள்ளித்தோழர்கள் பலபேர் சுமந்துவர என்னுடைய விடுதிக்கு வந்தேன். அங்கே என்னுடைய மூத்த தமக்கையின் புருஷன் சுப்பராய பிள்ளை எனக்காக நாமக்கல்லிலிருந்து வந்து காத்துக்கொண்டிருந்தார். அவர் என்னிடத்தில் வெகு சரசமுள்ளவர். அவ

ரிடத்தில் நான் மிகவும் அந்தரங்கமாக நடந்து கொள்ளுவேன். எனக்கு எது வேண்டியதாயிருந்தாலும் அதை அவருக்கு அறியப்படுத்திஞற் போதும். என் தகப்பஞரைக் கேட்கக் கூசுகின்ற விஷயங்களையும் அவரிடம் சொல்லி முடித்துக்கொள்ளுவேன். பள்ளிக்கூடம் மூடி நான் நாமக்கல்லுக்குப் போக இன்னும் ஏழெட்டு நாட்கள்தான் இருக்கின்றன. அப்படியிருக்கத் திடீரென்று அவர் அங்கே எதற்காக வந்தார் என்று தெரியவில்லை. ஏதாவது முக்கியமான அலுவல் இருக்க வேணுமென்று அனுமானித்தேன். வெகுமதிப் பொருள்களையெல்லாம் என் அறையில் வைத்துவிட்டு என்னுடைய நண்பர்கள் என்னைப் பாராட்டிவிட்டு விடைபெற்றுக் கொண்டபின் "என்ன மாமா என்ன விசேஷம்? எங்கே வந்தீர்கள்?" என்றேன். அவர் கலகலவென்று சிரித்தார். அதஞல் ஏதோ விசேஷம் இருக்கிறதென்று கண்டு அடுத்தடுத்து அவர் வந்த காரணத்தைக் கேட்டேன்.

"ஒன்றுமில்லை சும்மா உன்னைப் பார்த்துவிட்டுப்போகத்தான் வந்தேன்" என்று பின்னும் சிரித்தார்.

என்னுடைய ஆவல் அதிகப்பட்டு அவர் வந்த காரணத்தை உடனே அறியத் துடித்தேன்.

"எல்லாம் சாப்பிட்டுவிட்டு சாவகாசமாகச் சொல்லுகிறேன் வா" என்ருர். இருவரும் சாப்பிடச் சென்ருேம். அதற்குள் ஆயிரம் தடவை

அவர் வந்த காரணத்தைக் கேட்டுவிட்டேன். அவர் சொல்லவில்லை. சாப்பிட்டுவிட்டு என் விடுதிக்கு வந்தோம். மேஜைக்கருகில் உட்கார்ந்தோம். நான் வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவர் சிரித்துக்கொண்டே "நான் சொன்னால் நீ தட்டமாட்டாய் என்றே மாமா என்னை அனுப்பினார்" என்று சொல்லிக்கொண்டே தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துத் தன் கையில் வைத்துக்கொண்டே "நாங்களெல்லாம் உன்னுடைய நன்மையைத்தான் கோருவோம். அதுவும் நான் உனக்கு ஒரு கெடுதலான காரியம் நடக்கச் சம்மதிக்கமாட்டேன் என்பது உனக்கே தெரியும். இந்தா இதைப் படித்துப் பார்" என்று கடிதத்தை என்னிடம் நீட்டினார்.

அதை வாங்கும்போதே அது என்னுடைய தந்தையின் கடிதம் என்பதைக் கண்டு கொண்டேன். வாங்கிப் பிரித்தேன். வழக்கமாக இருப்பதைக் காட்டிலும் அதிக அன்பான சொற்களால் அந்தக் கடிதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தின் சுருக்கம் என்னவென்றால் "எனக்கு வயதாகிவிட்டது. அடிக்கடி அசௌக்யமும் உண்டாகிறது. உனக்கு சீக்கிரமாக விவாகம் செய்து பார்த்துவிட ஆசைப்படுகிறேன். அடுத்த வைகாசிக்குள் நடத்திவிட வேண்டும். பெண் வீட்டார் அவசரப்படுகிறார்கள். அவர்களுக்கு இன்னும் ஒரு வாரத்துக்குள் உறுதி

சொல்ல வேண்டும். மற்ற விவரங்களை சுப்ப ராயன் நேரிற் சொல்லுவான். நீ என் மூத்த மகன். நல்ல பிள்ளை. வெகு அருமையாக வளர்த் தேன். நீ என் பேச்சை மீறமாட்டாயென்று நம்பியிருக்கிறேன்" என்று மட்டும் இருந்தது. இந்த நாட்டில் உள்ள பழக்க வழக்கங்களை அனுசரித்து வயதான என் தந்தை என் விவா கத்தைச் சீக்கிரம் பார்த்துவிட ஆசைப்படுவதில் தவறொன்றுமில்லையென்று எனக்குள்ளேயே எண்ணிக்கொண்டு, கலியாணம் செய்து கொள் ளச் சம்மதித்துவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்து அதற்குச் சம்மதம் காட்டுவதுபோல் என் மைத்துனரைப் பார்த்து புன்சிரிப்புக் காட்டி "சரி......இன்னொரு வருஷ எப். ஏ. படிப்பும் முடித்துவிட்டுப் பார்த்துக் கொள்ளலாமென்று எண்ணியிருந்தேன். ஆனால் அண்ணாவும் நீங்க ளும் அவ்வளவு ஆவலாக இப்போதே நடத்தி விட வேண்டுமென்று விரும்புகிறபோது நான் மட்டும் அதற்குத் தடை சொல்லாவிட்டால் என்ன? சரி......பெண் எங்கே பார்த்திருக் கிறீர்கள்?" என்றேன்.

"பெண் எங்கே பார்ப்பது? பெண்தான் நம் கையிலேயே இருக்கிறதே" என்று என் மைத்துனர் சிரித்தார்

"எந்தப் பெண்?"

"ஏன்? முத்தம்மாள்தான்."

"முத்தம்மாளா! கரூர் முத்தம்மாளா?"

" ஆம். அவளுக்கென்ன? அதைவிட நல்ல பெண் கிடைக்குமா?"

எனக்கு இடிவிழுந்ததுபோல் இருந்தது. கோயமுத்தூரோடு அந்த முத்தம்மாளை என் தந்தை விட்டுவிட்டார் என்று எண்ணியிருந்தேன். நான் எப். ஏ. படிக்கிறேன் என்று பல பணக்கார இடங்களில் எனக்குப் பெண் கொடுக்க விரும்புகிறார்கள் என்று என் காதில் விழுந்த பேச்சுகளிலிருந்து, அப்படி ஏதோ ஒரு நல்ல இடத்தில், ஒரு நல்ல பெண்ணைத் தீர்மானித்து, அவர்களுக்குத்தான் இன்னும் ஒரு வாரத்துக்குள் உறுதி சொல்ல வேண்டுமென்று, என் தந்தை எழுதியிருக்கிறாராக்கும் என்றே எண்ணி விட்ட எனக்கு, அதே முத்தம்மாளைத்தான் கட்டி வைக்க என் தந்தை நிச்சயித்திருக்கிறார் என்றதைக் கேட்டவுடன் வர்ணிக்க முடியாத கோபமும் வருத்தமும் வந்துவிட்டன. என்ன விதமாக என் எரிச்சலைக் காட்டிக் கொள்வதென்று தெரியாமல் உதட்டை மென்றுகொண்டு அந்த அறையைச் சுற்றிலும் அங்குமிங்கும் பார்த்தேன். அன்றைக்குத்தான் வாங்கிவந்த பற்பல பரிசுகளின் மேல் என் பார்வை விழுந்து என் சுய மதிப்பை அதிகப்படுத்திற்று. "அந்தப் பெண்ணைத்தான் பிடிக்கவேயில்லையென்று அப்போதே சொல்லியாயிற்றே. என்னைக் கேட்காமல் மறுபடியும் அந்தப் பெண்ணை யார் பேசச் சொன்னது? கலியாணம் செய்துகொண்டு காலமெல்லாம் கஷ்டப்படவேண்டியவன் நானா, நீங்களா?

நான் இச்சைப்படாத ஒரு பெண்ணை மணந்து கொள்ளச் சொல்லிக் கட்டாயப்படுத்துவது என்ன அறிவு? அது முடியவே முடியாது. அந்தப் பெண் எனக்குத் தேவையில்லை. போய் அண்ணாவிடம் கண்டிப்பாகச் சொல்லிவிடுங்கள்." என்று சுமார் அரைமணி நேரம் நான் பிரசங்கம் செய்தேன். அவர் பேசாமல் கேட்டுக் கொண்டே இருந்துவிட்டு நான் ஓய்ந்த உடன் எனக்குப் பல நியாயங்களை எடுத்துக்காட்டி, கோடி கோடி யாகக் கொட்டிக் கொடுத்தாலும் அந்த முத்தம் மாளைப்போல ஒரு குணவதி கிடைப்பது கஷ்ட மென்றும், என் தந்தைக்கு மட்டுமல்ல என்னுடைய பந்துமித்திரர்கள் அனைவருக்கும் அந்தப் பெண்ணைத்தான் எனக்கு மணம் செய்விக்க வேண்டுமென்று விருப்பம் என்றும் இரவு ஒரு மணி வரைக்கும் எடுத்துச் சொன்னார். நான் இணங்கவேயில்லை. அவர் படுத்துக் கொண்டார். எனக்குத் தூக்கம் வரவில்லை.

தலையில் ஒரு பாராங்கல்லை வைத்துவிட்டது போல வேதனைப் பட்டுக்கொண்டே இரவைக் கழித்தேன், விடிந்தது, இருவரும் பேச்சுமூச்சில்லாமல் ஸ்நானம் செய்தோம். காப்பிக் கடைக்குப் போனோம். திரும்பி வந்தோம்.

என் தந்தை கரூரில் என்பதிலுக்காகக் காத்துக் கொண்டிருப்பதாகவும் பதிலை வாங்கிக் கொண்டு தானும் கரூர் போகவேண்டுமென்றும் என் மைத்துனர் சொன்னார். நான் வாயாற் சொன்னதை என் தந்தையிடம் சொல்லிவிடும்

படி சொல்லி "அண்ணனுக்குத் தபாலில் கடிதம் எழுதுகிறேன். இப்போது உட்கார்ந்து எழுத என் மனம் சரியாக இல்லை என்றேன்". சுப்பராய பிள்ளை சுருங்கிய முகத்துடன் விடைபெற்றுக் கொண்டார்.

பகலெல்லாம் பள்ளிக்கூடத்திலும் பந்தாட்டத்திலும் கழித்துவிட்டு அன்று இரவு சாப்பாட்டுக்குமேல் என் மேஜையினருகில் உட்கார்ந்து என் தந்தைக்கு ஒரு வெகு நீண்ட கடிதம் எழுதினேன். அதில் திருக்குறள், கம்பன், புகழேந்தி, ஒளவை, ஒட்டக்கூத்தர், நாலடியார், திருகடுகம், நான்மணிக்கடிகை, வில்லிபுத்தூரார், தாயுமானுர், பட்டினத்தார் முதலான முக்கியமான தமிழ் நூல்களிலிருந்து சென்ற ஐந்தாறு ஆண்டுகளாக எங்களுக்குப் பாடமாக வந்து நான் மனப்பாடம் பண்ணியிருந்த எத்தனையோ பாடல்களையெல்லாம் கொட்டி, இல்லறம், பெண்மை, காதல், அன்பு என்ற விஷயங்களைப்பற்றி, உபாத்தியாயர்கள் சொன்னதும், நானுகப் படித்ததும் அதற்குமேல் சொந்த அறிவாக வியாக்யானம் செய்ததுமான அநேக கருத்துகளை அடுக்கி, பெரிய பெரிய பண்டிதர்களும்கூட விளக்க முடியாமல் திண்டாடுகிற பதங்களையெல்லாம் வைத்துத் தீட்டி, 'காதல்' என்கிற விஷயம் பெரிய விஷயம் என்றும், தான் காதலிக்காத ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வது தகாத காரியம் என்றும், காதல் என்பதைக் கட்டாயப் படுத்திக் கசக்கி உண்டாக்க முடியாதென்றும்,

ஆகையினால் அந்தப் பெண்ணை விட்டுவிட்டு வேறு பெண்ணைப் பார்க்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் எனக்குக் கலியாணம் என்பது முடியாத காரியம் என்றும் முடித்து அனுப்பினேன். (இந்தக் கடிதத்தை என் தந்தை என்னுடைய அறிவுக்கோ அறியாமைக்கோ அடையாளமாக அவர் சாகிற வரையிலும் தன் பெட்டியில் வைத்திருந்தார்.)

கடிதம் எழுதிய ஒரு வாரத்துக்குப்பின் கல்லூரி விடுமுறைக்காக மூடப்பட்டது. நான் நாமக்கல்லுக்கு வந்தேன். அந்தக் காலத்தில் திருச்சியிலிருந்து நாமக்கல்லுக்கு இப்போது போல நேராக வந்துவிட முடியாது. மோட்டார் வண்டியே வராதகாலம். திருச்சியிலிருந்து கரூருக்கு ரயிலில் வந்து, அங்கிருந்து ஏழு மைல் குதிரைவண்டியில் வாங்கல் என்ற இடத்துக்குப் போய், அங்கே காவேரியாற்றைக் கடந்து, மோகனூரிலிருந்து மறுபடியும் பதினேரு மைல் கட்டைவண்டிப் பிரயாணம் செய்து தான் நாமக்கல்லுக்கு வரவேண்டும். கரூரில் என் தமக்கை வீட்டில் இரண்டொரு நாள் தங்கிவிட்டுத்தான் வருவதோ போவதோ வழக்கம். இந்தத் தடவை ஊருக்குள் போகாமல் கரூர் ரயிலடியிலிருந்தே வாங்கலுக்குப் போய் நாமக்கல் வந்துவிட்டேன். ஏனென்றால் கரூரில் தமக்கை வீட்டுக்குப் போனால் அந்த வீட்டுக்கு எதிர் வீடாகிய முத்தம்மாள் வீட்டின் முகத்திலும் முழிக்க வேண்டி வரும்; அங்கே என் தகப்பனார் இருந்தாலும்

இருக்கலாம்; என்னுடைய தமக்கையும் மைத்துனரும் என் கலியாணப் பேச்சைப் பற்றி ஏதாவது சொல்ல நேரும் என்றெல்லாம் எண்ணிக்கொண்டு நேராக நாமக்கல்லுக்கு வந்தேன்.

வீட்டுக்குள் நுழைந்தேன். முகப்பில் என் தந்தை அவர் வழக்கமாக உட்கார்ந்திருக்கும் இடத்தில் இருந்தார். வரவேற்றார். ஆனால் வரவேற்பு வழக்கம்போல் இல்லை. கொஞ்சம் குறைவாக இருந்தது. அதைக் கவனிக்காமல் நான் உள்ளே சென்று என் படுக்கை, பெட்டி, முதலானவற்றை சரி பார்த்துவிட்டு, என் தமக்கை தங்கைமார் முதலானவர்களுடன் அளவளாவிக்கொண்டே அவர்களெல்லாம் பார்க்க வேண்டுமென்றே எனக்குக் கிடைத்த பரிசுப் புத்தகங்களையும் பொருள்களையும் பரப்பினேன். என் தமக்கை நல்ல படிப்புள்ளவர். அவர் நான் வாங்கின பரிசுகளையெல்லாம் ஒவ்வொன்ருகப் பரிசீலனை செய்துவிட்டு, அடக்க முடியாத ஆனந்தத்துடன் என் தந்தை இருந்த இடத்துக்கு ஓடி "அண்ணு! தம்பி இந்த வருஷம் எத்தனை பரிசுகள் வாங்கியிருக்கிருன் பார்த்தீர்களா?" என்று அழைத்தார். இதற்கு முன்னெல்லாம் நான் ஊரிலிருந்து வந்தால் என் தகப்பனுர் என்னோடு பேசிக்கொண்டே உள்ளே வருவார். யோக க்ஷேமங்களை ஒன்று விடாமல் விசாரித்து ஓய்ந்த பிறகுதான் என்னைவிட்டுப் போவார். அன்றையதினம் வீதி முகப்பில் உட்கார்ந்திருந்தபடியே என்னை ஒரு புன் சிரிப்புடன்

வரவேற்றவர் என்னுடன் வழக்கம்போல் வரவில்லை. பரிசுப் பொருள்களைப் பார்க்க என் தமக்கை அவரை அழைத்த பிறகுதான் வந்தார். பரிசுப் பொருள்களை யெல்லாம் ஒவ்வொன்ருகப் பார்த்தார். அந்தப் பரிசுகளில் ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கில நாடகக் கவிஞரின் இலக்கியங்கள் எல்லாம் சேர்ந்த—(Complete Works of Shakespeare) பெரிய இங்கிலீஷ் புத்தகத்தை எடுத்து வெகு நேரம் பார்த்துக்கொண்டிருந்தார். அப் புத்தகத்தின் மேலிருந்த தங்க எழுத்துகளோ அல்லது தங்க நிறமாக இருந்த அதன் ஓரங்களோ அல்லது அதன் பருமனும் பளுவுமோ அவருடைய கவனத்தைக் கவர்ந்தன. படிக்கத் தெரிந்தவர் போலவே பக்கம் பக்கமாக அதைப் புரட்டிப் பார்த்துக்கொண்டே "எல்லாப் பாடத்திலும் கெட்டிக்காரன்தான். ஆனல் 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்ற பாடத்தை மட்டும் எந்த வாத்தியாரும் உனக்குச் சொல்லித் தராமல் போயிட்டானே" என்று சொல்லிக் கொண்டே கையிலிருந்த புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு சரேலென்று போய்விட்டார். அது எனக்கு சுருக்கென்று தைத்தது. ஆனல் காட்டிக் கொள்ளவில்லை.

அன்றிரவு வெகு நேரம் சென்று வீட்டுக்கு வந்தேன். என் தமக்கை தானும் சாப்பிடாமல் எனக்காகக் காத்துக்கொண்டிருந்தார். நான் சாப்பிட்டுக் கொண்டே "அக்கா! நான் அண்ணனுக்கு எழுதியிருந்த கடிதத்தைப் பார்த்தாயா?" என்றேன்.

" ஆஹா பார்த்தேன். கற்ற வித்தையை எல்லாம் காட்டியிருந்தாயே. அவ்வளவுதானு உனக்குத் தெரிஞ்ச பாட்டுகள்?" என்று என் தமக்கை சிரித்தார்.

" அண்ணன் என்ன சொன்னுர்கள்?" என்றேன்.

" அண்ணன் என்ன சொல்லுவார்கள், 'ஏட்டுச் சுரை கறிக்கு உதவாது' என்றுதான் சொன்னுர்கள். ஏண்டா தம்பி! அண்ணன் மனசைப் புண்ணுக்குகிருய்? அவர் சொல்லுகிறபடி கேளு. அந்தப் பெண்ணைவிட எந்த ரதியைப்போய் பிடிக்கப் போகிருய்? அவள்தான் உனக்கு, நீதான் அவளுக்கு—என்று ரொம்ப நாளைக்கு முன்னுலேயே முடிச்சுப் போட்டாய்விட்டது. பேசாமல் ஒத்துக்கொள்ளு என்ருர்.

" அந்தப் பெண் எனக்கு வேண்டாம். வேறு பெண் பார்க்க உத்தேசமில்லையா?" என்றேன்.

" ஏன் அந்தப் பெண் வேண்டாம்? அழகில்லையா? குணமில்லையா? அவளுக்கு என்ன குறைச்சல்? எதற்காக வேறு பெண்ணைப் பார்க்க வேண்டும்? சும்மா சிறுபிள்ளை இட்ட வெள்ளாமையாகப் பேசாதே. நீ தவமிருந்து பெற்ற பிள்ளை, மூத்த மகன், புத்திசாலி, சொன்னபடி கேட்பாய் என்று அண்ணன் எவ்வளவு ஆசையாகவும் அருமையாகவும் உன்னை வளர்த்து படிக்க வைத்தார்கள்! இப்ப இப்படிச் செய்கிருயே. உன் கடிதம் வந்த நாளாக அண்ணன்

ஊணுறக்கமில்லாமல் புலம்பிக்கொண்டேயிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தை வருகிறவர்களிடத்திலெல்லாம் காட்டிக் காட்டி வருத்தப்படுகிறார்கள். வேண்டாம் ராமு! அண்ணன் மனசை நோகப் பண்ணாதே" என்று என் தமக்கை எனக்கு வெகு நேரம் புத்தி புகட்டி என்னை மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். அதற்கு மேல் எனக்குச் சாப்பாடு செல்லவில்லை. சாப்பாட்டை முடித்துக்கொண்டு என் தமக்கைக்கு எந்தவித பதிலும் சொல்லாமல் எழுந்தேன்.

"வருகிற வைகாசிக்குள் கலியாணத்தை நடத்திவிடுவதாக அண்ணா தீர்மானித்துப் பெண் வீட்டாருக்கும் சொல்லிவிட்டார்கள். நீ ஒன்றும் அதற்கு எதிராகப் பேசி அவருடைய வருத்தத்துக்கு இடங்கொடுத்துவிடாதே" என்று என் தமக்கை சொன்னதைக் கேட்டுக்கொண்டே போய்ப் படுக்கையில் விழுந்தேன். கோபமும் கொதிப்பும், அழுகையும் ஆத்திரமும் குமுறிக் கொண்டு எழுந்தன. நான் அவ்வளவு பாடுபட்டு எழுதிய அந்தக் கடிதம் பயனற்றுப் போனது மட்டுமல்லால் பரிகாசத்துக்கும் இடமாகிவிட்டதைப் பார்த்து எனக்கு வந்த எரிச்சலுக்கு எல்லையே இல்லை. இப்படிக் கட்டாயப்படுத்திக் கசக்கிக் கலியாணம் செய்து வைக்கிற மூடப்பழக்கத்தை உடனே தகர்த்தெறிய வேண்டுமென்று தவித்தேன். நான் சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்னாலேயே அந்தப் பெண்ணை மணந்து கொள்ள எனக்கு மனமில்லையென்பதை

வெளிப்படுத்தியிருந்தும், என் மைத்துனர் திருச்சிக்கு வந்து என்னிடம் பேசினபோது அவ்வளவு கண்டிப்பாக அவரிடம் என் கருத்தைச் சொல்லியனுப்பியிருந்தும், கடிதத்தில்' இவ்வளவு தெளிவாக என் எண்ணங்களை எழுதியிருந்தும், என் தந்தை அந்தப் பெண்ணையே என் தலையில் கட்டத் தீர்மானித்துக் கடைசியாக, எனக்கு ஒரு சமாதானமாவது சொல்லிவிட்டு, எனக்குத் தெரியப்படுத்தி விட்டாவது பெண் வீட்டாருக்கு நிச்சயம் சொல்லாமல், அவராகவே நிச்சயம் பேசி விட்டதை நினைத்து, நினைத்து மிகவும் அவமானப்பட்டுவிட்ட உணர்ச்சியோடு துடித்துக் கொண்டு படுத்துக்கிடந்தேன். என்ன செய்வதென்று புலப்படவில்லை.

என் தந்தையை நினைத்தாலோ அவர்மேல் எனக்கு வந்த கோபத்தைக் காட்டிலும் பச்சாத்தாபமே அதிகமாயிருந்தது. உண்மையில் அவர் என்னை மிகவும் அருமையாக வளர்த்தார். அந்த எண்ணம் என் மனதில் இருந்துகொண்டே இருந்தது. அவ்வளவு அருமையாக என்னை வளர்த்த அவர் இந்த விஷயத்தில் என்னை இவ்வளவு அலட்சியம் செய்துவிட்டாரே என்ற வேதனை ஒரு புறம் இருந்தாலும் 'உன் கடிதம் வந்ததுமுதல் அண்ணன் ஊணுறக்கமில்லாமல் புலம்பிக் கொண்டிருக்கிறர்' என்று என் தமக்கை சொன்னது என்னை மிகவும் தளர்த்தி விட்டது. என்னுடைய மனைவியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை என்னுடையது என்பதைத்

தகப்பனரிடத்தில் தர்க்கம் செய்து, அவருடைய மனதை மாற்றலாம் என்று எண்ண இனி இடமில்லை என்று கண்டேன். அவரைப்பற்றிய மட்டில் எனக்கு அனுதாபம் உண்டாயிற்று. ஆனல் முத்தம்மாளை மணந்து கொள்ளமட்டும் ஒத்துக்கொள்ள மனம் இடந்தரவில்லை.

அடுத்த பத்துநாட்களுக்குள் பல நண்பர்கள் என்னைப் பார்க்க என்னைத் தேடி வந்தார்கள். நான் போய்க் கண்டுகொள்ள வேண்டிய சில பெரிய மனிதர்கள்கூட என்னைக் கண்டுகொள்ள வந்தார்கள். வந்தவர்களில் ஒருவராவது என் கலியாணத்தைப் பற்றியும் அந்தப் பெண்ணைப் பற்றியும் பிரஸ்தாபிக்காமல் போகவில்லை. எல்லாம் என் தந்தையின் வேலை. யார் யாரைக் கொண்டு எனக்கு சொல்லச் செய்யலாம் என்று என் தந்தை எண்ணினரோ அத்தனை பேரும் வந்து எனக்கு புத்தி சொல்லிப் போனர்கள். அது மட்டுமல்ல, எனக்குப் பல இடங்களிலிருந்து எழுத்து மூலமான இதோப தேசங்களும் வந்தன. அவற்றுள் ஒன்று என் சிறிய தாயார் மகன் (அப்போது போலீஸ் சப்பின்ஸ்பெக்டராக இருந்த) ஸ்ரீ ஐயாக்கண்ணு பிள்ளையிடமிருந்து வந்தது.

ஐயாக்கண்ணு பிள்ளை கோயமுத்தூரில் எங்கள் வீட்டில் படித்துக்கொண்டிருந்தவர். என்னுடைய படிப்பை மிகவும் கவனித்துக் கொண்டவர். எனக்கு குருமாதிரி. அவருடைய கண் காணிப்பினலும் கண்டிப்புத் தண்டிப்புகளாலும்தான் நான் என்னுடைய படிப்பில்

பரிசுகள் வாங்கத் தகுந்த கெட்டிக்காரன் ஆனேன். அவரிடத்தில் எனக்கு அபரிமித மான நன்றியும் மரியாதையும் உண்டு. அவர் அந்த முத்தம்மாளின் மூத்த தமக்கை அரிய நாயகத்தம்மாளின் கணவர். அவர் பல காரணங் களை எடுத்துக்காட்டி நான் அந்தப் பெண்ணைத் தான் மணந்துகொள்ள வேண்டுமென்று மன் ருடிக் கேட்டுக்கொண்டு எழுதியிருந்தார்.

கடைசியாக என்னுடைய தமிழ் ஆசான் ஸ்ரீ ஆனையப்ப முதலியார் என்னைப் பார்க்க வந்து இரண்டுமணி நேரம் இதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார். அவரிடத்தில் நான் மிகவும் பயபக்தியுள்ளவன். எனக்கு வெகு தர்மசங்கட மாகப் போய்விட்டது. அவர் எவ்வளவோ விநய மாகச் சொல்லியும் அவருக்குத் திருப்தியான பதில் சொல்ல என்னுல் இயலவில்லை.

இப்படியாக என் விடுமுறைக்காலம் முடி வடைந்து நான் மறுபடியும் பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டிய தினத்துக்கு முதல் நாள் இரவு பதிஞெரு மணிக்குமேல் என் தந்தை நான் படுத் திருந்த அறைக்குள் வந்தார். அது என் பிரத் யேக அறை. வேறு யாரும் அதில் இல்லை. உள்ளே வந்த என் தந்தை என் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு எனக்கு நேராக நின்ருர். நான் திடுக்கிட்டு அவர் என்ன சொல்லப் போகி ருரோ என்று அவர் முகத்தைப் பார்த்தேன் அவருடைய உதடுகள் ஏதோ சொல்லத் துடித் தன. ஆனுல் வார்த்தை வரவில்லை. கண்களில்

நீர் கலங்குவதைக் கண்டேன். வெகு பிரயாசத்துடன் பேச ஆரம்பித்து திக்கித் திணறி "என்னுடைய கடைசி காலத்தில்..............உன்னால் தான்.........கொஞ்சம்......சுகப்படலாம் என்று .........நம்பியிருந்தேன்......என்னைக் கண்டால் உனக்கு.........எட்டிக்காயாகப் போச்சு......... இனிமேல் எனக்கு என்ன இருக்கிறது?" என்று தேம்பித் தேம்பி அழுதுகொண்டே வேறொன்றும் சொல்லாமல் வெளியே போய்விட்டார். என் தந்தை கண்ணீர் விட்டதை நான் கண்டதே இல்லை. எவ்வளவு சங்கடம் நேர்ந்தாலும், அவருடைய பேச்சுகள் உருட்டும் மிரட்டுமாகத்தான் இருக்குமேயல்லாமல், அச்சக் குறியோ அழுகைக் குரலோ காட்டினதில்லை. இப்படி அவர் அழுது கொண்டு என் அறையைவிட்டுச் சென்றது என்னை மிகவும் கலக்கிவிட்டது.

அடுத்த வைகாசி மாதம்—கீலக வருஷம் வைகாசி மாதம் இருபத்தி ஓராம் தேதி புதன் கிழமை பூசமும் ரிஷபமும் சேர்ந்த முகூர்த்தத்தில் எனக்கும் அதே முத்தம்மாளுக்கும் நாமக்கல்லில் விவாகம் நடந்தேறியது. அதற்குப்பின் ஐந்தாறு மாதத்துக்குள்ளாகவே எங்கள் இல்லற வாழ்க்கையும் ஆரம்பமாயிற்று. மூன்று வருடங்களுக்கு முன்னாலேயே முத்தம்மாள் கோயமுத்தூரில் இருந்தபோது என்னிடத்தில் எவ்வளவு அன்பும் ஆசையுமாக நடந்து கொண்டாளோ அதைவிட அதிகமான ஆர்வத்தோடுதான் என்னிடம் நடந்துகொண்டாள். நானும் மூன்று வருஷங்

களுக்கு முன்னால் அவளிடம் எவ்வளவு அருவருப்புக் காட்டினேனோ அதைவிட அதிகமான அருவருப்புத்தான் காட்டினேன். அன்பு செய்த அவளிடம் நான் அன்பில்லாமல்தான் நடந்து கொண்டேன் என்பதை எழுதுவது மிகவும் வெட்கக் கேடான விஷயம்தான். இருந்தாலும் நடந்ததை அப்படியே சொல்லுகிறேன்.

என் தந்தைக்குப் படுக்கை விரித்துக் கொடுத்து மற்றும் அவருக்கான பலவித பணி விடைகளையும் செய்துவிட்டு, வீட்டு வேலைகளை முடிக்க என் தமக்கைக்கு வேண்டிய ஒத்தாசைகளையும் செய்துவிட்டு இரவு பத்துமணிக்குமேல் என் மனைவி என் அறைக்குள் வருவாள். ஒரு கையில் நான் குடிப்பதற்காக சூடான பசும் பாலும் இன்னொரு கையில் குளிர்ந்த ஜலம் நிறைந்த செம்பும் இருக்கும். பெரும்பாலும் அவள் வரும்போது நான் தூங்கிக்கொண்டிருப்பேன். விழித்துக்கொண்டிருந்தாலும்கூட அவள் வருகையை லக்ஷியம் செய்யாமலும், அவள் பக்கமாகத் திரும்பிக்கூடப் பார்க்காமலும் படுத்திருப்பேன். பாலை மேஜையின்மேல் வைத்து அதை ஆற்றுவாள். ஆறின பாலைக் கையில் எடுத்துக் கொண்டு "அத்தான்! பால்_ரொம்ப ஆறிப் போகுது" என்பாள். நான் விழித்துக்கொண்டிருந்து, பாலின்மேல் எனக்கு விருப்பமும் இருந்தால் கட்டிலின் மீது உட்கார்ந்தபடியே பாலை வாங்கிக் குடித்துவிட்டுப் பாத்திரத்தைக்கூட திருப்பி அவளிடம் கொடுக்காமல் நானே மேஜை

யின் மீது வைத்துவிட்டு அவள் நிற்கிற பக்கத்துக்கு எதிர்ப்புறமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு படுத்துக் கொள்வேன். ஒருக்கால் அவள் பாலை ஆற்றியபின் எனக்குக் கொடுக்க வரும் சமயத்தில் நான் தூங்கிக் கொண்டிருந்தால், என்னை மெதுவாகத் தொட்டு அசைத்து எழுப்புவாள். அப்படி என்னை அவள் தீண்டும் போது, நான் அவளிடத்தில் நடந்துகொள்ளும் அன்பில்லாத மாதிரியைக் கண்டு அஞ்சியோ, அல்லது 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் கணவனே தெய்வம்' என்று பழகிய மனப்பான்மையினாலோ என்னுடைய முகத்தை யாவது உடலையாவது தீண்டாமல் பாதங்களைத் தான் தொட்டு அசைப்பாள். பல சமயங்களில் எனக்குப் பால் வேண்டாதிருக்கும். 'வேண்டாம்' என்பதைக்கூட வாயாற் சொல்லாமல் கைசாடை காட்டிவிட்டுப் படுத்துக்கொள்வேன்.

பாலைப் பற்றிய பிரச்னை தீர்ந்த பிற்பாடு என்னை எழுப்பவோ, பேசவோ வேறு வியாஜ மில்லாமல் மேஜையின் ஓரமாகக் கட்டிலிற்கு அருகில் முத்தம்மாள் நெடுநேரம் நின்று கொண்டேயிருப்பாள். கால் கடுக்க அவள் நின்று கொண்டிருப்பதை அறிந்தும் அவள் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டேன். அவளாக அலுத்துப்போய் அப்படியே கட்டிலின் கீழ் உட்கார்ந்து வெறுந்தரையில் முன்றானையை விரித்துக் கையைத் தலையணையாக வைத்துக்கொண்டு படுத்துக்கொள்வாள். சிறு பெண்ணாயிற்றே என்று

என் தமக்கை சீவிப்பின்னிவிட்ட ஜடையும் அதில் சூட்டியிருந்த பூச்செண்டும் பூமியிற் புரளும். சிற்சில நாட்களில் என்னையறியாமல் எனக்குக் கருணை பிறந்து என் காலுக்கு வைத்திருக்கும் தலையணையை அப்படியே காலால் தள்ளி விடுவேன். அதை முத்தம்மாள் தலைக்கு வைத்துக் கொள்வாள்.

ஒருநாள் அப்படி என் கட்டிலிற்கருகில் வழக்கத்துக்குமேல் அதிக நேரம் நின்று கொண்டிருந்தாள். மேஜையின் மேலிருந்த விளக்கு மட்டுப் படுத்தப்படாமல் பிரகாசித்துக் கொண்டிருந்தது. எனக்குத் தூக்கம் வரவில்லை. வேண்டா வெறுப்புடன் திரும்பிப் பார்த்தேன். முத்தம்மாள் கன்னங்களில் மாலைமாலையாகக் கண்ணீர் வழிந்தோடுவதைக் கண்டேன். இப்படி எத்தனை நாள் அழுதிருப்பாளோ அறியேன்.

"எதற்காக இங்கே அழுதுகொண்டு நிற்கிருய்?.........யார் உன்னை என்ன செய்துவிட்டார்கள்? அழுவதானுல் வெளியே போய் அழு" என்று அலட்டினேன்.

மூச்சுப்பேச்சில்லாமல் உடனே வெகுஅவசரமாக முகத்தைத் துடைத்துக்கொண்டு தானே வழக்கம்போல் விளக்கு வெளிச்சத்தைக் குறைத்துவிட்டு கீழே படுத்துக்கொண்டாள்.

ஒருநாள் இரண்டுநாள் அல்ல, ஒன்பது மாத காலம் ஏறக்குறைய தினந்தினம் இதே நாடகம் நடந்து வந்தது. வீட்டிலுள்ள வேறு யாருக்கும்

இது தெரியாது. பகற் காலங்களில் முத்தம்மாள் இதற்காக முகங்கோணினதில்லை. என் தமக்கை தங்கை முதலான பெண்களிடத்திலும் அதைப் பற்றிப் பேசினதில்லை. வீட்டுக்காரியங்களில் எப்போதும் போல என் தந்தையும் தமக்கையும் சந்தோஷப்படும்படி நடந்து கொள்ளுவாள். நான் விரும்பாவிட்டாலும் அவளாக வந்து எனக்குச் செய்கிற பணிவிடைகளையும் வெகு ஆசையோடும் பயபக்தியோடும் செய்வாள். நானும் அவளும் பேசிக்கொள்ளாமல் இருப்பதை இளந்தம்பதிகள் வழக்கமாக நடந்து கொள்ளுகிற மாதிரியான வெறும் லஜ்ஜை தானுக்கும் என்றே எல்லாரும் எண்ணிவிட்டார்கள். என் தந்தை அந்த முத்தம்மாளே தன் மருமகளாக வந்துவிட்ட மகிழ்ச்சியுடன் முத்தம்மாளை வெகு பரிவோடு பாராட்டுவார். என் தமக்கை என் தாயாரைப் போலவே எங்களை வளர்த்தவள். அதனால் முத்தம்மாளுக்கு அவள் சில சமயங்களில் மாமியாரைப் போலவும் பல சமயங்களில் நாத்தியைப் போலவும் அருட்டி மருட்டி அதிகாரம் நடத்துவார். என்றாலும் முத்தம்மாளிடத்தில் மிகவும் அபிமானமுள்ளவர் அவரும்கூட நானும் முத்தம்மாளும் சகஜமாக இருந்து வருவதாகவே எண்ணிவிட்டார்.

நான் இயற்கையில் மிகவும் இனிமையான இளைஞன். பள்ளிக்கூடத்திலும் பந்தாடும் இடங்களிலும் என்னுடைய தோழர்கள் எவரிடத்திலும் மிகவும் அன்பாக நடந்து கொள்வேன்

விளையாட்டும் வேடிக்கையுந்தான் எனக்கு விருந்து. சிரிப்பும் களிப்புந்தான் என் சிநேகம். பரிகாசமும் கேலியுந்தான் என் பழக்கம். உத்ஸாகமும் உல்லாசமும் எனக்கு மிகவும் உறவு. அருவருப்பு காட்டுவது எனக்கு வெகு அன்னியம். அப்படிப்பட்ட நான், அந்த இளம் பிராயத்தில் எந்தவிதமான குறையும் குறிப்பிட முடியாத என் மனைவியிடம், ஏன் அவ்வளவு மரமூஞ்சியாக நடந்து கொண்டேன் என்பது இன்னும் எனக்கு விளங்காத ஒரு மர்மம்.

ஒருநாள் இரவு நான் ஒரு நாடகம் பார்த்து விட்டு இரண்டு மணிக்குமேல் வீட்டுக்கு வந்தேன். என்னுடைய படுக்கையறையின் கதவு தாழிடப்பட்டிருந்தது. கதவைத் தட்டினேன் முத்தம்மாள் உடனே கதவைத் திறந்தாள் உள்ளே சென்று உடைகளைக் களைந்துவிட்டு கட்டிலின்மேற் படுக்கப் போனேன். முத்தம்மாள் தலையிலிருந்த மல்லிகைச் செண்டு மெத்தையின்மேல் கிடந்தது. அதை எடுத்து மேஜையின் மேல் வீசிவிட்டுக் கட்டிலில் உட்கார்ந்தேன். உடனே நான் திடுக்கிடும்படி முத்தம்மாள் ஒரு கேள்வி கேட்டாள். நான் நாடகத்துக்குப் போயிருந்த போது தனியே இருந்த அவள், தன் நிலைமையைப்பற்றி எண்ணியெண்ணிப் பார்த்து என்னிடம் கேட்டுவிட வேண்டுமென்று முன்னாலேயே தீர்மானித்திருந்தாளோ, அல்லது படுக்கை மீதிருந்த புஷ்பச் செண்டை நான் எடுத்தெறிந்த பின்னால்தான் அந்த எண்ணம் பிறந்ததோ.

“அத்தான் பேசவே மாட்டேனென்கிறீர்களே, நான் என்ன தப்பு செய்தேன்?” என்று கேட்டே விட்டாள்.

சரியான பதில் சொல்லத் தெரியாமல் திண்டாடிப் போனேன். பதிலே சொல்லாமல் இருந்து விடவும் மனம் இடங்கொடுக்கவில்லை. வழக்கமான சிடுசிடுப்பும் எனக்கு வரவில்லை. பதில் சொல்ல முடியாத கேள்வியைக் கேட்டு அவள் என்னை மடக்கிவிட்டதாக இருக்கக்கூடாது என்ற எண்ணமும் எனக்கு வந்தது. என் திறமைகளையெல்லாம் சேர்த்து வார்த்தைகளைத் தேடிப் பிடித்தவன்போல “உன் தப்பு ஒன்றுமில்லை. எல்லாம் என் தப்புத்தான். உனக்கு இப்படி இங்கே இருப்பது வெகு சங்கடமாய்த்தான் இருக்கும் வேணுமானால் உங்கம்மா வீட்டுக்குப்போ. நாளைக்கே அனுப்பி வைக்கிறேன்” என்று அவள் முகத்தைக்கூட பார்க்காமல் முனகினேன். நான் சொல்லி வாய்மூடுவதற்குமுன் “அத்தான்! அத்தான்! வேண்டாம் வேண்டாம்” என்று கெஞ்சிக்கொண்டே கட்டிலின் கீழ் எனக்கு நேராகத் தரையில் உட்கார்ந்து என்னுடைய இரண்டு பாதங்களையும் தன் இரண்டு கைகளால் பிடித்துக்கொண்டு “வேண்டாம் அத்தான். நீங்கள் என்னோடு பேசாவிட்டாலும் போகுது என்னைத் துரத்திவிட எண்ண வேண்டாம்” என்று தொழுகையும் அழுகையும் கலந்த தொனியில் கெஞ்சினாள்.

சட்டென்று அவள் பக்கம் திரும்பிப் பார்த்

தேன். அவளுடைய முகம் அண்ணாந்த வண்ண மாய் என்னுடைய கடாட்சத்தை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தது. மேஜையின் மீதிருந்த 'டிட்மார்' விளக்கின் வெளிச்சம் முழுவதும் அவள் முகத்தில் விழுந்தது. அவளுடைய விசால மான நெற்றியில் வியர்வைத் துளிகள் மின்னின கண்களில் நீர் அரும்பிக்கொண்டிருந்தது. அவ ளுடைய முகத்துக்கு நேராக இருந்த விளக் கொளியின் பிரதிபிம்பங்கள், கலங்கிக் கொண் டிருந்த அவளுடைய இரண்டு கண்களிலும் இரண்டு நெருப்புக் குண்டங்கள் கொந்தளிப்பது போல என்னைக் குத்தின. வேதனையை வெளி யிடவே விரிந்த உதடுகளுக்கிடையில் பளிங்குத் துண்டுகளைப் போன்ற அவளுடைய பற்கள் சிரிக்கும்போது தெரிவதுபோலத் திகழ்ந்தன. என்னமோ அறியேன் அந்தப் பரிதாபமான காட்சி என் கருத்தைக் கவர்ந்தது. சற்றுநேரம் அவளையே உற்றுப் பார்த்தேன். அவ்வளவுதான். உடனே என்னுடைய உள்ளத்தில் ஒரு புயல் புறப்பட்டது. ஒரு இடி இடித்தது. ஒரு மின் னல் மின்னிற்று. ஒரு ஒளி உண்டாயிற்று. என் மனக்கண்ணை மறைத்துக்கொண்டிருந்த ஒரு திரை விலகிற்று. அகந்தை அழிந்தது. இறு மாப்பு இடிந்தது. துவேஷம் தொலைந்தது. அரு வருப்பு அகன்றது. பள்ளிக்கூடப் படிப்பும், பட்டமும், பரிசுப் புத்தகங்களும் கற்பிக்காத ஒரு பாடம் தானாகவே என் உள்ளத்தில் உதித்தது. அதுவரையிலும் நான் காணத்தவறிய ஒன்றைக்

கணநேரத்தில் கண்டு கொண்டேன். எனக்கு முன்னால் அடிபணிந்து அபயங்கோரிய முத்தம் மாளின் முகத்தில் ‘பெண்மை’ என்னும் பெரும் பொருளைக் கண்டேன். ‘அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை’ என்ற அபூர்வ குணத்துக்கும் அதிகப்பட்ட தென்று சொல்லும்படி ‘தன்னை இகழ்ந்தவனைச் சரணடைந்த அவளுடைய பெருந்தன்மையும் அப்படிப்பட்ட ஒரு பெண் ரத்தினத்தை அது நாள் வரையிலும் அவமதித்து நடந்துகொண்ட என் அற்பத்தனமும் எனக்குப் புலனாயின.

மனம் என் உத்தரவில்லாமலே மாறிவிட்டது அருளோ, அன்போ, ஆசையோ; கருணையோ, காதலோ, காமமோ என்று பெயர் சொல்ல முடியாத ஒரு பிரியம் அவளிடம் உண்டாயிற்று. நான் உடனே குனிந்து அவளுடைய இரண்டு கரங்களையும் பிடித்து, எழுந்திருக்கச் செய்து, முன் மேஜையின்மேல் வீசியெறிந்த மலர்ச் செண்டை எடுத்துக் கொடுத்து, சூடிக்கொள்ளச் செய்து வெகு பரிவோடு என் பக்கத்தில் உட்கார வைத்தேன். எங்கள் கலியாணத்துக்கு முன்னா லிருந்தே என்னை முத்தம்மாள் கணவனாகவே கருதிவந்திருக்கிறாள். ஆனால் எனக்கு அவள் அன்றுதான் மனைவியானாள்.

அடுத்த பதினான்கு ஆண்டுகள் எனக்கு மிகவும் செல்வாக்கான காலம். அதில் முத்தம் மாள் என் இதய ஜோதியாகவே இருந்தாள். டில்லிக்குச் சென்று சக்ரவர்த்தியிடத்தில் தங்க

மெடல் பரிசுபெற்ற புகழும், தொழில் முறையில் நல்ல சம்பாதனையும், காங்கிரஸ் மேடைகளிலும், இலக்கியக் கழகங்களிலும், நல்ல பேச்சாளி என்ற பெயரும் எனக்குப் பெருகின காலம் அது.

அந்தக் காலங்களில் எனக்குப் பொறுமைக்கு ஒரு போதினி போலவும், அன்பிற்கு ஒரு ஆசான் போலவும் உதவினவள் முத்தம்மாள். காந்தீயத்தைப் பிரசங்கம் செய்யத்தகுந்த சாந்தியை எனக்குத் தந்தவள் அவள். கதராடையைத்தான் கட்டிக்கொள்ள வேண்டும் என்ற கொள்கையை எனக்கும் முன்னால் ஏற்றுக்கொண்டவள் அவள். நான் தினந்தினமும் ராட்டை நூற்கத் தவறினாலும் தான் தவறமாட்டாள். அவளிடம் யார் எவ்வளவு சினந்துகொள்ள நேர்ந்துவிட்டாலும் சிரிப்பதன்றி வேறொன்றும் செய்யத் தெரியாதவள். மிகவும் பரிசுத்தமான பழக்கங்களுள்ளவள். வாய் தவறியும் தீய சொல் வராது, விலைகுறைந்த உடைகளையும் வெகு அழகுற அணிவாள். விடியற்காலம் ஐந்து மணிக்கே எழுந்து நீராடி நெற்றி நிறைய லேசாகத் திருநீறணிந்து நடுவே ஒரு குங்குமத் திலகமிட்டுக்கொண்டு வந்து என் பாதங்களைத் தீண்டி ஸ்னானத்துக்கு அழைப்பாள். என்னுடைய பிராம்மண நண்பர்கள் வீட்டில் வெகு ஆசாரம் பார்க்கிறவர்கள்கூட அவளிடம் வெகு நெருங்கிப் பழகுவார்கள். என்னுடைய பள்ளித்தோழரான பார்ப்பன நண்பரொருவர் எனக்கும் என் மனைவிக்கும் விருந்திட்டார். எங்களுடன் அவரும் சமபந்தியாகச் சாப்

பிட்டார் (அந்தக் காலத்துக்கு, இது அபூர்வம்). அப்படிச் சாப்பிடும்போது "டேய் ராமலிங்கம்; நீ முத்தம்மாள் புருஷன் என்பதற்காகவாக்கும் உன்னை ரேழியில் வைத்துச் சோறு போடாமல் இங்கே வைத்துச் சாப்பாடு பரிமாறுகின்றோம்" என்று சொன்னது இன்னும் நினைவிலிருக்கிறது. அவ்வளவு சுசிகரமுள்ளவள் அவள்.

சகல விதத்திலும் எனக்கு ஒரு சம்பத்தாக விளங்கிய அப்படிப் பட்ட அந்த முத்தம்மாள் என்னை எப்படித் தவிக்கச் செய்து விட்டாள் என்பதைக் கேளுங்கள். அந்த நிகழ்ச்சியை சொல்லத்தான் இந்தக் கதையை ஆரம்பித்தேன். அத்துடன் அந்த நிகழ்ச்சியிற் கலந்துள்ள ஒரு அதிசயத்தையும் கவனிக்க வேண்டும் என்பது என் கருத்து. அந்த விஷயத்தை மட்டும் உடனே சொல்லிவிடாமல் இது வரையிலும் எழுதி வந்தது சற்றே மிகை என்று தோன்றினும், முத்தம்மாளைப் போன்ற அருமையான குணங்கள் அமைந்த எத்தனையோ பெண்மணிகளின் சரித்திரங்கள் எழுதுவாரின்றி மறைந்து போய்விடுகிற நம்முடைய சமுதாயத்தில், உயர்ந்த பெண்களுக்குக்கூட அவர்களுக்கு உரிய பெருமையைக் கொடுக்கத் தவறிவிடுகின்ற பிழையை நினைத்தே இப்பகுதியை இவ்வளவு விரிவாக எழுத விரும்பினது. உண்மையில் இந்தப் பெண்ணின் பெருமைகள் இன்னும் அதிகமாகச் சொல்ல வேண்டிய அநேகம் உள்ளவை.

உற்றாரும் நட்பினரும் ஊராரும் பாராட்டும்

படி ஏறக்குறைய பதினன்கு வருஷம் நானும் முத்தம்மாளும் கருத்தொருமித்த ஆதரவுடன் இல் வாழ்க்கை நடத்திேனும். ஆனல் எங்களுக்குக் குழந்தை இல்லே. இதனல் என் தந்தைக்கும் தமக்கைகளுக்கும் மிகுந்த மனக்குறை. அந்தக் குறையைப் போக்கிக்கொள்ள பலவிதமான மணி, மந்திர, மருந்துகளும் கையாளப்பட்டன. பலனில்லே.

என் தந்தைக்கு ஜோஸ்யத்தில் வெகு நம் பிக்கை. நாள் நட்சத்திரம் பார்க்காமல் எந்தக் காரியத்திலும் இறங்கமாட்டார். எனக்கு சந் தான சம்பத்து உண்டா இல்லேயா என்பதை அறிய என்னுடைய ஜாதகத்தைப் பல ஜோசியர் களிடம் பார்த்தார். எல்லா ஜோசியர்களும் எனக்கு முதல் மனேவியிடத்தில் மக்கட் பேறு இல்லேயென்றும் இரண்டாவது மனேவியிடத்தில் தான் புத்திர பாக்கியம் கிடைக்குமென்றும் சொல்லிவிட்டார்கள். எனக்குக் குழந்தை இல் லேயே என்ற விசாரமே உதிக்கவில்லே. ஜோசி யத்தைப் பற்றிய ஆசையும் இருக்கவில்லே. தகப் பனர் திருப்பித்திருப்பி ஜாதகம் பார்ப்பதையும் பரிகாசக் கண் கொண்டே பார்ப்பேன்.

இந்தச் சமயத்தில் என் மனேவியின் தங்கை சவுந்திரம் என்னும் பெண் பருவமடைந்து கலி யாணத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். அவள் பருவமடைவதற்கு முன் அவளே அவ ளுடைய அத்தை மகன் ஒருவருக்கு மணம்

செய்து கொள்வதாக ஒரு உறுதியான பேச்சு இருதரத்திலும் உலவிக்கொண்டிருந்தது. அந்த மாப்பிள்ளையையே எதிர்பார்த்து என் மாமனுர் வீட்டாரும் வேறு வரன்களை வரவேற்கவில்லை. ஆனுல் பெண் வீட்டார் எதிர் பார்த்தபடி பிள்ளை வீட்டார் இந்தப் பெண்ணை மணந்து கொள்ளப் பிரியம் காட்டவில்லை. கடைசியாக என் மாமனுரே அவர்களைக் கேட்டார். அவர்கள் இந்தப் பெண்ணை மணந்து கொள்ள மனமில்லை யென் பதைச் சொல்லிவிட்டார்கள்.

அதன் பிறகு இந்தப் பெண்ணை எனக்கு இளையாளாகக் கட்டி வைத்துவிட வேண்டுமென்று என் தந்தைக்கு இச்சை பிறந்தது. இந்த விஷயத்தை என்னிடத்திற் சொல்லுவதற்கு முன்னுல் என் மனைவியிடம் சொல்லி அவளை வசப்படுத்திக் கொண்டார். இயற்கையான பெருங் குணத்தினுலும், இளையாளாக வரப் போகிறவள் தன்னுடைய தங்கை என்பதனுலும், முத்தம்மாள் இதற்குச் சம்மதித்தது மட்டுமல்லாமல் சந்தோஷப்படலானுள்.

மெள்ள மெள்ள இந்தப் பேச்சை எனக்குச் சொல்லத் தலைப்பட்டாள். என் தந்தைக்கு இந்த எண்ணம் இருப்பதை முதல் முதல் நான் அறிந்தது முத்தம்மாள் மூலமாகத்தான். ஆரம்பத்தில் இது என் தந்தையின் விருப்பம் என்று சொல்லி வந்த என் மனைவி கொஞ்சங் கொஞ்சமாக அது அவளுடைய ஆசையென்றே பேசலானுள். சில

நாள் வரையிலும் இதைப்பற்றி அவள் பேசும் போதெல்லாம் நான் அவளுடன் சிரிப்பும் களிப்புமாக இதை ஏளனம் செய்துவிட்டு, இரண்டு மனைவிகளுடன் வாழ்க்கை நடத்துவதில் எனக்கு இச்சையில்லை என்பதை இலேசாகச் சொல்லி முடிப்பேன்.

குழந்தை இல்லையென்ற காரணத்திற்காக இன்னொரு பெண்ணை மணந்துகொள்ள எனக்குத் துளிகூட இஷ்டமில்லை. அது ஒழுக்கக் குறைவு என்பது என் உறுதியான கொள்கை. மேலும் காந்தீயத்தின் தத்துவங்களை மிகவும் நன்றாகப் பிரசங்கம் செய்யக்கூடியவன் என்ற என் கீர்த்தியை அது கெடுக்கும் என்பதும் அப்போது எனக்கிருந்த எண்ணம். அந்த எண்ணங்களை அழுத்தமான வார்த்தைகளால் கண்டிப்பாகச் சொல்லிவிடாமல் பலநாள் வரையிலும் என் மனைவியுடன் அதைப் பற்றிப் பரிகாசமாகவே பேசி வந்ததால், சிறுகச் சிறுகச் சொல்லி என்னைச் சரிப்படுத்திவிடலாம் என்று அவள் எண்ணிவிட இடங்கொடுத்து விட்டேன். ஏனென்றால் முத்தம்மாள் எப்போதும் என் குறிப்பறிந்து நடந்துகொள்ளக் கூடியவளானதால் அவளிடத்தில் கண்டிப்பாகவோ கடுகடுப்பாகவோ பேசவேண்டிய நெருக்கடி நேர்ந்ததே இல்லை. பிணக்கம் என்ற பேச்சே எங்களுக்குள் இருந்ததில்லை. எப்போதும் களிப்பும் கலகலப்புந்தான். தேள் கொட்டி அழுது கொண்டிருந்

தாலும் என்னைக் கண்டவுடன் சிரித்துவிடுவாள். அவ்வளவு அன்பு. அதனால் அவளைக் கண்டிக்க வில்லை.

முத்தம்மாள் என்னை வற்புறுத்த ஆரம்பிக்கு முன்னாலேயே என் தந்தை என் மாமனாரிடம் இந்த விஷயத்தை வெளியிட்டு சவுந்திரத்தை எனக்கே இளையாளாக மணஞ் செய்து விடுவதாக உறுதி சொல்லிவிட்டார். என் மாமனாருக்கு என்னிடத்தில் ஒரு தனி மதிப்பு. அதற்குப் பல காரணங்கள். அவற்றுள் மிகவும் சிறந்த ஒரு காரணம் அவருக்கு கம்பராமாயணத்தின் மேலிருந்த அளவற்ற ஆசை. கம்பராமாயண வித்வான்களை வருஷக்கணக்காக வீட்டில் வைத்து ஆதரிப்பார். நான் கம்பன் பாடல்களை வெகு உருக்கமாகப் பாடி உபந்யசிப்பதில் அவருக்கு வெகு ஆனந்தம். தனக்காகக் கம்பராமாயணம் சொல்லும்படி மாப்பிள்ளைக்கு உத்தரவிடுவது மரியாதை அல்லவென்று எண்ணி, அவர் வேறு யாரைக் கொண்டாவது என்னை கேட்கச் செய்வார். நான் குறிப்பறிந்து அவருடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்வேன். அதில் அவர் மிகவும் பெருமை கொள்வார்.

தன்னுடைய கடைசிப் பெண்ணான சவுந்திரத்தையும் எனக்கே கொடுத்துவிடுவதில் அவருக்கு பரம திருப்தி. அதனால் வேறு இடங்களிலிருந்து பெண் கேட்க வந்தவர்களுக்கும் இடங் கொடுக்காமல் என்னையே எதிர் பார்த்துக்

கொண்டு அவரும் காத்திருந்தார். இப்படியாக ஒரு வருஷம் ஓடிவிட்டது. என் மாமனார் வீட்டார் துரிதப்பட்டார்கள். என் தந்தை பதில் சொல்ல வேண்டியவர். முகூர்த்தம் வைத்து விடலாமா என்று என்னைக் கேட்க முத்தம்மாளை ஏவிவிட்டார்.

ஒரு நாள் முத்தம்மாள் வழக்கம்போல் அந்தப் பேச்சை ஆரம்பித்தாள். நெடுநேரம் விளையாட்டாகவே விவாதித்தோம். என் விருப்பமின்மையைச் சொன்னேன். அவள் விட்டபாடில்லை. திருப்பித் திருப்பி சிபார்சு பேசினாள். கடைசியாக நான்,

"இரண்டு பெண்டாட்டிகளோடு வாழ்வது எப்படிப் பார்த்தாலும் துன்பந்தான்" என்றேன்.

"நான் அப்படிப்பட்டவளா? அதுவும் அவள் என்னுடைய சொந்தத் தங்கைதானே?" என்றாள்.

"யாராயிருந்தால் என்ன? எதற்காக இரண்டு மனைவிகள்?" என்றேன்.

"குழந்தையில்லையே?" என்றாள்.

"சரி, எனக்குக் குழந்தையில்லை என்பதற்காக நான் இன்னொரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்கிறேன். உனக்குக் குழந்தையில்லை என்பதற்காக நீ இன்னொரு புருஷனைக் கலியாணம் செய்து கொள்கிறாயா?" என்றேன்.

இதைச் சொன்ன உடன் சிரித்துக் கொண்டிருந்த அவளுடைய முகம் சிவந்து விட்டது. பிணக்கம் கொள்ளவில்லை. ஆனால் பேச்சை நிறுத்தி விட்டாள். நானும் அத்தோடு தொல்லை விட்டது கண்டு சும்மா இருந்து விட்டேன். இரண்டாவது மனைவி ஒருத்தியை ஏற்றுக் கொள்ள எனக்கு இஷ்டமில்லை யென்பதை முத்தம்மாள் அன்றுதான் முதல்முதல் கண்டாள். அன்று முதல் என்னை வற்புறுத்துவதை விட்டு விட்டாள். அவளுடைய இடத்தில் இன்னொரு பெண்ணை ஏற்றுக்கொள்ள நான் இஷ்டப்படாததைக் கண்டு முத்தம்மாள் மிகவும் பூரிப்படைந்தாள். ஆனாலும் தன்னுடைய தங்கை தன்னுடன் வாழப்போகிறாள் என்று எண்ணிக்கொண்டிருந்தது தவறிப்போனதிலும், தன்னுடைய தாய் தந்தையர் ஏமாந்து போனார்களே என்பதிலும் வருத்தமே அடைந்திருந்தாள்.

இன்னொரு விவாகத்தில் எனக்கு இஷ்டமில்லை யென்பதை என் மனைவி என் தந்தையிடம் சொல்லிவிட்டாள். ஜோசியத்தில் அவ்வளவு நம்பிக்கையுள்ள அவர் என்னைச் சும்மா விட்டுவிடுவாரா? என்னுடைய நண்பர்களையெல்லாம் ஏவிவிட்டு என் ஜாதகத்தில் களத்திர தோஷம் இருப்பதை எடுத்துக் காட்டி உபதேசம் செய்யச் சொன்னார். நான் யாருக்கும் அசையவில்லை. இந்த சமாச்சாரம் கொஞ்சம் என் மாமனார் காதுக்கும் எட்டிவிட்டது. என்னையே எண்ணிக்கொண்டு வரன் தேடவேண்டிய

சிந்தனையே செய்யாமல், பெண் கேட்க வந்தவர்களையும் தட்டிக் கழித்து வந்த அவருக்கு வருத்தம் வரக் கேட்க வேண்டுமா?

இந்தச் சமயத்தில் ஹைதராபாத்தில் நல்ல உத்யோகத்திலிருந்த (என் மாமியாருக்கு நெருங்கிய உறவான) ஒரு வரனுக்கு அந்தப் பெண்ணைக் கேட்க வந்தார்கள். அவர்களுக்கு நிச்சயமான பதில் ஒன்றும் சொல்லாமல் என்னுடைய விஷயத்தை நேரில் கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும் என்ற சபலத்துடன் என் மாமனாரும் மாமியாரும் உறவின் முறையில் வேறு அலுவலாக வந்ததுபோல நாமக்கல்லுக்கு வந்தார்கள். இரண்டு மூன்று நாள் தங்கினார்கள். என் தந்தை அங்கும் இங்கும் அலைந்து பல பெரிய மனிதர்களைக் கொண்டு எனக்கு சொல்லச் செய்தார். நான் ஒரே பிடிவாதமாக இன்னொரு மனைவியை மணந்து கொள்வது என்னுடைய கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதம் என்று சாதித்து விட்டேன். மாமனாரும் மாமியும் மிகவும் வருத்தத்தோடு திரும்பிப் போய்விட்டார்கள். அவர்கள் வருத்தத்தைக் காட்டிலும் முத்தம்மாள் வருத்தம் அதிகம். என் தந்தைக்கு என்மீது தாங்க மாட்டாத கோபம். என்னை அப்போது அவர் வைதவசவுகள் எழுதத்தகாதன.

ஊருக்குப் போனதும் என் மாமனார் அந்த ஹைதராபாத் மாப்பிள்ளைக்குப் பெண் கொடுப்பதாக மணம்பேசி வாக்களித்துவிட்டார்.

என்னுடைய மாமனும் மாமியாரும் நாமக்கல்லுக்கு வந்துபோன ஒரு வாரத்துக்குப்பின் ஒரு நாள் பக்கத்துக் கிராமத்தில் பெரிய பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டு பனிரண்டு மணிக்குமேல் வீட்டுக்கு வந்தேன். நான் சாப்பிடாமல் வருவேனே என்று முத்தம்மாள் எனக்காகத் தூங்காமல் காத்துக்கொண்டிருந்தாள்.

"ஏன், தூங்கவில்லையா?" என்றேன்.

"தூக்கம் வரவில்லை" என்றாள்.

"ஏன்?" என்று நான் கேட்பதன் முன் முத்தம்மாளின் முகம் வாடிவிட்டது.

"அண்ணனும் அம்மாளும் அவ்வளவு வருத்தத்தோடு திரும்பிப் போகும்படி செய்து விட்டீர்களே" என்றாள்.

"நான் என்ன செய்துவிட்டேன்?" என்றேன்.

"உங்களிடத்தில் அவ்வளவு ஆசையாக சவுந்திரத்தை நீங்களே கட்டிக்கொள்ள வேணுமென்று காத்திருந்தார்கள். நீங்கள் இப்படிச் செய்து விட்டீர்களே!" என்றாள்.

"உனக்கு இன்னும் இந்தப் பைத்தியம் விடவில்லையா?"

"அவளை எங்கேயோ ஹைதராபாத்தில் கொண்டுபோய்க் கொடுக்கப் போகிறார்களாமே."

"அதற்கு என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?"

"நீங்களே கட்டிக்கொள்ளுங்களேன்."

"இதோ பார், சும்மா என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம். நீ இருக்க நான் இன்னொரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வே னென்று கனவிலும் நினைக்காதே" என்றேன்.

இதற்கு உடனே அவள் சொன்ன பதில் தான் இந்தக் கதையின் சாரம். அது இன்னும் என் உள்ளத்தை உறுத்திக்கொண்டே இருக் கிறது. அறிந்து சொன்னளா, அறியாது சொன் னளா, அசரீரி என்கிறார்களே அப்படிச் சொன் னதா என்றெல்லாம் எண்ணியெண்ணி நான் கலங்குவதுண்டு. அந்த பதிலைப் பாருங்கள்.

"நான் இருக்கும்போது நீங்கள் அவளைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டீர்கள். நான் செத்தாவது போகிறேன் அவளைக் கலியாணம் செய்து கொள்ளுங்கள்" என்றாள்.

எனக்குக் கோபம் வந்துவிட்டது.

"சீ! என்ன பேச்சு இதெல்லாம்? போதும் படுத்துத் தூங்கு" என்றேன். உடனே அவள் அந்தப் பேச்சை விட்டுவிட்டு வேறு பேச்செடுத்து வெகு சந்தோஷமாகப் பேசி என் கோபத்தை மாற்றிவிட்டு தூங்கிப் போனாள்.


## மறுநாள் முத்தம்மாள் செத்தே போனாள்.

நம்புவீர்களா? நம்பித்தான் ஆகவேண்டும். நான் வெறும் சத்தியத்தைத்தான் சொல்லுகிறேன். வழக்கம்போல் விடியுமுன் எழுந்து போய் நீராடி விபூதி குங்குமம் அணிந்துகொண்டு வந்து என்னை எழுப்பினாள். நான் காலைக் கடன்களை முடித்து வருவதற்குள் என் தந்தைக்குக் காலை ஆகாரமும் காப்பியும் கொடுத்துவிட்டு, நான் வந்ததும் எனக்கானதும் செய்தாள். சுமார் ஒன்பது மணிக்குமேல் குளத்துக்குச் சென்று குடி தண்ணீர் கொண்டு வந்தாள். பத்து மணிக்கு வயிறு வலிப்பதாகச் சொன்னாள். ஊரிலுள்ள எல்லா வைத்தியர்களும் வந்து சிகிச்சை செய்தார்கள். வயிற்றுவலி நெஞ்சு வலியாகி, மாலை எட்டு மணிக்கு உயிர் போய்விட்டது.

நான் மூர்ச்சையாகிவிட்டேன்.

சுமார் மூன்று மாதம் வரையில் நான் பித்து கொண்டவன்போல் இருந்தேன். எனக்கு சித்த ஸ்வாதீனம் கெட்டுப்போகுமோ என்று பயந்து என் நண்பர் நாகராஜ ஐயங்கார் என் பக்கத்திலேயே இருந்து பராமரித்தார்.


என்னுடைய மாமனார் ஹைதராபாத்துக்குப் பெண் கொடுக்கும் பேச்சை தாமாகவே



இது யார் தெரிகிறதா ?
கவிஞரின் வாலிபகாலம்



கவிஞரின் மூத்த மனைவி முத்தம்மாள்
என்னும் பெண் தெய்வம்



நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளை

நாஞ்சில் நாட்டு கவிஞர் சி. தேசிக விநாயகம் பிள்ளை

ரத்து செய்துவிட்டார். அதே சவுந்திரத்தை நான் முத்தம்மாளின் உத்தரவாக மணந்து கொண்டேன். அந்த சவுந்திரத்தை நான் முத்து சவுந்திரம் என்றுதான் அழைப்பது. மூன்று ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் மக்களும் சுகமாக இருந்து வருகிறார்கள். முத்தம்மாளின் நினைவிற்காக என் மூத்த மகனையும் 'முத்து' என்றுதான் அழைக்கிறேன்.

## நான் 'புலவன்' ஆனது.

என்னுடைய புலமை எப்போது ஆரம்பமாயிற்று என்பது நினைவில்லை. எனக்கு வினைத் தெரிந்த நாள்முதல் தப்போ, தவறோ, நினைத்ததற்கெல்லாம் பாட்டெழுதினேன் என்பது மட்டும் நினைவில் இருக்கிறது. என்னுடைய இளமையில் நான் பாடிய பாட்டுகள் பலப்பல. அவைகளெல்லாம் இப்போது இருந்தால் ஆயிரக்கணக்கில் சேரும். சிறு வயசில் எனக்கிருந்த புலமை எப்படிப்பட்டதென்று நானே பார்த்து ரஸிப்பதற்குக்கூட இப்போது அவைகள் இருந்தால் உதவும். சிறு பிராயத்தில் எழுதின பாட்டுகள் மட்டுமல்ல. வயது வந்த பிறகு எழுதிய பல இலக்கியப் பாட்டுகளும்கூட எங்கே போயினவோ தெரியவில்லை. நெடுநாள் வரையிலும் அவற்றை வெகு அக்கரையுடன் சேமித்து வைத்திருந்தேன். அரசியல் போராட்டத்தில் வெகு தீவிரமாக இறங்கியபின் அவற்றைப் பற்றிய கவனக்குறைவால் அவை காணாமற் போயின.

என்னுடைய புலமையின் ஆரம்பம் நினைவில்லாவிட்டாலும், என்னைப் 'புலவன்' என்று முதல்முதல் காலஞ்சென்ற சேலம் ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் சொன்னது எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. அதற்குப் பிறகுதான் என்னை ஒரு 'புலவன்' என்று நானே எண்ணிக்கொள்ள ஆரம்பித்தேன். ஸ்ரீ விஜயராகவாச்சாரியின் வாக்கால் எனக்குப் 'புலவன்' என்ற பட்டம் கிடைப்பதற்குக் காரணமாயிருந்தவர் எனது நண்பர் ஸ்ரீ சேலம் சி. அனந்தாச்சாரியார். அதைப் பாராட்டினவர் ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். அந்த நிகழ்ச்சி பின்வருமாறு:

1914-ம் வருஷத்தில் தூத்துக்குடியில் ஒரு கவிதைப் போட்டிப் பரிசு விளம்பரப் படுத்தினார்கள். தேசாபிமான உணர்ச்சிகளை உண்டாக்கக் கூடியதாக நூறு பாடல்களை பாமர மக்களுக்கும் பயன்படக்கூடியதான 'கும்மி' சந்தத்தில் எழுதியனுப்ப வேண்டும். முதல் தரமான பாட்டுக்கு ஐந்நூறு ரூபாய் ரொக்கப் பரிசும் ஒரு தங்கப் பதக்கமும். இரண்டாந்தரமான பாட்டுக்கு முந்நூறு ரூபாய் ரொக்கமும் தங்கப் பதக்கமும். மூன்றாவது பரிசுக்கு இருநூறு ரூபாய் ரொக்கமும் தங்கப் பதக்கமும் என்பது விளம்பரம். அந்தப் பரிசுக்குப் பெயர் 'கோகலே பரிசு'

'நாட்டுக் கும்மி' என்று பெயரிட்டு நானும் நூறு பாட்டுகளை அனுப்பினேன். சிலநாள்

சென்றபின் அந்தப் பரிசுக் கமிட்டியின் காரிய தரிசியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் என்னுடைய பாட்டுகளிற் சில பாட்டுகளை நீக்கிவிட அனுமதி கொடுக்க வேண்டு மென்றும் அந்தப் பாட்டுகளை நீக்காவிட்டால் என்னுடைய கவிதையை கமிட்டியார் ஏற்றுக் கொள்ளுவது சிரமமாக இருக்கும் என்றும் எழுதியிருந்தார். அவர் நீக்கிவிட நினைத்த பாட்டுகள் நான் வெகு முக்கியமான பாட்டுகளாக எண்ணினவை. மேலும் அந்தப் பாட்டுகளில் சிலேடைப் பொருளாக அமைக்கப்பட்டிருந்த பெரியவர்களை பரிசுக்கமிட்டியார் அவமதிப்ப தாகவும் நினைத்துவிட்டேன். அதனால் வாலிப முறுக்குள்ள வார்த்தைகளால் அவர்களுடைய கருத்தைக் கடிந்து கடிதம் எழுதிவிட்டேன். அந்தக் கடிதத்தின் பலனாக என்னுடைய பாட்டு பரிசுக்கான பாட்டுகளோடு சேர்க்கப்படவில்லை யென்று பின்னால் தெரியவந்தது. அவர்கள் நீக்கி விட விரும்பிய பாடல்கள் எவை என்றால் :

தமிழ் வழக்கப் பிரகாரம் என்னுடைய கவிதைக்கு தெய்வ வணக்கமாக நான்கு பாட்டுகள் இருந்தன. அவையாவன :

### பிரமன் துதி

1. நீதி நிலைக்க நினைப்பவனும் அருள்
ஜோதி உருக்கொண்ட மேனியனும்
ஆதி அறத்தை அளித்திடுவான் எங்கள்
அரவிந்த நாதனைப் போற்றுங்கடி.

### சிவபிரான் துதி

2. ஆலம் உண்டாலும் அசையாதான் பர
காலனடி குண சீலனடி
பாலை முனிந்த பனிமொழியாள் பதி
பால கங்காதரன் பாடுங்கடி.

### கிருஷ்ணன் துதி

3. தீதுசெய் வேந்தரைச் சீர்திருத்தம் செய்யத்
தூது நடந்திடும் தூயனடி
கோதில் குணத்தவன் கோகுலத்தில் வந்த
கோபால கிருஷ்ணனைப் பாருங்கடி.

### வழிபடுகடவுள் கந்தன் துதி

4. கந்த மலர் ஒரு மேலவர்க்கும் ஞானக்
கைப்பலம் காட்டிய கந்தனடி
கந்தம் மணக்கின்ற ஜோதியடி அருள்
காந்தியடி வெகு சாந்தனடி.

இந்த நான்கு பாட்டுகளும் நான் என் கவித் திறமையைக் காட்டுவது போல, விரும்பி எழுதின பாட்டுகள். இந்தப் பாட்டுகள் 1914-ம் வருஷத்தில் இயற்றப்பட்டவை என்பதை நினைவில் வைத்துக்கொண்டு பார்த்தால்தான் இவற்றின் அழகு புலனாகும். அப்போது எனக்கிருந்த அரசியல் எண்ணங்களும் இதில் ஒருவாறு உருவாகின்றன. முதற் பாட்டில் பிரம்மனும்—அரவிந்த கோஷும் சிலேடை. இரண்டாவது பாட்டில் சிவபிரானும்—பாலகங்காதர திலகரும் சிலேடை. மூன்றாவது பாட்டில் கோபால கிருஷ்ணனும்—கோபால கிருஷ்ண கோகலேயும் சிலேடை. நான்காவது பாட்டில் கந்தனும்—காந்தியும் சிலேடை.

காந்தியைப் பற்றிய இந்தக் கடைசிப் பாட்டு மிகவும் கருதத் தகுந்தது. 1914-ம் ஆண்டில், காந்தியடிகள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னால், அவருடைய மகிமை இன்னதென்பதை இந்தியர்களில் வெகு சிலரே ஊகிக்கக் கூடிய அந்தக் காலத்தில், அவர் தென்னாப்பிரிக்காவில் அப்போது நடத்திக் கொண்டிருந்த சத்தியாக்கிரகத்தைத் தவிர வேறு விவரங்கள் நம்முடைய நாட்டில் பரவாத நாளில், அவரைப்பற்றி எழுதிய பாட்டில் அமைந்த பதங்கள் இப்போதும் எனக்கு இன்பம் கொடுக்கின்றன. ' தாமரை மலரில் வீற்றிருக்கும் மேலவனுகிய பிரம்ம தேவனுக்கும் ஞானோபதேசம் செய்யக்கூடிய கந்தன் ' என்றும், சிலேடைப் பொருளில் '(கர்மயோகியாக இருந்து இப்போது ஞானயோகியாக இருக்கின்ற) மேலே சொன்ன அரவிந்த கோஷுக்கும்கூட ஆன்ம பலம் இன்னதென்று விளக்கிக் காட்டத்தகுந்த அருள் நிறைந்த சாந்தன் காந்தியடிகள் ' என்ற கருத்தையும் கொண்டது அந்தப் பாட்டு.

மேலே உள்ள நான்கு பாட்டுகளில் கோகலேயைப் பற்றிய பாட்டைத் தவிர மற்ற மூன்று பாட்டுகளையும் நீக்கிவிட வேண்டும் என்பது பரிசுக்கமிட்டிக் காரியதரிசியின் கடிதம். பரிசு நாட்டியவர் மிதவாதி ஸ்ரீ கோகலேயவர்களைப் பின்பற்றுகிறவர். பரிசும் ' கோகலே பரிசு ' என்று பெயரிடப்பட்டது. அரவிந்த கோஷ் பிரிட்டிஷ் ஆட்சிக்கு மிகப் பெரிய விரோதியாக அப்போது

கருதப்பட்டவர். திலகர் வெகு தீவிரவாதி. திலகருடைய பெயர் சொன்னாற்கூட மிதவாதிகளுக்கு திகில். மேலும் திலகர் கட்சிக்கும் கோகலே கட்சிக்கும் பத்திரிகைகளில் வாக்கு வாதம் பரவிக் கொண்டிருந்த காலம். ஆதலால் அரவிந்தர் பெயரும் திலகர் பெயரும் பரிசுப் பாட்டில் இல்லாதிருப்பது நலம் என்று எண்ணினார்கள் போலும். பாட்டில் அவ்வளவு பெருமை கொடுத்துப் பாராட்டுவதற்குத் தகுந்தவராக காந்தியடிகளை அப்போது கருதியிருக்க மாட்டார்கள். அதனால் தானோ என்னவோ அந்தப் பாட்டையும் நீக்கிவிடச் சொன்னார்கள்.

இரண்டு மாதங்களுக்குப் பின் பரிசுபெற்ற பாட்டுகளில் கொஞ்சம் கொஞ்சம் பத்திரிகைகளில் வெளியாயின. என்னுடைய நண்பர்களிற் சிலர் என்னுடைய பாட்டுகளிற் சிலவற்றை அச்சிட்டுப் பத்திரிகைகளுக்கு அனுப்பி, என்னுடைய பாட்டுகளின் தகுதியைப் பாராட்டி, ஒரு விவாதத்தைக் கிளப்பினார்கள். இந்தப் பேச்சு அங்குமிங்கும் பரவி, ஒரு நாள் நான் சேலத்துக்குப் போயிருந்தபோது என்னுடைய நண்பர் ஸ்ரீ கிடாம்பி அனந்தாச்சாரியார் பி. ஏ., பி. எல். என்னைக் கேட்டார். பாட்டுகளைப் பாடிக் காட்டினேன். அனந்தாச்சாரியார் அதி தீவிரமான தேசபக்தருள் ஒருவர். சேலத்தில் அப்போது வாலிப தேசபக்தர்களுக்கு அவர் ஒரு வழிகாட்டி. என் பாட்டுகளைக் கேட்டுப் பரவசப் பட்டு புகழ்ந்து பாராட்டினார்.

மறுநாள் அவரே என்னை சேலம் 'லிட்டரரி இன்ஸ்டிடியூட்' என்ற சங்கத்துக்கு அழைத்துச் சென்று அங்கே என் பாட்டுகளை அரங்கேற்றச் செய்தார். சேலத்தில் அப்போது அந்த 'லிட்டரரி இன்ஸ்டிடியூட்' தான் அரசியல் பேச்சுகளுக்கெல்லாம் ஆஸ்தானம். சிறந்த அரசியல் வாதிகளான அனைவரும் அதில் அங்கத்தினர்கள். அவ்வூர் பிரமுகர்கள் எல்லாரும் தினந்தினம் பொழுது போக்காக அங்கே கூடுவார்கள். அந்த இடத்தில் அன்றைக்கு, நான் அந்த 'நாட்டுக் கும்மியை' அரங்கேற்றிய போது ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜ கோபாலாச்சாரியார், ஸ்ரீ பி. வி. நரசிம்மையர், (இப்போது திருவண்ணாமலை ரமண ஆசிரமத்தில் ஸ்ரீ நரஸிம்ம சுவாமிகளாக இருப்பவர்) ஸ்ரீ வெங்கட சுப்பையர் முதலான பலபேரும் கேட்டு ரஸித்துப் பாராட்டினார்கள். ராஜாஜி என்னுடைய பாட்டுகளை மிகவும் மெச்சினார். ஸ்ரீ சி.விஜயராகவாச்சாரியாரும் அந்தச் சங்கத்தில் ஒரு அங்கத்தினர். ஆனால் அன்றையதினம் அவர் அங்கு வரவில்லை.

மறுநாள் காலையில் ஸ்ரீ அனந்தாச்சாரியார் என்னை ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அகஸ்மாத்தாக ராஜ கோபாலாச்சாரியவர்களும் அப்போது அங்கு வந்து சேர்ந்தார். விஜயராகவாச்சாரியாருக்கு மற்ற இரண்டுபேரும் என்னை அறிமுகப்படுத்தினார்கள். விஜயராகவாச்சாரியார் மிகவும் கடுபிடியானவர். அவருக்கு முன்னால் யாராயிருந்தாலும்

கொஞ்சம் அஞ்சிப் பயந்து அடங்கி ஒடுங்கித் தான் பேசுவார்கள். வீண் வார்த்தைகளுக்கோ விளையாட்டுப் பொழுது போக்குக்கோ அவருக்கு நேரமிருக்காது. என்னேரமும் ஜோலியும், வேலையும், சுருசுருப்பும் பரபரப்புந்தான். அவரிடத்தில் எதையாவது சொல்ல வேணுமானாலும் நெடு நேரம் நீட்டி நெளித்துப் பேசிக்கொண்டிருக்க முடியாது. சுருக்கமாகச் சொன்னால்தான் நின்று கேட்பார். காலத்தைச் செலவு செய்வதில் அவ்வளவு கணக்காயிருப்பார்.

அப்படிப்பட்ட அவர் அனந்தாச்சாரியாரும் ராஜகோபாலாச்சாரியாரும் என் தேசீயப்பாட்டுகளைப்பற்றி பிரஸ்தாபித்த உடனே மற்ற அலுவல்களை விட்டுவிட்டு பாட்டைக் கேட்க விரும்பினார். நான் பாடினேன். என்னுடைய சிலேடைப் பாட்டுகளை உடனே கண்டுகொண்டு அப்போதே ரஸித்துப் புகழ்ந்தார். அரைமணி நேரத்துக்கு மேல் வெகு அமைதியாகக் கேட்டுவிட்டு இங்கிலீஷில் "ரொம்ப சந்தோஷம். பாட்டுகள் மிக நன்றாக இருக்கின்றன. உங்களிடத்தில் நல்ல கவித்துவம் இருக்கின்றது. அது நாளுக்கு நாள் விருத்தியடைந்து நீங்கள் ஒரு சிறந்த புலவனாக வேண்டுமென்று ஆசீர்வதிக்கிறேன்" என்றார். நான் பிறர் மெச்சப் 'புலவன்' ஆனது! அப்போது தான். அது முதற்கொண்டு அனந்தாச்சாரியாரும் ராஜகோபாலாச்சாரியாரும் என் புலமையை மிகவும் போற்றி வந்தார்கள். அதை அவர்கள்

மறந்து போயிருக்கலாம். ஆனால் நான் மறக்கக் கூடாது.

இப்படி அறையிற் பாடிப் புலவனாயிருந்த நான், அம்பலத்துக்கு வந்து நாடறிந்த புலவனானது, காந்தியடிகளின் உப்பு சத்யாக்ரக 'டாண்டி வழிநடை' ஆரம்பிக்கும் போது நான் பாடிய 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற பாட்டினால்தான்.

திருச்சினாப்பள்ளியில் டாக்டர் ராஜன் வீட்டிலிருந்து ராஜகோபாலாச்சாரியாரின் தலைமையில், வேதாரண்யத்துக்குப் புறப்பட்ட சத்யாக்கிரக சேனைக்கு அதுதான் வழி நடைப்பாட்டாக உதவியது. அந்தப் பாட்டின் அமைப்பில் மிகவும் ஆனந்தமடைந்துவிட்ட ராஜாஜி, அந்த வேதராண்ய பயணத்திலேயே தஞ்சாவூரிலிருந்து எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் இந்தப் பாடலைப் பலபடியாகப் புகழ்ந்து விமர்சனம் செய்துவிட்டு, "இந்த சமயத்தில் சுப்ரமண்ய பாரதியார் இல்லையே, என்று நான் எண்ணினேன். அந்தக் குறையை நீங்கள் நீக்கிவிட்டீர்கள்" என்று பாராட்டியிருந்தார். அந்த பெரும் புலவனுடைய பெயரோடு என்னைச் சேர்த்து ராஜாஜி எழுதியது எனக்கு எல்லையற்ற இன்பத்தைக் கொடுத்தது.

அந்தப்பாட்டை 'சுதந்திரச்சங்கு' என்ற காலணா வாரப் பத்திரிகையை நடத்தி சத்யாக்கிரக இயக்கத்துக்கு ஒப்பற்ற சேவை செய்த

வருள் ஒருவரான எஸ். கணேசன் லட்சக் கணக்கில் அச்சிட்டு தமிழ்நாடெங்கும் வழங்கினர். அவருடைய சகாவான 'சங்கு சுப்ரமண்யம்' இந்தப் பாடலை அவருக்கே சொந்தமான வெகு கெம்பீரமான தொனியில் தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் பாடி முழக்கினர். லட்சக்கணக்கான தொண்டர்கள் இதைப் பாடினர்கள். அதன் பிறகுதான் நான் தமிழ்நாட்டு 'தேசீயக் கவிஞன்' ஆனேன்.

*1924*-ல், சென்னையில், காங்கிரஸ் மகாசபை நடந்த சமயத்தில், வரவேற்புக் கழகத்தின் தலைவராக இருந்த காலஞ்சென்ற ஸ்ரீ. எஸ். ஸ்ரீனிவாச ஐயங்காரவர்கள் தேசீயப் பாட்டுகளுக்காக ஏற்படுத்திய வித்வான்கள் போட்டியில், எனக்கு ஒரு தங்கப்பதக்கம் பரிசளிக்கப்பட்டது. அது முதல் 'காங்கிரஸ் புலவன்' என்று கருதப்படலானேன்.

## புலமையும் வறுமையும்

"ராமலிங்கம்! நீ இனிமேல் கவலைப்பட வேண்டாம். வருஷத்துக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் குத்தகை வந்து கொண்டிருக்கின்ற ஒரு சொத்து, போன மாதத்தில்தான் என் சுவாதீனத்துக்கு வந்தது. அதை உன் குடும்பத்துக்கு என்னுடைய உதவியாக சாசனம் செய்து கொடுத்து விடுகிறேன். இது சத்தியம். கன்னிகா பரமேஸ்வரி சாட்சி" என்று என்னுடைய

பால்ய சிநேகனுன ரங்கநாதம் செட்டியார் சொன்னுர்.

அப்படி எனக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பாருங்கள் : பாடப்புத்தகங்களிலுள்ள தமிழ்ப் பாட்டுகளேயும் அவற்றை இயற்றிய புலவர்களுடைய சரித்திரக் கதைகளையும் அறிய ஆரம்பித்தது முதல் 'புலவன் வறுமை' என்ற பேச்சை அடிக்கடி கேட்டிருக்கிறேன்.

புலமைக்கும் வறுமைக்கும் என்னதான் பொருத்தம் இருக்கிறதோ, பணத்துக்கும் புலமைக்கும் என்ன பகைமைதான் இருக்கிறதோ, தெரியவில்லே. 'பொருள்தனைப் போற்றி வாழத்' தெரியாததனுலோ, அல்லது செல்வத்தை அடிக்கடி அவமதித்துக் கவிபாடுவதால் செல்வ தேவதையின் சினத்துக்கு ஆளாகிவிட்டதனுலோ, அல்லது எந்நேரமும் கற்பனையான மனக் கோட்டைகளிலேயே இருந்துகொண்டு காரிய முயற்சிகளில் ஈடுபடாமல் உலக விவகார ஞானத்தை உல்லங்கனம் செய்து விடுவதனுலோ, மற்றும் என்னகாரணத்தினுலோ 'புலவன்' என்ற பெயர் பெற்றவர்களிற் பெரும்பாலோரும் வறியவர்களாகவே வாழ்ந்திருப்பதாகத் தெரிகின்றது. வள்ளல்களும் மன்னர்களும் அமோகமாக ஆதரித்தும்கூட பல புலவர்களே வறுமைவிடவேயில்லே. சில புலவர்களின் சரித்திரத்தைப் பார்த்தால், வறுமை அவர்களே விட்டுவிட விரும்பின போதும் அவர்கள் வறுமையை விட்டுவிட

இஷ்டப்படவில்லையோ என்றும்கூட எண்ணச் செய்கிறது.

தமிழ்ப் புலவர்கள் மட்டுமல்ல. உலகத்தின் எந்தப் பகுதியிலும் எந்த மொழியிலும் ஏறத்தாழ எல்லாப் புலவர்களும் இதேமாதிரிதான். இந்த விதிக்கு விலக்கானவர்கள் வெகு சிலரே.

என்னைப் பொறுத்த வரையிலும் என்னை ஒரு பெரும் புலவனாக நான் மதித்துக் கொண்டு மயங்கிவிடுவதில்லை. எனக்கு நேரிட்ட வறுமைத் துன்பங்களெல்லாம் இந்த 'புலவன் வறுமை' என்ற இனத்தைச் சேர்ந்ததுதான் என்று சொல்லிக்கொள்ளவும் என் மனம் இடந்தருவதில்லை. என் வறுமை நானே வருவித்துக் கொண்டது. காந்தீயத்தின் சத்யாக்ரகத்தில் சேர்ந்து மிகவும் பொறுப்புள்ள பிரசாரங்களை மேற்கொண்டதால் தொழிலைச் செய்ய அவகாசமே இல்லாமற் போனதனால் ஏற்பட்டது. சத்யாக்கிரகத்தில் சேர்ந்தால் தொழிலை விட வேண்டியிருக்குமென்றும், சொத்து சுகங்களையும் உயிரையும்கூட இழக்கவேண்டி ஏற்படலாம் என்றும் காந்தியடிகள் மிகவும் தெளிவாக எச்சரித்தார். அந்த எச்சரிக்கைகளை முற்றிலும் ஏற்றுக்கொண்டுதான் அவர் நடத்திய சுதந்தர வேள்விக்கு எங்களுடைய சுகவாழ்க்கையை பலி கொடுத்தோம். அப்படி நானே வருவித்துக் கொண்ட வறுமையை நான் 'புலவன் வறுமை' என்று எண்ணுவதில்லை. இருந்தாலும் என்

னுடைய நலத்தை மிகவும் கோருகின்ற சில அந்தரங்கமான அன்பர்கள், என் நிலைமையைப் 'புலவன் வறுமை' என்றே சாதிக்கிறார்கள். காக்கை உட்கார்ந்த உடனே பனம் பழம் விழுந்த தால் பனம்பழத்தைத் தள்ளினது காகந்தான் என்று எண்ண இடமிருப்பதுபோல, 'புலவன்' என்று பலபேர் என்னைப் புகழ ஆரம்பித்த பிறகு தான் இந்த வறுமையும் ஆரம்பித்தது.

'புலவன்' ஆனதற்கு முன்னும் பின்னும், நான் ஒரு பெரும் பணக்காரன் ஆகிவிடத்தக்க பல சந்தர்ப்பங்கள் என்னுடைய முயற்சியில்லா மலேயே ஏற்பட்டன. கைக்கெட்டிய அந்த சம்பத்துகளில் வாய்க்கெட்டியதும் கூட வயிற் றுக்கு எட்டாமல் தவறிவிட்டதைச் சொன்னால் வெகு தமாஷாக இருக்கும்.

இளம்பள்ளி ஜமீன்தார் இராஜலிங்கம் செட்டியார் என்னிடத்தில் அளவற்ற அன் புடையவர். என்னை எந்நேரமும் தன் அருகி லேயே வைத்திருக்க ஆசைப்படுவார். அவரோடு கரூரில் அவருடைய வீட்டில் தங்கியிருந்தபோது, மோகனூரில் அவருக்குச் சொந்தமான சுமார் இருபது ஏக்கரா நன்செய் நிலங்களை விலைக்கு வாங்கிக்கொள்ள சில மோகனூர்வாசிகள் வந் திருந்தார்கள். (அந்த நிலங்கள் காவேரிப் பாச னம். இப்போது ஏக்ரா ஒன்றுக்குப் பத்தாயிரம் ரூபாய் விலைக்கு விற்கத்தக்கவை.) பேரம் படியவில்லை. மோகனூர்க்காரர்கள் என்னமோ

பேச்சுப் பிசகிவிட்டதாக ஜமீன்தார் கோபித்துக் கொண்டு அவர்களைப் போகச் சொல்லிவிட்டார். அவர்கள் போனபின் "அந்த நிலங்களை விற்று எனக்கு இப்போது ஆகவேண்டியது ஒன்று மில்லை. அந்த இருபது ஏகராவையும் நம்ம ராம லிங்கத்துக்கு எழுதிவைத்து விடுகிறேன். சாமுடு! நீ போய் அதற்கு வேண்டிய பத்திரக் காகிதங் களை வாங்கிவா" என்று ஜமீன்தார் தன்னுடைய குமாஸ்தா சாமாடு என்பவரை ஏவினுர். சாமாடு உடனே புறப்பட்டு இரண்டெட்டு நடந்தார். அந்த வீட்டிலிருந்த ஒரு பூனை குறுக்கே ஓடிற்று. ஜமீன்தார் ரொம்ப சகுனம் பார்க்கிறவர். "என் னமோ பூனை குறுக்கே போகிறதே! வா நாளைக்கு வாங்கி எழுதலாம்" என்ருர். அவ்வளவுதான். அந்த 'நாளைக்கு' என்ற நாள் விடியாமலேயே போய்விட்டது. இதன் விவரத்தை இன்னொரு கதையாக எழுதுகின்றேன்.........................

முத்துகாபட்டி என்பது நாமக்கல்லிலிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ள ஒரு ஜமீன் கிராமம். அந்த ஜமீனுக்கு சொந்தக்காரர் முத்யாலம்மாள் என்னும் மிகவும் திறமையுள்ள அம்மையார். அவர் சிறு பிராயத்திலேயே விதவையாகிவிட்ட வர். குழந்தையில்லை. வெகுநாள் வரையிலும் ஜமீன் காரியங்களைத் தாமே நடத்திவந்தார். 'ராணி முத்யாலம்மாள்' என்று சர்க்கார் பட்டம் பெற்றவர். சுமார் எண்பத்திநான்கு வயது வரை யிலும் ஆரோக்கியத்தோடு வாழ்ந்து அமுல் நடத்தினவர். என் தகப்பஞர் நாமக்கல்லில் உத்

யோகம் செய்த காலத்தில் எங்களுக்கு மிகவும் பழக்கமானவர். அந்த முத்யாலம்மாள் தனக்குப் பின்னால் தன்னுடைய ஜமீனுக்கு வாரிசாக தன் தங்கையின் மகளுடைய மைந்தனை பங்காரு சாமியை தத்துப் புத்திரனாகக் கொண்டார். பங்காருசாமியின் தந்தையான துரைசாமிரெட்டியாரும் அவருடைய குடும்பமும் முத்துகா பட்டிக்கே வந்து வசித்தார்கள். முத்யாலம்மாளுக்கு மூப்புவந்து, பங்காருசாமி ரெட்டியார் பட்டத்துக்கு வருமுன் துரைசாமி ரெட்டியார்தான் ஜமீன்தார்போல் விளங்குவார். இருந்தாலும் முக்கியமான காரியங்களை அம்மாளுடைய உத்தரவில்லாமல் செய்ய முடியாது. துரைசாமி ரெட்டியார் தமிழ் அபிமானி. கலாரஸிகர். சமஸ்தானம் என்று நாடி வருகின்ற கலைஞர்களையும் புலவர்களையும் அனுபவித்து ஆதரிக்க வேண்டியவர் அவர்தான். தமிழ்ப் புலமை உள்ளவன் என்ற முறையிலும் சித்திரக்காரன், போட்டோ கிராப்பர் என்ற முறைகளிலும் துரைசாமி ரெட்டியாரோடு நான் மிகவும் நெருங்கிப் பழகினவன். பங்காருசாமி ரெட்டியார் எனக்கு பால்ய சிநேகர். ஒத்த வயதுள்ளவரானதால் நாங்கள் இருவரும் நண்பர்கள் முறையிலேயே நடந்து கொள்வோம். மொத்தத்தில் நான் அந்த ஜமீனில் ஒரு சமஸ்தான வித்வான்போல் இருந்து வந்தேன். பங்காருசாமி ரெட்டியாருக்கு 'போட்டோ' வேலையில் வெகு பிரியம். அவருடன் சேர்ந்து கொண்டு ஜமீன் வீட்டிலுள்ள குதிரைகள்

நாய்கள், வண்டிகள், மோட்டார்கள் முதலிய வற்றையாவது போட்டோ எடுத்துக்கொண்டு பொழுது போக்குவோம்.

முத்யாலம்மாளுக்கு அவருடைய இளமை யிலிருந்தே போட்டோ எடுத்துக் கொண்டால் ஆயுள் குறைந்து போகும் என்ற நம்பிக்கை. வெகு காலமாக யாராரோ கேட்டுக்கொண்டும் அவர் 'போட்டோ' எடுத்துக்கொள்ள மறுத்து விட்டார். அந்தக் காலத்தில் இப்போதுள்ளது போல வேகமான 'பிலம்'கள் இல்லை. வீட்டில் நடமாடிக்கொண்டிருக்கும் போதே அவர்கள் அறியாமல் படம் பிடித்துவிட முடியாத காலம். கிடைத்த சாமான்களைக் கொண்டு முத்யாலம் மாளை எப்படியாவது ஒரு போட்டோ பிடித்து விட வேண்டுமென்று நானும் பங்காருசாமி ரெட்டியாரும் எவ்வளவோ முயன்று பார்த் தோம். முடியவில்லை. எடுத்ததெல்லாம் கெட் டுப்போய்விட்டன. பட்டணத்திலிருந்தும் சேலத் திலிருந்தும் மிகவும்கைதேர்ந்த 'போட்டோகிராப் பர்களை' தருவித்துப் பார்த்தோம். அவர்களாலும் அது முடியவில்லை. முத்யாலம்மாள் வெளிச்ச மான வெளிப்புறங்களுக்கு வருவதே வெகு கொஞ்சம். வந்தாலும் நிற்கமாட்டார். நின்றாலும் யாரும் நெருங்க முடியாது. பழக்கமானவர்களைத் தவிர மற்றவர்கள் பக்கத்தில் போக பயப்படு வார்கள். பங்காருசாமியும் துரைசாமி ரெட்டி யாரும்கூட அம்மாள் வந்தால் பதுங்கிக் கொள்ளு வார்கள்.

கடைசியாக பங்காருசாமி ரெட்டியார் என்னைப் படம் எழுதச் சொன்னார். 'போட்டோ' பிடிப்பதற்கே ஒரு நிமிஷம் அரை நிமிஷம்கூட ஒரே இடத்தில் நிற்காதவரை, படம் எழுதக் கூடியபடி எப்படிப் பார்க்க முடியும்? தூரத்தில் போவதையும் வருவதையும் பார்த்தே தம்முடை மனதில் உருவத்தை கிரகித்துக்கொண்டு அடையாளம் அறியும்படி படம் வரைந்துவிடக் கூடிய வித்வான்கள் உண்டு. அது வெகு அபூர்வம். அந்தப் பழக்கம் எனக்குக் கிட்டவில்லை. ஆசாமியை உட்காரவைத்து அதற்கென்று தனிக் கண்கொண்டு பார்த்து சிறுகச்சிறுக வரைந்து சேர்த்தால்தான் எங்கள் சித்திரம் உருவாகும். ஆகையினால் எனக்கு அந்த வேலை சிரமமாகத்தான் தோன்றியது. ஆனாலும் முயற்சி செய்து பார்க்கலாம் என்ற ஆசை அதிகமாக இருந்ததால் ஒப்புக்கொண்டேன்.

அதற்காகச் சிலநாள் காத்திருந்தோம். முத்யாலம்மாள் இறந்துபோக இரண்டு மூன்று வருஷங்களுக்குமுன், ஒரு நாள் மாலை சுமார் ஐந்து மணிக்கு, அந்த அம்மாள் தம்முடைய கணக்குப் பிள்ளையுடன் ஏதோ முக்யமான கணக்கைப்பற்றிப் பேசிக்கொண்டே வெளியே வந்து ஒரு வெளிச்சமான இடத்தில் உட்கார்ந்து, தூணில் சாய்ந்துகொண்டு வெகு நேரம் வரையிலும் விவாதித்துக் கொண்டிருந்தார். அந்த இடத்துக்கு நேராக பங்காரு சாமியின் அறை. அதில் ஒரு ஜன்னல். அந்த ஜன்னல் வழியாகப்

பார்த்துப் பார்த்து வெறும் பென்சலில் ஒரு படம் எழுதினேன். எப்படியோ அந்தப் படம் நாங்கள் எதிர் பார்த்ததுக்குமேல் சரியாக அமைந்து விட்டது. அது முதல் பங்காருசாமி ரெட்டியாருக்கு என்னிடத்தில் ஒரு தனி அன்பு.

அந்த பங்காருசாமி ரெட்டியாரிடம் ஒரு நாள் சல்லாபித்துக் கொண்டிருக்கும்போது, எனக்குச் சொந்தமாக ஒரு நல்ல நந்தவனம் உண்டாக்கி அதன் நடுவில் ஒரு ஆச்ரமும் அமைத்து அதில் இருந்துகொண்டு கலைகளை விருத்தி செய்ய வேண்டும் என்ற என் ஆவலைச் சொன்னேன். அவர் உடனே நாமக்கல்லில் ஊரோரத்தில் அவருக்குச் சொந்தமாயிருந்த ஒரு புளியந்தோப்பை எனக்குத் தானம் செய்து விடுவதாகச் சொல்லி, அந்தத் தோப்பை சீர்படுத்தி நந்தவனம் உண்டாக்கி ஆச்ரமம் அமைக்கவும் உதவிகள் செய்வதாக வாக்களித்து, அப்போதே தன்னுடைய விலாசம் அச்சடித்த காகிதத்தில் எனக்கு ஒரு வர்த்தமானம் எழுதினார். குமாஸ்தாக்கள் யாரும் இல்லை. தாமே எழுதினார். எழுதிய வர்த்தமானத்தில் கையெழுத்துச் செய்யுமுன் எனக்குக் காட்டினார். நான் அதைப் படித்துக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் என்னுடைய துர் -அதிர்ஷ்டம் என்பது ஒரு நண்பர் வடிவத்தில் உள்ளே வந்தது. வந்தவர் அந்த வர்த்தமானத்தைப் பார்த்துவிட்டு "இதற்கு வர்த்தமானம் ஒரு தரம், பத்திரம் ஒரு தரமா? ஒரேயடியாய் தான—சாசனம் எழுதி ரிஜிஸ்டர் செய்து

கொடுத்துவிடுங்கள்" என்றார். "சரி அப்படியே செய்து விடுவோம்" என்று ஜமீன்தார் அந்த வர்த்தமானத்தில் கையெழுத்திடாமல் வைத்து விட்டார். அடுத்தபடி என்ன செய்வது, எப்போது செய்வது என்ற பேச்சை எடுப்பதற்குள் நாமக்கல் தாசில்தார் ஜமீன்தாரைப் பார்க்க வந்தார். அப்போது நாமக்கல்லில் முகாம் செய்திருந்த ஜில்லா கலெக்டர், ஜமீன்தாரை ஒரு முக்ய அலுவலாகப் பார்க்க விரும்புவதாகச் சொல்லியனுப்பினார். ஜமீன்தார் பயணமானார். அடுத்த ஐந்தாறு நாளும் கலெக்டர் துரைக்கு முத்துகாபட்டியில் வரவேற்பு விருந்து முதலிய வைபவங்களுக்கான முயற்சிகள். அதற்குப்பின் அப்படியும் இப்படியுமாக அந்தக் காரியம் கைகூடாமலேயே போய்விட்டது. அது ஒரு பெருங்கதை. தனியே எழுதத்தக்கது. அந்தத் தோப்புக்கு அப்போது விலை சுமார் மூவாயிரம் ரூபாய். இப்போது ஒரு லட்சம் ரூபாய்க்கு அதைத் துண்டு துண்டாக வீடுகளுக்காக விற்றாகி விட்டது......

இந்த இரண்டு சம்பவங்களும் எனக்குப் 'புலவன்' என்ற புகழ் வருவதற்கு முன்னால். நான் புலவனாகி காங்கிரஸில் ஈடுபட்டுக் கடனாளியாகி வறுமையுற்று வருந்துவதைக் கண்டு இரண்டொரு மெய்யன்பர்கள் என்னுடைய இஷ்டத்துக்கு விரோதமாகவும் தாங்களாகவே என் 'புலவன் வறுமையைப்' போக்கிவைக்கவேண்டுமென்று முயன்றார்கள். அந்த அன்பர்களில் தலைசிறந்தவர் எனது நண்பர் நாகராஜ ஐயங்கார்

எம்.எல்.ஏ. அவர் காங்கிரஸ் மந்திரிசபை ஆட்சியிலிருக்கும்போது என்னுடைய புலமைக்கு சர்க்கார் ஆதரவை சம்பாதிக்க முயன்றார். என் கவிதைகளிற் பொது உபயோகத்துக்கு உதவக் கூடியவற்றைப் புத்தகமாகத் திரட்டியும், தமிழ் நூல்களுக்கு எளியநடையில் உரையும் ஆராய்ச்சியும் எழுதச்செய்தும், சுகாதார இலாகாவிற்குப் பிரசாரத்துக்கு உபயோகப்படத் தக்க சிறுசிறு இலக்கியங்களை இயற்றச் செய்தும் எப்படியாவது எனக்கு சர்க்கார் சலுகை கிடைக்க வேண்டும் என்பது அவருடைய எண்ணம். அதற்காக அவர் சொந்த முறையில் சில மந்திரிகளிடம் நேரிலும் கடித மூலமாகவும் என்னைப் பற்றிப் பேசினார். அப்படி என்னைப்பற்றி ஒரு மந்திரிக்கு எழுதிய கடிதத்தில் என்னை ("mute milton") 'மியூட் மில்டன்' என்று வர்ணித்திருந்தார். (மில்டன் என்பவர் ஒரு ஆங்கிலப் புலவர். 'மியூட் மில்டன்' என்றால் வாய் பேசாமல் வறுமையில் வாடிய மில்டன்' என்பது பொருள். ஆங்கில எழுத்தாளர்கள் மில்டனை அப்படி வர்ணிப்பது வழக்கம்). காங்கிரஸ் மந்திரிகள் எல்லாரும் என்னை அறிந்தவர்கள். ஆனால் நான் வறுமைப் பட்டவன் என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். நாகராஜ ஐயங்காருடைய முயற்சியும் எல்லா மந்திரிகளிடத்திலும் அல்ல. இரண்டொரு இலாகா மந்திரிகளிடத்தில்தான். அதிலும் சிறப்பாக சுகாதார மந்திரி டாக்டர் ராஜன் அவர்களிடத்தில். நாகராஜ

ஐயங்காருடைய சிபார்சை உடனே ஒத்துக் கொண்ட டாக்டர் ராஜன் தன்னுடைய இலா காவைப் பொறுத்தமட்டில் என்னுடைய சுகா தாரப் பாட்டுகளுக்கும், சுகாதார நாடகத்துக்கும் கூடிய விரைவில் சர்க்கார் சலுகைக்கு வேண்டிய உத்தரவுகளைச் செய்வதாகவும், புதிய இலக் கியங்களுக்கும் பாட்டுகளுக்கும் தாமே எனக்கு சில விஷயங்களைத் தந்து அவைகளையும் நான் பாட்டாகவோ நாடகமாகவோ செய்தபின் அவற் றைச் சர்க்கார் செலவிலேயே வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்வதாகவும், நாகராஜய்யங்காருக்கு வாக்களித்து அதை என்னிடத்திலும் நேரில் சொன்னார். அவர் அப்படிச் சொல்லிப்போன ஒரு வாரத்துக்குள் காங்கிரஸ் மந்திரி சபை ராஜினாமா செய்துவிட நேர்ந்தது.

1937-ல் காங்கிரஸ்காரர்கள் ஸ்தலஸ்தாபனங் களை யெல்லாம் கைப்பற்றினார்கள். என்னை சேலம்ஜில்லாபோர்டுக்கு ஒரு அங்கத்தினராக நிறுத்தினார்கள். என்மீது பொது ஜனங்கள் வைத்த அபிமானத்துக்காக எனக்குப் போட்டி யாக எவரும் வரவில்லை. போட்டியின்றி தேர்ந் தெடுக்கப்பட்டேன். அன்று முதல் இதை எழுது கின்ற இன்று வரையிலும் (மே. 1944) நான் சேலம் ஜில்லா போர்டில் ஒரு அங்கத்தினராக இருந்து வருகிறேன். காங்கிரஸ் ஜில்லா போர்டு பதவிக்கு வந்த ஆரம்பத்திலேயே சேலம் ஜில்லா போர்டில் இப்ராஹிம் என்ற ஒரு மகம்மதிய அங்கத்தினருடைய பிரேரேபணையினால் "சிறந்த

தேசபக்தரும் தேசீயக் கவிஞரும் இந்த போர்டின் அங்கத்தினருமான, ஸ்ரீ நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளையவர்களின் கவித்துவத்தைக் கௌரவப்படுத்துவதற்காக அவருடைய பாடல்களில் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் தினந்தினம் பாடுவதற்குத் தகுதியுள்ள சில பாட்டுகளைப் பொறுக்கி அவற்றை இந்த போர்டின் செலவில் அச்சிட்டு, இந்த போர்டின் ஆதீனத்திலுள்ள எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் வழங்கி தினந்தினம் பாடும்படிச் செய்ய வேண்டியது" என்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சேலம் ஜில்லா போர்டில் ஐம்பத்திரண்டு அங்கத்தினர்கள். அதில் பத்துப்பேர் ஜஸ்டிஸ் கட்சிச் சார்புடையவர்கள். அவர்கள் அனைவரும் என்னிடத்தில் அன்புடையவர்கள். காங்கிரஸ் கட்சி மனப்பான்மையுடன் வருகின்ற எந்த தீர்மானத்தையும் எதிர்க்கக்கூடிய அவர்களும் இந்தத் தீர்மானத்தை வெகு சந்தோஷத்துடன் ஆதரித்து எனக்குப் பெருமையையும் நன்மையையும் நாடினார்கள்.

அந்தத் தீர்மானத்தையொட்டி அப்படி ஒரு சிறு புத்தகத்தை அச்சடிக்க பழசோ புதிசோ சில பாட்டுகளைத் தொகுத்துக் கொடுக்கும்படி ஜில்லாபோர்ட் தலைவர் உத்யோக முறையில் எனக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பினார். அதற்கிணங்கி நான் சில பாட்டுகளைச் சேர்த்து அதற்குப் 'பிரார்த்தனை' என்று பெயரிட்டு என் சொந்த முயற்சியாகவே அதை அச்சிட்டு அந்த

பிரதி ஒன்றைபோர்டாருடைய அங்கீகாரத்துக்கு அனுப்பினேன். போர்டு அதை உடனே அங்கீகரித்து அதை நானே அச்சிட்டு விற்றுக்கொள்ள அனுமதி கொடுத்து, போர்டு செலவில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் ஒரு பிரதி வீதம் சுமார் 700 புத்தகங்களுக்கு 'ஆர்டர்' கொடுத்து 'அந்த புத்தகத்தை ஜில்லா போர்டின் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் மூன்ருவது வகுப்புமுதல் எல்லா வகுப்புகளிலும் பொதுவான பாடப் புத்தகம் போல மாணவ மாணவிகள் அனைவரும் அதை உபயோகிக்க வேண்டும் என்றும் உத்தரவு செய்தார்கள். இந்த விஷயங்களில் எனக்கு மிகவும் விசேஷ சலுகை காட்டிய போர்டு தலைவர் ஸ்ரீ நாச்சியப்பக் கவுண்டருக்கு நான் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவன். (இன்றைக்கும் ஸ்ரீ நாச்சியப்பக் கவுண்டர்தான் தலைவர். இந்த ஏழு வருஷ காலமாக அவரும் ஓயாமல் ஒவ்வொரு வருஷமும் அந்த உத்திரவை போட்டுக்கொண்டேதான் வருகிருர். இருந்தாலும் என் அதிர்ஷ்டத்தைப் பாருங்கள்!)

ஸ்தலஸ்தாபன பள்ளிக்கூடங்களில் எந்தப் புத்தகத்தைப் பாடமாக வைத்தாலும் அந்தப் புத்தகம் சென்னை சர்க்கார் 'டெக்ஸ்ட் புக்ஸ் கமிட்டி'யினுல் அங்கீகரிக்கப்பட்டதாக 'போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில்' வெளியிடப்பட்டு இருக்க வேண்டும். அப்படியில்லாத எந்தப் புத்தகத்தையும் பாடமாக வைக்கக்கூடாது என்பது சர்க்காரின் கண்டிப்பான உத்திரவு. இந்தப்

புத்தகம் சேலம் ஜில்லா போர்டின் தீர்மானத்தின் மேல், போர்டின் வேண்டுகோளுக்கிணங்கி வெளியிடப்பட்ட புத்தகமானதனால் இதற்கு 'டெக்ஸ்ட் புக்ஸ் கமிட்டியின் அங்கீகாரம் அவசியமில்லை' யென்று ஸ்ரீ நாச்சியப்பக் கவுண்டர் சர்க்கார் அங்கீகாரம் இல்லாமலேயே எல்லா வகுப்புகளிலும் இதைப் பாடப்புத்தகம்போல உபயோகிக்க வேண்டும் என்று உத்திரவு செய்தார்.

சேலம் ஜில்லா போர்டில் சுமார் 679 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இதில் 79 பள்ளிக் கூடங்களை மிகவும் சிறியன வென்று நீக்கிவிட்டாலும் மீதி 600 பள்ளிக்கூடங்களும் இந்த புத்தகத்தை உபயோகிக்கத் தகுதியுள்ளவை. மிகவும் குறைத்துக் கணக்கிட்டாலும் சராசரி ஒவ்வொரு வகுப்பிலும் 25 பிள்ளைகள் இருக்கின்றார்கள். இந்த 600 பள்ளிக்கூடங்களிலும் ஒரு குறிப்பிட்ட வகுப்புக்கு ஒரு குறிப்பிட்ட பாடப்புத்தகத்தை எல்லா மாணவர்களும் வாங்கினால் பதினைந்தாயிரம் பிரதிகள் செலவாகவேண்டும். வகுப்புப் பாடப் புத்தகத்தை அநேகமாக எல்லாப் பிள்ளைகளும் வாங்குகிறார்கள். வாங்கித்தான் ஆகவேண்டும். அப்படி வாங்காதவர்கள் உண்டென்று கணக்கிட்டாலும் குறைந்த பட்சம் பனிரண்டாயிரம் பிரதிகளாவது செலவாக வேண்டும். இந்தக் கணக்கு ஒரு வகுப்புக்குமட்டும். ஆனால் என்னுடைய 'பிரார்த்தனை' புத்தகம் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் மூன்றாவது வகுப்பு முதற் கொண்டு எஸ். எஸ். எல். சி. முடிய எல்லா

வகுப்புகளுக்கும் 'பொதுவான பாடப் புத்தகம் போல உபயோகப் படுத்த வேண்டும்' என்பது உத்திரவு. அப்படியானல் ஒரே வருஷத்தில் குறைந்தது ஐம்பதினுயிரம் பிரதிகள் சேலம் ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களில் மட்டும் செலவாகியிருக்கவேண்டும். அதற்கு அதிர்ஷ்டம் வேண்டாமா? அதுதான் எனக்கில்லை.

இந்த ஏழுவருஷத்தில் சேலம் ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களில் விற்பனையானது ஏழாயிரம் பிரதிகளுக்கும் குறைவாகத்தான் இருக்கும். ஏன்? இது பரீட்சையில் பதில் எழுத வேண்டிய பாடம் அல்ல, 'எல்லாரும் இதை பாடப் புத்தகம்போல உபயோகப்படுத்தவேண்டும்' என்ற உத்தரவிலேயே எல்லாரும் வாங்க வேண்டும் என்ற குறிப்பும் அடங்கியிருக்கிறது. அதற்கு மேல் கட்டாயப்படுத்துவது கண்ணியமல்ல.

இந்தப் புத்தகத்தால் எனக்கு நல்ல ஆதாயம் வந்திருக்கும் என்று எல்லாரும் எண்ணியிருக்கலாம். ஜில்லா போர்டு தலைவரும் ஒவ்வொரு வருஷமும் இந்த உத்தரவை என்னுடைய நலத்தைக் கருதியே போட்டுக்கொண்டு வரும்போது, மற்ற பாடப்புத்தகங்களைப்போலவே இந்தப்புத்தகமும் வருஷா வருஷம் விற்பனையாகிக்கொண்டுதான் இருக்கிறதாக எண்ணிக்கொண்டிருக்கலாம். 'எனக்குக் கொடுத்து வைத்தது இவ்வளவுதான்' என்று எண்ணிக்கொண்டு நான் யாரிடத்திலும் இந்தக் கணக்கை சொல்லிக்கொள்வதில்லை. இங்

தக் குறை எனக்கும் எனக்குப்புத்தகங்களை அச்சடித்த அச்சகக் காரர்களுக்கும்தான் தெரியும்.

சேலம் ஜில்லா போர்டில் மட்டுமா? தமிழ் நாட்டின் எல்லா ஜில்லாபோர்டுகளும் முனிசிபாலிடிகளும் அப்போது காங்கிரஸ்காரர்கள் கையில். ஆனால் மற்ற இடங்களில் இதைப் பாடப் புத்தகம்போல' உத்தரவு போட டெக்ஸ்ட் புக்ஸ் கமிட்டியின் அங்கீகாரம் அவசியம். சேலம் ஜில்லா போர்டின் தீர்மானம் மற்ற இடங்களில் செல்லாது. அதற்காக அந்த சர்க்கார் அங்கீகாரத்துக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து அந்த அங்கீகாரமும் என் அன்பர்கள் சிலருடைய அபிமானத்தால் எதிர்பார்த்ததைக் காட்டிலும் சீக்கிரமாகவே கிடைத்தது. அதனால் அடுத்த வருஷம் ஏறத்தாழ தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஜில்லா போர்டுகளும் முனிசிபாலிடிகளும் சேலம் ஜில்லா போர்டு செய்ததைப்போலவே சொந்தச் செலவில் அந்தந்த ஸ்தாபனத்திலுள்ள பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி புத்தகத்தை வாங்கிக்கொண்டதுடன், 'எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் எல்லா வகுப்புகளிலும் பாடப் புத்தகம்போல' இதை உபயோகப்படுத்த வேண்டும் என்ற உத்தரவுகளையும் பிறப்பித்தார்கள்.

கணக்குப் போட்டுப் பாருங்கள்! எத்தனை லட்சம் பிரதிகள் விற்றிருக்க வேண்டும்! நான் எவ்வளவு பணக்காரனாகி யிருக்கவேண்டும்! இதுவரைக்கும் நான் அச்சிட்டது இருபத்தையாயிரம்

பிரதிகளேதான். அவற்றில் இந்த ஏழு வருடங்களாக தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஜில்லா போர்டுகளும் முனிசிபாலிடிகளும் விலைக்கு வாங்கிக் கொண்டதும் பள்ளிக்கூடங்களில் விற்றதும், மாதிரிப் பிரதிகளாக கல்விக் கமிட்டிகளுக்கும் மற்றவர்களுக்கும் இலவசமாகக் கொடுத்ததும், பந்து மித்திரர்கள் எடுத்துக் கொண்டு போனதும் எல்லாம் போக, இன்னும் சுமார் எண்ணாயிரம் பிரதிகள் புத்தகக் கடைகளிலும் அச்சாபீசிலும் புழுதி படிந்து கிடக்கின்றன.

இதைப் 'புலவன் வறுமை' என்று என் நண்பர்களிற் பலரும் சொல்லுகின்றார்கள். நானோ 'இது புலமையினால் வந்த வறுமையல்ல, எனக்கு அவ்வளவுதான் அதிர்ஷ்டம்' என்று சொல்லுகிறேன். இன்னும் சிலர் 'இது புலவன் வறுமையும் அல்ல, அதிர்ஷ்டக் குறைவும் அல்ல, ஆனால் சரியான முயற்சிகளைச் செய்து புத்திசாலித்தனமாகக் காரியங்களைக் கண்காணிக்கத் தவறிய தப்பிதம்' என்கிறார்கள். எது சரி என்பதை நீங்கள் சொல்லுங்கள்.

என் 'புலவன் வறுமையைப்' போக்கி என்னைக் கொஞ்சம் பணக்காரனாக்கி விட வேண்டுமென்று துடிக்கின்ற இன்னொரு நண்பர் தேவகோட்டை நா. அண்ணாமலை அவர்கள். அவரும், தேவகோட்டை கரு. லெட்சுமணன் அவர்களும், பள்ளத்தூர் மு. அ. வீரப்பன் அவர்களும் சேர்ந்து 'தமிழ்ப் பண்ணையை' ஆரம்பித்

ததும், அந்தத் துடிப்பினால். கும்பகோணம் ரஹீம் அவர்கள் தம்முடைய மற்ற அலுவல்களை யெல்லாம் விட்டுவிட்டு, 'தமிழ்ப்பண்ணை' யிற் சேர்ந்து என்னுடைய இலக்கியங்களுக்குச் சிறப்புத் தேட இசைந்ததும் அந்தத் துடிப்பினால்.

தமிழ்ப்பண்ணை ஆரம்பமாகு முன் ஸ்ரீ அண்ணாமலை, தம்முடைய சொந்த யோசனையாக, எனக்கும் தெரியாமல் என்னுடைய கடன் தொல்லைகளையும் குடும்ப கஷ்டநிஷ்டூரங்களையும் தேவகோட்டை-ஸ்ரீ திருநாவுக்கரசு அவர்களிடம் சொல்லி எனக்கு உதவி தேடினார்.

ஸ்ரீ திருநாவுக்கரசு தேவகோட்டையில் மிகச் சிறந்த தேசபக்தருள் ஒருவர். காங்கிரசுக்காகப் பல அரிய சேவைகளையும் பெரிய தியாகங்களையும் செய்த தீரர். காங்கிரஸ் தொண்டர்களுக்குக் காலம் நேரம் கணக்குப் பார்க்காமல் ஆதரவு செய்த அருங்குணமுள்ளவர். ஆயிரக்கணக்கிலும் வெகு அனாயாசமாக உதவி புரியக்கூடிய உயர்ந்த செல்வ நிலை உள்ளவர். தமிழ் இலக்கியங்களில் ஆர்வம் மிகுந்தவர். என்னை நேரிற் பார்க்காமலும்கூட என்னுடைய பாட்டுகளின் மூலமாகவே என்னை நேசித்து வந்தவர். 1940-ல் காந்தியடிகள் நடத்திய 'பொறுக்கி-எடுத்த-தனிநபர்-சத்யாக்கிரகிகளில்' ஒருவராகி ஆயிரம் ரூபாய் அபராதமும் ஒன்பது மாதச் சிறைவாசமும் தண்டனை பெற்றுச் சிறையிலிருக்கும்போது, அவருடன் காரைக்குடி சா. கணேசன் அவர்களும் அதே

சத்யாக்கிரகத்தில் ஈடுபட்டு அதே சிறையில் இருந்தார். செட்டிமார் நாட்டில் எனக்கு முதல் முதல் அறிமுகமானவருள் ஒருவர் சா. கணேசன். சிறந்த தமிழபிமானியும், நல்ல கலா ரசிகரும், கம்பன் விழாக் கர்த்தரும், நவயுகப் புலவன் பாரதியின் பண்பறிந்த நண்பரும், நாஞ்சிநாட்டுப் புலவர் தேசிக விநாயகம் பிள்ளைக்குப் பொன்னுடை பூட்டச் செய்த பொறுப்பாளியும், விடுதலை வெறிகொண்ட தேச பக்தரும், மேற்கொண்ட காரியத்தில் மெய்மறந்து உழைக்கக் கூடிய பொதுநலத் தொண்டரும், சலிக்காத தியாகியுமான சா. கணேசன், எனக்கு ஒரு இனிய நண்பர். அவரும் சிறையில் என்னைப்பற்றி ஸ்ரீ திருநாவுக்கரசுடன் பேசிய பேச்சுகளால், ஸ்ரீ திருநாவுக்கரசுக்கு என்மேலிருந்த அபிமானம் அதிகப்பட்டிருந்தது.

ஸ்ரீ திருநாவுக்கரசு விடுதலையடைந்த சில நாளைக்குள்ளாகத்தான் ஸ்ரீ அண்ணமலை எனக்காக, எனக்குத் தெரியாமல் அவரைக் கண்டு பேசினது. என்னைத் தேவகோட்டைக்கு வரும்படி அண்ணமலை எழுதினர். போனேன். திருநாவுக்கரசு என்னைப் பார்க்க விரும்புவதாக அண்ணமலை சொன்னர். இருவருமாக திருநாவுக்கரசு வீட்டுக்குப் போனேம். அவரும் நானும் முதல் முதல் சந்தித்தது அப்போதுதான். நெடுங்காலம் பழகிப் பிரிந்து போயிருந்த ஒரு நேசனைக் கண்டது போல என்னை எதிர்கொண்டு உபசரித்தார். சில நாள் என்னைத் தம்முடன் தங்கியிருக்

கும்படி விரும்பினார். நான் சம்மதித்தேன். அப்படி அவருடன் தங்கியிருக்கும்போது தான் அண்ணாமலை, அவரைப் பலமுறை எனக்காகப் பார்த்ததையும், கணேசன் சிறையில் என்னைப் பற்றி அவருக்குச் சொல்லியிருக்கிறார் என்பதையும் அறிந்தேன். என்னுடைய பொருளாதார நிலைமைகளை விவரமாகச் சொல்லும்படி ஸ்ரீ திருநாவுக்கரசு வற்புறுத்தினார். நான் சொன்னேன்: எனக்கு மோகனூரில் ஒரு ஏக்கர் நன்செய் நிலம் உண்டு. அதன் விலை அப்போது சுமார் ரூ. 4000. நாமக்கல்லில் ஒரு வீடு. அதன் மதிப்பு அப்போது ரூ. 3000. நிலத்தில் குத்தகை வருமானம் கந்தாயம் நீக்கி வருஷத்தில் ரூ. 125. அதுதான் எனக்கு நிச்சயமான வருவாய். வீட்டில் நாங்களே குடியிருப்பு. நிலத்தின்மேல் 2500 ரூபாய் கடனும், வீட்டின்மேல் 1500 ரூபாய் கடனும், கைமாற்றுகளாகவும் கடைகளில் பாக்கிகளாகவும் முன்னே சொன்ன 'பிரார்த்தனை' புத்தகத்தை அச்சிட்ட வகையில் அச்சாபீசுக்கு பாக்கியாகவும் சுமார் ரூ. 1500 கடனும் ஆக சுமார் ஐயாயிரத்து ஐந்நூறு ரூபாய் கடன்கள் வீட்டையும் நிலத்தையும் விழுங்கிவிடக் காத்துக்கொண்டிருந்தன. அதுமட்டுமல்ல, ஐந்து குழந்தைகளுடன் கூடிய எங்கள் குடும்பம் கண்ணியம் குறையாமல் காலட்சேபம் செய்யவும் ஒரு வழிதேடவேண்டும். இதுதான் அப்போதிருந்த என்னுடைய நிலைமை. இந்த நிலைமையை மாற்ற ஸ்ரீ அண்ணாமலை எண்ணியிருந்த திட்டம் என்னவென்றால்:

ஸ்ரீ திருநாவுக்கரசின் சிறப்பான செல்வநிலையை மூலபலமாகக்கொண்டு அவருடைய தலைமையில் ஸ்ரீ அண்ணாமலையும், ஸ்ரீ கரு. லெட்சுமணனும், தாங்களும் தம்மாலான முதல் போட்டு என்னுடைய இலக்கியங்களை நல்ல பதிப்புகளாக வெளியிட்டு அவற்றின் விற்பனையின் மூலமாக எனக்கு வேண்டிய உதவிகளைச்செய்வது என்பது. அந்த முறையில்தான் ஸ்ரீ அண்ணாமலை ஸ்ரீதிருநாவுக்கரசை பலமுறை பார்த்தது. என்னிடம் ஸ்ரீ அண்ணாமலை அந்த விவரங்களைச் சொல்லாததால், ஸ்ரீ திருநாவுக்கரசு என்னுடைய கடன் விவரங்களையும் குடும்ப நிலைமையையும் விசாரித்த போது நான் அவரிடம் எந்த முறையில் என்ன சொல்லிக்கொள்வது என்று தெரியாமல் கூசிக் கூசி என் குறைகளைக் கூறினேன். நான் சொன்னதையெல்லாம் கேட்டு முடிந்ததும் ஸ்ரீ திருநாவுக்கரசு சொன்னார், "இவ்வளவுதானே? இதற்காகவா இவ்வளவு சிரமம்? இதற்காக ஒரு புத்தகக் கம்பெனியை ஆரம்பித்து, உங்கள் புத்தகங்களை அச்சிட்டு, அவற்றை விற்று, அந்த லாபநஷ்டக்கணக்குகளைப் பார்த்துக்கொண்டு, உங்களுக்கு என்ன கொடுத்து எப்போது உங்கள் தொல்லைகளைத் தீர்ப்பது? புத்தகங்களை வெளியிடும் முயற்சிகளை அண்ணாமலை செய்யட்டும். அதனால் வரக்கூடிய நன்மைகள் வரட்டும். என்னைப் பொறுத்தமட்டில் இந்தக் கடன்களையெல்லாம் நானே தீர்த்து உங்கள் கவலையை நீக்குகின்றேன். இன்னும் பதினைந்து நாட்களுக்குள் உங்

கள் நிலத்தின் மேலிருக்கிற கடனை முதலில் தீர்ப்போம். அதன்பின் இரண்டொரு மாதத்தில் மற்றவைகளுக்கும் நானே வகை செய்து வைக்கிறேன். நீங்கள் நிம்மதியாக இருங்கள்" என்றார்.

இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே அண்ணாமலையும் வந்தார். திருநாவுக்கரசு தம்கருத்தை அவரிடம் சொன்னார். அண்ணாமலை ஆனந்தப பரவசமானார். திருநாவுக்கரசு அவர்களுக்கு நான் சொல்லவேண்டிய வந்தனங்களையும், வாழ்த்துகளையும் அண்ணாமலையே சொல்லி எனக்கு உதவிபுரிந்தார்.

மறுநாள் நான் திருநாவுக்கரசு அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு, இன்னும் இரண்டு நாள் தேவகோட்டையிலேயே ஸ்ரீ லெட்சுமணன் அவர்கள் வீட்டில் தங்கியிருந்துவிட்டு நாமக்கல் வந்துவிட்டேன். 'திருநாவுக்கரசு என் கடன்களைத்தீர்ப்பதாக வாக்களித்துவிட்டார். அவர் சொன்ன சொல்லைக் காப்பாற்றக்கூடிய சுத்தர். இனிமேல் அவராச்சு, என் கடனாச்சு, எனக்கென்ன கவலை? அவர் எப்போது தீர்த்தால் எனக்கென்ன? எத்தனை நாளானாலும் எவ்வளவு வட்டி ஏறினாலும் அதெல்லாம் அவருடையபாடு என்று நான் என்னுடைய முயற்சியாக எதுவும் செய்யாமல் நாமக்கல்லில் சுமார் ஒரு மாத காலம் சும்மா இருந்துவிட்டேன். இதையறிந்த அண்ணாமலை "திருநாவுக்கரசு சொன்ன சொல்லை மறக்கப்பட்டவரல்ல. ஆனால் அவர் பல ஜோலிக்

காரர். நம்முடைய காரியத்தில் நாம்தான் கருத்துக்கொள்ளவேண்டும். தாங்கள் மறுபடியும் வந்து அவருக்கு நினைப்பூட்டவேண்டும்' என்ற பொருளில் எனக்கு ஒருகடிதம் எழுதினார்.

நான் தேவகோட்டைக்குச் சென்றேன். ஸ்ரீ திருநாவுக்கரசு முன்போலவே என்னை மிகவும் அன்புடன் வரவேற்று உபசரித்தார். இரண்டு மூன்றுநாள் தேவகோட்டையில் இருந்த பின் திருப்புனவாசல் என்னும் சிவஸ்தலத்துக்குப் போனோம். திருநாவுக்கரசு அவர்களுக்குச் சொந்தமான நில்புலன்கள் நிறைந்த கிராமம் திருப்புனவாசல். பாடல் பெற்ற புராதன க்ஷேத்திரம். அங்கே, கோடைகாலத்தில் தங்கியிருக்கத்தக்க குளிர்ச்சியான ஒரு பூந்தோட்டமும், அதன் மத்தியில் நவநாகரீக வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளெல்லாம் பொருந்திய ஒரு பங்களாவும், திருநாவுக்கரசு அவர்களுக்குச் சொந்தம். நாங்கள் போன சமயத்தில் அந்த பங்களாவில் ஏற்கனவே இருந்த பழைய கட்டிடத்துடன் இன்னொரு புது மாடிவீடும் பூர்த்தியடைந்து பூச்சு வேலை நடந்து கொண்டிருந்தது.

தேவகோட்டையிலிருந்து திருப்புனவாசலுக்கு அப்போது நேரான வண்டிப்பாதை இல்லை. தேவகோட்டையிலிருந்து தொண்டி என்னும் கடற்கரை கிராமத்துக்குப் போய் அங்கிருந்து சுமார் பத்து மைல் தூரம் கடற்கரை ஓரமாகவே வெறும் மணல் தடத்தில் போய்த்தான் திருப்புன

வாசலைச் சேரவேண்டும். அந்தத் தடம் முற்றி லும் காட்டுப் பாதை. கள்ளர் பயமும் உண்டு. ஒரு இரட்டை மாட்டு வண்டியில் மாலை ஐந்து மணிக்குமேல் தொண்டியைவிட்டுப் புறப்பட்டு மணிக்கு ஒன்றரை மைல் வீதம் ஓட்டி, இரவு பதினொரு மணிக்குப் பக்கமாகத் திருப்புன வாச லைச்சேர்ந்தோம். இடையில் எங்கள் வண்டி யைப் பின் தொடர்ந்த சிலரைக் கள்ளர்கள் என்று கருதிய திருநாவுக்கரசு திடீரென்று வண்டியிலிருந்து குதித்து ஒரு துணிச்சலான காரியத்தைச் செய்தார். (அதைப் பற்றி இன் னொரு கதையில் எழுதுவோம். அதை இங்கே விரித்தால் 'புலமையும் வறுமையும்' என்ற தோடு பொருந்தாது)

திருப்புன வாசலுக்கு வந்த மறுநாட் காலை யில், ஆகாரம் ஆனபின், நானும் திருநாவுக்கரசும் பங்களாவின் முன்புறத்தில் திறந்த வெளியில் குளிர்ந்த மரங்களின் நிழலில் காற்று வாங்க வென்றே கட்டப் பெற்ற மேடையில், சாய்வு நாற்காலிகளிற் சாய்ந்து கொண்டு வெவ்வேறு விஷயங்களைப்பற்றி வெகுநேரம் பேசிக்கொண்டி ருந்தோம். 'நரக வாழ்க்கை' என்று பல அறிஞர் கள் அருவருக்கின்ற நகர வாழ்க்கைக்கு வெகு தூரத்தில், பட்டணக்கரைகளின் பர பரப்பும் படாடோபங்களும் பக்கத்திற் கூட வரமுடியாத அந்த குக்கிராமத்தில், சிவன் கோவிலைத்தவிர உயர்ந்த கட்டிடம் கண்ணுக்குப்படாத அந்தச் சிறிய ஊரில், அந்த நந்தவனத்தின் அமைப்பும்

அங்குள்ள அமைதியும் எனக்கு ஆனந்தமுண்டாக்கின. அந்த ஆனந்த மேலீட்டால் கம்பராமாயணம், திருக்குறள், சங்கநூல்கள், பாரதம், அரிச்சந்திர புராணம், பாரதியார் கவிதை, என்னுடைய கவிகள் முதலியவற்றுள் திருநாவுக்கரசு விரும்பின பாடல்களைப்பாடி வியாக்கியானம் செய்து கொண்டிருந்தேன்.

இவ்வளவு குதூகலத்திலும் இடையிடையே என்னுடைய கடன்தொல்லைகளும் அவற்றைத் தீர்த்து வைப்பதாக திருநாவுக்கரசு கொடுத்திருந்த வாக்கும் அதற்காகவே நான் வந்து நான்கு நாட்களாகியும் அதைப்பற்றி திருநாவுக் பேசவேயில்லையே என்ற ஏக்கமும் வந்து வந்து மறைந்தன.

இப்படி நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது கோயில் பிரசாதங்கள் கொண்டு வரப் பட்டன. ஸ்ரீ திருநாவுக்கரசு அந்த ஊருக்குக் காணியாட்சிக்காரர். ஆனதால் அவருக்கு விசேஷமான கோயில் மரியாதைகள் உண்டு.

மாலையில் அவருக்குச் சொந்தமான பண்ணை நிலங்களில் ஒரு பகுதியையாவது நான் பார்க்க வேண்டுமென்று திருநாவுக்கரசு என்னை அழைத்துக் கொண்டுபோய் காட்டினார். அந்த ஊரில் திருநாவுக்கரசு அவர்களுக்கு ஏராளமான செல்வமும் செல்வாக்கும் இருப்பதைக் கண்டேன். பங்களாவிற்குத் திரும்பி வந்ததும் நாங்கள் இரு

வரும் மறுபடியும் காலையில் உட்கார்ந்திருந்த இடத்திலேயே ஏகாந்தமாக உட்கார்ந்தோம்.

"இந்த ஊர் உங்களுக்குப் பிடிக்கிறதா?" என்றார் திருநாவுக்கரசு.

"அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்? இவ்வளவு அழகும் அமைதியுமுள்ள இடத்தை நான் பார்த்ததேயில்லை" என்றேன்.

"இதையெல்லாம் நீங்கள் பார்க்கவேண்டும் என்றுதான் உங்களை அழைத்து வந்தேன். தேவகோட்டையில் இருப்பதைக் காட்டிலும் இங்கேயே நான் தங்கியிருந்து விவசாயத்தை கவனிக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறேன். அதற்காகத்தான் இந்தப் புதுக் கட்டிடத்தையும் கட்டுகின்றேன். இது வெகு நிம்மதியான இடம். உங்களைப்போன்ற கவிஞர்கள் தங்கியிருந்து புதுப் புது இலக்கியங்களை எழுதுவதற்கு மிகவும் ஏற்றது. உங்களுக்கு இஷ்டமான எல்லா வசதிகளையும் செய்துகொடுத்து உங்களையும் என்னுடனேயே வைத்துக் கொள்ளலாமென்ற எண்ணமும் எனக்கிருக்கிறது. கடன்களைப் பற்றியும் குடும்பத்தைப் பற்றியும் கவலைப்படவேண்டாம். அதையெல்லாம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றார்.

அதைக்கேட்டு எனக்குக் களிப்பும் வியப்பும் கலந்த ஒரு உணர்ச்சி உண்டாகி இன்னது சொல்வதெனத் தெரியாமல் திக்கித்திக்கி வாய் குளறிச் சில வந்தனவார்த்தைகளை மட்டும் சொல்

லிவிட்டு என்னுடைய விசாரங்களெல்லாம் அப்போதே விட்டொழிந்ததுபோல மகிழ்ந்தேன்.

மறுநாள் தேவகோட்டைக்குத் திரும்பினேம். ஒருநாள் அங்கே தங்கிவிட்டு ஸ்ரீ திருநாவுக்கரசும் அவருடைய அந்தரங்க நண்பரான காலஞ்சென்ற ஸ்ரீ மாணிக்கவாசகன் அவர்களும் நானும் நாமக்கல்லுக்குப் புறப்பட்டோம். ஸ்ரீ மாணிக்கவாசகன் தமிழ்நாட்டின் மிக உயர்ந்த காந்தீயவாதிகளில் ஒருவர். காந்தீயத்துக்கு அத்யாவசியமான ஸாத்விக குணத்தை இயற்கையாகவே நிறையப் பெற்றவர். பெரிய தியாகி. அவர் ஸ்ரீ திருநாவுக்கரசு எனக்குச் செய்யநினைத்த உதவிகளைச்சிறந்த தேசசேவையென்று புகழ்ந்து மகிழ்ந்தவர். நாங்கள் மூவருமாக காரைக்குடிக்கு வந்தோம். ரெயில் வண்டி கிடைக்கவில்லை. திருநாவுக்கரசு முன்வைத்தகாலைப் பின்வைக்க மாட்டார். பஸ்ஸில் திருச்சிக்குப் புறப்பட்டோம். திருச்சிக்கு வந்துசேருமுன் மாலை ஆறு மணியாகிவிட்டது. அதற்குமேல் திருச்சியிலிருந்து நாமக்கல்லுக்கு மோட்டார் இல்லை. இரவு திருச்சியில் தங்கினேம். படுக்கப் போகும் போது திருநாவுக்கரசு என்னிடத்தில் ஒரு கத்தை 'கரன்ஸி' நோட்டுகளைக் கொடுத்து அதை என் சட்டைப் பைக்குள் பந்தோபஸ்து செய்யச் சொன்னார். (நான் 'கோட்' போட்டிருந்தேன். அவரும் மாணிக்கவாசகரும் வெறும் 'ஆபாரம்' மட்டும் அணிந்திருந்தார்கள்) அவர் அந்தப் பணக் கத்தையை என்னிடம் கொடுத்த போதுதான்

திருநாவுக்கரசு சும்மா கணக்குப் பேசமட்டும் வந்தவரல்ல, ஆனால் காரியத்தை முடிக்கப் புறப் பட்டிருக்கிறார் என்று அநுமானித்தேன். அந்தக் கத்தையை அப்படியே வாங்கி பத்திரப்படுத்தி னேன். ஆனால் அவர் சொன்னமாதிரி நான் அதை என் சட்டைப்பையில் வைக்கவில்லை. பெருந்தொகையான பணத்தை நான் பயணம் போகையில் சட்டைப் பையில் வைப்பது வழக்க மில்லை. ஒரு கைக் குட்டையில் இறுக முடிந்து இடுப்பில் அரைஞாண் கயிற்றில் மடிக்கு நே ராகக்கட்டி மறைத்துக்கொள்வது வழக்கம். இந்த வழக்கம் என் தந்தை வற்புறுத்தி எனக் குப் பழக்கிவிட்டது. (திருநாவுக்கரசு கொடுத்த கத்தையில் மூவாயிரம் ரூபாய் இருந்ததாகப் பின் னால் அறிந்தேன்.)

நாமக்கல் போய்ச் சேர்ந்தோம். மத்யான உணவு என் வீட்டில் நடந்தது. நாமக்கல்லில் திருநாவுக்கரசு அவர்களுடைய மைத்துன ருடைய 'பாங்க்' ஒன்று உண்டு. அந்த மைத் துனரும் அப்போது அங்கே இருந்தார். மாலை சிற்றுண்டியும், ராத்திரி சாப்பாடும், எங்கள் மூவருக்கும் திருநாவுக்கரசு மைத்துனர் வீட்டில். மறுநாள், காலை ஆகாரமும் அங்கேயே முடித்துக் கொண்டு திருநாவுக்கரசு ஸ்ரீ நாகராஜ ஐயங் காரைப் பார்க்க விரும்பினார். மூன்றுபேரும் நாக ராஜ ஐயங்காரிடம் போனோம். நாகராஜ ஐயங் கார் என்னுடைய குடும்ப விஷயங்கள் அனைத்தை யும் அறிந்தவர். அவரும் திருநாவுக்கரசும் கலந்து

பேசினார்கள். என்னுடைய மோகனூர் நிலத்தின் அடமானக்காரர் ஏதாவது வட்டி குறைத்து வாங்கிக் கொள்வார்களா என்று ஸ்ரீ திருநாவுக்கரசு ஸ்ரீ நாகராஜய்யங்காரைக் கேட்டார். நாகராஜய்யங்கார் பதில் சொல்லுவதற்குள்ளாக ஸ்ரீ மாணிக்கவாசகன் "என்னத்துக்கு இந்த கணக்கெல்லாம் பார்க்கிறீர்கள்........" என்று என்னமோ முணகினார். உடனே திருநாவுக்கரசு அந்தக் கடனுக்கான தொகை பூராவையும் நாகராஜ ஐயங்காரிடத்தில் கொடுத்து கடனைத் தீர்த்து பத்திரத்தை வாங்கி என்னிடம் கொடுத்து விடும்படி சொல்லிவிட்டு உடனே ஊருக்குப் புறப்படுவதாக ஐயங்காரிடம் விடை பெற்றுக் கொண்டார்.

மத்யான சாப்பாடும் அவருடைய மைத்துனர் வீட்டிலேயே நடந்தது. திருச்சிராப்பள்ளி வழியாகத் திருநாவுக்கரசு தேவகோட்டைக்கும், சேலம் வழியாக மாணிக்கவாசகம் மதராசுக்கும் புறப்பட்டார்கள். விடை பெற்றுக்கொண்டு பிரிந்து போகுமுன் திருநாவுக்கரசு என்னை ஒரு ஏகாந்த இடத்துக்கு அழைத்துச் சென்று "இன்னும் ஒரு மாதத்துக்குள் எல்லாக் கடன்களையும் தீர்த்து விடுவோம். இனிமேல் நிலத்தின் மேலாவது வீட்டின் மேலாவது கடன் வாங்காமல் அவற்றை உங்கள் குழந்தை குட்டிகளுக்கே விட்டுவிடுங்கள். உங்கள் குடும்பச் செலவுகளுக்குக் குறைவில்லாதபடி ஒரு நிச்சயமான வரும்படிக்கும் நான் வழி செய்து வைக்கிறேன். நீங்கள்

என்னோடு திருப்புனவாசலில் கொஞ்ச காலமாவது தங்கியிருக்கத் தயாராக இருங்கள். எல்லா விபரத்துக்கும் நான் கடிதம் எழுதுகிறேன். அல்லது இன்னும் பத்துப்பதினைந்துநாள் இங்கிருந்துவிட்டு நீங்களே தேவகோட்டைக்கு வருவதானுலும் சந்தோஷம்" என்று சொல்லிவிட்டு விடைபெற்றுக்கொண்டார். நான் மோட்டார் நிலையத்துக்கு அவர்களுடன் சென்று வண்டியில் ஏற்றியனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்து என்னுடைய கஷ்டங்களெல்லாம் போய்விட்டனவென்று பூரிப்படைந்தேன்.

இப்படி திருநாவுக்கரசு சொல்லிப்போன பனிரண்டு நாளைக்குள் பம்பாயில் காந்தியடிகளையும் காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களையும் மற்றும் பலரையும் சர்க்கார் கைது செய்துவிட்டார்கள். நாட்டின் எல்லாப் பாகங்களிலும் குழப்பங்கள் கொந்தளித்தன. அங்கங்கே பல அட்டூழியங்கள் நேர்ந்து விட்டன. தேவகோட்டையில் சப் கோர்ட்டைத் தீவைத்துக் கொளுத்தி விட்டார்கள்.

திருநாவுக்கரசு அவர்கள் தீ வைத்த கேசில் சம்பந்தப்படுத்தப்பட்டு ஏழுவருஷக் கடுங்காவல் தண்டனையும் அதிகாரிகளை அடிக்க முயன்றதாக மூன்று வருஷத் தண்டனையும் ஆக பத்து வருஷம் தண்டனையடைந்தார். அத்துடன் அவர் எனக்கு என்னென்னமோ நன்மைகளை யெல்லாம் செய்யப் போகிருர் என்று நான் எண்ணிய எண்ணங்

களில் இடி விழுந்தது. இன்னும் ஏழெட்டு வருஷங்கள் போகவேண்டும், அவரை இந்த சர்க்கார் விடுதலை செய்ய! அதற்குள் எந்த ராஜா எந்த நாட்டிலோ! பார்த்துக் கொள்வோம்.

திருநாவுக்கரசர் தீ வைத்த குற்றத்தில் சம்பந்தப்பட்டாரா, இல்லையா, என்பதும் சர்க்கார் உத்யோகஸ்தரை அடிக்க முயன்றாரா இல்லையா என்பதும் எல்லாருக்கும் தெரியும்; ஆனால் எனக்கு என்னவோ நன்மைகளை யெல்லாம் செய்து வைப்பதாக உறுதி கூறிச் சென்ற அவர், எனக்கு ஒன்றும் செய்ய முடியாதபடி இப்படித் தடுத்து விட்டது என்னுடைய துர் அதிர்ஷ்டமா அல்லவா என்பது எவருக்கும் தெரியாது.

இந்தக் கதையின் ஆரம்பத்தில் சொல்லப் பட்ட என்னுடைய பால்ய சிநேகர் ஸ்ரீ ரங்கநாதம் செட்டியார் எனக்கு எழுதிவைத்த தான சாசனத்தையும் பாருங்கள்.

ஒரு வருஷம் சிறைவாச தண்டனையை அனுபவித்துவிட்டு விடுதலை பெற்று வீட்டுக்கு வந்து இருபதுநாள் இருக்கும். தேச சேவைக்காக நான் செய்த தியாகத்தைப் பராட்டுதற்காகவும் பத்து மாதங்களுக்குமேல் பார்க்காமல் இருந்ததனால் பார்த்துவிட்டுப் போவதற்காகவும் வந்து போன பந்துமித்திரர்களுடைய கூட்டம் குறைந்து விட்ட சமயம்.

ஒருநாள் காலை பத்து மணிக்கு நான் எங்கள் வீட்டு மாடியில் ஒரு பெரிய ஜன்னலுக்கருகில்

மேஜைக்குமுன்னால் மிகவும் மெலிந்து போன உடலோடும் சற்றே நலிந்துபோன உள்ளத்தோடும் உட்கார்ந்திருந்தேன். மெலிந்துபோன உடலுக்குக் காரணம் சிறைவாசம்தான். நான் பி. வகுப்புக் கைதியாகத்தான் இருந்தேன். சாப்பாடு சௌகரியங்கள் கூடுமானவரையில் பி. வகுப்புக் கைதிகளுக்கு நன்றாகத்தான் நடத்தப்பட்டன. சிலபேர் சிறைவாசத்தால் 'ஊதிப்போனார்கள்' என்று கூட உரைக்கலாம். ஆனால் நானோ, நூற்று நாற்பத்தைந்து பவுண்டு எடையோடு உள்ளே போனவன் நூற்று இருபத்திரண்டு பவுண்டு எடையுடன் வெளியே வந்தேன். உடல் மெலிந்திருந்தது அப்படி. உள்ளம் நலிந்திருந்தது எதனால் என்றால் கையில் காசில்லாததனால். 'வறுமை' என்ற வார்த்தையின் பொருளை என் வாழ்க்கையில் முதல் முதல் நான் அநுபவித்தது அன்றைக்குத்தான். கேட்டால் கொடுக்கக்கூடியவர்கள் இருந்தாலும் 'என்னுடைய பணம்' என்று சொல்லிக்கொள்ள எதுவும் அப்போது என்னிடத்தில் இல்லை. கடந்த பத்து வருஷங்களாகத் தொழிலையும் வருமானத்தையும் கவனிக்காமல் அரசியல் பிரசாரங்களிலேயே அலைந்து கொண்டிருந்துவிட்டதன் லௌகிகப் பலனை அப்போது தான் அறிந்தேன். அதுவரையிலும் அதற்கு முன்னால் சேமித்திருந்த பொருள் உதவி வந்தது. 1913 முதல் 1920 முடிய என் சித்திரத் தொழிலை வெகு சிரத்தையுடன் நடத்தினேன். ஒரு வருஷத்தில் குறைந்தது நான்கு பெரிய உருவப்படங்கள்

வரைவேன். படம் ஒன்றுக்குச் சராசரி 750 ரூபாய் கிடைக்கும். அத்துடன் போட்டோ வேலையில் மாதம் 200 ரூபாய் வரையிலும் கிடைக்கும். இதற்குமேல் என்னுடைய ஜமீன்தார் நண்பர்களுடைய சமஸ்தானங்களின் மாமூல் சம்பாவனைகளாக தீபாவளி, பொங்கல் கல்யாணம் கார்த்திகை என்று பல வழிகளில் வந்துகொண்டிருக்கும். என் தந்தையின் போலீஸ் பென்ஷனும், அவர் சில இடங்களில் கொடுத்து வைத்திருந்த பணமும் அதன் வட்டியும் எல்லாம் சேர்ந்தது எங்கள் வருவாய். இதற்குமேலும் நான் கேட்டதைக் கேட்டவுடன் கொடுக்கக்கூடிய இளம்பள்ளி ஜமீன்தார் இராஜலிங்கம் செட்டியாரைப் போன்ற இரண்டொரு நண்பர்களும் இருந்தார்கள். (நான் சிறைக்குப் போவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னுலேயே அவர்களெல்லாம் மாண்டுபோனார்கள்) 1921-ம் வருஷத்தில் நான் காந்தீயத்தில் ஈடுபட்டேன். அதற்குப்பின் கொஞ்சங் கொஞ்சமாக என் தொழில் முயற்சிகள் குறைந்துகொண்டே வந்து ஐந்தாறு ஆண்டுகளுக்குள் தொழிலைப்பற்றி நினைக்கவே நேரமில்லாமற் போய்விட்டது. கையிலிருந்த பொருள் கரைந்துகொண்டே வந்ததையும் கணக்குப் பார்க்கக் கவலை கொள்ளவில்லை. வரவேண்டிய பணங்களை வசூல் செய்யவும் வழிதேடவில்லை. பட்டம் பதவிகளையும் பள்ளிக்கூடங்களையும் உத்யோகங்களையும், கோர்ட்டுகளையும் பகிஷ்கரிக்க வேண்டுமென்று

அப்போது செய்துவந்த பிரசாரங்களை வெகு தீவிரமாக உபதேசித்தவர்களில் நான் ஒருவன் அதனால் இரண்டாயிரத்து மூன்னூற்றைம்பது ரூபாய் வசூலாகவேண்டிய ஒரு 'டிக்ரியை' நிறை வேற்றுமல் அந்தப்பணத்தை இழந்தேன். சில 'பாண்டு' பத்திரங்கள் பிராதுக்கும் போகாமல் காலாவதியாகின. பாப புண்ணியங்களுக்குப் பயந்த இரண்டொருவர் அந்தப் பத்திரங்களுக் காகக் கொடுக்கவேண்டிய தொகையில் கொஞ் சம் கொடுத்தார்கள். (அவர்களும் முழுக்கக் கொடுக்கவில்லை) மற்றவர்கள் ஏமாற்றியே விட் டார்கள். என்னுடைய மனைவியின் நகைகளும் ஒவ்வொன்ருக அடகுவைக்கப்பட்டு விட்டன. நகைகள் மட்டுமா! நான் வாங்கியிருந்த எல்லா தங்கமெடல்களும் கூட வட்டிக்கடையின் பெட் டிக்குள் மறைந்தன. அடகுவைக்கக்கூட உருப் படியான நகை ஒன்றுமில்லாத சமயம்.

சத்தியாக்ரகத்தில் சேவைபுரிந்த சந்தோஷ மும் அதனால் அடைந்த புகழின் பூரிப்பும் ஒரு புறம் இருந்தாலும் கையில் காசில்லாத கவலை மிகவும் கலக்கித்தான் விட்டது.

இப்படிப்பட்ட கலக்கத்திஞல் 'நலிந்த உள் ளத்தோடு' உட்கார்ந்து கொண்டிருந்தேன். வீதிப்புறத்திலிருந்து மோட்டார் வண்டியின் 'ஹாரன்' சத்தம் அடுத்தடுத்துக் கேட்டது. எத் தனையோ கார்கள் போகும், வரும் என்று சற்று நேரம் அதைச் சட்டை செய்யாமல் இருந்தேன்

மீண்டும் மீண்டும் ஓய்வில்லாமல் அந்த ஓசை வந்தது. எழுந்து சென்று வீதிப்புறத்து ஜன்னலின் வழியாக எட்டிப்பார்த்தேன். மிகப் பெரியதும் வெகு புதியதுமான ஒரு மோட்டார்கார் எங்கள் வீட்டு வாசலில் நிற்கக்கண்டேன். காலை வெய்யிலில் அந்தக் காரின் பளபளப்பு என் கண்களைப் பறித்தன.

இவ்வளவு விலையுயர்ந்த வண்டியில் என் வீட்டுக்கு வரக்கூடியவர் யாரென்று நான் எண்ணிக்கொண்டிருக்கும் போதே அந்த வண்டியிலிருந்து சேவகனைப்போன்ற ஒரு மனிதன் இறங்கி மோட்டாரின் பின்புறக்கதவைத் திறந்தான். கதவைத்திறந்து வெகுநேரம் வரையிலும் யாரும் வெளியில் வரவில்லை. நான் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருந்தேன். பிறகு உள்ளேயிருந்த ஒருவருடைய கைமட்டும் மோட்டாரின் கதவு ஜன்னலின்மேல் வைக்கப்பட்டதைக் கண்டேன். அந்தக்கையின் விரல்கள் நிறைய வயிரமோதிரங்கள் மின்னின. 'அது யாரப்பா அவ்வளவு பணக்காரர் நம் வீட்டுக்கு வரக்கூடியவர்' என்று நான் அங்காந்து பார்த்துக்கொண்டிருந்தேன். மெள்ள மெள்ள ஒரு கனத்த மனிதர் காரைவிட்டு இறங்கினுர். உருவம் எனக்கு உறவானதாகத் தெரியவில்லை. முகம் மட்டும் எங்கேயோ பார்த்ததுபோல மனதிற்பட்டது.

அந்த மனிதர் எங்கள்வீட்டின் தாழ்வாரத்தில் என் கண்ணுக்குத்தெரியாமல் நின்றுகொண்

டிருந்த யாரையோ பார்த்து "ராமலிங்கம் இருக்கிருனு?" என்று கேட்டுக்கொண்டே படியேறினர். என்னை ஏகவசனமாகப் பேசுகின்ற இவர் எனக்குத் தெரிந்தவராகத் தானிருக்க வேண்டுமென்று நான் ஜன்னலைவிட்டு மெத்தைப் படிக்கட்டுகளுக்கு முன்னுல்வந்து அவர் வரவை எதிர்நோக்கி நின்றுகொண்டிருந்தேன். பளுவான சரீரமுடைய அவர் ஒவ்வொரு படியாக ஏறி எனக்கு வெகுபக்கத்தில் வந்தபிறகும் கூட அவரை நான் அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை. என்னை ஏறஇறங்கப்பார்த்த அவர் "என்னடா ராமலிங்கம் இப்படி இளைத்துப்போயிருக்கிருய்? அடையாளமே தெரியவில்லையே!" என்ருர்.

அந்தக் குரலைக் கேட்டவுடன் எனக்குக் கோயமுத்தூர் நினைவு வந்தது. ஆம், எனக்கு முன்னுல் நின்ற அந்த மனிதர் கோயமுத்தூரில் என்னுடன் படித்த பால்ய சிநேகன் ரங்கநாதம் செட்டியார்தான். கோயமுத்தூரில் ரங்கநாதம் செட்டியார் குடும்பத்துக்குச் சொந்தமான ஒரு வீட்டில்தான் நாங்கள் குடியிருந்தோம். நாலாவது வகுப்பிலிருந்து நாலாவதுபாரம் வரையிலும் நானும் ரங்கநாதனும் இணைபிரியாத தோழர்கள். எந்தநேரத்திலும் எங்கேபோனுலும் இருவரும் சேர்ந்துதான் இருப்போம். அந்தநாளில் ஆரிய வைசியர்கள் எங்களை 'சூத்ரவாள்' என்று இழிவாக எண்ணுவார்கள். எங்கள் வீட்டிலும் அவர்களைக் 'கோமுட்டி' என்று குறைவாகக் கூறுவார்

கள். ஒருவர் தொட்டதை ஒருவர் சாப்பிடமாட்டார்கள். ஆனால் எனக்கும் ரங்கநாதனுக்கும் இந்த வேற்றுமைகள் இல்லை. நாங்கள் இருவரும் ஒரு இலையில் உண்போம். கள்ளமறியாத இளம் பருவத்தில் தானாக உண்டான களங்கமற்ற அன்புக்கு ஜாதி வித்யாசம் ஏது? நான் அவனிடத்திற் செலுத்திய அன்பைக்காட்டிலும் அவன் எனக்குச்செய்த அன்பே அதிகம். நல்ல பணக்காரக் குடும்பத்திற் பிறந்தவன். எந்தநேரத்திலும் அவர்கள் வீட்டில் மிக உயர்ந்த ரகமான பட்சணங்கள் இருக்கும். நேர்ந்தபோதெல்லாம் ஒருமூட்டை கட்டிக்கொண்டுவருவான். அத்தனை பட்சணங்களையும் யாருக்கும் தெரியாமல் நாங்கள் இரண்டு பேருமே தின்றாகவேணும்-ஏனென்றால் என் தாயார் ரொம்ப ஆசாரம் பார்க்கிறவர். செட்டியார் வீட்டுப்பட்சணங்களை நான் தின்பதைக்கண்டால் கண்டிப்பார்கள். அதனால் என்னுடைய சகோதரிகளும் அதைத் தின்னமாட்டார்கள்.

உண்மையாகவே ரங்கநாதன் எனக்குப் பிராண சிநேகிதனாக இருந்தான். ஒருநாள் என்னைப் பார்க்காவிட்டால் அவனுக்கு 'எப்படியோ இருந்தது' என்பான். பணத்துக்குப் பஞ்சமே இல்லை. என்னேரமும் ஐந்து, பத்து வைத்திருப்பான். நான் எதைக்கேட்டாலும் உடனே கொடுத்துவிடுவான். அவன்வீட்டுக்கு நான் அடிக்கடி போகவேண்டிய அவசியம் இருக்காது. என்னேரமும் அவன் எங்கள் வீட்டில்தான் இருப்பான்.

ஒரு நாள் அவன் வரவில்லையென்று நான் அவனுடைய வீட்டுக்கு அபூர்வமாகப் போனேன். அந்தநேரம் அவன் சாப்பாட்டுக்கு உட்காரப் போகிற தருணம். உணவு கொள்ளும்போது பட்டுவஸ்திரத்தை மடியாக உடுத்துக்கொண்டு தான் உட்காருவார்கள். மடிகட்டாமல் உண்ண மாட்டார்கள். மடியைக் களையாமல் மற்றகாரியம் எதையும் செய்யமாட்டார்கள். மடியோடிருந்த ரங்கன், நான் அவர்கள் வீட்டுக்குப் போன உடன் ஓடிவந்து என்னைக் கட்டித்தழுவிப் பேசிவிட்டான். அவன் அப்படி மடியோடு என்னைத் தொட்டுவிட்டதைப் பார்த்துவிட்ட அவனுடைய அண்ணன், ஆசாரம் கெட்டுப் போனதற்காக ரங்கனை மிகவும் கடிந்து பேசி விட்டு என்னையும் கண்டித்தார். "ஏண்டா ராமலிங்கம் உங்களுக்குத்தான் ஆசாரம் இல்லை. இவனுக்கென்ன கேடு. இவனையும் உங்கள் வீட்டுக்கே கூட்டிக்கொண்டு போய்விடு" என்று என்னிடம் தமிழில் சொல்லிவிட்டு, தெலுங்கில் ரெங்கனைப் பலவாறாகத் திட்டினார். நான் பயந்து கொண்டு வெளியே போய்விட்டேன். ரங்கநாதனும் தன் மடிப்பட்டை அவிழ்த்தெறிந்துவிட்டு சாதாரண வேஷ்டியைக் கட்டிக்கொண்டு சாப்பிடாமல் எனக்குப்பின்னால் எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டான். அன்று முழுதும் அவன் உணவருந்தவில்லை. இரவில் நான்கொடுத்த கொஞ்சம் பாலைமட்டும் குடித்துவிட்டு என்னுடனேயே படுத்துக்கொண்டான். தாய்தந்தையர், தமை

யன்மார்கள், தமக்கை முதலான யாராரோ என்னென்னமோ சொல்லியும், மூன்றுநாள் வீட்டுக்கும் போகாமல் என்னுடனே இருந்துவிட்டான். பிறகு நானே மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதற்காக வீட்டுக்குப்போகச் சம்மதித்தான். அப்படி யெல்லாம் என்னிடத்தில் அபிமானம் வைத்திருந்தவன் ரங்கநாதன்.

நாங்கள் நாலாவது பாரத்தில் படிக்கும் போது அவனுடைய தந்தை திடீரென்று இறந்து விட்டார். அவருக்குப்பின் அவர்களுடைய பெரிய ஜவுளி வியாபாரமும் விழுந்துவிட்டது. அண்ணன் தம்பிகளுக்குள் அதுவரையிலும் இருந்த ஐக்கியமும் குலைந்து 'இன்ஸால்வென்ஸி' வந்து விட்டது. ரங்கநாதனுடைய படிப்பும் நின்று விட்டது. பள்ளிக்கூடத்திற்கு இருவரும் சேர்ந்து போவது நின்றுவிட்டாலும் ஒருவரையொருவர் தினந்தினம் சந்திப்பதும் மற்ற உறவுகளும் மாற வில்லை. நான் ஐந்தாவது ஆறுவது பாரங்கள் படித்துக்கொண்டிருந்தபோது ரங்கநாதன் அடிக்கடி வீட்டுக்கு வருவான்.

1907-ம் வருஷம் என்னுடைய தகப்பனார் பென்ஷன் பெற்று எங்கள் குடும்பம் கோயமுத்தூரை விட்டு நாமக்கல்லுக்கு வந்துவிட நேர்ந்தது. அப்போதுதான் நானும் ரங்கநாதனும் பிரிந்தோம். அவன் என்னைப் பிரியும்போது அழுது விட்டான். தான் அணிந்திருந்த ஒரு சிகப்புக்கல் தங்க மோதிரத்தை அவனுடைய அடையாள மாக எனக்கு அணிந்துவிட்டு வழியனுப்பினுன்

1907-ல் அப்படிப் பிரிந்துபோன அவன் 1931-ல் இப்படி என் முன்னுல் நின்ருன். இடையில் ஒருவரைப்பற்றி ஒருவர் கேள்விப்பட்டதேயன்றி சந்திக்கவில்லை. இருபத்துநான்கு வருடங்களுக்குப் பின் இப்படி சந்தித்த எங்கள் இன்பத்தை என்னென்று எழுதுவது. கட்டித்தழுவிக் கண்ணீர் பெருகக் களித்தோம். இதற்குள் அவனுடைய வேலைக்காரன் எனக்கும் என்னுடைய மனைவி மக்களுக்கும் ரங்கநாதன் கொண்டுவந்திருந்த பல வெகுமதிப் பொருள்களையும் பழவகைகளையும் தின்பண்டங்களையும் மோட்டாரிலிருந்து மேல் வீட்டுக்குக் கொண்டுவந்தான்.

சாப்பாட்டுக்குப் பின் வெகு சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது பேச்சை திடீரென்று நிறுத்திவிட்டு, ரங்கநாதன், நாங்கள் இருந்த அறையின் நாலாபுறத்திலுமுள்ள பல பொருள்களையும் ஒவ்வொன்ருகப் பார்த்தான். மெருகில்லாத மேஜை, புழுதி படிந்த புத்தகங்கள், கையில்லாத நாற்காலி, பஞ்சில்லாத படுக்கை, பழசாய்ப்போன பாய்கள், உறையில்லாத தலையணைகள், ஒட்டடை படிந்த சுவர்கள், கண்ணுடி உடைந்துபோன அலமாரி, காரை இடிந்துபோன தரை, பலகையில்லாத ஜன்னல், பல்லில்லாத சீப்பு, என்ற இவைகளே அங்கே இருந்தவை. எல்லாவற்றையும் பார்த்து விட்டு "என்னடா ராமலிங்கம்! உன்னைப்பற்றி பேப்பர்களில் வெகு பிரமாதமாக தினந்தினம் படித்திருக்கிறேன். எங்கள் ஊரில் எங்கேபார்த்தாலும்

உன்னுடைய பாட்டுகளைத்தான் பையன்க ளெல்லாம் எப்பப் பார்த்தாலும் பாடிக்கொண் டிருக்கிறார்கள்! நீ பெரிய 'ஆர்ட்டிஸ்ட்' என் றும் டில்லியில் சக்ரவர்த்தியிடம் மெடல் வாங் கினாயென்றும் நம்ம சீதாராமன் என்னிடம் வந்து பெருமையாகச் சொல்லிக்கொண்டான் (சீதாராமன் கோயமுத்தூரில் எங்களுடன் படித்த இன்னொரு தோழன்) நீ ரொம்பப் பணக் காரனாகவும் சௌக்யமாகவும் இருப்பாயென்று நினைத்தேன்! இங்கே யிருக்கிற நிலைமையைப் பார்த்தால் நான் நினைத்தற்கு நேர் விரோதமாக வல்லவா தெரிகிறது! என்ன சமாசாரம்? உள் ளதை ஒளிக்காமல் சொல்லு" என்றான்.

நான் பதிலொன்றும் சொல்லாமல் கலகல வென்று சிரித்துவிட்டு சும்மாயிருந்தேன். அவன் விடவில்லை. திருப்பித் திருப்பிக் கேள்விகள் கேட்டு என்னுடைய பொருளாதார நிலைமை யைச் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்தினான்.

அவனும் நானும் கோயமுத்தூரில் பிரிந்த பிறகு அதுவரையிலும் நடந்த என் சரித்திரம் முழுவதையும் சுருக்கமாகச் சொல்லி அன்றைக்கு அவன் வருகிறசமயத்தில் கையில் காசில்லாததை நினைத்து கவலைப்பட்டுக் கொண்டிருந்ததையும் சொல்லி முடித்தேன்.

"கையில் காசில்லையா! என்னடா ராமலிங் கம்? இப்படியும் நீ சொல்லவா" என்று குபீ ரென்று எழுந்தான் ரங்கநாதன். சுவரிலுள்ள ஒரு

ஆணியில் மாட்டியிருந்த அவனுடைய சட்டைப் பையிலிருந்து பணப் பையை எடுத்தான். அதிலுள்ள பணத்தையெல்லாம் எடுத்து எண்ணினான். அதில் நானூற்று எழுபது ரூபாயும் சில்லறையும் இருந்தது. நாலு நூறு ரூபாய் நோட்டுகளை என் கையில் வைத்து "கையில் காசில்லையா! எவ்வளவு காசு வேணும்? இனிமேல் உனக்கு அந்தக் கவலை வேண்டாம்" என்றான்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுடைய விலையுயர்ந்த மோட்டார் வண்டியும் வயிர மோதிரங்களும் வயிரம் இழைத்த கெடியாரச் சங்கிலியும் பட்டுச் சட்டையும் ஜரிகை வேஷ்டியும் அவன் பெரும் பணக்காரனாக இருக்கிறான் என்பதை முன்னமேயே விளக்கிவிட்டன. ஆனால் அவன் என்னுடன் பாலியத்தில் பழகின அதே அபூர்வமான அன்புள்ளவனாகத்தான் இன்னும் இருக்கிறான் என்பதை நான்கு நூறு ரூபாய் நோட்டுகளை அவ்வளவு அவசரமாக எடுத்து எதற்காக என்றுகூடச் சொல்லாமல் என்னிடம் கொடுத்ததால் அறிந்தேன்.

"ரங்கா, நீ இருக்க எனக்கென்ன குறைச்சல். இப்போது எனக்கு இவ்வளவு ரூபாய் அவசியமில்லை. வேண்டும்போது வாங்கிக்கொள்ளுகிறேன்" என்று அந்த நோட்டுகளை அவனிடமே நீட்டினேன்.

ரங்கநாதன் அவற்றைத் திருப்பி வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டான். அவற்றை நானே

வைத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி கேட்டுக் கொண்டான். அப்படி மனிதர்களும் உலகத்தில் இருக்கிறார்களே என்று நான் ஆச்சரியப்பட்டுக் கொண்டே,

"என்னடா ரங்கா, நான் கோயமுத்தூரிலிருக்கும்போது உங்கள் குடும்பம் அவ்வளவு ஏழையாகப் போய்விட்டதே, நீ எப்படி இவ்வளவு பணக்காரன் ஆனாய்? என்ன செய்து கொண்டிருக்கிறாய், எங்கே யிருக்கிறாய்? எத்தனை குழந்தைகள் எல்லாம் சொல்லு" என்றேன்.

ரங்கநாதன் உடனே தன் கதையைச் சொன்னான் :

"நீ கோயமுத்தூரை விட்ட அடுத்த வருஷமே நானும் வந்து விட்டேன். எங்கள் வீடு வாசல் எல்லாம் கடன்காரர்களுக்குப் போய்விட்டன. மிஞ்சினதை பங்கு போட்டுக் கொண்டோம். என் பாகத்துக்கு ஆயிரத்து எழுநூறு ரூபாய் கிடைத்தது. அதை எடுத்துக்கொண்டு கும்பகோணத்துக்குப் போனேன். அங்கே எங்கள் தகப்பனருக்குப் பழக்கமான ஒருவருடைய ஒத்தாசையால் ஒரு ஷராப் கடையில் ஆளாக அமர்ந்தேன். அந்தக் கடைக்காரர் எங்கள் ஜாதி. அவருக்குச் சொந்தமான ஒரு ஏழைக் குடும்பத்தார் இரண்டாயிரம் ரூபாய் வரதட்சிணையுடன் எனக்குப் பெண் கொடுக்க முன் வந்தார்கள். கலியாணம் பண்ணிக்கொண்டு அவர்களுடைய ஒத்தாசையுடன் தனியே ஒரு சிறு ஷராப் கடை

ஆரம்பித்தேன். தெய்வானுகூலம் இருந்தால் நல்ல காலம் நமக்குத் தெரியாமலும் வந்துவிடும் அல்லவா? அப்படி எனக்கு அடித்தது யோகம். நான் தொட்ட வியாபாரமெல்லாம் துலங்கிற்று. மூன்று வருஷத்தில் முதலாளியாகி விட்டேன். பத்து வருஷத்துக்குள் பணக்காரனாகிவிட்டேன். இப்போது கும்பகோணத்தில் வெள்ளிப் பாத்திரங்களுக்கு மிகவும் பெயர்போன கடை என்னுடைய கடைதான். சென்னையிலும் சேலத்திலும் கோயமுத்தூரிலும் கிளைக்கடைகள் ஆரம்பித்திருக்கிறேன். சேலம் 'பிராஞ்சைப்' பார்த்துப் போகத்தான் இந்தப் பயணம். அந்தக் கடையை ஆரம்பிக்கப் போகும்போது இந்த வழியாகத்தான் போனேன். அப்போதே உன்னைப்பார்க்க விரும்பி விசாரித்தேன். நீ அப்போது ஜெயிலில் இருந்தாய். அன்று முதல் உன்னுடைய விடுதலையை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தேன். நீ விடுதலையானதை அறிந்துதான் உன்னைப் பார்க்கவேண்டுமென்றே இந்தப் பயணம் வந்தேன்.

"பணம் ஏராளமாக இருக்கிறது. சென்னை மாகாணத்திலுள்ள எல்லா முக்யமான பாங்குகளிலும் என்னுடைய பணம் லட்சக்கணக்கில் இருக்கிறது. கும்பகோணத்தில் நாலு பாங்குகளில் நான் டைரெக்டர். எவ்வளவு பணம் இருந்து என்ன ராமலிங்கம் செய்வது! கலியாணமாகி இருபத்திரண்டு வருஷங்களாச்சு. ஒரு குழந்தை இல்லையே! காசிக்குப் போய் வந்தோம்.

ராமேஸ்வரத்துக்கு மூன்று தரம் போயாச்சு. நாகப் பிரதிஷ்டைகள் நடத்தியாச்சு. தானதரு மங்கள் தாராளமாகத்தான் செய்து வருகிறேன். குழந்தை இல்லையே. என்னுடைய சம்சாரத்துக்கும் இதே விசாரம். அவளுக்கு நெருங்கின பந்துக்களும் கிடையாது. என்னுடைய தமயன் மார்களும் எல்லாரும் குழந்தையில்லாமல் இறந்து போனார்கள். நானும் செத்தால் இவ்வளவு பணமும் நாதியற்றதாகிவிடுமே! இன்னொரு விவாகம்செய்து கொள்ளலாமென்று பல பேர் சொல்லுகிறார்கள். ஆனால் என் ஜாதகத்துக்குக் குழந்தை யில்லையென்று ஜோசியர்கள் சொல்லுகிறார்கள். சிலபேர் இருக்கிறதாகவும் சொல்லுகிறார்கள். அத்துடன் மூன்று வருஷமாக எனக்கு நீரடைப்பு வியாதியின் தொந்தரவு அதிகமாக இருக்கிறது. அதனாலும் இன்னொரு கலியாணம் செய்துகொள்ள அச்சப்படுகிறேன். என்னமோ போ, நீ குழந்தை குட்டிகளுடன் கையில் காசில்லையென்று வருத்தப்படுகிறாய். நான் வெறும்பணத்தை வைத்துக்கொண்டு குழந்தையில்லையே என்று குமுறிக்கொண்டிருக்கிறேன். எனக்குக் குழந்தையில்லாவிட்டாற் போகட்டும். நீயாவது குஞ்சு குழந்தைகளுடன் இருப்பதைக்கண்டு சந்தோஷப்படுகிறேன்.

"இதோ பார், உன்னுடைய குழந்தைகள் என்னுடைய குழந்தைகள். என்னுடைய பணம் உன்னுடைய பணம். ராமலிங்கம்! நீ இனிமேல் கவலைப்படவேண்டாம். வருஷத்துக்கு இரண்

டாயிரத்து ஐந்நூறுரூபாய் குத்தகை வந்து கொண்டிருக்கிற ஒரு சொத்து-போன மாதத்தில் தான் என் சுவாதீனத்துக்கு வந்தது. அதை உன் குடும்பத்துக்கு என்னுடைய உதவியாக சாசனம் செய்து கொடுத்துவிடுகிறேன். இது சத்தியம். கன்னிகா பரமேஸ்வரி சாட்சி. அத்துடன் என்னுடைய சேலம்கடையில் உனக்கு ஒருபங்கு ஏற்படுத்திவிடுகிறேன். மேலும் உனக்கு எப்போது எவ்வளவு வேணுமோ நான் தருகிறேன். கையில் காசில்லையே என்ற கவலை உனக்கேன்?" என்றான்.

அதைக்கேட்ட நான் அப்படியே சொக்கிப் போனேன். ரங்கநாதனுடைய அந்தரங்க சுத்தத்தை அறிந்தவனானதால் அவன்சொன்ன விஷயங்களில் துளிகூட சந்தேகிக்காமல் சந்தோஷசாகரத்தில் முழுகி முழுகி மூச்சு வாங்கினேன்.

அன்று முழுதும் ரங்கநாதன் என்னுடன் இருந்துவிட்டு மறுநாள் காலையில் சேலம்சென்றான். இரண்டுநாளில் மறுபடியும் வந்தான். ஒருவேளை இருந்துவிட்டு கும்பகோணம் போய் விட்டான். அவன் தானாகவே சொன்ன சாசனத்தை எப்போது எழுதப்போகிறான் என்பதைப்பற்றி அவனும் சொல்லவில்லை, நானும் கேட்கவில்லை.

சுமார் இருபது நாட்கள் சென்றபின் ரங்கநாதன் மறுபடியும் சேலம் பயணத்தோடு நாமக்கல்லுக்கு வந்தான். வந்தவன் வேறொன்றும் பேசாமல் வெகு அவசரமாக மோட்டாரில்

இருந்த தன்னுடைய கைப்பெட்டியைக் கொண்டுவரச்சொல்லி அதிலிருந்த ஒரு காகிதக் கத்தையை எடுத்து என் கையிற்கொடுத்து "இதைப்பார்" என்றுசொல்லிவிட்டு அருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

நான் அந்தக் காகிதக்கட்டை அவிழ்த்துப் பார்த்தேன். அது முழுதும் அவன் முன்னே சொன்ன சொத்தைப்பற்றிய பல தஸ்தாவேஜுகள். அவற்றுள் ஒரு தாளை மட்டும் குறிப்பிட்டுக் காட்டி அதைப் படித்துப்பார்க்கச் சொன்னான். பார்த்தேன். அது அவன் என் குடும்பத்துக்கு அந்தச் சொத்தை தானமாகக் கொடுத்துவிடுவதற்கு எழுதப்போகிற சாசனத்துக்கு நகல். அதில் சொத்தின் விவரங்களும் சட்டபூர்வமான வாசகங்களும் இருந்தன. வெகு விஸ்தாரமான விவகார ஞானத்தோடும், சாதுரியமான யுக்திகளோடும், சூரிய சந்திரர்கள் உள்ளமட்டும் அந்தச் சொத்து எங்கள் குடும்பத்துக்கே உதவவேண்டுமென்ற ஏற்பாடுகளுடன் எழுதப்பட்டிருந்தது. எனக்கு சட்டஞானமோ பத்திரங்களின் பழக்கமோ இல்லை. எதை எப்படி எழுதியிருந்தால் என்ன? மொத்தத்தில் அது அந்தச் சொத்தை எங்களுக்குச் சொந்தமாக்கி வைக்கக்கூடிய பத்திரத்தின் மாதிரி என்பதுமட்டும் எனக்குப் போதும். நான் அதைப்படித்துப் பார்த்துவிட்டு பரம திருப்தியுடன் அவனிடம் திருப்பித் தந்து விட்டேன். அவனுக்கு நிற்கநேரமில்லை. உடனே புறப்படவேண்டிய அவசரத்தில் இருந்தான்.

"நான் அவசரமாகச் சேலம் போகிறேன். அங்கே இரண்டுநாள் இருப்பேன். அங்கிருந்து அப்படியே மாயவரம் போகிறேன். அங்கே ஐந்தாறு நாட்கள் தங்கவேண்டியிருக்கும். அதற்கு மேல் ஆனாலும் ஆகும். எப்படியும் பதினேழாம் தேதிக்குள் கும்பகோணம் போய்ச் சேர்ந்துவிடுவேன். கும்பகோணத்துக்குப் போனதும் உனக்குத் தந்தியோ தபாலோ அனுப்புகிறேன். நீ உடனே புறப்பட்டுவா. பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்து கொடுத்துவிடுகிறேன். அப்புறம் ஐந்தாறு நாளாவது நீ என்னுடன் இருந்துவிட்டு வந்துவிடலாம். வரும்போது உன் சம்சாரம் குழந்தைகள் எல்லாரையும் கூட்டிக்கொண்டு வரவேணும்." என்றான். நான் ஒத்துக்கொண்டேன். அவன் சேலம் போனான்.

அநியாயவழிகளில் செல்வம் வருவதாயிருந்தாலும் ஆசைக்கு ஒரு அளவில்லை. அப்படியிருக்க இப்படி ஒரு சம்பத்து வலுவில் வருவதில் எனக்கும், என் மனைவிக்கும் ஏற்பட்ட இன்பத்தை எப்படிச் சொன்னாலும் போதாது. இந்த உடலோடு சொர்க்கத்தைக் கண்டுவிட்ட இன்பத்தையே அடைந்தோம். வருஷம் ஒன்றுக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் குத்தகை வரக்கூடிய ஆஸ்தி, சேலம் ஷராப்புக்கடையில் ஒரு பங்கு, அதற்குமேலும் எந்தசமயத்தில் எதைக்கேட்டாலும் கொடுக்க ரங்கநாதன் இருக்கிறான். இதைவிட என்னவேண்டும்?

அந்தப் பதினேழாம்தேதி 'எப்போ எப்போ'

என்று ஏங்கித் துடித்துக் கொண்டிருந்தோம். ரங்கன் வந்துபோனது ஆறுந்தேதி. இன்னும் பதினொருநாட்கள் போகவேண்டியிருந்தது. ஒவ்வொரு க்ஷணமும் ஒருயுகமாகத் தோன்றிற்று. பகலெல்லாம் இதேநினைவு, இதேபேச்சு. அந்த இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்க்குச் செலவு திட்டங்களைப்பற்றிய சிந்தனை. இரவெல்லாம் அதே கனவு, அதே பிதற்றல். என்னுடைய பந்து மித்திரர்களுக்குள் எளியவர்களாக இருந்த சிலருக்கு என்னென்னமோ உதவிகளைச் செய்யப் போவதான உணர்ச்சிகள்.

பதினேழாந்தேதியும் வந்துபோய்விட்டது அதற்குப்பின் ஒவ்வொருநாளும் ரங்கனுடைய தந்தியோ தபாலோ வரும் என்கிற தவிப்பு. பதினெட்டு, பத்தொன்பது, இருபது முப்பது தேதியும் முடிந்துவிட்டது. தபாலும் வரவில்லை தந்தியும் வரவில்லை. எனக்கு இருப்புக்கொள்ளவில்லை. 'ரங்கநாதன் மிகவும் நம்பத்தகுந்த நண்பன். அவனுடைய அழைப்பு வராவிட்டால்தான் என்ன? நாமே கும்பகோணத்துக்குப் போனால் என்னகுற்றம்?' என்று எண்ணினேன். அடுத்த நிமிஷமே அப்படி நானேபோவது சரியல்லவென்று தீர்மானித்து அவன் நேரிற்சொல்லிப் போனபடி கடிதமோ தந்தியோ வராத காரணம் என்னவென்று கேட்டு ரங்கநாதனுக்கு ஒரு கடிதம் எழுதினேன். பத்துநாள் காத்திருந்தேன், பதில் இல்லை. ஒரு தந்திகொடுத்தேன். பதில் தந்திக்கும் நானே பணமும் கட்டியிருந்தும் பதில் வரவில்லை.

மூன்றுநாள் கழித்து எனக்கு ஒருகடிதம் வந்தது. 'கவரின்'மேல் ரங்கநாதனுடைய வியாபாரத்தின் விலாசம் அச்சடிக்கப் பட்டிருந்தது. வெகு ஆவலோடு உடைத்துப் படித்தேன். அதில் இருந்த விஷயம் அடியில் வருமாறு.

மகா-ா-ா-ஸ்ரீ நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு,

தங்களுடைய தந்தியும் அதற்கு முன்னால் அனுப்பிய தபாலும் வந்துசேர்ந்தன. தங்களுடைய நண்பர் ரங்கநாதம் செட்டியார் சென்ற மாதம் பதினேழாம்தேதி, இரவு பதினொரு மணிக்கு நீரடைப்பு வியாதியினால் திடீரென்று இறந்துபோன சங்கதியை மிகவும் துக்கத்தோடு தெரிவிக்கவேண்டி யிருக்கிறது.

உத்தரவுப்படி,

கே. எஸ். கோவிந்தசாமி.

எப்படி என்னுடைய அதிர்ஷ்டம்! இது புலமையின் வறுமையா அல்லது வறுமையின் புலமையா?

## திருக்குறளுக்குப் புது உரை

"திருக்குறளுக்கு நல்ல உரை இல்லையே" என்றேன்.

"ஏன் அப்பனே! பரிமேலழகர் உரைக்கு என்ன? அதைவிடவா நல்ல உரை வேண்டும்?" என்றார் என்னுடைய தமிழ் ஆசான் ஸ்ரீ எம். ஸி. ஆனையப்ப முதலியார் அவர்கள். (ஸ்ரீ ஆனையப்ப முதலியார் நாமக்கல் போர்டு உயர்தரப் பள்ளியின் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்.) "பரிமேலழகர் உரை படிப்பதற்கே கடினமாக இருக்கிறது. அத்துடன் அது அனேக இடங்களில் 'காமன் சென்சுக்கு'ப் பொருந்துவதாக இல்லையே" என்று அவசரமாகச் சொல்லிவிட்டேன். 'காமன் சென்சுக்குச் சரியாக இல்லை' என்றால் 'பகுத்தறிவுக்குப் பொருந்தவில்லை' என்பதுதான் பொருள். அந்த நினைப்பில்தான் நான் அப்படிச் சொல்லி விட்டேன். ஆனால் சாதாரணமாக 'காமன் சென்சுக்குச் சரியில்லை' என்பதை யாரும் கொஞ்சம் குற்றமாகத்தான் கொள்ளுவார்கள். ஒருவனைப் பார்த்து அவன் 'காமன் சென்ஸ்' இல்லாதவன் என்றால் அவனுக்குக் கோபந்தான் வரும். அதையெல்லாம் எண்ணாமல் 'சாதாரண அறிவுக்குப் பொருத்தமாக இல்லையே' என்று தான் சொல்லுவதாக எண்ணிக்கொண்டு நான் பரிமேலழகர் உரை அநேக இடங்களில் 'காமன்

சென்சு'க்குச் சரியாக இல்லையே' என்று சொல்லி விட்டேன்.

கோபமே இல்லாத குணக்குன்ருகிய ஆனையப்ப முதலியாருடைய மலர்ந்த முகம் திடீரென்று சுருங்கிவிட்டது. பதிலே பேசாமல் ஒரு நிமிஷம் என்னை உற்றுப் பார்த்தார். அன்பும் துன்பமும், சாந்தமும் சங்கடமும், விருப்பும் வியப்பும் கலந்த அந்தப் பார்வையை இன்றைக்கும் என்ஞல் மறக்க முடியவில்லை.

"ராமலிங்கம்! நீ மிகவும் நல்ல பிள்ளை. என்னிடம் படித்த எண்ணிறந்த மாணுக்கருள் நான் எப்போதும் பெருமையோடு எண்ணிக்கொண்டிருக்கும் சிலருக்குள்ளேயும் சிறந்தவன் நீ. அப்பனே! அப்படிப்பட்ட நீ, உன் வாயால் பரிமேலழகருக்குக் 'காமன் சென்ஸ்' இல்லையென்று சொல்லிவிட்டது என் உள்ளத்தை வாள் கொண்டு வெட்டுவதுபோல் வருத்துகின்றது. வேண்டாம் அப்பனே, வேண்டாம். பெரியோர்களை இப்படிப் பிழைபேசக்கூடாது. வேறு யார் சொன்ஞலும் சொல்லட்டும், நீ அப்படிச் சொல்லாதே. இந்தக் காலத்து இளைஞர்கள் யாரைப் பற்றியும் எதை வேண்டுமாஞலும் வாய்கூசாமல் சொல்லி விடுகின்றனர். அது மிகவும் ஒழுக்கக் கேடு. நீ அந்த இனத்தைச் சேர்ந்தவன் அல்லவென்று நான் நன்ருக அறிவேன். அந்தக் குற்றம் உனக்கு வேண்டாம்........" என்ருர்.

ஆரம்பத்தில் அப்படிச் சொன்ன அவர் எங்க

ளுடைய சம்பாஷணையின் முடிவில் என்ன சொன்னார் என்பதைப் பின்னால் சொல்லு கின்றேன்.

*　　*　　*　　*

எங்கள் பள்ளிக்கூடப் படிப்பு முற்றிலும் எல்லாப்பாடமும் குருட்டுப் பாடந்தான். இந்தக் காலத்துப் பிள்ளைகளைப் போலப் பகுந்து, அறிந்து, புகுந்து, பார்த்து 'டைரெக்ட் மெத்தடில்' கற்றுக் கொள்ளும் படிப்பு எங்களுக்கும் தெரியாது எங்களுடைய ஆசான்மார்களுக்கும் தெரியாது. எல்லாவற்றையும் நெட்டுருப் போட்டுத்தான் ஆகவேண்டும். இந்தக்காலத்து மாணவர்களுக்கு எண்சுவடி வாய்ப்பாடுகூட மனப்பாடமாகவேண்டிய கட்டாயமில்லை. நாங்கள் இங்கிலீஷ், தமிழ், சரித்திரம், பூகோளம், இலக்கணம், சயன்ஸ் - எல்லாவற்றையும் பாட புத்தகங்களில் உள்ளபடி காற்புள்ளி, அரைப் புள்ளி, முக்காற்புள்ளி முற்றுப்புள்ளிகளுட்பட ஒப்பித்தாக வேணும்.

நெட்டுருப் போட்டு ஒப்பிப்பதில் நான் கொஞ்சம் கெட்டிக்காரன். மற்ற பாடங்களைக் காட்டிலும் தமிழ்ப் பாடங்களை வெகு நன்றாக ஒப்பிப் பேன். அதிலும் செய்யுட் பகுதியில் சிறந்து விளங்குவேன். பெரும்பாலும் மாணவர்கள் மற்றப் பாடங்களை யெல்லாம் சரியாக மனப்பாடம் செய்தாலும் தமிழ்ப்பாடங்களை அலட்சியம் செய் வார்கள். தமிழ்ச் செய்யுள்களை நான் ஆசையோடு ஒப்பிப்பேன். அநேகமாக எல்லாத் தமிழ்ப்

பண்டிதர்களும் செய்யுள்களை ராகத்தோடு படித்துவிட்டுத்தான் பிறகு பொருளும் இலக்கணமும் புகட்டுவார்கள். ராகம் என்றால் தோடி, பைரவி, கல்யாணி என்ற சங்கீத ராகங்கள் அல்ல. காதுக்கினிமையாக நீட்டிப் படிக்கிற ராகம்தான். நானும் அதேபோல ராகத்தோடு படித்து ஒப்பிப்பேன். அப்படி ஒப்பிக்கப் பழகுவதால் செய்யுள்கள் எளிதாக நினைவில் நிற்கும். பண்டிதருக்கு ஏதாவது செய்யுளோ அல்லது இலக்கண சூத்திரமோ நினைவிற்கு வராதபோது அவர் என்னைப் பார்ப்பார். நான் உடனே அவருக்கு வேண்டியதை ஒப்பிப்பேன். இப்படி நான் செய்யுள்களைப் பாடம் பண்ணின பழக்கந்தான் தமிழில் கொஞ்சம் பாண்டித்யம் அடையப் பயன்பட்டது. அன்றியும் கவியெழுதக் கற்றுக் கொடுத்ததும் அதுதான் எனினும் அமையும்.

பரிட்சைக்குப் பாடமாக வரும் பாட்டுகளைத் தவிர தேவாரம், திருவாசகம், தாயுமானவர் பட்டினத்தார், ராமலிங்க சுவாமிகள் முதலானவர்களுடைய பாட்டுக்களையும் வீட்டில் மிகவும் விருப்பத்தோடு படிப்பேன், பாடுவேன். அதனால் பள்ளிக்கூடத்தில் தமிழ் வகுப்பில் அநேகமாக முதல் ஸ்தானத்திலேயே இருப்பேன். அதனாலும், மற்ற மாணவர்களைப்போல் அல்லாமல் தமிழ்ப் பண்டிதரிடத்தில் மிகவும் பணிவு தணிவுடன் நடந்து கொண்டதனாலும், நான் பாடங் கேட்டுக்கொண்ட எல்லாத் தமிழ்ப் பண்டிதர்களுக்கும் நான் செல்லப்பிள்ளையாகவே இருந்

தேன். நான் பாடங்கேட்டுக் கொண்ட பண்டிதர்களுக்குள் மிகவும் குறிப்பிடத் தகுந்தவர்கள்: நாமக்கல் போர்டு ஹைஸ்கூல் பண்டிதர் ஸ்ரீ எம். சி. ஆனையப்ப முதலியார் அவர்களும் கோயமுத்தூர் காலேஜ் பண்டிதர்கள் ஸ்ரீ சபாபதி பிள்ளையவர்களும், வெங்கட்ரமண ஐயரவர்களும் திருச்சிறுப்பள்ளி எஸ். பி. ஜி. காலேஜ் (இப்போது அந்த எஸ். பி. ஜி. காலேஜ் செயின்ட்ஜோசப் ஹைஸ்கூலாக இருக்கிறது) தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ பிச்சை இப்ரஹிம் புலவர் அவர்களும் ஆவர்.

1908-ல் நான் எப். ஏ வகுப்பில் படிக்கும் போதுதான் திருக்குறளில் சில பாட்டுகள் எங்களுக்குப் பாடமாக வந்தன. திருக்குறளின் பெருமையைப்பற்றி அதற்கு முன்னாலேயே அறிவேன். அதைப் படிக்கவேண்டுமென்று ஆர்வமும் இருந்தது. இருந்தாலும் அதை மற்ற தமிழ்க் கவிகளைப் படித்ததுபோல ஆசைக்காகப் படிக்கவேண்டுமென்ற எண்ணம் உதிக்கவில்லை. அதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு. ஒன்று, திருக்குறள்-தேவாரம், திருவாசகம், தாயுமானவர் பாடல் இவற்றைப்போல ராகம் போட்டுப் பாடிக்காட்டும் ஆசைக்காகப் படிக்கத் தக்கதாக இல்லை. ஒவ்வொரு செய்யுளும் ஏழெட்டு சிறு சிறு பதங்களுள்ள மிகவும் குறுகிய ஒரு சொற்றொடர். ராகம் இழுக்கக்கூடிய இடமே இல்லை.

இன்னொரு காரணம் என்னவென்றால்: அப்போது தமிழ் படிப்பவர்களுக்குள் பரவியிருந்த

ஒரு எண்ணப்படி, 'திருக்குறளைப் படிக்க வேண்டுமென்றால் அதற்கென்று ஒரு தனியான பக்தி விசுவாசத்தோடு சில பத்தியங்களுடன் தகுந்த ஆசானை அடுத்து முறைப்படி பாடங் கேட்டுக் கொள்ளவேண்டும்' என்னும் ஒரு சம்பிரதாயம். இந்த இரண்டாவது காரணம் எதனால் என்றால் திருக்குறளுக்குக் கிடைத்துள்ள ஒரே ஒரு உரைநூலாகிய 'பரிமேலழகர் உரை' இக்காலத்தவர் எளிதில் அறிந்துகொள்ள முடியாத நடையில் எழுதப்பட்டிருப்பதுதான். அந்த உரைக்கும் உரை சொல்லி விளக்கினால்தான் திருக்குறள் என்னவென்பது ஒருவாறு புலப்படும். அந்த பரிமேலழகரின் உரையிலுள்ள பல உட்கருத்துகளை அந்த உரை நடையில் பாடங் கேட்டுப் பயிற்சிபெற்றவர்களிடத்தில்தான் அறிந்துகொள்ள முடியும். ஒரு ஆசானிடத்திற்குப் போய் பாடங்கேட்டுக்கொள்ள அவகாசம் இல்லாதவர்கள் உரையை வைத்துக்கொண்டே குறளின் பொருளை ஏதோ கூடியமட்டும் அறிந்து அனுபவிக்கலாம் என்று ஆசை கொள்ள முடியாது. பல இடங்களில் மூலத்தைக்காட்டிலும் உரையே கடினமானதாக இருக்கும். அது உரையாசிரியருடைய குற்றமல்ல. அவர் எழுதிய காலத்தில் அவருடைய உரைநடை எல்லாருக்கும் புரியக்கூடியதாகவே இருந்திருக்கலாம். இப்போது அது சிலருக்குத்தான் புரியும். அந்த சிலரும் கூட பல இடங்களில் சரியானபடி விளக்கி சந்தேக விபரீதங்களைப் போக்க முடிவதில்லை.

ஆகையினால் திருக்குறள் ஒரு தனிமுயற்சியாகப் பாடங் கேட்டுக் கொள்ளவேண்டிய உயர்ந்த இலக்கியம் என்ற உணர்ச்சியினால் நான் அதன் சில பகுதிகள் எங்களுக்குப் பாடமாக வருகிற வரையிலும் அதை சொந்த முயற்சியாகப் படிக்க முயலவில்லை.

எப். ஏ. பரிட்சைக்கு திருக்குறளில் நான்கு அதிகாரங்கள் பாடமாக வைக்கப்பட்டிருந்தன. அந்த நான்கு அதிகாரங்களுள் 'புலால் மறுத்தல்' என்பதும் ஒன்று. அந்த அதிகாரத்தை நான் வெகு ஆவலோடு படித்துக்கொள்ள முயன்றேன். ஏனென்றால் நான் அப்போதுதான் நான்காவது தடவையாக புலால் உண்பதை மறுத்திருந்த சமயம். அதற்கு முன் மூன்று தடவை புலால் உண்பதை விலக்க முயன்று தோற்றுவிட்டவன். எனக்குச் சிறுபிராயத்தி லிருந்தே என்னுடைய தாயாரின் பழக்கத்தால் தெய்வபக்தி, ஆலய வழிபாடு, நோன்பு முதலான வற்றில் நம்பிக்கை உண்டு. என்னுடைய தாயார் புலால் உண்பதை அறவே விட்டொழித்தவர். அவர் உயிரோடிருந்த வரையிலும் கோயமுத் தூரில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் அருகே உள்ள மேலைச் சிதம்பரம் என்ற பேரூருக்குத் தவறாமல் போய் வருவார். நானும் கூடவே போவேன். ஆகையினால் எனக்குச் சைவ நெறி களில் பயிற்சியும் பற்றும் தாமாகவே உண்டா யின. அதனால் தேவாரம் திருவாசகம் முதலான சைவ சமயப் பாடல்களை அடிக்கடி பாடிக்

கொண்டிருப்பேன். சைவ நெறிக்கு நீக்கவே முடியாத ஒரு நிபந்தனை புலால் மறுத்தல். சைவர்கள் அல்லாத மற்றவர்களும் புலால் மறுத்தலைப் போற்றுவார்கள் என்றாலும், சைவ ஒழுக்கம் அதை மிகவும் கட்டாயப் படுத்துகின்றது. இந்த உண்மையைச் சைவச் சாப்பாடு என்ற வழக்குப் பேச்சே விளக்கும். 'சைவச் சாப்பாடு' என்றால் புலால் இல்லாத உணவு என்று எல்லாரும் எளிதில் அறிந்து கொள்வார்கள்.

என்னுடைய தாயாரின் போதனை இல்லாமலேயே அவரைப் பின்பற்றிய என் மனம் புலால் உணவை விலக்க விரும்பிற்று. மூன்றாவது பாரம் படிக்கும்போது முதல் முதலாக நானே புலால் உண்பதை விட்டுவிட்டதாக விரதம் கொண்டேன். நாலைந்து மாதங்களுக்குள் விரதம் நழுவிவிட்டது. அதன்பின் நாலாவது பாரம் படிக்கும்போது மீண்டும் ஊன் உணவை ஒதுக்கினேன். பத்து மாதங்கள்கூடப் பலிக்கவில்லை. மூன்றாவது முறையாக ஆறாவது பாரத்தில் படிக்கும்போது அதே வைராக்கியத்தை முயன்றேன். சுமார் ஒரு வருஷம் வரையில் துளிகூட சபலத்துக்கு இடங்கொடுக்காமல் விரதத்தை சாதித்தேன். ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு மிகவும் விசேஷமான விருந்தாளிகள் வந்திருந்தார்கள். அவர்களுக்காக உயர்ந்த ரகமான மாமிச உணவுகள் பலவித பக்குவங்களில் சமைக்கப்பட்டன. மாமிச உணவுகளை சமைக்கும் பாக சாஸ்திரத்தில் மிகவும் கைதேர்ந்தவர் என்று கருதப்பட்ட

நாகோஜி ராவ் என்ற ஒரு மகாராஷ்டிரர் என் தந்தைக்கு மிகவும் பழக்கமானவர். அவரே எங்கள் வீட்டுக்குவந்து ராத்திரி விருந்துக்குக் காலையிலிருந்தே காரியங்களைச் செய்தார். பகலெல்லாம் இந்த முயற்சிகளைப் பார்த்துக்கொண்டே நான் பள்ளிக்கூடம் போய்விட்டேன். அந்த விருந்துக்காகக் கடைகளிலிருந்து வீட்டுக்கு வந்த பதார்த்தங்களைப் பார்த்தபோதே மனதில் ஒருவிதமான மயக்கம் உண்டாயிற்று. ஆனாலும் புலால் உணவை விட்டொழித்த விரதம் பூண்டவன் என்ற நினைப்போடு முன் இரண்டுமுறை விரதம் தவறிப்போன வெட்கமும் மனதை உறுத்த அந்தப் பதார்த்தங்களை வெகு அலட்சியமாகவே நினைத்துக்கொண்டு போய்விட்டேன்.

பள்ளிக்கூடத்தில் வீட்டில் பார்த்த விருந்து பதார்த்தங்களை மறந்துவிட்டேன். பள்ளியை விட்டு பந்தாட்டத்திற்குப்போய் இரண்டுமணி நேரம் கால்பந்து ஆடிவிட்டு சுமார் ஏழுமணிக்கு வேர்வை சொட்ட வீட்டுக்கு வந்தேன். வாசற்படியில் காலை வைத்தேனோ இல்லையோ எனக்கும் முன்னால் என்னுடைய மூக்கு வீட்டுக்குள் ஓடிவிட்டது. 'கமகம' என்றோ 'குமுகுமு என்றோ 'சுறுசுறு' என்றோ வந்த புலவின் வாடை என் உணர்ச்சிகளைக் கொள்ளை கொண்டுவிட்டது. புது ரத்தத்தின் மோப்பங் கண்டு விட்ட புலியைப்போல் என் உள்ளத்தில் என்னமோ ஒரு வெறி உண்டாயிற்று. எவ்வளவு உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டவையானாலும் சைவ

உணவுகளினுல் அப்படிப்பட்ட வீச்சும் வேகமும் வெறியும் உண்டாகாது. புலால் உணவின் வீச்சு வெகு தூரத்திலேயே வெறியுண்டாக்கும். என் மூக்கு என்னை முற்றிலும் துறந்துவிட்டு முனைந்து முனைந்து மோப்பத்தைச் சுவைக்க ஆரம்பித்து விட்டது. மூக்கின் துர்ப்போதனையினுல் நாக்குக்கும் வேர்வை கண்டுவிட்டது. இருந்தாலும் புலால் உண்பதை விட்டு விட்டவன் என்ற வீறுப்புடன் மூக்கையும் நாக்கையும் ஒருவாறு அடக்கிக்கொண்டு உள்ளே சென்றேன். பருவம் அடைந்து வீட்டைவிட்டு வெளியில் போக முடியாத—என் சிறிய தகப்பனுருடைய பெண்ணுன—என் தங்கை பழனியம்மாளைத் தவிர வேறு யாரும் வீட்டிலில்லை. பழனியம்மாள் கூடத்திலிருந்த பலகையின்மீது பாதி உறக்கத்தோடு படுத்துக்கொண்டிருந்தாள். விருந்தாளிகளைப் பற்றி விசாரித்தேன். படுத்துக்கொண்டே பழனியம்மாள் சொன்னதிலிருந்து வீட்டிலுள்ளவர்களும் விருந்தினர்களும் கோனியம்மன் கோவிலுக்குப் போயிருப்பதாகத் தெரிந்தது. கோயமுத்தூரில் கோனியம்மன் கோவில்தான் விசேஷமான ஆலயம். அன்றையதினம் அந்தக் கோயிலில் ஒரு திருவிழா. ஆனதினுல் எல்லாரும் அங்கே போயிருந்தார்கள். என்னுடைய தகப்பனுர் இன்னும் கச்சேரியிலிருந்து வரவில்லை. வீட்டு வேலைக்காரியும் பெண்டுகளுடன் கோவிலுக்குப் போயிருந்தாள்.

வீட்டின் முற்பகுதியில் நான் படிக்கிற அறை.

அறைக்குள் சென்று வேர்வையில் நனைந்திருந்த என் சட்டைகளை மாற்றிக்கொண்டு விளக்கை ஏற்றி மேஜையின் அருகில் நாற்காலியில் அமர்ந்தேன். என்னுடைய அறைக்கும் வீட்டின் மற்ற பகுதிக்கும் மத்தியில் சரப்பலகைகள் போட்ட ஒரு தடுப்பு. அந்த சரப்பலகைகளின் இடையிடையே சந்துகள் அரை அங்குலத்துக்கும் அதிகமாகக்கூட இருக்கும். இந்தச் சந்துகளின் வழியே சமையல் அறையின் வாடை வந்து வந்து என் மூக்கையும் நாக்கையும் வதைத்துக் கொண்டேயிருந்தது. ஆசைகளையெல்லாம் அடக்கிவிடும் யோகியைப் போல சுமார் அரைமணி நேரம் பல்லைக்கடித்துக் கொண்டு அந்தப் புலால் வெறியைப் புறக்கணித்து உட்கார்ந் திருந்தேன். ஆசையை அடக்குவது லேசான காரியமா!

மெள்ள எழுந்தேன். வீட்டுக்குள் சென்றேன். பாதி உறக்கமாகப் படுத்துக் கொண்டிருந்த தங்கை பழனியம்மாள் நன்றாகத் தூங்கி விட்டதைக் கண்டேன். இரண்டொரு குரல் கூப்பிட்டுப் பார்த்தேன், பதிலில்லை. சந்தடியின்றிச் சமையல் அறைக்குட் புகுந்தேன். அடுக்களையில் மூடிவைக்கப்பட்டிருந்த பாண்டங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் திறந்துபார்த்து பக்குவங்கள் ஒவ்வொன்றிலும் வேண்டியமட்டிலும் ஒரு தட்டத்தில் கொட்டிக்கொண்டேன். கொதிக்கிற சூடாக இருந்த அவற்றை ஆறக்கூட நேரமில்லாமல் பந்தாட்டத்திலிருந்து வந்த பசியோடு அவசரம் அவசரமாக மென்றும் மெல்

லாமலும் ருசிகூடப்பார்க்காமல் கொஞ்சம் முழுங்கினேன். புலால் உணவில் இடையிடையே எலும்புகளும் இருக்கும். முதல் இரண்டு மூன்று கவளங்களை முழுங்கியபின் தசைநிரம்பிய ஒரு எலும்புத்துண்டு நேர்ந்தது. அதைச் சமாளிக்கக் கொஞ்சம் நேரமாகிவிட்டது. புலால் ஆசை வெறியின் வேகத்தில் திருட்டுத்தனமாகத் தின்னப் போகிறோம் என்ற நினைப்பே இல்லாமல் வீதிக் கதவைக்கூடத் தாழிட்டுக்கொள்ள மறந்து போனேன். நான் தட்டத்தில் ஆத்திரத்தோடு கொட்டிக்கொண்ட பதார்த்தங்களில் பத்தில் ஒரு பங்குகூட தின்று தீர்க்குமுன் "தம்பீ! என்னடா செய்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே கோயிலுக்குப் போயிருந்த என் மூத்த தமக்கை பழனியம்மாள் உள்ளே வந்தாள். சைவ விரதத்தை புலால் உணவோடு மென்று கொண்டிருந்த நான் திடுக்கிட்டு நடுநடுங்கிப் போய் வேறொன்றும் செய்யமாட்டாமல் எழுந்து நின்று தமக்கையைப் பார்த்து கலகலவென்று சிரித்துவிட்டு வாயைத் துடைத்துக்கொண்டு கையைக்கூடக் கழுவாமல் என்னுடைய அறைக்கு ஓடிவிட்டேன். என் தமக்கை என் பின்னலேயே மற்றவர்களுக்குச் சொல்லாமல் என் அறைக்குள் வந்து "ஏண்டா தம்பி எதற்காக பயப்படவேணும். உனக்குப் பிரியமானல் ராஜா மாதிரி வேண்டியமட்டும் திங்கலாமே, இதிலே என்ன தப்பு? சைவம் கிய்வம் எல்லாம் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். இப்போது

சிறு பிள்ளை, வளரும் வயசு. இஷ்டப்பட்டதை வயிருரச் சாப்பிடாமல் இந்தவிரதமெல்லாம் என்னத்துக்கு? ஆனுனப்பட்ட பாப்பான்களெல்லாம் கூட அதுக்காக அலேகிருர்கள். தின்கிற ஜாதியில் பிறந்த உனக்கென்னத்திற்கு இந்தக்கூச்சம்? வா, நன்ருக உட்கார்ந்து பகிரங்கமாகவே சாப்பிடலாம் வா" என்று வெகு நேரம் சமாதானப் படுத்தி அழைத்தாள். பின்னுல் வருவதாகச் சொல்லி அக்காளை அனுப்பிவிட்டு, பாடம் படிப்பவனைப் போல் அறையில் உட்கார்ந்திருந்தேன். ஆசை ஒருபுறம், அவமானம் ஒருபுறம் என்னைக் குத்திக்கொண்டே யிருந்தன.

கச்சேரியிலிருந்து என் தந்தை வந்தார். விருந்தாளிகள் எல்லாரும் சாப்பிட்டான பின்னும்நான் சாப்பாட்டுக்குப் போகாமல், விரதத்தை அனுஷ்டிக்க வைராக்கியத்தை வலுப்படுத்திக் கொள்வதா அல்லது விரதத்தை விட்டுவிடுவதா என்று வெறிக்க வெறிக்க விளக்கைப் பார்த்துக் கொண்டே சிந்தனை செய்து கொண்டிருந்தேன்.

"தம்பி! வா. எல்லாரும் சாப்பிட்டாச்சு நீயும் நானுந்தான் பாக்கி. யாரும் இல்லை, நீ தனியாக உட்கார்ந்து கூச்சப்படாமல் சாப்பிடலாம் வா" என்று என் தமக்கை என் பின்னுல் வந்து நின்றுகொண்டு ரகசியம்போல அழைத்தாள். நான் உடனே எழுந்து சென்றேன். தனியே உட்கார்ந்தேன். தமக்கை வழக்கத்துக்கு மேல் சற்றே அதிகமான பரிவோடு பரிமாறினுள். ஆத்திரம் அடங்கத் தின்றுத் தீர்த்துவிட்டேன்.

இப்படியாக மூன்ருவது தடவை நான் மேற்கொண்ட விரதமும் முறிந்து விட்டது. என்னுடைய புலால்மறுக்கும் விரதம் கெட்டுப் போனதில் வருத்தப்படுவார் ஒருவருமில்லை. (அப்போது என் தாயார் இறந்துபோய் இரண்டு வருஷம்). என்னுடைய சைவம் கெட்டுப் போனதில் எல்லாருக்கும் ஒருவாறு திருப்தி தான். ஏனென்ருல் நான் அந்த விரதத்தை அனுஷ்டிக்க ஆரம்பித்த பின் வீட்டில் புலால் உணவைச் சமைக்கும் போதெல்லாம் மிகவும் அருவருப்புக் காட்டி அதை உண்ணும் மற்றவர்களை யெல்லாம் இகழ்ந்து ஏளனம் செய்து வந்தேன். நான் வீட்டுக்குச் செல்லப் பிள்ளையானதால் என்னுடைய அருவருப்புக்கு அஞ்சி மற்றவர்களெல்லாம் எனக்கு முன்ஞல் அதை சாப்பிடக்கூடத் தயங்குவார்கள். நானும் அவர்களோடு சேர்ந்து விட்டபின் புலாலை விட்டுவிட்ட இறுமாப்புக்கு இடமில்லையல்லவா. அதனுல் வீட்டிலுள்ள அனைவருக்கும் என்னுடைய சைவம் கெட்டுப் போனதில் சந்தோஷமே. நாக்கை அடக்கியாளத் திறனில்லாமல் என்னுடைய விரதம் அடிக்கடி பங்கப்பட்டு விட்டதென்ருலும் கூட, புலால் உண்பதைப் பற்றிய அருவருப்பும் அசூயையும் என்னுடைய உணர்ச்சிகளின் அடித்தளத்தில் இருந்து கொண்டே இருந்தன.

மேற்சொன்ன நிகழ்ச்சிக்குப் பிறகு சுமார் இரண்டு வருஷங்கள் சென்ற பிற்பாடு எப். ஏ.

படிப்பிற்காக காலேஜில் சேருவதற்கு திருச்சி ுப்பள்ளிக்குச் சென்றேன். முதலில் செயின்ட் ஜோஸப் காலேஜில் சேரவேண்டும் என்றுதான் போனேன். அந்த காலேஜில் நான் போன சமயத்தில் ஜூனியர் எப். ஏ. வகுப்பில் இடமில்லை. ஏனெனில் என் தகப்பனார் மெட்ரிகுலேஷனோடு என் படிப்பை நிறுத்தி என்னை உடனே போலீசில் சேர்த்துவிட விரும்பினார். நான் மேலும் படிக்க இச்சை கொண்டேன். இந்த விவாதத்தில் நாள் கடந்து விட்டதால் எப். ஏ. படிக்கத் தீர்மானிப்பதில் தாமதம் ஏற்பட்டுவிட்டது. செயின்ட் ஜோஸப் காலேஜில் இடமில்லையென்று தீர்மானம் ஆனபின் எஸ். பி. ஜி. காலேஜில் இடந்தேட வேண்டியதாயிற்று. அங்கேயும் போனவுடனே இடங்கிடைத்து விடவில்லை. ஐந்தாறு நாள் காத்திருக்கவேண்டியதாயிற்று. இப்படியாகப் பள்ளியில் சேருவதற்கு முன்னால் சுமார் பத்து நாள் வரையிலும் சும்மா இருக்க நேர்ந்தது.

அந்தச் சமயத்தில் மலைக்கோட்டை தாயுமானவர் சன்னதியில் சைவ சித்தாந்தப் பெருவிழா நடந்துகொண்டிருந்தது. அதில் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அதற்கென்றே வந்திருந்த அநேக சைவ சித்தாந்திகளின் பிரசங்கங்கள் நடைபெற்றன. அந்தப் பிரசங்கிகளுள் அப்போது தான் பட்டத்துக்கு வந்திருந்த திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமி அவர்

களும் ஒருவர். அவர் 'சைவ சீலம்' என்பதைப் பற்றி ஒரு உபன்யாசம் செய்தார். வசீகரத்தோற்ற முள்ள அந்த வாலிபத் துறவியின் அறிவு நிரம்பிய அழகான சொற்பொழிவைக் கேட்டு நான் சொக்கி விட்டேன். அவர் பிரசங்கத்தின் ஒரு பகுதியில் புலால் உண்ணுமையைப்பற்றி கல்வி நிறைந்த கட்டுரைகள் சொல்லி, ஊன் உண்பதற்காக உயிர்க்கொலை புரிதல் எந்த வகையிலும் விரும்பத் தகாதது என்று விளக்கிக் காட்டினுர். அவரு டைய பேச்சைக் கேட்கக் கேட்க புலால் உண்ணு மையைப்பற்றி என் உள்ளத்தில் ஏற்கனவே இருந்து மறைந்து கிடந்த எண்ணங்கள் மறு மலர்ச்சி கொண்டன.

அடுத்த நாள் அதே இடத்தில் இன்னொரு சைவசித்தாந்தி 'புலால் மறுத்தல்' என்பதையே பொருளாகக் கொண்ட ஒரு பிரசங்கம் செய்தார். இவருடைய பேச்சு ஞானியார் சுவாமிகளுடைய பேச்சைப்போல அவ்வளவு அன்பாகவும் அமை தியாகவும் ஆழ்ந்த கல்வியறிவுடையதாகவும் இல்லாவிட்டாலும், கேட்பவர்கள் உணர்ச்சிகளை வெகு விரைவில் கிண்டிக் கிளர்ந்துவிடக் கூடிய தாக அபூர்வமான வேகமும் விறுவிறுப்பும் உள்ள தாக இருந்தது. புலால் உண்பவர்கள் வெட்கித் தலைகுனிந்து புலால் உண்பதை விட்டுவிட வேண்டுமென்று உடனே உறுதி கொள்ளும்படி யாக அவ்வளவு இடிப்பும் ஏளனமும், கிண்டலும் கேலியுமாகப் பேசினுர்.

ஞானியார் சுவாமிகள் புலால் உண்ணுமை

'சைவ சீலத்துக்கு இன்றியமையாத ஒழுக்கம்' என்று சொல்லிவிட்டு "புலால் உண்பதனுல் ஜீவ காருண்யத்தின் பெருமையை அறிய முடியாமற் போகும். ஜீவகாருண்யத்தை அறியாவிட்டால் அன்பு வராது. அன்பு இல்லாவிட்டால் அருளை உணர முடியாது. அருளை எண்ணுமற் போனுல் அருள் வடிவாக இருக்கும் ஆண்டவனை அடைய முடியாது. ஆதலின் சைவர்களாயிருந்தாலும் சரி, மற்றவர்களானுலும் சரி, புலாலை விலக்குவது தான் சிறந்த ஒழுக்கம் என்பதை சிந்திக்க வேண்டும்" என்ற தினுசில் தம்முடைய பிரசங்கத்தை முடித்தார். ஆனுல் மறுநாள் பேசின இவர் சுருக்குச் சுருக்கென்று குத்தக்கூடிய சொற்களால் புலால் உண்பதைப் பல விதமாகத் தாக்கிப் பேசிவிட்டு, முடிவுரையாக "வேறு எந்தப் பாபத்தைச் செய்கிறவனுக்கும் விமோசனம் உண்டு. ஆனுல் புலால் உண்கின்றவனுக்கு விமோசனமே கிடையாது. அதனுல்தான் தெய்வப் புலமை திருவள்ளுவரும்

> உண்ணுமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண
> வண்ணுத்தல் செய்யா தளறு.

என்று சொன்னுர். 'ஊனுண்ண அண்ணுத்தல் செய்யாது அளறு' ஊனுண்டவர்களை நரகமானது தன்னுள் போட்டுக்கொண்டு அவர்களை வெளியில்விட என்றென்றும் வாய்திறக்காது என்று சொல்லியிருக்கிருர்" என்று தம்முடைய பிரசங்கத்தை முடித்தார். அந்தப் பிரசங்கமும் முந்தின நாள் ஞானியாருடைய பேச்சைக் கேட்டு

என் மனதிலுண்டான மறுமலர்ச்சியை அதிகப் படுத்தியது.

இப்படியாகப் பள்ளிக்கூடத்தில் சேருவ தற்கு இடங்கிடைக்காமல் நான் காத்துக்கொண் டிருந்த ஏழெட்டு நாட்களும் தினந்தினம் இந்த சைவ சித்தாந்த விழாவில் நடந்த உபன்யாசங் களைக் கேட்டேன். மேற்சொன்ன இரண்டு பிரசங் கங்களைத் தவிர இன்னும் அங்கே நடந்த அநேக உபந்யாசங்களையும் கேட்டேன். அங்கே நடந்த எல்லாப் பிரசங்கங்களிலும் இந்தப் 'புலால் உண்ணுமை' யைப்பற்றி இரண்டொரு வார்த் தைகளாவது கூறப்பட்டன. அதைப்பற்றிப் பேசின அத்தனை பேரும் திருக்குறளில் 'புலான் மறுத்தல்' என்னும் அதிகாரத்திலுள்ள பத்துப் பாட்டுகளையும் அவரவர் கருத்துக் கிசைந்தபடி கையாண்டார்கள்.

பள்ளிக்கூடத்தில் சேர்ந்தேன். பாடப் புத்த கங்களை யெல்லாம் வாங்கினேன். ஒவ்வொன்ருக அழகு பார்ப்பதற்கென்ருவது புதுப் புத்தகங் களின் ஏடுகளைப் புரட்டினேன். தமிழ்ப் புத்த கத்தை எடுத்தேன். சர்வகலாசாலைத் தமிழ் பாடப் புத்தகங்களில் எப்போதும் முதலில் இருப்பது செய்யுட் பகுதி. அந்தச் செய்யுட் பகு தியில் 'புலான் மறுத்தல்' என்ற திருக்குறள் அதிகாரமும் பாடமாக வந்திருப்பதைப் பார்த் தேன். உடனே அதிலுள்ள பத்துப் பாட்டுகளை யும் படித்துப் பார்த்துச் சைவ சித்தாந்த விழா

வில் நடந்த உபன்யாசங்களில் காதில் விழுந்த குறள்களை யெல்லாம் கவனித்தேன்.

எஸ். பி. ஜி. காலேஜின் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ பிச்சை இப்ராஹிம் புலவர். அவர் தான் எங்களுக்குத் தமிழ் ஆசிரியர். அவர், மூன்று தலை முறைகளுக்கு முன்னால் மகம்மதிய மதத்தைத் தழுவிய குடும்பத்திற் பிறந்த ஒரு தனித் தமிழர். 'தனித் தமிழர்' என்றால் தமிழ் நாட்டிற் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து தமிழ் மொழியைத் தாய் மொழியாக உடையவர் என்ற அர்த்தத்தில் மட்டுமல்ல. தமிழைத் தவிர வேறு மொழியை அறியாதவர். தமிழ் மரபின் வழக்க ஒழுக்கங்களைப் பின் பற்றியவர். அது மட்டுமல்ல தமிழ் மொழிக் கல்வியையே குலத்தொழிலாகப் படித்துத் தேறிய பரம்பரையில் வந்தவர். வாழை யடி வாழையாக அவருடைய முன்னோர்கள் தமிழ்ப் புலமையில் ஊறியவர்கள். அதனாலேயே 'புலவர்' என்ற குடும்பப் பட்டமும் உடையவர். (இப்படிப்பட்ட மகம்மதிய குடும்பங்களைத் தமிழ் நாட்டில் எங்கெங்கும் 'பாவலர்,' 'நாவலர்,' 'புலவர்' 'கவிராயர்' என்பன போன்ற பட்டங் களுடன் பார்க்கலாம்) தனித் தமிழை விரும்பு கின்ற இந்துக்கள்கூட அவ்வளவு சுத்தமான தமிழ் பேசுவதை நான் பார்த்ததில்லை. பிச்சை இப்ராஹிம் புலவர் அவர்கள் யாரிடத்தில் எப் போது பேசினாலும் இலக்கியச் சுவை மிகுந்த இலக்கணத் தமிழாகத்தான் பேசுவார். பள்ளிக் கூடத்தில் அவருடைய வகுப்பு ஒன்றில்தான்

பையன்கள் எல்லாரும் தமிழ்ப் பண்டிதருக்குப் பயந்து நடந்து கொண்டதைப் பார்த்தேன். 'காலேஜ் பிரின்சிபால்' வகுப்புக்குள் வந்தால் எப்படிப் பையன்கள் அடங்கி ஒடுங்கி அமைதி காட்டுவார்களோ, அப்படி இருக்கும் அவருடைய வகுப்பு. அவசியமான சந்தர்ப்பங்களிலும்கூட அளவுக்கு மிஞ்சிச்சிரிப்பதையும் அனுமதிக்கமாட்டார். அப்படி மாணவர்களை அடக்கியாளும் திறமை தமிழ்ப் பண்டிதர்களுக்குள் மிகவும் அபூர்வம்.

பள்ளிக்கூடத்திற் சேர்ந்து ஐந்தாறு மாதங்களுக்கு அப்புறம் 'புலான் மறுத்தல்' என்ற திருக்குறள் பகுதியின் பாடம் வகுப்பில் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீ பிச்சை இப்ராஹிம் புலவர் மிகவும் விஸ்தாரமான ஆழ்ந்த கல்வியறிவுடையவர். விரிவுரையாக அங்கங்கே சொல்லவேண்டிய புராணக் கதைகளை வெகு அழகாகச் சொல்லுவார். இலக்கணப் பகுதியை மிகவும் கவனிப்பார். அதனால் ஒரு நாளைக்கு அந்த வகுப்பு நேரத்துக்குள் ஒரே ஒரு செய்யுள் அல்லது ஒன்றரை செய்யுளுக்குமேல் பாடம் நடக்காது. இப்படியாக

உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு

என்னும் செய்யுள் வந்தது. 'ஊனுண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு' என்ற பிற்பகுதியைப் பண்டிதர் விளக்கிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது சைவ சித்தாந்த விழாவில்

'புலால் மறுத்தல்' என்ற விஷயமாகப் பேசின பிரசங்கி 'வேறு எந்தப் பாபத்தைச் செய்தவனுக்கும் விமோசனம் உண்டு, ஆனால் புலால் உண்டவனுக்கு விமோசனமே இல்லை, என்றென்றும் அவனுக்கு நரகந்தான்' என்று சொல்லி அதற்கு இந்தக் குறளை எடுத்துக் காட்டினது எனக்கு ஞாபகம் வந்தது. 'ஊனுண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு' என்பதில் 'புலால் உண்டால் நரகம் வாய் திறக்காது' என்ற அளவுக்குத்தான் பதங்கள் இருக்கின்றன. நான் எழுந்து நின்று,

"எனக்கு ஒரு சந்தேகம் ஐயா" என்றேன்.

"என்ன ஐயம்?" என்றார் புலவர்.

"புலால் உண்பவனுக்கு நரகம் 'இல்லை' என்றல்லவா இதில் சொல்லப்பட்டிருக்கிறது?" என்றேன்.

"அவ்வாறாயின் ஊனுண்பவனுக்கு நரகம் இல்லை, சுவர்க்கம் கிடைக்கும் என்று எண்ணுகின்றாயா? புலால் உண்பதில் உனக்கு மிகுந்த விருப்பம் போலும்?" என்றார்.

"இல்லை, புலால் உண்பதை விட்டுவிட்டேன்."

"விட்டுவிட்டாயா! உண்டுகொண்டிருந்தா விட்டுவிட்டாய்?"

"ஆம்."

"விட்டு எவ்வளவு காலமாயிற்று?"

"சுமார் ஆறு மாதங்கள்."

"ஏன் விட்டாய்?"

"நெடுநாட்களாகவே புலால் உண்பதில் எனக்கு அருவருப்புண்டு. இதற்குமுன் இரண்டு மூன்று முறை அதை விட்டுவிட முயன்று தவறி விட்டேன். ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால் மலைக்கோட்டையில் நடந்த சைவ சித்தாந்த மகாநாட்டின் பிரசங்கங்களைக் கேட்டபின் மறுபடியும் அதை விட்டுவிட்டேன்."

"ஓ! அப்படியா! நன்று நன்று. சைவ சித்தாந்தப் பிரசங்கங்களில் என்ன சொன்னார்கள்? எதைக் கேட்டு நீ புலாலை விட்டாய்?"

"புலால் உண்பது பாபம் என்று சொன்னார்கள்."

"சரி, புலால் உண்பது பாபம் என்பதை நீ நம்பினால் பாபத்துக்குப் பயன் நரகந்தானே. இல்லையா? அதில் ஏதேனும் உனக்கு ஐயமுண்டா?"

"இல்லை."

"அவ்வாறிருக்க 'ஊனுண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு' என்பதற்கு 'மாமிசம் உண்டால் நரகம் இல்லை' என்று வள்ளுவர் சொல்லியிருப்பாரா என்பதை எண்ண வேண்டாமா?" என்றார்.

"அதிலே உள்ள பதங்களைப் பார்த்தால் புலால் உண்டால் நரகம் வாய்திறக்காது' என்ற மட்டில் தானே பதங்கள் இருக்கின்றன என்

பதை எண்ணிக் கேட்டு விட்டேன்" என்று முணகினேன்.

"செய்யுள் ஆனதனால் பதங்களை வருவித்துக் கொள்ளத்தான் வேண்டும்" என்று சொல்லி விட்டு, புலால் உண்பவனுக்கு நிரந்தரமாக நரகம் தான் கிடைக்கும் என்று பொருள் சொன்னார். நான் என்னுடைய சந்தேகம் தீராமல் நின்று கொண்டே இருந்தேன்.

"ஐயம் நீங்கிற்றா?" என்றார் பண்டிதர்.

"புலால் உண்டவனுக்கு என்றென்றும் நரகந்தான் என்றால் நான் புலாலை விட்டும் பயனில்லையா?" என்றேன். பண்டிதர் என்னுடைய கேள்வியை மிகவும் மெச்சிவிட்டு புன்சிரிப் போடு: "அப்படி இல்லை. நல்ல செயல்களைச் செய்த அளவுக்குப் புண்ணியம் உண்டு. புலால் உண்பது தீயது என்று எண்ணி அதை விட்டு விட்ட பயன் உனக்கு உண்டு என்பது ஒருதலை. 'புலால் உண்டவனுக்கு நிரந்தரமாக நரகம்' என்று வள்ளுவர் சொன்னது புலால் உண்பது மிகவும் கொடிய பழக்கம் என்பதை வலியுறுத்தக் கூறியதேயன்றி வேறில்லை" என்றார்.

நான் ஒத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டேன். அந்த உரைப்படிதான் பாடம் படித்துப் பரிட்சைகளிலும் விடை எழுதினேன்.

பள்ளிக்கூடத்தை விட்டபின் தனியாகவும் பிறர் வாயிலாகவும் திருக்குறளை அப்போதைக் கப்போது படிப்பதுண்டு. இந்தச் செய்யுள் வரும்

போதெல்லாம் ஏதோ கொஞ்சம் முரண்பாடு இருப்பது போல என் மனது உறுத்திக் கொண்டே இருக்கும். நேர்ந்த போதெல்லாம் பல அறிஞர்களிடத்தில் இந்த சந்தேகத்தை தீர்த்துக்கொள்ள முயன்றேன். எல்லாரும் அதே பொருளைத்தான் சொன்னார்கள். என்றாலும் எனக்குத் திருப்தி உண்டாகவில்லை. அதனால் திருக்குறள் உரையைப் பற்றி அடிக்கடி சிந்திக்க லானேன். இந்த சிந்தனையின் பயனாகப் பரிமே லழகருடைய உரையை பற்பல விதமாக ஆராய ஆரம்பித்தேன். அப்படி ஆராய்ந்த போது இந்தச் செய்யுளைத் தவிர இன்னும் பல இடங் களில் உரையின் போக்கு மூலத்தின் நோக்கத் திற்கு முரணாக இருப்பதுபோலத் தோன்றியது. இருந்தாலும் ' எங்கே முரண் ', ' எப்படி முரண் ', ' அந்த முரண்களை நீக்குவது எப்படி ' என்ற தெளிவுகள் ஏற்படாமல் திகைத்துக் கொண் டிருந்தேன்.

காந்தீயத்தில் ஈடுபட்டு, காங்கிரஸ் பிரசாரங் களில் தீவிரமாக இறங்கியபின் இந்த இலக்கிய ஆராய்ச்சிக்கு நேரமில்லாமல் நின்றுபோய் விட்டது. திருக்குறளைப்பற்றிய ஆராய்ச்சி நின்றுவிட்டாலும் திறக்குறளின் தொடர்பு மட்டும் நிற்கவில்லை. ஏனெனில் காந்தியடி களின் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு எழுத் தும் ஒவ்வொரு செயலும் திருக்குறளில் சொல் லப்பட்டிருக்கிற அறங்களை அப்படியே நடத் திக் காட்டுவது போல இருக்கிறபடியால் காந்தீ

யத்தைப் பற்றிய பிரசங்கங்களுக்குத் திருக்குறளின் செய்யுட்கள் மிகவும் பொருத்தமான மேற்கோள்களாக இருக்கின்றன.

1932-ல் சத்தியாக்கிரகம் செய்து ஒரு வருஷம் தண்டனை யடைந்து வேலூர் சிறையில் இருந்தேன். அந்தச் சிறையில் ஏ. வகுப்புக் கைதிகளாகவும் பி. வகுப்புக் கைதிகளாகவும் சுமார் முன்னூறு பேர் இருந்தோம். ஏ. பி. வகுப்புக் கைதிகளுக்குப் படிப்பதற்கும் எழுதுவதற்கும் போதிய அவகாசமும் அனுகூலங்களும் இருந்தன. ஏ. வகுப்பும் பி. வகுப்பும் தனித்தனி இடங்களில் அடைக்கப்பட்டிருந்தாலும் அடிக்கடி சந்தித்து அளவளாவிக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். ஆகையினால் சிற்சில நாட்களில் எல்லாரும் ஒரே இடத்திற்கூடி இலக்கிய விஷயமாகவும் அரசியல், பொருளாதார விஷயங்களாகவும் பிரசங்கங்களும் விவாதங்களும் நடத்துவதுண்டு. பெரும்பாலும் இலக்கியப் பிரசங்கங்கள் நடக்கும். அதனால் வெளியில் இருந்தபோது இலக்கியங்களை நிதானமாகப் படித்தறிய நேரமில்லாதவர்களெல்லாம் அவரவர்களுக்கு விருப்பமான இலக்கியத்தை, கூட்டம் கூட்டமாக வகுப்பு - வகுப்பாக சிறையில் படிக்கத் தொடங்கினார்கள். தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம், ஹிந்தி, மலையாளம், கன்னடம் முதலான பல மொழிகளும் படிக்கப் பெற்றன.

ஏ. வகுப்பில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார், முத்துரங்க முதலியார், பக்தவத்ஸலம்,

K. பாஷியம், E. கிருஷ்ணய்யர், மதுரை A. வைத்தியநாதய்யர் முதலான சிலரைச் சேர்த்துக் கொண்டு அருணாசலக் கவிராயரின் ராமநாடகத்தைப் படித்து 'அடடா! தமிழில் இப்படிப் பட்ட கீர்த்தனைகளும் இருக்கின்றனவா!' என்று ரஸித்துக்கொண்டிருப்பார்.

ஸ்ரீ நாகேஸ்வர ராவ் தனியே உட்கார்ந்து கொண்டு கீதை படிப்பார். ஸ்ரீ பட்டாபி சீதாராமையா தனியே அரசியல் ஆராய்ச்சிக் குறிப்புகள் எழுதுவார். ஸ்ரீ சத்யமூர்த்தி வடமொழி நூல்களையும் இங்கிலீஷ் அரசியல் நூல்களையும் படிப்பதில் காலங்கழிப்பார்.

ஸ்ரீ பிரகாசம் அவர்கள் படிப்பதைக்காட்டிலும் அதிகமாக எழுதிக்கொண்டிருப்பார்.

பி. வகுப்பில் நாங்கள் சுமார் இருநூற்று முப்பத்தைந்து பேர்கள். இவர்களுள் சென்னை 'சுதந்திரச் சங்கு' கணேசன், காஞ்சீபுரம் டாக்டர் ஸ்ரீனிவாசன் முதலான ஏழெட்டுப் பேர்கள் பி. வகுப்புக்காரர்கள் அத்தனை பேருக்கும் ஆக வேண்டிய சமையலை கவனித்துக்கொள்ளும் திருப்பணியை மேற்கொண்டவர்கள். அவர்களுக்குப் படிக்க நேரம் இருக்காது. மற்றவர்களில் பெரும்பாலும் கும்பல் கும்பலாகப் படித்துக்கொண்டிருப்பார்கள். இப்படிப் படித்த தமிழர்களுக்குள் பலபேர் திருக்குறளையும் கம்பராமாயணத்தையும் நன்றாக அறிந்துகொள்ள ஆசைப்பட்டார்கள். இந்த இலக்கியங்களை மற்றவர்களுக்குப் புகட்டத் தகுந்தவர்களாகக் கருதப்

பட்டவர்களில் நானும் ஒருவன். சிறையின் ஒரு பகுதியில் காரைக்குடி திரு. ராய. சொக்கலிங்கம் அவர்களும் இன்னொரு பகுதியில் நானும் தமிழ் இலக்கிய வகுப்புகளை நடத்திவந்தோம்.

என்னிடம் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், கோபிசெட்டிபாளையம் ஸ்ரீ சுப்பணக் கவுண்டர், ஸ்ரீ முத்துக்கவுண்டர், ஸ்ரீ நல்லாக் கவுண்டர், தேவாரம் 'பாரதி' ஆசிரியர் ஸ்ரீ நாராயணசாமி முதலான பத்துப்பேர் பாடங் கேட்டார்கள். தினந்தினம் திருக்குறளில் ஒரு அதிகாரமும், கம்பராமாயணத்தில் பத்து இருபது பாட்டுகளும் படிப்பது என்ற நியதியுடன் படித்துவந்தோம். அவர்கள் எல்லோரும் நல்ல அறிவாளிகள். திருக்குறளைப் பரிமேலழகர் உரையைக்கொண்டு நான் விளக்கிச் சொல்லும்போது அவர்கள் ஆளுக்கு ஒரு கேள்வியாகப் பல சந்தேகங்களைக் கிளப்பினார்கள். ஏற்கனவே பரிமேலழகர் உரையில் எனக்கிருந்த குழப்பங்கள் இன்னும் அதிகப்பட்டு, அவர்களைக் காட்டிலும் அதிகம் படித்தவன் என்று எதிர்பார்க்கப்பட்ட நான் அவர்களுடைய சந்தேக விபரீதங்களைத் தீர்க்க முடியாமல் திண்டாடினேன். விளக்க முடியாத இடங்களில் 'என்னமோ பரிமேலழகர் அப்படிச் சொல்லுகிறார்' என்று மழுப்ப வேண்டியதாகி விட்டது. ஐயந்திரிபுகளை அகற்ற முடியாத இடங்களை அப்படியே விட்டுவிட்டு புரிந்தமட்டும் படித்துக்கொண்டே போனோம். ஆரம்பித்து ஏழெட்டு நாட்களுக்குள் ஒவ்வொருவரும்

ஒரு திருக்குறள் மூலமும்-உரையும் உள்ள புதுப் புத்தகத்தை வாங்கிக்கொண்டு சேர்ந்து படித்த நேரம் போகத் தனியாகவும் படித்தார்கள்.

ஒரு நாள் நாங்கள் சேர்ந்து உட்கார்ந்து திருக்குறள் படித்துக்கொண்டிருக்கும் போது ஸ்ரீசத்தியமூர்த்தி அவர்கள் அங்கே வந்தார். (அவரும் இன்னும் சில ஏ. வகுப்புக்காரர்களும் அடிக்கடி பி. வகுப்பிலுள்ள நண்பர்களைப் பார்க்க வருவதுண்டு).

"என்ன திருக்குறள் கிளாஸ்? பிள்ளைவாள்! எனக்கும் திருக்குறளைப் படிக்க வேண்டுமென்று ரொம்ப நாளாகப் பிரியம். எனக்கும் சொல்லிக்கொடுங்களேன்" என்றார்.

"எனக்கே திருக்குறள் நன்றாகத் தெரியாது" என்றேன்.

"அடடா! அப்படிச் சொல்லலாமா? எங்களுடைய கவிஸிரேஷ்டரல்லவா நீங்கள்? உங்கள் பாட்டின் வேகந்தானே எங்களையெல்லாம் இங்கே கொண்டுவந்தது" என்று சொல்லிக் கொண்டே அவரும் எங்களுடன் பாடங்கேட்பவர்போல அமர்ந்து "நடக்கட்டும் நானும் கொஞ்சம் கேட்கிறேன்" என்றார்.

அப்போது நாங்கள் படித்துக்கொண்டிருந்த செய்யுள் 'பொருள் செயல் வகை' என்னும் அதிகாரத்தில்

**குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.**

என்பது. இதன் பொருள் பரிமேலழகர் உரையின்படி : 'பிறருடைய பணத்தையோ அல்லது பலத்தையோ மட்டும் நம்பிவிடாமல் - தன் கையில் பணமும் பலமும் வைத்துக்கொண்டு ஒரு காரியத்தில் இறங்குவது மலையின்மேல் இருந்து கொண்டு கீழே நடக்கும் யானைச் சண்டையைப் பார்ப்பதுபோல' என்பது. இதில் தன் கையிற் பொருளை வைத்துக்கொண்டு ஒரு காரிய முயற்சி செய்வதற்கும் மலையின்மேல் இருந்துகொண்டு கீழே நடக்கும் யானைச் சண்டையைப் பார்ப்பதற்கும் என்ன சம்பந்தம் என்ற சந்தேகத்தை ஓமந்தூர் ராமசாமிரெட்டியார் கேட்டார். பரிமேலழகர் உரையைத் திருப்பித்திருப்பிப் படித்தோம். இதற்குப் பரிமேலழகர் உரையில் 'குன்றேறி யான் அச்சமும் வருத்தமுமின்றி நிலத்திடை யானையும் யானையும் பொருபோரைத்தான் இனி திருந்து காணுமது போலக், கைத்துண்டாக வினையை மேற்கொண்டானும் அச்சமும் வருத்தமுமின்றி வல்லாரை யேவித்தான் இனிதிருந்து முடிக்குமேன்பதாம்' என்றுவிளக்கம் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியை எல்லாருங் கேட்கப் படித்த ராமசாமி ரெட்டியார் "இது என்ன ஒரு எழவும் புரியவில்லையே? சும்மா படிக்கக்கூட சங்கடமாயிருக்கிறதே. எங்களைப் போன்றவர்கள் படித்துப் பார்த்துக் கொள்ள எளிய பதங்கள் உள்ளதாக உங்களைப் போன்றவர்கள் ஒரு உரை எழுதக்கூடாதா?" என்று என்னைக் கேட்டார். உடனே சத்யமூர்த்தி அவர்கள் "ஆமாம் பிள்ளைவாள், நானும் திருக்குறளைப்

படிக்கவேணும் என்ற ஆசையுடன் இந்த உரைகளைப் பார்த்தேன். எனக்குத் துளிகூடப் புரியவேயில்லே, போட்டுவிட்டேன். இப்போ பாருங்கோ இந்த யானைச்சண்டை நாமாக தமாஷ் பார்ப்பதற்காக மூட்டிவிடும் சண்டையா? அல்லது அதுவாகக் காட்டில் யானையும் யானையும் போட்டுக்கொள்ளும் சண்டையா? இன்னும் இந்தச் சண்டையைப் பார்க்கிறதுக்கும் சொந்தப் பணத்தைக்கொண்டு ஒரு காரியத்தைச் செய்வதற்கும் என்ன சம்பந்தம்?" என்று சொல்லிக்கொண்டே பக்கத்திலிருந்தவர் வைத்திருந்த புத்தகத்தை வாங்கிக்கொண்டு "கைத்துண்டாக வினையை மேற்கொண்டானும் அச்சமும் வருத்தமுமின்றி வல்லாரை ஏவித் தான் இனிதிருந்து முடிக்குமென்பதாம்' என்று இருக்கிறதில் 'தன் முயற்சியாகத் தன்னுடைய தனத்தைக்கொண்டு காரியத்தைச் செய்ய வேண்டியவன்' தான் சும்மா இனிதிருந்துகொண்டு வல்லாரை ஏவிக் காரியத்தை முடித்துக்கொள்வான் என்பதில் அர்த்தமில்லையே" என்றார்.

மிகவும் மதிநுட்பமுள்ள அந்த நியாயம் என் மனதுக்கும் சரியென்று பட்டது. ஆனால் அதற்குத் தகுந்த சமாதானமோ வேறு பொருளோ சொல்ல முடியாமல், என்னை ஒரு தமிழ் அறிஞன் என்று எண்ணிக்கொண்டு என்னிடத்தில் அவர்களெல்லாம் பாடங் கேட்டுக்கொள்வது போல அமர்ந்திருந்த அந்த நிலைமை என்னை மிகவும் வெட்கப்படச் செய்து விட்டது.

ஆளுக்கு ஒரு தினுசாக அந்தக் குறளுக்கு உரைசெய்ய ஊகித்துப் பார்த்தார்கள். அந்தக் குறளோடு . ஸ்ரீ சத்யமூர்த்தி விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார். நாங்கள் அந்த அதிகாரத்தின் மீதிப் பாட்டுகளையும் படித்து முடித்தோம். எல்லோரும் போனபின் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் "புரியாத இடங்களை விட்டுவிட்டுப் புரியக்கூடிய குறள்களுக்காவது எல்லோரும் படித்தறியக்கூடிய எளிய நடையில் ஒரு உரை எழுதி வெளியிடும் வேலையை நீங்கள் செய்தே ஆகவேண்டும். எழுதிக் கொடுங்கள். நான் அச்சிட்டு வெளியிடுகிறேன். இது மிகவும் அவசியமான உதவி. சிரமத்தைப் பார்க்காமல் செய்யுங்கள். யாராரோ விரிவுரை என்றும் விளக்க உரை என்றும் எழுதியிருக்கிறார்கள். எல்லாம் படிப்பதற்குக் கஷ்டமாகத்தான் இருக்கின்றன. நீங்கள் எழுதினால்தான் எளிய பதங்களில் எழுதமுடியும்." என்ற கருத்தை மிகவும் வற்புறுத்திச் சொல்லிவிட்டுப் போனார்.

தப்போ தவறோ திருக்குறளுக்கு வேறு ஒரு உரை 'எளிய நடையாகவாவது எழுதி விடுவது' என்ற தீர்மானத்தை அன்றைக்கே செய்து கொண்டேன். அதற்குப் பின் எந்நேரமும் அதே சிந்தனைதான். ஒரே ஒரு குறளை திருப்பித் திருப்பி வெவ்வேறு விதமாகப் பதம் பிரித்துப் பார்த்துக்கொண்டே சிற்சில இரவுகள் தூங்காமலேயே விடிந்து போகும்.

இந்தப் புது உரையை எழுதுவதற்கு

எனக்கு ஒரு நல்ல தமிழ் அகராதி, ஆராய்ச்சிக்கு உதவக் கூடியவை என்று நான் எண்ணின வேறு சில தமிழ் இலக்கியங்கள், நோட்டுப் புத்தகங்கள் பென்சில், பேனு முதலான பல சாமான்கள் அவசியமாக இருந்தன.

பி. வகுப்பு அரசியல் கைதிகள் சொந்தச் செலவில் புத்தகங்கள், காகிதம், சோப்பு, முதலான சில குறிப்பிட்ட பொருள்களை வாங்கிக் கொள்ளலாம். ஏ. வகுப்புக் கைதிகள் இஷ்டமான எதை வேணுமானுலும் வாங்கிக் கொள்ளலாம். பீடி, சுருட்டு, சிகரெட், பொடி, பிராந்தி, ஒயின், அபின் கூட அவசியமானல் ஏ. வகுப்புக்காரர்கள் வாங்கிக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். ஏ. வகுப்புக்கும் பி. வகுப்புக்கும் சர்க்கார் கொடுக்கும் சாப்பாட்டுச் செலவு ஒரே மாதிரிதான். ஆனுல் பால், தயிர், பழவகைகள், ரொட்டி, பிஸ்கோத் முதலான உணவுப் பொருள்களை ஏ. வகுப்புக்காரர்கள் மட்டும் சொந்தச் செலவில் வேண்டியமட்டும் வாங்கிக் கொள்ளலாம்.

வேலூர் சிறைக்குப்போன ஒரு மாதத்துக்குள் என் மூத்த தமக்கை ஸ்ரீ பழனியம்மாள் அவர்கள் நாமக்கல்லில் இறந்து போனதாகச் சேதி கிடைத்தது. அந்தத் துக்கத்தினுல் நான் மிகவும் அசௌக்யமாகப் படுத்துவிட்டேன். எனக்கு சுமார் பதினைந்து பிராயமாக இருக்கும்போது என் தாயார் இறந்து போனுர்கள். அதன் பின் என்னையும் எனக்கு இளையவர்களான மூன்று

தங்கைகளையும் இரண்டு தம்பிகளையும் வளர்த்தவர் இந்தத் தமக்கை. என்னிடத்தில் அளவு கடந்த அன்பு. நான் சிறைக்கு வரும்போது அவர்கள் அசௌக்யமாக இருந்தார்கள். அழுது கொண்டே என்னைப் பிரிந்தார்கள். என்னைப் பிரிந்த துக்கம் அவர்களுடைய நோயை அதிகப்படுத்தி மரணத்தை துரிதப்படுத்திவிட்டது. அந்தக் காரணத்தால் அவருடைய மரணம் என்னுடைய மனோதிடங்களைக் கலக்கிவிட்டது. அதனால் நான் திடீரென்று நோயுற்று மிகவும் இளைத்துப் போனேன். அந்தச் சமயத்தில் என் அடுத்த அறையில் இருந்த சேலம் ஸ்ரீ சி. அனந்தாச்சாரியார் அவர்கள் என்னை அன்னையினும் அதிகமாகப் பராமரித்தார். அப்போது அவர் எனக்குச் செய்த உதவிகளுக்கு என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகாது. எப்படிப் புகழ்ந்தாலும் போதாது. அதை நினைக்குந்தோறும் என் நெஞ்சம் குளிரும். அதற்காக என்னுடைய நன்றியை அவருக்குச் செலுத்துவதற்கு வேறு எந்த வழியும் கிடைக்காத நான் இந்த இடத்தில் இந்த எழுத்துக்களால் மனமாற வாழ்த்துவதைக் காட்டிலும் மார்க்கமில்லை.

அப்படி நான் நோயுற்றுவிட்டபோது சிறையிலிருந்த கைதிகளில் பலபேர் என்னைப் பார்க்க வருவார்கள். ஒவ்வொருவரும் அவரால் முடிந்த வகையில் எனக்கு ஒரு அனுகூலம் செய்ய ஆசை கொள்வார். அந்தச் சமயத்துக்கு எனக்கு அதிகமாக அவசியமாக இருந்த

பொருள்கள் பால், பழம், ரத்தபுஷ்டி தரக் கூடிய தின்பண்டங்கள் 'டானிக்' மருந்துகள் முதலான இவைபோன்றன. இப்படிப்பட்ட தேவைகளை பி. வகுப்புக் கைதிகள் சொந்தச் செலவிலும் வாங்கிக்கொள்ள முடியாது. முடியுமானால் ஸ்ரீ அனந்தாச்சாரியார் ஒருவரே எனக்கு வேண்டிய எதையும் என்னுடைய கோரிக்கையை எதிர் பார்க்காமலேயே வாங்கி விடுவார். அதனால் பழம் பால் முதலானவற்றை ஏ. வகுப்பு மூலமாக எதிர்பார்க்க வேண்டியிருந்தது. ஏ. வகுப்புக்காரர்களுக்கு வெளியிலிருந்து பழக் கூடைகளும் தின்பண்ட தினுசுகளும் அடிக்கடி வந்து கொண்டிருக்கும். நான் நோயுற்றிருப்பதை அறிந்த பல ஏ. வகுப்பு நண்பர்கள் தங்களுக்கு வரும் பழம், ரொட்டி, வெண்ணை முதலான உயர்தர உணவுப் பொருள்களை அனுப்புவார்கள். வள்ளல் மனமுடைய மதுரை ஸ்ரீ ஏ. வைத்தியநாதையரவர்கள் ஒரு நாள் சிறையிலுள்ள கைதிகளுக்குத் தேவையான சாமான்களை வாங்கித் தருகிற சர்க்கார் அனுமதிபெற்ற கண்டிராக்டரை அழைத்துக்கொண்டு வந்து, "ராமலிங்கம் பிள்ளை! இவர் தினந்தினம் உங்களிடம் வருவார். உங்களுக்கு வேண்டிய பழமோ, பாலோ, மருந்தோ, டானிக்கோ, புத்தகமோ, நோட்புக்கோ, பேனாவோ, பென்சிலோ எது வேணுமானாலும் சரி கொஞ்சங்கூட சங்கோஜப்படாமல் என்னுடைய கணக்கில் ஆர்டர் கொடுத்து விடுங்கள்." என்று எனக்கு ஒரு 'பிளாங்க்

செக்' கொடுத்தார். அந்த 'செக்கை' வைத்திய நாதையரவர்கள் விரும்பியபடி முற்றிலும் உபயோகித்துக்கொள்ள அன்பர் அனந்தாச்சாரியார் விடவில்லை. பி. வகுப்புக் கைதி என்ற முறையில் அனந்தாச்சாரியார் வாங்கமுடியாத சில பொருள்களை மட்டுந்தான் வைத்தியநாதயர் கணக்கில் வாங்கினேன். இப்படியாக எனக்குத் தேவையான எல்லாத்துணைக் கருவிகளையும் வாங்கிக்கொள்ள வசதிகள் இருந்தன. அதனால் திருக்குறள் புது உரையை எழுத அகராதி, ஆராய்ச்சிக்கான புத்தகங்கள், சில சங்கநூல்கள், நோட்டுப் புத்தகங்கள், திருக்குறளைப்பற்றி முன்னமேயே பலபேர் எழுதியுள்ள விரிவுரை, விளக்கவுரை, தெளிவுரை என்ற பல புத்தகங்கள் இவைபோன்ற பல சாமான்களையும் ஒவ்வொன்ருகச் சேகரம் செய்தேன்.

இந்தச்சமயங்களில் எனது நண்பர் நாமக்கல் நாகராஜய்யங்கார் என்னுடன் இருக்க முடியாமற் போய்விட்டது. அதே சிறையில் சுமார் இரண்டு பர்லாங்கு தூரத்திலுள்ள வேருெரு கட்டிடத்தில் அவர் அடைக்கப்பட்டிருந்தார். அடிக்கடி வந்து போவார். அவருடன் இருந்த மதுரையைச் சேர்ந்த ஸ்ரீ ராகவாச்சாரி, குமாரசாமி, சுந்தர ராவ், சுந்தரராமன் முதலான அன்பர்களும் என்னிடத்தில் அத்யந்தப் பிரியமுள்ளவர்கள். அவர்களும் திருக்குறளைப் படித்துக்கொள்ள ஆர்வங் கொண்டு பரிமேலழகர் உரை புரியாமல் விட்டுவிட்டவர்கள். இந்த நண்பர்களும் திருக்

குறளுக்கு நான் எளிய நடையில் ஒரு உரை எழுதவேண்டும் என்பதை மிகவும் வற்புறுத்திச் சொல்லி அதற்காக எந்த உதவியையும் செய்வ தாக என்னை உத்ஸாகப் படுத்தினார்கள்.

இப்படியாக எனக்குத் தேவையான எல்லா முஸ்தீப்புகளையும் சேகரித்துக் கொண்டு எழுதத் தொடங்கினேன். ஐந்தாறு அதிகாரங்கள் முடி வதற்குள் வேலூர் சிறையில் அரசியல் கைதி களின் கூட்டம் அதிகரித்து விட்டதென்று சுமார் எழுபதுபேரைமதுரைச்சிறைக்கு மாற்றினார்கள். அப்படி மதுரைக்குப் போக வேண்டியவர்களுக் குள் நானும் ஒருவன். அன்னையே போன்ற அனந்தாச்சாரியாரைப் பிரிந்து போவதில் எனக் குண்டான துக்கத்துக்கு அளவில்லை. நல்லவேளை யாக நாகராஜய்யங்கார் மதுரைக்கு மாற்றப் பட்டவர்களில் ஒருவராக நேர்ந்துவிட்டது. என் னுடைய உடல் நலத்தை உத்தேசித்து என்னை வேலூரிலேயே வைத்திருக்கும்படி ஜெயில் சூப்ரண்ட் அவர்களைக் கேட்டுக்கொள்ள எண்ணி அதேமாதிரி நாகராஜய்யங்காரும் சூப்ரண்டை கேட்டுக்கொள்ள வேணுமென்று யோசனை சொன்னேன். அதற்கு நாகராஜய்யங்கார் "வேண் டாம், மதுரைக்குப் போகவேண்டியவர்களின் ஜாபிதாவை சர்க்கார் அங்கீகாரத்தின் மேல் ஊர்ஜிதம் செய்தாகிவிட்டது. இனிமேல் அதில் மாறுதல் வேணுமானால் மறுபடியும் சர்க் காருக்கு சூப்ரண்ட் சிபார்சு செய்து உத்தரவு கிடைக்கவேணும். நாம் இருவரும் இங்கேயே

இருக்கவேணுமென்று விண்ணப்பம் செய்து கொண்டால் இரண்டுபேரையும் இங்கே இருக்க விடுவார்கள் என்பது மிகவும் சந்தேகம். ஒருக் கால் நம் இருவரில் ஒருவரைமட்டும் இங்கே யிருக்க அனுமதித்து உத்தரவு செய்துவிட்டால் நாம் இரண்டுபேரும் ஒரே சிறையில் இருக்கக் கூடிய இன்பங்கூட இல்லாமற் போய்விடும். சும்மா இரு, இரண்டுபேரும் மதுரைக்கே போவோம்" என்றார். அந்த யோசனை மிகவும் சரியென்றே எனக்கும் தோன்றியது. நாகாரஜ ஐயங்காரும் நானும் இன்னும் எழுபதுபேரும் மதுரைக்கு மாற்றப்பட்டோம்.

என்னுடைய சரீர சௌக்யத்தைப் பற்றி அக்கரை கொண்ட ஸ்ரீ அனந்தாச்சாரியார் மது ரைக்குப் போகும் பல நண்பர்களிடத்திற் சொல்லி எனக்குத் தேவையான ஆகார வசதி களையும் 'டானிக்' முதலான வற்றையும் கவனித் துக் கொள்ளும்படி ஏற்பாடுகளைச் செய்தார். இதையறிந்த மதுரைக்காரரான ஸ்ரீ. ஏ. வைத்தி நாத ஐயரவர்கள் நான் வேலூரைவிட்டுப் புறப் படுவதற்கு முன்னலேயே வேலூர் சிறை அதி காரிகளின் மூலமாகவே தமக்கு உரிமையுள்ள கடிதங்களை எழுதி, மதுரையிலுள்ள அவருடைய நண்பர்கள் மதுரைச் சிறைச்சாலையின் அதிகாரி களின் அனுமதிபெற்று என்னுடைய தேவை களைப் பூர்த்தி செய்யும்படி கேட்டுக்கொண்டார். அதைப் போலவே மதுரையைச் சேர்ந்தவர் களான ஸ்ரீ சுந்தரராமன் ஸ்ரீ ராகவாச்சாரி முத

லானவர்களும் தனித்தனியே தங்கள் நண்பர்களுக்கும் குடும்பத்தாருக்கும் கடிதம் எழுதி என்னைக் கவனித்துக் கொள்ளச் செய்தார்கள். அதனால் எனக்கு வேலூரைக்காட்டிலும் மதுரை மிகவும் வசதிகள் உள்ளதாக வாய்ந்தது. ஸ்ரீ அனந்தாச்சாரியக்ருக்குப் பதிலாக ஸ்ரீ நாகராஜய்யங்காரின் பராமரிப்பும் கிடைத்தது ஒரு பாக்கியம். இங்கே ஸ்ரீ நாகராஜய்யங்காரைப் பற்றி ஒரு வார்த்தை. இவரும் நானும் ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் சத்யாகரகம் செய்து ஒரே விசாரணையில் ஒரே மாதிரி, தண்டனையாக ஒரு வருஷம் சிறைவாசம் பெற்று ஒன்ருகத்தான் கோயமுத்தூர் சிறைக்கூடம் சேர்ந்தோம். சிறைக்கு வருவதற்குமுன் என்னுடைய காது மந்தத்தைத் தவிர வேறு நோயே அறியாதிருந்த நான் சிறையில் பலமுறை அசௌக்யம் அடைந்து நலிந்து விட்டேன். ஆனல் நண்பர் நாகராஜய்யங்கார் சிறைவாசத்தில் ஒரு நாளாவது ஒருசிறு நோய்கூட உற்றவரல்ல. அதற்குக் காரணம் அவருடைய அனுஷ்டான சுத்தமே. ஆரம்பத்தில் எனக்கு நோய்வந்த காரணம் என் தமக்கை இறந்துபோய்விட்ட துக்கந்தான் உடனடியான காரணம் என்ருலும் அதற்கு மூல காரணம் உண்ணும் வகையில் என்னிடத்தில் ஏற்பட்டுவிட்ட ஒழுங்குத் தவறுதான் என்பதை மதுரைக்கு வந்தபிறகு நாகராஜய்யங்காருடைய கண்காணிப்பினுல்தான் கற்றுக் கொண்டேன். நான் சிறைபுகுந்த போது வயது நாற்பத்து

மூன்று. எடை நூற்றைம்பது ராத்தல். நல்ல கட்டுமஸ்தான தேகம். சிறைக்குள் போகும் போது சி. வகுப்புக் கைதிகளாகத்தான் அனுப்பினார்கள். சுமார் பதினைந்து நாட்களுக்குப் பிறகு தான் எனக்கும் நாகராஜய்யங்காருக்கும் அனந்தாச்சாரியாருக்கும் பி. வகுப்பு உத்தரவு வந்தது. சி. வகுப்பில் இருந்தவரையிலும் உப்புப் பத்தாத புழுத்துப்போன அரிசிக் கஞ்சியும் உழுத்துப்போன துவரம் குருணையின் உப்பில்லாத தொகையலும்தான் காலை உணவு. அவுசிப் போன அரிசியில் ஆக்கிய ஒரு சோற்று உண்டையும் காட்டிலுள்ள தழைதாம்புகளையெல்லாம் சேர்த்து இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு கைப்பு, உவர்ப்பு என்னும் ஆறு சுவைகளும் கலந்து நாக்குக்கும் மூக்குக்கும் நாடவொண்ணாத குழம்பு என்னும் பெயரோடு வயிற்றைக் குழப்பும் ஒரு கும்பியடித்த ஆணமுந்தான் பகல் உணவு. அதேமாதிரி மாலை ஐந்துமணிக்கு இராப் போஜனம். இந்த உணவையும்கூட நான் வயிறு கொண்டமட்டும் மிச்சம் விடாமல் தின்றுவிடுவேன். ஆனால் நாகராஜய்யங்கார் வெகு லேசாகச் சாப்பிட்டுவிட்டு பெரும் பகுதியை எறிந்து விடுவார்.

சி. வகுப்பிலிருந்து பி. வகுப்புக்கு மாற்றப்பட்டு வேலூர் சிறைக்குக் கொண்டுபோகப்பட்ட பின், பி. கிளாஸ் உணவுகள் ஏறத்தாழ நம்முடைய வீட்டு உணவைப்போல இருந்தாலும் அதற்குமேல் அதே சிறையிலிருந்த ஏ. வகுப்புக்

கைதிகளின் பழம் பால் பக்ஷண வகைகளும் அடிக்கடி கிடைப்பதற்கு அனுமதி இருந்ததாலும் நான் 'காய்ந்த மாடு கம்பங் கொல்லையில் புகுந்த்து' போலப் பதினைந்து நாட்களாக நல்ல உணவு கிடைக்காமல் அலைந்த நாக்கிற்கு அடிமையாகி, நினைத்த போதெல்லாம் நேர்ந்த மட்டிலும் அடுத் தடுத்து இடையிடையே எதையும் தின்று, நோய் வருவதற்கு இடங்கொடுத்து விட்டேன். நாக ராஜய்யங்கார் எவ்வளவு சிறந்த தின்பண்டம் சிக்கினாலும் இடைவேளைகளில் எதையும் தின்ன மாட்டார். உணவு வேளையிலும் கூட அளவாகத் தான் ஆகாரங்களை ஆய்ந்து அறிந்து சாப்பிடு வார்.

வேலூரில் இருந்த வரையிலும் நானும் நாக ராஜனும் தூரந்தூரமாக இருந்த வெவ்வேறு கட்டிடங்களில் இருந்தோம். மதுரைக்கு வந்த பின் ஒரே அறையில் அடுத்தடுத்து இருக்க நேர்ந் தது. ஆகையினால் என்னேரமும் பக்கத்திலேயே இருந்து பார்த்துக் கொண்டிருந்த அவர் என் னுடைய ஒவ்வொரு செயலையும் கண்காணித்து உடல் நலத்துக்கான எச்சரிக்கைகளைச் செய்து கொண்டே இருப்பார். பாலிய நண்பன் ஆன தால் சிற்சில சமயங்களில் அதட்டி மிரட்டிக் கண் டிப்புகள் செய்து கண்காணிப்பார். சாப்பாட் டுக்குப் போனால் என்னையும் தன் பக்கத்திலேயே உட்காரச் சொல்லி வற்புறுத்துவார். அந்தக் காய் பித்தம் இந்தக் காய் வாயு, அது சீதளம், இது உஷ்ணம் என்று சொல்லி, சிற்சில பதார்த்தங்

களைத் தானும் சாப்பிடமாட்டார்; என்னையும் சாப்பிட விடமாட்டார். அதையுங்கூட மீறிச் சிற்சில சமயத்தில் நான் தின்றுவிடுவதுண்டு.

ஆகையினால் மதுரையில் எனக்கு ஆரோக்ய மும் நிம்மதியும் அதிகமாகக் கிடைத்தது. வேலூரி லிருந்து வைத்திநாதய்யரும் மற்ற நண்பர்களும் எழுதியிருந்தபடி எனக்குத் தேவையான 'டானிக்' வகைகளும் வேண்டிய மட்டும் வந்து சேர்ந்தன.

மதுரைச் சிறையில்தான் திருக்குறளுக்கு நான் வெகு நாளாக எழுத விரும்பிய புது உரை களின் குறிப்புகளை எழுதி முடித்தேன்.

அது நாள் வரையிலும் நான் கற்றதும் கேட் டதுமாகிய திருக்குறள் உரைகளையெல்லாம் கட்டிச் சுருட்டி என் மனதின் ஒரு புறத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு, ஆராய்ச்சி நூல்களை யெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு, அகராதியும் அறிவும் அனுபவமும் ஆகிய இவை மூன்றையுமே துணையாகக் கொண்டு மிகவும் துணிச்சலோடு எனக்குத் தோன்றியபடி உரைகளை எழுதினேன்.

தமிழ் மொழியை வளர்த்த தாயகமாகிய சங்கம் விளங்கிய மதுராபுரியென்னும் மகிமை யினாலோ, உலகத்திலுள்ள எந்த நாட்டு மக்களா னாலும் பார்த்தவுடன் வியந்து புகழ்ந்து மயங்கி விடக்கூடிய மாண்புடையதாகச் செயலின் உயர் விலும் செலவின் அளவிலும் சித்திர முறையிலும் சிற்பச் சிறப்பிலும் கலையின் அழகிலும் கணக்

தின் அமைப்பிலும் இணையோ ஏற்றமோ இல்லா ததாகத் தமிழனுடைய ஆட்சிக்கு அழியாத சாட்சியாய் விளங்கும் சொக்கேசர் ஆலயத்தில் அமர்ந்திருக்கும் தமிழ்த்தாய் அம்பிகை மீனாட்சியின் அருளினாலோ, தெய்வப் புலவன் இயற்றிய தெய்வத் திருக்குறளுக்கு மட்டும் இடங் கொடுத்து ஏனைய நூல்களை யெல்லாம் இகழ்ந்து தள்ளிவிட்ட தெய்வப்பலகை பொருந்தியிருந்த பொற்றாமரைப் பொய்கை இருக்கின்ற புண்ணியத்தாலோ என்று நான் சிற்சில சமயங்களில் எனக்குள் நானே மகிழ்ந்து கொள்ளும்படி அது வரைக்கும் சிக்கறுத்து விளக்க முடியாமல் இருந்த பல குறள்களுக்கு முற்றிலும் புது அர்த்தங்கள் எனக்குப் புலனாயின.

புரியாத குறள்களை விட்டுவிட்டு மற்றவைகளுக்காவது எளியநடையான ஒரு உரையை மட்டுமாவது எழுதலாம் என்று ஆரம்பித்த நான் அநேக குறள்களுக்குப் பரிமேலழகர் உரைக்கு முற்றிலும் மாறுபட்ட உரைகளை எழுத முடிந்தது.

பல இடங்களில் முற்றிலும் பரிமேலழகர் உரையை மாற்றிவிட்டோமே என்ற பயம் ஒரு புறம் இருந்தாலும் முன்னிருந்த உரையைக் காட்டிலும் என்னுடைய உரை அறிவுக்கு அதிகமாகப் பொருந்துவதைக் கண்ட இறுமாப்பும் ஒரு பக்கம் இருக்கத்தான் செய்தது.

அந்த இறுமாப்பு எவ்வளவு தூரம் மன்னிக்கத் தக்கது என்பதை இனிமேல்தான் பார்க்க வேண்டும். இப்போது எனக்கு அந்த இறுமாப்பில்லை; மதுரை சிறைக்குள் இந்த உரைக் குறிப்புகளை எழுதி முடித்தபோது அந்த இறுமாப்பு இருந்தது. சிறையைவிட்டு வெளிவந்தவுடன் அந்த இறுமாப்புக் குறைந்து, சுமார் அறுநூறு ஆண்டுகளாகப் பண்டிதர்கள் பரம்பரையில் மிகவும் பாராட்டப்பட்டு வந்திருக்கிற பரிமேலழகருடைய உரையை பல இடங்களில் அடியோடு மாற்றிவிட்டதைக் கண்டு அறிஞர்கள் என்ன சொல்வார்களோ என்ற ஐயமும் அச்சமும் அதிகப்பட்டன.

நான் புதுமைக்கென்று எதையும் மாற்றிவிட விரும்பும் புரட்சிக்காரனும் அல்ல; பழமையானது என்பதற்காக மட்டும் எதையும் மாற்றிவிட விரும்பாத வரட்சிக்காரனும் அல்ல. எந்த ஆராய்ச்சிக்கும் சுருதி, யுக்தி, அனுபவம் என்ற மூன்றும் அவசியம். 'சுருதி' என்பது ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி நமக்கு முன்னால் ஆராய்ந்த அறிஞர்கள் எழுதிவைத்துப் போயிருக்கும் முடிவு. 'யுக்தி' என்பது நம்முடைய சொந்த அறிவு. 'அனுபவம்' என்பது உலகத்தில் தினப்படி வாழ்க்கையில் நாம் காணும் உண்மைகள்.

சுருதி என்பது உபமான உபமேயங்களோடு சுருக்கிச் சொல்லப்பட்ட சூத்திரம். சுருக்கிச்

சொல்லப்பட்ட சூத்திரத்தில் விஸ்தாரமான அர்த்தங்கள் அடங்கியிருக்கும். சூத்திரமாக இருக்கும் ஒரு 'சுருதி'க்குப் பொருள் விளங்காதபோது யுக்தியும் அனுபவமும்தான் துணைசெய்ய முடியும். ஒரு சூத்திரத்திற்கு அர்த்தம் செய்கிறபோது அந்த அர்த்தம் நம்முடைய யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருந்தாமல் இருந்தாலும் அல்லது அந்த அர்த்தம் நமக்கு நன்ருக விளங்குகின்ற வேருெரு சூத்திரத்துக்கு விரோதமாக இருந்தாலும் அந்த அர்த்தம் பயனற்றதாகும். உரைகளுக்கு ஆதாரம் யுக்தியும் அனுபவமுந்தான்.

திருக்குறள் ஒரு சுருதி. பரிமேலழகருடைய உரை, யுக்தியும் அனுபவமும் சேர்ந்த விளக்கம்.

சுருதியாகிய திருக்குறள் மூலத்தில் நமக்கு ஏதேனும் சந்தேகம் வந்துவிட்டால் அதைத் தீர்ப்பதற்கு வெறும் யுக்தியும் அனுபவமும் மட்டும் போதாது. ஆதலால் அதை (மூலத்தை) மாற்றவோ, கூட்டவோ, குறைக்கவோ நமக்கு அதிகாரமும் இல்லை, நிச்சயமான ஆதாரமும் இல்லை. ஆனல் யுக்தியும் அனுபவமும் சேர்ந்த உரையில் முரண்பாடு முட்டுகின்ற போதும் தெளிவு கிடைக்காதபோதும் நாம் நம்முடைய யுக்தியையும் அனுபவத்தையும் கொண்டு ஆராய்ந்து பார்த்து, யுக்தியும் அனுபவமும் ஒத்துக் கொள்ளக் கூடியவிதமாக உரையை மாற்றி அமைத்துக் கொள்வதில் குற்றமில்லை. ஒரு நூலுக்கு ஒருவர் செய்த உரை ஒரே ஒரு மனிதருடைய யுக்தியையும் அனுபவத்தையும் ஒட்டி

யதுதான். அந்த உரை மற்றவர்களுடைய யுக்திக்கும் அனுபவத்திற்கும்பொருந்தவில்லையானுல் அது சரியான உரையாக இருக்க முடியாது.

இப்படிப்பட்ட எண்ணங்களினுல் பரிமேலழகர் உரையில் பல மாறுதல்களைச் செய்துவிட்டதைக் குற்றமாகக் கொள்ளுவார்களோ என்ற அச்சம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து வந்தது. திருக்குறளில் பரிச்சயமுள்ள பண்டிதர்கள் அல்லாத பல நண்பர்களிடத்தில் நான் எழுதிய சில மாற்றுரைகளை அரங்கேற்றி மகிழ்ந்தேன். அவர்கள் அனைவரும் என் புது உரைக் குறிப்புகளைப் பாராட்டினுர்கள். ஆனுல் இவர்கள் அனைவரும் வெறும் தமிழ் அபிமானத்தால் திருக்குறளை நேர்ந்தபடி படித்தவர்கள். தமிழ் நூல்களை முறையே பாடங்கேட்ட பண்டிதர்கள் அல்ல. ஆகையினுல் அவர்களுடைய பாராட்டுகள் அதிகார பூர்வமான ஆதாரங்கள் அல்ல. காலமெல்லாம் தமிழ் மொழிக்கே கவனம் செலுத்துகின்ற பண்டிதர்கள் பாராட்டினுல்தான் என்னுடைய உரை பயன்படும் என்பதை எண்ணி என்னுடைய தமிழ் ஆசானுகிய ஸ்ரீ.எம்.எஸ். ஆனையப்ப முதலியாரவர்களிடம் இதைச் சொல்லி அவருடைய ஆசியைப் பெறவேண்டும் என்று அவரை நாடினேன்.

அப்படி அவரிடம் போனபோது நடந்த சம்பாஷணைதான் இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்திற் சொல்லப்பட்டது.

ஸ்ரீ ஆனையப்ப முதலியாரவர்கள் சிறந்த தமிழ்ப் பண்டிதர். என்றாலும் அக்காலத்தி லிருந்த பெரும்பாலும் தமிழ்ப் பண்டிதர்களைப் போல் அல்லாமல் ஆங்கில மொழியிலும் சுமா ரான பயிற்சி யுள்ளவர். ஆகையினால் நான் 'பரிமேலழகர் உரை சில இடங்களில் காமன் சென்சுக்குப் பொருத்தமாக இல்லையே' என்று சொன்னதில் வருத்தப்பட்டார். பரிமேலழகர் உரையை நான் மாற்றியிருப்பதைச் சொல்லி அவரை மகிழ்வித்து அவருடைய ஆசிபெறலாம் என்ற ஆசையுடன் சென்ற நான் அவருக்குச் சங்கடமுண்டாக்கிவிட்டதைக் கண்டு சஞ்சல மடைந்து சற்றுநேரம் வாடின முகத்துடன் மௌனமாக இருந்தேன்.

நான் வாட்டமுற்றதைக் கண்ட பெருந் தகையாளரான அவர் "அப்பனே! வருத்தப் படாதே. பரிமேலழகர் மிகச் சிறந்த உரையா சிரியர். நாம் வணங்கவேண்டிய பெரியார். பெரி யாரைப் பிழை பேசக்கூடாதே, அதுவும் நீ அப் படிப் பேசக்கூடியவன் அல்லவே என்று நான் பேசிவிட்டேன். அதற்காக வருத்தப்படாதே. பரிமேலழகர் உரையில் எங்கே 'காமன் சென்ஸ்' இல்லையென்று சொல்லுகிறாய்?" என்று மிகவும் அன்புடன் சொன்னார்.

"இல்லை ஐயா, பரிமேலழகரை அவமதித்துப் பேசவேண்டுமென்பது என் ஆசையல்ல. அவர் மிகவும் பெரியவர். அவருடைய உரைதான்

நமக்கு வழிகாட்டி என்பதை அறிவேன். ஆனாலும்........அவருடைய உரை......மனசுக்கு...... ...சமாதானமாக இல்லை. எப்படி எப்படியெல்லாம் எண்ணிப் பார்த்தாலும் சந்தேகம் போகவில்லை. சில இடங்களில் 'திருவள்ளுவர் இப்படியும் எண்ணியிருப்பாரா' என்றுதான் எண்ணச் செய்கிறது. யாரைக் கேட்டாலும் திருப்பித் திருப்பி அதையே சொல்லிக் குழப்பத்தை அதிகப் படுத்துகிறார்களேயன்றி சந்தேகத்துக்குச் சமாதானம் சொல்ல முடியவில்லை. ஆகையினால் உரையில் தவறு இருக்கிறது என்பதுதான் உறுதியாகின்றது." என்று சொல்லி நான் பரிமேலழகர் உரையில் பல மாறுதல்களைச் செய்திருக்கிறதாகச் சொன்னேன்.

உடனே அவர் "அப்பனே, உனக்கு என்ன சந்தேகம்? எந்த இடத்தில் உரை 'காமன் சென்சு'க்கு ஒத்ததாக இல்லை? என்னைக் கேள். நான் சொல்லுகின்றேன். எங்கே என்ன சந்தேகம்? ஒன்று சொல்" என்றார்.

ஸ்ரீ ஆனையப்ப முதலியார் சிறந்த சைவ சீலர். சைவ நெறியின் அனுஷ்டானங்களில் அணுவளவும் தவறாதவர். சைவத் திருமுறைகளிலும் சிவபுராணங்களிலும் தெய்வீக நம்பிக்கையுள்ளவர். பள்ளிக்கூடத்தில் அவர் சைவக் கதைகளை மிகவும் ஆர்வத்தோடு பாடம் புகட்டுவதிலும் புலால் உண்ணாமையைப் பற்றி அடிக்கடி போதிப்பதிலும் ஆசையுள்ளவர். அதையறிந்த

நான் உடனே,

உண்ணுமை உள்ளதுயிர்நிலை ஊனுண்ண
அண்ணுத்தல் செய்யாது அளறு

என்ற குறளுக்குப் பரிமேலழகர் உரை புரியவு மில்லை பொருந்தவுமில்லை" என்றேன்.

"ஏன் புரியவில்லை? எப்படிப் பொருந்த வில்லை?" என்ருர்.

நான் விளக்கினேன்.

"முதலில் பரிமேலழகருடைய உரை என்ன வென்பதை நன்ருகப் பார்க்க வேண்டும்.

## பரிமேலழகர் உரை

"உயிர் நிலை ஊன் உண்ணுமை உள்ளது= ஒரு சார் உயிர் உடம்பின் கண்ணே நிற்றல் ஊனுண்ணுமை என்கின்ற அறத்தின் கண்ணது; உண்ண அளறு அண்ணுத்தல் செய்யாது=ஆகலான் அந்நிலைகுலைய ஒருவன் அதனையுண்ணு மாயின், அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ் வதற்கு அங்காவாது.

'உண்ணப்படும் விலங்குகள் அதனல் தேய்ந்து சிலவாக ஏனைய பலவாய் வருதலின், 'உண்ணுமையுள்ள துயிர் நிலை' என்ருர். 'உண் ணின்' என்பது 'உண்ண' எனத் திரிந்து நின் றது. ஊனுண்டவன் அப் பாவத்தான் நெடுங் காலம் நிரயத்துளழுந்து மென்பதாம். கொலைப் பாவம் கொன்ருர்மேனிற்றலின் பின்னூனுண் பார்க்குப் பாவமில்லை யென்பாரை மறுத்து

அஃதுண்டென்பது இவ்விரண்டு பாட்டானும் கூறப்பட்டது"—என்பது பரிமேலழகர் உரை.

இந்த் உரையில் என்ன சொல்லப்படுகிற தென்றால்: (1) மனிதர்கள் மாமிசம் உண்பதனால் மாமிசத்துக்காகக் கொல்லப்படுகிற (ஆடு, மாடு, கோழி மீன் முதலாகிய) ஜீவராசிகள் உலகத்தில் குறைந்துபோய் மற்ற ஜீவராசிகள் அதிகமாகப் போய்விடும். அதனால் மாமிசத்தை உண்ணக்கூடாது. (2) உண்டால் (நிரயம்=நரகம்) நரகம் வாய் திறக்காது (அங்காவாது=வாய் திறக்காது). ஏன் வாய் திறக்காது என்றால் ஊனுண்டவனை நரகம் தன்னுள்ளே போட்டுக்கொண்டு அவனை வெளியில் விட வாய்திறக்காது.

இதுதான் பரிமேலழகர் உரையின் கருத்து. இந்தக் கருத்தில் சாதாரண அறிவுக்குப் பொருந்தாதது என்ன என்பதைப் பார்ப்போம்: (1)—'ஊனுக்காகக் கொல்லப்படும் ஜீவராசிகள் உலகத்தில் குறைந்து போகுமே மற்ற ஜீவராசிகள் அதிகமாகப் பெருகிவிடுமே' என்பதற்காக ஊனை உண்ணக்கூடாது என்பது சுருதி, யுக்தி, அனுபவம் என்ற மூன்றில் ஒன்றுக்காவது பொருத்தமாக இல்லை. ஆட்டைக் கொன்று தின்று விட்டால் உலகத்தில் ஆடுகள் குறைந்து போகுமே என்ற அதற்காக ஊனுண்ணக்கூடாது என்பதில் அர்த்தமே இல்லை.

நம்முடைய அறிவுக்கு எட்டிய வரையிலும் ஊனுண்ணக்கூடாது என்பது எதற்காக என்

ருல்: ஊனுண்டால் ஊனுக்காகப் பிற உயி ரைக் கொல்ல வேண்டும், அல்லது கொல்லுவ தற்கு உடந்தையாக இருக்கவேண்டும். கொலைத் தொழில் செய்வது அன்பை அழிக்கும். அன்பில்லாதவன் அருளை அறிய முடியாது. அருளை அறியாவிட்டால் ஆன்ம உணர்ச்சிவளர முடியாது, ஆன்ம வளர்ச்சியே மனிதனுடைய நோக்கங்களுள் மிகவும் உயர்ந்த லட்சியம் என்பதை உலகத்தில் வாழ்ந்த எல்லா ஆன்ம விசாரணைக்காரர்களும் அவர்கள் எழுதிவைத்துப் போயுள்ள எல்லா நூல்களும் சொல்லுகின்றன. ஆகையினால் புலால் உண்ணக்கூடாதென்பது ஜீவகாருண்ய ஒழுக்கத்தைச் சேர்ந்த உபதேசமே யன்றி உலகத்தில் சில பிராணிகள் குறைந்து போய்விடுமே என்பதற்காக அல்ல. (2) இந்தக் குறளின் இரண்டாவது பகுதியாகிய 'ஊனுண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு' என்பதற்கு 'ஊனுண்டவனை நரகம் உள்ளே போட்டுக் கொண்டு அவனை வெளியில்விட வாய்திறக்காது' என்று பொருள் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியில் உள்ள பதங்களை நன்றாகக்கவனிக்க வேண்டும்.

'உண்ண' என்பதற்கு 'உண்டால்' என்று பொருள் செய்யப்பட் டிருக்கிறது. ஆனால் 'உண்ண' என்ற பதத்துக்கு நேரான பொருள் 'உண்பதற்கு' என்றுதான் இருக்கவேண்டும். 'உண்ண' என்பதற்கு 'உண்டால்' என்று

பொருள் சொல்வது வலிந்து பொருள் கொள்ளலே யாகும்.

'உண்ண' என்பதற்கு 'உண்டால்' என்ற அர்த்தமே கொண்டாலும்கூட அதற்கு அடுத்தாற்போல் இருக்கிற 'அளறு அண்ணாத்தல் செய்யாது' என்ற சொற்றொடருக்கு 'ஊனுண்டால் நரகம் வாய் திறக்காது' என்றுதான் பொருள் வருகிறது. 'ஊனுண்டால் நரகம் வாய்திறக்காது' என்பதற்கு 'ஊனுண்டால் நரகம் உள்ளே விட வாய் திறக்காது' என்பதுதான் உடனே தோன்ற வேண்டிய பொருள். அப்படிப் பொருள் கொண்டால் 'ஊன் உண்பவனுக்கு நரகமில்லை' என்று பொருளாகி விடுகின்றது. ஊனுண்பவனுக்கு நரகமில்லை என்று சொல்லுவது சரியல்லாமற் போகிறது. அதற்காக 'ஊனுண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு' என்பதற்கு 'ஊனுண்டால் உண்டவனை நரகம் உள்ளே போட்டுக்கொண்டு அவனை வெளியே விட வாய் திறக்காது' என்று வெகு பாடுபட்டு இல்லாத பதங்களையெல்லாம் இழுத்துப் போட்டுப் பொருள் சொல்லவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

அப்படியே வலிந்து பொருள் கொண்டாலும், ஊனுண்டால் நரகம் உள்ளே போட்டுக் கொண்டு வெளியில்விட வாய்திறக்காது என்பதால் ஊனுண்டவனுக்கு 'விமோசனமே கிடையாது,நிரந்தரமான நரகந்தான் கிடைக்கும்'என்று

தான் பொருளாகின்றது. அப்படிச் சொல்வதில் 'எப்படிப்பட்ட பாவம் செய்தவனுக்கும் பிராயச் சித்தம் உண்டு' என்னும் ஞாயம் அடிபட்டுப் போகிறது. ஊன் உண்பதைக் காட்டிலும் மகா பாவங்களைச் செய்தவர்களும்கூட திரிகரண சுத்தியாக மன்னிப்புக் கேட்டபோது விமோசனம் கொடுக்கப்பட்டதாக எல்லா சமய நூல்களும் சாதிக்கிறபோது ஊனுண்டவனை மட்டும் அவனை உள்ளே போட்டுக்கொண்ட நரகம் அவனை வெளியில்விட என்றென்றும் வாய் திறக்காது என்று சொல்லுவது சிறிதும் பொருந்தாது" என்று இதற்கு ஆதாரமாகச் சில சைவ புராண மேற்கோள்களைச் சொல்லிக் கடைசியாக திருவிளையாடற் புராணத்தில் மகா பாதகத்தைச் செய்துவிட்ட மாபாவிக்குக்கூட பரமசிவன் முத்தி கொடுத்த கதையையும் சொல்லி வாதித்தேன்—(மாபாவிக்கு முத்தி கொடுத்த கதை திருவிளையாடற் புராணத்தில் உள்ளது. பெற்ற தாயாரையே தாரமாகக் கருதிவிட்ட ஒருவன் அந்த மகா பாதகத்தைத் தானே உணர்ந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளப் பரமசிவன் அவனுக்கும் முத்தி கொடுத்தார் என்பது புராணம்).

என் வார்த்தைகளைக்கூர்ந்து கேட்டுவந்த என் ஆசான் என்னுடைய தர்க்கத்திறமையை மெச்சுவதுபோல அபிமானச்சிரிப்புச் சிரித்துவிட்டு "நரகம் வாய் திறக்காது என்று சொன்னது ஊனுண்பது கொடியபாவம் என்பதை பலமாகச் சொன்னதேயல்லாமல் எப்போதும்

அவன் நரகத்தினின்று வெளியில் வரவே முடியாது என்பதற்காகச் சொன்னது அல்ல" என்று பலபேர்சொன்ன அதே சமாதானத்தைத்தான் சொன்னார். நான் ஒப்பவில்லை. அப்படிச் சொல்வது சரியல்லவென்று பின்னும் பல நியாயங்களைச் சொல்லித் தர்க்கித்தேன்.

"சரி, இந்தக்குறளுக்கு நீ எப்படிப் பொருள் கொள்வாய்?" என்றார். இப்படி அவர் கேட்கவேண்டுமென்பதை வெகு ஆவலோடு விரும்பின நான் உடனே செய்திருந்த மாற்றுரையைச் சொன்னேன்.

## நான் சொன்ன உரை

இந்தக்குறளில் வள்ளுவர் 'புலால் உண்பதனால் இகத்துக்கும் நன்மையில்லை, பரத்துக்கும் நன்மையில்லை. அப்படியிருக்க ஏன் மனிதன் பிற உயிரைக்கொன்று தின்னவேண்டும்?' என்று, முதல் அடியில் இகத்தையும் இரண்டாவது அடியில் பரத்தையும் குறிக்கின்றார். எப்படியென்றால்:

1. உண்ணாமை உள்ளது உயிர்நிலை = மனிதனுடைய உயிர்நிலைக்கு வேண்டிய எல்லா உணவு சத்துக்களும் புலால் உண்ணாமலேயே கிடைக்கின்றன. உயிர்நிலைக்கு—அதாவது மனிதனுடைய உடல் நலத்துக்கு—புலால் உண்ணுதல் (மற்ற உணவுகளில் இல்லாத) எந்தவிதமான தனி நன்மையையும் தருவதில்லை. ஆயுள் விருத்திக்கோ ஆரோக்கியத்துக்கோ ஊனுண்ணல் அவசியமானது அல்ல. பின் ஏன் கொல்லவேண்டும்?

'உயிர்நிலை ஊண்ணுமை(யிலேயே) உள்ளது' = இகவாழ்விற்கு வேண்டியது ஊனுண்ணுமை யிலேயே இருக்கிறது.

2. ஊனுண்ண அளறு அண்ணுத்தல் செய்யாது=உயிர்போன சவத்தை உட்கொள்ள நரகம் கூட வாய்திறக்காது. அதாவது எல்லாவித தீமைகளும் துன்பங்களும் நிறைந்த வெகு பயங்கரமான இடம் என்று சொல்லப்படுகிற நரகமுங்கூட பாவம் செய்தவனுடைய ஆன்மாவை உள்ளேவிட கதவு திறக்குமே அல்லாமல் உயிர்போன அவன் பிணத்தை உள்ளேவிட வாய்திறக்காது. நரகத்துக்கு ஒருவன் போவான் என்ருல் அவனுடைய ஆன்மா போகும் என்றுதான் அர்த்தம். அவனுடைய பிரேதம் அங்கே அனுமதிக்கப்படுவதில்லை. ஆகையால் பாபிகள் நிறைந்த மிகக்கொடிய நரகம்கூட உட்கொள்ளாத ஊனை ஆறு அறிவு படைத்த மனிதன் உட்கொண்டால் பரலாபம் ஏது? நரகத்துக்கே ஏற்காத காரியத்தில் சொர்க்கத்தைப் பற்றிய பேச்சுக்கு இடமேது?

'ஊனுண்ண அளறு அண்ணுத்தல் செய்யாது,=மாமிசம் உண்ண நரகம் வாய்திறக்காது (மனிதன் வாய்திறக்கலாமோ?) என்கிருர். இப்படிப் பொருள் கொள்ளுவதில் 'உண்ண' என்ற பதத்திற்கு 'உண்டால்' என்று வலிந்து பொருள் கொள்ளவேண்டியதில்லை.

மிகவும் கெட்டகாரியம் ஒன்றைச் செய்து

விட்ட ஒருவனைப்பார்த்து ‘பரம சண்டாளன் இதைச் செய்யமாட்டான்’ என்று சொல்வதைப் போல ‘ஊனுண்ண அளறு அண்ணாத்தல் செய்யாது’ என்று சொல்லுகிறார் வள்ளுவர்” (அளறு= நரகம்).

இதைக்கேட்ட எனது ஆசான் குலுங்கச் சிரித்துவிட்டு “அப்பனே! அப்பனே! மிகவும் நன்றாகத்தானிருக்கிறது. திருவள்ளுவர் இப்படித் தான் எண்ணினாரோ இல்லையோ நீ சொல்லுகிற உரை கேட்பதற்கு என்னமோ மிகவும் நன்றாகத் தான் இருக்கிறது. இருந்தாலும் பரிமேலழகர் உரையை முற்றிலும் மாற்றிவிடுவதென்றால்— பலபேருக்கு கொஞ்சம் சங்கடமாகத்தான் இருக்கும்......” என்றார்.

“அப்படியானால் இப்போது நான் சொன்ன உரை தங்களுக்குச் சங்கடமாகத்தான் இருக்கிறதா?” என்றேன்.

“இல்லை அப்பனே இல்லை. இப்போது நீ சொன்ன உரை எனக்கு மிகவும் இன்பமாகத் தானிருக்கிறது. மற்றவர்கள் அப்படி நினைப்பார்களே என்று சொன்னேன்” என்றார்.

“மற்றவர்களைப்பற்றி எனக்குக் கவலையில்லை. தங்களுடைய ஆசிதான் எனக்கு வேண்டும். நான் சொன்ன உரை குற்றமுடையது என்று நீங்கள் சொன்னால் நான் விட்டுவிடுகிறேன்” என்றேன்.

"இல்லையில்லை. எனக்கு இது குற்றமாகத் தோன்றவில்லை. நன்றாகத்தான் இருக்கிறது. சரி இப்படி நீ மாற்றி எழுதியிருக்கிற இன்னும் சில குறள்களைச்சொல், கேட்போம்" என்றார்.

நான் பின்னும் சில குறள்களைச் சொல்லி விளக்கினேன். அந்தச் சிலவற்றுள் இந்த அத்யா யத்தில் முன் சொல்லப்பட்ட,

"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை

என்பதும் ஒன்று. வேலூர் சிறையில் இந்தக் குறளுக்கு உரைபடித்துக் கொண்டிருந்தபோது தான் ஸ்ரீசத்தியமூர்த்தி அவர்கள் வந்தார்என்றும் பரிமேலழகர் எழுதியிருக்கிற உரை புரியவில்லை யென்று அப்போது எங்களுக்குள் பேச்சு நடந்த தென்றும் அதற்குப் பிறகுதான் ஓமந்தூர் ராம சாமி ரெட்டியார் எளிய நடையில் ஒரு உரை எழுதும்படி என்னிடம் சொல்லிக் கொண்டார் என்றும் அதற்குப் பிறகுதான் நான் ஒரு உரை எழுத ஆரம்பித்தேன் என்றும் சொல்லப்பட் டதைப் படிக்கும் வாசகர்கள் இந்தக் குறளைப் பற்றி எழுந்த சந்தேகத்தை நான் எப்படி தீர்த் திருக்கிறேன் என்று அறிய ஆவல் கொள்வார்கள். ஆனதால் அதையும் இங்கேயே சொல்லிவிட வேண்டியது அவசியமாகின்றது.

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை.

இதற்குப் பரிமேலழகருடைய உரை இந்த அத்யாயத்தில் முன்னமேயே சொல்லப்பட்டிருக்

கிறது. இருந்தாலும் இங்கே மறுபடியும் அதைச் சொன்னால்தான் நான் பரிமேலழகர் உரையை மாற்றியிருப்பதன் விவரம் தெரியும். இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் உரை :

" தன்கைத்து உண்டாக ஒன்று செய்வான் வினை = தன்கையதாகிய பொருளுண்டாக ஒரு வினையை எடுத்துக் கொண்டான் அதனைச் செய் தல், குன்று ஏறி யானைப்போர் கண்டற்று = ஒரு வன் மலைமேல் ஏறி நின்று யானைப் போரைக் கண்டாலொக்கும்.

" ஒன்றென்பது வினையாதல் செய்வான் என் பதனாற் பெற்றாம். குன்றேறியான் அச்சமும் வருத்தமுமின்றி நிலத்திடை யானையும் யானையும் பொருபோரைத் தான் இனிதிருந்து காணுமாறு போலக், கைத்துண்டாக வினையை மேற்கொண் டானும் அச்சமும் வருத்தமுமின்றி வல்லாரை யேவித்தான் இனிதிருந்து முடிக்குமென்பதாம்" என்பது பரிமேலழகர் உரை.

முதல் பாரா பத உரை. இரண்டாவது பாரா கருத்துரை. எளிய நடையில் அவருடைய பத உரை என்னவென்றால் தன்கைத்து=தன்னுடைய கைக்கு, உண்டாக = பணம் கிடைக்க, ஒன்று = ஒரு காரியத்தை, செய்வான்=செய்கிறவனுடைய, வினை = செய்கையானது (எப்படிப்போல என்றால்) குன்று ஏறி = மலையின்மேல் ஏறி அங்கே இருந்துகொண்டு, யானைப்போர்=கீழே யானையும் யானையும் சண்டைபோட்டுக் கொள்ளுவதை,

கண்டற்று = பார்ப்பதுபோல. அதாவது, தன் கைக்குப் பணம் வரும்படியாக ஒருவன் ஒரு காரியம் செய்து கொள்வது மலையின்மேல் இருந்து கொண்டு யானையும் யானையும் சண்டை போட்டுக்கொள்வதை பார்ப்பதுபோல என்பது பரிமேலழகரின் கருத்து. பின்னும் இரண்டாவது பாராவில் கருத்தை விளக்கும்போது 'தன் கைக்குப் பணம் கிடைக்கும்படியாக வேலை செய்வது மலையின்மேல் இருந்துகொண்டு அச்சமும் பயமும் இல்லாமல் கீழே நடக்கும் யானைச் சண்டையைப் பார்ப்பது போல அச்சமும் பயமுமில்லாமல் வேலை செய்ய வல்லவர்களை அந்த வேலையைச் செய்ய ஏவிவிட்டு தான் சுகமாக சும்மா இருந்து முடித்துக் கொள்வான்' என்ற கருத்தை விளக்கியிருக்கிறார். சுருக்கிச் சொன்னால் இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் உரை என்னவென்றால்: 'பணத்தை சம்பாதித்துக் கொள்வது மலைமேலிருந்து யானைச் சண்டையைப் பார்ப்பதுபோல' என்பதுதான்.

பணத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்கும் யானைச் சண்டையை வெகு தூரத்தில் மலையின் மேல் இருந்து கொண்டு வேடிக்கை பார்ப்பதற்கும் என்ன சம்பந்தம் என்பது விளங்கவில்லை. உபமானத்துக்கும் உபமேயத்துக்கும் பொருத்தமே இல்லை. திருவள்ளுவருடைய உபமானங்கள் பளிச்சென்று விஷயத்தை விளக்கக் கூடியவைகளாகவே இருக்கும். உபமானம் துளிகூட சுவாரஸ்யமில்லாததாக இருப்பதைக் கண்ட உட்

னேயே உரையில் ஏதோ குறையிருப்பது தோற்றுகின்றது, அல்லவா?

அத்துடன் அர்த்தத்தில் ஒரு முரண்பாடு தென்படுகின்றது. 'பொருள் செயல்வகை,' என்ற தலைப்பின்கீழ் 'ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சொந்தமுயற்சியால் பொருள் தேடிக் கொள்ளவேண்டியது அவசியம்' என்று சொல்ல வந்த இடத்தில் 'மலையின்மேலிருந்து யானைச் சண்டையைப் பார்ப்பதுபோல அச்சமும் வருத்தமுமின்றி பிறரை ஏவிவிட்டுத் தான் சுகமாக சும்மா இருந்து சம்பாதித்துக்கொள்வான்' என்று சொல்லுவது, தன்முயற்சியால் பொருளைத்தேடிக் கொள்ளவேண்டும் என்று புகட்டவந்த சூத்திரத் துக்கு முற்றிலும் விரோதமானதாக இருப்பது வெளிப்படை. உபமானம் கெட்டுப்போனதால் உரையும் முரண்பட்டுவிட்டது.

இந்தக்குறளுக்கு நான் செய்த உரை:

**குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று உண்டாகச் செய்வான் வினை.**

இதில் 'கண்டற்றால்' என்ற ஒரு பதத்துக்குச் சரியானபொருள் தோன்றாமற் போய்விட்டதனால் பரிமேலழகருடைய உரை குறிதவறிப் போய் உபமானமும் சப்பிட்டு, உரையிலும் முரண் ஏற்பட்டுவிட்டது. 'கண்டற்றால்' என்ற பதத்தின் பகுதியாகிய 'காண்' என்ற சொல்லுக்கு 'பார்' என்பது அதன் பல பொருள்களில் ஒரு பொருள். 'காண்' என்பதற்கு பார், செய்,

உண்டாக்கு, அறிந்துகொள், தெளிந்துகொள் என்ற பல பொருள்கள் உண்டு. பழைய இலக்கியங்களில் 'காண்' என்ற பதத்தை 'பார்' என்ற அர்த்தத்தைவிட 'செய்' என்ற அர்த்தத்தில்தான் அடிக்கடி உபயோகப்பட்டிருக்கிறது. உதாரணமாக 'சிலப்பதிகாரத்துக்கு உரைகண்டவர் அடியார்க்கு நல்லார் என்ருல் உரை பார்த்தவர் என்பது பொருளல்ல. உரையைச் செய்தவர் என்றுதான் அர்த்தம். 'காவிரி கரைகண்ட சோழன்' என்ருல் 'காவிரி கரையைப் பார்த்த சோழன்' என்று அர்த்தமாகாது. 'காவிரிக்கரை செய்த' சோழன் என்றுதான் அர்த்தம். இப்படிப் பல இடங்களில் 'காண்டல்' என்றபதம் 'செய்தல்' என்ற பொருளில்தான் இருப்பதைப் பழைய நூல்களில் பரக்கக் காணலாம்.

ஆகவே மேற்சொன்ன குறளில் 'கண்டற்று' என்ற இடத்தில் 'பார்ப்பதுபோல' என்று பொருள் செய்யாமல் திருவள்ளுவருடைய காலத்தில் மிகவும் சகஜமாக இருந்திருக்கவேண்டியபடி 'செய்வதுபோல' என்று பொருள்செய்தால் உபமானமும் சரியாகிவிடுகிறது, உரையிலும் முரண்பாடில்லை. எப்படி என்பதைப் பார்ப்போம்.

'தன்கைத்து ஒன்று உண்டாகச் செய்வான் வினை, குன்றேறி யானைப்போர் கண்டற்று'

தன்கைத்து = தன்கையில், ஒன்று உண்டாக=ஒரு சொந்த பலத்தை வைத்துக் கொண்டு,

செய்வான் வினை = பொருள் முயற்சி செய்கிறவனுடைய காரியம், குன்றேறி=தான் ஒரு உயரமான இடத்தில் இருந்துகொண்டு, யானைப்போர் கண்டற்று=கீழே இருக்கும் யானையோடுசண்டை செய்வது போல: அதாவது பிறருடைய பணத்தையோ பலத்தையோ மட்டும் நம்பிவிடாமல் தன்னுடைய சொந்த முதலைக்கொண்டும் சொந்த முயற்சியை நம்பியும் பொருள் சம்பாதிக்கும் காரியத்தில் இறங்குகின்றவன் உயரமான குன்றில் இருந்துகொண்டு கீழே இருக்கும் யானையை வெல்ல முயற்சிப்பதைப் போல நிச்சயமாக வெல்லுவான். வெல்ல முடியாவிட்டாலும் அபாயமில்லை. மேலும் சமநிலத்தில் யானையை வெல்ல முடியாது. முயல்வது அபாயமானது. உயரத்தில் இருக்கும் மனிதனைப் பள்ளத்தில் இருக்கும் யானை ஒன்றும் செய்ய முடியாது.

தன்னுடைய முதலையும் தன்னுடைய முயற்சியையும் நம்பி ஒரு தொழில் முயற்சியோ வியாபார முயற்சியோ செய்கிறவன் பள்ளத்திலுள்ள யானையையும் உயரத்திலுள்ளவன் வென்றுவிடுவதைப்போல லாபம் அடைவான். லாபம் இல்லாவிட்டாலும் பிறருடைய முதலையும் முயற்சியையும் நம்பி அவர்களுக்குக் கடன்பட்டவனாக ஒரு காரியத்தை முயல்கின்றவனைப்போல அபாயமான நஷ்டங்களுக்கு ஆளாகிவிடமாட்டான்—என்பது.

இப்படிச் சில குறள்களுக்கு நான் சொன்ன

உரைகளை மிகவும் ரஸித்துக்கேட்ட என் ஆசான் ஆனையப்ப முதலியார், அளவுகடந்த ஆனந்த மடைந்து எழுந்து வந்து, என்னுடைய இரண்டு தோள்களையும் பிடித்துக் குலுக்கி, "அப்பனே! மிகவும் நன்ருக இருக்கிறது. பரிமேலழகர் உரைகளை முற்றிலும் மாற்றிவிடுவதென்ருல் சற்றே சங்கடமான விஷயந்தான். இருந்தாலும் உன்னுடைய மாற்றுரைகள் யுக்திக்கு மிகவும் அழகாக அமைந்திருக்கின்றன. சில உரைகள் வியக்கத்தக்கதாகத் தானிருக்கின்றன. பரிமேலழகர் உரையையும் இவ்வளவு பண்படுத்திய உன்னைக் 'கரிமேலழகன்' என்று நான் பெயரிட்டு மகிழ்வேன்" என்ருர்.

ஆசானிடம் ஆசி பெற்றுவிட்டோம் என்ற தைரியத்துடன் விடை பெற்றுக்கொண்டேன்.


சென்ற பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து திருக்குறள் அனைத்திற்கும் உரை செய்திருக்கிறேன். என்னுடைய நூல்களை மிகச் சிரத்தையுடன் வெளியிட்டு வரும் தமிழ்ப் பண்ணையாளர் இதை விரைவில் வெளியிடுவார்கள்.




இந்தியச் சர்வ கலாசாலைகள் என்ற இயந்திரத்தில் இந்தியப் பெற்றோர்கள், பிள்ளைகளைப் போட, அரசாங்கம் அவர்களை குமாஸ்தாக்கள், வக்கீல்கள், உபாத்தியாயர்களாக அரைத்துத் தள்ளுகிறது.

என் கதை : நாமக்கல்
கவிஞர் ஓவியம்

காட்சி சாலையில் வைக்கப்பட்டது



வக்கீல்:—ஓய் பாடகரே! நேற்று அந்தப் பிரபு வீட்டில் கச்சேரி செய்தீரே, என்ன கொடுத்தார்?

பாடகர் :—நாலு கல்தா கொடுத்தார்.

## பாரதி தரிசனம்

1905-முதல் இந்திய நாடு நமக்குச் சொந்தமான நாடு, அதை இந்தியரல்லாதவர்கள் ஆண்டு வருகிறார்கள் என்ற உணர்ச்சிகளைக் கிளப்பி விடக்கூடிய பேச்சுக்கள் பள்ளிக்கூடங்களிலும் பரவ ஆரம்பித்தன. வைசிராய் கர்ஸன் பிரபு செய்த வங்காளப் பிரிவினைதான், இந்திய மக்களின் இஷ்டத்தை மதிக்காத ஒரு அரசாட்சி இந்தியாவில் நடக்கிறது என்பதை முதல் முதல் எண்ணச்செய்தது. அந்தச் சமயத்தில் மாணவர்களுக்குள் பேச்செல்லாம் அதுதான். வங்காளப் பிரிவினைக்குப் பின் அங்கே நடந்த பல அரசியல் கொலைகளும், குழப்பங்களும் இந்திய இளைஞர்கள் உள்ளத்தை உறுத்தலாயின.

என்னுடைய தேசாபிமான எண்ணங்கள் உருவானதற்கு மிகவும் உதவியாக இருந்தவர் என்னுடைய நண்பர் ஸ்ரீ நாகராஜ ஐயங்கார். அவரும் நானும் ஆரம்பத்தில் நம்மாழ்வார் பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். பால்யம் முதற்கொண்டே எங்களுக்குள் ஒருவிதப் பற்று. என்னுடைய தந்தை உத்யோக முறையில் மாற்றப்பட்டதனால் ஹைஸ்கூல் படிப்பில் நானும் நாகராஜ ஐயங்காரும் பிரிந்து போனோம். ஆனாலும் என்னை வளர்த்த என் தமக்கை ஸ்ரீ பழனியம்மாள் நாமக்கல்லிலேயே வாழ்ந்ததனால் நான் அடிக்கடி நாமக்கல்லில் வந்து தங்குவேன். 1906-ல் என் தந்தை

பென்ஷன் பெற்று நாமக்கல்லிலேயே தங்கிவிட்டார். அதனால் நாமக்கல் உறவு எனக்கு இடைவிடாது இருந்துகொண்டே யிருந்தது. நாகராஜ ஐயங்காருடைய நட்பும் இடைவிடாது இருந்து கொண்டேயிருந்தது. 1907—1909-ஆம் வருஷங்களில் நாகராஜ ஐயங்கார் சென்னையில் வக்கீல் வேலைக்குப் படித்துக்கொண்டிருந்தார். சென்னையில் சுப்ரமண்ய பாரதியாருடைய சுதந்திரக் கீதங்கள் தெருத் தெருவாக முழங்கிக் கொண்டிருந்த காலம். சென்னையிலுள்ள மாணவர்கள் பள்ளிக்கூடங்களையும் மறந்துவிட்டு, பாரதியாருடைய பாட்டையும் பிரசங்கங்களையும் கேட்கப் பெருந்திரளாகக் கூடுவார்கள். நாகராஜ ஐயங்கார் பெரிய பாரதிப் பித்தர். பரீட்சைக்குப் போகத் தவறினாலும் பாரதியார் பிரசங்கத்துக்குப் போகத் தவறமாட்டார். விடுமுறை என்றோ வேறு காரணமாகவோ நாகராஜ ஐயங்கார் நாமக்கல்லுக்கு வரும்போதெல்லாம் எங்களுக்குப் பாரதியாரைப் பற்றி அடிக்கடி சொல்லுவார். பாரதியாரைப் பற்றி நான் முதன் முதல் கேள்விப்பட்டது நாகராஜ ஐயங்கார் மூலமாகத்தான். பாரதியாருடைய சுதந்திர வெறியைப் பற்றியும் அவருடைய கவிதைகளைப் பற்றியும், வீராவேசமுள்ள அவருடைய பிரசங்கங்களின் பெருமையைப் பற்றியும் ஐயங்கார் சொல்லும்போது எனக்கு உள்ளமும் உடலும் துடிக்கும். பாரதியாருடைய பிரசங்கங்கள், மூர்மார்க்கெட்டில்தான் நடக்கும். பாமரமக்களுக்குச் சுதந்திர

ஆர்வம் உண்டாக்க வேணுமென்ற நோக்கத்துடன் திறந்த வெளிகளில் கூட்டம் கூட்டி தேசபக்திக்கான பிரசங்கங்கள் அப்போதுதான் தமிழ் நாட்டில் ஆரம்பம். அதுவரையிலும் அரசியல் பேச்சுகளெல்லாம் பட்டம் பெற்ற படிப்பாளிகள் நல்ல கட்டிடங்களில் கூடி மேல்நாட்டு முறையில் பேசித் தீர்மானங்களைச் செய்து அதிகாரிகளுக்கு நகல் அனுப்புகிற நாற்காலி—மேஜை முறையில்தான் நடந்துவந்தன. பாமர ஜனங்களுக்கும் அந்தப் பிரசங்கங்களுக்கும் சம்பந்தம் இராது. மேலும் பொதுஜனங்களுக்கு நாம் அடிமைகளாக இருக்கிறோம் என்ற நினைப்பாவது, நம்முடைய நாட்டை அந்நியர்கள் ஆண்டு வருகிறார்களே என்ற எண்ணமாவது இல்லாத காலம் அது.

மூர்மார்க்கெட்டில் அடிக்கடி நடக்கும் பாரதி பிரசங்கங்களுக்கு நாகராஜ ஐயங்கார் போவார். அந்தக்காலத்தில் மூர்மார்க்கெட்டில் இப்போதுள்ளதுபோலக் கட்டிடங்கள் இல்லை. பெரும் பகுதியும் புழுதிபடிந்த பொட்டலாக இருக்கும். மழைக் காலங்களில் நீரும் சேறும் நிறைந்துகிடக்கும். கோடை காலங்களில் குப்பையும் கூளமும் குவிந்து இருக்கும். பாரதியாருடைய சுதந்திரப் பிரசங்கங்கள் அங்கேதான் நடக்கும். ஜனங்கள் பெருந்திரளாகக் கூடுவார்கள். சேருக இருந்தாலும் புழுதியாக இருந்தாலும் பொருட்படுத்தாமல் உட்கார்ந்து பாட்டையும் பிரசங்கத்தையும் கேட்பார்கள். வீடு

தலை வேட்கை மிகுந்த அநேக புதுப் புது பாடல்களை பாரதியார் இந்த மூர்மார்க்கெட் பிரசங்கங்களிலேதான் அரங்கேற்றினார் பாரதியார் சென்னையைவிட்டுப் புதுச்சேரிக்குள் புகுந்து கொள்வதற்குச் சிறிது காலத்துக்கு முன்புதான், ஒருநாள் மூர்மார்க்கெட் பிரசங்கத்தில் ஏராளமான வாலிபர்களுடைய கூட்டத்துக்கு இடையில், "என்று தணியுமிந்த சுதந்திரதாகம்" என்ற பாட்டை முதல் முதலாகப் பாடி வெகு ஆவேசத்துடன் பிரசங்கம் செய்தார். அந்தக் கூட்டத்துக்கு நாகராஜ ஐயங்கார் போயிருந்தார். பாரதியார் பாடின அந்தப்பாட்டின் சில முக்யமான அடிகளை அப்படியே நாகராஜ ஐயங்காரும் மற்ற மாணவர்களும் எழுதி பாடம் பண்ணிக்கொண்டார்கள். அந்த பிரசங்கத்துக்குச் சில நாட்களுக்குப்பின் நாமகல்லுக்கு வந்த நாகராஜ ஐயங்கார், எங்களையெல்லாம் வழக்கம்போல் கூட்டி வைத்துக்கொண்டு பாரதியாருடைய புதுப்பாட்டைப் பற்றியும் அதிலுள்ள மிகவும் குறிப்பிடத்தக்க சில சொற்றொடர்களையும் சொல்லிப் புகழ்ந்துகொண்டிருந்தார். அந்தப்பாடலைக்கேட்ட நாங்களெல்லாம் உடனே சுயராஜ்யபக்தர்களானோம். எனக்கு அந்தப்பாட்டைப்பற்றி கேட்கக் கேட்க பாரதியாரைப் பார்க்க வேணுமென்ற ஆசை உண்டாயிற்று. ஆகையினால் பாரதியாருடைய கவித்திறத்தை நாகராஜ ஐயங்கார் மெச்சிப் பேசும்போதெல்லாம் எனக்கு ஒரு தனிஉணர்ச்சி உண்டாகும். பாரதியாரை

உடனே பார்க்கவேண்டுமென்று ஆசைப் படுவேன். அந்நிய ஆட்சி ஒழியவேணுமென்றும் இந்தியாவை இந்தியனே ஆளவேணும் என்றும் தெருத்தெருவாகப் பாடிக்கொண்டும் தினம் தினம் மூர்மார்க்கெட்டில் கூட்டம்கூட்டி வெகு உருக்கமான பிரசங்கங்களைச் செய்து கொண்டுமிருந்த பாரதியாரைப் பற்றிய பேச்சு தமிழ்நாடு முழுவதும் பரவ ஆரம்பித்தது. அவர் கடைசியாக மூர்மார்க்கெட்டில் பாடிய 'என்று தணியுமிந்த சுதந்திரதாகம்' என்ற பாட்டும் அன்று அவர் பேசிய பேச்சும் இளைஞர்களுக்கு மிகவும் சுதந்தர ஆவேசத்தை ஊட்டக்கூடியவை. அவர் அன்று பாடியதாக நாகராஜ ஐயங்கார் எழுதிக் கொண்டு வந்து எங்களுக்கெல்லாம் சொன்ன பாட்டுகளின் சில முக்யமான பகுதிகள், இப்போது வெளியாகி விற்பனைக்கு வரும் புத்தகங்களில் காணமுடியாது. அந்தச் சில அடிகள் மிகவும் உத்வேகமுள்ளவைகளெனக் கருதப்பட்டு அப்போதே அரசாங்கத்துக்கு பறிமுதலாக்கப் பட்டன. பின்னால் பாரதியார் பாடல்களை அச்சிட்டவர்கள் அந்தக் குறிப்பிட்ட சொற்றொடர்களைச் சில அடிகளை அடியோடு விட்டுவிட்டும், புள்ளிகளை வைத்தும், வேறுசில இடங்களில் பதங்களை முற்றிலும் மாற்றியும் இன்னும் சில இடங்களில் இடைச் செறுகல் செய்தும் அச்சிட்டு விற்கலானார்கள். நாளடைவில் விடுபட்ட பாட்டுகளுக்காக புள்ளிகள் வைத்து அச்சடிப்பதும் போய்விட்டது. மாற்றப்பட்ட பாட்டு

களும் மறைந்து விட்டன. இப்போது கிடைப்பது இடைச் செறுகலோடு கூடிய பாட்டுகள் தாம். நாகராஜ ஐயங்கார் எழுதிக் கொண்டுவந்து எங்களுக்குச் சொன்ன பாட்டிற்கும் இப்போது புத்தகத்தில் படிக்கிற 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்ற பாட்டிற்கும் எவ்வளவோ வித்யாசங்கள் இருக்கின்றன.

நம்முடைய கண்ணுக்கு முன்னல் வாழ்ந்து நம்முடைய காதுக்குக் கேட்கும்படி பாடிய ஒரு கவிஞரின் பாட்டுகளே சுமார் முப்பது ஆண்டுகள் முடிவதற்குள் எத்தனையோ பாடபேதமும் இடைச் செறுகல்களுமாகப் போனது மட்டுமல்லாமல் அப்படிப் பாடபேதமான பாட்டுகளும் கூட மறைந்தே போய்விட்டதைப் பார்க்கும் போது, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னல் எழுதப்பட்ட கம்பராமாயணத்தில் பாடபேதமும் இடைச் செறுகலும் கலந்திருக்கலாம் என்பது மிகவும் சாத்யமான விஷயம்தான். அதன் உண்மைகளைக் கண்டறிவதும் அசாத்யம்தான்.

'என்று தணியுமிந்த சுதந்திர தாகம்' என்ற பாட்டை முதன் முதலாக மூர்மார்க்கெட் பிரசங்கத்தில்தான் பாரதியார் அரங்கேற்றினர். அதே கூட்டத்தில் பாரதியாருக்குச் சென்னையில் நெருங்கிய தோழராக இருந்த 'சுரேந்திரநாத் ஆரியா' என்பவரும் பேசினர். சுரேந்திரநாத் ஆரியா என்பவர் எதிராஜுலு நாயுடு என்ற இயற்பெயருடைய ஒரு ஆந்திரர். வெகு தீவிர தேசபக்தர். பாரதிக்கு இணைபிரியாத நண்பர்.

1908-ல் சூரத்தில் நடந்த காங்கிரசில் சர். பெரோஸ்ஷாமேத்தா, கோபாலகிருஷ்ண கோகலே முதலான மிதவாதிகளுக்கும்—ஸ்ரீ பால கங்காதர திலகர், கபார்தே முதலான தீவிர வாதிகளுக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களினால் குழப்பமுண்டாகி காங்கிரசில் பிளவு உண்டாயிற்று. இந்தக் குழப்பத்தில் சர். பெரோஸ்ஷா மேத்தாவின் மேல் யாரோ ஒரு செருப்பை வீசி எறிந்தார்கள். அதுமுதல் காங்கிரசில்மிதவாதிகள் ஆதிக்கம் குறைந்து போய்விட்டது.

சூரத்தில் குழப்பத்தில் முடிந்துபோன காங்கிரஸ் சபையை சென்னையிற் கூட்டவேண்டுமென்று அப்போது சென்னை பிரமுகர்களில் ஒருவராயிருந்த வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் காங்கிரசை சென்னைக்கு அழைத்தார். கிருஷ்ணசாமி ஐயர் மிதவாதிகளுக்குள் மிதவாதி. அவர் காங்கிரசை அழைத்ததில் கடுங்கோபங்கொண்டார் டாக்டர் மூஞ்சே. ஆம், இப்போது இந்து மகா சபைத்தலைவர்களுள் ஒருவராக இருக்கும் அதே டாக்டர் மூஞ்சேதான். சூரத் காங்கிரசின் போது வாலிபராக இருந்த ஸ்ரீ மூஞ்சே தீவிரவாத திலகர் கட்சியைச் சேர்ந்தவர். ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயர் காங்கிரசை சென்னைக்கு அழைத்ததைக் கேட்ட டாக்டர் மூஞ்சே "யார் இந்த கிருஷ்ணசாமி ஐயர்? காங்கிரசை சென்னையில் கூடும்படி அழைக்க இவருக்கு என்ன யோக்யதை? அரசியல் உலகம் அறியாத மிகவும் பிற்போக்காளரான இந்த கிருஷ்ணசாமி ஐயர்

மீண்டும் மிதவாதிகள் ஆதிக்கத்தைக் காங்கிரசில் நிலை நாட்டிக்கொள்ள நினைப்பதைப் பார்த்தால் எனக்கு மிகவும் ஆத்திரமுண்டாகிறது. கொஞ்ச நேரத்துக்காவது நான் ஒரு நரமாமிச பக்ஷணியாக மாறி இந்தக் கிருஷ்ணசாமி ஐயரை கடித்து மென்று தின்று விடலாமா என்ற கோபம்கூட எனக்கு உண்டாகிறது." என்று கர்ஜித்தார். அந்த சூரத் காங்கிரசுக்குச் சென்னையிலிருந்து போயிருந்த சில பிரதிநிதிகளுள் ஒருவர் இந்த ஸ்ரீ சுரேந்திரநாத் ஆரியா. 'என்று தணியுமிந்த சுதந்திரதாகம்' என்ற பாட்டை பாரதியார் அரங்கேற்றிய அதே மூர்மார்க்கெட் கூட்டத்தில் சுரேந்திரநாத் ஆரியாவும் வெகு வீரா வேசத்துடன் பேசினார். அதற்காக பாரதியார் மேலும் சுரேந்திரநாத் ஆரியாமீதும் ராஜத் துவேஷக் குற்றம் ஏற்பட்டது. அப்போது சென்னையில் போலீஸ் டெபுடி கமிஷனராக இருந்த ராவ் சாஹிப் ஸ்ரீ பவானந்தம் பிள்ளை என்பவர் நல்ல தமிழ் அறிஞர். தமிழ் புலவர்களை மிகவும் ஆதரிப்பவர். தமிழ்க் கவிஞர்களைக் கண்டால் தலை வணங்குவார். சுப்ரமண்ய பாரதியாருடைய அபாரமான தமிழறிவையும் அற்புதக் கவித் திறமையையும் கண்டு வியந்த பவானந்தம் பிள்ளைக்கு பாரதியாரைக் கைது செய்ய மனம் வராமல் தயங்கினார். இப்படி டெபுடி கமிஷனர் தர்மசங்கடப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் பாரதியார் புதுச்சேரிக்குச் சென்று புகலடைந்து அங்கேயே தன் மனைவிமக்களுடன் தங்கிவிட்

டார். சுரேந்திரநாத் ஆரியாவை மூர்மார்க்கெட் பிரசங்கத்துக்காகக் கைது செய்து ராஜத்துவேஷத்துக்காக விசாரணை நடந்தது. உலகத்திலேயே மிகச்சிறந்த பிரசங்கிகளில் ஒருவரான பாபு சுரேந்திரநாத் பானர்ஜி அவர்களுடைய தேசாபிமானப் பிரசங்கத் திறமைக்குப் பெருமை செய்வதற்காக 'சுரேந்திர நாத்' என்றும், ஆரிய வர்த்தமாகிய இந்த இந்தியநாடு அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை அடைய வேண்டுமென்ற ஆர்வத்தை நினைப்பூட்டுதற்காக 'ஆரியா' என்றும், ஆக 'சுரேந்திர நாத் ஆரியா' என்று புதுப் பெயர் புனைந்து கொண்டதாக ஸ்ரீ எதிராஜுலு நாயுடு தன் வாக்கு மூலத்தில் சொல்லி தான் குற்றவாளி அல்லவென்று வாதித்தார். கடைசியாக சுரேந்திரநாத் ஆரியாவுக்கு மூன்று வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த வழக்கு தமிழ் நாடு முழுவதிலும் வாலிபர்களுக்குள் அப்போது ஒரு பரபரப்பை உண்டாக்கியது. இதன் முடிவு என்னவாகுமோ என்று நாங்கள் தினம்தினம் பத்திரிகைகளைப் பார்த்துக் கொண்டே யிருந்தோம். இந்த வழக்கு விசாரணை நடந்தபோது நாகராஜ ஐயங்கார் ஒவ்வொரு ஈரங்கிக்கும் கோர்ட்டுக்குப் போய்வருவார். வழக்கு முடிந்த இரண்டொரு நாளைக்கெல்லாம் நாகராஜ ஐயங்கார் நாமக்கல்லுக்கு வந்தார். பரீட்சை முடிந்து வந்தாரா, விடுமுறை யென்று வந்தாரா, வீட்டில் ஏதாவது விசேஷம் என்று வந்தாரா, அல்லது பாரதியார் பாட்டைப் பற்றியும் இந்த வழக்

கைப் பற்றிய விவரங்களையும் எங்களுக்கெல் லாம் சொல்லவென்றுதான் வந்தாரா என்பது எனக்கு இப்போது ஞாபகமில்லை. நாகராஜ ஐயங்கார் வந்திருக்கிறார் என்று எனக்குத் தகவல் வந்தது. நானும் சபாபதி முதலியார் முதலான சில குறிப்பிட்ட நண்பர்களும் கூடினோம். அந் தக் காலத்தில் தேச பக்தியைப் பற்றி எல்லா இடங்களிலும் பேசமுடியாது. அதற்காக ஒரு தனி இடத்திற்குப் போய் அங்கே சுரேந்திரநாத் ஆரியா வழக்கின் விசாரணை நடந்த விவரங்களை யும் அதனால் சென்னையிலுள்ள இளைஞர்களுக் குள் ஏற்பட்டுள்ள கிளர்ச்சியையும் நாகராஜ ஐயங்கார் எங்களுக்கு எடுத்துரைத்தார்.

சல்லாபமான சம்பாஷணைகளினால் விஷயங் களை விளக்குவதில் நாகராஜ ஐயங்கார் நிபுணர். உள்ளம் உருகிப் பேசுவார். கேட்பவர் உருகும் படிச்செய்துவிடுவார். தன்னுடைய உணர்ச்சிகளை யெல்லாம் கேட்பவர்களுடைய உள்ளத்தில் ஊசி போடாமல் உட்செலுத்தி விடுவார். அந்த இளம் பிராயத்திலேயே வெகு அமைதியான ஆழ்ந்த எண்ணங்கள் உள்ளவர். நான் அவருடன் அடிக் கடி முரண்பட்டு வாதிப்பேன். கோபத்தோடும் பேசிவிடுவேன். அவருக்குக் கோபமே வராது. எப்படிப்பட்ட எதிர்ப்பையும் வெகு நிதானமாக சமாளித்துச் சாந்தப்படுத்துவார். என்னிடத்தில் அவருக்கு ஒரு தனி அபிமானம். என்னுடைய சித்திரக் கலையிலும், தமிழ் அறிவிலும், கம்ப ராமாயணப் பாட்டுகளை நான் குருட்டுப் பாட

மாக ஒப்பிக்கும் ஆற்றலிலும் அவருக்கு அளவு கடந்த அபிமானம்.

என்னுடைய வாழ்க்கையாகிய பாவுக்கு ஊடைபோல இருந்துவரும் இந்த ஸ்ரீ நாகராஜய்யங்காரைப் பற்றி இரண்டொரு வார்த்தைகளை இந்த இடத்திலேயே சொல்லிவிட வேண்டியது என் கடமை. இவரைப்பற்றி பலபேர் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் இவருடைய சிறப்பை எல்லாரும் அறியமாட்டார்கள்.

ஸ்ரீநாகராஜய்யங்கார் நாமக்கல்லில் மிகவும் பிரபலமான ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். ஜாதி மத பேதங்களைக் கருதாமல் யாருக்கும் உபகாரிகளாகவே வாழ்ந்து வந்த மிகவும் செல்வர்க்குள்ள பரம்பரையைச் சேர்ந்தவர். சொத்து சுகங்களில் குறைச்சலில்லாத குடும்பத்திற் பிறந்தவர். தகப்பனார் ஸ்ரீ நரசிம்ம ஐயங்கார் என்பவர் இடுப்பு வேஷ்டியைக்கூட கேட்டவனுக்குக் கொடுத்து விடக்கூடிய சுபாவமுள்ளவர். தாயாரைப்பெற்ற பாட்டனார் ஸ்ரீ ரெங்கையங்கார் ஊருக்கே ஒரு பெரிய மனிதர். ஊருக்குள் தீராத வழக்கெல்லாம் அவரிடம்தான் வந்து தீரும். மாமனார் ஸ்ரீராஜமையங்கார் என்பவர் அப்போதிருந்த மிகச் சிறந்த வக்கீல்களில் ஒருவர். நல்ல சம்பாதனைக் காரர், பெருத்த கொடையாளி, உயர்ந்த கலா ரஸிகர்.

ஸ்ரீ நாகராஜய்யங்கார் ஒரு வக்கீல். இப்போது ஒரு காங்கிரஸ் எம்.எல்.ஏ. 1905 முதல்

இன்று வரையிலும் தேசபக்தியிலும் பொது நலத்துக்கான எல்லாச் சேவைகளிலும் முன்னணியில் நின்று உழைத்துவரும் கோஷ்டியை நாமக்கல் வட்டத்தில் உண்டுபண்ணி வைத்தவர் ஸ்ரீ நாகராஜ ஐயங்கார்தான். தீண்டாமையை ஒழிக்க வந்த காந்திய இயக்கம் ஆரம்பிப்பதற்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னாலேயே நாகராஜய்யங்கார் 'ஸ்ரீ ராமகிருஷ்ண சபா' என்ற ஒரு இளைஞர் சங்கத்தை நாமக்கல்லில் ஏற்படுத்தி அதன் மூலமாகத் தாழ்த்தப்பட்டவர்களுடைய குடிசைகளுக்கெல்லாம் வலியச் சென்று அவர்களுக்குப் பலவிதமான சேவைகளைச் செய்ய எங்களையெல்லாம் பழக்கினவர். சமூக சேவையில் சமானம் இல்லாதவர். நோயாளிகளைப் பராமரிப்பதில் ஒரு தாயாரைப் போன்றவர். ஓய்வறியாத உழைப்பாளி. ஓசையில்லாத தேசத் தொண்டர். அவரால் முன்னுக்குவந்த ஏழை மாணவர்கள் எண்ணிக்கை யற்றவர்கள்.

காந்தியடிகளின் ஆணையால் வக்கீல்தொழிலை விட்ட, முதல்தொகுதியைச் சேர்ந்து மிகவும் துன்பமுற்றவர். காந்தீயத்தில் சேர்ந்த பின்பு குடும்பத்தில் நேர்ந்த பல துக்ககரமான சம்பவங்களை வெகு தைரியத்தோடு சகித்துக் கொண்ட சத்யாக்ரஹி. ஏராளமான குடும்பச் சொத்துக்களைப் பொதுஜன சேவையில் ஈடுபட்டதனால் இழந்து நிற்கும் தியாகி. ஒழுக்கத்தில் உயர்ந்த உத்தமன். இயற்கையாகவே சாத்வீக சம்பத்துள்ளவர். ஒரு அபூர்வமான பெருந்தகையாளர்.

இப்படிப்பட்ட நாகராஜய்யங்கார் எனக்கு வெறும் பாலிய சிநேகர் மட்டுமல்ல. என்னுடைய வாழ்க்கைக்கே ஒரு வழி காட்டியாக வாய்த்தார். என்னுடைய கவிதா சக்திகள் உருப்படியானதற்கும் என்னுடைய சித்திரக்கலை விருத்தி யடைந்ததற்கும் நாகராஜய்யங்காரின் நட்புதான் ஆதிகாரணம் என்று சொல்வது மிகையல்ல. பிற்காலத்தில் நான் செய்த காங்கிரஸ் சேவைகளில் காந்தீயத்தின் பரிசுத்தம் குறையாமல் நடந்து கொள்வதற்கும் சாந்தம் மிகுந்த நாகராஜய்யங்காருடைய நட்பு எனக்கு மிகவும் சாதகமாயிருந்தது.

நான் கவிஞன் என்று பெயர் பெறுவதற்கு வெகு காலத்துக்கு முன்னாலேயே நான் சிறு சிறு பாட்டுகளைச் செய்வதை அறிந்த நாகராஜய்யங்கார் "ராமலிங்கம்! உன்னுடைய வருங்கால வாழ்வு மிகவும் பிரகாசமுள்ளதாக இருக்கப்போகிறது. உன்னுடைய சித்திர வித்தையையும் கவி செய்யும் பழக்கத்தையும் விட்டு விடாமல் விருத்தி செய்து கொள்ள வேண்டும்" என்று அடிக்கடி தட்டிக்கொடுத்துப் பேசுவார். என்னுடைய சித்திரங்களை மெச்சுவார். பாட்டுகளைப் பாராட்டுவார். உண்மையிலேயே அந்தப் பாட்டுகள் பாராட்டத்தக்கனவாக இருந்தனவோ அல்லது என்னுடைய கவித்துவத்தை வளர்க்க ஊக்கமூட்டுவதற்காகத்தான் புகழ்ந்தாரோ என்னவோ. கவிதாசக்தியை இல்லாத இடத்தில் உண்டாக்கிவிட முடியாதென்பது

உண்மையானாலும் யாரிடத்தில் எந்த சக்தி இருக்கிறது என்பதைக் கண்டறிவதும் அதை ஊக்கிவிடுவதும் எல்லாரும் செய்துவிடக்கூடிய காரியம் அல்ல. நாகராஜய்யங்கார் தக்க காலத்தில் என்னைத் தட்டிக்கொடுத்து என் பாட்டுகளை மெச்சி பாரதியாருடைய பாட்டுகளையும் பாடிக் காட்டி அடிக்கடி பாரதியாரின் புலமையைப் புகழ்ந்து பேசி என்னை உத்ஸாகப்படுத்தின தின்பயனே என்னையும் இப்போது ஒரு கவிஞன் என்று சொல்லச் செய்தது என்பதே என்னுடைய தீர்மானம்.

பாரதியாரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் நாளுக்குநாள் அதிகரித்தது. என்ன பயன்? பாரதியார் புதுச்சேரிக்குப் போய்விட்டார்.

1910-ம் வருஷத்தில் சென்னையில் ஒருவிசேஷமான சித்திரக் கண்காட்சி நடந்தது. அது சர்க்கார் சலுகையில் நடக்கும் கண்காட்சி. அதில் பரிசு பெற்றால் கீர்த்தியுண்டாகும் என்று எனக்கு ஆசை. என் கலியாணத்தில் எனக்குப் பரிசாகக் கிடைத்த ஒரு மோதிரத்தை விற்று அந்தப் பணத்தைக்கொண்டு டிராயிங் காகிதங்கள், வர்ணங்கள் முதலானவற்றை வாங்கிக் கண்காட்சிக்கு அனுப்புவதற்காக அநேக சித்திரங்களை வரைந்தேன். சித்திரங்களும் அழகாக அமைந்தன. கண்காட்சிக்குப் படங்களைக் கண்ணாடிசட்டம் போட்டுத்தான் அனுப்பவேண்டும். நான் எழுதின அநேக படங்களுக்கும் சட்டம் போட சுமார் நாற்பது ரூபாய் வேண்டியிருந்தது. என்னிடத்

தில்? பணமில்லை. தகப்பனாரைத்தான் கேட்க வேண்டும், மெள்ளக் கேட்டேன். நான் அவருடைய விருப்பத்தின்படி சர்க்கார் உத்யோகத்துக்குப் போகாமல் பொம்மை போட்டுக்கொண்டிருந்ததில் அவருக்குத் திருப்தியில்லை. அதனால் அவருக்குப் பணம் கொடுக்க இஷ்டமில்லை. அப்படிப் பணம் தந்தாலும் அதனால் அடையக்கூடிய பலனும் அதிகமில்லை என்பது அவருடைய கட்சி. ஒரு மெடலோ சர்ட்டிபிகட்டோ வரலாம். அதனால் என்ன பிரயோசனம் என்பதும் அவருடைய எண்ணம்.

படங்கள் எழுதி முடிந்து சும்மா கிடந்தன. கண் காட்சிக்கு அனுப்பவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. கடைசியாக நாகராஜ ஐயங்காரும், எம். ஸி. சபாபதி முதலியாரும் (என் தமிழ் ஆசான் ஆனையப்ப முதலியாருடைய தம்பி. எனக்கும், நாகராஜய்யங்காருக்கும் நெருங்கிய தோழன்.) என் தந்தையிடம் இரண்டுநாள் நடந்து பலவிதமாக சிபார்சு செய்து பணம் பெற்று படங்கள் சென்னைக்கு அனுப்பப்பட்டன.

அந்தக் கண்காட்சியில் எனக்கு ஒரு வெள்ளி மெடல் பரிசு கிடைத்தது. வெள்ளிப் பதக்கந்தான் இந்தக் கண்காட்சியில் முதல்தரமான வேலைகளுக்கும் முதல் பரிசு. அதற்கடுத்தபடியாக 'ப்ரான்ஸ் மெடல்' அதற்கடுத்தபடி 'நிக்கல்.' அவற்றுக்குப் பின் 'மிகவும் நன்றாக இருக்கிறது' 'நன்றாக இருக்கிறது,' 'மிகவும் மெச்சத் தகுந்தது,' மெச்

சத் தகுந்தது என்பன போன்ற நற்சாட்சிப் பத்திரங்கள்தான்.

எனக்கு ஒரு வெள்ளிப் பதக்கம்-முதல் பரிசு-கிடைத்த சேதியும் என்னுடைய படங்களைப் புகழ்ந்தெழுதப்பட்ட விமர்சனங்களும் அப்போது சென்னையில் நடந்து வந்த தினசரிப் பத்திரிகைகளில் ஒன்றாகிய 'ஸ்டாண்டர்ட்' என்னும் பத்திரிகையில் வெளியாயின. 'வித்தைகள் எவ்வளவு கற்றாலும் என்ன பிரயோசனம்? அரைக்காசானாலும் அரமனை உத்யோகம் வேண்டும்' என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கும் என் தந்தை நான் படம் எழுதிக்கொண்டு பொழுது போக்குவதை விரும்புவதில்லை. ஆனாலும் என் கலைத் திறத்தைப் பற்றிப் பிறர் புகழ்ந்து பேசும்போதெல்லாம் பூரித்துப் போவார். படங்களுக்குக் கண்ணாடி சட்டம் போடுவதற்கும் அந்தப் படங்களைப் 'பார்ஸல்' செய்வதற்கும் செலவழிக்கப்பட்ட பணம் முற்றிலும் வீணாகப் போகவில்லை யென்று என் தந்தை ஓரளவு சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்.

கண் காட்சியின் கடைசி நாளில் பரிசுகளை வழங்குவதற்கென்று ஒரு விழா நடந்தது. அந்த விழாவிற்கு நானும் ஸ்ரீ சபாபதியும் போய் வருவதெனத் தீர்மானித்தோம்.

சபாபதி முதலியார், நாகராஜய்யங்காரையும் என்னையும்விட தீவிரமான தேசபக்தர். 1907-ல் உடையிலும் உணவிலும் அன்னிய நாட்டுப்

பொருள்களை உபயோகப் படுத்துவதில்லை என்று சுதேசி சபதம் செய்து கொள்ளும்படி எங்களையெல்லாம் கட்டாயப் படுத்திய கர்மவீரன். அன்று முதல் இன்றளவும் நாங்கள் அன்னிய நாட்டுத் துணிமணிகளைத் தொடுவதுகூட இல்லை. 'பிஸ்கட்' 'பப்பர்மிட்' முதலான உணவுகளில் சிற்சில சமயங்களில் நான் முன்பின் யோசனையில்லாமல் கிடைத்ததை உடனே தின்றுவிட்டு யாராவது அது அன்னிய நாட்டுப் பொருள் என்று சொன்ன பிற்பாடுதான் திகைப்பேன். ஆனால் சபாபதி முதலியாரும் நாகராஜய்யங்காரும் எந்த தின்பண்டத்தை யார் எப்போது கொடுத்தாலும் அது அன்னிய நாட்டுப் பொருள் அல்லவென்று நிச்சயமாகத் தெரிந்தால் தான் வாயிற் போடுவார்கள். நாமக்கல்லில் முதன் முதல் 'சுதேசி' பொருள்களின் கடையை ஆரம்பித்து வெகு நஷ்டமடைந்தவர் சபாபதி முதலியார். தமயன் ஸ்ரீ ஆனையப்ப முதலியாரைப் போல அவரும் ஒரு தமிழ்ப் பண்டிதர். ஆனால் அண்ணனைக் காட்டிலும் ஆங்கிலப் படிப்பு அதிகமுள்ளவர்.

சபாபதி முதலியாரும் நானும் சென்னைக்குப் போகத் தீர்மானித்தது, பரிசு வந்த பதக்கத்தை வாங்கிக்கொண்டு வரத்தான் என்பது என்னுடைய தந்தைக்குச் சொன்னது. ஆனால் எங்களுக்குள் ஏற்பாடு என்னவென்றால் சென்னையிலிருந்து புதுச்சேரிக்குப் போய் ஸ்ரீ அரவிந்த கோஷ், ஸ்ரீ வ. வெ. சு. ஐயர், ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி முதலியவர்களைப் பார்த்து வருவது என்

பது. அவர்களை எதற்காகப் பார்ப்பது? அவர்களிடத்தில் என்ன காரியம்? என்ற சிந்தனை எதுவும் கிடையாது. பார்க்கவேணும் என்ற வெறும் ஆவல். ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியாரைப் பார்க்க வேண்டுமென்று எனக்கிருந்த ஆசையைத் தீர்த்துக்கொள்ள அது ஒரு அரிய சந்தர்ப்பம் என்று கண்டேன்.

என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கி நான் சென்னைக்குச் சென்று 'மெடலை' வாங்கிக் கொண்டுவரும் விஷயத்தைப்பற்றி ஸ்ரீ சபாபதி முதலியாரே என் தந்தையிடம் பிரஸ்தாபித்தார்.

"பணத்தைச் செலவு செய்து கொண்டு போய் சும்மா இந்த மெடலைமட்டும் வாங்கிக் கொண்டு வந்து என்ன பிரயோசனம்? அதைக் கொண்டு யாராவது நல்ல துரைமார்களைப் பார்த்து ஒரு உத்யோகம் தேடிக்கொண்டாலல்லவா தேவலை?" என்றார் என் தகப்பனார்.

"ஆமாம். அதையும் கவனிக்க வேண்டியதுதான்," என்றார் சபாபதி.

"பின்னே, அதற்கொரு முயற்சி செய்யுங்களேன்."

"முயற்சி செய்யலாம் என்றுதான் நானும் நினைக்கிறேன். பட்டணத்தில் எனக்கு ரொம்பவும் வேண்டியவரான விஸ்வநாத முதலியார் என்ற நண்பர் இருக்கிறார். அவருக்கு சர்க்கார் மனிதர்களிடத்தில் அதிக செல்வாக்குண்டு நேராக நாங்கள் அவருடைய வீட்டுக்குத்தான்

போகப்போகிருேம். முதலில் மெடலை வாங்கிக் கொண்டு பிறகு வேண்டிய முயற்சிகள் செய்வோம்.''

"அப்படிச் செய் சபாபதி! அப்படிச் செய். காலாகாலத்தில் இவன் எதாவது ஒருசர்க்கார் வேலையில் ஒட்டிக் கொண்டால் எனக்குக் கவலையில்லாதிருக்கும். சரி அப்படி நீ முயற்சி செய்வதாகச் சொன்னுல் போனுற் போகுது. கூட்டிக்கொண்டுபோ. இல்லா விட்டால் எனக்கு வெட்டிச் செலவு வைக்காதே.''

"இல்லையில்லை, அப்படி ஒரு முயற்சி செய்யலாம் என்றுதான் நானும்கூடப் போகிறேன். அதையெல்லாம் நான் கவனித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் சந்தோஷமாக ஆசீர்வதித்தனுப்புங்கள்'' என்று சபாபதி முதலியார் புளுகினுர்.

என் தந்தை வெகு சந்தோஷமாக செலவுக்கு வேண்டிய பணத்தையும் தந்து அனுப்பினுர். பட்டணத்தில் ஏதாவது ஆசைப்பட்ட பொருளை வாங்கிவரவென்று சொல்லி அதிகப் பணம் வாங்கிக் கொண்டு நானும் சபாபதியும் சென்னைக்குச் சென்றேம். சென்னையிலிருந்து புதுச்சேரிக்குப் போய்வர வேண்டிய அளவுக்கு சபாபதியும் தன்னுடைய 'சுதேசி' கடையிலிருந்து பணம் எடுத்துக் கொண்டார்.

சில நாள் சென்னையில் தங்கிவிட்டுப் புதுச்சேரிக்குப் போனேம். நான் முன்னமேயே சொல்லியிருக்கிறபடி அரவிந்தகோஷைப் பார்க்க

வருகிறவர்களைப் பற்றி போலீசார் செய்த கடு பிடிகளினால் அரவிந்தரைப் பார்க்க முடியவில்லை. நாங்கள் புதுச்சேரியிலிருந்த ஒன்பது நாளும் ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியார் அவருடைய வீட்டில் இல்லை. கடைசியாக ஸ்ரீ வ. வெ. சு. ஐயரை மட்டும் இரண்டு முறை பார்த்து விட்டு வந்து விட்டோம்.

பாரதியாரைப் பார்க்கவென்றே போன என்னுடைய எண்ணம் பலிக்கவில்லை.

1912-ல் நான் டில்லியில் முடிசூட்டுவைபவத்தில் தங்க மெடல் பரிசு பெற்றவன் என்ற பெயருண்டான பின், என்னுடைய சித்திரத் தொழிலுக்கு ஒரு அலாதி சிறப்புண்டாயிற்று. தொழில் முறையில் வெகு நல்ல வரும்படியும் வந்தது. அப்போது நாமக்கல் உயர்தரப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக இருந்த ஸ்ரீ எஸ். ராமசாமி ஐயங்கார், பி. ஏ., எல். டி. அவர்கள் எனக்கு நெருங்கிய நண்பரானார். அவருடைய சொந்த ஊர் புதுவயல். அது செட்டி நாட்டைச் சேர்ந்தது. புதுவயலில் ராமசாமி ஐயங்காருடைய தமயனார் ஸ்ரீ கிருஷ்ணையங்கார் என்பவர் மிகவும் பிரபலமான ஜோசியர். தனவணிகச் செட்டியார்களிடத்தில் மிகுந்த செல்வாக்குள்ளவர். அவர் மூலமாகப் புதுவயலிலும் அதைச் சுற்றிலுமுள்ள இடங்களிலும் பல பணக்காரர்களுடைய படங்களை எழுதினேன். சராசரி படம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்குக் குறைவில்

லாமல் வாங்குவேன். ஆயிரம் ரூபாய் எனக்கு ஒரு பெருந்தொகை. அவர்களுக்கு வெகு அற்பம். 'அரு. சோம. வீட்டில் ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள்' என்று நான் சொன்னால் போதும். 'கரு. ராம.' வீட்டில் குறைத்துக் கேட்க மாட்டார்கள். 'சரி, அதே மாதிரி நமக்கும் ஒரு படம் வரைந்து விடுங்கள்' என்பார்கள். அதனால் நான் சுமார் பத்து வருஷ காலம் செட்டி நாட்டையே சுற்றிச் சுற்றித் தொழில் நடத்திக் கொண்டிருந்தேன்.

அந்தச் சமயத்தில் எனக்கு ஏற்கனவே நாமக்கல்லில் நண்பராக இருந்த கம்பராமாயண வித்வான் ஸ்ரீ மோ. வெ. கோவிந்தராஜ ஐயங்கார் என்பவர் காரைக்குடியில் சில தனவணிகச் சீமான்களுக்குக் கம்பராமாயணப் பாடம் சொல்லிக் கொண்டு வசித்து வந்தார். ஸ்ரீ கோவிந்தராஜய்யங்காரவர்கள் வடமொழியிலும் தென்மொழியிலும் தேர்ந்த பண்டிதர். வான்மீக ராமாயணத்திலும், கம்ப ராமாயணத்திலும் ஆழ்ந்த கல்வியும் கேள்வியும் உள்ளவர். வான்மீகியைக் 'கவி' என்பார்; கம்பனை 'மகாகவி' என்பார். வான்மீகி ராமாயணம் 'ராமகதை' என்பார்; கம்பராமாயணம் 'ராமசாஸ்திரம்' என்பார். வான்மீகி ராமன் ஒரு உயர்ந்த மனிதன்; கம்ப ராமன்தான் தெய்வம் என்பார். வான்மீகியின் சீதை கற்பைக் காத்துக்கொண்ட ஒரு உத்தமி, ஆனால் கம்பனுடைய சீதைதான் ஜீவகோடிகளெல்லாம் வணங்கத்தக்க 'லோகமாதா'

என்பார். இப்படியெல்லாம் கம்பனுடைய சிறப்பைப் பிரசாரம் செய்யவென்றே பிரசங்கங்கள் செய்து கம்பனைத் தனது இஷ்ட தெய்வம்போல் வணங்குவார். கம்பராமாயணத்தில் அவ்வளவு ஆராய்ச்சியுடன் பிரசங்கம் செய்யக்கூடியவர்கள் வெகு அரிது. இந்த கோவிந்தராஜய்யங்காரவர்களும் நானும் சேர்ந்து 1913-ல் 'லோகமித்ரன்' என்ற ஒரு மாதப் பத்திரிகை ஆரம்பித்தோம். நான்கே மாதங்கள் சரியாக நடந்தது. அதற்குப் பின் பல காரணங்களால் அது நின்றுவிட்டது. உடனே ஸ்ரீ கோவிந்தராஜ ஐயங்காரவர்கள் காரைக்குடிக்குப் போய்விட்டார். ஸ்ரீ கோவிந்தராஜய்யங்கார் மிகப்பரந்த நோக்கங்களுடைய உயர்ந்த மனிதர். அவர் தொழில் முறையில் என்னைக் காரைக்குடிக்கு அழைத்தார்.

1918 அல்லது 1919-ல் முதன் முதலாகக் காரைக்குடிக்குப் போய் அவர் வீட்டில் தங்கியிருந்தேன். அப்போது காரைக்குடியில் அவரைத் தவிர எனக்குப் பழக்கமானவர்கள் யாருமில்லை. தொழில் முயற்சிக்காக என்னை முதன் முதல் எந்தச் செட்டியாரிடத்தில் அறிமுகப்படுத்த வேண்டுமென்று கோவிந்தராஜய்யங்கார் விரும்பினாரோ, அந்தசெட்டியார் ஊரில் இல்லை. அதற்காக ஐந்தாறுநாள் சும்மா இருக்க நேர்ந்தது. கோவிந்தராஜையங்கார் வீட்டில் ஸ்ரீவெங்கட கிருஷ்ணையர் என்ற இன்னொருவரும் தங்கியிருந்தார். அவர் ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியாரின் சொந்த ஊராகிய எட்டயாபுரத்தைச் சேர்ந்தவர். பாரதி

யாரையும் அவருடைய குடும்பத்தையும் அறிந்தவர். புதுச்சேரியில் பாரதியாரோடு சிலநாள் தங்கியிருந்து ஸ்ரீ அரவிந்த கோஷையும் தரிசித்து வந்தவர். திருநெல்வேலி ஜில்லாவில் கம்பராமாயணப் பிரசங்கத்திற்காக ஸ்ரீ கோவிந்தராஜய்யங்கார் பிரயாணம் செய்தபோது ஐயங்காரவர்களுடைய அபூர்வமான பிரசங்கத்தைக் கேட்டு பிரேமை கொண்டு அவருடைய நட்பை நாடிக்கொண்டவர். இங்கிலீஷ், சமஸ்கிருதம், தமிழ், வங்காளி முதலான நாலைந்து பாஷைகளில் விஸ்தாரமான படிப்புள்ளவர். வெறிகொண்ட தேசபக்தர்.

ஸ்ரீ கோவிந்தராஜய்யங்காரவர்கள் தம்முடைய சீடர்களுக்குக் கம்பராமாயணப் பாடம் சொல்லித்தர வெளியே போய்விட்ட சமயங்களில் நானும் வெங்கடகிருஷ்ணய்யரும் அடிக்கடி பாரதியாரைப்பற்றியும் அவருடைய பாடல்களைப்பற்றியுமே பேசிக்கொண்டிருப்போம்.

பாரதியார் சென்னையை விட்டுப் புதுச்சேரிக்குப் போனபின், சுமார் பத்து வருஷங்கள் பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் பிரவேசிக்க முடியாத நிலைமையில் இருந்தார். அதற்குப் பின் அந்த அகத்தியம் குறைந்து பாரதியார் பாண்டிச்சேரியை விட்டுத் தமிழ் நாட்டுக்குள் சஞ்சரிக்க முடிந்தது. அந்தக் காலங்களில் அவருக்கு மிகவும் ஆதரவாக இருந்தவர்கள் கானாடுகாத்தான் ஸ்ரீ வை. சு. ஷண்முகம் செட்டியார், காரைக்குடி ஸ்ரீ சொ. முருகப்பா, ஸ்ரீ ராய. சொக்கலிங்கம்

ஸ்ரீ சா. கணேசன் முதலான செட்டி நாட்டு இளைஞர்கள். இவர்கள் எல்லாரும் இப்போது எனக்கு மிகவும் பழக்கமான அன்பர்கள். ஆனால் நான் சொல்லப் போகிற நிகழ்ச்சி நடந்த அப்போது இவர்களில் யாரையுமே எனக்குத் தெரியாது.

ஒரு நாள் வெளியே போயிருந்து வீட்டுக்குள் வந்த ஸ்ரீ வெங்கடகிருஷ்ணையர் "பாரதியார் கானாடுகாத்தானுக்கு வந்திருக்கிறாராம். இன்றைக்கு முழுதும் அங்கே இருப்பாராம்" என்றார். உடனே போய் பாரதியாரைப் பார்த்துவிட வேண்டுமென்று எனக்கு ஆத்திர முண்டாயிற்று. வெங்கட கிருஷ்ணையருக்கும் அதே விருப்பம். ஒரு மாட்டுவண்டியை அமர்த்திக்கொண்டு வெங்கட கிருஷ்ணையரும் நானும் புறப்பட்டோம். காரைக்குடிக்கும் கானாடுகாத்தானுக்கும் சுமார் பனிரண்டு மைல். மாட்டுவண்டிப் பயணம் மலைப்புத் தட்டக்கூடியதுதான். ஆனால் வழிமுழுதும் கதையும் பாட்டுமாகவே காலம் கழித்ததால் கட்டை வண்டிப் பிரயாணத்தின் களைப்பே தெரியவில்லை. வெங்கட கிருஷ்ணையர் நல்ல ரஸிகர். நான் இயற்றியிருந்த பாடல்களைப் பாடும்படி உத்ஸாகப்படுத்துவார். இளமையின் இன்பமிகுதியினால் நானும் சலிப்பில்லாமல் பாடுவேன். அப்போது நான் இயற்றியிருந்த பாட்டுகளில் நாடகப் பாட்டுகளே அதிகம்.

அநேகமாக அக்காலத்தில் தமிழ்நாட்டு நாடக மேடைகளில் நடிக்கப்பட்டுவந்த எல்லாக்

கதைகளுக்கும் நான் பாட்டுகள் இயற்றியிருந்தேன். எல்லாப் பாட்டுகளும் குறைந்த பட்சம் ஐந்நூறு உருப்படிகள் இருக்கும். அவைகளை எழுதி வைத்திருந்த நோட்டுப் புத்தகங்களை எவரோ நண்பர் பார்த்துவிட்டுத் திருப்பிக் கொடுத்துவிடுவதாக வாங்கிப்போனார் என்ற நினைவுதான் இப்போதிருக்கிற மிச்சம். வாங்கிப் போனவர் யார் என்ற ஞாபகம்கூட இப்போதில்லை. வாங்கிக்கொண்டு போனவருக்குத் திருப்பித்தந்துவிடவேணுமே என்ற திருவுள்ளம் இல்லாமற் போய்விட்டது. அரசியல் பிரசாரங்களில் மெய்மறந்து ஈடுபட்டு இழந்துபோன பல பொருள்களுள் இதுவும் ஒன்று. குற்றம் பிறருடையதல்ல, என்னுடையதுதான். தேசத்தின் விடுதலைக்காகச் சொந்த சுகங்களைக் கொஞ்சம் தியாகம் செய்யவேண்டுமென்றுதான் காந்தியடிகள் சொன்னார். இப்படி பாதுகாத்து வைத்திருக்கவேண்டிய பாட்டுநோட்டுகளை எடுத்துப் போனது எவரென்றுகூட நினைப்பிலில்லாதபடி ஏமாளித்தனமாக இருந்துவிட்டது தேசபக்தியுமல்ல, தியாகமும் அல்ல என்பதை அறிவேன். என்ன செய்வது அந்தப்பாட்டுகள் போனதுதான்—அந்த நோட்டுப்புத்தகங்களில் நான் பாட்டுகளை இயற்ற ஆரம்பித்த மாதிரியைக் காட்டக்கூடிய அநேக இளங்கவிதைகளும் இருந்தன.

இந்த நாடகப் பாட்டுகளில் சிலவற்றை வெங்கடகிருஷ்ணையருக்காக வண்டியில் பாடிக்

கொண்டே காணுடுகாத்தானுக்குப் போக நேர்ந்தது. அப்படிப் பாடின அநேக பாட்டுகளில் அடியில் வரும் பாட்டு குறிப்பிடத்தக்கது. ஏன் குறிப்பிடத் தக்கது என்ருல் இந்தப் பாட்டை சுட்டிக் காட்டி வெங்கடகிருஷ்ணையர் பாரதியாரிடத்தில் என்னைப் பற்றிச் சொல்லிவிட்டார். பாரதியாருக்கு முன்ஞல், எனக்கும் கவி பாடத் தெரியும்' என்று காட்டிக்கொள்ளவே கூடாது என்ற எண்ணத்தோடு சென்ற என்னை வெங்கட கிருஷ்ணையர் இழுத்து விட்டுவிட்டார். அதஞல் தான் இந்தப் பாட்டு என் மனதில் இருந்து கொண்டே இருக்கிறது. பாட்டு அப்படி ஒன்றும் அபூர்வமானதல்ல. பாரதி அதைப் பாராட்டி விட்டார். அதற்காக அதை எழுதுகிறேன்.

கிட்டப்பா சகோதரர்கள் நாமக்கல்லில் நாடகம் நடத்திக்கொண்டிருந்த போது அவர்களுக்காக இயற்றப்பட்டது. 'லங்காதகனம்' என்ற ராமாயண நாடகத்தில் ராமன் பாட வேண்டிய பாட்டு. லங்காதகனம் என்ற நாடகத்தின் ஆரம்பம், 'மழைக்காலம் போனவுடன் சீதையைத் தேடுவதற்குச் சேனையோடு வருகிறேன்' என்று வாக்களித்துப் போன சுக்ரீவன் வராததைக்கண்டு கோபங்கொண்ட ராமன், லக்ஷ்மணனை கிட்கிந்தைக்கு அனுப்புகின்ற இடத்திலிருந்துதான். தம்பியை கிட்கிந்தைக்கு அனுப்பிவிட்டு ராமன் தனியேயிருந்து சோகப் படுகின்ருன். அந்தச் சோகத்தை, ஒரு விருத்தம் பாடி அந்த விருத்தத்தோடு சேர்ந்ததாக ஒரு

பதம் பாடி ராமன் வெளியிடுவதுபோல அமைக்கப்பட்டது. அந்த நாட்களில் நாடகமேடைகளில் பாட்டுகள் அதிகம். பாட்டுகளில் விருத்தம், அகவல், சிந்து, வண்ணம், பதம் முதலிய தினுசுகள் அதிகமாக இருக்கும். அந்த முறையில் எழுதப்பட்ட ராமனுடைய சோகம்:

### விருத்தம்

தம்மரசைப் பிறர் ஆள விட்டுவிட்டுத்
தாம் வணங்கி கைகட்டி நின்றபேரும்
தம்முறவு தரித்திரத்தால் மாளவிட்டு
தனித்திருந்து உண்டுடுத்துத் தருக்கினோரும்
தன்மனைவி பிறன்மனையில் தவிக்கவிட்டு
தானேங்கி நின்று மூன்று தயங்கினோனும்
இம்மையிலும் மறுமையிலும் இழிவடைந்து
எரிநரகில் அழுந்திடுவார் எந்நாளும்—

### பல்லவி

என்று சொல்லுமே உலகம்

### அநுபல்லவி

எப்படி நானினி இப்பெரும் பழியினைத்
தப்பியிருந்துல கொப்ப நடப்பது (என்று)

### சரணம்

'தன்னுடை உடல்பொருள் ஆவி—எல்லாம்
தயவின் அடிமைசெய்த தேவி—
தஞ்சம் என்றே உடன் தாவி—காட்டில்
தாளொணுத துயர் மேவி

தன்னிலும் உறுதெய்வம்
இன்னிலத் திலையென
எண்ணி யிருந்த ஒரு
பெண்மணி யிப்படி

காதக ராவணன் வாதனை யால்மிக
வாடினள் ஆமென வேசொல வேயதைக்
கேட்டிருந்து மொரு வாட்டமின்றி உடல்
நீட்டிநின்றுமிக வாட்ட சாட்டமுடன்

வலிந்த தென்றொரு வளைந்த வில்லினை
தளைந்த நாணொடு விரைந்து கையினில்

தாங்கினன் புகழ் நீங்கினன் விழல்
வீங்கு தோள்களில் தூங்கிடற்கிவன்

ஐம்பத் துக்கென அம்புத் தூணி
நிரம்பப் பாணமும் வெம்பப் பூண்டனன்

ஐயோ! அழியா வெய்யோன் குலமே
பொய்போம் எனவே செய்தான் இவனே!

அரசர்க் கரசாய் அதிவிற் பனனாய்
அடுமற் புயனாய் மிகுசற் குணனாய்

அபய மென்றுதன தடிப ணிந்த ஒரு
அமர ராஜன்பகை அழியு மாறு திறல்

உம்பர் உலகமதில் சம்பர அசுரனை
பம்பர மெனச்சுழன் றம்பலமாக்கிய

அதிரத தயரதன் முதல்மகன் இவனென
உதிசெயும் இவனினி பரிதியின் ஒருதனிக்

குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்பிவன்
நலத்தைக் கெடுத்தவனைச் சாடாது சோம்பினன்.

கொக்கோ! கோ! என பெப்பே! பே! என
சிச்சீ! சீயவன் கெட்டான் பேதையன்''
என்று சொல்லுமே உலகம்.

இதையும் இதைப்போன்ற இன்னும் பல பாட்டுகளைப் பாடிக்கொண்டே மாலை ஆறுமணி சுமாருக்குக் கானாடுகாத்தானை அடைந்தோம். அந்த ஊர் எங்கள் இரண்டு பேருக்கும் புதிசு. வெங்கடகிருஷ்ணையர் காரைக்குடியில் கேள்விப் பட்ட ஒரு விலாசத்தை சொல்லிக்கொண்டு வீட்டைத் தேடினோம். அந்த வீட்டுக்காரர் வேறொரு வீட்டைச் சொன்னார். அங்கே போனோம். அந்த வீட்டுக்கு முன்னால் சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சொன்னதி லிருந்து பாரதியார் அந்த வீட்டில்தான் தங்கி யிருக்கிறார் என்றும், அவரும் சில நண்பர்களும் அப்போது வெளியே உலாவிவரப் போயிருப் பதாகவும் அறிந்தோம். அவர்கள் உலாவப்போன இடத்தையும் ஒரு பையன் குறிப்பிட்டான். அந்த இடத்தை எங்களுக்குக் காட்டும்படி வெங்கடகிருஷ்ணையர் அச்சிறுவனை வேண்டிக் கொண்டார். உடனே அந்தச் சிறுவன் ஒத்துக் கொண்டு எங்களுக்கு வழிகாட்டினான். ஊருக்கு அரை மைல் தூரத்தில் ஒரு கிராம தேவதையின் கோயில். அங்கே ஒரு மரத்தின் அடியில் பாரதி யாரும் அவருடைய நண்பர்களும் உட்கார்ந்து கொண்டு களித்துச் சிரித்துக் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்தனர். கையெழுத்து மறைந்த நேரம். வெளிச்சம் குறைவான இடத்தில் உட்

கார்ந்திருந்ததால் முகத்தை நன்ருகப் பார்க்க முடியவில்லை. ஆனாலும் பலமுறை கேள்விப் பட்டிருந்த எனக்கு பாரதியாருடைய படம் ஒன்று என் மனதில் பதிவாகியிருந்தது. முண்டாசுக் கட்டைக் கண்டவுடனேயே பாரதியாரை அறிந்து கொண்டேன். உடனே ஓடி அவர் காலில் விழுந்து வணங்கவேண்டுமென்ற ஆசை வந்தது. அந்த ஆசையை என்னமோ ஒரு கூச்சம் வந்து இடைமறிக்கத் திகைத்து நின்றேன். வெங்கட கிருஷ்ணையர் உறவோடு பாரதியாருக்கு அருகில் அமர்ந்து நமஸ்கரித்தார். பாரதியார் அவரை உற்றுப் பார்த்துவிட்டு "அடே! வெங்கிடுகிஷ்ணு! நீயா? இங்கெப்படி வந்தாய்?" என்ருர். வெங்கட கிருஷ்ணையர் தாம் காரைக்குடிக்கு வந்திருக்கும் வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு,

"இவர் ராமலிங்கம் பிள்ளை. நல்ல 'ஆர்டிஸ்ட்'. உங்களைப் பார்க்க வேண்டுமென்று..." என்று முடிக்குமுன் பாரதியார்,

"ஓ! ஓவியக் கலைஞரா! வருக கலைஞரே. தமிழ்நாட்டின் அழகே கலையழகுதான்" என்று சொல்லும்போது நான் அவருக்கு முன்னுல் வந்து நமஸ்காரம் செய்யக் குனிந்தேன். உடனே பாரதியார் நான் நமஸ்காரம் செய்வதை விரும்பாமலோ என்னவோ அவர் காலைத் தொடப்போன என் கையைப் பிடித்து இழுத்து அருகில் அமர்த்தி பிள்ளைவாள் நீர் நம்மை ஓவியத்தில் தீட்டும். நாம் உம்மைக் காவியத்தில் தீட்டுவோம்" என்று சொல்லி

விட்டுக் கலகலவென்று சிரித்தார். மற்றவர்களும் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

வெங்கட கிருஷ்ணையருடன் குடும்ப விசாரணையாகக் கொஞ்சம் பேசிவிட்டு, நாங்கள் அங்கே போவதற்கு முன்னால் அவர்கள் பேசிக் கொண்டிருந்த விஷயங்களைத் தொடர்ந்து வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார். எல்லாப் பேச்சும் இலக்கியம், கவிதை, கலை, சுதந்திரத்தைப் பற்றித் தான். இருட்டி வெகு நேரம் ஆனபின்னும் காலத்தைப் பற்றிய கவலையே இல்லாமல் பேசிக் கொண்டிருந்தார். அவருடன் இருந்த சுமார் பத்துப்பேரும் அவர் பேசுவதைப் போதும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்களேயல்லாமல் சலிப் படையவில்லை. நிமிஷத்துக்கு நிமிஷம் சிரிப்பு, கேலி, குதிப்பு கொம்மாளம்தான்.

பெரியவர்களை பித்தர், பேயர், பாலர் இவர் களுக்குச் சமானமாக இலக்கியங்களில் படித் திருக்கிறேன். அந்த மூன்று தன்மைகளும் அவரிடத்தில் களிநடம் புரிந்ததைக் கண்டேன். இன்பப் பேச்சைத் தவிர துன்பப் பேச்சு எள்ளளவும் இல்லை. நிறைவைத் தவிர குறைவைப் பற்றிய சிந்தனையே காணப்படவில்லை. துக்கக்குறி வந்தால் ஒரே ஒரு இடத்தில்தான். அது எந்த இடம் என்றால், இவ்வளவு பெரிய பாரத சமுதாயம் அடிமைப்பட்டு தவிக்கின்றதே என்ற பேச்சு வருகிறபோது மட்டும்தான். புதுச்சேரியில் அவர் மிகவும் கொடிய வறுமைப்பட்டு

வாடினதாக அந்த வெங்கட கிருஷ்ணையரே தாம் நேரில் பார்த்ததாகச் சொன்னபோது நான் மிகவும் பரிதாபப்பட்டேன். ஆனால் பாரதியாரைப் பார்த்தபோதும் அவருடைய பேச்சுக்களைக் கேட்டபோதும் அந்த வறுமையின் குறிகள் கொஞ்சங்கூடத் தெரியவில்லை. அவருடைய சிரிப்பு கள்ளங்கபடமில்லாத சிரிப்பு. வெள்ளிப் பாத்திரம் உருளுவதுபோன்ற ஓசையுடன் வெகு நேரம் சிரிப்பார். பேச்சின் சுவாரஸ்யத்துக்குத் தகுந்தபடி உடலை நெளிப்பதும், முகத்தைச் சுளிப்பதும், மீசையை முறுக்குவதும் ஒரு நிமிஷங்கூட ஓயாது.

இப்படி வெகு நேரம் பேசிக்கொண்டேயிருந்தார். இடையில் ஏதாவது பாட்டுப் பாடுவாராக்கு மென்று நான் வெகு ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தேன். பாடவில்லை. அவருடைய பாட்டுகளை அவரே பாடுவதைக் கேட்பதுதான் ஆனந்தம் என்று நாகராஜய்யங்கார் அடிக்கடி சொல்லுவார். அப்படி ஒரு பாட்டையாவது பாரதியார் பாடக் கேட்டுவிட வேண்டும் என்ற ஆசை என் மனதில் எழுந்தது. அதைச் சொல்லிக்கொள்ள என் நாக்கு துடித்துக் கொண்டேயிருந்தது. ஆனால் ஓயாமல் அவர் பேசிக் கொண்டேயிருக்கும் போது எப்படிக் கேட்பது?

ஒருவாறு அவருடைய பேச்சுகள் ஓய்ந்து எல்லாரும் வீட்டுக்குப்போக எழுந்திருக்கப் போகையில்,

"ஒரு பாட்டு........" என்று நான் முனகினேன்.

"ஒரு பாட்டா? என்ன பாட்டு?" என்றார் பாரதியார்.

"தங்கள் பாட்டுகளில் ஏதாவது ஒன்றை தாங்களே பாடுவதைக் கேட்கவேணுமென்று வெகு ஆசை" என்றேன்.

"அப்படியா! என்னைப் பாடச் சொல்லுகிறீரா? பாட்டு 'ஆர்டருக்கு' வராது. பாடும்போது கேளும்" என்றார்.

எனக்கு 'ஏண்டா கேட்டோம்' என்று வருத்தம் வந்துவிட்டது. என்னுடன் வந்த வெங்கடகிருஷ்ணையர் சும்மா இருக்காமல்

"ராமலிங்கம் பிள்ளைகூட பாட்டுகள் செய்வார்" என்றார். உடனே பாரதி "அப்படியா! ஓவியக் கலைஞர் காவியக் கலைஞருமா! எதைப் பற்றிப் பாடியிருக்கிறீர்? எங்கே ஒன்று பாடும் கேட்போம்" என்றார்.

நான் கூசிக் குன்றிக் குலைந்து போனேன். பதிலும் சொல்லாமல் பாட்டும் பாடாமல் உள்ளம் நடுங்க சும்மா உட்கார்ந்திருந்தேன். பாரதியார் "எங்கே, சொல்லும் கேட்போம். ஏன் கூசவேண்டும். எல்லாரும் கவி பாடலாம்" என்று அடுத்தடுத்து கேட்கலானார்.

வெங்கடகிருஷ்ணையரும் விட்டபாடில்லை.

"அந்த ராமன். சோகப் படுகிற விருத்தத்தைச் சொல்லும்" என்று தூண்டினார்.

தட்டிக்கழிக்க முடியாமல் நாணப்பட்டுக் கொண்டே நடுங்கின குரலில்

*தம்மரசைப் பிறர்ஆள விட்டுவிட்டுத்*
*தாம்வணங்கி கைகட்டி நின்றபேரும்*

என்ற முதல் அடியைச் சொல்லி முடிப்பதற்குள் பாரதியார் துள்ளித் துடிக்க ஆரம்பித்து விட்டார். கழுத்தை நீட்டிக், காதைக் காட்டி, கவனத் தோடு பாட்டைக் கேட்டார். பாட்டை முடித் தேனோ இல்லையோ "பலே பாண்டியா! பிள்ளை! நீர் ஒரு புலவன், ஐயமில்லை. 'தம்மரசை - பிறர் ஆள - விட்டு விட்டு - தாம் வணங்கி - கைகட்டி - நின்ற பேர்கள்' - பலே! பலே! இந்த ஒரு அடியே போதும்" என்ற கருத்துகள் அடங்கின என்னென்னமோ சொல்லி என்னைத் தட்டிக் கொடுத்தார். அவர் பேசின அத்தனையும் என் னுடைய நினைவில் இப்போது இல்லை. பாரதி யாரைப் பார்த்துவிட்ட பூரிப்பினுல் அவருடைய பேச்சுகளிலும்கூட என் கவனம் படியவில்லை.

அந்த விருத்தத்துக்கு மேல் நானும் சொல்ல வில்லை, சொல்லுவதற்கு அவரும் இடங்கொடுக்க வில்லை. இந்த விருத்தத்தின் கருத்தைப் புகழ்ந்து கொண்டே வீட்டுக்குப் போக எழுந்துவிட்டார். பேசிக்கொண்டே அவர் தங்கியிருந்த ஜாகைக் குப் போனோம். அங்கே பாரதியாரைப் பார்க்கப் பலபேர் வந்திருந்தார்கள். அத்தனைபேருக்கும்

அங்கே விருந்து நடந்தது. உணவுக்குப் பின் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு மற்றவர்களெல்லாம் போனபிற்பாடு பாரதியாரும் வெங்கட கிருஷ்ணையரும், நானும் இன்னும் இரண்டு பேர்களும் மட்டும் அங்கே படுத்துக் கொண்டோம். மறுநாள் விடியுமுன் புறப்பட்டு பாரதியவர்கள் திருமயம் சென்று அங்கிருந்து திருச்சிணுப்பள்ளிக்கு மோட்டாரிற் பிரயாணம் செய்து அங்கிருந்து ரைலில் சென்னைக்குச் செல்லவேண்டியவர். இப்போது செட்டிநாட்டிலிருந்து திருச்சிணுப்பள்ளிக்குப் போகிற ரைல் பாதை அப்போது இல்லை. விடியற் காலையில் புறப்படுவதற்குவேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு படுத்துக்கொண்டார். பாரதியாருக்கு ஒரு பக்கத்தில் வெங்கடகிருஷ்ணையரும் இன்னொரு பக்கத்தில் நானுமாக படுத்துக் கொள்ள நேர்ந்தது. படுத்துக்கொண்ட பின்னும் வெங்கடகிருஷ்ணையருடன் பாரதியார் அவர்களுடைய சொந்த ஊர் விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். நான் தூங்கிவிட்டேன்.

பாரதியார் தூங்கிஞரோ இல்லையோ எனக்குத் தெரியாது. நான் மெய்மறந்து தூங்கிக் கொண்டிருக்கும் போது யாரோ என்னை ஓங்கி அடித்துத் தட்டி எழுப்புவதைப் போல உணர்ந்தேன். நல்ல தூக்கம்; உடனே எழுந்திருக்கக் கூடவில்லை. ஆனுலும் யாரோ என்னை ஓயாமல் எழுப்பிக்கொண்டிருந்ததை மட்டும் உணர

முடிந்தது. வெகுநேரம் வரையிலும் புரண்டு, புரண்டு 'எங்கே இருக்கிறோம்.'—என்ன சத்தம்! எழுப்புவது யார்!' என்பனவற்றை அறியாமலேயே கண்ணைத் திறந்தேன். வெளிச்சமில்லை, யாரோ பாடுகின்றதுபோல ஒரு ஓசைமட்டும் காதில்விழுந்தது. சிறுகச் சிறுக தூக்கத்தின் மட்புகள் விலகி 'பாரதியாரைப் பார்க்கக் காஞடு காத்தானுக்கு வந்து படுத்திருக்கிறோம்' என்ற நினைப்பு வந்தது. கூடவே "பிள்ளை! பிள்ளை! பாட்டுகேட்கவேண்டுமென்று ஆசைப்பட்டீரே! பாடப்போகிறேன் எழுந்திரும்" என்ற பாரதியாருடைய கம்பீரமான அழைப்பும் காதில் விழுந்தது. உடனே வாறிச் சுருட்டிக்கொண்டு எழுந்து உட்கார்ந்துகொண்டு "பாடுங்கள், பாடுங்கள்" என்றேன்.

பாடினரே பாரதியார்! அடடா! அந்தப் பாட்டுகளின் பாணியையும் அவற்றைக்கேட்டு அப்போது எனக்குண்டான உணர்ச்சிகளையும் எழுத்தின் மூலமாக விளக்கிவிட முடியவே முடியாது. எனக்கு இப்போது உள்ள அளவு சங்கீத ஞானம் அப்போது இல்லை. பாரதியார் பாடின பாட்டுகளின் ராகதாள லயங்கள் எப்படி இருந்தனவோ அந்த நினைவே எனக்கு இப்போதில்லை. ஆனல் அவர் பாடினதைப்போல வேறு யாருடைய பாட்டும் என்னுடைய உணர்ச்சிகளைக் கிண்டிவிட்டு 'உள்ளத்தைக் கொள்ளை கொள்ளவில்லை'. பாரதியார் பாடுவதை நேரிற் கேட்டுவிட்ட எவரும் அவருக்கு உடனே அடிமைப்

பட்டு விடுவார்கள என்று சொன்னுல் அது மிகையாகாது.

சுமார் மூன்றுமணி நேரம் மூச்சு விடாமற் பாடினுர். வீட்டில் தூங்கினவர்கள் எல்லாரும் வந்து சூழ்ந்து கொண்டார்கள். அக்கம் பக்கம் வீட்டுக்காரர்களிற் பலரும் வந்து கூடிக்கொண்டார்கள். 'வந்தவர்கள் யார்? கேட்பது யார்? எந்தப் பாட்டை விரும்புவார்கள்? எந்தப் பாட்டில் எவருக்கு இச்சை' என்ற எதையும் சட்டை செய்யாமல் அவர் தனக்குத்தானே பாடிக்கொண்டார். விடியற்காலம் வந்தது. பாரதியார் பயணப்படவேண்டிய நேரமும் நெருங்கிற்று. அவரை ஊருக்கு அனுப்பிவைக்க வேண்டிய நண்பர்கள் துடிக்கிருர்கள். அவரைத் திருமயத்துக்குக் கொண்டுபோய் விட்டுவரவேண்டிய வண்டியிற் பூட்டப்பட்டு நிற்கும் வெகு விலையுயர்ந்த காளைகள் பாய்ச்சலுக்குத் தயாராகப் பதைத்துக் கொண்டிருக்கின்றன. பாரதியாரோ பாடிக் கொண்டே யிருந்தார். பாட்டை நிறுத்தச் சொல்ல யாருக்குத்தான் மனம் வரும். அன்றியும் அவ்வளவு ஆவேசத்தோடு பாடும் அவரை அணுகி பாட்டை நிறுத்தச் சொல்லக்கூடிய தைரியம்தான் யாருக்கு வரும்? பக்தியினுலும் பயத்தினுலும் இப்படி எல்லாரும் திகைத்துக் கொண்டிருக்கிற சமயத்தில் திடீரென்று பாரதியார்பாட்டை முடித்துவிட்டு எழுந்து "போதுமா பாட்டு? இனி புறப்படுவோம்" என்று சொல்லிக்

கொண்டே வாசலில் நின்ற வண்டிக்குச் சென்று விட்டார்.

அவருக்காக ஸ்ஞானத்துக்கு வெந்நீர் போட்டுத் தயாராக இருந்தது. காப்பி, பலகாரம் காத்துக்கொண்டிருந்தன. வீட்டுக்காரர், பல்லைத் துலக்கிக்கொண்டு பலகாரமாவது சாப்பிட வேண்டுமென்று வற்புறுத்தினர். பாரதியார் கேட்கவில்லை. பலகாரத்துக்கு உட்கார்ந்தால் பயணம் தவறிவிடும், திருமயத்தில் மோட்டார் கிடைக்காது என்று மறுத்துவிட்டார். கடைசியாகப் பல்லைத் துலக்கிக்கொண்டு காப்பியை மட்டுமாவது சாப்பிட்டுப்போக வேண்டும் என்று அன்பர்கள் வேண்டிக்கொண்டார்கள். அரை குறையாகப் பல்லைத் துலக்கிக்கொண்டு சூடான காப்பியை, வாங்கின உடனே வாயில் ஊற்றிச் சூடு பொறுக்காமல் மேலெல்லாம் ஊற்றிக் கொண்ட வேடிக்கையான நிகழ்ச்சி இன்னும் என் நினைவில் இருக்கிறது. கொஞ்சம் காப்பியை மட்டும் குடித்துவிட்டு வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார்.

இப்படியாக நான் பாரதியாரைப் பார்த்தும் பார்க்காதவனுகவே இருக்கிறேன். அவரை சந்தித்த நேரம் இருட்டின பிறகு. விடியும் முன்னால் பிரிந்துவிட நேர்ந்தது. அவருடைய திருவுருவத்தின் அங்கமச்ச அடையாளங்களை என்னுடைய சித்திரக்கண்ணேடு பார்க்க நேரமும் சரியில்லை, நினைப்பும் வரவில்லை. அவரைப் பார்த்த நிமிஷத்

திலேயே அவரைப் பற்றிய ஒரு பிரேமையில் முழுகி அவருடைய பேச்சிலும் ஆவேசத்திலும் மனதைச் செலுத்தினேனே தவிர உருவத்தைப் பற்றியே எண்ணம் ஓடவில்லை.

அவருடைய பேச்சுகளின் ஜீவசக்தியும் பாடின பாட்டுகளின் பாவமும் என்னுடைய காதில் இன்னும் இருக்கின்றன. ஆனால் அவருடைய உருவத்தைப்பற்றி என் கண்ணில் இருப்பன வெல்லாம் முறுக்கிவிட்ட மீசையும் ஞானக் கனல் வீசும் கண்களுந்தான்.

அவருடைய வடிவத்தை சாயத்தில் வரைய வேண்டும் என்று எனக்கு நெடுநாளாக ஆசை. அவரை நான் பார்த்த சம்பவத்தை மனதில் அடிக்கடி உருவகப்படுத்தியும்கூட அவருடைய உள்ளந்தான் எனக்கு முன்னால் வருகிறதே யல்லாமல் உருவம் வருவதில்லை. இப்போது நமக்குக் கிடைக்கும் படங்களில் அவருடைய உருவம் ஒருவாறு தெரிந்தாலும் அவருடைய உள்ளத்தையும் காட்டக்கூடிய படம் இல்லை. அப்படி ஒரு உருவத்தை விரைவில் அமைப்போம்.

# நாமக்கல் கவிஞர்

படம் வெளிவந்து
விற்பனையாகிக்கொண்டிருக்கிறது.

விலை அணா 2.

---

நாஞ்சில் நாட்டுக் கவிஞர்
சி. தேசிக விநாயகம் பிள்ளை அவர்களும்

நாமக்கல் கவிஞர்
வெ. ராமலிங்கம் பிள்ளை அவர்களும்

சேர்ந்து இருக்கும் படம்
வெளிவந்திருக்கிறது.

விலை அணா 2.